டெரிக் பிரின்ஸ்

# டெரிக் பிரின்ஸ் வேதபாடப் பள்ளி

## வேதபாட கையேடு

*Derek Prince Ministries - India*

Originally published in English under the title
**“DEREK PRINCE BIBLE SCHOOL - STUDY GUIDE”**
A compilation of six books including Personal Study Questions & Answers for each, and the updated expanded edition of Self-Study Bible Course.



Published by Derek Prince Ministries - India

TAM/2000/0119/LOP
ISBN : 978-81-939607-0-7


"DEREK PRINCE BIBLE SCHOOL - STUDY GUIDE" (TAMIL)
"DEREK PRINCE VEDHAPADA PALLI - VEDHAPADA KAIYEDU”

Published by permission in the Telugu language.



For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o, DPM - IMPEX
1-C, EVR Road, Puthur
Trichy - 620 017, Tamil Nadu, India
E-Mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/02/03/05/06
Website: www.derekprince.in

Derek Prince
MINISTRIES INDIA

www.derekprince.in

# பொருளடக்கம்

# டெரிக் பிரின்ஸ் வேதபாடப் பள்ளி
# வேதபாட கையேடு

## *வேதபாட கையேட்டிற்கான அறிமுகம்*

வேதாகமம் என்பது தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகிய நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையாகும். இயேசுவுக்குள் கிடைக்கக்கூடிய இரட்சிப்பின் பாதையைக் கண்டறியும்படி, நாம் அவரை அறிந்து கொண்ட பிறகு, அவரோடு எவ்வாறு ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளும்படி நமக்குக் கற்றுக் கொடுக்கிற ஒரு கையேடாக இது இருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற மிக முக்கியமான சவால், தேவனுடைய வார்த்தையை வாசித்து, அதை ஆராய்ந்து கற்றுக் கொள்வதாகும். அதைச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் உதவியும், ஆவியான வரால் அபிஷேகிக்கப்பட்ட போதகர்களின் உதவியும் நமக்குத் தேவையாயிருக்கிறது. டெரிக் பிரின்ஸ், அப்படிப்பட்ட போதகர்களில் முக்கியமான ஒருவராக இருக்கிறார்.

டெரிக்கின் பிரசங்கம் மற்றும் போதனைகளை நாம் கேட்கும்போது (அல்லது வேறொரு சிறந்த வேதபோதகரின் போதனைகளை நாம் கேட்கும்போது), பெரும்பாலும் நாம் கேட்டவைகளை சீக்கிரமாய் மறந்து விடுகிறோம். இது ஒரு வருந்தத்தக்க உண்மை! இதன் விளைவாக, நாம் கேட்டவைகள், மிகவும் சிறிய அளவு தாக்கத்தைத்தான் நம் வாழ்க்கையில் உண்டாக்குகின்றன. ஒரு செய்தியைப் பார்ப்பதோ அல்லது அதைக் கேட்பதோ நமக்கு உதவி செய்யலாம். ஆனால் நாம் கேட்டவைகளின்படியே வாழும்போதுதான், அது நம் வாழ்க்கையின் ஒரு பங்காகவே மாறும்போதுதான், அது நமக்குப் பிரயோஜனமுள்ளதாய் இருக்கும். அப்பொழுதுதான் அந்தச் செய்தி, நமக்கு நிஜமானதாய், பூரண பயனுள்ளதாய் மாறும். டெரிக் பிரின்ஸ் தன்னுடைய போதனைகளில் அடிக்கடி இதைச் சொல்வார்: “கல்வி கற்பதைக் குறித்த உளவியலில், ஒரு பொதுவான கோட்பாடு இருக்கிறது. பிள்ளைகள் தாங்கள்

கேட்டவைகளில் 40 சதவீதத்தை நினைவில் வைத்திருப்பார்கள். அவர்கள் என்ன கேட்டார்களோ, பார்த்தார்களோ, அதில் 60 சதவீதத்தை நினைவில் வைத்திருப்பார்கள். அவர்கள் என்ன கேட்டார்களோ, பார்த்தார்களோ, செய்தார்களோ, அதில் 80 சதவீதத்தை நினைவில் வைத்திருப்பார்கள்."

ஆகையால் இந்த வேதபாடக் கையேடு (வழிகாட்டி), நாம் கற்றுக் கொள்கிற வேதாகம சத்தியங்களை நம்முடைய தலைக்குள்ளும், நம்முடைய இருதயங்களுக்குள்ளும் ஆழமாய் பதியச் செய்யும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது வெறும் கல்வியறிவு என்பதற்கும் அப்பாற்ப்பட்ட ஒன்றாக இருக்கும். நாம் வாழ்கின்ற விதத்தில் இது நிச்சயம் ஒரு மாற்றத்தை உண்டாக ஆரம்பிக்கும். வெறும் மதப் பிரசங்கங்களை ஒருபோதும் பிரசங்கிக்க மாட்டேன் என்று சொல்லி, டெரிக் தன் ஊழியத்தின் ஆரம்பத்தில், கர்த்தரிடம் தன்னை அர்ப்பணித்திருந்தார். கர்த்தருடைய பெலத்தைச் சார்ந்து, அவர் இதைத் தொடர்ந்து செய்து வந்தார். அவர் தன்னுடைய போதனையை நடைமுறைக்கு உகந்ததாக கொடுக்க விரும்பினார். அதைக் கேட்கிறவர்களுக்கு கர்த்தர் என்ன வெளிப்படுத்துகிறாரோ, அதற்கு அவர்களுடைய வாழ்க்கையை மாற்றும் விதத்தில், அவர்கள் தங்களை அர்ப்பணிக்கும்படி, அவர் இடம் கொடுத்தார். ஆகையால் அதிக நேரத்தையும், அதிக முயற்சிகளையும் நாம் இந்த வேதபாடங்களில் முதலீடு செய்யும்போது, அவற்றிலிருந்து நாம் அதிக பலன்களைப் பெறுவோம். நாம் வாழ்கின்ற விதத்தை அவை அதிகமாய் மாற்றி வடிவமைக்கும். ஆகையால்தான் இந்த வேதபாட கையேடுகளை நாங்கள் உங்களுக்குக் கொடுக்கின்றோம்.

30 செய்திகளை, டெரிக் பிரின்ஸ் வேதாகமப் பள்ளியின் பயிற்சிப் பாடங்களாக நாங்கள் தொகுத்து வழங்கியிருக்கிறோம். ஒரு தாராளமான நன்கொடையின் மூலமாக, டெரிக்கின் ஊழியத்திற்கு நாங்கள் இதை அளித்திருக்கிறோம். இவை 13 வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மொழிகள் மூலம், இன்றைக்கு இவ்வுலகில் வாழ்கின்ற பெரும்பகுதி ஜனங்களை அடைய வேண்டும் என்பதுதான் திட்டம். நாங்கள் இதைச் செய்து கொண்டிருந்த நேரத்தில் கூடுதலாக இன்னும் இரண்டு மொழிகளும் சேர்க்கப்பட்டன. இன்னும் நிறைய மொழிகள் சேர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்! ஏற்கனவே இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், சீனம், மங்கோலியன், ஜப்பான், இந்தோனேஷியா, மத்திய கிழக்கு நாடுகளின் மொழிகள், ஐரோப்பியா, தென் அமெரிக்கா, இன்னும் மற்ற

நாடுகளின் மொழிகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் போதனையை பெருந்திரளான ஜனங்களுக்குக் கிடைக்கச் செய்யும்படி, வேதாகமப் பள்ளி பயிற்சிப் பாடத் தொகுப்புக் குழுவினர் ஓய்வில்லாமல் உழைத்திருக்கிறார்கள். இந்தப் போதனை வல்லமையான ஒரு தாக்கத்தை உண்டாக்கும்படி, இதன் தொகுப்பாளர் பல மணி நேரங்கள் செலவிட்டு இவற்றை சுருக்கமாகத் தொகுத்திருக்கிறார்.

ஒரு குழுவினராய் எங்கள் எல்லோருக்குள்ளும் இருந்த உந்துதல் எளிமையானது. டெரிக்கின் போதனைகள் வாழ்க்கையை மாற்றக்கூடியவை என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். அவ்வளவுதான். இந்தப் போதனையை விசுவாசத்தோடு நம் வாழ்க்கையில் பின்பற்றும்போது, இதைக் கற்றுக் கொள்கிற ஒவ்வொரு மாணவனுக்கும் தேவனோடு இருக்கிற உறவு ஆழமானதாய் மாறும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அது வெற்றிகரமான, அர்த்தமுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை மெய்யாகவே வாழும்படி நம் ஒவ்வொருவருக்குள்ளும் கிரியை செய்யும் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம்.

**டெரிக் பிரின்ஸ் வேதாகமப்பள்ளி பதிப்புக்குழு**

# பின்பற்ற வேண்டிய பொதுவான வழிமுறைகள்

## நோக்கம்

டெரிக் பிரின்ஸ் வேதாகமப் பள்ளியின் பாடங்களுடன் இணைந்த ஒரு கையேடாக, இந்த வேதபாட வழிகாட்டியை உருவாக்குவதில் எங்களுடைய விருப்பமும், நோக்கமும் இதுதான். மாணவர்கள் இதை முழு ஈடுபாட்டுடன் கற்றுக் கொள்ள வேண்டும். இதை எளிதாக, முழுமையாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இதைத் தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்ற ஆரம்பிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், வேதவசனங்களின் மூலமாக, கர்த்தரோடு உங்களுக்கிருக்கும் உறவில் உங்களை ஆழமாய் வேரூன்றச் செய்வதுதான் இதன் உச்சகட்ட நோக்கமாயிருக்கிறது.

நீங்கள் ஒவ்வொரு பாடத்தையும் முடித்த பிறகு, இதை நீங்கள் வாசிப்பீர்கள் என்றால், டெரிக்கின் போதனை மிகவும் சிறந்த விதத்தில் இங்கு தொகுத்துச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்கள். ஒரு நண்பரோடு, வீடுகளில் கூடும் குழுவினரோடு, சபையாரோடு இப்போதனையைப் பகிர்ந்து கொள்வதற்கு இது உங்களுக்கு உதவி செய்யும். நீங்கள் கற்றுக் கொண்ட சத்தியங்களை மற்றவர்களோடு அதிகமாய் பகிர்ந்து கொள்ளும்போது, அது உங்களுடைய வாழ்க்கையின் அங்கமாய், சாட்சியாய் அதிகதிகமாய் மாறுவதை நீங்கள் பார்ப்பீர்கள்.

## போதனைகள்

இந்த வேதபாடப் பள்ளியில் 30 போதனைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒரு மணி நேரச் செய்திகளாய் இருக்கின்றன. வேதபாட கையேட்டின் அறிமுகப் பகுதியை வாசிக்கும்படி தகுந்த நேரத்தை ஒதுக்கி செலவிட வேண்டியது முக்கியமான ஒன்றாயிருக்கிறது. பிறகு டெரிக்கின் போதனையைக் கேட்கலாம் அல்லது பார்க்கலாம். கடைசியில், திரும்பவும் வேதபாட கையேட்டை எடுத்து, அதில் அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டதன் விளைவாக நாம் எடுக்க வேண்டிய தீர்மானங்களை நாம் வாசிக்க வேண்டும். கோடிட்ட இடங்களை நிரப்ப வேண்டும் (நீங்கள்

அந்தப் போதனையை எவ்வளவு நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை பரிசோதிக்கும்படி, கோடிட்ட இடங்களை நிரப்பும் இப்பகுதி வடிவமைக்கப்பட்டிருக்கிறது!). இந்தச் செயல்முறையில் பங்கெடுக்கின்ற மாணவர்களின் வேகம் ஒருவருக்கொருவர் மாறுபடும். ஆனால் ஒரு பாடத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு மணி நேரங்களாவது நீங்கள் செலவிட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஒரு செய்தித்தொடரில், ஒன்றுக்கும் மேற்பட்ட செய்திகள் இருக்குமென்றால், முதல் செய்திக்கு முன் அந்தச் செய்தித்தொடருக்கான அறிமுகப் பகுதி கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். அது நீங்கள் கற்றுக் கொள்ளப் போகிற முழு பாடத்தைக் குறித்த சுருக்கமான கண்ணோட்டத்தை உங்களுக்குக் கொடுக்கும்.

## *பின்பற்ற வேண்டிய வழிமுறை*

ஒவ்வொரு மாணவரும், இந்த வேதபாட பயிற்சியின் வழியாக தொடர்ந்து படிப்படியாக முன்னேறிச் செல்லும்போது, தங்களுக்கென்று சிறந்த ஒரு வழிமுறையை இக்கையேட்டின் மூலம் நிறுவிக் கொள்ள வேண்டும். ஆனால் இவ்வேதபாட கையேட்டை திறந்த நிலையில் வைத்திருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்பதை ஒரு ஆலோசனை யாகத் தருகிறோம். செய்தியைக் கேட்டபடியே அல்லது பார்த்தபடியே, கோடிட்ட பகுதிகளை நிரப்பிடுங்கள். நீங்கள் ஒரு புத்தகத்தின் வழியாகக் கற்றுக் கொள்ளும்போது, பாடத்தின் கேள்விகளுக்கான பதிலை, நீங்கள் திரும்பவும் அந்தப் பகுதிக்குச் சென்று, எளிதாகக் கண்டுபிடித்து விட முடியும். ஆனால் அதுவே ஒரு ஆடியோ அல்லது வீடியோ செய்தியாக இருக்குமென்றால், பதில் எங்கே இருக்கின்றது என்று துல்லியமாகக் கண்டறிவது அதிகக் கடினமாக இருக்கும்.

பதில்களை முதலிலேயே பார்த்து விடாமல், கோடிட்ட பகுதிகளை நிரப்பிட முயற்சி எடுங்கள். இது மிகவும் முக்கியம். உங்களுடைய நினை விலிருந்தோ அல்லது கேள்வியின் சூழலில் இருந்தோ அல்லது அதோடு தொடர்புடைய வேதவசனப் பகுதிகளிலிருந்தோ பதிலைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான் சாலச்சிறந்தது. கேள்வியை வாசித்து விட்டு, உடன டியாக பதில்களின் பகுதிக்குச் செல்வீர்கள் என்றால், இந்த வேதபாட பயிற்சியை சீக்கிரமாய் முடிப்பதற்கு அது உங்களுக்கு உதவி செய்யலாம். ஆனால் உங்களால் பதிலை நினைவில் வைத்திருக்க முடியாது. ஒழுங்கும் கிரமமுமாக கற்றுக் கொள்ள வேண்டிய வழிமுறையை நீங்கள்

தவிர்ப்பதினால், அது உங்களுக்கு மிகவும் குறைவான பலனைத்தான் கொடுக்கும்.

நீங்கள் ஒரு பாடத்தை முழுமையாய் முடித்து விட்டு, கோடிட்ட பகுதிகளையும் நிரப்பிய பிறகு, அந்தப் பாடத்தின் பதில்களின் பக்கத்திற்குச் சென்று, ஒவ்வொரு பதிலையும் சரி பாருங்கள். ஒவ்வொரு சரியான பதிலுக்கும், ஒரு மதிப்பெண்ணை நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். சரியான பதில்களுக்கான மதிப்பெண்களையெல்லாம் கூட்டுங்கள். அந்த மொத்த மதிப்பெண்ணை 410-ம் பக்கத்திலிருக்கும் மதிப்பெண் பட்டியலில் குறிப்பிடுங்கள். இது இவ்வேதபாட பயிற்சியில் படிப்படியாக நீங்கள் அடையும் முன்னேற்றத்தை பார்க்க உதவி செய்யும். ஒட்டுமொத்தமாக, கடைசியில் நீங்கள் எடுக்கும் மதிப்பெண்ணையும் நீங்கள் இதில் பார்க்க முடியும். உங்களுடைய மதிப்பெண்ணை நீங்கள் எழுதிய பிறகு, திரும்பவும் இந்தப் பாடத்தின் கேள்விப் பகுதிக்குச் செல்லுங்கள். எழுதாமல் விட்ட அல்லது தவறான பதில்களை எழுதிய கேள்விகளுக்கான பதில்களை, பதில்களின் பகுதியிலிருந்து பார்த்து எழுதிடுங்கள். இப்பொழுது எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்களை நீங்கள் முழுமையாய் அறிந்திருப்பீர்கள்.

கற்றுக் கொண்ட பாடங்களை சரியான இடைவெளியில் அவ்வப்போது திரும்பவும் கற்றுக் கொள்வது, உங்களுக்கு மிகுந்த பலனைக் கொடுக்கும். இது நீங்கள் ஏற்கனவே கற்றுக் கொண்ட மிக முக்கியமான சத்தியங்களை நினைவில் தக்க வைத்துக் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாயிருக்கும். நீங்கள் திரும்பத் திரும்ப இதை அதிகமாய் செய்யும்போது, இந்த சத்தியங்கள் உங்களுக்குள் அதிக ஆழமாய் வேரூன்றும்.

## *மாணவர் குழுக்கள்*

டெரிக் பிரின்ஸின் செய்திகளும், இவ்வேதபாடக் கையேடும் தனிப்பட்ட நபர்களுக்கு மட்டுமல்ல, ஒரு குழுவாய் சேர்ந்து கற்றுக் கொள்கிற மாணவர்களுக்கும் மிகப் பொருத்தமானதாய் இருக்கிறது. இரண்டு அல்லது அதற்கும் அதிகமான நபர்கள் ஒரு குழுவாய் இணைந்து, இந்தச் செயல்முறையைப் பயன்படுத்தி, இந்த வேதபாட பயிற்சியில் பங்கு பெறலாம், கற்றுக் கொண்டு வளரலாம். எல்லோரும் ஒன்றாய் சேர்ந்து, பாடங்களைக் குறித்து கலந்துரையாடல் செய்து, பதில் சொல்லத் தவறிய கேள்விகளுக்கு பதில்களைக் கண்டுபிடிக்கலாம். அப்பொழுது இது

மிகுந்த பலன் கொடுக்கக்கூடிய, அர்த்தம் நிறைந்த ஒரு அனுபவமாக இருப்பதை நீங்கள் கண்டுணருவீர்கள்.

*பாடம் ஒன்று>>*

# சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றம்

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றம் என்ற இந்தச் செய்தியில், வரலாற்றின் முக்கியமான மைய நிகழ்வை டெரிக் நமக்கு அறிமுகப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம்தான் அந்நிகழ்வாயிருக்கிறது. 1 கொரிந்தியர் 1:18-ல், பவுல் சிலுவையைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார்: *"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது."*

இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், வட ஆப்பிரிக்காவின் பாலைவனங்களில் இருந்தபோது, டெரிக், குணமாக்க முடியாத தோல் வியாதியினால் அவதிப்பட்டார். அப்பொழுது அவருக்காக ஜெபிக்கும்படி, தேவன் சிலரை ஒரு குழுவாக அவரிடம் அனுப்பினார். குறிப்பாக, அவர்களில் ஒரு நபருக்கு பற்பல பாஷைகளின் வார்த்தைகளையும், அவற்றிற்கான விளக்கத்தையும் தேவன் கொடுத்தார். அதை டெரிக் தெளிவாக, அப்படியே நினைவில் வைத்திருக்கிறார். பின் வரும் வாக்கியமாக, அவர் அதைச் சொல்கிறார்: "கல்வாரியின் வேலையை சிந்தித்துப் பார். அது பரிபூரணமாகச் செய்து முடிக்கப்பட்ட ஒரு வேலை. அது எல்லாவற்றிற்கும் போதுமானதாய் இருக்கிறது. அதன் ஒவ்வொரு அம்சத்திலும், அது பரிபூரணமானதாயிருக்கிறது." இந்த வார்த்தைகள்தான், சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றத்தைப் புரிந்து கொள்ளும்படி, அதற்கு நேரான பிரயாணத்தில் அவரை நடத்தியது.

சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றத்தைக் குறித்து சுருக்கமாக இவ்வாறு சொல்ல முடியும்: **நியாயமாய் நம் மீது வர வேண்டிய எல்லாத் தீமைகளும், இயேசுவின் மீது வந்தது. இயேசுவின் பாவமற்ற கீழ்ப்படிதலின் நிமித்தம், அவர் மீது வர வேண்டிய எல்லா நன்மைகளும், இப்பொழுது நமக்குக் கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றன.**

நம் வாழ்க்கையையே மாற்றக்கூடிய வேதாகம சத்தியங்களை வேதவசனங்களிலிருந்து எடுத்து, டெரிக் மிகவும் ஆழமாக, அழுத்தமாக நமக்குப் போதிக்கிறார். நாம் இதைக் கேட்போம் அல்லது பார்ப்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகளும்*

**இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு அல்லது பார்த்த பிறகு, இப்பகுதி வாசிக்கப்பட வேண்டும்; கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டும்.**

சிலுவையில் அப்படி என்ன பரிமாற்றம் நிகழ்ந்தது என்ற கேள்வியோடு நீங்கள் இந்தச் செய்தியைக் கேட்க ஆரம்பித்திருக்கலாம். பாவ மன்னிப்பு அல்லது புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்வதைக் குறித்த ஒரு செய்தியாகத்தான் அது இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அதையெல்லாம் காட்டிலும் இது மிகவும் அதிகமானது என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள். வேதவசனங்களிலிருந்து இந்தச் சத்தியங்களை ஆழமாய் தோண்டி எடுக்கிற டெரிக்கின் இந்தப் பிரயாணம், அந்நிய பாஷைகளின் வியாக்கியானத்திலிருந்து ஆரம்பித்திருந்தாலும், இவ்வளவு ஆழமான ஒரு புரிதலுக்குள் வருவதற்கு அவருக்கு பல வருடங்கள் ஆனது.

ஆச்சரியமான ஒரு பண்டகசாலை தேவனிடம் இருக்கிறது. இவ்வாழ்க்கையிலும், நித்தியத்திலும், உங்களுக்குத் தேவையான எல்லா ஆவிக்குரிய, பொருள்ரீதியான, சரீரப்பிரகாரமான ஒவ்வொரு தேவையினாலும் அது நிரப்பப்பட்டிருக்கிறது. உங்களுக்குத் தேவையான சகலமும் அந்தப் பண்டகசாலையில் இருக்கிறது. அந்தப் பண்டகசாலைக்குப் பொறுப்பாக ஒருவர் இருக்கிறார். அந்தப் பண்டகசாலையிலிருந்து ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அந்தப் பண்டகசாலையின் காப்பாளராகிய பரிசுத்த ஆவியானவருடன் நீங்கள் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய திரித்துவத்தின் பிதா மற்றும் குமாரனுடைய எல்லா ஐசுவரியங்களும், பரிசுத்த ஆவியானவரின் கரங்களில்

இருக்கின்றது. இதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். நீங்கள் சரியான போதனைகளையெல்லாம் அறிந்து வைத்திருக்கலாம். நீங்கள் சரியான இறையியல் அறிவைப் பெற்றிருக்கலாம். நீங்கள் சரியான காரியங்களையெல்லாம் பேசலாம். ஆனால் பரிசுத்த ஆவியான வரிடமிருந்து உங்களால் எவ்வளவு பெற்றுக் கொள்ள முடியுமோ, அவ்வளவை மட்டுமே நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். அவர்தான் இந்தப் பண்டகசாலையின் காப்பாளராக இருக்கிறார்.

இந்தப் பண்டகசாலையை திறக்கக்கூடிய ஒரே ஒரு சாவி, பரிசுத்த ஆவியானவரிடம் மட்டுமே இருக்கிறது. அந்தச் சாவிக்கு மிகவும் விசேஷமான ஒரு வடிவம் இருக்கிறது. அது சிலுவை வடிவமாகும். பரிசுத்த ஆவியானவர் இந்தச் சிலுவையைப் பயன்படுத்தி, பண்டகசாலையைத் திற க்கும்போது மட்டுமே, தேவனுடைய ஐசுவரியங்களெல்லாம் உங்களுக்குக் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றத்தைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்களோ, அதைத் திரும்பவும் உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வந்து, பின் வரும் கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்:

## *எல்லாவற்றிற்கும் போதுமான ஒரே பூரண பலி*

*1. ‘‘பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்,’’ என்று எபிரெயர் 10:14 சொல்கிறது. சிலுவையில் இயேசு தம்மையே எப்படிப்பட்ட ஒரு பலியாகச் செலுத்தினார்? ........................ .......... தம்மை நம்புகிற ஒவ்வொரு நபருடைய வாழ்க்கையின் இப்பொழுதைய மற்றும் நித்தியத்திற்கான ஒவ்வொரு தேவையையும் இந்தப் பலியின் மூலம் அவர் சந்தித்திருக்கிறார். இதைக் காட்டிலும் அதிகமான அவர் ஒன்றையும் செய்ய முடியாது. அவர் எல்லாவற்றையும் செய்து முடித்திருக்கிறார். அது எல்லாவற்றிற்கும் போதுமான ஒரே பலியாயிருக்கிறது.*

*2. தேவனுக்கென்று வேறுபிரிக்கப்படுகிறவர்களை அல்லது தேவனுக்கு நெருக்கமாக இழுக்கப்படுகிறவர்களை (இது நமக்குள் தொடர்ந்து நிகழ்கின்ற ஒரு கிரியையாக இருக்கிறது), எபிரெயர் 10:14-ம் வசனம் எவ்வாறு அழைக் கின்றது?.......................................சிலுவையில் இயேசு என்ன*

செய்து முடித்திருக்கிறாரே, அதை அவர் ஒரே முறையாய், முழுமையாய், பூரணமாய் செய்து முடித்திருக்கிறார். ஆனால் நாம் அதை நம்முடையதாய் ஆக்கிக் கொள்வதுதான், படிப்படியாய் நடக்கின்ற ஒரு தொடர்நிகழ்வாக இருக்கிறது.

3. இதை விளக்கிச் சொல்லும்போது, டெரிக் பாகிஸ்தானில் பிரசங்கித்த தன் பிரசங்கத்தை நினைவுகூருகிறார். ஒரு ஆரஞ்சு பழத்தைக் கொடுப்பதற்கும், ஆரஞ்சு பழத் தோட்டத்தைக் காண்பிப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அவர் இங்கு பேசினார். இந்த எடுத்துக்காட்டில், ஆரஞ்சு பழத் தோட்டம் என்பது எதைக் குறித்த சத்தியமாய் இருக்கிறது?.... ................................................

4. ஸாம்பியன் போதகர்களுக்கும், தலைவர்களுக்கும் போதித்தபோது, டெரிக் ஒரு விஷயத்தைப் பகிர்ந்து கொண்டார். அப்பொழுது அவர் சில முக்கியமான குறிப்புகளை நமக்கு உதவியாக முன் வைத்தார்:

அ) தேவனிடத்தில் ஆச்சரியமான ஒரு களஞ்சியம் இருக்கிறது. இந்தக் காலத்திற்கும், ...................................... தேவையான ஒவ்வொரு ஆவிக்குரிய, பொருளாதார மற்றும் சரீரப்பிரகாரமான எல்லாத் தேவைகளும் அந்தக் களஞ்சியத்தில் நிரம்பியிருக்கிறது.

ஆ) இந்தக் களஞ்சியத்திற்கு ஒரு காப்பாளர் இருக்கிறார். இந்தக் களஞ்சியத்திலிருந்து ஒரு நன்மையைப் பெற வேண்டுமென்றால், நீங்கள் இந்தக் களஞ்சியத்தின் காப்பாளரோடு நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். .....................ஆவியானவர்தான், அவர்.

இ) தேவத்துவத்தில், .................... மற்றும் குமாரனுடைய பரிபூரணங்களெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் கரங்களில் இருக்கின்றன.

ஈ) களஞ்சியத்தைத் திறக்கும்படி, பரிசுத்த ஆவியானவர் .............................. பயன்படுத்தும்போது மட்டுமே, தேவனுடைய பொக்கிஷங்களெல்லாம் உங்களுக்குக் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

*5) சூயஸ் கால்வாயின் அருகிலிருந்த அல்பல்லாவில், இரட்சிப்பின் சேனைத் தலைவருடன் டெரிக்கிற்கு கிடைத்த அனுபவத்தில், சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றத்தைக் குறித்த சத்தியத்தை வெளிக் கொண்டு வரும்படி, எந்த வார்த்தைகள் அவரை நடத்தின? இயேசு மரித்த கல்வாரியைக் குறித்து எண்ணிப் பார். அது ஒரு ...................... வேலை. அதன் ஒவ்வொரு அம்சத்திலும் அது பரிபூரணமானதாய் இருக்கிறது. அது எல்லாவற்றிற்கும் போதுமானதாய் இருக்கிறது.*

*6) சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் தியாக பலி மரணத்தினால் என்ன செய்து முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை டெரிக் புரிந்து கொள்வார் என்றால், அவருடைய தேவைகளெல்லாம் சந்திக்கப்படும் என்பதை அந்த அனுபவத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் தனக்கு வெளிப்படுத்துகிறார் என்பதை டெரிக் உணர்ந்து கொண்டார். அவருக்குத் தேவையான, ஆனால் அவரால் பெற்றுக் கொள்ள முடியாத ஒன்று என எதுவும் அங்கே .................*

*7) சிலுவையைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல், தேவனால் முன் குறிக்கப்பட்ட தெய்வீக ......................... சிலுவையில் நிகழ்ந்தது என்பதுதான். மனுக்குலத்தின் மீது வர வேண்டிய தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எல்லா தண்டனை களும் இயேசுவின் மீது வந்தன. இயேசுவின் பாவமற்ற கீழ்ப்படிதலின் நிமித்தம் வர வேண்டிய எல்லா நன்மைகளும், அவரை விசுவாசிக்கிற நம் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றன.*

*இது தேவனுடைய கிருபையினால் நிகழ்ந்தது. நாம் தேவனிடம் எவ்விதத்திலும் உரிமைபாராட்ட முடியாது. அவர் இதைச் செய்தே ஆக வேண்டும் என்று நாம் தேவனை நிர்ப்பந்திக்க முடியாது. அவர் இதைச் செய்யப் போகிறார் என்பதுகூட நமக்குத் தெரியாது. அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. அவர் தம் சர்வாளுமையுள்ள சித்தத்தினாலும், தம்முடைய அளவிட முடியாத கிருபையினாலும் இந்த தெய்வீகப் பரிமாற்றத்தை முன் கூட்டியே திட்டமிட்டிருந்தார். அது மட்டுமல்ல, அவர் இதை பல நூறு வருடங்களுக்கு முன்பே, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுத்தியுமிருந்தார்.*

## *சிலுவையின் முக்கியமான அம்சங்கள்*

*8) மிகவும் முக்கியமான, மையமான தீர்க்கதரிசனம், ஏசாயா 53-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இது பெயரிடப்படாத கர்த்தருடைய ஊழியக்காரர் ஒருவரைக் குறித்துப் பேசுகிறது. அவருடைய பெயர் அங்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் அப்போஸ்தலர்களும், புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும், பெயரிடப்படாத இந்த கர்த்தருடைய ஊழியக்காரர், நசரேயனாகிய ............................ என்பதில் ஒருமித்த புரிந்துகொள்ளுதலை உடையவர்களாய் இருந்தனர்.*

நாம் இன்னும் செய்திராத பாவங்கள் பல இருக்கின்றன என்று நம்மால் சொல்ல முடியும். ஆனால் ஒரு பாவத்தை நாம் எல்லோருமே செய்திருக்கிறோம். நாம் எல்லோரும் அவரவர் தன் தன் வழியிலே போனோம் (ஏசாயா **53:6**). இதை **'முரட்டாட்டம்'** என்ற ஒரு எளிமையான வார்த்தையில் சொல்லலாம். முரட்டாட்டம் என்பது ஒட்டுமொத்த மனுக்குலமும் செய்த குற்றமாக இருக்கிறது. நாம் எந்த தேசத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம், எந்த நிறத்தவராகவும் இருக்கலாம், எந்த இனத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். ஆனால் நாம் எல்லோருமே முரட்டாட்டம் என்ற ஒரு குற்றத்தைச் செய்தவராக இருக்கின்றோம். இயேசு சிலுவையில் தொங்கியபோது, நம் எல்லோருடைய அக்கிரமத்தையும், முரட்டாட்டத்தையும், நம் மீது வர வேண்டிய தண்டனையையும் தேவன் இயேசுவின் மீது வைத்தார். தேவனுடைய இரக்கம்தான் இதைச் செய்தது.

*9)* **அர்பான்** *என்ற எபிரேய வார்த்தை, முரட்டாட்டத் தையும், குற்றங்களையும் மட்டும் குறிக்கவில்லை. அது அக்கிரமத்தினால் உண்டாகிற எல்லா தீய ................................... குறிக்கின்றது. ஒரே வார்த்தைக்கு இவ்விரண்டு அர்த்தங்களும் இருக்கின்றன. ஆகையால் தேவன் ஒட்டுமொத்த மனுக்குலத்தின் முரட்டாட்டத்தை அல்லது குற்றங்களை இயேசுவின் மீது வைத்தார். அதோடு அந்த முரட்டாட்டத்தினால் உண்டாகிற எல்லா தீய விளைவுகளையும் அவர் இயேசுவின் மீது வைத்தார். இதன் விளைவாக, அந்தப் பொல்லாத தீய விளைவுகளிலிருந்து நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவின் நீதியினால் உண்டாகிற எல்லா நன்மைகளையும் நாம் பெற்றுக் கொள்கிறோம்.*

*10) ஏசாயா 53:4-5 வசனங்களில், முதல் தெய்வீகப் பரிமாற்றம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் மன்னிக்கப்படும்படி, இயேசு ........................................*

*11) இதே வசனங்களில், இரண்டாவது தெய்வீகப் பரிமாற்றமும் எழுதப்பட்டிருக்கிறது. சிலுவையில், இயேசு நம்முடைய பெலவீனங்களையும், நம் வியாதிகளையும் ஏற்றுக் கொண்டார். அவருடைய தழும்புகளால், நாம் சுகமாக்கப்பட்டிருக்கிறோம்.* **அவர்** *நம்முடைய பதிலாளாக மரித்தார். இதை இன்னும் எளிமையாக இவ்வாறு எழுதலாம்: நாம் ........................ ......, இயேசு காயப்பட்டார். ஏசாயா 53:4-5 வசனங்களை வாசியுங்கள்.*

*12) நாம் இயேசுவின் நீதியினால் நீதிமான்களாக்கப்படும்படி, இயேசு நம்முடைய பாவங்களினால் ...................................... . (ஏசாயா 53:10 மற்றும் 2 கொரிந்தியர் 5:21 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

இப்பொழுது நிம்மதிப் பெருமூச்சு விடுகிறீர்களா? நீதிமானாய் வாழும்படி, முழு மூச்சோடு நீங்கள் போராட வேண்டிய அவசியமில்லை. எளிமையாக விசுவாசித்து, இயேசுகிறிஸ்துவின் நீதியை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். அது போதும். அதற்கும் குறைந்த எந்த ஒரு நீதியும் உங்களை பரலோகத்திற்குள் நுழையச் செய்யாது. ஆனால் தேவன் நமக்கு ஒரு வழியை உண்டாக்கி வைத்திருக்கிறார். தேவனுடைய நீதியினால், நாம் நீதிமான்களாக்கப்பட முடியும்.

எபிரெயர் **2:9** சொல்கிறது: ‘‘என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு, தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப் பட்டதைக் காண்கிறோம்.’’ ஆக, பாவத்தின் சம்பளம் மரணம் **(**ரோமர் **6:23).** நம்முடைய பாவத்தினால் இயேசு பாவமாக்கப்பட்டபோது, அதற்கான தண்டனையாகிய மரணத்தை, அந்த விலைக்கிரயத்தை அவர் செலுத்தித் தீர வேண்டியிருந்தது. அதை அவரால் தவிர்க்க முடியவில்லை.

*13. நாம் அவருடைய ....................... பங்கடையும்படி, இயேசு நமக்காக மரணத்தை ருசிபார்த்தார் (எபிரெயர் 2:9; யோவான் 10:10).*

அடுத்த தெய்வீகப் பரிமாற்றம், கலாத்தியர் **3:13-14** வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது: *"[13]மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். [14]ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று."*

சிலுவை இங்கு ஒரு **மரம்** என்றழைக்கப்படுகிறது. காரணம், எபிரெய மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் பேசப்படும் ஸ்வாஹிலி மொழிகளில், ஒரு மரம், அது வளருகின்ற மரமாக இருந்தாலும், வெட்டப்பட்ட மரமாக இருந்தாலும், அது மரம் என்றுதான் அழைக்கப்படுகிறது. ஆகையால் சிலுவை, இங்கு வெட்டப்பட்ட ஒரு மரமாக இருக்கிறது.

**14.** ஒரு சாபத்தின் பொதுவான ஏழு அறிகுறிகள் கீழே குறிப்பிடப் பட்டிருக்கின்றன. பெரும்பாலான சாபங்கள், தனிப்பட்ட நபர்களை மட்டுமல்ல, அவை குடும்பங்களையும், பெரிய சமுதாயங்களையும் தாக்குகின்றன. ஆசீர்வாதமோ அல்லது சாபமோ, இவையிரண்டுமே, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறை என தலைமுறை தலைமுறை யாக கடந்து செல்கின்றன. இது இவ்விரண்டிலும் காணப்படுகிற ஒரு முக்கியமான அம்சம் என்று வேதாகமம் சொல்கிறது. ஏதோ ஒன்று நிகழ்ந்து, இதன் தொடர்பு அறுக்கப்பட்டால்தான், இதன் தொடர்ச்சி நின்று போகும். ஆகையால்தான் இயேசுவின் மரணம், சாபங்களை அறுத்தெறியும்படி, அவைகளை முறித்துப் போடும்படி, நமக்கு அதிகாரத்தைக் கொடுப்பதற்கு அத்தியாவசியமானதாக இருக்கிறது.

*அ) மனதளவிலும், ............................ உடைந்து போகுதல்*

*ஆ) அடிக்கடி, திரும்பத் திரும்ப வருகின்ற ........................ - குறிப்பாக, பரம்பரை பரம்பரையாகத் தாக்குகின்றன.*

*இ) அடிக்கடி திரும்பத் திரும்ப வருகின்ற ......................... அல்லது பெண்களோடு தொடர்புடைய பிரச்சனைகள்*

ஈ) ......................... முறிந்து போகுதல். குடும்ப உறவுகளில் பிரிவு.

உ) ......................... தொடர்ச்சியாய் உண்டாகிற பற்றாக்குறை.

ஊ) அதிகமான .......................... சந்திக்கின்ற நிலை

எ) குடும்ப வரலாற்றில், தற்கொலைகளும், இயற்கையாய் நிகழாத அல்லது காலத்திற்கு முன்பே நடக்கின்ற ..........................

15. நாம் ஆபிரகாமின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி, இயேசு ...............................

16. உபாகமம் 28:47-48 வசனங்களில், தரித்திரத்தைக் குறித்த நான்கு சுருக்கமான விளக்கங்களை மோசே இவ்வாறு கொடுக்கிறார்: பட்டினி, தாகம், நிர்வாணம், சகலத்திலும் குறைவு. சிலுவையில், அவர் பசியோடும் தாகத்தோடும், சகலத்திலும் குறைவுபட்ட நிலையில் நிர்வாணமாய் தொங்கியபடியால், ............................ தரித்திர சாபத்தை முறித்தார்.

17. நாம் அவருடைய ......................... பங்கடையும்படி, இயேசு நம்முடைய தரித்திரத்தை ஏற்றுக் கொண்டார்.

18. இயேசு நிர்வாணமாய் சிலுவையில் தொங்கி, நம்முடைய நிந்தை அவமானங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டார். நாம் அவருடைய மகிமையில் பங்கடையும்படி, இயேசு நம் ............. ................. ஏற்றுக் கொண்டார்.

19. 'நிராகரிக்கப்படுதல்'தான், மனுஷனுடைய இருதயத்தைக் காயப்படுத்தக்கூடிய மிகவும் ஆழமான காயங்களில் ஒன்றாக இருக்கிறது. நிராகரிக்கப்படுதலின் இரண்டு முக்கியமான அடையாளங்கள் இவை:

அ) நீங்கள் எப்பொழுதும் ......................... உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல உணருவீர்கள். மற்றவர்கள் உள்ளே போகலாம், ஆனால் உங்களால் முடியாது என்ற எண்ணம்தான் உங்களுக்குள் இருக்கும்.

ஆ) உங்களால் மற்றவர்களை ............. முடியாது. 1 யோவான் 4:19-ல், யோவான் இவ்வாறு எழுதியிருக்கிறார்,

*"அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்." அன்பு ஒருபோதும் நம்மிடத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால், நம்மால் அன்புகூர முடியாது. முதலில் அன்பைப் பெற்றுக் கொள்ளும்போதுதான், அன்பை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்த முடியும்.*

சிலுவையில் சரீரப்பிரகாரமான பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தபடியால், இயேசு மரிக்கவில்லை. அவர் ஏற்கனவே மரித்து விட்டார் என்பதை பிலாத்து கேள்விப்பட்டபோது, அவன் ஆச்சரியப்பட்டான். காரணம், இன்னும் இரண்டு மணி நேரங்கள் அதிகமாக அவர் வாழ்ந்திருக்கக்கூடிய சாத்தியக்கூறு இருந்தது. அப்படியென்றால், அவர் எப்படி சீக்கிரமாய் மரித்தார்? அவருடைய இருதயம் உடைந்தது. அதனால்தான் அவர் மரித்தார். எது அவருடைய இருதயத்தை உடைத்தது? நிராகரிக்கப்பட்டதுதான் அதற்குக் காரணம். யாரால் அவர் நிராகரிக்கப்பட்டார்? பிதாவாகிய தேவனால் அவர் நிராகரிக்கப்பட்டார்.

இப்பிரபஞ்சத்தின் வரலாற்றில், முதல்முறையாக, தேவனுடைய குமாரன், பிதாவாகிய தேவனை நோக்கிக் கதறினார். ஆனால் பிதா அவருடைய கதறலுக்குச் செவிகொடுக்கவில்லை. அவர் தன் காதுகளை அடைத்துக் கொண்டார். அவர் இயேசுவின் மீதிருந்து தன் கண்களை எடுத்து விட்டார். அவர் இயேசுவைப் பார்க்காதபடி தவிர்த்து விட்டார். ஏன்? காரணம், நம்முடைய பாவத்தினால் இயேசு பாவமாக்கப்பட்டார் என்பதுதான். தேவனால் பாவத்தை தயவோடு பார்க்க முடியாது.

*20. நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும்படி, இயேசு நம்முடைய................................... ஏற்றுக் கொண்டார்.*

சிலுவையில் நிகழ்ந்த எட்டு தெய்வீக பரிமாற்றங்களைக் குறித்து இப்பாடத்தில் நாம் கற்றுக் கொண்டோம். அதை சுருக்கமாகப் பார்ப்போம்:

❖ நாம் **மன்னிப்படும்படி,** இயேசு **தண்டிக்கப்பட்டார்** (ஏசாயா 53:4-5).

❖ நாம் **சுகமடையும்படி,** இயேசு **காயப்பட்டார்** (ஏசாயா 53:4-5; மத்தேயு 8:16-17).

❖ இயேசுவின் நீதியினால் நாம் **நீதிமான்களாக்கப்படும்படி,** இயேசு நம் **பாவத்தினால்** பாவமாக்கப்பட்டார் (ஏசாயா 53:10; 2 கொரிந்தியர் 5:21).

❖ நாம் அவருடைய **ஜீவனில்** பங்கடையும்படி, இயேசு நமக்காக

**மரணத்தை ருசிபார்த்தார்** (எபிரெயர் 2:9; யோவான் 10:10).

❖ நாம் **ஆசீர்வாதத்தைப்** பெற்றுக் கொள்ளும்படி, இயேசு **சாபமானார்** (கலாத்தியர் 3:13-14).

❖ நாம் அவருடைய **சம்பூரண நன்மைகளில் பங்கடையும்படி,** இயேசு நம்முடைய **தரித்திரத்தை** ஏற்றுக் கொண்டார் (2 கொரிந்தியர் 8:9; 2 கொரிந்தியர் 9:8; உபாகமம் 28:47-48).

❖ நாம் அவருடைய **மகிமையில்** பங்கடையும்படி, இயேசு நம்முடைய **நிந்தை அவமானங்களை** ஏற்றுக் கொண்டார் (மத்தேயு 27:35-36; எபிரெயர் 2:10).

❖ நாம் தேவனால் **ஏற்றுக் கொள்ளப்படும்படி,** இயேசு சிலுவையில் **நிராகரிக்கப்பட்டார்** (மத்தேயு 27:45-51; எபேசியர் 1:3-6).

முயற்சி எடுத்து, இந்தத் தெய்வீகப் பரிமாற்றங்களையெல்லாம் உங்களுடைய நினைவில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது இது தனிப்பட்ட விதத்தில் உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். மற்றவர்களோடு இவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கும் இது உதவியாயிருக்கும். வேதவசனங்களிலிருந்து இந்த சத்தியங்களைக் கற்றுக் கொண்டு, இவற்றை உங்களுடைய வாழ்க்கையில் பின்பற்றுவீர்கள் என்றால், அது பொல்லாத, தீய அழுத்தங்களிலிருந்து ஆச்சரியமான விடுதலையை உங்களுக்குக் கொடுக்கும். *சகலத்திலும் தேவனுடைய ஆசீர்வாதத்தை தங்கி நிலைத்திருக்கச் செய்யக்கூடிய ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள்* (ஆதியாகமம் 24:1), இது உங்களை நுழையச் செய்யும். இந்தச் சத்தியங்களை நீங்கள் விசுவாசிக்கும்போது, அது தொடர்ந்து உங்களுடைய மனதைப் புதிதாக்கி, மறுரூபமாக்குகிறது. சிலுவையில் இயேசு தம்முடைய மரணத்தின் மூலம் உங்களுக்காக விலைக்கிரயம் செலுத்தி வாங்கியிருக்கிற சம்பூரண ஜீவனை நீங்கள் அனுபவிக்கும்படி இது உங்களுக்கு உதவி செய்யும்.

சிலுவையில் நிகழ்ந்த தெய்வீகப் பரிமாற்றம், ஆராய்ந்து அறிய முடியாத அளவிற்கு ஆழமான ஒரு சத்தியமாயிருக்கிறது. அதாவது, அதனுடைய முடிவை நீங்கள் ஒருபோதும் அடைய முடியாது. மேற்கண்ட பட்டியலில், குறிப்பிடப்படாத ஒரு தேவை ஏதேனும் உங்களுக்கு இருக்கிறதா? உங்களுடைய விடுதலையையும், உங்களுடைய வாழ்க்கைக்கென்று தேவன் வைத்திருக்கிற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு வாக்குப் பண்ணுகிற வேதவசனங்களை பரிசுத்த ஆவியானவரிடமே ஜெபித்து, கேளுங்கள்.

பின்வரும் ஜெபத்தை நீங்கள் ஜெபிக்கலாம்:

*கர்த்தராகிய இயேசுவே, என்னுடைய விடுதலைக்காக சிலுவையில் நீர் செலுத்திய விலைக்கிரயத்திற்காக உமக்கு நன்றி சொல்கிறேன். வேதாகமம் வெளிப்படுத்துகிற இந்த தெய்வீகப் பரிமாற்றங்களை யெல்லாம் குறித்து அதிகமாய் கற்றுக் கொள்ளும்போது, என் மீது நீர் வைத்திருக்கிற அன்பைக் குறித்த ஆச்சரியத்தினால் நான் நிரப்பப்படுகிறேன். ஏராளம் தாராளமான நன்மைகளும், ஆசீர்வாதங்களும் உள்ளடங்கிய இரட்சிப்பையே நீர் எனக்குக் கொடுக்கிறீர். உமக்கு நன்றி சொல்கிறேன்.*

*இந்த அத்தியாவசியமான புதிய சத்தியங்களை என்னுடைய வாழ்க்கையில் பின்பற்றும்படி, எனக்கு தயைகூர்ந்து உதவி செய்யும். சிலுவையில் நிகழ்ந்த தெய்வீகப் பரிமாற்றம் ஒவ்வொன்றையும் பூரணமாய் நான் பெற்றுக் கொள்ளத்தக்கதாக, நான் ஜெபிக்கும்படி உதவி செய்யும். உம்முடைய வாக்குத்தத்த தேசத்தை நோக்கி என்னுடைய விசுவாசப் பிரயாணத்தை நான் தொடர எனக்கு உதவி செய்யும்.*

*உம்முடைய நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.*

379-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/30**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்.

# அஸ்திபாரத்தைப் போடுதல் என்ற

## *தொடர் பாடங்களுக்கான அறிமுகம்*

10 செய்திகள் அடங்கிய இந்தத் தொகுப்பு, எபிரெயர் 6:1-2 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிற கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரப் போதனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் வாசிப்போம்:

*ஆகையால், கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக.*

நம்முடைய இருதயங்களிலும், வாழ்க்கையிலும் கர்த்தருக்கு ஒரு வாசஸ்தலத்தை நாம் கட்டியெழுப்புவதற்கு முன், நாம் போட வேண்டிய 6 முக்கியமான அஸ்திபார மூலைக்கற்களைக் குறித்து இவ்வேதப்பகுதி சுட்டிக் காண்பிக்கிறது.

**1) செத்த கிரியைகளை விட்டு நீங்கி, மனந்திரும்புதல்**

**2) தேவன் மீது வைக்கும் விசுவாசம்**

**3) ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம் - யோவான் ஸ்நானம், கிறிஸ்தவ முழுக்கு ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்**

**4) கைகளை வைக்குதல்**

**5) மரித்தோரின் உயிர்த்தெழுதல்**

**6) நித்திய நியாயத்தீர்ப்பு**

இயேசு கிறிஸ்து எனும் தனிப்பட்ட அஸ்திபாரத்தைக் குறித்துப் போதிப்பதிலிருந்து டெரிக் ஆரம்பிக்கின்றார். பிறகு மேலே பட்டியலிடப்பட்ட அஸ்திபாரப் போதனைகள் ஒவ்வொன்றையும் வரிசையாக, அதன் ஒழுங்கின்படி போதிக்கிறார். நிறைய கிறிஸ்தவர்கள், இந்த அஸ்திபாரத்தின் மதிப்பை உணராமல், இதைப் புரிந்துகொள்ளாமல்,

இதை நடைமுறைப்படுத்தாமல் தங்களுடைய வாழ்க்கையில் கடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தொடர் போதனை களை நாம் கற்று முடிக்கும்போது, அது நம்மை பூரணராகும் நிலைக்கு நேராக முன்னேறிச் செல்லும்படி, இயேசுவைப்போல இன்னும் இன்னும் அதிகமாய் வளரும்படி ஆயத்தப்படுத்துகிறது.

இந்தப் போதனையை ஆழமாக உள்வாங்கி, கற்றுக் கொள்ளும்படி நேரத்தைச் செலவிடுங்கள். காரணம், இது தேவனோடு உங்களுக்கு இருக்கும் உறவை மாற்ற முடியும். அதன் விளைவாக, உங்களுடைய வாழ்க்கையையும் இது மாற்றும்.

*2-ம் பாடம் >>*

*அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 1*

# கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடுதல்[4160]

## *அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

அஸ்திபாரத்தைப் போடுதல் என்ற செய்தித்தொடரின் முதல் செய்தி, கன்மலையின் மேல் அஸ்திபாரமிடப்படுதல் என்பதாகும். இது இயேசு என்ற நபரை மையமாகச் சுற்றியிருக்கிறது. ஏற்கனவே போடப்பட்டிருக்கிற இயேசு கிறிஸ்து எனும் அஸ்திபாரமே அல்லாமல், வேறே ஒரு அஸ்திபாரம் போடப்படக்கூடாது என்று வேதவசனம் நமக்குச் சொல்கிறது. தனிப்பட்ட விதத்தில், இயேசுவே நம்முடைய வாழ்க்கையின் அஸ்திபாரமாக இருக்கிறார். நாம் கட்டியெழுப்புவதற்கு முன், நம்மை நாமே இரண்டு முக்கியமான கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

1. *எது என்னுடைய அஸ்திபாரம் - நான் சரியான அஸ்திபாரத்தைப் போட்டிருக்கிறேனா?*
2. *என்னுடைய வாழ்க்கை, இயேசுவின் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறதா? அவரோடு எனக்கு ஒரு தனிப்பட்ட உறவு இருக்கிறதா?*

கிறிஸ்தவர்களாகிய நாம், கர்த்தருக்கென்று ஒரு வாசஸ்தலத்தை நமக்குள் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பை உடையவர்களாய் இருக்கிறோம். அதைச் செய்ய வேண்டுமென்றால், நாம் நம் வாழ்க்கையை இயேசுவின் மீது கட்டமைக்க வேண்டும். மத்தேயு 16:13-ம் வசனத்தில், “என்னை யாரென்று சொல்கின்றீர்கள் ?” என்ற ஒரு கேள்வியை இயேசு தம் சீஷர்களிடம் கேட்டார். இன்றைக்கும் அதே கேள்வியைத்தான், அவர் நம் ஒவ்வொருவரிடமும் கேட்கிறார்.

நீங்கள் இந்தப் போதனையைப் பார்க்கும்போது, உங்களுடைய ஆவிக்குரிய அஸ்திபாரத்தின் நிலையைக் குறித்தும், நீங்கள் எவ்வாறு அதை இயேசுவுக்குள் மிகவும் உறுதியான ஒன்றாய் கட்டியெழுப்ப முடியும் என்பதைக் குறித்தும், உங்களுக்கு வெளிப்படுத்தும்படி தேவனிடம் ஜெபித்துக் கேளுங்கள்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

டெரிக் பிரின்ஸ் தன்னுடைய போதனையைக் குறித்து இதைத்தான் சொல்கிறார்:

> *நான் ஒருபோதும் மதப்போதனைகளைப் போதிக்க மாட்டேன் என்று பல வருடங்களுக்கு முன்பு, நான் கர்த்தரிடம் சொன்னேன். ஆனால் நான் ஒரு செய்தியைப் பிரசங்கித்த பிறகு, அந்தச் சத்தியத்தின்படி செயல்படக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஜனங்களுக்குக் கொடுப்பேன்.*

நாம் இதை இரண்டு வழிகளில் செய்ய முடியும். ஒன்று, நாம் என்ன கற்றுக் கொண்டோம் என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டும். இரண்டாவது, இந்தப் புதிய சத்தியத்தை வாழ்க்கையில் பின்பற்ற நமக்கு உதவி செய்யும்படி, தேவனிடம் ஜெபித்துக் கேட்க வேண்டும்.

முக்கியமான குறிப்புகளை திரும்பவும் நம் நினைவுக்குக் கொண்டு வருவதிலிருந்து இதை ஆரம்பிக்கலாம். நீங்கள் எவ்வளவாய் கற்றறிந்திருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்படி, பின் வரும் கோடிட்ட இடங்களை நிரப்புங்கள் (ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் இதற்கான பதில்களை நீங்கள் பார்க்க முடியும். ஆனால் பதில்களை சரி பார்ப்பதற்கு முன், கற்றுக் கொண்டவைகளை நினைவுக்குக் கொண்டு வந்து, பதிலளிக்க முயற்சியுங்கள்).

## *கிறிஸ்தவ ஜீவியம் ஒரு கட்டிடத்தோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது*

*1. வேதாகமத்தில், கிறிஸ்தவ ஜீவியம் ஒரு .............................. ஒப்பிடப்பட்டிருக்கிறது.*

*2. .................... ஒரு வாசஸ்தலத்தைக் கட்ட வேண்டிய பொறுப்பு கிறிஸ்தவர்களுக்கு இருக்கிறது (யூதா 20-21; எபேசியர் 2:22; 1 பேதுரு 2:4-5; அப்போஸ்தலர் நடபடிகள் 20:32).*

*3. அஸ்திபாரம், ஒரு கட்டிடத்திற்கு பிரதானமாகத் தேவைப்படுகிறது. காரணம், அதுதான் ஒரு கட்டிடத்தின் இரண்டு விஷயங்களைத் தீர்மானிக்கிறது:*

*அ) கட்டிடத்தின் ............................ மற்றும்*

*ஆ) கட்டிடத்தின் ............................*

*4. ஆவிக்குரிய ஜீவியத்தின் அஸ்திபாரம், .................. கிறிஸ்து (1 கொரிந்தியர் 3:9-11).*

## *அஸ்திபாரத்தைப் போடுதல்*

மத்தேயு **16:13-18** வசனங்களில், "நீங்கள் என்னை யாரென்று சொல்கின்றீர்கள்?" என்று இயேசு கேட்கிறார். இக்கேள்விக்கு பேதுரு சொன்ன பதிலைக் கேட்ட இயேசு சில முக்கியமான உண்மைகளை முன்னிலைப்படுத்திச் சொல்கிறார். பேதுருவைக் குறிக்கும்படி பெட்ரோஸ் (சிறிய கல் அல்லது பாறாங்கல்) என்ற வார்த்தையையும், தம்மைக் குறிக்கும்படி பெட்ரா (பெரிய செங்குத்தான பாறை) என்ற வார்த்தையையும் இயேசு பயன்படுத்துகிறார். நாம் ஒவ்வொருவரும் இந்த ஒரு கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் பாறாங்கல்லின் மீது கட்டப்பட்டிருக்கிறோமா அல்லது செங்குத்தான பெரிய பாறையின் மீது கட்டப்பட்டிருக்கிறோமா?

*5. இந்தச் சம்பவத்தில், இயேசு என்ன செய்தார் என்றால், பெரிய பாறையிலிருந்து (இயேசுவிடமிருந்து) பேதுருவை ..............................அவர் அவனை அதோடு ஒப்பிடவில்லை.*

*6. இயேசுவைக் குறித்த வெளிப்பாட்டை பேதுரு நேரடியாகப் பெற்றுக் கொண்டபோது, அங்கே படிப்படியாக நான்கு விஷயங்கள் நிகழ்ந்தன.*

*அ) நேரடி ........................; இயேசுவே வாசல்*

*ஆ) ...................................; பிதாவாகிய தேவன் ஆவியான வர் மூலம் குமாரனை வெளிப்படுத்துகிறார்.*

*இ) .........................................; நீங்கள் இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டு, இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

*ஈ) .....................................; வெளிப்படையாக வாயினால் அறிக்கை செய்ய வேண்டும்.*

இன்றைக்கும் இப்படிப்பட்ட ஒரு நேரடிச் சந்திப்பு நிகழ முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இயேசு தேவனுடைய நித்திய குமாரன் என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த வெளிப்பாடு, நித்தியமான பரிசுத்த ஆவியானவர் மூலமாய் உண்டாயிருக்கிறது. தேவன் ஒருபோதும் மாறாதவர் என்று எபிரெயர் 13:8-ல் நாம் வாசிக்கின்றோம். அப்படியென்றால், இது ஒரு கேள்வியை நம் முன் வைக்கிறது. நாம் மாறியிருக்கிறோமா என்பதுதான் அது. இயேசுவோடு ஒரு தனிப்பட்ட உறவு இன்னும் உங்களுக்கு உண்டாகியிருக்கவில்லை என்றால் அல்லது நீங்கள் கேட்ட இந்தச் செய்தி ஒரு புதிய புரிதலுக்குள் உங்களை நடத்தியிருக்கிறது என்றால், இதோ, உங்களுடைய விருப்பத்தை ஒரு ஜெபமாக நீங்கள் இவ்வாறு ஏறெடுக்கலாம்:

*அன்பு நிறைந்த தேவனே, உம்முடைய சீஷனாகிய பேதுரு உம்மை அறிந்து கொண்டது போல, நானும் உம்மை அறிந்து கொள்ள விரும்புகிறேன். பேதுருவின் இந்தச் சம்பவத்தின் மூலம், நீர் என்னை தனிப்பட்ட விதத்தில் சந்திக்கின்றீர் என்பதை நான் உணருகிறேன். பிதாவாகிய தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியானவர் மூலம், இயேசுவை என க்கு வெளிப்படுத்தும். முழுமையாய் இந்த வெளிப்பாட்டை நான் பெற்றுக் கொள்ளும்படி எனக்கு உதவி செய்யும். என் விசுவாசத்தை வெளிப்படையாய் மற்றவர்கள் முன்பாக அறிக்கை செய்யக்கூடிய தைரியத்தை எனக்குத் தாரும். ஆமென்.*

## அஸ்திபாரத்தின் மேல் கட்டியெழுப்புதல்

*7. மத்தேயு 7:24-27 வசனங்களின்படி, இந்த ஜெபத்தை நீங்கள் ஜெபிக்கும்போது, இயேசு எனும் அஸ்திபாரத்தின் மீது நீங்கள் கட்டிடத்தை கட்டியெழுப்ப ஆரம்பிக்கின்றீர்கள். இதில் பிரதானமாக, இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கிறது:*

*அ) தேவனுடைய வார்த்தைக்கு ....................*

*ஆ) தேவனுடைய வார்த்தையின்படி ............................*

ஒரு பெரிய கட்டிடத்தை வலுவானதாய் கட்டியெழுப்ப வேண்டுமென்றால், நாம் முதலில் ஆழமாய் தோண்டி அஸ்திபாரம் போட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம், நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாயிருக்கிற காரியங்களை அகற்றிப் போடுகிறோம்.

*8. டெரிக் தன் போதனையில், ஆழமான அஸ்திபாரம் (லூக்கா 6:46-49) போடுவதற்குத் தடையாயிருக்கும் ஐந்து முக்கியமான காரியங்களைப் பட்டியலிடுகிறார். அவை எவை?*

*அ) ................................ குறிப்பாக, எதிர்மறையானவை.*

*ஆ) ................................ இனம், சபைப்பிரிவு மற்றும் சமுதாயம்*

*இ) ....................................... இயேசுவைக் குறித்தோ அல்லது ஒரு கிறிஸ்தவராய் வாழ்வதைக் குறித்தோ முற்றிலும் தவறான பார்வை இருக்கலாம்.*

*ஈ) ................................ - நாம் திறந்த இருதயத்துடன் விசுவாசிக்க வேண்டும்.*

*உ) ........................... - தொன்றுதொட்டு காணப்படுகிற இந்தப் பிரச்சனைக்கு ஒரே தீர்வு, மாம்சத்திற்கு மரிப்பதாகும்.*

## *பரிசுத்த வேதாகமம்*

*9. வேதாகமம் என்பது .............................. தேவனுடைய வார்த்தையாகும்.* **வேதவசனம்** *என்பது* **எழுதப்பட்ட வார்த்தை** *என்று அர்த்தம்.*

*10. இயேசு: .......................... வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை ஆவார் (யோவான் 1:1, 14; வெளிப்படுத்தல் 19:11-13).*

பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த உங்களுடைய மனநிலைதான், இயேசுவைக் குறித்த உங்களுடைய மனநிலையாயிருக்கிறது. ஒன்றை நீங்கள் அலட்சியம் செய்வீர்கள் என்றால், இன்னொன்றையும் நீங்கள் அலட்சியம் செய்வீர்கள். இயேசுவுக்கும், வேதாகமத்திற்கும் இடையே எந்த வித்தியாசமுமில்லை.

## *ஐந்து முக்கியமான உண்மைகள்*

*11. யோவான் 14:19, 22-23 வசனங்களில், தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து, ஐந்து முக்கியமான உண்மைகள் எழுதப்பட்டிருக்கின்றன:*

*அ) தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளுதல், உண்மையான சீஷர்களை யாரிடமிருந்து வித்தியாசப்படுத்துகிறது? ............................................ (இவ்வுலகத்தாரிடமிருந்து)*

*ஆ) தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளுதல், .................... (தேவன்) மீது சீஷன் வைத்திருக்கும் அன்பிற்கான உச்சகட்ட சோதனையாயிருக்கிறது. அன்புதான் கீழ்ப்படிதலுக்கான உந்துசக்தியாயிருக்கிறது.*

*இ) தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்வதற்கு, ........................ (சீஷனுக்குள்) இருக்கும் தேவனுடைய அன்புதான் பிரதானமான காரணமாயிருக்கிறது.*

*ஈ) தேவனுடைய வார்த்தையைக் காத்து, கீழ்ப்படிவதன் மூலம், .................... (கிறிஸ்து) தம்மையே வெளிப்படுத்துகிறார்.*

*உ) தேவனுடைய வார்த்தையின் மூலம், .................................. (பிதாவாகிய தேவனும்), குமாரனும் ஒன்றாய் சேர்ந்து சீஷனுக்குள் வாசம் பண்ணுகிறார்கள்.*

**தேவனுடைய வார்த்தையை அதிகமாய் நேசிக்காமல், தேவனை உங்களால் அதிகமாக நேசிக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.** இதுதான் சோதனை: “*வேதாகமத்தை நான் எவ்வளவாய் நேசிக்கிறேன்? என் வாழ்க்கையில் வேதாகமத்திற்கு எவ்வளவு உயர்வான ஒரு இடத்தைக் கொடுத்திருக்கிறேன்?*” என்ற கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

இந்தப் பாடத்தை முடிக்கின்ற இந்நேரத்தில், இயேசு தம் சீஷர்கள் எல்லோரையும் பார்த்துக் கேட்ட ஒரு கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம். “நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?” என்பதுதான் அக்கேள்வி. இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு, உங்களுடைய பதில் மாறியிருக்கிறதா? தேவன் உங்களுக்குக் காண்பிக்கிற ஒவ்வொரு புதிய வெளிப்பாட்டிற்காகவும், தேவனுக்கு நன்றி சொல்ல மறவாதீர்கள். அதை

சந்தோஷமாய் பெற்றுக் கொள்ளுங்கள்.

வேதாகமத்தைக் குறித்த நம் மனநிலையை நாம் தொடர்ந்து சோதித்துப் பார்க்கக்கடவோம். தேவனால் எழுதப்பட்ட வார்த்தையைக் குறித்த நம் மனநிலைதான், தேவனுடைய வார்த்தையாய் மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவைக் குறித்த நம் மனநிலையாய் அப்படியே பிரதிபலிக்கிறது. இதில் ஒன்றை நாம் அலட்சியம் செய்வோம் என்றால், இன்னொன்றையும் நாம் அலட்சியம் செய்து விடுவோம்.

நாம் என்ன கற்றுக் கொண்டோம் என்பதை நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். இந்தப் புதிய சத்தியங்களை நம்முடைய வாழ்க்கையில் பின்பற்றும்படி நாம் தேவனுடைய உதவியை நாட வேண்டும். நாம் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். இந்தச் செய்தியின் சத்தியங்கள் உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஆழமாய் வேர்விடும்படி, பின் வரும் ஜெபத்தை நீங்கள் ஏறெடுங்கள்:

*அன்பின் கர்த்தாவே, இயேசுவாகிய கன்மலையில் என் ஆவிக்குரிய ஜீவியத்தை உறுதியாய் கட்டியெழுப்பும்படி எனக்கு உதவி செய்கிறீர். உமக்கு நன்றி. உம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற உம்முடைய வார்த்தையை கேட்டு, அதன்படி செய்கிறவனாய் நான் வாழ எனக்கு உதவி செய்யும்.*

*நான் ஆழமாய் தோண்டி, உறுதியான அஸ்திபாரத்திற்குத் தடையாய் இருக்கிற எல்லா விஷயங்களையும் நான் அகற்றிப் போட விரும்புகிறேன். எதிர்மறையான பாரம்பரியங்கள், தவறான அபிப்பிராயங்கள், தவறான முன் யோசனைகள், அவிசுவாசம் மற்றும் முரட்டாட்டம், இவை எல்லாவற்றையும் என் வாழ்க்கையிலிருந்து வெளியேற்றும்படி எனக்கு உதவி செய்யும். பெரும்பாலான நேரங்களில், இவை எனக்கு மிக அருகாமையில் இருந்தாலும், என்னால் இவற்றைப் பார்க்க முடிவதில்லை. இவற்றை எனக்கு வெளிப்படுத்தும். இவற்றைத் தோண்டி வெளியே எறிவதற்கு வேண்டிய கருவிகளை எனக்குத் தாரும்.*

*வேதாஹகமத்தைக் குறித்த என் மனநிலையை அடிக்கடி நான் சோதித்துப் பார்க்கும்படி எனக்கு உதவி செய்யும். உம்முடைய வார்த்தையைக் குறித்த என் மனநிலைதான், உம்மைக் குறித்த*

*என் மனநிலையாய் இருக்கிறது என்பதை நான் புரிந்து கொள்ளும்படி எனக்கு உதவி செய்யும். உம்முடைய வார்த்தை மற்றும் உம்முடைய பரிசுத்த ஆவியானவர் மூலம், எனக்குத் தொடர்ந்து போதித்தருளும். ஆமென்.*

அடுத்த செய்தியில், வேதாகமத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து இன்னும் அதிகமாய் அறிந்து கொள்ளப் போகிறோம். தேவனுடைய வார்த்தைக்கிருக்கும் அதிகாரம் மற்றும் வல்லமையைக் குறித்துதான் நாம் பார்க்கப் போகிறோம்.

379-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/30**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*3-ம் பாடம் >>*

*அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 2*

# தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் மற்றும் வல்லமை[4161]

## *அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

அஸ்திபாரத்தைப் போடுதல் என்ற செய்தித்தொடரின் 2வது செய்தியை நாம் கேட்கப் போகிறோம். எபிரெயர் 6-ல் பட்டியலிடப்பட்டிருக்கிற ஆறு அஸ்திபாரக் கற்களைப் போடும்படி ஒரு கட்டமைப்பை நாம் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நாம் அஸ்திபாரத்தைப் போடுவதற்கு முன், சில குறிப்பிட்ட கோட்பாடுகளைப் பின்பற்றியாக வேண்டும். தேவனுடைய வார்த்தையாய் மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவோடு ஆழமான உறவும், தேவனால் எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமும் இதற்கு அத்தியாவசியமானதாக இருக்கிறது.

முந்தின செய்தியில், இயேசு கிறிஸ்து எனும் கற்பாறையின் மீது ஒரு உறுதியான அஸ்திபாரம் போடுவதைக் குறித்து நாம் கற்றுக் கொண்டோம். ஆழமாய் தோண்டி, எதிர்மறையான பாரம்பரியங்கள், தவறான அபிப்பிராயங்கள், தவறான முன் யோசனைகள், அவிசுவாசம், முரட்டாட்டம் போன்ற தடைகளையெல்லாம் அகற்ற வேண்டிய அவசியத்தைக் குறித்தும் கற்றுக் கொண்டோம்.

இந்தச் செய்தியில், தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டிருக்கிற வேதாகமத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் கற்றுக் கொள்வோம். “வேதவசனத்தின் அதிகாரம் எங்கிருந்து வருகின்றது ?; இன்றைக்கும் வேதவசனம் எவ்வளவு தொடர்புடையதாயிருக்கிறது ?; மனுஷர்கள் மூலமாய் எழுதப்பட்ட ஒரு புத்தகம் எப்படி பூரணமானதாய், குறைகளற்றதாய் இருக்க முடியும் ?” இந்தக் கேள்விகளுக்கெல்லாம் டெரிக் பதிலளிக்கப் போகிறார்.

அதோடு கூட, நம் வாழ்க்கையில் வேதவசனம் உண்டாக்கக்கூடிய பலன்களைக் குறித்தும், அவற்றின் ஆச்சரியமான சில பயன்பாடுகளைக் குறித்தும் நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம். இவற்றில் சில விஷயங்கள், விசுவாசிப்பதற்கு சற்று கடினமானவைகளாய் தெரிகின்றன, நம்மை ஆச்சரியத்தின் உச்சிக்கே கொண்டு செல்லக்கூடியவைகளாய் இருக்கின்றன. ஆனாலும் விசுவாசத்திலிருந்துதான், நாம் ஆரம்பிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். காரணம், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்," என்று எபிரெயர் 11:6 சொல்கிறது. நீங்கள் விசுவாசத்தில் குறைவுபட்டிருக்கிறீர்களா? அதற்கும் வேதவசனத்தில் பதில் இருக்கிறது. "விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும்," என்று ரோமர் 10:17-ல் நாம் கற்றுக் கொள்கிறோம். உங்களிடம் விசுவாசம் இல்லையென்றால், தேவனுடைய வார்த்தையின் மூலம் நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவனுடைய வார்த்தையில் எழுதி வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அவருடைய வாக்குத்தத்தங்களில், நமக்காக தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கிற நன்மைகள் இருக்கின்றன என்பதை டெரிக் வேதவசனத்தின் மூலம் நமக்கு எடுத்துக் காண்பிக்கிறார். நாம் அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் மாறுகின்றோம் என்பது ஆச்சரியமான மாற்றமாக இருக்கின்றது. எனவே நம்முடைய இருதயத்தைத் திறந்து, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை நம் இருதயங்களுக்குள் ஏற்றுக் கொள்வோம். அது நம் வாழ்க்கையில் உண்டாக்குகிற ஆச்சரியமான மாற்றங்களை அனுபவிக்க ஆரம்பிப்போம்.

இப்பொழுது தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் மற்றும் வல்லமை என்ற செய்தியை நாம் கேட்போம் அல்லது பார்ப்போம். பிறகு கேள்விகளுக்கான பகுதியைத் தொடருவோம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

தேவனுடைய வார்த்தையின் ஆச்சரியமான நோக்கங்கள் மற்றும் அது உண்டாக்கக்கூடிய பலன்களை கண்டுபிடிப்பதற்கு கொஞ்ச நேரம் தேவைப்படுகிறது. இதன் பலன்கள், ஆழமான தாக்கத்தை உண்டாக்குகின்றன, நம் வாழ்க்கையையே உருமாற்றக்கூடியவைகளாய் இருக்கின்றன. வேதாகமத்தின் சத்தியங்களுக்கு நம்மையே நாம் அர்ப்பணிக்கும்போது, நிச்சயமாக, நாம் அதே நிலையில் இருக்க மாட்டோம்.

இந்தச் செய்தித்தொடரில், "கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போடுதல்" என்ற டெரிக்கின் முதல் செய்தியில், "தேவனுடைய வார்த்தையைக் காட்டிலும் அதிகமாய் நீங்கள் தேவனை நேசித்து விட முடியாது," என்று அவர் சொன்ன வாக்கியம், உங்களுடைய நினைவில் இருக்கிறதா? வேதாகமத்தைக் குறித்து நாம் அதிகமாய் கற்றுக் கொள்ளும்போது, நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் பிரதானமான முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற வெளிச்சத்தை நம்மால் அதிகமாகப் பார்க்க முடிகிறது.

கன்மலையின் மேல் அஸ்திபாரமிடப்படுதல் என்ற முந்திய செய்தியைத் தொடர்ந்து நாம் செய்ததுபோலவே, இந்தச் செய்தியிலிருந்தும் சில முக்கியமான குறிப்புகளைப் பார்க்கப் போகிறோம். நாம் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறோமா என்பதையும், நாம் கற்றுக் கொண்டதை நினைவில் வைத்திருக்கிறோமா என்பதையும் இதன் மூலம் உறுதி செய்யப் போகிறோம். இந்தச் செய்தியிலிருந்து சில வாக்கியங்களை கீழே கொடுத்திருக்கிறோம். அதன் கோடிட்ட பகுதிகளை நீங்கள் நிரப்ப வேண்டும்.

நீங்கள் ஒரு பாடத்தை முடித்து விட்டு, அதன் கேள்விகளுக்கான பதில்களைத் தேடும்போது, இந்த ஆச்சரியமான சத்தியங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்படி உங்களுக்கு உதவி செய்யக்கூடிய சில குறிப்புகள் உங்களிடமிருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். இயேசுவைக் குறித்து பேதுருவுக்கு உண்டான நேரடி வெளிப்பாடு உங்களுடைய நினைவிலிருக்கிறதா? அதற்கு நான்கு படிகள் இருந்தன என்று டெரிக் நமக்குப்

போதித்திருந்தார்: தனிப்பட்ட விதத்தில் உண்டாகும் நேரடிச் சந்திப்பு, வெளிப்பாடு, அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுதல், வெளிப்படையாய் மற்றவர்கள் முன்னிலையில் அறிக்கை செய்தல். நீங்கள் ஜெபிக்கும்போது, இந்தச் சத்தியங்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளை தேவன் உங்களுக்குக் கொடுப்பார். அப்பொழுது மற்றவர்களும் இந்த விசுவாசப் பிரயாணத்தில் உங்களோடு சேருவார்கள்.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

## *அதிகாரம்*

*1. வேதவசனங்களின் அதிகாரம், அவற்றை .................. (எழுதிய) பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வருகின்றது.*

*2. 2 தீமோத்தேயு 3:16-ம் வசனம், ......................... ........... (வேதவசனங்களெல்லாம்) தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று சொல்கிறது.*

*3. ஒரு புத்தகத்தை எழுதியவருக்கு அதன் சரியான விளக்கம் தெரியும். அவரிடம்தான் இறுதி அதிகாரம் இருக்கிறது. வேதாகமத்தை எடுத்துக் கொண்டோம் என்றால், இந்த நபர் .....................................(பரிசுத்த ஆவியானவர்) (2 பேதுரு 1:20-21).*

*இந்தச் செய்தியின் அறிமுகப் பகுதியில் குறிப்பிட்டபடி, ஒரு நல்ல கேள்வி சில நேரங்களில் எழுகின்றது. பாவ மனுஷர்கள் மூலம், வேதவசனங்கள் எழுதப்பட்டிருக்கும் என்றால், அது எப்படி குறைவுகளற்றதாய், பூரணமானதாய் இருக்கும் என்ற கேள்விதான் அது. சங்கீதம் 12:6-ம் வசனத்தின் மூலம், டெரிக் பிரின்ஸ் அதற்கான பதிலை வெளிப்படுத்துகிறார். அது என்ன சொல்கிறது? "கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழு தரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது."*

*4. இந்த எடுத்துக்காட்டில், பல்வேறு விஷயங்கள், பின் வரும் விதத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன:*

*அ) களிமண் குகை எதற்கு அடையாளம்? .................. (மனுஷன்)*

*ஆ) வெள்ளி என்பது மனுஷன் மூலமாக வெளிப்படுகிற தேவனுடைய .................................. (செய்தியாயிருக்கிறது).*

*இ) சுத்தப்படுத்தும் .................... (அக்கினியாய்) பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார்.*

*வெள்ளியானது ஏழு தரம் புடமிடப்படுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். வேதாகமத்தில், ஏழு என்பது பரிசுத்த ஆவியானவரையும், பரிபூரணத்தையும் குறிக்கின்ற ஒரு எண்ணாக இருக்கின்றது.*

## *இயேசுவும் பழைய ஏற்பாடும்*

வேதவசனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் எடுத்துக் கொள்ளும்போது, ஒரு நல்ல கேள்வி நமக்குள் எழும்புகிறது. இயேசு வாழ்ந்த காலத்தில், இன்னும் புதிய ஏற்பாடு எழுதப்படாத காரணத்தால், அவர் எப்படி பழைய ஏற்பாட்டைப் பார்த்தார், அதற்கு மதிப்பு கொடுத்தார் என்பதுதான் அந்தக் கேள்வி.

5. யோவான் 10:35-ல், "வேதவசனம் ...................... (தவறாததாயிருக்க)," என்று இயேசு சொன்னார்.

## *இயேசு எவ்வாறு வேதவசனத்தைப் பயன்படுத்தினார்?*

*6. சாத்தான் கூட தேவனுடைய வார்த்தையை மறுக்க முடியாது. ஆதியில், ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடத்தில் அவன் என்ன செய்தானோ, அதையே வனாந்திரத்தில் இயேசுவை முதலில் சோதித்தபோதும் செய்தான். இன்றைக்கும் பெரும்பாலும் நம்மிடத்திலும் அவன் அதைத்தான் செய்கிறான். அது என்ன? தேவனுடைய வார்த்தையை ................................. . (சந்தேகிக்கச் செய்வதுதான்).*

*7. நம்முடைய பதில், சாத்தானுடன் செய்கின்ற தர்க்கமாக இருக்கக்கூடாது. மாறாக, ................................ (தேவனுடைய வார்த்தையைக்) கொண்டு பதிலளிக்க வேண்டும்.*

*8. எபேசியர் 6:17-ல், தேவனுடைய ......................... (வார்த்தையாகிய)ஆவியானவரின் பட்டயத்தை எடுத்து நாம்*

ஆவிக்குரிய யுத்தத்தைச் செய்ய வேண்டும் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

9. தேவனுடைய வார்த்தை நித்தியமானது. அது இன்றைக்கும் நம்மிடம் பேசுகின்றது. மத்தேயு 22:31-32 வசனங்களில், இயேசு யாத்திராகமம் புத்தகத்திலிருந்து மோசே தீர்க்கதரிசியை மேற்கோள் காட்டி விட்டு, "தேவனால் ........................ (உங்களுக்கு) சொல்லப்பட்டதை நீங்கள் வாசிக்கவில்லை," என்று அவர் ஜனங்களிடம் கேட்டார்.

## இயேசுவின் வாழ்க்கை எவ்வாறு வேதவசனத்தை நிறைவேற்றியது?

இயேசுவின் வாழ்க்கை முழுவதுமே வேதவசனத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. "வேதவசனம் நிறைவேறத்தக்கதாய்......." என்று பதினெட்டு முறை எழுதப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாடு என்று நாம் அழைக்கிற, யூதர்களின் தானாக்-கில் எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள், மெசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து நமக்குப் பேசுகின்றன.

## பரிசுத்த ஆவியானவரின் அதிகாரம்

10. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் பின்னணியில், .......................... ஆவியானவரின் அதிகாரமிருக்கிறது.

11. யோவான் 14:25-26 வசனங்களில், இயேசு சொன்னார், "நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியானவராகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு ............................ .., நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும், உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

12. அந்த ............................, சீஷர்களால் தாங்கிக் கொள்ள முடிந்த எல்லாவற்றையும் இயேசு அவர்களிடம் வெளிப்படுத்தினார். அதற்கும் மேலான சத்தியங்களை பரிசுத்த ஆவியானவர்

*அவர்களுக்கு வெளிப்படுத்துவார் என்று அவர் நம்பினார் (யோவான் 16:12-14).*

மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களில், இயேசு தம்முடைய சீஷர்களிடம் பலமுறை ஒன்றைச் சொல்லியிருக்கிறார். இயேசுவை தேவனுடைய குமாரனாய் நாம் விசுவாசிக்கும்போது, நாம் நம்முடைய பரலோகப் பிதாவுடன் ஒப்புரவாக்கப்படுகிறோம். தேவன், இயேசுவினுடைய பிதா மட்டுமல்ல, அவர் நம்முடைய பிதாவாகவும் இருக்கிறார். ஆகையால்தான், மத்தேயு **6:9-13** வசனங்களிலும், லூக்கா **11:2-4** வசனங்களிலும், கர்த்தர் கற்றுக் கொடுத்த ஜெபமானது, "எங்கள் பிதாவே" என்று ஆரம்பிக்கிறது. எனவே நம்முடைய ஜெபங்களையும், "எங்கள் பிதாவே" அல்லது "பரலோகத் தகப்பனே" என்று சொல்லி ஆரம்பித்தால், அவை சரியான ஜெபங்களாயிருக்கும்.

கலாத்தியர் **4:6**-ல் பவுல் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிப்போம்: "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், 'அப்பா, பிதாவே!' என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்." அப்பா (Abba) என்ற எபிரெய வார்த்தை, "தகப்பனே" என்று நெருக்கமாகக் கூப்பிடுகிற அர்த்தத்தில் வருகின்ற ஒரு வார்த்தையாகும். ஆகையால், நம்முடைய பிதாவாகிய தேவனிடம் வரும்படி நாம் உற்சாகமூட்டப்படுகிறோம்.

*அன்பு நிறைந்த பிதாவே, வேதாகமத்தின் முக்கியத்துவத்தை எனக்கு உணர்த்தியிருக்கிறீர். உமக்கு நன்றி. என் வாழ்க்கையில் அதற்கு பிரதானமான ஒரு இடத்தை கொடுக்காமல் இருந்ததற்காக, என்னை மன்னியும், என்னை உருமாற்றும் என்று ஜெபிக்கிறேன்.*

*வேதாகமத்தின் ஆசிரியராகிய பரிசுத்த ஆவியானவரை எனக்குத் தந்திருக்கிறீர். உமக்கு நன்றி. அவர் வேதவசனங்களையெல்லாம் முழுமையாய் அறிந்திருக்கிறார். அவரே அவற்றின் அதிகாரத்தை உடையவராக இருக்கிறார். இப்பொழுது அவரே எனக்கு சகலத்தையும் போதித்து, சகல சத்தியங்களுக்குள்ளும் வழிநடத்துவாராக. எனக்குத் தேவையான தருணங்களில், அவரே நீர் பேசின வார்த்தைகளை என் நினைவுக்குக் கொண்டு வருவாராக.*

*உம்முடைய வார்த்தையில் நான் நன்றாக பழக்கப்பட்டு, வளருவதற்கு உதவி செய்யும். என்னைச் சோதிக்கும்படி சாத்தான் வரும்போது, சரியான வேதவசனத்தை எதினாலும் ஊடுருவ முடியாத ஒரு தற்காப்பு ஆயுதமாகப் பயன்படுத்த எனக்குக் கற்றுத் தாரும். உம்மையும் உம்முடைய வார்த்தையையும் நேசிக்க, கனம் பண்ண எனக்கு உதவி செய்யும். ஆமென்.*

## தேவனுடைய வார்த்தை எப்படிப்பட்டது?

எபிரெயர் **4:12**-ம் வசனத்தில், தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது என்றும், தேவனுடைய ஆற்றல் நிறைந்ததாய் மனுஷனுடைய ஆளுமையின் ஒவ்வொரு பகுதியையும் ஊடுருவக்கூடியது என்றும் நாம் பார்க்கின்றோம். மேலும் அது பிரித்தறியும் ஆற்றலுடையதாயிருக்கிறது. ஆகையால் நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது, வேதாகம் நம்மை வாசிக்கின்றது. அது நம்முடைய மெய்யான ஆவிக்குரிய நிலையை நமக்கு வெளிப்படுத்துகிறது. தேவனுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்வதன் மூலம், நாம் எவ்வாறு உருமாற்றப்பட முடியும் என்பதையும் அது நமக்கு வெளிப்படுத்துகிறது.

*13. நமக்கு ஒரு தேவை எழும்போது, அந்தத் தேவை சந்திக்கப்படுவதற்கான முன்னேற்பாடு, தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இருக்கிறது என்று 2 பேதுரு 1:3-4 வசனங்களில் எழுதப்பட்டிருப்பதை நாம் நினைவுகூருவோம். அதிலும் குறிப்பாக:*

*அ) ...................................... ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.*

*ஆ) ......................................... அறிகிற அறிவினாலே.*

*இ) மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள், தேவனுடைய ................................. இருக்கின்றன.*

*ஈ) விசுவாசத்தினால் நாம் அவற்றைப் பெற்றுக் கொள்ளும்போது, நாம் தேவனுடைய .................................. மாறுகின்றோம்.*

## தேவனுடைய வார்த்தையின் எட்டு பலன்கள்

*14 தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும்போது, அதினால் எட்டு முக்கியமான பலன்கள் உண்டாகின்றன:*

*அ) அது ............................ உண்டாக்குகிறது (ரோமர் 10:17).*

*ஆ) அது புதிய ........................ வித்து (யாக்கோபு 1:18). அழிவில்லாத வித்து, என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய அழிவில்லாத ஜீவனை உண்டாக்குகிறது (1 பேதுரு 1:22-23).*

*இ) நாம் ஆவிக்குரிய .............................. பெறுகின்றோம்: பால் (1 பேதுரு 2:2); அப்பம் (மத்தேயு 4:4). திட உணவு (எபிரெயர் 5:12-14).*

*ஈ) நாம் ................... வெளிச்சத்தைப் பெறுகின்றோம் (சங்கீதம் 119:130). கல்வி வெளிச்சத்தைக் கொடுக்க முடியாது; ஞானம், தேவனுடைய வார்த்தையின் மூலமாக வருகின்றது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.*

*உ) சரீரப்பிரகாரமான சுகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி நம்மையே ஆயத்தப்படுத்துகிறோம்.*

*(1) சங்கீதம் 107:17-20 வசனங்களின் மூலம், தேவனுடைய வார்த்தை நம்மை ..........................., சுகமாக்குகிறது, விடுதலையாக்குகிறது என்பதை கற்றுக் கொள்கிறோம்.*

*(2) நீதிமொழிகள் 4:20-22 வசனங்களில், தேவனுடைய வார்த்தை, நம் ............................ ஆரோக்கியமாய் அல்லது மருந்தாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

*ஊ) அது நமக்கு பாவத்தின் மீதும், .......................... மீதும் வெற்றியைக் கொடுக்கிறது (சங்கீதம் 119:9, 11 மற்றும் மத்தேயு 4:4,7,10)*

*எ) .........................., பரிசுத்தமும் (எபேசியர் 5:25-27).*

*ஏ) வேதாகமம், ஒரு ஆவிக்குரிய ........................ செயல்படுகின்றது (யாக்கோபு 1:23-25).*

நீங்கள் இதைப் பற்றி என்ன நினைத்தாலும், இதுதான் உண்மை.

தேவனுடைய வார்த்தையை நேசிக்காமல், உங்களால் தேவனை நேசிக்க முடியாது. அதாவது நீங்கள் எந்த அளவிற்கு தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறீர்களோ, அந்த அளவிற்குத்தான் தேவனை நேசிக்கிறீர்கள்.

*அன்பு நிறைந்த கர்த்தராகிய இயேசுவே,*

*நீரே தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறீர் என்ற மாறா உண்மையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே தேவனுடைய வார்த்தையை நான் எவ்வளவாய் கனம் பண்ணுகிறேனோ, அவ்வளவாய் நான் உம்மைக் கனம் பண்ணுகிறேன் என்பதையும் ஒத்துக் கொள்கிறேன். உம்முடைய வார்த்தையை என் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்திற்குள் பெற்றுக் கொள்வதால் உண்டாகக்கூடிய ஆச்சரியமான நன்மைகளில் சிலவற்றை நான் பார்க்க ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் முழுமையான பலனை அது என் வாழ்க்கையில் உண்டாக்கும்படி நாம் இடம் கொடுக்கிறேன். உம்முடைய வார்த்தைக்கு ஒத்திசைந்த விதத்தில் செயல்பட எனக்கு உதவி செய்யும். உம்மைப்போல இன்னும் இன்னும் அதிகமாய் என்னை உருமாற்றியருளும். உம்மைப்போலவே நான் மாற விரும்புகிறேன். ஆமென்.*

ஆழமாய் தோண்டி, இயேசு கிறிஸ்து எனும் கன்மலையின் மீது தேவனுடைய வார்த்தையின் மூலம் நம்முடைய அஸ்திபாரத்தைப் போட வேண்டியதன் அவசியத்தைக் குறித்த ஒரு புரிதல் இப்பொழுது நமக்கு உண்டாயிருக்கிறது. அடுத்த பாடத்தில், எபிரெயர் **6**-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற அஸ்திபாரக் கற்களில் முதல் இரண்டைக் குறித்துப் பார்ப்போம்: “செத்த கிரியைகளை விட்டு நீங்கி, மனந்திரும்புதல்” மற்றும் “தேவன் மீது வைக்கும் விசுவாசம்”

**381**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/30**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# 4-ம் பாடம் >>
# அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 3
# மனந்திரும்புதலின் மூலம் விசுவாசத்திற்குள்[4162]

*அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

அடுத்த பாடத்திற்குச் செல்வதற்கு முன், இதுவரை இந்தத் தொடரில் நாம் கற்றுக் கொண்டவைகளை திரும்பவும் நம் நினைவுக் கொண்டு வருவோம். இயேசு கிறிஸ்து என்ற ஒரு நபர் மீது நம்முடைய தனிப்பட்ட ஆவிக்குரிய அஸ்திபாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தைக் குறித்து முதலில் கற்றுக் கொண்டோம். இந்த அஸ்திபாரத்தின் மீது ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவரும் எவ்வாறு கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் நாம் பார்த்தோம். அடுத்ததாக, மெய்யாகவே வெற்றிகரமான ஒரு கிறிஸ்தவ ஜீவியம் வாழ்வதற்கு வேண்டிய அடிப்படையான, அத்தியாவசியமான கூறுகளைக் குறித்துப் பார்த்தோம்: தனிப்பட்ட விதத்தில், இயேசுவை நேரடியாக சந்தித்தல்; இயேசு யார் என்பதைக் குறித்து பிதாவாகிய தேவன் அருளும் நேரடி வெளிப்பாடு; இந்த வெளிப்பாட்டை பெற்றுக் கொண்டவர்களாய், இயேசுவை இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுதல்; வெளியரங்கமாய் அதை அறிக்கை செய்தல்.

ஞானமுள்ளவனைக் குறித்தும், ஒரு முட்டாளைக் குறித்தும் இயேசு சொன்ன உவமையிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்கின்றோம். இந்த அஸ்திபாரத்தின் மேல் தன் கட்டிடத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம், ஞானமுள்ளவன் முதலில், வேதாகமத்தை தேவனால் எழுதப்பட்ட வார்த்தையாகவும், இயேசுவை ஜீவ வார்த்தையாகவும் ஏற்றுக் கொள்கிறான். இரண்டாவதாக, இயேசு என்ன சொன்னாரோ, அதற்கு செவிகொடுத்து, அதன்படியே அவன் செய்கின்றான்.

இரண்டாவது செய்தியில், தேவனுடைய வார்த்தைக்கு இருக்கும் அதிகாரத்தையும், வல்லமையையும் குறித்து நாம் பார்த்தோம். ஒன்றை எழுதியவரிடமிருந்துதான் அதற்கான அதிகாரம் வருகின்றது என்பதை டெரிக் சுட்டிக் காண்பித்தார். ஆக, எந்தவொரு புத்தகத்தின் அதிகாரமும், அதை எழுதியவரைத்தான் சார்ந்திருக்கிறது. ஆகையால் வேதாகமத்தின் அதிகாரம், அதை எழுதியவராகிய பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்கிறது. அது தேவனுடைய ஆவியானவரை, இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அது தேவனையே சார்ந்திருக்கிறது. ஆகையால் தேவனுடைய அதிகாரம், வேதாகமத்தின் வார்த்தைகளில் இருக்கின்றது.

தேவனுடைய வார்த்தையானது இரண்டு வடிவங்களில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று டெரிக் பிரின்ஸ் நமக்குப் போதித்தார். ஒன்று, எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை. இன்னொன்று, மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய இயேசு. இப்பொழுது நம் மும் ஒரு சவால் வருகின்றது. நீங்கள் எந்த அளவிற்கு தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறீர்களோ, அந்த அளவிற்குத்தான் தேவனையும் நேசிப்பீர்கள். அதைக் காட்டிலும் அதிகமாக நேசிக்க மாட்டீர்கள். நீங்கள் எந்த அளவிற்கு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்றீர்களோ, அந்த அளவிற்குத்தான் தேவனுக்கும் கீழ்ப்படிவீர்கள். அதைக் காட்டிலும் அதிகமாய் கீழ்ப்படிய மாட்டீர்கள். உங்களுடைய வாழ்க்கையில் தேவனுக்கு என்ன இடத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா? வேதாகமத்திற்கு உங்களுடைய வாழ்க்கையில் என்ன இடம் என்று பாருங்கள். காரணம், தேவனும், அவருடைய வார்த்தையும் ஒன்றுதான். வேதாகமம், எழுதப்பட்ட வார்த்தை. இயேசு, மாம்சத்தில் வெளிப்பட்ட வார்த்தை. எழுதப்பட்ட வார்த்தையின் மூலம், ஒரு நபராக, தனிப்பட்ட வார்த்தையாய் வெளிப்பட்ட இயேசு நம் வாழ்க்கைக்குள் வருகின்றார்.

தனிப்பட்ட உறவின் அஸ்திபாரத்தைப் போட ஆரம்பித்திருக்கிறோம். இப்பொழுது நாம் இந்தப் பாடத்தில், போதனைகளின் அஸ்திபாரத்தை ஆராய ஆரம்பிப்போம். எபிரெயர் 6:1-2 வசனங்களில் ஆறு அஸ்திபாரக் கற்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்: செத்த கிரியைகளை விட்டு நீங்கி, மனந்திரும்புதல்; தேவன் மீது வைக்கும் விசுவாசம்; முழுக்கு ஞானஸ்நானங்களைக் குறித்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய நியாயத்தீர்ப்பு. முதலில், செத்த கிரியைகளை விட்டு நீங்கி

மனந்திரும்புவதைக் குறித்துப் பார்ப்போம். இது விசுவாசத்தில் கீழ்ப்படிந்து செய்யாத எல்லா விஷயங்களை விட்டு விலகி மனந்திரும்புவதைக் குறிக்கின்றது.

மனந்திரும்புதலின் முக்கியத்துவத்தைக் குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்பதை இந்தச் செய்தியில் அறிந்து கொள்வீர்கள். மனந்திரும்புதல் என்பது சித்தங்கொண்டு, எடுக்கின்ற ஒரு தெளிவான தீர்மானமாக இருக்கின்றது. மனந்திரும்புதல் என்பது, ஒன்றைக் குறித்து வெறுமனே மனம் வருந்துவதிலிருந்து, அதைக் குறித்த மன உளைச்சலிலிருந்து எவ்வளவாய் முற்றிலும் வேறுபட்டிருக்கிறது என்பதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். விசுவாசத்திற்கும், மனந்திரும்புதலுக்கும் இடையே உள்ள உறவைக் குறித்தும், மெய்யான விசுவாசத்திற்கு முன் மனந்திரும்புதல்தான் எப்பொழுதும் வருகின்றது என்பதைக் குறித்தும் நீங்கள் இதில் கற்றுக் கொள்வீர்கள்.

கிறிஸ்தவர்கள் எதிர்கொள்கின்ற பல பிரச்சனைகள், அவர்கள் மெய்யாக மனந்திரும்பாததினால் வருகின்றன என்பதையும் டெரிக் வெளிப்படுத்துகிறார். நீங்கள் இந்தப் போதனையைக் கேட்கும்போது, இதைக் குறித்த புரிந்துகொள்ளுதலைக் கொடுக்கும்படி தேவனிடம் ஜெபித்துக் கேளுங்கள். தேவன் மீது விசுவாசம் என்ற அடுத்த முக்கியமான அடிக்கு நீங்கள் ஆயத்தமாகத்தக்கதாக, மெய்யான மனந்திரும்புதலை அடைவதற்கான விருப்பத்தையும், திராணியையும் கொடுக்கும்படி தேவனிடம் ஜெபியுங்கள்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

## *அஸ்திபாரப் போதனை*

இந்தப் பாடத்தில், எபிரெயர் 6:1-2 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற முதல் இரண்டு அஸ்திபாரப் போதனைகளை டெரிக் பிரின்ஸ் நமக்குப் போதித்திருக்கிறார்: “செத்த கிரியைகளை விட்டு நீங்கி, மனந்திரும்புதல்” மற்றும் தேவன் மீது வைக்கும் விசுவாசம்”. இந்தச் செய்தியில் கேட்டவைகளை உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வரும்படி, பின் வரும் கோடிப்பட்ட பகுதிகளை நிரப்புங்கள். பதில்களை சரிபார்ப்பதற்கு

முன், எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்கும்படி ஒரு முயற்சியை நிச்சயமாக எடுங்கள்.

1. ..............................., கீழ்ப்படிதலிலும் செய்யப்படாத எல்லா செயல்களும் "செத்த கிரியைகள்" என்றழைக்கப்படுகின்றன. இவை பாவச் செயல்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. "தேவனால் கட்டளையாகக் கொடுக்கப்படாத எந்த வேலைக்கும் வெகுமதியோ, பலனோ கிடைக்காது," என்று டெரிக் ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்.

ஒரு தனிப் பயிற்சியாய் இதைச் செய்யுங்கள். நேரம் செலவிட்டு, உங்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். உங்களுடைய வாழ்க்கையில் எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று தேவன் வைத்திருக்கிற பட்டியலை, அவரே உங்களுக்குக் காண்பிக்கும்படி அவரிடம் ஜெபியுங்கள். பெரும்பாலும் நம் வாழ்க்கையில், நாமாகவே பற்பல வேலைகளில் மூழ்கி, செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நாம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிற காரியங்களை நாம் செய்வதில்லை. இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று நம்மை நாமே வற்புறுத்திக் கொண்டு, பல்வேறு காரியங்களை நாம் செய்து வருகின்றோம். அப்படிப்பட்ட காரியங்களால் நம் வாழ்க்கையை நாம் நிரப்பியிருக்கின்றோம். அவற்றுள் சில நல்லவை. அவற்றுள் சில கெட்டவை. ஆனால் அவை தேவனால் நியமிக்கப்படவில்லை. தேவனுடைய பட்டியலில் இல்லாத அப்படிப்பட்ட காரியங்களை நாம் களைந்தெடுத்து, வெளியே எறிய வேண்டும். அப்பொழுது இளைப்பாறுதலோடு நாம் நம் வாழ்க்கையை வாழ முடியும். அது அலசடிபடுகிற, அமைதலற்ற ஒரு வாழ்க்கையாக இருக்காது.

## *செத்த கிரியைகளிலிருந்து மனந்திரும்புதல்*

*2. 'மனந்திரும்புதல்' என்பதற்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம், உங்களுடைய ........................ மாற்றுவதாகும் (இது ஒரு தீர்மானம்).*

*3. 'மனந்திரும்புதல்' என்பதற்கான எபிரெய வார்த்தையின் அர்த்தம், அப்படியே .............................. (இது ஒரு செயல்).*

*4. எப்பொழுதுமே மெய்யான ............................ முன் மனந்திரும்புதல் வருகின்றது.*

*5. மெய்யான மனந்திரும்புதலைக் குறித்து, ஊதாரியாய் வாழ்ந்த மகனின் கதையில் எழுதப்பட்டிருக்கிறது. இது வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற மிகச் சரியான ஒரு எடுத்துக்காட்டாகும். அவன் தனக்குச் சேர வேண்டிய சொத்தை தகப்பனிடமிருந்து வாங்கிக் கொண்டு, ஊதாரித்தன மாய் செலவழித்து, அழித்தான். ஒருநாள், அவன் தன் நிலையைக் குறித்த உணர்வுக்கு வந்தான். அவனுக்கு புத்தி தெளிந்தது. அவனுடைய மனந்திரும்பிய செயலில், மூன்று படிகள் காணப்பட்டன என்று லூக்கா 15:17-20 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது:*

*அ) அவனுக்கு .......... தெளிந்தது (உண்மையை சந்தித்த நேரம்).*

*ஆ) அவன் ஒரு ........................ எடுத்தான் (மனமாறுதல்).*

*இ) அவன் அப்படியே ................................. (முடிவை செயல் பாட்டிற்குக் கொண்டு வருதல்).*

*6) பொய்யான மனந்திரும்புதலைக் குறித்த இரண்டு எடுத்துக்காட்டுகள், ஏசாவின் வாழ்க்கையிலும் (எபிரெயர் 12:14-17), யூதாஸ் இஸ்காரியோத்தின் வாழ்க்கையிலும் (மத்தேயு 27:3-5) காணப்படுகிறது. இருவரும் ........................ ஆனால் அவர்கள் மனந்திரும்புதலின் இடத்திற்கு வரவில்லை.*

## *விசுவாசத்திற்கு முன் மனந்திரும்புதல்*

*7. மனந்திரும்புதல், ................................... முன் வர வேண்டும் என்பதை டெரிக் வலியுறுத்துகிறார். மனந்திரும்புதல் உண்டாகாமல், மெய்யான விசுவாசம் அங்கே இருக்க முடியாது. இது புதிய ஏற்பாடு முழுவதிலும் வலியுறுத்தி, சொல்லப்படுகிற ஒரு சத்தியமாகும்.*

*8. மத்தேயு 3-ம் அதிகாரத்தில், யோவான் ஸ்நானகனின் ஊழியத்தைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். மெசியாவாகிய இயேசுவின் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்யும்படி அவன் அனுப்பப்பட்டிருந்தான். ஒரு வார்த்தையில், அவனுடைய செய்தி என்ன? ...................................*

வேறு வார்த்தைகளில், மெசியாவாகிய இயேசுவின் வருகைக்கு முன்னர், அங்கே மனந்திரும்புதல் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. மனந்திரும்புதல், மெசியாவின் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்தது. தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேல் ஜனங்கள், மனந்திரும்புதலின் இந்த அனுபவத்தின் வழியாகக் கடந்து செல்லாமல், அவர்களுடைய மெசியாவாகிய இயேசுவை சந்திக்கும்படி அவர்கள் ஆயத்தமாக முடியாது.

9. மாற்கு 1:14-15 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: “யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ‘காலம் நிறைவேறிற்று. தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை ..........................................,’ என்றார்.

10. இந்த வரிசையை கவனியுங்கள். மனந்திரும்பி, விசுவாசியுங்கள். முதலில், நீங்கள் மனந்திரும்பாமல், உங்களால் மெய்யாகவே விசுவாசிக்க முடியாது. விசுவாசியுங்கள் என்பதல்ல, ................................... என்பதுதான் இயேசுவின் வாயிலிருந்து வெளிப்பட்ட முதல் கட்டளையாக இருக்கிறது.

11. பெந்தேகோஸ்தே நாளில், தாங்கள் கேட்ட சுவிசேஷத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்று அங்கிருந்த ஜனக்கூட்டம் கேட்டபோது, அவர்கள் செய்ய வேண்டிய முதல் காரியமாக, அப்போஸ்தலனாகிய பேதுரு எதைச் சொன்னார்? .......................................... (அப்போஸ்தலர் நடபடிகள் 2:37-38).

12. அப்போஸ்தலர் நடபடிகள் 17:30-ல், எங்கும் வாழ்கின்ற மனுஷர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் .................... ..................... என்று பவுல் சொல்கிறார்.

13. மனந்திரும்புதலுக்கான தேவனுடைய நிபந்தனைகளை நாம் பூர்த்தி செய்வோம் என்றால், நாம் இயேசுவை நம் இரட்சகராக சந்திப்போம். மாறாக, இந்த அடிப்படை நிபந்தனையை நாம் தவற விடுவோம் என்றால், நாம் அவரை ........................................ சந்திப்போம்.

## *மனந்திரும்புதலின் கிரியை தேவனிடமிருந்து தொடங்குகிறது*

*14. மனந்திரும்புதலின் கிரியையை ........................... ஆரம்பிக்கப் படுகிறது (சங்கீதம் 80:3,7,19; புலம்பல் 5:21).*

*15. எங்குமுள்ள மனுஷர் .................................. மனந்திரும்ப வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது? ஏன் எங்குமுள்ள எல்லா மனுஷரும் என்று நீங்கள் கேட்கலாம்? ஏசாயா 53:6 சொல்கிறது: "நாம் எல்லோரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்." இது நம் எல்லோருடைய பிரச்சனையாக இருக்கிறது. நாம் கொலை, கொள்ளை, விக்கிரக ஆராதனை போன்ற பெரிய பாவங்களைச் செய்யாமல் இருந்திருக்கலாம். ஒரு பொய் கூட நாம் சொல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் நாம் எல்லோருமே ஒரு காரியத்தைச் செய்திருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் அவரவர் தன் தன் வழியிலே வாழ்ந்தோம். நாம் தேவனுடைய வழியில் வாழவில்லை.*

*16. சில கலிலேயர்கள் பலி செலுத்திக் கொண்டிருந்தபோதே, பிலாத்து அவர்களைக் கொன்று போட்டான். ஒரு கோபுரம் விழுந்து, பதினெட்டு பேர் கொல்லப்பட்டனர். இதைக் குறித்து சொல்லும்போது, "நீங்கள் மனந்திரும்பாமல் போனால், எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்," என்று இயேசு இரண்டு முறை சொன்னார் (லூக்கா 13:3 மற்றும் 5-ம் வசனங்கள்). மனந்திரும்பவில்லை என்றால், என்ன நடக்கும்? ....................................*

மனந்திரும்புதலின் முக்கியத்துவத்தைக் குறித்த இந்தப் புதிய புரிதலைப் பெற்றுக் கொண்டீர்கள். இப்பொழுது கன்மலையாகிய இயேசுவின் மீது இந்த அஸ்திபாரக் கல்லை உறுதியாய் வைத்து கட்ட வேண்டுமென்றால், நீங்கள் மெய்யாகவே மனந்திரும்பியிருக்கிறீர்கள் என்ற நிச்சயம் உண்டாக வேண்டும். அதற்கு கர்த்தருடைய உதவியை நாட வேண்டும் என்று நீங்கள் ஒருவேளை உணரலாம். இதோ, பின் வரும் ஜெபம் உங்களுக்கு உதவியாயிருக்கும்:

*அன்பு நிறைந்த கர்த்தராகிய இயேசுவே, மனந்திரும்புங்கள் என்ற உம்முடைய கட்டளையின் முக்கியத்துவத்தை எனக்கு உணர்த்தியிருக்கிறீர். உமக்கு நன்றி. அதைக் குறித்த ஒரு புதிய புரிதலையும் எனக்குக் கொடுத்திருக்கிறீர். உமக்கு நன்றி. உம் மீது விசுவாசத்தைப் பயிற்றுவிக்கத்தக்க ஒரு நிலையில் நான் இருக்கிறேன் என்பதை நான் நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். எனவே மரணத்திற்கேதுவான எந்தக் கிரியைகளிலெல்லாம் நான் இன்னும் மனந்திரும்பவில்லை என்பதை எனக்கு வெளிப்படுத்தும். உம்முடைய வழிகளைப் பின்பற்ற எனக்கு உதவும் என்று நான் உம்மிடம் ஜெபிக்கின்றேன்.*

*என்னுடைய வழிகளை அல்ல, உம்முடைய வழிகளையே பின்பற்றும்படி நான் தீர்மானிக்கிறேன். உம்மைப் பிரியப்படுத்தாத எல்லா அக்கிரமங்களையும் விட்டு விலகும்படி உறுதியான ஒரு தீர்மானத்தை நான் எடுக்கிறேன். என் முகம் எப்பொழுதும் உமக்கு நேராயிருக்கும்படி எனக்கு உதவும். என்னுடைய பழைய பொல்லாத வழிகளுக்கு நேராக நான் திரும்பி விடாதபடி என்னைக் காத்துக் கொள்ளும்.*

*நீர் கட்டளையிடாத வேலைகளைச் செய்து என் வாழ்க்கையை நான் வீணடிக்க விரும்பவில்லை. கனியற்ற வாழ்க்கை வாழ்வதிலிருந்து என்னை வெளியே கொண்டு வாரும். உம்முடைய வார்த்தையையும், உம்முடைய பரிசுத்த ஆவியான வரின் வழிநடத்துதல்களையும் பின்பற்ற எனக்கு உதவும். என க்கென்று நீர் ஆயத்தம் செய்து வைத்திருக்கிற அந்த நல்ல, செம்மையான பாதையில் என்னை வழிநடத்தியருளும். இயேசுவின் நாமத்தில், இவற்றையெல்லாம் நான் கேட்கின்றேன். ஆமென்.*

மனந்திரும்புதல் என்பது நம் வாழ்க்கை முழுவதும் நடக்கின்ற ஒரு கிரியையாக இருக்கிறது. நிச்சயமாக, அதற்கு ஒரு ஆரம்பம் இருக்கின்றது. ஆனால் நாம் நித்தியத்திற்குள் பிரவேசிக்கும்போதுதான் அது முடிவடைகின்றது. நாம் ஆவிக்குரிய விதத்தில் வளர வளர, இன்னும் எவற்றையெல்லாம் கர்த்தருடைய ஆளுகைக்கு நாம் அர்ப்பணிக்க வேண்டும் என்பதை தேவன் தொடர்ந்து நமக்கு வெளிப்படுத்துவார். இது மனந்திரும்புதலுக்கான ஒரு அழைப்பாய் இருக்கிறது. இது நம்முடைய தனிப்பட்ட வழிகளை விட்டு விலகி, தேவனிடம் வரும்படி கொடுப்படுகிற

ஒரு அழைப்பாகும். நம்முடைய வழிகளையும், நம் சித்தத்தையும் பலிபீடத்தில் வைத்து விட்டு, அவருடைய வழிகளையும், அவருடைய சித்தத்தையும் ஏற்றுக் கொள்கிற ஒரு வாழ்க்கைமுறையாகும். அதுதான் நம்மை வெற்றி வாழ்க்கைக்குள் கொண்டு வருகின்றது.

இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குப் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தபோது, அவர்கள் அதை படிப்படியாக சுதந்தரிக்க வேண்டும் என்று தேவன் அவர்களிடம் சொன்னார். இல்லையென்றால், அவர்களால் அந்த தேசத்தை ஒழுங்காக நிர்வகித்திருக்க முடியாது. நமக்கும் இது உண்மையாயிருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்திற்குள் நுழையும்போது, நாமும் அந்த ஆவிக்குரிய வளர்ச்சியை படிப்படியாகத்தான் அடைய வேண்டும். அதில் நம் வளர்ச்சி, சீராக, நிதானமாக இருக்க வேண்டும். பிசாசின் தாக்குதல்களுக்கு எளிதான ஒரு இலக்காக நாம் மாறி விடக்கூடாது.

எந்த விஷயங்களை நாம் கர்த்தராகிய இயேசுவுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று அவர் வெளிப்படுத்தின பிரகாரம், நாம் மனந்திரும்பி, ஒரு ஒப்புக்கொடுத்தலைச் செய்திருக்கிறோம். இப்பொழுது நாம் “தேவன் மீது விசுவாசம்” என்ற அடுத்த அஸ்திபாரப் போதனைக்கு நிதானமாய் செல்ல ஆயத்தமாவோம்.

## *விசுவாசம்*

*17. விசுவாசம், தேவனுடைய ............................ வருகின்றது. ரோமர் 10:17 சொல்கிறது, ‘‘ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.’’*

*18. விசுவாசம் என்பது இப்பொழுது ........................... ஒரு கூறாகும் (ரோமர் 10:10).*

*19. ஆனால் நம்பிக்கை என்பது எதிர்காலத்தைக் குறித்த ஒரு எதிர்பார்ப்பாய் ................... உண்டாகிறது (1 தெசலோனிக்கேயர் 5:8).*

*20. விசுவாசமும், ........................ ஒன்றுக்கொன்று முரண்பட்டவை (2 கொரிந்தியர் 5:7).*

*21. நாம் முதலில் ....................... வேண்டும். அப்பொழுது நாம் பார்ப்போம் (யோவான் 11:39-40).*

*22. விசுவாசத்தோடு, நமக்கு நம்பிக்கையும் மிக முக்கியமானதாய் இருக்கிறது. காரணம், ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவரும் .................................. இருக்க வேண்டும். நம்பிக்கையற்றவராய் இருப்பார் என்றால், அது நம் விசுவாசத்தையே மறுதலிப்பதற்குச் சமமாகி விடும். காரணம், நம்பிக்கை என்பது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நன்மை உண்டாகும் என்ற உறுதியான, நிச்சயமான, தைரியமான ஒரு எதிர்பார்ப்பாய் இருக்கிறது.*

*23. பிரதானமாக, விசுவாசம் என்பது ......................... சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாயிருக்கிறது. இது ஏதோ ஒன்றை நம்பி, எதிர்பார்ப்பதோடு முடிந்து விடுவதில்லை. விசுவாசம் என்பதற்கான எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகளுக்கான பிரதானமான அர்த்தம் இதுதான்: உண்மை, உத்தமம், அர்ப்பணிப்பு, வாய்மை தவறாமை.*

*24. நிச்சயம், விசுவாசம் .......................... சோதிக்கப்படாத விசுவாசத்திற்கு தேவனுடைய பார்வையில் எந்த மதிப்புமில்லை.*

நம்முடைய வழிகளை விட்டு விலகி, தேவனிடம் திரும்பும்படி தீர்மானித்திருக்கிறோம். விசுவாசத்தினால், நம்முடைய வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய சித்தத்தை தெரிந்துகொள்கின்றோம். விசுவாசத்தினால், நம் வாழ்க்கை முழுவதும் நடக்க வேண்டிய இந்தக் கிரியைக்காக ஜெபித்து, நம்மையே ஒப்புக்கொடுப்போம்.

*அன்பின் பரலோகப் பிதாவே, என் மீது நீர் வைத்திருக்கிற உம்முடைய அன்பிற்காக உமக்கு நன்றி சொல்கிறேன். மனந்திரும்புதலினால் என் வாழ்க்கையில் உண்டாயிருக்கிற இந்த மாற்றத்தை எண்ணிப் பார்த்து, உமக்கு நன்றி சொல்கிறேன்.*

*உம்முடைய வார்த்தையின் மூலம் விசுவாசம் உண்டாகும்படி நீர் ஆயத்தம் செய்திருக்கிறீர். உமக்கு நன்றி. பால், அப்பம் மற்றும் திட உணவாகிய வேதவசனங்களின் மீது எனக்கு ஒரு பசியைத் தாரும். என் விசுவாசத்தில் ஒவ்வொரு நாளும் நான் வளர எனக்கு உதவி செய்யும். விசுவாசமில்லாமல் உம்மைப் பிரியப்படுத்த முடியாது என்பதை நான் புரிந்து கொள்கிறேன். ஆகையால் உம்முடைய வார்த்தையின் மூலம் என் விசுவாசத்தில் நான் வளர விரும்புகிறேன். அதன் மூலம் உம்மைப் பிரியப்படுத்த*

*விரும்புகிறேன், நான் செய்கிற ஒவ்வொரு விஷயத்திலும் உம்மை மகிமைப்படுத்த விரும்புகிறேன்.*

*இயேசுவின் நாமத்தில் நான் இதை ஜெபிக்கின்றேன். ஆமென்.*

அடுத்த பாடத்தில், 'தேவன் மீது விசுவாசம்' என்ற இரண்டாவது அஸ்திபாரப் போதனையை நாம் தொடர்ந்து கற்றுக் கொள்வோம். விசுவாசத்திற்கும் கிரியைகளுக்கும் இடையே உள்ள மிக முக்கியமான வித்தியாசத்தை டெரிக் இதில் போதிக்கின்றார். கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதை அவர் இங்கே ஆணித்தரமாகக் கற்றுக் கொடுக்கிறார்.

**382**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/26**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

## 5-ம் பாடம் >>

# அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 4

# விசுவாசம் மற்றும் கிரியைகள்[4163]

*அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

'மனந்திரும்புதலின் மூலம் விசுவாசத்திற்குள்' என்ற சத்தியத்தை கடந்த செய்தியில் கற்றுக் கொண்டோம். எபிரெயர் 6-ம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டிருக்கிற கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திபாரப் போதனை களை நாம் ஆராய ஆரம்பித்தோம். மெய்யான மனந்திரும்புதலுக்கான அத்தியாவசியத்தைக் குறித்துப் பார்த்தோம். நம் மனம் மாற வேண்டும். நாம் செல்லும் திசை மாற வேண்டும். 'செத்த கிரியைகளைக்' குறித்து வேதாகமம் சொல்லும்போது, விசுவாசத்தோடு கீழ்ப்படிந்து செய்யாத செயல்களை அது குறிக்கின்றது. அவை பாவக்கிரியைகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மாறாக, தேவன் கட்டளையிடாத எதைச் செய்தாலும், தேவன் அனுமதிக்காத எதைச் செய்தாலும் அது பாவம்தான். அது செத்த கிரியைதான்.

மெய்யான விசுவாசத்திற்குள் நுழைவதற்கு முன், அங்கு எப்பொழுதுமே மெய்யான மனந்திரும்புதல் உண்டாகிறது. ஆகையால் கன்மலையாகிய இயேசுவின் மீது ஆறு அஸ்திபார கற்களைப் போடும்படி நாம் இறங்கியிருக்கிற இந்த வேலையில், இதுதான் முக்கியமான முதல் அடியாயிருக்கிறது.

'தேவன் மீது விசுவாசம்' என்ற இரண்டாவது அஸ்திபாரத்தைக் குறித்தும் நாம் பார்க்க ஆரம்பித்தோம். இருதயத்தில் இப்பொழுது உண்டாகிற விசுவாசத்திற்கும், ஒரு எதிர்கால எதிர்பார்ப்பாக மனதில் உண்டாகிற நம்பிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை டெரிக் பிரின்ஸ் நமக்குப் போதித்தார். விசுவாசம் எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் கற்றுக் கொண்டோம். விசுவாசம், வேதவசனங்களின் மூலமாக வருகின்றது என்பதையும் நாம் அறிந்து கொண்டோம்.

இந்தப் பாடத்தில், விசுவாசத்தின் இந்த முக்கியமான நிபந்தனையை நாம் தொடர்ந்து ஆராய்வோம். குறிப்பாக, அது எவ்வாறு கிரியைகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைக் கற்றுக் கொள்வோம். 1 கொரிந்தியர் 15:1-5 வசனங்களில், பவுல் எழுதியிருக்கிற சுவிசேஷம், உங்களுடைய நினைவிலிருக்கிறதா? இதோ, அந்த எளிமையான மூன்று வரலாற்று உண்மைகள்: கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டார், கிறிஸ்து உயிரோடு எழுந்தார். இந்த மூன்று உண்மைகளையும் விசுவாசிப்பதன் மூலம், நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று ரோமர் 4:22-25 வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன.

சிலர் வேறு விதமாக தர்க்கம் செய்யலாம். கிறிஸ்தவம், விதிமுறைகள் அடங்கிய ஒரு தொகுப்பு **அல்ல!** நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை. மாறாக, மெய்யான, ஜீவனுள்ள விசுவாசம், நமக்குள் கீழ்ப்படிதலின் கிரியைகளை உருவாக்குகிறது. **அன்பு** தான் இதன் உச்சகட்ட இலக்காயிருக்கிறது.

விசுவாசம் மற்றும் கிரியைகளுக்கு இடையே உள்ள உறவைக் குறித்த மிகவும் முக்கியமான விஷயத்தை டெரிக் நமக்குப் போதிக்கும்போது, நாம் அதை கவனமாய் செவிகொடுக்க வேண்டும். ஆனாலும் சிலர்தான் இதைப் புரிந்துகொள்கின்றார்கள். நியாயப்பிரமாண சிந்தை எனும் பொறிக்குள் சிக்கிக் கொள்ளாதபடி நாம் விழிப்புணர்வோடு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தேவனைச் சார்ந்து கொள்ளாமல், மாற்று வழியில் நீதிமானாக்கப் படும்படியான முயற்சிகளில் நாம் இறங்கக் கூடாது. உங்களுடைய வாழ்க்கையில் விசுவாசம் மற்றும் கிரியைகளுக்கான இடம் என்ன என்பதைக் குறித்த சரியான புரிதலில் வளர்ந்திடுங்கள். அப்பொழுது இந்த அஸ்திபாரக் கல் உங்களுக்குள் வலுவாக, உறுதியாக ஊன்றக் கட்டப்பட்டிருக்கும். அந்த நிலையில், அடுத்த செய்தியாகிய 'ஞானஸ்நானங்களின் உபதேசத்திற்குள்' கடந்து செல்வது நல்லது.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு,**

**இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்,**

**கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

## கீழ்க்காணும் கோடிட்ட இடங்களை நிரப்புகள்:

## சுவிசேஷத்தின் வரலாற்று உண்மைகள்

1. 1 கொரிந்தியர் 15:1-5 வசனங்களில், நற்செய்தியின் அல்லது சுவிசேஷத்தின் மூன்று எளிமையான, வரலாற்று உண்மைகளைச் சொல்கிறார்:

அ) நம்முடைய பாவங்களின் நிமித்தம், இயேசு ............................ ஒப்புக்கொடுக்கப்பட்டார்.

ஆ) இயேசு .................................... செய்யப்பட்டார்.

இ) தேவன் இயேசுவை மூன்றாம் நாள் ...............................

2. ரோமர் 4:22-25 வசனங்களின்படி, இந்த மூன்று உண்மைகளையும் நாம் விசுவாசிக்கும்போது, நாம் .......................

## தேவநீதி அருளப்படுதல்

3. நம் கிரியைகளின் அடிப்படையில் அல்ல, நம் .............................. அடிப்படையில் நாம் தேவநீதியைப் பெற்றுக் கொள்கிறோம் (ரோமர் 4:2 மற்றும் எபேசியர் 2:8-10).

4. விசுவாசத்தினால் தேவநீதி உண்டாகிறது என்றாலும், ஜீவனுள்ள விசுவாசம் தொடர்ந்து அதற்கேற்ற ........................ உண்டாக்குகிறது (யாக்கோபு 2:24,26). கிருபையை நம்முடைய பிரயாசங்கள் இல்லாமல் பெற்றுக் கொள்கின்றோம். கிரியைகள் என்பது நாம் என்ன செய்கின்றோம் என்பதைக் குறிக்கின்றது.

5. கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பு நீதிமான் என்று காணப்படுவதற்கு நாம் மோசேயின் நியாயப்பிரமாணங்களையோ, வேறு எந்தப் பிரமாணங்களையோ கடைபிடிக்க வேண்டியதில்லை. கிறிஸ்தவம் என்பது ............................... அடங்கிய ஒரு மார்க்கம் அல்ல! கிருபையும், பிரமாணமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை, ஒத்துப் போகாதவை (ரோமர் 6:14).

*6. ரோமர் 7:4-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: ‘‘அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனி கொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.’’ முன்பு நீங்கள் மதவைராக்கியம் கொண்ட யூதராய் இருந்தீர்கள் என்றால், நீங்கள் ............................................ திருமணம் செய்து கொடுக்கப்பட்டவராய் இருந்தீர்கள். நியாயப்பிரமாணத்தை விட்டு விலகி, இன்னொருவரை திருமணம் செய்து கொள்வீர்கள் என்றால், அது வேசித்தனம். அது ஆவிக்குரிய வேசித்தனமாகும். நியாயப்பிரமாணம் மரிக்கும்வரை நீங்கள் அதைச் செய்ய முடியாது. ஆனால், சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் மரணத்தின் மூலம், நியாயப்பிரமாணம் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டது. பெரும்பாலான யூதர்களுக்கு இதுதான் மெய்யான ஒரு பிரச்சனையாயிருந்தது. காரணம், அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்கும்படி முயற்சிக்கவில்லை என்றால், அவர்கள் தங்களுடைய புருஷனுக்கு உண்மையற்ற வர்களாகி விடுவதைப்போல உணருகின்றார்கள். அடிப்படையில் பார்த்தால், அவர்களால் நியாயப்பிரமாணத்தை உண்மையாய் கடைபிடிக்க முடியாது என்பதுதான் உண்மை. சிலுவையில் கிறிஸ்துவுக்குள் நியாயப்பிரமாணம் மரித்திருக்கிறது என்ற வெளிச்சம் அவர்களுக்குள் உண்டாக வேண்டும். ஆகையால் இப்பொழுது உயிர்த்தெழுந்த மெசியாவாகிய கிறிஸ்துவோடு திருமணத்தில் அவர்கள் இணைக்கப்பட முடியும். அவர் மூலம், அவர்களும் நாமும் கனி கொடுக்கிறவர்களாய் மாற முடியும்.*

*7. .................................................. மூலமே கனி உண்டாக்கிறது. ஆனால் நாம் எதோடு ஒன்றாய் இணைக்கப்படுகிறோமோ, அதுதான் நாம் என்ன கனி கொடுப்போம் என்பதை முடிவு செய்கிறது. நாம் கிறிஸ்துவோடு ஒன்றாய் இணைக்கப்படுவோம் என்றால், அவரோடு ஒன்றாய் இசைந்திருப்போம் என்றால், அப்பொழுது நாம் ஆவியானவரின் கனிகளைக் கொடுப்போம்.*

*8. நீதியையும், ஜீவனையும் நமக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக, நியாயப்பிரமாணம் உண்மையில் ஆக்கினைத் தீர்ப்பின் உணர்வையும், ........................... நமக்குக் கொண்டு*

*வருகின்றது. காரணம், நம்மால் அதைக் கடைபிடிக்க முடியாது. பிரச்சனை, நியாயப்பிரமாணத்தில் இல்லை. மாறாக, நம்மிடம்தான் பிரச்சனையிருக்கிறது. ரோமர் 7:5 சொல்கிறது: "நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில், நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது." பவுல் இன்னொன்றையும் 1 கொரிந்தியர் 15:56-ல் சொல்கிறார்: "மரணத்தின் கூர் பாவம். பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" (1 கொரிந்தியர் 15:56).*

*எபேசியர் 2:8-9 வசனங்கள் சொல்கின்றன: "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு, இது கிரியைகளினால் உண்டானதல்ல."*

*9. நம் .......................... போஷித்து, வளர்க்காத வகையில், நமக்கு நீதி உண்டாக்கும்படி தேவன் ஒரு வழியை நியமித்திருக்கிறார். பாருங்கள், மதம், மனுஷனுடைய தற்பெருமையை போஷித்து வளர்க்கின்றது. அடிப்படையில், தற்பெருமைதான் பாவத்தின் வேராயிருக்கிறது.*

*10. கிருபை என்பது நம் முயற்சிகளும், பிரயாசங்களும் இல்லாமல் நமக்குக் கிடைக்கின்றது. இது நமக்கு தேவனுடைய ......................... இருக்கிறது.*

*11. நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை என்றாலும், கிரியைகள் மிக முக்கியமானவைகளாகத்தான் இருக்கின்றன. விசுவாசத்தையும், கிரியையையும் ஒரு ஒழுங்கான வரிசையில் நாம் வைத்துக் கொள்ள வேண்டும். எபேசியர் 2:10 இவ்வாறு நமக்குச் சொல்கிறது: "ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."*

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான்

என்று வேதாகமம் சொல்கிறது. தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் புதிதாய் சிருஷ்டித்தபோது, புது சிருஷ்டியாகிய நமக்கென்று ஏற்ற கிரியைகளை தேவன் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். ஆனால் பழைய மாம்ச சுபாவத்தினால், தேவன் ஆயத்தம் செய்திருக்கிற நற்கிரியைகளைச் செய்ய முடியாது, அந்த வாழ்க்கையை வாழ முடியாது. எனவே நீங்கள் அந்த நற்கிரியைகளைச் செய்து வாழ்வதற்கு முன், முதலில் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிப்பாய் நீங்கள் சிருஷ்டிக்கப்பட வேண்டும். இந்த நற்கிரியைகளைச் செய்ய வேண்டியது, மிகவும் அதிகமான முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது. ஆனால் நீங்கள் இந்த வரிசையை சரியான நிலையில் வைத்திருக்க வேண்டும்: **முதலில், விசுவாசத்தினால் புது சிருஷ்டியாக மாற வேண்டும். பிறகு தேவன் நமக்காக ஆயத்தம் செய்து வைத்திருக்கிற நற்கிரியைகளை நாம் செய்ய வேண்டும்.**

இன்னொன்றையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் புது சிருஷ்டியாக மாறிய பிறகு, தேவனுக்காக நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் பிரயாசப்பட்டு முடிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர் அந்த நற்கிரியைகளை ஏற்கனவே முன் கூட்டியே ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். நம் பங்கு, தேவனுக்குச் செவிகொடுத்து கேட்பதாகும். அவருடைய வார்த்தையின் மூலம், அவருடைய ஆவியானவர் மூலம், சில நேரங்களில் சக கிறிஸ்தவ விசுவாசிகள் மூலம் நாம் அவருக்குச் செவி சாய்க்க வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு நம்மிடம் அவர் சொல்கிற எல்லாவற்றிற்கும் நாம் கீழ்ப்படிந்து செயல்பட வேண்டும்.

இதில் நம் வளர்ச்சிக்கான விஷயத்தை கர்த்தராகிய இயேசுவிடம் அர்ப்பணிப்போம். நமக்கு உதவி செய்யும்படி, அவருடைய கிருபையை நாடுவோம்:

*அன்பு நிறைந்த கர்த்தராகிய இயேசுவே, விசுவாசம் மற்றும் கிரியைகளின் சத்தியத்தைக் குறித்த ஒரு புதிய வெளிப்பாட்டை எனக்கு கொடுத்திருக்கிறீர். உமக்கு நன்றி. உம்முடைய தயவையும், நீதியையும் எப்படியாவது பெற்றுக் கொள்ளும்படி, நான் முயற்சி எடுத்து, பிரயாசப்பட்ட அந்த நேரங்களுக்காக உம்மிடம் மன்னிப்பு கேட்கின்றேன். என் தவறை நான் உணருகின்றேன். என் பாவத்திலிருந்து நான் மனந்திரும்புகிறேன்.*

*என்னுடைய பிரயாசங்களால் அல்ல, கிருபையினால் விசுவாசத்தின் மூலம் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று*

*அறிக்கை செய்கிறேன். இந்த இரட்சிப்பு, சிலுவையில் எனக்குப் பதிலாக இயேசு மரித்ததன் மூலம், எனக்குக் கிடைத்த உம்முடைய ஈவாயிருக்கிறது. இது என் கிரியைகளால் உண்டாகவில்லை. எனவே இதைக் குறித்து நான் பெருமைபாராட்ட முடியாது. உம்முடைய கிருபைக்காக உமக்கு நன்றி. விசுவாசத்தின் மூலம், நீர் எனக்குத் தந்திருக்கிற இரட்சிப்பென்னும் ஈவிற்காக உமக்கு நன்றி.*

*நான் செய்ய வேண்டிய நற்கிரியைகளையும் நீர் எனக்காக ஏற்கனவே ஆயத்தம் செய்திருக்கிறீர். அதற்காகவும் உமக்கு நன்றி சொல்கிறேன். என் வாழ்க்கையைக் குறித்த உம்முடைய சித்தத்தைக் கண்டறிய எனக்கு உதவி செய்யும். என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று நீர் என்னை அழைத்திருக்கிறீரோ, அதையெல்லாம் கீழ்ப்படிந்து நான் செய்யும்படி கிருபை தாரும். என்னுடைய பழைய மாம்ச சுபாவத்தின்படி இனி வாழாமல், உம்முடைய புது சிருஷ்டியாய் வாழ வேண்டிய கிருபையை எனக்குத் தாரும்.*

*இயேசுவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

இந்த ஜெபம், ***"இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன்,"*** என்ற வார்த்தைகளோடு முடிந்ததை நீங்கள் கவனித்தீர்களா? நீங்கள் இதை முன்பு கேட்டதில்லை என்றால், இப்படிச் சொல்வது, உங்களுக்கு விசித்திரமாகத் தெரியலாம். ஆனால் யோவான் 14:12-14 வசனங்களில் இயேசு சொன்னார்: "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் ***என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ,*** குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். ***என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும்*** அதை நான் செய்வேன்." வேதவசனங்களின்படி நாம் ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுக்கிறார் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

*12. விசுவாசம் மற்றும் கிரியைகளைக் குறித்தும், கிருபை மற்றும் நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் நாம் கற்றுக் கொள்ளும்போது, கலாத்தியர் 3-ம் அதிகாரத்திலிருந்து டெரிக் பிரின்ஸ் ஒன்றை நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.*

*நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பி, மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபடும்போது, அது நம்மை .. .............................. கீழ் கொண்டு வருகின்றது (கலாத்தியர் 3:10).*

*13. கலாத்தியர் 3-ம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில், அவர்கள் ................................................... பவுல் நமக்குச் சொல்கிறார். ஆரம்பத்தில் அவர்களுக்குள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தார். ஆனால் காலப்போக்கில், அந்தக் காட்சி அவர்களுக்குள் தெளிவற்றதாய், மங்கலாகி விட்டது.*

*14. நியாயப்பிரமாணம் வெளியே இருந்து கிரியை செய்கின்றது. நம் சொந்தப் பெலனில் கிரியை செய்யும்படி அது நம்மை விட்டு விடுகின்றது. ஆனால் .............................. ... நமக்குள்ளே இருந்து கிரியை செய்கின்றது. இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவ பெலனை அது நமக்குக் கொடுக்கின்றது.*

*15. "தேவன் பரிசுத்தராய் இருப்பதுபோல, நாமும் பரிசுத்தராய் இருக்க வேண்டும்," என்று பழைய ஏற்பாட்டின் லேவியராகமம் 11:44-ம் வசனத்திலும், புதிய ஏற்பாட்டின் 1 பேதுரு 1:16-ம் வசனத்திலும் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. "நான் இந்தப் பிரமாணங்களையெல்லாம் கடைபிடிக்க வேண்டும்," என்று ..................................... சொல்கிறது. மாறாக, "எனக்குள் வாழ்கின்ற இயேசு, என் மூலமாய் தம் பரிசுத்தத்தை வெளிப்படுத்துகிறார்," என்று கிருபை சொல்கிறது (1 கொரிந்தியர் 1:31 மற்றும் எபிரெயர் 12:10).*

## *நியாயப்பிரமாணத்தின் நியாயமான நிபந்தனை*

இதன் நேர்மறையான, ஆக்கப்பூர்வமான பக்கத்தை நமக்கு நாமே நினைப்பூட்டிக் கொள்வோம். இனி நாம் நம் சொந்த முயற்சிகளை சார்ந்திருக்கத் தேவையில்லை. மாறாக, நம்முடைய சொந்த பெலத்தில் செய்ய முடியாததை செய்யும்படி, தேவனுடைய கிருபையையும், இயேசுவையும் சார்ந்து கொள்வோம். இதோடு தொடர்புடைய விதத்தில், ரோமர் **8:3-4** வசனங்களை நாம் வாசிப்போம்:

> *அது எப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை (நியாயப்பிரமாணம்*

*அல்ல, நாம்தான் பலவீனமாயிருந்தோம் என்று இது சொல்கிறது), தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனை பாவ மாம்சத்தின் சாயலாகவும் (நம் பாவத்தின் நிமித்தம் இது நிகழ்ந்தது), பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.*

*16. நியாயப்பிரமாணத்தின் நியாயமான, நீதியான நிபந்தனை ............*

*17. எது பிரதானமான கட்டளை என்று நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவிடம் கேட்டான். இயேசு அவனுக்குச் சொன்ன பதில் இதுதான்: "உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு ..................................., உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல, பிற னிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே" (மத்தேயு 22:37-39).*

**'அன்பு'** தான், இதில் முக்கியமான வார்த்தையாயிருக்கிறது. தேவனை நேசிக்க வேண்டும். நம் அயலானையும் நேசிக்க வேண்டும்.

*18. ரோமர் 13:8-ல், பவுல் சொல்கிறார்: "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனே அல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். பிறனிடத்தில் அன்புகூருகிறவன் ............... .............................. நிறைவேற்றுகிறான்."*

*19. அன்பின் மூலமாகத்தான் விசுவாசம் கிரியை செய்ய வேண்டும் என்று கலாத்தியர் 5:6 சொல்கிறது. ............................. வெளிப்படாத விசுவாசம் செத்தது என்று யாக்கோபு 2:20 நமக்குச் சொல்கிறது. இவ்விரண்டு வசன ங்களையும் நாம் ஒன்றாய் சேர்த்துப் பார்க்கும்போது,* **அன்பின் மூலமாகக் கிரியை செய்யாத விசுவாசம், செத்த விசுவாசம்** *என்ற ஒரு அதிர்ச்சிகரமான, நம்மை திடுக்கிடச் செய்யும் ஒரு முடிவுக்குத்தான் நாம் வர முடியும்.*

**20.** **1** தீமோத்தேயு **1:5**-ம் வசனத்தின்படி, நம் போதனை அல்லது

கட்டளையின் இலக்கு எப்பொழுதும் ........................ இருக்க வேண்டும்.

**21.** நியாயப்பிரமாணம் நம்மை ......................... நேராக உந்தித் தள்ளுகிறது. ஆனால் இயேசு நம்மை அன்பின் மூலமாக உத்வேகம் கொடுத்து நடத்துகிறார். “நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்றால், என் கட்டளைகளைக் கடைபிடிப்பீர்கள்,” என்று அவர் சொன்னார். பயம் ஒருபோதும் சரியான பலன்களை உண்டாக்குவதில்லை. பல மதங்கள், ஜனங்களை பயத்தின் மூலமாகத்தான் நடத்துகிறது. கிறிஸ்தவம் என்று தங்களை அழைத்துக் கொள்கிற சில மதங்களும் இதில் உள்ளடங்கியிருக்கிறது. இது மிகவும் பயங்கரமான, மோசமான விளைவுகளைத்தான் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

**22.** யாக்கோபு **1:25**-ல், அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்: “சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (ஆசீர்வதிக்கப்பட்டிருப்பான்).” ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், விடுதலையைக் கொடுக்கிற பூரணப் பிரமாணம், ............................. பிரமாணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

நீங்கள் மெய்யாகவே நேசிக்கின்றீர்கள் என்றால், அன்புதான் உங்களுடைய விருப்பம் மற்றும் உந்துசக்தியாக இருக்கின்றது என்றால், நீங்கள் மெய்யாகவே விடுதலையாய் வாழ்கின்ற ஒரு நபராய் இருப்பீர்கள். காரணம், நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, அதை எப்பொழுதும் உங்களால் செய்ய முடியும். உங்களால் **எப்பொழுதும்** மற்றவர்களை நேசிக்க முடியும். மற்றவர்கள் உங்களை இழிவுபடுத்தலாம், மட்டந்தட்டலாம். அவர்கள் உங்களை கொடுமைப்படுத்தலாம், உபத்திரவப்படுத்தலாம். அவர்கள் உங்களைக் கொல்லும்படி கூட முயற்சிக்கலாம். ஆனால் அவர்களை நேசிக்கும்படி அவர்களால் உங்களைத் தடுக்க முடியாது. அன்பு எவருடைய உத்வேகமாய், உந்துசக்தியாய் இருக்கிறதோ, அவர் மட்டுமே இவ்வுலகத்தில் விடுதலையாய் வாழ்கின்றார்.

விசுவாசம் மற்றும் கிரியைகளைக் குறித்த இந்தப் பாடத்தை முடிக்கின்ற இந்த நேரத்தில், இந்த அஸ்திபாரக் கல்லை நமக்குள் நன்றாக, உறுதியாக, நிலைநிறுத்திப் போடும்படி, நமக்கு உதவ கர்த்தராகிய இயேசுவிடம் ஜெபிப்போம். நீதியை அடையும்படி, திரும்பவும், நியாயப்பிரமாணம் மற்றும் மாம்சத்தின் கிரியைகள் பக்கமாய் சென்று விடாதபடி அவரே நமக்கு உதவி செய்வாராக.

*அன்பு நிறைந்த பிதாவே, எனக்கு உம்முடைய கிருபை வேண்டும். அந்தத் தேவையை நான் உணருகிறேன். எனக்கு உதவி செய்யும். இயேசுவே, என் மூலம் உம்முடைய பரிசுத்தத்தை விளங்கச் செய்யும். கிருபையாகிய உம் ஈவு, எனக்குள் கிரியை செய்வதாக. இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட பெலனை அது எனக்குத் தருவதாக.*

*என் மீதான உம் அன்பை நான் அனுபவிக்கிறபடியால், என்னால் மற்றவர்கள் மீது அன்புகூர முடியும். எவ்வித நிபந்தனையும் இல்லாமல், நீர் என்னை நேசிக்கிறீர். அதேபோல, எந்த நிபந்தனையும் இல்லாமல், நானும் மற்றவர்களை நேசிக்கும்படி எனக்கு உதவும். என்னைப் பெலப்படுத்தும். என் மனக்காயங்களை ஆற்றும்.*

*எவ்வாறு நியாயப்பிரமாணம் என்னை அடிமைத்தனத்தின் கீழ் கொண்டு வருகிறது என்பதை கற்றுக் கொண்டவனாய், என்னை விடுதலையாக்கக்கூடிய பூரணப் பிரமாணத்தைப் பின்பற்றும்படி நான் தீர்மானிக்கிறேன். நான் விசுவாசத்தைத் தேர்ந்தெடுக்கிறேன். நான் செய்ய வேண்டிய நற்கிரியைகளை நீர் முன்கூட்டியே ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறீர். அவற்றில் நடக்கும்படி நான் தீர்மானிக்கிறேன்.*

*உம்மைத் தவிர்த்து, எனக்கு எந்த உயர்வும், எந்தப் பாதுகாப்பும், எந்தக் கட்டுப்பாடும் வேண்டாம். இன்றைக்கு நான் இருக்கின்ற இந்த இடத்திலிருந்து, இன்னும் நிறைய தூரம் செல்ல வேண்டும் என்பதுபோலத் தெரிகின்றது. ஆனாலும் உம்மையே முற்றிலுமாய் சார்ந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை நான் உணருகின்றேன். நீரே என் எல்லாமுமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உமக்கு வெளியே எனக்கு எந்த உயர்வும் வேண்டாம். எந்தப் பாதுகாப்பும் வேண்டாம், எந்தக் கட்டுப்பாடும் வேண்டாம். அப்படிப்பட்ட விஷயங்களிலிருந்து என்னை விடுதலையாக்கும். இன்று என்னை முற்றிலும் புதிதாக உம்மிடம் அர்ப்பணிக்கின்றேன், முழுமையாய் உமக்குக் கீழ்ப்படிகிறேன். ஆமென்.*

இந்த வேதபாட வழிகாட்டியில் ஆலோசனையாக கொடுக்கப்பட்டிருக்கிற ஜெபங்களின் வார்த்தைகளெல்லாம், தெளிவாகவும், திட்டமிட்டு ஒரு

இலக்கை நோக்கி ஏறெடுக்கப்படுகிறவைகளாய் இருக்கின்றன என்பதை மனதில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். அதே நேரத்தில், உங்களுடைய இருதயத்தில் இருப்பதையும் ஒரு ஜெபமாக ஏறெடுப்பதற்கு இவை உங்களுக்கு ஒரு ஊக்கத்தைக் கொடுக்கும். அவ்விதத்தில் இந்த ஜெபங்களெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. இடைவிடாமல் தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள் என்று வேதவசனம் நமக்குச் சொல்கிறது. ஆகையால் **'ஆமென்'** என்ற வார்த்தையை வாசித்தவுடன், ஜெபிப்பதை நீங்கள் நிறுத்தி விடலாம் என்று அர்த்தமல்ல. ஜெபம் என்பது உங்களுடைய வாழ்க்கைமுறையாகவே மாறி விட வேண்டும். அந்தப் பாதையில் உங்களை நடத்தும்படி, உங்களுக்கு உதவி செய்யும்படியே இந்த ஜெபங்களெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன.

'செத்த கிரியைகளை விட்டு மனந்திரும்புதல்' மற்றும் 'தேவன் மீது விசுவாசம்' என்ற முதல் இரண்டு அஸ்திபாரக் கற்களைக் குறித்த போதனை களின் முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம். ஒவ்வொரு அஸ்திபாரமும், அடுத்த அஸ்திபாரத்தை உறுதியாகப் போடுவதற்கு அத்தியாவசியமான தேவையாயிருக்கிறது. அடுத்து வரப் போகிற இரண்டு பாடங்களில், 'முழுக்கு ஞானஸ்நானங்களைக்' குறித்த போதனையை கற்றுக் கொள்ளப் போகிறோம்.

**383**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/24**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*6-ம் பாடம் >>*

## அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 5

# தண்ணீர் முழுக்கு ஞான ஸ்நானம்[4164]

*அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

அஸ்திபாரம் போடுவதைக் குறித்த செய்தித்தொடரின் ஐந்தாவது செய்திக்கு வந்திருக்கிறோம். இதன் தலைப்பு: "தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம்". இதுவரை, தேவனுடைய வார்த்தை, நம் தனிப்பட்ட வாழ்க்கையின் அஸ்திபாரமாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும், இயேசுவே தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறார்; வேதாகமம் எழுதப்பட்ட தேவ வார்த்தையாய் இருக்கிறது என்பதைக் குறித்தும் இதுவரை நாம் கற்றுக் கொண்டோம். நம் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தைக் குறித்தும் கற்றுக் கொண்டோம். அதிலுள்ள நிபந்தனைக்கு நம்மையே நாம் அர்ப்பணித்து, அதன் வாக்குத்தங்களை நாம் விசுவாசிக்கும்போது, அது நம் சரீரம், மனம் மற்றும் ஆவியில் உண்டாக்கக்கூடிய ஆச்சரியமான மாற்றங்களைக் குறித்தும் நாம் அறிந்து கொண்டோம்.

பிறகு நாம் மனந்திரும்புதலைக் குறித்து விவரமாக அறிந்து கொண்டோம். அது நம்முடைய விசுவாசப் பயணத்திற்கு மிகவும் அத்தியாவசியமான ஆரம்ப படி என்பதையும் நாம் புரிந்து கொண்டோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். ஆனால் மனந்திரும்புதல், அந்த மெய்யான விசுவாசத்திற்கு முந்திய படியாக இருக்க வேண்டும். மனந்திரும்புதல் என்பது நம்முடைய மனம், நாம் செல்ல வேண்டிய திசையின் மாற்றத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு உறுதியான தீர்மானமாக இருக்கிறது. தேவன் மீதான விசுவாசத்தைக் குறித்து நாம் கற்றுக் கொண்டபோது, நம் விசுவாசம் மற்றும் நம் கிரியைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை நாம் ஆராய்ந்து

பார்த்தோம். டெரிக் போதித்த இந்தக் காரியம் நம் நினைவிலிருக்கிறதா? "நீங்கள் இந்த வரிசையை முதலில் ஒழுங்கு செய்ய வேண்டும். முதலில், விசுவாசத்தின் மூலம் புது சிருஷ்டியாக வேண்டும். பிறகு நமக்கென்று தேவன் ஆயத்தம் செய்து வைத்திருக்கிற நற்கிரியைகளை நாம் செய்ய வேண்டும்." இந்த வார்த்தைகள், உங்கள் நினைவிலிருக்கிறதா?

அஸ்திபாரப் போதனைகளை நாம் கற்றுக் கொண்டு வருகின்றோம். செத்த கிரியைகளை விட்டு நீங்கி, மனந்திரும்புதல் மற்றும் தேவன் மீதான விசுவாசம் என்ற முதல் இரண்டு அஸ்திபாரக் கற்களை இதுவரை நாம் போட்டிருக்கிறோம். இப்பொழுது 'முழுக்கு ஞானஸ்நானங்களைக்' குறித்த அடுத்த அஸ்திபாரக் கல்லைப் போடப் போகிறோம். 'ஞானஸ்நானங்கள்' என்ற பன்மை வார்த்தையை நாம் இங்கு கவனிக்க வேண்டும். காரணம், புதிய ஏற்பாட்டில், மூன்று முக்கியமான ஞானஸ்நானங்களைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது: 1. யோவான் ஞானஸ்நானம்; 2. கிறிஸ்தவ ஞானஸ்நானம்; 3. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம். இந்தச் செய்தியில், முதல் இரண்டு ஞானஸ்நானங்களைக் குறித்து டெரிக் பிரின்ஸ் போதிப்பார். இவ்விரண்டுமே தண்ணீர் முழுக்கு ஞான ஸ்நானங்கள்.

"ஞானஸ்நானம்" என்ற வார்த்தையின் அர்த்தத்தைக் குறித்து என்றைக்காவது சிந்தித்திருக்கிறீர்களா? முழுக்கு ஞானஸ்நானத்தில், ஒரு நபர், ஏதோ ஒன்றிலும், ஏதோ ஒன்றிற்குள்ளும் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? முழுக்கு ஞான ஸ்நானம் பெறும்படி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு முன், நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் இருக்கின்றதா? ஞானஸ்நானம் பெறுவதற்கு நாம் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியாகும்படி, நாம் ஏதேனும் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்ல வேண்டுமா? பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற நோவாவின் பேழையும், எகிப்திலிருந்து ஆரம்பித்த இஸ்ரவேல் ஜனங்களின் விடுதலைப் பயணமும், புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானங்களுக்கு நிழலாய், மாதிரியாய் இருக்கின்றன என்பதை உங்களால் பார்க்க முடிகின்றதா? பல கேள்விகளுக்கு, வேதவசனங்களிலிருந்து டெரிக் நமக்குப் பதில் கொடுக்கின்றார்.

லூக்கா எழுதிய நற்செய்தியின் கடைசியில் ஒரு சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவின் இரண்டு சீஷர்கள், எம்மாவு எனும் கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். உயிரோடு எழுந்த

இயேசு அவர்களுக்குத் தோன்றினார். முதலில், அவர்களால் அவரை அடையாளம் காண முடியவில்லை. ஆனால் அப்பம் பிட்டபோது, அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டார். அப்பொழுது அவர்கள் தங்களுக்குள் இவ்வாறு பேசிக் கொண்டார்கள்: “வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு, எரியவில்லையா ?” (லூக்கா 24:32).

ஒரு சிறந்த போதகராய் இதுதான் இயேசுவின் இலக்காய், நோக்கமாய் இருந்தது. இப்பொழுதும் இதுதான் அவருடைய நோக்கம். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், வேதவசனங்களை நமக்கு திறந்து காண்பிக்க வேண்டும், அந்தச் சத்தியத்தினால் நம் இருதயங்களை கொழுந்து விட்டு எரியச் செய்ய வேண்டும், அழிக்க முடியாத விதத்தில் அவை நமக்குள் எழுதப்பட வேண்டும் என்பதுதான் இயேசுவின் நோக்கம். வேதவசனங்களைப் போதிக்கிற ஒவ்வொரு உண்மையான போதகரும், இயேசுவின் இந்த எடுத்துக்காட்டைப் பின்பற்ற வேண்டும். நம்முடைய பங்கு, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்திற்கு கவன மாய் செவிகொடுத்து, அதை நம் இருதயங்களில் தாழ்மையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது அது நமக்குள் கொழுந்து விட்டு எரியும். அது நம் குணாதிசியங்களை ஒழுங்குபடுத்தி, நித்தியத்திற்கென்று நம்மை ஆயத்தப்படுத்தும்.

தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டியதைக் குறித்த மிகவும் முக்கியமான, நம் ஆர்வத்தைத் தூண்டியெழுப்பக்கூடிய இந்தப் போதனையில் டெரிக் நம்மை வழிநடத்தப் போகிறார். நாம் இதை கவனிப்போம். பிறகு நாம் அடுத்த பகுதிக்குச் செல்வோம். அதில் வரும் கேள்விகளுக்குப் பதிலளிப்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

2 தீமோத்தேயு 3:16-17 வசனங்களில், பவுல் இதை எழுதியிருக்கிறார்: “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும்,

கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." முதலில், வேதவாக்கியங்கள் 'எல்லாம்' என்ற வார்த்தையை நாம் கவனிக்க வேண்டும். இது நாம் முழு வேதாகமத்தையும் வாசிக்க வேண்டும் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. நமக்குப் பிரியமான, பழக்கமான வேதப்பகுதிகளில் மட்டும் நாம் ஒட்டிக் கொண்டிருக்கக்கூடாது. அவைகளை மட்டுமே வாழ்நாளெல்லாம் வாசித்துக் கொண்டிருக்கக்கூடாது.

இந்தச் சத்தியத்தைப் போதிக்கும்போது, அவருக்கு வயது எண்பது. ஒவ்வொரு வருடமும், குறைந்தபட்சம் இரண்டு முறை முழு வேதாகமத்தையும் வாசிப்பதாக டெரிக் பிரின்ஸ் சொல்லியிருக்கிறார். 54 வருடங்களாக, அவர் ஒரு கிறிஸ்தவ விசுவாசியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அப்படியென்றால், அவர் முழு வேதாகமத்தையும் குறைந்தபட்சம், 108 முறை வாசித்திருக்கிறார் என்று அர்த்தம்! ஞான ஸ்நானங்களைக் குறித்த சத்தியத்தை இவ்வளவு தெளிவாக விளக்கிப் போதிக்க முடிகிறதென்றால், அது தேவன் அவருக்குக் கொடுத்த ஈவாகும். அது மட்டுமல்ல, அதிக நேரம், அதிக முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பைச் செலுத்தி, அவர் வேதவசனங்களை வாசித்திருக்கிறார், ஆராய்ந்திருக்கிறார், தியானித்திருக்கிறார், புரிந்து கொண்டு அவற்றை தன் வாழ்க்கையில் பின்பற்றியிருக்கிறார் என்பதும், வேதாகமத்தை எழுதிய ஆசிரியராகிய பரிசுத்த ஆவியானவரே இவற்றையெல்லாம் அவருக்கு வெளிச்சமாகக் கொடுத்தார், அவருக்குள் கொழுந்து விட்டு எரியச் செய்தார் என்பதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது.

ஆக, டெரிக்கின் உண்மை மற்றும் அர்ப்பணிப்பினால் விளைந்த இந்தக் கனியை இப்பொழுது நாம் சந்தோஷமாய் புசிக்கின்றோம். ஆழமான இந்தப் போதனையின் நன்மைகளை பெற்றுக் கொள்வதோடு நாம் நின்று விடக் கூடாது. அவருடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றும்படியாகவும் நாம் உந்தித் தள்ளப்பட வேண்டும்.

அதாவது முழு வேதாகமத்தை வாசிப்பதிலும், அதை ஆராய்ந்து அறிந்து கொள்வதிலும், அதை தியானிப்பதிலும், அதைப் புரிந்து கொண்டு நம் வாழ்க்கையில் பின்பற்றுவதிலும் நாம் அவருடைய எடுத்துக்காட்டைப் பின்பற்ற வேண்டும்.

பின் வரும் கேள்விகளை வாசித்து, அதன் கோடிட்ட இடங்களை நிரப்புங்கள். இந்தச் செய்தியில் கொடுக்கப்பட்ட முக்கியமான குறிப்புகளை

நினைவுக்குக் கொண்டு வர இவை உங்களுக்கு உதவி செய்யும். பதில்களின் பக்கத்திற்குச் செல்வதற்கு முன், முயற்சி எடுத்து எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளியுங்கள்.

## முழுக்கு ஞானஸ்நானங்களைக் குறித்த போதனை

*1. மூன்று முக்கியமான ஞானஸ்நானங்களைக் குறித்து வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது:*

*(அ) ............................ ஞானஸ்நானம்*

*(ஆ) ............................ ஞானஸ்நானம்*

*(இ) ............................ ஆவியானவரின் ஞானஸ்நானம்*

*2. 'ஞானஸ்நானம்' என்ற வார்த்தை, நேரடியாக .................... வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டு, எழுத்துக்கு எழுத்து விடாமல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (அப்படியே ஆங்கில எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கிறது).*

*3. 'ஞானஸ்நானம் பண்ணுதல்' என்பதற்கு மூல மொழியில் மிகவும் தெளிவான ஒரு அர்த்தம் உண்டு. நீரில் அமிழ்த்துதல் அல்லது ................... என்பதுதான் அந்த அர்த்தமாகும். ஒன்றை தண்ணீருக்குள் மூழ்கச் செய்தல் அல்லது மேலேயிருந்து தண்ணீரை ஊற்றுதல் என்றும் சொல்லலாம். ஞானஸ்நானம் என்பது ஒரு பகுதி மட்டும் நனைவது அல்ல, முழுமையாய் மூழ்குவதாகும்.*

*4. ஞானஸ்நானம் என்பது ...................................... - ஒன்றை விட்டு வெளியேறி, இன்னொன்றிற்குள் செல்வதாகும். முழுமையாய் மூழ்குவது, இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. காரணம், நம்மில் ஒரு பகுதியை மட்டும் நாம் மாற்றத்திற்கு உட்படுத்த முடியாது.*

வேதவசனத்தில் எழுதப்பட்டிருக்கிற 'ஞானஸ்நானம்' என்ற வார்த்தையோடு முக்கியமாக இரண்டு விஷயங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று, நீங்கள் எதில் மூழ்குகின்றீர்கள் என்பதாகும். அது தண்ணீராக இருக்கலாம் அல்லது பரிசுத்த ஆவியான வராக இருக்கலாம். இன்னொன்று, மூழ்கி எழுந்திருப்பதினால் உண்டாகக்கூடிய விளைவைக் குறிக்கின்றது. ஞானஸ்நானத்தின்

விளைவாக, நீங்கள் எதற்குள் கடந்து செல்கின்றீர்கள்? நீங்கள் ஞான ஸ்நானத்தைக் குறித்து சிந்திக்கும்போது, இவ்விரண்டு கேள்விகளை நீங்கள் கேட்க வேண்டும்: 1. நீங்கள் **எதில்** மூழ்குகின்றீர்கள்? 2. அதன் விளைவாக, நீங்கள் **எதற்குள்** கடந்து செல்கின்றீர்கள்?

## *யோவானின் ஞானஸ்நானம்*

*5. மாற்கு 1:2-5 வசனங்களில், யோவானின் ஞான ஸ்நானத்தைக் குறித்து நாம் கற்றுக் கொள்கின்றோம். வேதவசனம், இரண்டு முக்கியமான நோக்கங்களை வெளிப்படுத்துகிறது:*

*(அ) ........................ வருகைக்காக இஸ்ரவேலை ஆயத்தப்படுத்துவதே அதன் நோக்கம். அவர்கள் ஆயத்தமாகியிருக்கவில்லை என்றால், மெசியாவினால் வந்திருக்க முடியாது. இன்று நம்முடைய காலத்திலும்,* **நாம்** *ஆயத்தமாகவில்லை என்றால், மெசியா திரும்ப வர மாட்டார்.*

*(ஆ) இது நியாயப்பிரமாணம் மற்றும் .......................... காலங்களை இணைக்கின்ற ஒரு புள்ளியாயிருக்கிறது. யோவானின் ஊழியக் காலம், மிகவும் குறுகிய ஒன்றாக இருந்தாலும், அது மிகவும் முக்கியமான ஒரு ஊழியமாகும். காரணம், அவன் தேவனுடைய ஜனங்களின் வரலாற்றையே இரண்டாகப் பிரித்த ஒரு மனுஷனாயிருந்தான். அவன் ஒரு காலகட்டத்தை முடித்து, இன்னொன்றை ஆரம்பித்து வைத்தான்.*

*6. யோவானின் ஞானஸ்நானத்தில் பங்கெடுக்க தகுதியடைய வேண்டுமென்றால், மூன்று முக்கியமான நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:*

*(அ) .................................... - மனமாற்றம். பிறகு அதன் விளைவாக, செல்கின்ற திசையில் உண்டாகிற மாற்றம்.*

*(ஆ) .................................. வெளியரங்கமாக எல்லோர் முன்னிலையிலும் அறிக்கை செய்ய வேண்டும். நாம் நம்முடைய பாவங்களை எப்பொழுதுமே வெளியரங்கமாய் அறிக்கை செய்ய வேண்டியதில்லை. ஆனால் அறிக்கை செய்யப்பட்ட*

*பாவம் மட்டுமே, தேவனுடைய மன்னிப்பைப் பெறுவதற்கு தகுதியடைகின்றது.*

*(இ) மாற்றப்பட்ட ........................ ஆதாரம் (மத்தேயு 3:7-8).*

*யோவான் மனந்திரும்புதலுக்கான ஆதாரமாக, ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் ஏற்கனவே மனந்திரும்பியிருக்கவில்லை என்றால், அவன் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்க மாட்டான் என்பதை மத்தேயு 3-ம் அதிகாரத்திலிருந்து தெளிவாக அறிந்து கொள்ள முடியும். ஆக, ஞானஸ்நானம் அங்கே மனந்திரும்புதலை உண்டாக்கவில்லை. மாறாக, அவர்கள் மனந்திரும்பியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு ஆதாரமாக, முத்திரையாக அது இருக்கிறது.*

*7. இஸ்ரவேலை தன் மெசியாவின் வருகைக்காக ஆயத்தம் செய்வதற்கு யோவான் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமானது. அது இரு வேறு காலகட்டங்களை இணைக்கின்ற ஒரு புள்ளியாயிருக்கிறது. ஆனால் பின் வரும் காரியங்களை அது செய்ய இயலாது.*

*(அ) அதினால் புதிய ....................... உண்டாக்க முடியாது. யோவான் ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்தான். ஆனால் அவன் ஒருபோதும் மறுபடியும் பிறக்கவில்லை. அவன் புது பிறப்பின் அனுபவத்திற்குள் நுழையவில்லை. காரணம், இயேசு சிலுவையில் மரித்து, உயிரோடு எழுந்திருப்பதற்கு முன் அது சாத்தியமற்றதாய் இருந்தது (மத்தேயு 11:11).*

*(ஆ) பெந்தேகோஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் மிகுந்த வல்லமையோடு வெளிப்பட்ட பிறகு, ....................... ............ ஞானஸ்நானத்திற்கு மாற்றாக, யோவானின் ஞான ஸ்நானம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை (அப்போஸ்தலர் நடபடிகள் 19:1-5).*

## *கிறிஸ்தவ ஞானஸ்நானம்*

கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் தண்ணீரில் முழ்கி ஞானஸ்நானம் பெறுவதைக் குறிக்கின்றது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இதைக் குறித்து அறிந்து, புரிந்து

வைத்திருப்பதைக் காட்டிலும் இது மிகவும் ஆழமானது, முக்கியமானது. யோவான் ஞானஸ்நானத்தில் நாம் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக ஞான ஸ்நானம் பண்ணப்படவில்லை. எனவே கிறிஸ்தவ ஞானஸ்நானம், யோவான் ஞானஸ்நானத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. கிறிஸ்தவ ஞானஸ்நானம், மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானமும் அல்ல.

மத்தேயு **3:13-17** வசனங்களில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:

*[13]அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். [14]யோவான் அவருக்கு தடை செய்து, ''நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?'' என்றான். [15]இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ''இப்பொழுது இடம் கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது,'' என்றார். அப்பொழுது அவருக்கு இடம் கொடுத்தான். [16]இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திற க்கப்பட்டது. தேவ ஆவியானவர் புறாவைப்போல இறங்கி, தம் மேல் வருகிறதைக் கண்டார். [17]அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, ''இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன்,'' என்று உரைத்தது.*

*8. கிறிஸ்தவ ஞானஸ்நானம், மனந்திரும்புதலின் ஞான ஸ்நானம் அல்ல என்பதை இவ்வேதப்பகுதி நமக்குச் சொல்கிறது. காரணம், ................................ இயேசு எந்தப் பாவமும் செய்யவில்லை. அவன் யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். ஆனால் யோவானுடைய ஞானஸ்நானத்தை அவர் பெறவில்லை.*

*9. ..................... முழுக்கு ஞானஸ்நானத்திற்கு தேவன் எவ்வளவு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதைத்தான் இந்த நிகழ்வு காண்பிக்கிறது. காரணம், தேவனுடைய திரித்துவத்தின் மூன்று நபர்களும் அங்கே இருந்தார்கள். இயேசு அந்த ஞான ஸ்நானத்தின் வழியாகக் கடந்து சென்றார். பரிசுத்த ஆவியான வர் அவர் மீது இறங்கினார் (இயேசு தண்ணீர் முழுக்கு*

*ஞானஸ்நானத்தைப் பெறும் அந்த நேரம் வரை, ஆவியான வர் அவர் மீது இறங்கவில்லை). அது மட்டுமல்ல, பிதாவாகிய தேவனும் பரலோகத்திலிருந்து பேசினார்.*

*10. இயேசுவின் ஞானஸ்நானத்தினுடைய நோக்கம், 15-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது: "எல்லா .............................. நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது." இங்கு இயேசு 'நமக்கு' என்று சொல்லும்போது, தண்ணீர் முழுக்கு ஞான ஸ்நானத்தின் மூலம் தம்மைப் பின்பற்றுகிற எல்லோரையும் தம்மோடு சேர்த்து அவர் அடையாளப்படுத்துகிறார்.*

*11. ................................., ஞானஸ்நானத்தின் ஒரு முக்கியமான நிபந்தனையாயிருக்கிறது. ஆனால் அதினால்தான் நாம் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை. "எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியே" நாம் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம்.*

*12. ..................... மீது நம் விசுவாசத்தை வைப்பதன் மூலம், ஏற்கனவே நமக்கு நீதி உண்டாயிருக்கிறது. இப்பொழுது தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் என்பது, அந்த நீதியை நிறைவேற்றுவதற்கு ஏற்ற, பொருத்தமான, முழுமையான ஒரு வழியாயிருக்கிறது.*

*13. ரோமர் 6:3-ன் படி, கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது இயேசுவின் ......................., அடக்கம், உயிர்த்தெழுதலில் நம்மை அடையாளம் காண்கின்ற ஒரு நிகழ்வாயிருக்கிறது. நாம் அவரோடு கூட மரித்தோம், தண்ணீரில் மூழ்குவதன் மூலம், நாம் அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டோம். பிறகு அந்தத் தண்ணீரிலிருந்து எழும்புவதன் மூலம், நாம் அவரோடு கூட எழுந்து, புதிய ஜீவனை உடையவர்களாய் வாழ்கின்றோம்.*

நாம் ஞானஸ்நானத்தில் பங்கெடுப்பதன் மூலம், நம் சுயநல வாழ்க்கையின் முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம் என்பதை வெளிப்படையாய் தெரிவிக்கின்றோம். நம் சொந்த பெலத்திலும், நீதியிலும், வல்லமையிலும் வாழ்ந்து வந்த வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்றோம். நாம் தண்ணீர் கல்லறையில் மூழ்கி எழுந்திருக்கும்போது, பரிசுத்த ஆவியான வரின் வல்லமையில் நாம் நடக்க ஆரம்பிக்கின்றோம். இயேசு தன்னைத் தானே மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்துக் கொள்ளவில்லை. இதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். அவர் பிதாவாகிய தேவனால்,

பரிசுத்த ஆவியானவர் மூலம் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார்.

*14. நாம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு முன், நான்கு முக்கியமான நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியாக வேண்டும்.*

*(அ) முதலில், நாம் ......................... கேட்க வேண்டும் - நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். அவர் அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாம் நாளில், அவர் உயிரோடு எழுப்பப்பட்டார் என்பதை நாம் கேள்விப்பட வேண்டும் (மத்தேயு 28:19-20).*

*(ஆ) மனந்திரும்புதல் - இதைக் குறித்து, அப்போஸ்தலனாகிய பேதுரு ......................................... நாளில் விளக்கிச் சொன்னான் (அப்போஸ்தலர் நடபடிகள் 2:38).*

*(இ) இயேசுவை ............................. இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:15-16).*

*(ஈ) தேவனைப் பற்றும் ஒரு நல்ல ......................... (1 பேதுரு 3:21).*

*நீங்கள் அடக்கம் பண்ணப்பட்டு, திரும்பவும் உயிரோடு எழும்பி விட்டீர்கள் என்றால், இனி உங்களுடைய வாழ்க்கை உங்களுக்குச் சொந்தமானதல்ல. நீங்கள் தொடர்ந்து உங்களுடைய சுயநல வாழ்க்கையையே வாழ்கின்றீர்கள் என்றால், நீங்கள் ஞானஸ்நானம் பெறக்கூடாது. காரணம், ஞானஸ்நானம் உங்களுடைய மரணதண்டனையாக இருக்கின்றது. அதற்கு அடுத்து நடப்பது, உங்களுடைய உயிர்த்தெழுதல்தான். நீங்கள் உயிர்த்தெழுந்த பிறகு, இனி உங்களுடைய வாழ்க்கை உங்களுக்குச் சொந்தமானதல்ல. ஆகையால், ஞானஸ்நானம் என்பது இயேசுவின் சீஷனாய் மாறும்படி அர்ப்பணிக்கின்ற ஒரு நிகழ்வு என்பதை உங்களால் பார்க்க முடிகின்றதா?*

*15. வெளியே புறப்பட்டுப் போய், சகல ஜனங்களையும் சபை உறுப்பினர்களாய் அல்ல, மாறாக, ............................... என்று மத்தேயு 28:19-20 வசனங்களில், இயேசு நமக்குச் சொல்கிறார். இன்று சபையில் காணப்படும் மிகப் பெரிய பிரச்சனைகளில்*

ஒன்று, அதன் அங்கமாய் சீஷர்கள் அல்ல, சபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதுதான்.

16. ஞானஸ்நானத்திற்கான போதனைக்கும், ஆயத்தத்திற்கும் நீண்ட ................. எடுக்க வேண்டிய அவசியமில்லை. பெந்தேகோஸ்தே நாளில் நிகழ்ந்ததையும், எத்தியோப்பிய மந்திரி மற்றும் கொர்நேலியுவின் வீட்டாருக்கு நிகழ்ந்ததையும், பிலிப்பி பட்டண சிறைச்சாலை அதிகாரிக்கு நிகழ்ந்ததையும் வாசித்துப் பாருங்கள். ஞானஸ்நானம் பெற வேண்டியதை ஒரு அவசரத் தேவையாக அவர்கள் உணர்ந்ததை நீங்கள் அங்கே வாசிக்க முடியும்.

17. ஞானஸ்நானத்திற்கு, மூன்று ஆவிக்குரிய முக்கியத்துவங்கள் இருக்கின்றன:

(அ) ரோமர் 6:3-11 வசனங்களின்படி, அது ........................... அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் நம்மை அடையாளப்படுத்துகிறது.

(ஆ) நாம் முழுக்கு ஞானஸ்நானம் பெறும்போது, நாம் மரிக்கின்றோம், நாம் ...................... பண்ணப்படுகிறோம், நாம் உயிர்த்தெழுகின்றோம்.

(இ) நாம் பாவத்திற்கு மரித்து, .............................. பிழைத்திருக்கிறோம் (ரோமர் 6:11).

18. இரண்டு தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கவனியுங்கள்:

(அ) யோவான் முழுக்கு ஞானஸ்நானத்தில், ஒரு நபர் தண்ணீர் மூழ்கி எழுந்து, மனந்திரும்புதலுக்குள் நடத்தப்படுகிறார்.

(ஆ) கிறிஸ்தவ முழுக்கு ஞானஸ்நானத்தில், நாம் தண்ணீரில் மூழ்கி எழுவதன் மூலம், ........................ ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம். ஒரு குறிப்பிட்ட சபை அல்லது சபைப் பிரிவின் ஞானஸ்நானத்தை நீங்கள் பெற வேண்டும் என்று ஒருவர் உங்களிடம் சொன்னால், அது தவறு.

19. ‘‘தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட (கிறிஸ்துவோடு கூட) எழுந்தவர்களாக இருக்கின்றீர்கள்,’’ என்று கொலோசெயர் 2:12-ல் பவுல்

*எழுதியிருக்கிறார். தேவனுடைய செயலின் மீது ........................ வைத்திருக்கிறவர்களுக்கு மட்டுமே ஞானஸ்நானம் வேலை செய்கிறது. நாம் விசுவாசிக்கவில்லை என்றால், அது நமக்கு வேலை செய்யாது.*

*20. பரிசுத்த ஆவியானவரே நமக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறார் என்று ரோமர் 8:11-ம் வசனம் நமக்குச் சொல்கிறது. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பிய அதே ................................ நமக்குள்ளும் கிரியை செய்கிறார்.*

1 பேதுரு 3:20-21 வசனங்களில், நோவாவின் பேழை, ஞானஸ்நானத்திற்கு ஒரு நிழலாக, மாதிரியாக இருக்கின்றது என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்கிறார். நியாயத்தீர்ப்பு வந்து கொண்டிருந்தது. பேழைதான் தப்பிப்பதற்கான ஒரே வழியாய் இருந்தது.

*21. நோவாவின் பேழையைக் குறித்த இந்தப் படத்தில், பெரு வெள்ளம் தேவனுடைய நியாயத்தீர்ப்பை சுட்டிக் காண்பிக்கிறது. வேதாகமத்தில் எப்பொழுதுமே அப்படித்தான் வருகின்றது. எது இயேசு கிறிஸ்துவை சுட்டிக் காண்பிக்கிறது? ......................... நீங்கள் பேழைக்குள் இருந்தால், நியாயத்தீர்ப்பின் பெருவெள்ளத்தையும் நீங்கள் பாதுகாப்பாகக் கடந்து செல்ல முடியும். ஆனால் நீங்கள் வெளியே இருப்பீர்கள் என்றால், நிச்சயம் நீங்கள் அதற்குள் மூழ்கிப் போவீர்கள்.*

மோசேயின் கீழ், எகிப்திலிருந்து விடுதலைப் பயணம் புறப்பட்ட ஒவ்வொரு இஸ்ரவேலரும் இரண்டு அனுபவங்கள் வழியாகக் கடந்து சென்றனர் என்று 1 கொரிந்தியர் 10:1-2 வசனங்களில் பவுல் நமக்கு எழுதியிருக்கிறார். மேகம் அவர்கள் மீது நிழலிட்டது. அவர்கள் மேகத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்று பவுல் சொல்கிறார். அவர்கள் செங்கடலுக்குள் இறங்கினார்கள், அந்தத் தண்ணீரின் வழியாகக் கடந்து வந்தார்கள், அந்தத் தண்ணீரை விட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்றும் பவுல் சொல்கிறார். ஆக, ஒவ்வொரு விசுவாசிக்கும் இரண்டு ஞானஸ்நானங்கலை தேவன் முன் குறித்திருக்கிறார்.

மேகம் உங்கள் மீதிறங்கி நிழலிடுகிறது. நீங்கள் மேகத்திற்குள் மூழ்குகின்றீர்கள். நீங்கள் தண்ணீருக்குள் இறங்குகின்றீர்கள், தண்ணீரின்

வழியாகக் கடந்து செல்கின்றீர்கள், தண்ணீரை விட்டு வெளியே வருகின்றீர்கள். அவர்கள் தண்ணீரை விட்டு வெளியே வந்தபோது, அவர்கள் ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்கினார்கள். அவர்களுக்கு ஒரு புதிய தலைவர் கிடைத்தார். புதிய பிரமாணங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. மற்றவை எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஒழிந்து போயின.

ஒன்றை நாம் இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டும். தண்ணீர்தான் எகிப்தியரின் துரத்துதலை அங்கே துண்டித்தது. இஸ்ரவேல் ஜனங்கள் ஆட்டுக்குட்டியின் மீது வைத்த விசுவாசத்தினால் எகிப்திலே காப்பாற்றப்பட்டு, இரட்சிக்கப்பட்டார்கள். ஆனால் அது அவர்களை எகிப்தியரிடமிருந்து பிரித்து விடவில்லை. தண்ணீர்தான் அவர்களைப் பிரித்தது. அந்த ஞான ஸ்நானம்தான் அவர்களைப் பிரித்தது. நாம் இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசம் வைத்து, இரட்சிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நாம் ஞானஸ்நானம் பண்ணப்படாதவரை, நாம் இன்னும் பிரிக்கப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

இப்பொழுது நாம் இவ்விரண்டு நிலைகளில் ஏதாவது ஒன்றில் நிற்கின்றோம்: சுவிசேஷத்தைக் கேட்டு, செத்த கிரியைகளை விட்டு மனந்திரும்பி, தேவன் மீது விசுவாசம் வைத்து, நல்மனச்சாட்சியின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, தண்ணீரிலும், கிறிஸ்துவுக்குள்ளும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் அல்லது நாம் பண்ணப்படவில்லை. இவ்விரண்டில், ஏதாவது ஒரு நிலைப்பாடுதான் நம் முன் இருக்க முடியும்.

வேதவசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த நிபந்தனை களையெல்லாம் நீங்கள் இன்னும் பூர்த்தி செய்திருக்கவில்லை என்றால், ஆனாலும் நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்றால், இதோ, ஒரு ஆலோசனையாக பின் வரும் ஜெபத்தை ஏறெடுங்கள்:

*பரலோகப் பிதாவே, ஒரு விசுவாசியின் வாழ்க்கையில், தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் எவ்வளவு அதிகமான முக்கியத்துவம் உடையது என்பதைப் பார்க்கும்படி என் இருதயத்தின் கண்களை பிரகாசமாக்கியிருக்கிறீர் (எபேசியர் 1:18). உமக்கு நன்றி. இனியும் எந்தத் தாமதமும் இல்லாமல், உடனடியாக இந்த நிபந்தனையை நிறைவேற்ற வேண்டிய தேவையை நான் உணருகிறேன். "விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான்," என்று மாற்கு 16:16 சொல்கிறபடியால்,*

*ஞானஸ்நானம் பெறாமல், இரட்சிப்பின் உத்தரவாதம் எனக்கு இல்லை என்பதைப் புரிந்து கொள்கிறேன்.*

*தேவனே, இதை ஒரு அவசரத் தேவையாய் உணர்ந்து, எனக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவரிடம் என்னை நடத்தும். மத்தேயு 28:19-ம் வசனத்தின்படி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினால் அவர் எனக்கு ஞானஸ்நானம் கொடுக்கட்டும். உதவி செய்யும்.*

*இயேசுவின் நாமத்தில், ஜெபிக்கின்றேன். ஆமென்.*

வேதவசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்து, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்றால், பின் வரும் ஜெபத்தை நீங்கள் செய்யலாம்:

*பரலோகப் பிதாவே, ஞானஸ்நானத்தின் மூலம், நான் இயேசுவோடு கூட, அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் அடையாளம் காண்கிறேன். இந்த நன்மையை ஆச்சரியமான விதத்தில் எனக்கு நீர் நினைப்பூட்டியிருக்கிறீர். உமக்கு நன்றி.*

*சுவிசேஷத்தின் மீதான விசுவாசத்தின் கிரியையாக, இந்த எளிமையான, ஆனாலும் கட்டாயமாக பங்கெடுக்க வேண்டிய ஞானஸ்நானத்தில் பங்கெடுப்பதன் மூலம், எனக்கு விடுதலை உண்டாயிருக்கிறது. இந்த விடுதலையை மற்றவர்களும் கண்டடையும்படி, இந்தச் சத்தியத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள எனக்கு உதவி செய்யும்.*

*இயேசுவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

ஒருவேளை நீங்கள் மூன்றாம் வகையைச் சார்ந்த நபராக இருக்கலாம். அதாவது நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் அதைக் குறித்த எவ்விதப் புரிதலும் இல்லாமல், நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்கள். டெரிக் அதை இவ்வாறு சொல்கிறார்: "நீங்கள் ஒரு பாவியாகவே தண்ணீருக்குள் இறங்கினீர்கள், மூழ்கினீர்கள். வெளியே வரும்போது, தண்ணீரில் முழுக்க நனைந்த ஒரு பாவியாக வந்தீர்கள்." இதுதான் உண்மை என்றால், கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்குரிய நிபந்தனைகளை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை என்று அர்த்தம். ஆக, இயேசுவை ஏற்றுக் கொண்டு, அவரிடம் உங்களை முழுமையாக

அர்ப்பணித்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் திரும்பவும் ஞானஸ்நானம் பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

'ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம்' என்ற அடுத்த செய்தியில், பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் என்ற சத்தியத்தை நாம் கற்றுக் கொள்வோம். தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தின் மூலம், முத்திரையிடப்பட்டு பாதுகாக்கப்பட்ட புதிய வாழ்க்கையில் வெற்றிகரமாய் வாழும்படி, தேவனே நமக்கு இதை முன்னேற்பாடாய் செய்து வைத்திருக்கிறார்.

384-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/33**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# 7-ம் பாடம் >>

# அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 6

# ஆவியானவரில் முழுக்கு ஞான ஸ்நானம்[4165]

*அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இந்தச் செய்தியில், முழுக்கு ஞானஸ்நானங்களைக் குறித்த போதனையை நாம் தொடருகின்றோம். குறிப்பாக, பரிசுத்த ஆவியானவருக்குள் பெற வேண்டிய முழுக்கு ஞானஸ்நானத்தைக் குறித்து கற்றுக் கொள்ளப் போகின்றோம். இந்தச் செய்தியின் தலைப்பிலும், முந்தின செய்தியின் தலைப்பிலும், 'முழுக்கு' என்ற வார்த்தை வருவதை நாம் கவனிக்க வேண்டும். பாப்டிஸம் அல்லது ஞானஸ்நானம் என்ற வார்த்தையின் மெய்யான அர்த்தத்தை நம் நினைவுக்குக் கொண்டு வரும்படியே 'முழுக்கு' என்ற வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **பாப்டிஸம்** என்ற வார்த்தை, **பாப்டிஸோ** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் வந்திருக்கிறது. இதன் அர்த்தம், முழுமையாக நனைதல் அல்லது மூழ்குதலாகும். ஒன்று, தண்ணீருக்குள் இறங்கி மூழ்குவதாக இருக்கலாம். அல்லது, டெரிக் சொல்வதுபோல, நயாகரா நீர்வீழ்ச்சியில் மேலேயிருந்து விழும் தண்ணீரில் முழுமையாக நனைகின்ற ஒரு அனுபவமாக அது இருக்கலாம்.

தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் ஏற்கனவே கற்றுக் கொண்டோம். தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தில் பங்கெடுக்க வேண்டிய விஷயத்தில் இயேசுவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றாத எவரும் இரட்சிக்கப்படவில்லை என்பதைத்தான் வேதவசனம் நிச்சயமாக, ஆணித்தரமாக நமக்குச் சொல்கிறது. காரணம், “விசுவாசித்து, ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான்,” என்று மாற்கு 16:16-ம் வசனம் நமக்குச் சொல்கிறது.

ஒவ்வொரு முறை இது நிகழும்போது, இயேசு கிறிஸ்துவின் மரணம்,

அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் அங்கே புதிதாக அரங்கேற்றப்படுகிறது. ஆதித் திருச்சபையில், நீங்கள் அறிக்கை செய்கிற விசுவாசத்தின் கிரியையாக இதில் நீங்கள் பங்கெடுக்கவில்லை என்றால், நீங்கள் சபையின் உறுப்பினராக மாற முடியாது.

கிறிஸ்தவ ஞானஸ்நானம், மூன்று விதத்தில் ஆவிக்குரிய முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றது: (1) நாம் இயேசுவோடு கூட, அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் நம்மை அடையாளம் காண்கிறோம். (2) நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, நாம் மரிக்கின்றோம், நாம் அடக்கம் பண்ணப்படுகின்றோம், புதிய ஜீவனை உடையவர்களாய் நாம் திரும்பவும் உயிரோடு எழும்புகின்றோம். (3) நாம் பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கின்றோம். நாம் தண்ணீரில் மூழ்கி, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுகின்றோம்.

ரோமர் 6:4-ம் வசனம் நமக்கு இவ்வாறு சொல்கிறது: “பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.” ஞானஸ்நானத்திற்கு முன், பழைய வாழ்க்கையில், நாம் மாம்சீகமான வழிகளில் வாழ்ந்தோம். ஆனால் புதுப் பிறப்பின் மூலம், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஒரு வாழ்க்கையை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இதை பலனுள்ள விதத்தில், வெற்றிகரமாய் வாழ வேண்டுமென்றால், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை நமக்குத் தேவையாயிருக்கிறது. ஆகையால்தான் அவர் நமக்கு பரிசுத்த ஆவியான வரின் வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கிறார்.

ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் என்ற இந்தச் செய்தியை நாம் கவனத்தோடு பார்ப்போம் அல்லது கவனமாய் செவிகொடுப்போம். டெரிக், வேதவசனங்களைத் திறந்து, இதில் நமக்கு விளக்கம் கொடுக்கின்றார். பரிசுத்த ஆவியானவரை ஈவாய் பெறும்படி, தேவன் நமக்குக் கொடுக்கிற ஆச்சரியமான அழைப்பை ஏற்று செயல்படுவதற்கு முன், இதைக் கேட்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

## *பெந்தேகோஸ்தேக்கு முன்பே வாக்குப் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர்*

பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் குறித்த முக்கியத்துவத்தை உங்களால் உணர முடிகின்றதா? டெரிக் பிரின்ஸ் ஒரு விஷயத்தை மிகவும் முக்கியமாகச் சுட்டிக் காண்பித்தார். மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் எழுதிய நான்கு நற்செய்தி நூல்களின் ஆரம்பத்திலும், இயேசு பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான் அது. இயேசு நமக்குப் பதிலாக மரித்தார் என்பது மட்டுமல்ல. **அவரே ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் கொடுப்பார் என்பது அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்தே அறிவிக்கப்பட்டது.** இதை முக்கியமாக நாம் கவனிக்க வேண்டும். அதற்கு முதல் காரணம், சபையின் பெரும்பகுதி இவ்விஷயத்தை அலட்சியம் செய்து விட்டது. அது மட்டுமல்ல, இயேசு நடந்ததைப் போலவே நாமும் நடக்கும்படி தேவன் எவ்வாறு நம்மை பெலப்படுத்துவார் என்பதை ஆரம்பத்திலிருந்தே அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே நாம் இதை நிச்சயமாகக் கவனிக்க வேண்டும்.

முக்கியமான அஸ்திபார சத்தியங்களில் ஒன்று அல்லது பலவற்றைத் தவற விட்டு விட்டு, சபையின் பெரும்பகுதியானது வெற்றியாய் வாழும்படி முயற்சித்துக் கொண்டிருக்கிறது. நாம் பூரணர்கள் என்ற காரணத்தினால், தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கவில்லை. மாறாக, நமக்கு அவர் தேவை. எனவே தேவன் அவரை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்தச் செய்தியை உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வர உதவும்படி, கீழ்க்காணும் கேள்விகளில், கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்:

*1. யோவான் எழுதிய சுவிசேஷத்தில் மட்டும், "இவ்வுலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் 1:29-ல், இயேசு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். ஆனால் நான்கு சுவிசேஷங்களிலும், பரிசுத்த ஆவியான வரின் .................................. கொடுக்கிறவராக இயேசு அறிமுகப்படுத்தப்படுகிறார். அவரை இரட்சகராக, தேவ ஆட்டுக்குட்டியாக அறிந்து கொள்வதென்பது நல்லதுதான். அது அருமையானதுதான். ஆனால் அதுவே முடிவல்ல. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை நமக்குக் கொடுக்கிறவராக,*

அவரை தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாயிருக்கிறது.

2. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, ஆனால் பெந்தேகோஸ்தே நாளுக்கு முன்பு, அப்போஸ்தலர் நடபடிகள் 1:4-5 வசனங்களில், யோவான் .......................... அவரை எவ்வாறு அறிமுகப்படுத்தினானோ, அந்த வாக்குத்தத்தத்தை இயேசு மிகவும் கவனமாக திரும்பிச் சொல்கிறார்: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். ஆனால் நீங்களோ இன்னும் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியான வரால் ஞானஸ்நானம் பெறுவீர்கள்."

3. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை, அப்போஸ்தலர் நடபடிகள் 2:1-4 வசன ங்களில் நாங்கள் வாசிக்கின்றோம். தனித்தன்மை வாய்ந்த மூன்று விஷயங்களை நாம் இதில் பார்க்க முடியும்.

(அ) ஞானஸ்நானம், .................................... இறங்கி வந்தது. அது அந்த வீடு முழுவதையும் நிரப்பியது. மேலேயிருந்து ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானவரால், அவர்கள் முழுமையாக நனைக்கப்பட்டனர்.

(ஆ) அங்கிருந்த ஒவ்வொருவரும் ................................ . விதத்தில் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டனர். அது ஒட்டுமொத்தமான ஒரு அனுபவம் கிடையாது. மாறாக, ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் தங்களுடைய பங்கைப் பெற்றுக் கொண்ட ஒரு அனுபவமாயிருந்தது.

(இ) பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட அந்த நிகழ்வு, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் .................................. ஒரு அனுபவமாக இருந்தது. இது "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்," என்று மத்தேயு 12:34-ம் வசனத்தில், இயேசு பேசின வார்த்தைகளோடு ஒத்திசைந்து செல்கிறது.

4. இருதயம் நிரம்பி வழியுமளவிற்கு நிரப்பப்படும்போது, அந்த நிரம்பி வழிதல் ..................... வார்த்தைகள் மூலம் வெளிப்படுகிறது.

*5. இது தேவனும் மனுஷனும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய ஒரு விஷயம் என்பதை முக்கியமாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் அவர்களை நிரப்பினார். ஆனால்* **அவர்கள்தான்** ................... *ஆரம்பிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் அங்கு பேசவில்லை. அவர்கள்தான் பேசினார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வார்த்தைகளைக் கொடுத்தார்.*

*2 கொரிந்தியர் 1:21-22 வசனங்களில், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்." ஆக இங்கு பரிசுத்த ஆவியானவர், ஒரு முத்திரையாகவும், ஒரு அச்சாரமாகவும் சொல்லப்பட்டிருக்கிறார்.*

*எபேசியர் 1:13-14 வசனங்களிலும், பவுல் இதே வார்த்தைகளைத்தான் பயன்படுத்தியிருக்கிறார்: "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள், அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்."*

*6. பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் பெறுதல் என்பது கண்களால் பார்க்கக்கூடியதாய், காதுகளால் கேட்கக்கூடியதாய் இருக்கிறது. இது ஏதோ மற்றவர்களால் பார்க்க முடியாத அளவிற்கு உங்களுக்குள் மட்டும் நிகழ்கின்ற ஒரு விஷயம் கிடையாது. இதை நீங்கள் பார்க்க முடியும், கேட்க முடியும். இது ஒரு முத்திரையாகவும், ஒரு அச்சாரமாகவும் இருக்கின்றது.*

*(அ) இயேசுவை பின்பற்றும்படி நீங்கள் ஏற்கனவே தீர்மானித்திருக் கிறீர்கள். ஆனால் இது நீங்கள் அவருக்குச் சொந்தமானவர் என்பதை வெளியரங்கமாக அடையாளப்படுத்துகிறது. அவர் தம்முடைய முத்திரை உங்கள் மீது வெளிப்படையாகப் பதிக்கின்றார்.*

(ஆ) இயேசு தம்முடைய அச்சாரத்தை உங்கள் மீது வைத்து, உங்களை ................................ வேறுபிரிக்கின்றார். அதற்குப் பிறகு, வேறு ஒருவரும் உங்கள் மீது சொந்தம் பாராட்ட முடியாது, உரிமை கோர முடியாது.

(இ) பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் என்பது அவருடைய .................................. இயேசு சொல்கிறார்: "உன்னை திரும்ப எடுத்துக் கொள்ளும்படி நான் திரும்பி வருவேன். நான் திரும்பி வரும்போது, மீதி விலைக்கிரயத்தையும் செலுத்தி, என்றெ ன்றைக்கும் உன்னை எனக்குச் சொந்தமாக்கிக் கொள்வேன்."

7. அப்போஸ்தலர் நடபடிகள் 2-ல் குறிப்பிட்டிருக்கிறபடி, முத்திரை என்பது அந்நிய பாஷைகளில் பேசுவதை சுட்டிக் காண்பிக்கிறது. ...................... ............. அவர்களுக்கு அருளிய விதத்தில், அவர்கள் அதைப் பேசினார்கள். இந்த முத்திரையை வெளியரங்கமாய் பார்க்க முடியும், காதுகளில் கேட்க முடியும். இது இரகசியமான ஒன்றாக இருக்க முடியாது. அப்படி இரகசியமானதாக இருந்தால், இதினால் தன் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது.

8. பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் என்ற இந்த முத்திரையை இன்னும் ஆழமாய் நாம் ஆராயும்போது, நான்கு முக்கியமான விஷயங்களை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்:

(அ) இந்த முத்திரையை முதலில் .......................... அவர்களும் தனிப்பட்ட விதத்தில் பெற்றுக் கொண்டனர். பிதாவாகிய தேவனின் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்ளும்படி எருசலேமில் காத்திருங்கள் என்று இயேசு அவர்களிடம் சொல்லியிருந்தார் (அப்போஸ்தலர் நடபடிகள் 1:4-5). ஆகையால் அவர்கள் பத்து நாட்கள் காத்திருந்தனர். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது இறங்கினார். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசினர். ஆனால் அதற்குப் பிறகு, அவர்கள் காத்திருக்கவில்லை.

(ஆ) மற்றவர்களிடமும் அந்த ............................ தான் அப்போஸ்தலர்கள் ஏற்றுக் கொண்டனர். கொர்நேலியுவின்

*வீட்டில் நிகழ்ந்த சம்பவம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு (அப்போஸ்தலர் நடபடிகள் 10:44).*

*(இ) வேறு எந்த முத்திரையையும் ஒருபோதும் அப்போஸ்தலர்கள் கேட்டதில்லை. இதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். காரணம், நீங்கள் பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக் கொள்ளும்போது, இயேசு ...................... பண்ணின ஒருவரையே நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள். எனவே இன்னொரு முத்திரையைத் தேடுவதற்கு இங்கு காரணமே இல்லை.*

*(ஈ) புதிய ஏற்பாடு வேறு எந்த முத்திரையையும் நமக்குக் கொடுக்கவில்லை. இதற்கு ........................... வேறு எதுவும் இல்லை.*

*கொர்நேலியுவின் வீட்டாரைக் குறித்து சிலர் இன்று இவ்வாறு சொல்வார்கள்: "அந்த வீட்டார் உண்மையிலேயே கனி கொடுக்கிறார்களா என்று சோதித்துப் பார்க்கும்படி, அவர்கள் ஆறு வாரங்களாவது காத்திருந்திருக்க வேண்டும்." ஆனால் அவர்கள் காத்திருக்கவில்லையே. பாருங்கள், நாம் கனியைக் குறித்து பேசிக் கொண்டிருக்கவில்லை. நாம் வரங்களைக் குறித்துதான் பேசிக் கொண்டிருக்கிறோம். இவையிரண்டும் வித்தியாசமான காரியங்கள். இவையிரண்டும் மிக முக்கியமானவை. ஒரு வரம் என்பது ஒரே பரிமாற்றத்தில் பெற்றுக் கொள்வதாகும். ஆனால் கனி என்பது படிப்படியாக வளர்ந்து கொடுக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஒரு கிறிஸ்துமஸ் மரத்தையும், கனி கொடுக்கும் ஒரு மரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்ததை நினைவுகூருங்கள்.*

*9. பரிசுத்த ஆவியானவரை இரண்டு வழிகளில் நாம் பெற முடியும்:*

*(அ) நேரடியாக .......................... பெற முடியும் (அப்போஸ்தலர் நடபடிகள் 2:1-4; 10:44-47).*

*(ஆ) .................... வைப்பதன் மூலம் பெற முடியும் (அப்போஸ்தலர் நடபடிகள் 8:14-19; 9:17; 19:6).*

## *முழுக்கு ஞானஸ்நானத்தின் நோக்கங்கள்*

*10. தேவனிடமிருந்து இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமையைப் பெறுவதுதான், பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதற்கான ஒட்டுமொத்த நோக்கமாக இருக்கின்றது. அப்போஸ்தலர் நடபடிகள் 1:8-ல், இயேசு இவ்வாறு சொன்னார்: "பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்." குறிப்பாக, எல்லாவற்றையும் உள்ளடக்கிய இரண்டு முக்கியமான நோக்கங்கள் இந்த வல்லமைக்கு இருக்கின்றன.*

*(அ) .................. மற்றும் பணி (ஊழியம்) - சுவிசேஷத்தின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட நிகழ்வுகளுக்கு நாம் சாட்சிபகர வேண்டுமென்றால், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை நமக்கு அத்தியாவசியமாய் தேவைப்படுகிறது. (ரோமர் 15:18-19; 1 கொரிந்தியர் 2:1-5; எபிரெயர் 2:3-4 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

*(ஆ) சரீரமாகிய சபையின் ............................ பலப்படுத்துவதாகும். 1 கொரிந்தியர் 12:13 சொல்கிறது: "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்."*

*தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தைக் குறித்து நாம் கற்றுக் கொண்டபோது, டெரிக் சொன்ன ஒரு விஷயத்தை நாம் நினைவுகூர வேண்டும். முழுக்கு ஞானஸ்நானத்தில் பங்கெடுக்கும்போது, இரண்டு கேள்விகளை நாம் கேட்க வேண்டும்: அது எதில் நடக்கின்றது? அது எதற்குள் நடக்கின்றது?*

*11. 1 கொரிந்தியர் 12:13-ம் வசனம், இவ்விரண்டு கேள்விகளுக்கும் பதில் கொடுக்கின்றது. நாம் ஒரே பரிசுத்த ஆவியானவராலே, ஒரே ............................ ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம். இங்கு சரீரம் என்பது*

இயேசுவின் சரீரமாகிய சபையைக் குறிக்கின்றது. நாம் அந்த சரீரமாயிருக்கிறோம். இயேசு அதற்குத் தலையாயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுதல் என்பது அந்த நிலையில் நம்மை முத்திரையிடுகிறது.

12. "ஒரே ஆவியானவர்" மற்றும் "ஒரே சரீரம்" என்ற வார்த்தைகளை பவுல் பயன்படுத்துகிறார். பரிசுத்த ஆவியான வருக்குள் பண்ணப்படுகிற ஞானஸ்நானத்தின் நோக்கம், .. .................................... கொண்டு வருவதே என்பதை அவர் இவ்வார்த்தைகள் மூலம் வலியுறுத்திச் சொல்கிறார்.

13. பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது இங்கு இலக்கு அல்ல. அது ஒரு ........................... அது ஒரு முடிவல்ல. மாறாக, கிறிஸ்துவுக்குள் ஆவியானவரால் பெலனூட்டப்பட்ட ஒரு புதிய வாழ்க்கையின் ஆரம்பமாய் அது இருக்கிறது.

இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார் என்ற உண்மையினால் தங்களுக்கு பெலன் உண்டாயிருப்பதாக நிறைய பேர் சொல்கிறார்கள். ஆனால் அது சரியல்ல. காரணம், ஐம்பது நாட்களுக்கு முன்பே இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருந்தார். ஆனால் எருசலேமில் கிட்டத்தட்ட ஒருவரும் அதைக் குறித்துக் கேள்விப்படவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் வந்தபோது, ஒரு சில மணி நேரங்களிலேயே, எருசலேமில் வாழ்ந்த எல்லோரும் அதைக் குறித்துக் கேள்விப்பட்டன ர். அந்தச் செய்தி பேராற்றலுடன் வெடித்துக் கிளம்பி, எங்கும் பரவியது. உங்களால் இந்த வித்தியாசத்தைப் பார்க்க முடிகின்றதா? அது ஒரு குண்டுவெடிப்பாக அதிரடியாக நிகழ்ந்தது. சிலருக்கு குண்டுவெடிப்புகளைக் கண்டாலே பயம். அவர்களுக்கு அது பிடிக்காது. ஆனால் அவர் பரிசுத்த ஆவியான வர். அவர் வெடித்துக் கிளம்பட்டும்!

14. பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறும்போது, பெரும்பாலும் வெளியே கண்களுக்குத் தெரியக்கூடிய ......................நடக்கின்றன. இதைக் குறித்து சொல்லும்போது, டெரிக் இவ்வாறு சொல்கிறார்:

*பெரும்பாலான கிறிஸ்தவர்கள், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் சிலாக்கியங்களைக் கொண்டு மிகவும் குறைவானவைகளைத்தான் செய்கிறார். தங்களுக்குள் வாசம் செய்கின்ற பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கேற்ற ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ்வதில்லை.*

*15. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல நேரங்களில் வலிமையான உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். ஆனால் பெரும்பாலான நேரங்களில் நாம் கனவான்களைப்போல நடக்க முயற்சிக்கின்றோம். உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கோ அல்லது உற்சாகத்தின் உச்சியில் நடப்பதற்கோ நாம் பயப்படுகிறோம். இப்படிச் செய்வதன் மூலம், நாம் ஆவியானவரை .................................... (1 தெசலோனிக்கேயர் 5:19).*

## *பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு 7 நிபந்தனைகள்*

*16. பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞான ஸ்நானம் பெறுவதற்கு ஏழு நிபந்தனைகளை வேதாகமம் வெளிப்படுத்துகிறது;*

*(அ) .................................. - மனதையும், செல்ல வேண்டிய திசையையும் மாற்றும்படி ஒரு உறுதியான தீர்மானம் எடுங்கள்.*

*(ஆ) இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ..................... ........... பெற வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் 2:38-ம் வசனம், இந்த முதல் இரண்டு நிபந்தனைகளையும் நமக்கு சுட்டிக் காண்பிக்கிறது. பரிசுத்த ஆவியானவரைப் பெறும்படி ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்கு இவை முக்கியமான திறவுகோல்களாக இருக்கின்றன.*

*யோவான் 7:37-38 வசனங்களில், இயேசு நின்று சத்தமாய் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்: "ஒருவன் தாகமாயிருந்தால், என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்." இவ்வசனத்தில் பின் வரும் மூன்று நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.*

*(இ) .................................. - நாம் நிறைவேற்றியே தீர வேண்டிய ஒரு நிபந்தனையாய் இருக்கிறது.*

*(ஈ) ............................ வர வேண்டும் - ஒரே ஒருவர்தான் பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார். நீங்கள் அந்த முழுக்கு ஞானஸ்நானத்தை விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் அவரிடம்தான் வர வேண்டும்.*

*(உ) நாம் .................... பண்ண வேண்டும். இவ்விதத்தில்தான் நாம் இதைப் பெறுகின்றோம். இதில் நாம் தீவிரமாய் பங்கெடுக்கின்றோம். விருப்பமில்லாதவர்கள் மேல், தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை ஊற்ற மாட்டார்.*

*கடைசி இரண்டு நிபந்தனைகளைப் பார்ப்போம்:*

*(ஊ) பிதாவாகிய தேவனிடம் நாம் .............. வேண்டும் - லூக்கா 11:13-ல் இயேசு இதைச் சொல்கிறார்: "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவான வர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா!"*

*(எ) நீங்கள் உங்களுடைய ......................... விட்டுக் கொடுக்க வேண்டும். பற்பல பாஷைகளைப் பேசுகிற வரத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய நாவைக் கட்டுப்படுத்தும்போது, கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ளும்படி அவர் உள்ளே வந்திருக்கிறார் என்பதற்கு அது ஒரு ஆதாரமாக இருக்கிறது (ரோமர் 6:13).*

*மேலே பட்டியலிடப்பட்டிருக்கிறவை, எளிமையான நிபந்தனைகளாகும். ஒருவேளை இவை எல்லாவற்றையும் நீங்கள் நிறைவேற்றாமலிருக்கலாம். எடுத்துக்காட்டிற்கும், டெரிக்கைப் போல அல்லது கொர்நேலியுவின் வீட்டாரைப்போல, பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதற்கு முன், தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெறாமலிருந்திருக்கலாம். இதுதான் உங்கள் நிலை என்றால், "எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி", அதற்குப் பிறகாவது தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அது நல்லது. அதை நிச்சயித்துக் கொள்ளுங்கள்.*

*ஆனால் இங்கே சில அடிப்படை நிபந்தனைகள் இருக்கின்றன. யோவான் 7:37-39 வசனங்களில் இயேசு இவ்வாறு*

*சொல்கிறார்: "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்." பிறகு அவர் தொடர்ந்து சொல்கிறார்: "அவன் உள்ளத்திலிருந்து (இருதயத்திலிருந்து அல்லது அடிவயிற்றிலிருந்து) ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்." என்ன ஒரு ஆச்சரியமான உருமாற்றம்! தாகமுள்ள ஒரு நபராய் நீங்கள் உள்ளே வருகின்றீர்கள். ஜீவ நதிகள் பாயும் ஒரு வாய்க்காலாய் நீங்கள் மாறுகின்றீர்கள். எது இதைச் செய்கிறது? பரிசுத்த ஆவியானவருக்குள் பெறுகின்ற முழுக்கு ஞானஸ்நானம்தான் இதைச் செய்கின்றது. இதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இது மிகவும் எளிமையானதுதான். நீங்கள் இயேசுவிடம் வர வேண்டும். அவர் ஒருவரே இந்த ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறார். இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்படி, இந்த ஞானஸ்நானத்தைக் கொடுப்பவரிடம் வாருங்கள். நீங்கள் இதைக் குடிக்க வேண்டும் (பானம் பண்ண வேண்டும்).*

*நீங்கள் டெரிக்கின் போதனையைக் கேட்டிருக்கிறீர்கள். பரிசுத்த ஆவியானவருக்குள் பெற வேண்டிய முழுக்கு ஞானஸ்நானத்தை நீங்கள் ஏற்கனவே பெற்றிருக்கவில்லை என்றால், மேலே பட்டியலிடப்பட்டிருக்கிற ஏழு நிபந்தனை கள் ஒவ்வொன்றையும் நீங்கள் பூர்த்தி செய்திருக்கிறீர்களா என்று திரும்பவும் ஒருமுறை ஆய்வு செய்து பாருங்கள். பரிசுத்த ஆவியானவரைப் பெறும்படி டெரிக் பார்வையாளர்களை வழிநடத்தின பகுதியை திரும்பவும் பாருங்கள். இது சிறந்த ஒரு வழியாக இருக்கிறது. காரணம், நீங்கள் இயேசுவின் மீது கவனம் செலுத்திப் பார்க்க முடியும். வாசிக்க வேண்டிய அவசியமிருக்காது. அல்லது மாற்று வழியாக, நீங்கள் பின் வரும் ஜெபத்தை எளிமையாகச் செய்யலாம்.*

> *என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தேவனுடைய குமாரன் என்றும், தேவனிடம் செல்வதற்கான ஒரே வழியாய் நீர் இருக்கிறீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். நீர் என் பாவங்களுக்காக மரித்தீர் என்றும், மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். நான் செய்த பாவங்களை அறிக்கை செய்கிறேன். என்னை மன்னிக்கும்படி உம்மிடம் வேண்டிக் கொள்கிறேன். உம்முடைய*

*விலையேறப்பெற்ற இரத்தத்தினால் என்னை சுத்திகரியும். நீர் இதைச் செய்கிறீர். உமக்கு நன்றி. என் கர்த்தராகிய இயேசுவே, பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்படி நான் உம்மிடம் வருகின்றேன். என்னை உம்மிடம் அர்ப்பணிக்கின்றேன். ஏற்கனவே என் மீது நீர் ஊற்றிக் கொண்டிருக்கிற உம்முடைய ஆவியானவரை நான் பானம் பண்ண ஆரம்பிக்கின்றேன்.*

இதைத் திரும்பச் சொல்லுங்கள்:

*ஏற்கனவே என் மீது நீர் ஊற்றிக் கொண்டிருக்கிற உம்முடைய ஆவியானவரை நான் பானம் பண்ண ஆரம்பிக்கின்றேன். நிரம்பி வழியத்தக்கதாக ஆவியானவரை என் மீது ஊற்றும் என்று உம்மிடம் ஜெபிக்கின்றேன். நீர் இதைச் செய்கிறீர் என்ற விசுவாசத்தில், உமக்கு நான் நன்றி சொல்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

இப்பொழுது பானம் பண்ண ஆரம்பியுங்கள். உங்களுடைய நாவை விட்டுக் கொடுங்கள், அர்ப்பணியுங்கள். அந்நிய பாஷைகளில் நீங்கள் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளும்படி, தெளிவாய் பேச ஆரம்பியுங்கள். உங்களுடைய பிரச்சனைகளையும், உங்களுக்குள் எழும்புகின்ற கேள்விகளையும் மறந்து விடுங்கள். இந்த அனுபவத்தின் மூலம், கர்த்தராகிய இயேசுவிடம் உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களை முழுமையாய் அவரிடம் விட்டு விடுங்கள். தொடர்ந்து அந்நிய பாஷைகளில் பேசுங்கள். அவ்வாறு பேசுகின்ற நேரம் முழுவதும், உங்களுடைய மனதில் தேவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருங்கள். இயேசுவின் மூலம் வெற்றியாய் வாழும்படி உங்களை பெலப்படுத்தி, ஆயத்தப்படுத்துகிற அவருடைய ஆச்சரியமான ஈவுக்காக அவருக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருங்கள்.

385-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/31**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# 8-ம் பாடம் >>

## அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 7

# தேவனுடைய வல்லமையை கடந்து போக செய்தல்[4166]

*அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

எபிரெயர் 6:1-2 வசனங்களில் பட்டியலிடப்பட்டிருக்கிற ஆறு அஸ்திபாரப் போதனைகளை நாம் தொடருவோம். இதுவரை முதல் மூன்று போதனைகளை நாம் முடித்திருக்கிறோம்: செத்த கிரியைகளை விட்டு மனந்திரும்புதல், தேவன் மீது விசுவாசம் வைத்தல், முழுக்கு ஞானஸ்நானங்களைக் குறித்த போதனை. முழுக்கு ஞானஸ்நானங்களைக் குறித்து போதிக்கும்போது, டெரிக் பிரின்ஸ் மூன்று முக்கியமான முழுக்கு ஞானஸ்நானங்களைக் குறித்து குறிப்பிட்டுச் சொல்கிறார். அதை நாம் பின்வரும் விதத்தில் தொகுத்துச் சொல்லலாம்:

| முழுக்கு ஞானஸ்நானம் | எதில் ? | எதற்குள் ? |
|---|---|---|
| யோவான் முழுக்கு ஞானஸ்நானம் | தண்ணீர் | மனந்திரும்புதல் |
| கிறிஸ்தவ முழுக்கு ஞானஸ்நானம் | தண்ணீர் | இயேசுகிறிஸ்து |
| பரிசுத்தஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் | பரிசுத்த ஆவியானவர் | சரீரமாகிய சபை |

இந்தப் பாடத்தில், கைகளை வைக்குதலைக் குறித்து நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம். இது ஒரு அஸ்திபாரப் போதனையாக இருந்தாலும், அது மிகவும் அரிதாகத்தான் போதிக்கப்படுகிறது. எபிரெயர் 6-ல் இது பட்டியலிடப்பட்டிருப்பதைக் கண்டு, நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இது மிகவும் அத்தியாவசியமான ஒன்று என்பது மறுக்க முடியாத, நியாயமான ஒரு உண்மையாயிருக்கிறது.

இந்தக் கட்டளை, ஒரு மூத்த ஊழியக்காரருக்கும், இளைய ஊழியக்காரர் ஒருவருக்கும் இடையே தொடர்ச்சியைக் கொடுக்கிறது.

ஒரு தலைமுறையினருக்கும், அடுத்த தலைமுறையினருக்கும் இடையே ஒரு தொடர்ச்சியை இது உண்டாக்குகிறது. கைகளை வைக்குதலைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற எடுத்துக்காட்டுகளை நாம் பார்ப்போம். ஆசீர்வாதத்தைக் கட்டவிழ்த்து விடும்படி, ஒரு நோக்கத்திற்காக வேறுபிரித்து முன் குறிக்கும்படி, அங்கீகரிக்கும்படி, பெலப்படுத்தும்படி, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் ஆவிக்குரிய அதிகாரத்தை இன்னொருவருக்குக் கொடுக்கும்படி கைகளை வைக்குதல் செய்யப்பட்டது.

பிறகு டெரிக் தொடர்ந்து, கைகளை வைக்குதலுக்கு இருக்கும் பல நோக்கங்களைக் குறித்து சபையோராகிய நமக்கு புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் போதிக்கிறார். இதைக் குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய சில ஆபத்தான விஷயங்களையும், சில பிரயோஜனமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அவர் நம் முன் வைக்கிறார்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

டெரிக்கின் நண்பர்களில் ஒருவர் தன் கருத்தாக இவ்வாறு சொன்னார்: டெரிக்கின் போதனைக்கு இருக்கும் தனித்துவமான பண்புகளில் ஒன்று, அவருடைய ஒரு செய்தியைக் கேட்டு நீங்கள் திரும்பிப் பார்க்கும்போது, “ஆம், இது சரியான விஷயம்தானே. இது எனக்கு பிரயோஜனமாக இருக்குமே,” என்று நீங்கள் நினைப்பீர்கள். அவர் அதைப் போதிக்காதவரை, நீங்கள் அதை அறிந்திருக்கவில்லை என்ற உணர்வுக்கு அப்பொழுது வருவீர்கள்.

தேவனுடைய வல்லமையை கட்டவிழ்த்து விடுதல் என்ற இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு, இது உங்களுடைய அனுபவமாக இருக்கலாம். நீங்களும் இதற்கு உடன்படுவதை உங்களால் பார்க்க முடியும். ஆனால் டெரிக் இதை விளக்கிக் காண்பிக்கும்வரை, பெரும்பாலான போதனைகள் உங்களுக்குப் புதிதாகத்தான் இருக்கின்றன என்பதை பிறகு நீங்கள் உணருவீர்கள். டெரிக் தன் போதனைகளிலெல்லாம், வெறும் அறிவை மட்டும் கற்றுக் கொடுப்பதில்லை. மாறாக, அவர் ஆவியானவர் மூலம், தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாட்டைக் கொடுக்கிறார். அன்பை மட்டுமே இலக்காகக் கொண்டு, அவர் இதைச் செய்கிறார்.

பின் வரும் கேள்விகளை வாசித்து, கோடிட்ட பகுதிகளை நிரப்புக:

## *கைகளை வைக்குதல்*

*1. கைகளை வைக்குதலில் இருக்கும் அத்தியாவசியமான கூறை, ................................ முதல் புத்தகத்தில் பார்க்க முடியும். பிறகு அது தேவனுடைய ஜனங்களின் வாழ்க்கை வரலாறு முழுவதிலும் அது நீண்டு செல்கிறது (எடுத்துக்காட்டிற்கு, ஆதியாகமம் 48:8-19 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

*2. கை என்பது ஒருவர் இன்னொருவரோடு ......................... ஏற்படுத்திக் கொள்வதற்கான பிரதானமான வழிகளில் ஒன்றாக இருக்கிறது. இன்னொருவர் மேல் உங்களுடைய கையை வைப்பதென்பது இயல்பான ஒரு செயலாயிருக்கிறது.*

*3. ஆவிக்குரிய பின்னணியில் பார்க்கும்போது, கைகளை வைக்குதலில் இரண்டு முக்கியமான நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன:*

*(அ) ஆசீர்வாதங்களை, அதிகாரத்தை, ஞானத்தை, பரிசுத்த ஆவியானவரை, ஒரு ஆவிக்குரிய வரத்தை அல்லது ஒரு ஊழியத்தை இன்னொருவருக்கு ................................ கைகளை வைக்குதல் பயன்படுத்தப்படுகிறது என்று வேதாகமத்தில் நாம் வாசிக்கின்றோம்.*

*(ஆ) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு குறிப்பிட்ட பணிக்கென்று ஒருவரை ...................................... வேதாகம வழிமுறையாய் இது இருக்கிறது. இது தேவனுடைய நியமனத்தை அங்கீகரிக்கின்றது.*

சபையின் காரியங்களை ஓட்டு போட்டுத் தேர்ந்தெடுப்பதன் மூலம், தீர்க்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் ஓட்டுகளுக்கும், தேர்தலுக்கும் கட்டுப்பட்டவரல்ல. **தேவனே** நியமனங்களைச் செய்கிறார். “நீங்கள் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்தெடுத்தேன்,” என்று இயேசு தம் அப்போஸ்தலர்களிடம் சொன்னார். இது கிறிஸ்துவின் சபையில் நடக்கின்ற ஒவ்வொரு நியமனத்திற்கும், ஒவ்வொரு ஊழியத்திற்கும், அதன் செயல்பாட்டிற்கும் பொருந்தும். மனுஷன் இங்கு தீர்மானிக்க முடியாது.

தேவன்தான் இங்கு தீர்மானிக்கிறார், தேர்ந்தெடுக்கிறார். காரணம், இயேசுகிறிஸ்துவே தன் சரீரமாகிய சபையின் சகல காரியங்களுக்கும் தலையாய் இருக்கிறார்.

இயேசுவினுடைய அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்படாத எந்த நியமனமும் செல்லுபடியாகாது. நியமனம் என்பது ஒன்றைச் செய்யும்படி ஒரு நபரை நியமிப்பதல்ல. மாறாக, அந்த நபர் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் என்ன தீர்மானித்திருக்கிறாரோ, அதைக் கண்டறிவதாகும்.

*4. கைகளை வைக்குதலில், ஒரு பொறுப்பை ஒப்படைப்பதில் நான்கு முக்கியமான செயல்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன:*

*(அ) ...................................... - நியமிப்பதல்ல, மாறாக, தேவனுடைய விருப்பத் தேர்வை கண்டறிவதாகும்.*

*(ஆ) ஒரு குறிப்பிட்ட வேலை அல்லது ஊழியத்திற்கென்று ...................................................*

*(இ) .................................... - நியமிக்கப்பட்ட நபர் மீது அதிகாரப்பூர்வமான முத்திரையை வைப்பதாகும்.*

*(ஈ) ஆவிக்குரிய அதிகாரத்தைக் கொடுப்பதன் மூலம், ..........................................*

## *பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக்காட்டுகள்*

*5. ஆதியாகமம் 48:8-19 வசனங்களை வாசித்துப் பாருங்கள். யோசேப்பின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவத்தை இதில் வாசிக்கின்றோம். தன் தகப்பனாகிய யாக்கோபின் (அல்லது இஸ்ரவேலின்) ஆசீர்வாதத்தைப் பெறும்படி, அவன் தன் மகன்களாகிய மனாசேயையும், எப்பிராயீமையும் கூட்டி வருகின்றான். தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடுத்த இரண்டாம் நிலையில் இருக்கின்ற முக்கியமான, மிகவும் விரும்பத்தக்க ஆசீர்வாதமாய் இது இருக்கின்றது. இது ஒரு தகப்பனின் அல்லது தகப்பனுடைய தகப்பனின் ஆசீர்வாதமாகும். இந்தச் சம்பவத்தில் என்ன நடக்கின்றது?*

*(அ) பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலால், மனாசேக்கு மேல் எப்பிராயீமை வைக்கும்படி யாக்கோபு தன் கைகளை குறுக்காக வைத்தான் என்று வாசிக்கிறோம். எனவே சிறந்த*

மேலான ஆசீர்வாதம், தகப்பனுடைய ............. கரத்திலிருந்து வருகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

(ஆ) இது சம்பிரதாயமாய் நடக்கின்ற ஒரு விஷயமல்ல. மாறாக, இது மெய்யான ஒரு ................................ நிகழ்ந்தது.

(இ) இது ஒரு ................ அல்ல. இந்த இரண்டு வாலிபர்களுடைய வாழ்க்கையை மிகவும் வல்லமையாய் பாதித்த ஒரு பரிமாற்றமாகும்.

(ஈ) அன்றிலிருந்து இது அவர்களுடைய ........................ தீர்மானித்தது.

(உ) இஸ்ரவேலை வாக்குப் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நடத்திச் செல்ல ஒரு புதிய தலைவரை நியமிக்கும்படி மோசே தேவனிடம் வேண்டிக் கொண்டான். இதைக் குறித்து, எண்ணாகமம் 27:12-23 வசனங்களில் நாம் வாசிக்கின்றோம். அந்த விண்ணப்பத்திற்கு யோசுவாவை தேவன் பதிலாகக் கொடுத்தார்.

(அ) தேவனுடைய பணிக்கென்று .................................. . - கர்த்தர் மோசேயை நோக்கி, “ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்து கொண்டு, அவன் மேல் உன் கையை வை” (18-ம் வசனம்).

(ஆ) தலைமையினால் .................................... - “அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளை கொடு” (19-ம் வசனம்).

(இ) தலைமைத்துவ வேலைக்கென்று ............................- “இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் (அதிகாரத்தில்) கொஞ்சம் அவனுக்குக் கொடு.” (20-ம் வசனம்)

7. இது ஒரு சடங்கோ அல்லது சம்பிரதாயமோ அல்ல. நிஜமாகவே யோசுவாவுக்கு நடந்த ஒன்றாக இது இருக்கின்றது. உபாகமம் 34:9-ல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: “மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் ........................

வைத்தபடியினால், அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்.''

8. எலிசா மற்றும் யோவாஸ் ராஜாவுக்கும் இடையே நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறித்து 2 ராஜாக்கள் 13:14-21 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. எலிசா தன் கைகளை ......................... கைகளின் மேல் வைத்தான். அவன் எய்யும் அம்புகளை வல்லமையான ஒன்றாக மாற்றும்படி எலிசா அப்படிச் செய்தான்.

## புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற நோக்கங்கள்

புதிய ஏற்பாடு, மற்றவர்கள் மீது கைகளை வைப்பதைக் குறித்து பல நோக்கங்களைச் சுட்டிக் காண்பிக்கிறது. எபிரெயர் 6:1-2 வசனங்களில், இந்த அடிப்படை போதனை சேர்க்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அது ஆச்சரியமாக இருந்தாலும், பின் வரும் விஷயங்களை கருத்தில் எடுத்துக் கொள்வீர்கள் என்றால், ஒன்றை உங்களால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது, சபைக்குள் இந்தக் கட்டளையைப் பின்பற்றவில்லை என்றால், தேவனுடைய முன்னேற்பாட்டின் மிக முக்கியமான, எல்லாவற்றோடும் ஒருங்கிணைந்த ஒரு பகுதியை நாம் தவற விட்டு விடுவோம் என்பதுதான் அது.

9. இது வியாதிப்பட்டவர்களுக்கு சுகமளிக்கும் ஊழியம் செய்கிறது-

(அ) .......................................... (மாற்கு 16:17-18; லூக்கா 4:40-41)

(ஆ) ........................................ - எண்ணெயை பரிசுத்த ஆவியான வருக்கு அடையாளமாக பயன்படுத்தி சுகமளிக்கப்படுகிறது (யாக்கோபு 5:14-15).

10. பரிசுத்த ஆவியானவரின் ......................... பகிர்ந்து கொடுக்கும்படி இது பயன்படுத்தப்படுகிறது - எடுத்துக்காட்டுகள்: சமாரியர்கள் (அப்போஸ்தலர் நடபடிகள் 8:14-20); தர்சுவைச் சேர்ந்த சவுல் (அப்போஸ்தலர் நடபடிகள் 9:17-18); எபேசுவிலிருந்த சீஷர்கள் (அப்போஸ்தலர் நடபடிகள் 19:1-6);

*11. சபைப்பணியாளர்களை (உதவியாளர்களை) ........ .......................... இது பயன்படுத்தப்படுகிறது. ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியானவரால் நிரம்பியிருக்க வேண்டியிருந்தது (அப்போஸ்தலர் நடபடிகள் 6:1-7);*

*12. ..................................... அனுப்பும்படி இது பயன்படுத்தப்படுகிறது. அந்தியோகியாவிலிருந்த சபைத் தலைவர்கள் உபவாசத்தோடு ஜெபம் செய்த பிறகு, அவர்களுக்குள் மேல் நிலையிலிருந்த இரண்டு பேரை ஊழியத்திற்கு அனுப்பினார்கள். கள ஊழியத்திற்கு அனுப்பப்படுகிற இந்த உயர்வு, மேலேயிருந்து வர வேண்டும், கீழேயிருந்து அல்ல (அப்போஸ்தலர் நடபடிகள் 13:1-4 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

பவுலும், பர்னபாவும் அனுப்பப்பட்டபோது, தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் என்றழைக்கப்பட்ட ஒரு குழுவினரின் அங்கமாய் அவர்கள் இருந்தனர். ஆனால் அடுத்த அதிகாரத்தில் (அப்போஸ்தலர் நடபடிகள் 14), அவர்கள் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதாவது 'அனுப்பப்பட்டவர்கள்' என்று அர்த்தம். அவர்கள் எவ்வாறு அப்போஸ்தலர்களானார்கள்? பரிசுத்த ஆவியானவரின் நியமனத்தினால் அது நடந்தது. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை அவர்கள் எவ்வாறு கேட்டனர்? அவர்கள் ஜெபித்தார்கள், உபவாசித்தார்கள், தேவனை ஆராதித்தார்கள், தேவனுக்கு ஊழியம் செய்தார்கள். சபையின் தலைமை அதைச் செய்தபோது, அங்கே அப்போஸ்தலர்கள் எழும்பி, உருவாகிறதை நாம் பார்ப்போம்.

'சூரியன் பூமியைச் சுற்றுகின்றது' என்று நிச்சயமாய் நம்பின தாலமியைப் போலத்தான் பல கிறிஸ்தவர்களும் இருக்கின்றார்கள். கோப்பர்நிக்கஸ் வந்தார். "அது சரியல்ல. இதற்கு அப்படியே நேரெதிரானதுதான் உண்மை. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றது," என்று சொன்னார். சபை அவரைக் கொல்ல வேண்டும் என்று விரும்பியது. காரணம், அது அவர்களுடைய பாரம்பரியத்திற்கு முரண்பட்டதாய் இருந்தது.

இன்றைக்கும் பெரும்பாலானோர் தாலமியின் காலத்தில் வாழ்கின்றதை போலத்தான் தெரிகின்றது. தேவன் நம்மைச் சுற்றி சுழல்கின்றார் என்றுதான் அவர்கள் இன்றும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நேரெதிரான உண்மையை அவர்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

நாம்தான் சூரியனைச் சுற்றி வருகின்றோம். அதாவது இயேசுவை மையமாகக் கொண்டுதான் நம் வாழ்க்கை இயங்க வேண்டும். பிரதான மாக, நம்முடைய நன்மைக்காக இயேசு இங்கு இருக்கவில்லை. மாறாக, நாம்தான் அவருடைய மகிமைக்காக இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

*13. ........................... நியமிக்கும்படி இது பயன்படுத்தப்படுகிறது - அப்போஸ்தலர் நடபடிகள் 14:23-ம் வசனம், பவுல் மற்றும் பர்ன பாவைக் குறித்துப் பேசுகிறது. ''இவ்விரண்டு அப்போஸ்தலர்கள் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை நியமித்தனர்.'' ஆக, ஆரம்பத்தில், மூப்பர்களின் நியமனம், அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டது.*

*14. ..................... வரத்தைப் பகிரும்படி இது பயன்படுத்தப்படுகிறது - பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது, 2 தீமோத்தேயு 1:6-ல் இவ்வாறு சொன்னார்: ''நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால், உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.''* **கரிஸ்மா** *என்ற கிரேக்க வார்த்தைதான்,* **வரம்** *என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தீமோத்தேயுவுக்குள் இருந்த இந்த வரம், அப்போஸ்தல வரம் என்று இந்த வசனத்தோடு சம்பந்தப்பட்ட குறிப்புகளிலிருந்து டெரிக் சொல்கிறார்.*

## *ஆபத்துக்களும், பாதுகாப்பு நடவடிக்கைகளும்*

கைகளை வைக்குதலில், சில ஆபத்தான விஷயங்களும் சம்பந்தப் பட்டிருக்கின்றன. சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், நம்மை நாமே அதிலிருந்து காத்துக் கொள்ள முடியும். **1** தீமோத்தேயு **5:22**-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "ஒருவன் மேலும் சீக்கிரமாய் கைகளை வையாதே. மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே. உன்னை சுத்தவானாகக் காத்துக் கொள்." யார் மீது நம் கைகளை வைக்கின்றோம் என்ற விஷயத்தில் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய நேரங்கள் உண்டு என்பதைத்தான் இது நமக்குச் சொல்கிறது. இது மூப்பர்களின் நியமனத்தைக் குறித்த விஷயமாயிருக்கிறது. ஆகையால், "ஒருவன் மேலும் சீக்கிரமாய் கைகளை வைக்காதே," என்று அவர் சொல்லும்போது, "சீக்கிரமாய், அவசரப்பட்டு ஒரு மூப்பரை நியமித்து விடாதே," என்ற அர்த்தத்தில்தான் அவர் சொல்கிறார்.

எந்த ஒரு விஷயத்திலும் தேவனுடைய சிந்தையோடு செயல்படுகிறீர்களா என்பதில் எச்சரிக்கையாயிருங்கள். அந்த நபருக்கு சரியான தகுதிகள் இருக்கின்றதா என்பதை எச்சரிக்கையாய் ஆராய்ந்து பாருங்கள். காரணம், கைகளை வைக்காமலிருப்பதைக் காட்டிலும், கைகளை வைக்குதல் என்பது மிகவும் எளிதான ஒன்றாகும். எனவே இவ்விஷயத்தில் எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் ஒருவரை மூப்பராக தவறான நியமனம் செய்து விட்டீர்கள் என்றால், பிறகு அவரை அந்த ஸ்தானத்திலிருந்து நீக்குவதென்பது மோசமான, ஒரு பெரிய பிரச்சனையாகி விடும்.

*15. மற்றவர்களுடைய ................................ நாம் பங்கெடுக்கக் கூடாது என்று பவுல் எழுதுகிறார். காரணம், தகுதியில்லாத ஒரு நபரை மூப்பராக நாம் நியமிப்போம் என்றால், அவர் சபையையும், தேவனுடைய ஜனங்களையும் தன்னுடைய சுயலாபத்திற்கென்று பயன்படுத்திக் கொள்வார். அவர் அப்படி நடந்து கொள்வார் என்றால், அவருடைய பாவங்களில் நாமும் பங்கெடுக்கின்றோம் என்று அர்த்தம்.*

*16. ஆவிக்குரிய ................................ நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டும். ஒரு தீய ஆவியிலிருந்து விடுதலையடையும்படி ஜெபிப்பதற்காக ஒருவர் மீது நீங்கள் கைகளை வைக்கின்றீர்கள். ஆனால் உங்களையே எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். காரணம், இது இரு வழி பரிமாற்ற மாக முடியக்கூடும். ஒன்று, தேவனுடைய ஆவியானவரை நீங்கள் அவருக்குப் பகிர்ந்தளிக்கலாம். அல்லது, அந்த தீய ஆவி உங்களை மோசமாகப் பாதிக்கலாம்.*

நீங்கள் ஒருவர் மீது கைகளை வைக்கும்போது, உங்களுக்கும் பாதுகாப்பு தேவைப்படுகிறது. ஜெபம் மற்றும் தாழ்மையின் மூலம் நீங்கள் அதைப் பெறலாம். எப்பொழுதும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுங்கள். காரணம், “எவர்கள் தேவனுடைய ஆவியானவரால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்,” என்று ரோமர் 8:14 சொல்கிறது. கூடுதலாக, இயேசுவின் இரத்தத்தினாலும் பாதுகாக்கப்படுங்கள். இயேசுவினுடைய இரத்தத்தின் கீழ் எவ்வாறு பாதுகாக்கப்படுவது என்பதை அறிந்து கொள்ளுங்கள். இயேசு தம் சீஷர்களுக்குச் சொன்ன வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: “இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும்

மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கின்றேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது" (லூக்கா 10:19).

நம்முடைய பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதென்பது அத்தியாவசியமானதாயிருக்கிறது. அதற்கு நாம் பரிசுத்த ஆவியான வரால் வழிநடத்தப்பட வேண்டும். கைகளை வைக்குதல் என்பது மகத்தான ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்கவும், சரீரமாகிய சபையின் பணி தொடர்ந்து நடக்கவும் தேவன் அமைத்துக் கொடுத்த ஒரு வழிமுறையாய் இருக்கிறது. ஆனால் சபையில் இது மிகவும் அரிதாகத்தான் போதிக்கப்படுகிறது. இந்த அடிப்படைப் போதனையின்படி நாம் செயல்படவில்லை என்றால், நம்மால் சிறப்பாக செயல்பட வேண்டிய விதத்தில் செயல்பட இயலாது.

கைகளை வைக்குதலை ஞானமாய் பயன்படுத்தும்படி, கர்த்தராகிய இயேசுவின் உதவியை நாம் நாடுவோம். அவரிடம் ஜெபிப்போம்:

*பரலோகப் பிதாவே, இந்தப் புதிய சத்தியத்தை நீர் என க்கு வெளிப்படுத்தியிருக்கிறீர். உமக்கு நன்றி. சபையின் உதவியாளர்கள் மற்றும் மூப்பர்களை நியமிப்பதன் மூலம், அப்போஸ்தலர்களை நியமித்து அனுப்புவதன் மூலம் சபையின் பணி தொடர்ந்து நடக்கும்படி தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கிற வழிமுறையாகிய கைகளை வைக்குதலின் முக்கியத்துவத்தை இப்பொழுது நான் பார்க்க ஆரம்பிக்கின்றேன். ஜெபத்தின் மூலம் உம்முடைய சுகமளிக்கும் வல்லமையை கொடுப்பதற்கும், உம்முடைய பரிசுத்த ஆவியானவரையும் அவருடைய வரங்களையும் பகிர்ந்தளிப்பதற்கும் இது ஒரு வழிமுறையாய் இருக்கிறது என்பதை நான் கூடுதலாக புரிந்து கொள்கிறேன்.*

*பரிசுத்த ஆவியானவரே, என்னை வழிநடத்துவீராக. தேவனை க் குறித்த சரியான அறிவைப் பெற்ற மகனாய், மகளாய் என்னை உருமாற்றுவீராக. எனக்கு உதவி செய்வீராக. இந்த அருமையான கருவியை உம்முடைய மகிமையை விளங்கச் செய்யும் விதத்தில் பயன்படுத்தும்படி எனக்கு வாய்ப்புகளைக் கொடுப்பீராக. நான் அதைக் கண்டறிய உதவி செய்வீராக. இயேசுவினுடைய இரத்தத்தின் பாதுகாப்பின் கீழ் வாழும்படி நான் தீர்மானிக்கிறேன். நான் தொடர்ந்து ஜெபத்தில்*

*தரித்திருக்க, தாழ்மையாய் வாழ எனக்கு கிருபை தாரும். உமக்கு நன்றி. எதிரியாகிய பிசாசின் சகல வல்லமையின் மீதும் நீர் எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறீர். எனவே எதுவும் என்னை க் காயப்படுத்த முடியாது. உமக்கு நன்றி.*

*இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

இயேசு கிறிஸ்து எனும் கன்மலையின் மீது ஒரு உறுதியான, வலிமையான அஸ்திபாரத்தைப் போடும்படி, நாம் ஆழமாய் தோண்ட ஆரம்பித்திருக்கிறோம். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை, அதாவது வேதாகமத்தை நாம் கற்றுக் கொண்டோம். மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய இயேசுவையும் நாம் கற்றுக் கொண்டோம். வேதாகமத்தைக் குறித்து நம் சிந்தை எதுவோ, அதுவே தேவனைக் குறித்த நம் சிந்தையாகவும் இருக்கின்றது. செத்த கிரியைகளை விட்டு நாம் மனந்திரும்பினோம். தேவன் மீது நம் விசுவாசத்தை அறிக்கை செய்தோம். நியாயப்பிரமாணம் மற்றும் கிருபையைக் குறித்த நம்முடைய புரிதலில், நாம் மேலும் வளர்ந்தோம். தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தின் வழியாக நாம் கடந்து சென்றோம். பரிசுத்த ஆவியானவரின் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டோம். இந்தப் பாடத்தில், கைகளை வைக்குதலின் மூலம், தேவனுடைய வல்லமையை பகிர்ந்தளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதைக் குறித்த சத்தியத்தையும் நாம் பெற்றுக் கொண்டோம்.

அடுத்த செய்தியில், நம்முடைய கவனத்தை இந்தக் காலத்திலிருந்து நித்தியத்திற்குக் கொண்டு செல்லப் போகின்றோம். முடிவு காலம் என்ற தலைப்பில், நாம் அதைக் கற்றுக் கொள்ளப் போகிறோம்.

386-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/26**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# 9-ம் பாடம் >>
# அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 8
# காலத்தின் இறுதியில்[4167]

*அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

“காலத்தின் முடிவு” என்ற இப்பாடம், நம் படிப்பை இந்தக் காலத்திற்கு வெளியே நித்தியத்திற்குள் கொண்டு செல்லும். இதுவரை நாம், செத்த கிரியைகளை விட்டு விலகி மனந்திரும்புதல், தேவன் மீது விசுவாசம், ஞானஸ்நானங்களைக் குறித்த உபதேசங்கள், கைகளை வைக்குதல் என்ற முதல் நான்கு அடிப்படைப் போதனைகளைக் கற்றுக் கொண்டிருக்கிறோம். இவையெல்லாம் இவ்வுலகத்தோடு சம்பந்தப்பட்டவை. ஆனால் கடைசி இரண்டு போதனைகள், நித்தியத்திற்குள் நாம் பிரவேசிக்கும்போது நடக்கப் போகிறவைகளைக் குறித்ததாகும்.

அவை இப்பொழுது தேவையில்லை என்றால் நாம் ஏன் அவைகளைக் கற்க வேண்டும் என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். இதற்கான பதில் எளிமையானது. கிறிஸ்துவின் நியாய சிங்காசனத்திற்கு முன்பு நாம் எவ்வாறு நியாயந்தீர்க்கப்படுவோம் என்பதை நாம் அறிந்து கொள்வோம் என்றால், இங்கே எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் குறித்து ஆழமாக, தெளிவாக, நிச்சயமான விதத்தில் அறிந்து கொண்டிருப்போம்.

அடுத்த இரண்டு பாடங்களில், மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்தும், நித்திய நியாயத்தீர்ப்பைக் குறித்தும் நாம் கற்றுக் கொள்வோம். இவையிரண்டும் மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் இருக்கின்றன. காரணம், இந்த வாழ்க்கையில் மட்டும் நாம் நம் கவனத்தைச் செலுத்தக்கூடாது. இந்த வாழ்க்கையில் தங்களுக்கு தேவன் என்ன செய்வார் என்பதை மட்டுமே இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவை தேவன் நமக்கென்று வைத்திருக்கிற நன்மைகளில் ஒரு மிக மிகச் சிறிய, சொற்பமான பகுதி மட்டுமே. ஆனால் முதலில், இவ்வுலகத்திலிருந்து அடுத்த உலகத்திற்குள் கடந்து செல்கிற நிகழ்வைக் குறித்து டெரிக் பிரின்ஸ் நமக்குப் போதிக்கப் போகின்றார்.

'காலத்தின் முடிவு' என்ற செய்தியைக் கேட்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

நித்தியத்தோடு சம்பந்தப்பட்ட காரியங்களை நாம் எண்ணிப் பார்க்க ஆரம்பிக்கும்போது, நிறைய விஷயங்கள் நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்ப்பட்டவைகளாய் இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். நாம் பாதுகாப்பாய் உணர வேண்டும் என்பதற்காக, காலத்திற்கு முன்பே எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற ஒரு நபராய் நீங்கள் இருக்கிறீர்கள் என்றால், பிறகு நித்தியத்தைக் குறித்த சிந்தையே நம்மை நம்முடைய சௌகரியமான சூழலை விட்டு வெளியே உந்தித் தள்ளி விடும். தேவனுடைய இறை யாண்மை, நமக்கு முன்பாக ஒரு சவாலாக நிற்கும். தேவன் தாம் என்ன செய்ய வேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, அப்பொழுது அவர் அதைச் செய்கிறார். அதற்கு அவர் ஒருவரிடமும் அனுமதி கேட்பதில்லை. நம் நம்பிக்கையை அவர் மீது வைக்கும்படி, அவர் நம்மை வற்புறுத்துகிறார்.

மெய்யாகவே நம்மைக் குறித்த சிறந்த நினைவுகளையும், திட்டங்களையும் தேவன் தம் இருதயத்தில் கொண்டிருக்கிறாரா? அவருடைய பிள்ளைகளாகிய நம்மை மீட்கும்படி உச்சகட்ட விலைக்கிரயத்தை அவர் செலுத்தியிருக்கிறார். மெய்யாகவே அவர் நம்மை நேசிக்கிறாரா? இந்தக் கேள்விகளை எதிர்கொள்ளும்போது, அவருடைய பிள்ளைகளாய் தைரியமாய் நாம் பதிலளிக்கின்றோமா? அல்லது அனாதைகளாய் பாதுகாப்பற்ற உணர்வில் நிற்கின்றோமா? கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சிக்கும்போது, இந்த விஷயங்களையெல்லாம் உங்களுடைய மனதில் நிலைநிறுத்துங்கள். கர்த்தராகிய இயேசுவிடம் ஜெபியுங்கள். அவருடைய கண்ணோட்டத்திலிருந்து காரியங்களை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள். அப்பொழுது உங்களால் அவருடைய இறையாண்மையில் இளைப்பாற முடியும். உங்கள் மீது அவர் வைத்திருக்கிற மேலதிகமான அன்பில் நீங்கள் அமர்ந்திருப்பீர்கள்.

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

## ஒரு புதிய ஒழுங்கு

*1. ஒரு குறிப்பிட்ட தருணத்தில், இனி .................... செல்லாது என்று ஒரு தூதன், வெளிப்படுத்தின விசேஷம் 10:6-ல் சொல்கிறான். மனுஷனுடைய இருதயம் துடிப்பதை நிறுத்தும்போது, நாம் ஒவ்வொருவரும் இந்தக் காலத்தை விட்டு வெளியேறி, ஒரு புதிய மண்டலத்திற்குள், ஒரு நித்திய மண்டலத்திற்குள் நுழைவோம். இனியும் காலதாமதம் இருக்காது என்று சில மொழிபெயர்ப்புகள் சொன்னாலும், 'இனியும் காலம் இராது,' என்று கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.*

*2 கொரிந்தியர் 4:17-18 சொல்கிறது: "மேலும் காணப்படு கிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள். காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்."*

*2. இந்த வேதப்பகுதியில், ஆவிக்குரிய மற்றும் நித்தியமானவைகள்தான் மெய்யான நிஜங்களாய் இருக்கின்றன என்று நாம் பார்க்கின்றோம். குறிப்பாக, இரண்டு சத்தியங்களை இங்கே நாம் கவனிக்கின்றோம்:*

*(அ) கண்களால் பார்க்கக்கூடிய மண்டலம், ......................... ....... மற்றும் தற்காலிகமானது.*

*(ஆ) கண்களுக்குத் தெரியாத மண்டலம், ............................. . மற்றும் நித்தியமானது.*

*3. இப்பொழுதைய இந்த உலகம், நம் ............. அல்ல. இவ்வுலகம் விழுந்துபோன ஒரு உலகம். எனவே இதன் மேல் ஒரு அழகான படத்தை நாம் பூசக் கூடாது. காரணம், இது பாவத்தினால் கறைபட்டு, சீர்கெட்டு, சிதைந்து போயிருக்கிறது. இவ்வுலகம் நம் நிரந்தர வீடாய் இராதபடியால், நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் (எபிரெயர் 13:14).*

*4. 1 கொரிந்தியர் 15:19-ல் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்: "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்." இந்த வாழ்க்கையில் என்ன நடக்கின்றது என்பதைக் குறித்து மட்டுமே நாம் அக்கறையும் கரிசனையும் உடையவர்களாய் இருப்போம் என்றால், நாம் பரிதபிக்கத்தக்கவர்களாயிருப்போம் என்பதைத்தான் இது நமக்கு நினைப்பூட்டுகிறது. காரணம், கண்களுக்குத் தெரியாத, .................... தான் மெய்யான நிஜமாயிருக்கிறது.*

*இவ்வுலக வாழ்க்கையில் தேவனிடமிருந்து ஏதோ ஒன்றைப் பெறுவதுதான் கிறிஸ்தவத்தின் கோட்பாடாக இருக்குமென்றால், அது புதிய ஏற்பாட்டின் படத்திற்கு முற்றிலும் முரண்பட்ட, அந்நியமான ஒரு படமாய் இருக்கும். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இந்தக் காலத்தின் முடிவைக் குறித்தும், நித்தியத்தின் ஆரம்பத்தைக் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரால் அழுத்தப்படுவது நமக்கு மிகவும் ஆரோக்கியமான நல்ல ஒரு விஷயமாயிருக்கிறது.*

*5. எபிரெயர் 13:14-ஐ வாசிக்கும்போது, ஒரு கேள்வியை நாம் எதிர்கொள்கின்றோம். வரப் போகிற ........................ ........ நாம் எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது இவ்வுலகமே நம் வீடு என்று எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?*

*6. மிகவும் நீண்ட ................................ பகுதிக்காக, நித்தியத்தின் மிகச் சிறிய பகுதியைக் கூட தேவன் விட்டுக் கொடுக்க மாட்டார். காரணம், காலம் என்பது நிரந்தரமானதல்ல. ஆனால் நித்தியம், நிரந்தரமானது.*

*7. நீதிமொழிகள் 8:18-ல், ஞானம் இவ்வாறு பேசுகின்றது: "ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு." நிலையான ............................ ஒழிந்து போகாதவை. இயேசுவும் அதைச் சொல்கிறார்: "உங்களுக்கு உள்ளவைகளை விற்று பிச்சை கொடுங்கள். பழமையாய் போகாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷத்தையும்*

*பரலோகத்திலே உங்களுக்கு சம்பாதித்து வையுங்கள். அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை. பூச்சி கெடுக்கிறதுமில்லை'' (லூக்கா 12:33).*

இவ்வாழ்க்கை முடியும்போது, நம் வரங்களின் கிரியைகளும் முடிவுக்கு வருகின்றன. நம்முடைய ஆவிக்குரிய வரங்களெல்லாம், தீர்க்கதரிசனம் உரைக்கும் வரங்களும், அற்புதங்களை நிகழ்த்தும் வரங்களும், அறிவை உணர்த்தும் வார்த்தையைப் பேசும் வரங்களும் ஒரு முடிவுக்கு வருகின்றன. நாம் இவைகளை நம்மோடு எடுத்துச் செல்லப் போவதில்லை. அவை இவ்வுலக வாழ்க்கைக்காக மட்டுமே கிரியை நடப்பிக்கின்றன. அவை இந்தக் காலத்திற்கு உரியவைகளாய் இருக்கின்றன. ஆனால் ஒரு காரியத்தை நாம் நம்மோடு எடுத்துச் செல்வோம். அது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா ? நம்முடைய குணம். குணம் என்பது நிரந்தரமான தாய் இருக்கிறது. நம்முடைய குணத்தில் நாம் யாராய் இருக்கிறோம் என்பதுதான், நித்தியம் முழுவதிலும் நாம் எப்படி இருக்கப் போகிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது. அதுதான் நிரந்தரமானதாய், நிலைத்து நீடித்திருக்கக்கூடிய ஐசுவரியமாய் இருக்கிறது. எனவே சுத்தமான, உறுதியான, தேவனை பிரதிபலிக்கும் கிறிஸ்தவ குணாதிசியத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது அத்தியாவசியமானதாயிருக்கிறது.

*9. வேதாகமத் தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து, 2 பேதுரு 1:19-21 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதியிருக்கிறார். எழுதப்பட்ட வேதாகம தீர்க்கதரிசனத்தைக் குறித்து நான்கு முக்கியமான உண்மைகளை அவர் குறிப்பாக இங்கு வெளிப்படுத்துகிறார்.*

*(அ) ''அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் நமக்கு உண்டு'' என்று 19-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவைக் குறித்த பல தீர்க்கதரிசனங்கள் ஏற்கனவே நிறைவேறியிருக்கின்றன என்பது உண்மையாய் இருக்கிற படியால், எஞ்சிய தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும் என்பதில் நாம் இன்னும் அதிக தைரியமும், நிச்சயமும் உடையவர்களாய் இருக்க முடியும். அதைத்தான் இவ்வசனம் நமக்குச் சொல்கிறது.*

*(ஆ) 19-ம் வசனத்தில், தீர்க்கதரிசன வார்த்தையைக் குறித்து இன்னும் அதிகமாய் நாம் வாசிக்கின்றோம்: ''இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்காயிருக்கிற அவ்வசனத்தை*

*கவனிப்பது நமக்கு நல்லது.'' ................................... வசனங்களை நாம் அலட்சியம் செய்ய முடியாது என்பதைத்தான் இவ்வசனம் நமக்குச் சொல்கிறது. காரணம், இருளான இந்த உலகத்தில், நம்மை வழிநடத்தும்படி, நமக்கு ஒரு வெளிச்சம் தேவைப்படுகிறது. வேதவசனத்தில் காணப்படுகிற தீர்க்கதரிசின வெளிப்பாடுதான், தேவன் நமக்கு அருளியிருக்கிற அந்த வெளிச்சமாயிருக்கிறது.*

*(இ) வேதாகம தீர்க்கதரிசனத்தை நாம் உற்று நோக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ''பொழுது விடிந்து, விடிவெள்ளி உங்களுடைய இருதயங்களில் உதிக்குமளவும்,'' என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது. இது .......................... இரண்டாம் வருகையைக் குறிக்கவில்லை. இது உள்ளான, தனிப்பட்ட ஒரு அனுபவமாய், சூரிய உதயத்திற்கு சற்று முந்தி, நம்முடைய இருதயங்களில் விடிவெள்ளி நட்சத்திரம் பிரகாசிக்கின்ற ஒரு அனுபவமாய் இருக்கின்றது. இது என்ன செய்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? இயேசு திரும்பி வருகின்றார் என்று இது நமக்குச் சொல்கிறது. நாம் உற்சாகமடைகின்றோம்.*

*(ஈ) தீர்க்கதரிசனமானது ஒருபோதும் மனுஷருடைய ......... ................................... உண்டாகவில்லை; மாறாக, தேவனுடைய சித்தத்தினாலே உண்டானது என்று 21-ம் வசனம் நமக்குச் சொல்கிறது.*

*உபாகமம் 29:29-ல், மோசே இஸ்ரவேல் ஜனங்களிடம் இவ்வாறு சொல்கிறார்: ''மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.''*

*9. இந்த வசனத்தில், இரண்டு வகையான காரியங்களைக் குறித்து மோசே சொல்கிறார்:*

*(அ) ............................... நம்முடைய தேவனுக்குச் சொந்தமானவைகள். ஒருவரும் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது.*

*(ஆ) .................................... நாம் கீழ்ப்படிந்து செயலாற்றும்படி நமக்காக எழுதப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் இதில் குழப்பத்தை உண்டாக்குவதற்கு ஒரு முக்கியக் காரணம், இரகசியமான காரியங்களைப் புரிந்து கொள்ளும்படி அவர்கள் முயற்சிக்கின்றார்கள். ஆனால் அதே நேரத்தில், வெளிப்படுத்தப்பட்ட காரியங்களுக்கு அவர்கள் கீழ்ப்படிவதில்லை.*

## *கால முடிவில் காணப்படும் பொதுவான சூழல்கள்*

*10. காலத்தின் முடிவில் காணப்படும் பொதுவான சூழல்களை வேதாகமத்தின் கண்ணோட்டத்தில் நாம் எண்ணிப் பார்ப்போம் என்றால், ஐந்து முக்கியமான அம்சங்களை நம்மால் பார்க்க முடியும்.*

*(அ) நீதி மற்றும் ..........................., இவ்விரண்டும் பெருகிக் காணப்படும். நீதி பெருகி தழைத்தோங்கும். ஆனால் துன்மார்க்கமும் பெருகி தழைத்தோங்கும். வெளிச்சம் பிரகாசிக்கும். ஆழமான இருளும் காணப்படும் (ஏசாயா 60:1-2; மத்தேயு 13:37-43; வெளிப்படுத்தின விசேஷம் 22:10-12 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

*(ஆ) நீதிமொழிகள் 4:18 சொல்கிறது: "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகம் அதிகமாய் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்." ஆக, நீதி என்பது ஸ்தம்பித்து நிற்கின்ற ஒரு நிலை அல்ல. அது ஒரு ..................; நீங்கள் அந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வீர்கள் என்றால், வெளிச்சமானது ஒவ்வொரு நாளும் அதிகம் அதிகமாய் பிரகாசித்துக் கொண்டே செல்லும்.*

*(இ) கிறிஸ்துவின் ...................... முன்பு உபத்திரவம் உண்டாகும். இந்தப் பூமியில் தேவனுடைய ராஜ்யம் வருவதற்கு முந்தி உண்டாகப் போகிற பிரசவ வேதனை போன்ற உபத்திரவத்தைக் குறித்து மத்தேயு 24-ம் அதிகாரம் விவரமாய் பேசுகிறது. இதை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.*

(ஈ) தேவனுடைய ராஜ்யத்தின் வருகையினுடைய சில அடையாளங்களைக் குறித்து லூக்கா 21:25-28 வசனங்களில் இயேசு நமக்குச் சொல்கிறார். பிறகு சில அழகான, ஆறுதலான வார்த்தைகளையும் அவர் நமக்குக் கொடுக்கிறார்: "அப்பொழுது மனுஷகுமாரன் (இயேசு) மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்."

(உ) காலத்தின் முடிவில், ......................... நிச்சயமான, மிகவும் முக்கியமான அடையாளம், மத்தேயு 24:14-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி, அது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற வேலையைச் செய்து முடித்திருக்கும்: "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்."

## இயேசுவின் வருகையைத் தொடரும் சம்பவங்கள்

11. அடுத்ததாக, இயேசுவின் இரண்டாம் வருகையைத் தொடர்ந்து நடக்கப் போகிற சம்பவங்களின் பட்டியலை நாம் பார்க்கப் போகிறோம். வேதாகமத்தில் அந்த வரிசை கொடுக்கப்படவில்லை. எனவே அவை இந்த வரிசையில்தான் நடக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்று டெரிக் சொல்கிறார்:

(அ) மெய்யான .................................. உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும் நடக்கும். இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்வு, 1 தெசலோனிக்கேயர் 4:15-17 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. நியாயத்தீர்ப்பைக் குறித்த உத்தரவாதமான வார்த்தைகளை 2 கொரிந்தியர் 5:10-ல் நாம் பார்க்க முடியும்.

(ஆ)................. (துஷ்டமிருகமும்), அவனைச் சேர்ந்தவர்களும் அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 19:19-21).

*(இ) ஓர் ஆயிரம் வருடங்களுக்கு ...................... கட்டப்பட்டிருப்பான் (வெளிப்படுத்தின விசேஷம் 20:1-3).*

*(ஈ) ........................ இரட்சிக்கப்பட்டு, மீட்கப்படும் (ரோமர் 11:25-26).*

*(உ) கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியின் ஆரம்பத்தில், ...................... தேசங்கள் யூதர்களை எவ்வாறு நடத்தினார்களோ அதன் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவேல் 3:1-3, மத்தேயு 25:31-46).*

*(ஊ) கிறிஸ்துவினுடைய ஆயிரம் வருட அரசாட்சியின் ......................... பூமியில் நிறுவப்படும் (ஏசாயா 24:19-23; வெளிப்படுத்தின விசேஷம் 20:4).*

*(எ) .................... வருட முடிவில், கொஞ்சக் காலத்திற்கு சாத்தான் விடுதலையாவான் (வெளிப்படுத்தின விசேஷம் 20:7-10).*

*(ஏ) கடைசியாக ஒருமுறை, .......................... தேவனுக்கு விரோதமாக எழும்பும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:8-9).*

*(ஐ) இப்பொழுது இருக்கிற வானங்களும், ........................... ஒழிந்து போகும் (2 பேதுரு 3:7-13; வெளிப்படுத்தின விசேஷம் 21:1).*

*(ஒ) மரித்தோரில் எஞ்சியிருப்போரின் உயிர்த்தெழுதலும், ................................... நடக்கும். இவர்கள் கிறிஸ்துவுக்குள் மரிக்காதவர்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12-15).*

*(ஓ) புதிய ......................., புதிய பூமியும் உண்டாகும் (2 பேதுரு 3:13; வெளிப்படுத்தின விசேஷம் 21:1).*

*(ஔ) இயேசு தம்முடைய ராஜ்யத்தை அவருடைய ........................ ஒப்படைப்பார் (1 கொரிந்தியர் 15:22-28).*

மிகவும் பயங்கரமான சவால்கள் நிறைந்த காலங்கள் நமக்கு முன்பாக இருந்தாலும், நம்முடைய வாழ்க்கையின் மிகவும் ஆச்சரியமான, மகிமையான காலகட்டமும் நமக்கு முன்பாகத்தான் இருக்கின்றது. **1** பேதுரு **5:10** சொல்கிறது: “கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய

தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடு அனுபவிக்கிற உங்களை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.” இவ்வசனம் தேவனுடைய கிருபையைக் குறித்து நமக்கு சுருக்கமாகச் சொல்கிறது. நித்தியத்தில் நம்மை அவரோடு கூட வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவருடைய விருப்பத்தையும் இவ்வசனம் பேசுகிறது. நீடிய பொறுமையோடு நீடித்திருக்க வேண்டிய நம் தேவையையும் இது சொல்கிறது. நம்மை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவதன் மூலம் அவர் நமக்குள் கட்டியெழுப்புகிற குணாதிசியத்தைக் குறித்தும் இது பேசுகிறது.

காலம் மற்றும் நித்தியத்தைக் குறித்த தேவனுடைய கண்ணோட்டத்தை நமக்குள் வளர்த்துக் கொள்ளும்படி தேவனுடைய உதவியை நாடுவோம். நாம் அவரிடம் ஜெபிப்போம்:

*கிருபை நிறைந்த பிதாவே, நீர் என் மீது அளவில்லா அன்பு கொண்டிருக்கிறீர். உமக்கு நன்றி. இந்தக் காலத்திலிருந்து நித்தியத்திற்குள் செல்வதைக் குறித்த ஆச்சரியமான சத்தியங்களை உம்முடைய வார்த்தையிலிருந்து எனக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர். உமக்கு நன்றி. நான் கற்றுக் கொண்டவைகளில் சில விஷயங்கள் எனக்குப் புரியவில்லை என்றாலும், எனக்குக் குழப்பமாக இருக்கிறது என்றாலும், என் கண்களை, என்னைச் சுற்றியிருக்கிற இவ்வுலகத்தின் மீது அல்ல, உம் மீது நிலையாய் பதித்திருக்கும்படி எனக்கு உதவி செய்யும்.*

*உம்முடைய நல்தயவை நம்பியிருக்கும்படி நான் கற்றுக் கொள்கிறேன். நான் எதிர்கொள்கிற ஒவ்வொரு சூழ்நிலையையும் உம்முடைய பிள்ளையாய் தைரியமாய் நான் அணுகும்படி எனக்கு உதவி செய்யும். பாதுகாப்பற்ற உணர்வோடு, ஒரு அனாதையைப்போல் நான் வாழ விரும்பவில்லை. இருண்டு கிடக்கின்ற இவ்வுலகத்தில், ஒரு வெளிச்சமாய் உம்முடைய தீர்க்கதரிசன வேதவசனங்களை உற்று நோக்கிப் பார்க்கும்படி எனக்கு உதவி செய்யும். பொழுது விடிந்து, என் இருதயத்தில் விடிவெள்ளி நட்சத்திரம் பிரகாசிக்கும்வரை, உம்முடைய வார்த்தையையே நோக்கிப் பார்க்கும்படி நான் தீர்மானிக்கிறேன். காரணம், இயேசு திரும்பி வருகின்றார் என்று அது என க்குச் சொல்கிறது. நான் அதைக் குறித்து உற்சாகமடைய விரும்புகிறேன்.*

*இன்றிலிருந்து, பார்க்கக்கூடிய காரியங்களின் மீது அல்ல, பார்க்க முடியாத நித்திய காரியங்களின் மீது என் கண்களைப் பதிக்கும்படி நான் தீர்மானிக்கிறேன். பார்க்கக்கூடிய காரியங்கள் தற்காலிகமானவை; பார்க்க முடியாத காரியங்கள் நித்தியமானவை என்பதை நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். நான் சீர்படுத்தப்பட வேண்டும், ஸ்திரப்படுத்தப்பட வேண்டும், பலப்படுத்தப்பட வேண்டும், நிலைநிறுத்தப்பட வேண்டும். என்னுடைய குணாதிசியத்தைக் கட்டியெழுப்புவதில் அக்கறையும், ஜாக்கிரதை உணர்வும் உள்ளவனாய் நான் செயல்பட எனக்கு உதவி செய்யும்.*

*இயேசுவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

387-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/31**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

## 10-ம் பாடம் >>

# அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 9
# சரீரத்தின் உயிர்த்தெழுதல்[4168]

### அறிமுகம்

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

“காலத்தின் முடிவு” என்ற முந்திய செய்தியில், நம்முடைய படிப்பை இந்தக் காலத்திலிருந்து நித்தியத்திற்குள், இந்த வாழ்க்கையிலிருந்து அடுத்த வாழ்க்கைக்குள், இந்த பூமியின் தளத்திலிருந்து ஆவிக்குரிய தளத்திற்குள் கொண்டு சென்றோம். செத்த கிரியைகளை விட்டு மனந்திரும்புதல், தேவன் மீதான விசுவாசம், ஞானஸ்நானங்களைக் குறித்த உபதேசங்கள் மற்றும் கைகளை வைக்குதல் என்ற முதல் நான்கு அஸ்திபாரப் போதனைகளும் இந்தக் காலத்தோடு சம்பந்தப்பட்டவைகளாய் இருக்கின்றன.

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய நியாயத்தீர்ப்பு என்பவை அஸ்திபாரம் போடுதல் என்ற செய்தித்தொடரின் கடைசி இரண்டு செய்திகளாயிருக்கின்றன. இவை மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் இருக்கின்றன. காரணம், இவை ஒரு நித்திய கண்ணோட்டத்தோடு நம்முடைய இப்பொழுதைய வாழ்க்கையை வாழும்படி நமக்கு உதவி செய்கின்றன.

பாரபட்சமற்ற விதத்தில், நேர்மையாக இன்றைய உலகத்தை நாம் பார்ப்போம் என்றால், சந்தோஷத்தைக் காட்டிலும் துயரம்தான் இங்கு அதிகமாக இருக்கின்றது என்ற முடிவுக்கு வருவோம். சமாதானத்தைக் காட்டிலும் பகைவைராக்கியம்தான் இங்கு அதிகமாக இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வோம். நல்ல உடல் ஆரோக்கியத்தைக் காட்டிலும் வியாதிகள்தான் இங்கு அதிகமாக இருக்கின்றது என்பதை மறுக்காமல் ஒத்துக் கொள்வோம். ஆகையால் இவ்வுலகத்தைக் குறித்த ஒரு அழகான படத்தை நாம் வரைய வேண்டும். காரணம், அது உண்மையல்ல. விழுந்துபோன ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது பாவத்தினால் கறைபட்டு, சீர்கெட்டு, சிதைந்துபோன ஒரு

உலகமாயிருக்கிறது. அந்த உலகத்தில்தான் இப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாகிய நமக்கு, இவ்வுலகம் நிரந்தர வீடு அல்ல என்ற உண்மைக்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

மரித்தோரிலிருந்து இயேசு உயிரோடெழுந்தார் என்பது நமக்குத் தெரியும். ஆனால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்ற இந்த அடிப்படைப் போதனையைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது? எது இங்கு உயிர்த்தெழுகின்றது? கிறிஸ்தவர்கள் மரிக்கும்போது, எங்கே செல்கின்றார்கள்? எத்தனை உயிர்த்தெழுதல்கள் இருக்கின்றன? இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு இருக்கும் முக்கியத்துவம் என்ன? அது நம்முடைய உயிர்த்தெழுதலைக் குறித்து நமக்கு என்ன சொல்கிறது? எல்லா விவரங்களையும் வேதாகமம் வெளிப்படுத்தவில்லை என்றாலும், உயிர்த்தெழுதலில் இருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்பதைக் குறித்த ஒரு தெளிவான படத்தை அது நமக்குக் கொடுக்கிறது. இந்தப் பாடத்தின் வழியாக அதற்குரிய நிபுணத்துவத்தோடு மிகவும் சிறந்த விதத்தில் நம்மை வழிநடத்தக்கூடிய ஒரு சில வேதாகமப் போதகர்களில் டெரிக் பிரின்ஸ்-ம் இருவர்.

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைக் குறித்து டெரிக் பிரின்ஸ் நமக்குக் கொடுக்கிற செய்தியை நாம் கேட்போம் அல்லது பார்ப்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இந்த வாழ்க்கை, தற்காலிகமானது. கிறிஸ்து இயேசுவின் மூலம் நாம் பெறுகின்ற நித்திய வாழ்க்கைதான் அதிக முக்கியத்துவம் கொண்டதாயிருக்கிறது. 'காலத்தின் முடிவு' என்ற கடந்த செய்தியின் மூலம், இந்த உண்மையைக் குறித்த விழிப்புணர்வு உங்களுக்குள் வளர்ந்திருக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. நம் நம்பிக்கை அவருக்குள் இருக்கின்றது. நித்தியத்தோடு சம்பந்தப்பட்ட விஷயங்களை அவருடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்க ஆரம்பித்து, அவற்றைக் கற்றுக் கொள்வோம் என்றால், அது நமக்கு மிகுதியான உற்சாகத்தைக் கொடுக்கும்.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

## *முன் உதாரணங்கள்*

*1. கிரேக்க மொழியில், உயிர்த்தெழுதல் என்றால் "ஒன்றை விட்டு வெளியே எழுந்து நிற்பது" என்று அர்த்தம். ஆகையால் ........................................ என்பது மரணத்தை விட்டும், பிரேதக்குழியை விட்டும் எழுந்து நிற்பதாகும்.*

*2. 1 தெசலோனிக்கேயர் 5:23-24 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: "சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்." இவ்வசனம் மனுஷனுடைய மூன்று பகுதிகளை வெளிப்படுத்துகிறது: ..............., ஆத்துமா, சரீரம்.*

*சரீரம்தான் மரிக்கின்றது; எனவே சரீரம்தான், தேவனால் உயிர்த்தெழச் செய்யப்படப் போகின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. ஆவியும், ஆத்துமாவும் ஒருபோதும் உயிர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. காரணம், அவை ஒருபோதும் மரணத்திற்குள் கடந்து செல்லப் போவதில்லை. ஆகையால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்று நாம் சொல்லும்போது, நம் சரீரத்தின் உயிர்த்தெழுதலைக் குறித்துதான் நாம் பேசுகிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

*3. ஐசுவரியவான் மற்றும் லாசருவைக் குறித்த ஒரு சம்பவம், லூக்கா 16:22-26 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. மரித்தவர்களைக் குறித்த பல விஷயங்களை அது நமக்கு வெளிப்படுத்துகிறது.*

*(அ) ........................................ மாறாமல் நிலைத்திருக்கிறது - அடையாளம் மாறவில்லை.*

*(ஆ) .................................... அடையாளம் காண முடியும் - ஐசுவரியவான் லாசருவை அடையாளம் கண்டுகொண்டான்.*

*(இ) இங்கே .......................... வாழ்ந்த வாழ்க்கையைக் குறித்து நினைவுகூர முடியும் - ஐசுவரியவான், பூமியில் தான் வாழ்ந்த வாழ்க்கையைக் குறித்து ஆபிரகாம் சொன்ன வார்த்தைகளை ஏற்றுக் கொண்டான்.*

*(ஈ) இப்பொழுதைய நிலையைக் குறித்த ...................... உண்டு - அக்கினி ஜீவாலையில் வேதனைப்படுவதென்றால் என்ன என்பதை ஐசுவரியவான் அறிந்திருந்தான்.*

*(உ) நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்கும் இடையே ஒரு பெரிய .................... இருந்தது - ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு ஒருவராலும் தாண்டிச் செல்ல முடியாது.*

*4. இயேசுவின் மரணத்திற்கு முந்திய நிலை என்ன?*

*(அ) எல்லா ஆத்துமாக்களும்,* **ஹேட்ஸ்** *என்று கிரேக்க மொழியிலும்,* **ஷியோல்** *என்று எபிரெய மொழியிலும் அறியப்பட்ட ஒரு இடத்திற்குச் சென்றன. கண்களால் பார்க்க முடியாத ஒரு உலகத்தில், இறந்தவர்களுடைய ...................... .............. சென்றடைகின்ற ஒரு இடத்தை இது குறிக்கின்றது.*

*(ஆ) ...................................., அநீதிமான்களுக்கும் இடையே தனித்தனியாக இரு வேறு இடங்கள் இருந்தன. நீதிமான்கள் ஆபிரகாமின் மடியிலே இருந்தனர்.*

*5. இயேசுவின் மரணத்தின்போது நிலை என்ன?*

*(அ) அவருடைய ................. பிதாவாகிய தேவனிடம் ஒப்புவிக்கப்பட்டது (லூக்கா 23:46).*

*(ஆ) அவருடைய ................. பாதாளத்திற்குள் (ஹேட்ஸ்/ஷியோல்) இறங்கியது (அப்போஸ்தலர் நடபடிகள் 2:31; 1 பேதுரு 3:18-19)*

*(இ) அவருடைய ....................... கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது (யோவான் 19:40-42).*

*6. இயேசுவின் உயிர்த்தெழுதலில், அவருடைய ...................., ஆத்துமாவும் அவருடைய சரீரத்துடன் திரும்பவும் ஒன்றாய் இணைந்தன.*

*7. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, நீதிமான் விசுவாசிகளுடைய முடிவு மாறி விட்டது. இப்பொழுது ஒரு விசுவாசியினுடைய ஆவி நேரடியாக .................. சென்று விடுகின்றது (அப்போஸ்தலர் நடபடிகள் 7:59; பிலிப்பியர் 1:23-24).*

*8. இயேசுவின் மரணம் மற்றும் ................................. இந்த முழு பிரபஞ்சத்தையும் பாதித்து விட்டது - அவரே மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவராய் இருக்கிறார். முற்றிலும் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிப்பின் தலையாய் அவர் இருக்கிறார். அவரே இந்தப் புதிய இனத்தின் தலையாயிருக்கிறார். இது தேவனும் மனுஷனும் இணைந்த ஒரு இனமாய் இருக்கிறது. இதில் தேவனுடைய சுபாவமும், மனுஷனும் ஒரு புதிய நபராய் ஒன்றாய் இணைந்திருக்கின்றனர்.*

*9. இயேசு ...................., கல்லறையையும் வென்று எழுந்தபோது, அவர் நீதிமான்களை ஹேட்ஸ் என்ற பாதாளத்திலிருந்து விடுதலையாக்கினார். அவர்கள் அவரோடு ஒன்றாய் சேர்ந்து மேலேறி, வரப் போகிற அறுவடையின் முதற்பலன்களாய், கதிர்களாய் பரலோகத்திற்குள் சென்றனர்.*

## இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு உத்தரவாதம் கொடுக்கிறது

*10. வேதவசனம், உயிர்த்தெழுதலை பிறப்போடு ஒப்பிட்டுச் சொல்கிறது (கொலோசெயர் 1:18).*

*(அ) இயேசு ............................ முதற்பிறந்தவர்.*

*(ஆ) இயேசுவே ....................... இருக்கிறார்.*

*(இ) சரீரம் ...................... குறிக்கின்றது - மெய்யான விசுவாசிகள் எல்லோரும் ஒருங்கே இணைந்த சரீரமாய் இது இருக்கின்றது.*

*(ஈ) ஒரு குழந்தை இயற்கையாக பிறக்கும்போது, முதலில் .............. வெளியே வரும். பிறகு சரீரம் அதைத் தொடரும்.*

மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டு, நம் வாழ்க்கையை இயேசுவுக்காக வாழும்படி ஒப்புக்கொடுத்திருக்கிற நாம், இந்தப் பூமியில் வாழ்கின்றோம்; இந்தப் பூமியிலுள்ள ஒரு தேசத்தின் குடிமக்களாய் நாம் இருக்கிறோம்; ஆனால் நம்முடைய மெய்யான குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது. இந்தப் பூமியில் ஒரு தேசத்தின் குடிமகனாய் நீங்கள் இருக்கின்றீர்கள் என்றால், இன்னொரு தேசத்திற்கு நீங்கள் பிரயாணிக்க விரும்புகின்றீர்கள் என்றால், உங்களிடம் பாஸ்போர்ட் இருக்க வேண்டும். பரலோகக் குடிமக்களாகிய நமக்கு, இயேசுவின் இரத்தம்தான் பாஸ்போர்ட்டாக இருக்கின்றது. இயேசுகிறிஸ்துவிடம் தன்னையே அர்ப்பணித்திருக்கிற ஒரு விசுவாசியின் ஒரு முக்கியமான அடையாளமாக வேதவசனம் எதைச் சொல்கிறது? அந்த நபர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பார் என்பதுதான் அது.

*11. இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் சரீரம், நம்முடைய உயிர்த்தெழுதலின் சரீரங்களுக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது (பிலிப்பியர் 3:20-21).*

*(அ) நம்முடைய .................. சரீரம், மகிமையான சரீரமாய் மாறும்.*

*(ஆ) அவருடைய ...................... ஒப்பாய் நாம் மாற்றப்படுவோம்.*

*(இ) இயேசுவின் உயிர்த்தெழுதலில், இப்படிப்பட்ட நம்பிக்கையை உடைய ஒவ்வொருவரும் தன்னைத்தானே ....... ................................. கொள்கிறார் (1 யோவான் 3:2-3).*

*(ஈ) அவருடைய உயிர்த்தெழுந்த சரீரம், இந்தக் .............. அல்லது இடத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதல்ல.*

*12. 1 கொரிந்தியர் 15:35-38 வசனங்களில், விதை மற்றும் மேனியின் மாதிரியைக் குறித்து நாம் கற்றுக் கொள்கின்றோம். இவ்விரண்டிலும் ஒரு தொடர்பும், மாற்றமும் இருக்கின்றது.*

*(அ) ........................., நம் சரீரம் ஒரு விதையாக விதைக்கப்படுகிறது.*

*(ஆ) ஒரு ......................... இருக்கின்றது. விதைக்கப்படுவதற்கும், அதிலிருந்து முளைத்து வளருகின்ற கனிக்கும் இடையே நேரடித் தொடர்பு இருக்கின்றது.*

*(இ) அங்கே ஒரு ........................ இருக்கின்றது - ஒரு ஆப்பிள் விதையை விதைக்கும்போது, அங்கே ஆப்பிள் மரம் வளருகின்றது. ஆனால் விதையும் மரமும் ரொம்பவே வித்தியாசமாக இருக்கின்றன.*

*(ஈ) சிலுவையில் அறையப்பட்ட அதே சரீரத்தோடுதான் .................. உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:38-39; யோவான் 20:20).*

*13. உயிர்த்தெழுதலின்போது, நம்முடைய அழிவுக்கேதுவான சரீரங்களில் ஐந்து முக்கியமான மாற்றங்கள் நடக்கும் (1 கொரிந்தியர் 15:42-44; 52-55). ஒரு முழுமையான படத்தை உருவாக்கும்படி, கீழ்க்காணும் கோடிட்ட பகுதிகளை நிரப்புக.*

| | அழிவுக்கேதுவான சரீரம் | உயிர்த்தெழுதலின் சரீரம் |
|---|---|---|
| 1 | சிதைந்து அழியக்கூடிய சரீரம் | ............................................ |
| 2 | மரணத்திற்கேதுவான சரீரம் | ............................................ |
| 3 | கனயீனமான சரீரம் | ............................................ |
| 4 | பெலவீனமான சரீரம் | ............................................ |
| 5 | ஜென்ம சரீரம் | ............................................ |

*14. இங்கு ஒவ்வொன்றும் இயேசுவின் ..................... மற்றும் உயிர்த்தெழுதலில் மையங்கொண்டிருக்கிறது. 1 கொரிந்தியர் 15:14 சொல்கிறது: "கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால், எங்கள் பிரசங்கமும் விருதா. உங்கள் விசுவாசமும் விருதா." 'வேதவாக்கியங்களின்படி' என்ற வார்த்தைதான், உயிர்த்தெழுதலுக்கு பிரதானமான சான்றாக இருக்கின்றது. புதிய ஏற்பாடு அப்பொழுது இன்னும் எழுதப்படவில்லை. எனவே இது பழைய ஏற்பாட்டு வசனங்களையே குறிக்கின்றது. சில எடுத்துக்காட்டுகளாக, சங்கீதம் 16:9-11 வசனங்களையும், ஓசியா 6:1-2 வசனங்களையும் வாசித்துப் பாருங்கள். இரண்டாவதாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மனுஷர்களும் சாட்சிகளாய் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அதை சாட்சி பகர்ந்திருக்கிறார்கள்.*

தீர்க்கதரிசனம், எதிர்கால நிகழ்வுகளை வெறுமனே முன்கூட்டியே கணிப்பதோடு நின்று விடுவதில்லை. அவற்றின் மெய்யான முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும் விதத்தில், அது அவற்றை முன் கூட்டியே கணிக்கின்றது. அது அவற்றை முன் கூட்டியே கணிப்பதோடு, அவற்றிற்கான விளக்கத்தையும் கொடுக்கின்றது. பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டை எபேசியர் 2-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடியும். 4-ம் வசனத்திலிருந்து இது ஆரம்பிக்கிறது. உண்மையான விசுவாசிகள் எல்லோரையும் குறித்து இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:

> *தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை.................*

இது ஆச்சரியமாயிருக்கிறது. நாம் மரித்துக் கிடந்த நிலையிலும் அவர் நம்மை நேசித்தார். மரித்துக் கிடக்கிற சடலத்தை எத்தனை பேர் நேசிப்பார்கள்? பிறகு அவர் எத்தனை காரியங்களைச் செய்தார்? மூன்று காரியங்கள்:

> *.........நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்...........கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.*

இதெல்லாம் கடந்த காலத்தில் நிகழ்ந்த ஒன்றாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவோடு நம்மை அடையாளம் காண்பதன் நிமித்தம், நாம் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறோம். நாம் உயிரோடு எழுந்திருக்கிறோம். அங்கேயே நின்று விடாதீர்கள். நாம் உன்னதங்களில் சிங்காசனத்தில் உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம். அதுதான் நம்முடைய இடம். அதுதான் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது, முன் குறிக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் நிகழப் போகிற ஒன்றாக பவுல் அதை எழுதவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர் எழுதியிருக்கிற வார்த்தைகளின் சாராம்சம் இதுதான்: உங்களால் இதை விசுவாசித்துப் பெற்றுக் கொள்ள முடியும் என்றால், இப்பொழுதே நீங்கள் கிறிஸ்துவோடு கூட சிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள் என்று அர்த்தம். அவர் அதைத்தான் இங்கு சொல்கிறார்.

## உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்

13. உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது. அதற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதற்கு சில குறிப்பிட்ட காரணங்கள் இருக்கின்றன:

(அ) அது .................... தேவனே பலமாய், பகிரங்கமாய் நிரூபித்த ஒரு நிகழ்வாயிருக்கிறது (ரோமர் 1:3-4).

(ஆ) நாம் ..........................., அதுவே அடிப்படையாயிருக்கிறது (ரோமர் 4:25; ரோமர் 10:9-10).

(இ) அது கிறிஸ்துவின் வல்லமை நம்மை இரட்சிக்கும் என்பதற்கு ....................................

(ஈ) அது நம்முடைய மீட்பின் ........................................ இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், நம்முடைய உயிர்த்தெழப் போகிற சரீரம்தான், நம்முடைய இரட்சிப்பை முழுமையடையச் செய்கிறது (பிலிப்பியர் 3:10-12).

(உ) அது .......................... உண்டாயிருக்கிற நம்முடைய ஐக்கியத்தின் முழு நிறைவேறுதலாய் இருக்கிறது. 1 தெசலோனிக்கேயர் 4:17 சொல்கிறது, "நாம் இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்." இனி அங்கே எவ்விதமான பிரிவும் இருக்காது.

16. தெளிவாய் தெரியக்கூடிய விதத்தில், உயிர்த்தெழுதல், மூன்று வெவ்வேறு கட்டங்களில் நடக்கின்றது. 1 கொரிந்தியர் 15:22-23 வசனங்கள், கிறிஸ்துவுக்குள் உயிரோடெழுப்பப்படுகிற ஒவ்வொருவரைக் குறித்தும் பேசுகின்றன. "கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்."

(அ) முதற்பலனானவர் .................... (லேவியராகமம் 23:10-11; மத்தேயு 27:51-53).

(ஆ) கிறிஸ்துவினுடையவர்கள் அவருடைய .......................... உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:16-17; வெளிப்படுத்தின விசேஷம் 20:4-5).

*(இ) மரித்தோரில் எஞ்சியிருப்போர் அனைவரும் கடைசி ............................ எழுந்திருப்பார்கள்.*

மெய்யாகவே இந்த இலக்கை நோக்கி நீங்கள் முன்னேறிச் செல்கின்றீர்களா? உங்களுடைய வாழ்க்கையின் காரியங்களுக்கு சரியான முன்னுரிமைகள் கொடுத்திருக்கிறீர்களா? நீங்கள் வாழ்கின்ற விதத்தைக் குறித்து, மனந்திரும்பும்படி, பரிசுத்த ஆவியானவர் உங்களை உந்தித் தள்ளுகின்றாரா? உங்களால் முடியும் என்றால், கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக முழங்கால்படியிடும் ஒரு இடத்தை இப்பொழுது கண்டுபிடியுங்கள். உங்களுடைய இருதயத்தை அவர் முன்பாக ஊற்றுங்கள். கீழ்க்காணும் ஜெபத்தைத்தான், டெரிக் தன்னுடைய செய்தியின் முடிவில் ஜெபித்திருந்தார். இந்த ஜெபத்தை மிகவும் கவனமாய் செய்யுங்கள். இந்த செய்தியைக் கேட்கிறவர்களுக்காக கர்த்தராகிய இயேசுவிடம் மிகவும் உருக்கத்துடன் டெரிக் செய்த ஜெபம், உங்களுடைய வாழ்க்கையிலும் பலனளிக்கும்.

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, எங்களுடைய இரட்சிப்பின் காரணராய் நீர் இருக்கின்றீர். மரித்தோரிலிருந்து முதற்பலனானவராய் நீர் உயிரோடு எழுந்தீர். நீர் பரலோகத்தில் எங்களுக்காக பரிந்து மன்றாடிக் கொண்டிருக்கிறீர். இப்பொழுது நீர் பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்து, எங்களுக்காக பரிந்து மன்றாடி ஜெபித்துக் கொண்டிருக்கிறீர். நீர் ஜீவிக்கிறீர். ஆகையால் நாங்களும் ஜீவிக்கின்றோம்.*

*கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரமாய் நிகழப் போகிற உம்முடைய வருகையைக் குறித்த வெளிச்சத்தில் வாழ வேண்டிய இவர்கள், அவ்விதத்தில் வாழவில்லை என்ற உணர்வோடு உமக்கு முன்பாக நிற்கின்றார்கள். நீர் இவர்களைக் காண்கிறீர். தேவனே, இயேசுவின் நாமத்தில், உம்முடைய ஆவியானவரை இவர்கள் மீது ஊற்றியருளும். தங்களுடைய இருதயங்களிலிருந்து உம்மை நோக்கி வாஞ்சையோடு கதறத்தக்கதாக, இவர்கள் மீது உம்முடைய கிருபை மற்றும் விண்ணப்பங்களின் ஆவியை ஊற்றியருளும். கர்த்தாவே, இவர்கள் உண்மையான இருதயத்தோடும், தாழ்மையோடும், உமக்கு பயப்படுகிற உணர்வோடும் ஜெபங்களை ஏறெடுப்பார்களாக. இயேசுவின் நாமத்தில், ஆவியானவரை அவர்கள் மீது ஊற்றியருளும். பரிந்து மன்றாடுகிற ஆவியானவரை அவர்கள் மீது ஊற்றும். கர்த்தராகிய இயேசுவே, ஓ தேவனே, எங்கள் மீது இரக்கமாயிரும்.*

உங்களுடைய இருதயத்தில் உள்ள எல்லாவற்றையும் ஊற்றும்வரை, தொடர்ந்து ஜெபியுங்கள். தம்முடைய சித்தத்திற்கு ஒத்திராத எதையாவது தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார் என்றால், முதலில், மனந்திரும்புங்கள். நடக்க வேண்டிய வழியை வெளிப்படுத்தும்படி, அவரிடம் ஜெபியுங்கள்.

'நித்திய நியாயத்தீர்ப்பு' என்ற அடுத்த பாடத்தில், ஆறாவது அஸ்திபாரப் போதனையை டெரிக் நமக்குப் போதிப்பார். அந்தப் பாடத்தோடு, 'அஸ்திபாரம் போடுதல்' என்ற செய்தித்தொடரை நாம் முடிப்போம்.

388-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/42**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# 11-ம் பாடம் >>
# அஸ்திபாரத்தைப் போடுதல் - பாகம் 10
# நித்திய நியாயத்தீர்ப்பு[4169]

## *அறிமுகம்*

**செய்தியை பார்ப்பதற்கு அல்லது கவனிப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

'அஸ்திபாரம் போடுதல்' என்ற செய்தித்தொடரின் கடைசி செய்திக்கு நாம் வந்திருக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்களுக்குள் ஒரு வாசஸ்தலத்தை கர்த்தராகிய இயேசுவுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதை கற்றுக் கொள்வதிலிருந்து இந்த செய்தித்தொடரை நாம் ஆரம்பித்தோம். இது உங்கள் நினைவிலிருக்கும். ஒரு கட்டிடத்தைக் கட்டியெழுப்புவதில், அஸ்திபாரம் எவ்வளவு முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றது என்பதையும் நாம் தொடர்ந்து கற்றுக் கொண்டோம். கட்டியெழுப்பப்படும் கட்டிடத்தின் எடையையும், அளவையும் அது தீர்மானிக்கிறது என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். ஒவ்வொரு கிறிஸ்தவரும் கட்டாயமாக இரண்டு அஸ்திபாரங்களைப் போட வேண்டும் என்று டெரிக் பிரின்ஸ் நமக்கு போதித்தார். ஒன்று, இயேசுவே அந்த அஸ்திபாரமாக இருக்கிறார். இன்னொன்று, எபிரெயர் 6:1-2 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற அஸ்திபார உபதேசங்களும் ஒரு அஸ்திபாரமாக இருக்க வேண்டும்.

ஏற்கனவே நாம் கற்றுக் க்ண்ட காரியங்களை இன்னொரு முறை திரும்பப் பார்ப்போம்:

1. தேவனுடைய வார்த்தையாய் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்து என்ற கன்மலையின் மீது நாம் நம்முடைய வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டோம்.

2. தேவனால் எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தின் அதிகாரம் மற்றும் வல்லமையைக் குறித்து கற்றுக் கொண்டோம்.

3. செத்த கிரியைகளை விட்டு மனந்திரும்ப வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டோம்.

**4.** தேவன் மீதான விசுவாசத்தைக் குறித்து அறிந்து கொண்டோம். அதோடு விசுவாசம் மற்றும் கிரியைகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தையும் புரிந்து கொண்டோம்.

**5.** தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம், எவ்வாறு இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு நம்மை வெளியரங்கமாய் அடையாளப்படுத்துகிறது என்றும் அது எவ்வாறு நம்மை தேவனுடைய ஜனங்களாய் முத்திரையிடுகிறது என்பதைக் கற்றுக் கொண்டோம்.

**6.** பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானத்தைக் குறித்துக் கற்றுக் கொண்டோம். அதன் மூலம், புது சிருஷ்டிகளாகிய நமக்கு எவ்வாறு அதிகாரமும், வல்லமையும் உண்டாகிறது, எவ்வாறு நாம் வளருகின்றோம் என்பதைப் புரிந்து கொண்டோம்.

**7.** தேவனுடைய வல்லமையை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கும்படி, ஒரு வழிமுறையாய் கைகளை வைக்குதல் இருக்கின்றது என்பதை நாம் கற்றுக் கொண்டோம்.

**8.** காலத்தின் முடிவு என்ற பாடம், நம்மை இந்தக் காலத்திலிருந்து நித்தியத்திற்குள் கொண்டு சென்றது. கண்களால் பார்க்க முடியாத மண்டலத்தில்தான், உண்மையான, நித்தியமான விஷயங்கள் காணப்படுகின்றன என்பதை கற்றுக் கொண்டோம்.

**9.** மரித்தோரின் உயிர்த்தெழுதல், குறிப்பாக, இந்த சரீர உயிர்த்தெழுதல், நம்முடைய மீட்பின் நிறைவேறுதலாய் இருக்கின்றது என்பதை அறிந்து கொண்டோம்.

இந்தப் பாடத்தில், நித்திய நியாயத்தீர்ப்பைக் குறித்து வேதவசனங்கள் என்ன சொல்கின்றன என்பதை நாம் கற்றுக் கொள்வோம். எத்தனை நியாயத்தீர்ப்புகள் இருக்கின்றன, யார் எந்த நியாயத்தீர்ப்பில் நிற்பார்கள், நியாயத்தீர்ப்பின் அடிப்படை என்ன என்பவைகளையும், இன்னும் அதிகமான விஷயங்களையும் குறித்து நாம் அறிந்து கொள்வோம்.

நித்திய நியாயத்தீர்ப்பு என்ற செய்தியை கேட்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

டெரிக் இதைக் குறித்து போதிக்கும்போது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்ற முக்கியமான நிகழ்வு உங்களை பயமுறுத்துகிறதா? உண்மை என்னவென்றால், இந்த நியாயத்தீர்ப்புகளெல்லாம் நிச்சயம் நடக்கப் போகின்றன. வேறு எதுவும் இதைத் தடுத்து நிறுத்த முடியாது. காரணம், தேவன் அதை தீர்மானித்து, தம்முடைய வார்த்தையில் எழுதி வைத்திருக்கிறார். கடைசி நியாயத்தீர்ப்பைக் குறித்து கற்றுக் கொள்வதற்கு ஜனங்கள் வித்தியாசமான விதத்தில் எதிர்வினையாற்றலாம். ஆனால் நாம் நம்மையே தேவனுக்கு முன்பாக தாழ்த்தி, வேதாகமத்தை உண்மையாய் கற்றுக் கொள்வோம் என்றால், மிகவும் முக்கியமான இந்தப் பாடத்தைக் குறித்து நமக்குள் உண்டாகும் முன்னறிவு, இப்பொழுது ஒரு சரியான வாழ்க்கையை வாழ திறன் உள்ளவர்களாய் நம்மை உருவாக்கும். பின்ன ர் வருத்தப்பட வேண்டிய அவசியமும் அங்கு இருக்காது.

நீங்கள் ஒரு விளையாட்டை விளையாடுவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அதன் விதிமுறைகள் எதுவும் உங்களுக்குத் தெரியாது அல்லது ஒரு விளையாட்டுப் போட்டியில் நீங்கள் பங்கெடுக்கின்றீர்கள். ஆனால் எதன் அடிப்படையில் வெற்றி தோல்வி அதில் தீர்மானிக்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியாது. முடிவில், உங்களுடைய ஸ்கோரைப் பார்ப்பீர்கள் என்றால், அது உங்களுக்கு மோசமான ஒரு ஏமாற்றத்தைத்தான் கொடுக்கும். “வெற்றி, தோல்வி எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பதை நான் முன் கூட்டியே அறிந்திருந்தேன் என்றால், நிச்சயம், நான் இதை வித்தியாசமாக விளையாடியிருப்பேன்,” என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள்.

அந்தக் காரணத்தினால்தான், நாம் எவ்வாறு நியாயந்தீர்க்கப் படுவோம் என்று தேவன் வேதாகமத்தில் நமக்காக எழுதி வைத்திருக்கிறர். அப்பொழுது நம்மால் அதற்கேற்ற விதத்தில் இந்த பூமியில் நம் வாழ்க்கையை வாழ முடியும். இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, இந்தப் பூமியில் தேவனுடைய வழிகளைப் பின்பற்றி வாழ்கின்றவர்களுக்கு நியாயத்தீர்ப்பு என்பது மிகவும் நல்ல ஒரு விஷயமாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவன் நமக்கு விதித்ததை நாம் பின்பற்றி செயல்படுத்துவோம் என்றால், நியாயத்தீர்ப்பின் நாள் நமக்கு

மிகவும் மகிமையான ஒரு நாளாக இருக்கும். ஆனால் இந்தப் பாடத்தில் நாம் கற்றுக் கொண்ட படி, இந்தப் பிரிவில் பொருந்தாதவர்களுக்கு அந்த நாள், மிகவும் பயங்கரமான ஒரு நாளாக இருக்கும்.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

## *நித்திய நியாயத்தீர்ப்பு*

*1. எபிரெயர் 9:27-ம் வசனம், நாம் எல்லோரும் நியாயந்தீர்க்கப்படுவோம் என்று தெள்ளத் தெளிவாக நமக்குப் பேசுகிற ஒரு வேதவசனமாயிருக்கிறது. இது சொல்கிறது: "ஒரே தரம் மரிப்பதும், பின்பு ..........................................................., மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.*

*2. வேதாகமத்தில் இரண்டு வகையான நியாயத்தீர்ப்புகளைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது.*

*(அ) ......................... நிகழ்ந்த நியாயத்தீர்ப்புகள். இவை அடுத்தடுத்த தலைமுறையினர் மீது தேவனுடைய ஆசீர்வாதமாகவோ அல்லது தண்டனையாகவோ வந்தது. குறிப்பாக, விக்கிரக ஆராதனையின் நிமித்தம் (யாத்திராகமம் 20:4-6), அக்கிரமத்தின் நிமித்தம் (எரேமியா 32:18), நீதியின் நிமித்தம் (சங்கீதம் 103:17-18) உண்டானவைகளாய் இருந்தன.*

*(ஆ) ......................... நிகழப் போகும் நியாயத்தீர்ப்புகள். இதில் ஒவ்வொரு தனி நபரும் தன் வாழ்க்கையைக் குறித்து கணக்கு ஒப்புவிப்பார் (எசேக்கியேல் 18:1-4, 20).*

*3. நாம் எவ்வாறு நியாயந்தீர்க்கப்படுவோம் என்று தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்த ஐந்து முக்கியமான கோட்பாடுகளை ரோமர் 2:1-16 வசனங்கள் முன்னிலைப்படுத்தி சொல்கின்றன.*

*(அ) ........................படியே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (1-2 வசனங்கள்).*

*(ஆ) ............................ தக்கதாக, நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (6-ம் வசனம்). 1 பேதுரு 1:17-ம் வசனமும் இதைத் தெளிவாகப் பேசுகிறது: "அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிற வரை நீங்கள் பிதாவாக தொழுதுகொண்டு வருகின்றீர்கள்."*

*இந்தக் கிரியைகள், பரலோகத்தின் சுருள்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 20:12).*

*(இ) "தேவனிடத்தில் பட்சபாதமில்லை," என்று ரோமர் 2:11 சொல்கிறது. ஆனால் கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் இது இன்னும் சிறப்பாக எழுதப்பட்டிருப்பதை டெரிக் சுட்டிக் காண்பித்தார்: "................................. தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல." வேதாகமம் முழுவதிலும், இந்த வார்த்தைகள் 11 முறை வருகின்றன.*

*(ஈ) அவரவர் பெற்றுக் கொண்ட .............................. அளவின்படி, ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (12-ம் வசனம்). மத்தேயு 11:20-24 வசனங்களையும் வாசித்து ஒப்பிட்டுப் பாருங்கள்.*

*(உ) நியாயத்தீர்ப்பு, நம்முடைய ............................ சிந்தனை களையும், நோக்கங்களையும் உள்ளடக்கியிருக்கும்.*

## *நியாயத்தீர்ப்பைத் தொடரும் காட்சிகள்*

*கிறிஸ்தவ விசுவாசிகளின் மீது வரும் நியாயத்தீர்ப்பு*

*4. நியாயத்தீர்ப்பின் முதல் முக்கியமான காட்சி, கிறிஸ்துவின் நியாய சிங்காசனத்திற்கு முன்பாக நிகழப் போகும் ............................ விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பாயிருக்கும். 1 பேதுரு 4:17 சொல்கிறது: "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால், தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" ரோமர் 14:10-12 வசனங்களையும், 2 கொரிந்தியர் 5:10-ம் வசனத்தையும் கூட வாசித்துப் பாருங்கள்.*

நம்முடைய செயல்கள், ஒன்று, நல்லவையாக இருக்கும் அல்லது தீயவையாக இருக்கும்; அவை இந்த இரண்டு பிரிவுகளுக்குள் மட்டுமே அடங்கும் என்று இந்த செய்தித்தொடரில் முன்பே டெரிக் சொல்லியிருக்கிறார். இவற்றுக்கு இடைப்பட்ட நிலை என்று எதுவுமில்லை. ஒரு செயல், நல்ல செயலாக இல்லையென்றால், அது கெட்ட செயலாகத்தான் இருக்கும். "என்னோடு இராதவன் எனக்கு எதிராக இருக்கிறான்," என்று இயேசு மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

இடைப்பட்ட நடுநிலை என்பதை இயேசு முற்றிலுமாய் தவிர்த்து, அதை வெளியேற்றி விட்டார்.

சபைகளில் இன்றைக்கு நிறைய பேர் வேலியில்தான் அமர்ந்திருக்கின்றனர். இது வருந்தத்தக்கது. வேலியில் அமர்ந்திருத்தல் என்றால் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா? ஒப்புக்கொடுத்தலைச் செய்வதற்கு எந்த விருப்பமும் இல்லாமல் இருக்கின்ற நிலையைத்தான் இது குறிக்கின்றது. அவர்கள் இந்தப் பக்கத்திலும் இல்லை, அவர்கள் அந்தப் பக்கத்திலும் இல்லை. அவர்கள் நல்லது செய்யவில்லை. ஆனால் அவர்கள் தீமையானதைச் செய்கின்றார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

ஒரு சபைக்குள் பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அவர் செய்கின்ற முதல் வேலை இதுதான். அந்த வேலியின் மீது அவர் மின்சாரம் பாய்ச்சுகிறார்! அது நடக்கும்போது, ஒன்று, நாம் அந்தப் பக்கம் குதிப்போம் அல்லது இந்தப் பக்கம் குதிப்போம். ஆகையால்தான் நிறைய பேர் பரிசுத்த ஆவியானவரை வரவேற்பதில்லை. காரணம், அவர் அவர்களுடைய நடுநிலைமையை ஒழித்து விடுகிறார். பரிசுத்த ஆவியான வரிடம் இப்படிப்பட்ட நடுநிலைமை எதுவும் இல்லை.

*5. கிறிஸ்தவ விசுவாசிகள் மீது வரும் நியாயத்தீர்ப்பில் ஐந்து முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன என்று வேதாகமம் நமக்கு வெளிப்படுத்துகிறது. அவற்றுள் முதல் மூன்று அம்சங்களை, 2 கொரிந்தியர் 5:10-ல் நாம் காண முடியும்.*

*(அ) இது ................................ மீது வரும் நியாயத்தீர்ப்பு. நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் நம் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*

*(ஆ) இது ........................ செய்யப்படுகிற கிரியைகளோடு தொடர்புடையதாயிருக்கிறது.*

*(இ) இரண்டு வகையான கிரியைகள்தான் இருக்கின்றன: ஒன்று, நல்லவை அல்லது தீயவை. மூன்றாம் வகை என்று எது வுமில்லை..............,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,......... என்று எதுவுமில்லை.*

*(ஈ) இது .................................... ஏதுவாய் இராது - வேதாகமம் இதைக் குறித்து வலியுறுத்திப் பேசுகிறது. இதோடு தொடர்புடைய சில வேதவசனங்களை வாசித்துப் பாருங்கள்: யோவான் 3:18; யோவான் 5:24 மற்றும் ரோமர் 8:1.*

*(உ) இது நாம் செய்த ......................... மதிப்பீடு செய்கிற நிகழ்வாயிருக்கிறது (1 கொரிந்தியர் 3:11-15). நம்முடைய கிரியைகள் அக்கினியினால் சோதிக்கப்படும். எவ்வளவு நிறைய செய்திருக்கிறோம் என்பதல்ல, தேவன் எதிர்பார்க்கிற தரத்தில் செய்திருக்கிறோமா என்பதுதான் இதில் முக்கியம்.*

*6. நம் கிரியைகள் அக்கினி சோதனையில் நிலைத்து நிற்க வேண்டும் என்றால், மூன்று நிபந்தனைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது:*

*(அ) நம்முடைய ............................ சரியானதாய் இருக்க வேண்டும். நாம் தேவனுடைய மகிமையை நாட வேண்டும் (1 கொரிந்தியர் 10:31).*

*(ஆ) நாம் தேவனுடைய வார்த்தைக்குக் ........................... வேண்டும் (மத்தேயு 7:21-27).*

*(இ) நாம் பரிசுத்த ஆவியானவரின் ............................ வாழ வேண்டும் (ரோமர் 15:18-19).*

*7. நியாயத்தீர்ப்பின் மாதிரிகளை வெளிப்படுத்தும்படி, இயேசு ஒரே மாதிரியான இரண்டு உவமைகளை சொன்னார். ஒன்று, ராத்தல்கள் உவமை (லூக்கா 19:11-27). இன்னொன்று, தாலந்துகள் உவமை (மத்தேயு 25:14-30). இவ்விரண்டு உவமைகளிலும், நியாயத்தீர்ப்பைக் குறித்த சில முக்கியமான விஷயங்கள் காணப்படுகின்றன.*

*(அ) இந்த ............................ நம்முடைய பணி எப்படி இருக்கிறதோ, அதுதான் அடுத்த வாழ்க்கையில் நம்முடைய நிலையைத் தீர்மானிக்கிறது.*

*(ஆ) "ஒரு ...................." பெற்றவர்கள்தான் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றார்கள். சிறந்த யுக்தி, அதை பலன் கொடுக்கிற இன்னொரு ஊழியத்தில் முதலீடு செய்வதுதான்.*

*(இ) தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ...................... பயன்படுத்தாமல் இருப்பது, கடைசியில் அவற்றை நாம் இழக்கும்படி செய்து விடும் (லூக்கா 19:26).*

*(ஏ) அந்த ஸ்தானத்தில் இருந்தும், .................. செய்யாமல் இருப்பது பாவம் (யாக்கோபு 4:17).*

*(உ) இரண்டு உவமைகளிலும், ஒன்றுமே செய்யாதவன் முற்றிலும் ................................ - நிராகரிக்கப்பட வேண்டும் என்றால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஒன்றுமே செய்யாமலிருப்பதுதான். இது கடுமையாக நம்மை எச்சரிக்கின்றது.*

**இஸ்ரவேல் மீது வரும் நியாயத்தீர்ப்பு**

அடுத்த நியாயத்தீர்ப்பு, தேவனால் வேறுபிரிக்கப்பட்ட விசேஷமான ஜனங்களாகிய இஸ்ரவேல் ஜனங்கள் மீது வரும் நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. கடந்த பல நூற்றாண்டுகளில், அவர்கள் பல முறை தேவனுக்கு விரோதமாய் முரட்டாட்டம் செய்தார்கள், தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை, தேவனுக்கு முன்பாக உண்மையாய் வாழவில்லை. ஆனாலும் தேவன் அவர்களை என்றென்றைக்குமாய் நிராகரித்து விடவில்லை. இஸ்ரவேலிடம் பேசும்போது, சாமுவேல் இவ்வாறு சொல்கிறார். 1 சாமுவேல் 12:22-ஐ வாசித்துப் பாருங்கள்:

> *கர்த்தர் உங்களை தமக்கு ஜனமாக்கிக் கொள்ளப் பிரியமான படியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தின் நிமித்தம் தமது ஜனங்களைக் கைவிட மாட்டார்.*

இஸ்ரவேலின் நீதியின் நிமித்தம், தேவன் இதை இஸ்ரவேலுக்குச் செய்யவில்லை. மாறாக, கர்த்தர் தம்முடைய நாமத்தின் நிமித்தம், அவருடைய நாமம் மகிமைப்படும்படி, அவர் இதைச் செய்கிறார். தேவன் இஸ்ரவேலை விசேஷமான விதத்தில் நடத்தப் போகிறார்.

*8. தேவன் .......................... நேரடியாக ஆசீர்வதிக்கின்றார். ஆனால் புறஜாதியாரை யூதர்கள் மூலம் ஆசீர்வதிக்கின்றார். புறஜாதியாராகிய நாம் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதமும், யூதர்கள் மூலம் வந்தது. நாம் யூதர்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம்.*

*9. தேவன் .............................. நேரடியாக நியாயந்தீர்க்கிறார். ஆனால் யூதர்களை புறஜாதியார் மூலம் நியாயந்தீர்க்கிறார். யூதர்களின் பல நூற்றாண்டுகால வரலாற்றை நீங்கள் திரும்பிப் பார்ப்பீர்கள் என்றால், இஸ்ரவேலின் கீழ்ப்படியாமை மற்றும் உண்மையற்ற வாழ்க்கையின் நிமித்தம், தேவன்*

*தொடர்ந்து புறஜாதி தேசங்களைப் பயன்படுத்தி, இஸ்ரவேலை நியாயந்தீர்த்ததை நீங்கள் அங்கே பார்க்க முடியும்.*

*10. எந்த அரசாங்கம் என்ன நினைத்தாலும், எந்த அரசியல்வாதி என்ன நினைத்தாலும், அது ஒரு பொருட்டல்ல. தேவன் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபுக்குக் கொடுத்த தேசத்தை .......................... நிச்சயம் சுதந்தரிக்கப் போகின்றது. வேதாகமத்தில் 47 இடங்களில், அந்த தேசத்தை தம்முடைய ஜனங்களுக்குக் கொடுப்பேன் என்று தேவன் ஆணையிட்டுக் கொடுப்பதை நாம் வாசிக்க முடியும் (எடுத்துக்காட்டிற்கு எரேமியா 30:3-7 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

*11. எரேமியா 30:5-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது: "கர்த்தர் சொல்கிறது என்னவென்றால், தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம். திகிலுண்டு, ..................... இல்லை." நம் கண்களுக்கு முன்பாக, வரலாற்றில் இது படிப்படியாக வெளிப்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இஸ்ரேல் தங்களுடைய தேசத்தை சமாதானமாய் சுதந்தரித்துக் கொண்டிருக்கவில்லை. எல்லாப் பக்கங்களிலிருந்தும் அதற்கு பலத்த எதிர்ப்புகள் வருகின்றன.*

*12. எரேமியா 30:7 சொல்கிறது: "ஐயோ! அந்த நாள் பெரியது. அதைப் போல் ஒத்த நாளில்லை. அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம். ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்." ஒன்றை இதில் முக்கியமாக கவனிக்க வேண்டும். ......................... இல்லாதபடி, இஸ்ரவேல் இரட்சிக்கப்படாது. மாறாக, அதன் வழியாகக் கடந்து சென்று இரட்சிக்கப்படும். தேவன் யூதர்கள் மீது தம் நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துவார். உபத்திரவத்தின் முடிவில், அவர்களுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறியிருக்கும்.*

**புறஜாதி தேசங்களின் மீது வரும் நியாயத்தீர்ப்பு**

விசுவாசிகள் மற்றும் இஸ்ரவேல் மீது நியாயத்தீர்ப்பு நிகழ்ந்த பிறகு, தேவன் மற்ற தேசங்களை நியாயந்தீர்ப்பார். யோவேல் **3:1-2** சொல்கிறது:

> *இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும், அக்காலத்திலும்......*

யூதர்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பி வரும் அதே

காலகட்டத்தில்தான் இது நடக்கின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும். தேவன் சொல்கிறார்:

> *நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கி போகப் பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும், இஸ்ரவேல் என்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக் கொண்டதன் நிமித்தம் ........ அங்கே அவர்களோடு வழக்காடுவேன் (அங்கே அவர்களை நியாயந்தீர்ப்பேன்).*

ஆக, யூதர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொடுத்த பிறகு, புறஜாதிகளை நியாயந்தீர்ப்பேன் என்று தேவன் சொல்கிறார். அவர் புறஜாதிகளை ஒரு அடிப்படையில் நியாயந்தீர்ப்பார். அவர்கள் எவ்வாறு இஸ்ரவேலை நடத்தினார்களோ, அதன் அடிப்படையில் அவர் செய்வார். இது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு உண்மையாயிருக்கிறது.

*13. புறஜாதி தேசங்களுக்கு எதிராக தேவன் இரண்டு குற்றச்சாட்டுகளை வைக்கின்றார்.*

*(அ) முதல் குற்றச்சாட்டு: அவர்கள் ........................ ஒடுக்கினார்கள்.*

*(ஆ) இரண்டாவது குற்றச்சாட்டு: அவர்கள் அந்த தேசத்தை ............................. அல்லது பங்கிட்டுக் கொண்டார்கள். “அது என் தேசம். நான் அதை இஸ்ரவேலுக்குக் கொடுத்தேன்,” என்று தேவன் சொல்கிறார். இது உண்மையாயிருக்கும்போது, அந்த தேசத்தைப் பங்கிடுவதற்கு எந்த ஒரு மனுஷனுக்கும், எந்த ஒரு தேசத்தின் அரசாங்கத்திற்கும் உரிமையோ, அதிகாரமோ இல்லை. ஆனால் இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? அந்த தேசம் பங்கிடப்படக்கூடாது என்பதை தேவன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த தேசம் பங்கிடப்பட்டிருக்கிறது, பங்கிடப்பட்டுக் கொண்டிருக்கிறது, பங்கிடப்படும். எனவே தேவன் நியாயத்தீர்ப்பில் வெளிப்படும்போது, அந்த தேசத்தை பங்கிட்டுக் கொண்ட மற்ற தேசங்களை அவர் நியாயந்தீர்ப்பார்.*

*14. தேசங்களை நியாயந்தீர்க்கும்படி இயேசு வருவார் என்பதைக் குறித்து மத்தேயு 25:31-46 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது.*

*(அ) ............................... தேசங்கள், தேவனுடைய ராஜ்யத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*(ஆ) .............................. தேசங்கள், தேவனுடைய ராஜ்யத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அவை நித்திய ஆக்கினைக்குள் அனுப்பப்படும். இயேசுவின் சகோதரர்களை அவர்கள் எவ்வாறு நடத்தினார்கள் என்பதுதான், அவர்கள் பிரிக்கப்பட்ட விதத்திற்கான அடிப்படைக் கோட்பாடாயிருக்கிறது. இது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாகும். இன்றைக்கு இவ்வுலகத்தில் நடந்து கொண்டிருக்கிற விவகாரங்களில், இஸ்ரேல் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றது. பல தேசங்கள், தவறான எதிர்த்திசையில் அணி வகுத்து நிற்கின்றன. இஸ்ரேலால் தன்னைத்தானே காத்துக் கொள்ள முடியாது. ஆனால் கூடிய சீக்கிரத்தில் நேரம் வரும். தேவன் தலையிடுவார்.*

**மரித்தோரில் எஞ்சியிருப்போரின் மீது வரும் நியாயத்தீர்ப்பு**

*15. நான்காவதாக நடக்கப் போகிற கடைசி நியாயத்தீர்ப்பு, பெரிய ............................ சிங்காசனத்திற்கு முன்பாக நடக்கும். இதைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. புஸ்தகங்களில் அவர்களுடைய வாழ்க்கையைக் குறித்து என்ன எழுதப்பட்டிருக்கிறதோ, அதன் அடிப்படையில் மரித்தோரில் சிறியோர், பெரியோர் எல்லோரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.*

*16. ஜீவ புஸ்தகம் என்ற இன்னொரு புத்தகமும் இருக்கிறது. அதற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். ........... புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிற அனைவரும் தேவனோடு நித்தியத்திற்குள் நுழைவார்கள். மற்றவர்கள் எல்லோரும் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து என்றென்றைக்குமாய் பிரிக்கப்பட்டவர்களாய், நித்திய ஆக்கினைக்குள் நுழைவார்கள்.*

நியாயத்தீர்ப்பில் நான்கு முக்கியமான படிநிலைகள் காணப்படுகின்றன. இவை தொடர்ச்சியாய், ஒன்றன் பின் ஒன்றாக நடக்கின்றது. அதை இவ்வாறு தொகுத்துச் சொல்லலாம்:

1. கிறிஸ்துவின் நியாய சிங்காசனத்திற்கு முன்பாக, கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களுடைய சரீரத்தில் செய்த கிரியைகளின் நிமித்தம் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

2. மகா உபத்திரவத்தின் வழியாக, இஸ்ரவேல் நியாயந்தீர்க்கப்படும்.

3. கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு முன்பாக, புறஜாதி தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும். இஸ்ரவேலைக் குறித்த அவர்களுடைய அணுகுமுறையின் அடிப்படையில், அதாவது இஸ்ரவேலை அவர்கள் எவ்வாறு நடத்தினார்களோ அதன் அடிப்படையில் இந்த நியாயத்தீர்ப்பு நடக்கும். இது ஆயிரம் வருட ஆரம்பத்தில் நிகழும்.

4. மரித்தோரில் எஞ்சியிருப்போர் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இது பெரிய வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக நடக்கும்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பில் பல கோட்பாடுகள் இருக்கின்றன. இப்பொழுது நாம் ஒவ்வொருவரும் நம்மையே ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்: "தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளும்படி நான் ஆயத்தமாக இருக்கின்றேனா? நான் அவருக்கு முன்பாக நிற்கப் போகின்ற நாளில், நான் வெட்கப்பட்டுப் போகாதபடி, அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை இங்கு நான் வாழ்கின்றேனா?

நித்திய நியாயத்தீர்ப்பைக் குறித்த தன்னுடைய போதனையின் முடிவில், டெரிக் ஒரு ஜெபத்தை ஜெபித்தார். கீழ்க்காணும் பகுதியில், நீங்கள் அதைத்தான் வாசிக்கிறீர்கள். உங்களுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து கர்த்தராகிய இயேசுவை நோக்கி இந்த ஜெபத்தை ஜெபியுங்கள். "கர்த்தாவே, அவர்கள் மறைத்து விடாதபடி," என்று டெரிக் சொல்கிற இடத்தில், "கர்த்தாவே, நான் மறைத்து விடாதபடி," என்று சொல்லி ஜெபியுங்கள்.

*சர்வ வல்ல தேவனே, உம்முடைய வார்த்தை மிகவும் தெளிவாயிருக்கிறது. உம்முடைய வார்த்தையை உம்முடைய ஜனங்களுக்கு இன்று இரவு நாங்கள் போதித்திருக்கிறோம். இப்பொழுது நான் இங்கு கூடியிருக்கிற ஒவ்வொரு நபருக்காகவும் ஜெபிக்க விரும்புகிறேன். வேதாகமத்திலிருந்து நேரடியாக எடுக்கப்பட்ட வார்த்தைகளை நான் பேசியிருக்கிறேன். இந்த வார்த்தைகள், இவர்களுடைய இருதயத்தின் ஆழத்தில் இறங்கட்டும். தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை*

*ஆராய்ந்து பார்க்கும்படி இவர்களில் பலர் ஆவியானவரால் நடத்தப்பட்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.*

*ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்ட நபர்களுக்காக நான் மிகவும் குறிப்பாக ஜெபிக்கின்றேன். கர்த்தராகிய இயேசுவே, அவர்கள் அந்தத் தாலந்தை நிலத்திற்குள் புதைத்து மறைத்து விடாதபடி நடத்தும். நீர் வரும்போது, உமக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போன நிலையில் அவர்கள் நில்லாதபடி, வங்கியாளர்களிடம் அதை அவர்கள் டெபாசிட் செய்ய உதவும். கர்த்தராகிய இயேசுவே, நீர் சீக்கிரமாய் வருவீர் என்று பல முறை எங்களிடம் சொல்லியிருக்கிறீர். நீர் சீக்கிரமாய் வருகின்றீர். உம்முடைய வருகைக்காக நாங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று இந்தக் கூட்டங்களில் கூட, எங்களை நீர் பல முறை எச்சரித்திருக்கிறீர்.*

*இங்கிருக்கிற ஒவ்வொருவருக்காகவும், எனக்காகவும் நான் ஜெபிக்கின்றேன். உம்முடைய வருகைக்கு நாங்கள் ஆயத்தமாகும்படி எங்களுக்குக் கிருபை தாரும். கிறிஸ்துவின் நியாய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்க ஆயத்தப்படும்படி எங்களுக்கு கிருபை தாரும். எங்கள் சரீரத்தில் நாங்கள் செய்கிற கிரியைகளுக்கு சரியானபடி கணக்கு ஒப்புவிக்க, எங்களுக்கு கிருபை தாரும். கர்த்தாவே, உம்முடைய நாமத்தின் நிமித்தம், எங்கள் மீது இரக்கமாயிரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றோம். ஆமென்.*

'அஸ்திபாரம் போடுதல்' என்ற செய்தித்தொடரின் முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம். இந்த பத்து செய்திகள் மூலம், கிறிஸ்தவ விசுவாசத்தின் பல முக்கியமான திறவுகோல் சத்தியங்களை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஆழமாய் தோண்டி அஸ்திபாரம் போடும்படி இவை நமக்கு பெலனையும், திறனையும் தந்திருக்கிறது. இயேசு எனும் கன்மலையின் மீது அஸ்திபாரம் போடுவதற்கு அது நமக்கு உதவுகிறது. கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்கு மிகவும் அதிகமான மகிமையைக் கொண்டு வரத்தக்க விதத்தில், அவருடைய வாசஸ்தலமாய் நாம் மாறும்படி, நாம் தொடர்ந்து கட்டியெழுப்புவோம்.

389-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/33**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# சாபத்திலிருந்து விடுதலை என்ற பாடத்திற்கான அறிமுகம்

ஆசீர்வாதம் அல்லது சாபம்: நீங்கள் தேர்ந்தெடுக்கலாம் என்ற டெரிக் பிரின்ஸ் புத்தகத்தின் அறிமுகப் பகுதியில், நாம் இதை வாசிக்கின்றோம்:

*1970-ம் வருடங்களில், ஒரு சிலர் முன் ஒருபோதும் கேள்விப்பட்டிராத, ஆச்சரியமான, வாழ்க்கையையே மாற்ற க்கூடிய போதனையை வேதாகமத்திலிருந்து எடுத்து, விசுவாசிகளுக்கு வெளிப்படுத்த ஆரம்பிக்கிறார். இது முழுவதும் வேதவசனத்தின் அடிப்படையிலானது. இது தேவன் ஆசீர்வதித்த ஒரு செய்தியாகும். ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களைக் குறித்த ஒரு செய்தியாய் இது இருக்கிறது.*

*வியப்பையும், அதிர்ச்சியையும் ஒருசேரக் கொடுக்கக்கூடிய இந்த வெளிப்பாட்டை அவர் தொடர்ந்து, இன்னும் விரிவடையச் செய்து, ஆவிக்குரிய ஆழமான நுண்ணறிவைப் பெற்று, அடுத்த முப்பது வருடங்களாக போதித்துக் கொண்டு வருகின்றார். இந்தப் போதனை, இறையிலாளர்கள் மற்றும் போதகர்களின் பல தலைமுறையினர்களை மிகவும் வல்லமையாகப் பாதித்திருக்கிறது. இன்னும் முக்கியமாக, உலகமெங்கும் வாழ்கின்ற நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஒரு சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கு இரு ஒரு எளிமையான திறவுகோலாக இருந்திருக்கிறது.*

உலகளாவிய விதத்தில், ‘ஆசீர்வாதம் அல்லது சாபம்’ என்பது, டெரிக்கின் மிகவும் பிரபலமான போதனைகளில் ஒன்றாயிருக்கிறது. இது நிறைய எண்ணிக்கையிலான ஜனங்களுடைய வாழ்க்கையில் வல்லமையான மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. கலாத்தியர் 3:13-14 வசனங்கள், இந்தப் போதனையைப் புரிந்து கொள்வதற்கு ஒரு திறவுகோல் வசனங்களாக இருக்கின்றன: “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம், கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.”

சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் மரணத்தின் மூலம், சாபத்திலிருந்து விடுதலையாவதற்கான ஒரு வழியை தேவன் முன்னே ற்பாடாக செய்து வைத்திருக்கிறார். டெரிக் அதை ஒழுங்காக, படிப்படியாக வெளிப்படுத்துகிறார்.

- ❖ ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் தன்மைகள்
- ❖ ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் வெளிப்படும் வடிவங்கள்
- ❖ ஒரு சாபத்தின் கீழ் வாழ்வதற்கான அறிகுறிகள்
- ❖ ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களுக்கான வேதாகமக் காரணங்கள்
- ❖ அதிகார உறவின்முறையார் மூலம் வருகின்ற சாபங்கள்
- ❖ சாபங்களிலிருந்து எவ்வாறு விடுதலையாவது
- ❖ உங்களுடைய விடுதலையை எவ்வாறு பற்றிப் பிடித்துக் கொள்வது

உங்களுடைய வாழ்க்கையில் இந்தப் போதனையைப் பின்பற்றி, பயன்படுத்தும்போது, அது வல்லமையான மாற்றங்களை உங்களுடைய வாழ்க்கையில் உண்டாக்கும். ஆகையால் இந்தத் தொடரின் செய்திகளை கவனமாய் கேளுங்கள். கர்த்தர் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார் என்று ஆதியாகமம் **24:1** சொல்கிறது. உங்களையும் தேவன் எல்லா சாபங்களிலிருந்தும் விடுதலையாக்கி, ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள் கொண்டு வருவார் என்ற நிச்சயமான விசுவாசத்தோடு இந்தத் தொடர் செய்திக்குள் நுழையுங்கள்.

*பாடம் பன்னிரண்டு>>*

# சாபத்திலிருந்து விடுதலை - பாகம் 1[4285]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இந்த வேதபாட வழிகாட்டியின் முதல் செய்தி, 'சிலுவையில் நிகழ்ந்த தெய்வீகப் பரிமாற்றம்', இந்தப் பாடத்தையும், ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் என்ற அடுத்த பாடத்தையும் குறித்து பேசியது. நாம் ஆபிரகாமின் ஆசீர்வாதத்தைப் பெற்று அனுபவிக்கும்படி, இயேசு சாபத்தை ஏற்றுக் கொண்டார் என்ற வார்த்தைகளை நினை வுகூருங்கள்.

கலாத்தியர் 3:13-14 வசனங்களில் நாம் இதை வாசிக்கின்றோம்: 'மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம், கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று." ஆதியாகமம் 24:1-ம் வசனம் இவ்வாறு நமக்குச் சொல்கிறது: "கர்த்தர் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்." ஆகையால் சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் தியாக பலி மரணத்தின் மூலம், நாம் 'ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை' பெறுகின்றோம் என்று கலாத்தியர் 3-ம் அதிகாரத்தில் வாசிக்கும்போது, ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆசீர்வாதம், நம் வாழ்க்கையின் சகல விஷயங்களையும் பாதிக்கின்றது என்பதுதான் அது.

டெரிக் மூலம், சபைக்கு கர்த்தர் வெளிப்படுத்திய இந்தப் போதனை, டெரிக்கின் போதனைகளில் மிகவும் விரும்பிக் கேட்கப்படுகிற ஒரு போதனையாக இவ்வுலகம் முழுவதும் தொடர்ந்து இருந்து வருகின்றது. இந்தச் செய்தி, இதைக் கேட்கிறவர்களுடைய வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு மிகவும் முக்கியமான மாற்றங்களை உண்டாக்குகிறது.

நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலையாகக் கூடிய ஒரு வழியை, ஒரு முன்னேற்பாட்டை இயேசு நமக்காக ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இந்தச் சத்தியத்தைப் புரிந்து கொள்வதில் நாம் வளருவோம். ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி, நாம் இதைத் தழுவிக் கொள்வோம்.

## *முடிவு மற்றும் கேள்விகளும்*

**இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு அல்லது பார்த்த பிறகு, இப்பகுதி வாசிக்கப்பட வேண்டும்; கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டும்.**

ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள், வேதவசனத்தின் இரண்டு முக்கியமான சத்தியங்களாக இருக்கின்றன. 'ஆசீர்வாதம்' என்ற வார்த்தை, கிட்டத்தட்ட அறுநூறு முறை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. 'சாபம்' என்ற வார்த்தை, கிட்டத்தட்ட எண்ணிக்கையில் அதில் பாதி தடவை எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் தன்மையைக் குறித்த ஒரு தெளிவான புரிதல், பெரும்பாலானோரிடத்தில் இல்லை என்பதுபோலத்தான் தெரிகின்றது.

கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிற மீட்பின் மூலம், நாம் சாபங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கமாயிருக்கிறது. ஆனால் ஆசீர்வாதங்களை சந்தோஷமாய் அனுபவிக்க வேண்டிய தேவனுடைய ஜனங்களில் பெரும்பாலானோர், சாபங்களின் கீழ் வேதனையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## *பின் வரும் கோடிட்ட இடங்களை நிரப்புக:*

## *ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் தன்மை*

*1. ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள், இவ்விரண்டும் ......... ................................................................ வல்லமையைச் சுமந்து செல்லும் வாகனங்களாயிருக்கின்றன. அவை ஆசீர்வாதங்கள் என்றால், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட நன்மைகளையும், அவை சாபங்கள் என்றால், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட தீமைகளையும் உடையவைகளாயிருக்கின்றன. இதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம்.*

2. ஆசீர்வாதமோ அல்லது சாபமோ, அதன் ஒரு முக்கியமான தன்மை, அவை பெரும்பாலும் ஒரு ...................... .................... இன்னொரு தலைமுறைக்குக் கடந்து செல்கின்றது என்பதுதான். சாபங்களைக் குறித்த விஷயத்தில், அவற்றின் தொடர்பை எவ்வாறு துண்டிக்க வேண்டும் என்பதை ஒருவர் அறிந்து அதன்படி செயல்படும்வரை, அவை தொடர்ந்து சென்று கொண்டேதான் இருக்கும்.

3. .................................. வழக்கமாக, ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களைச் சுமந்து செல்கிற வாகனங்களாக இருக்கின்றன. அவை பேசப்பட்ட, எழுதப்பட்ட, உள்ளுக்குள் பேசப்பட்ட வார்த்தைகளாக இருக்கின்றன.

4. ஆசீர்வாதம் மற்றும் சாபம், இவ்விரண்டையும் பண்ட பரிமாற்றமாகச் (பொருள் பரிமாற்றமாகச்) செய்ய முடியும். திருப்பந்தியில் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் கொடுப்பதுபோல, ஆசீர்வாதத்தை பரிமாற்றம் செய்ய முடியும். பழைய ஏற்பாட்டில், வேசித்தனத்தை சோதித்து உறுதி செய்யும்படி, மண்பாண்டத்தில் கொடுக்கப்பட்ட கசப்பான ஜலம் போல, சாபத்தையும் பரிமாற்றம் செய்ய முடியும். மந்திர மாயங்களோடு சம்பந்தப்பட்ட பொருட்கள் யாரிடம் இருக்கின்றதோ, அவற்றின் சாபம், அவர்கள் மீது வரும். இது இன்னொரு எடுத்துக்காட்டு.

5. ஆசீர்வாதம், சுகம் மற்றும் செழிப்பிற்கு ........................... தடையாய் இருக்கின்றன என்பதை மூன்று தனிப்பட்ட எடுத்துக்காட்டுகள் மூலம், டெரிக் விளக்கிக் காண்பித்தார்.

## ஆசீர்வாதம் மற்றும் சாபம் எடுக்கக்கூடிய வடிவங்கள்

6. பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற உபாகமம் 28-ம் அதிகாரத்தை இரண்டு வெவ்வேறு பகுதிகளாக பிரித்துப் பார்க்கலாம். முதல் பதினான்கு வசனங்கள், கர்த்தருடைய .... .................................. நாம் கவனமாய் கீழ்ப்படிந்தால், நம் மீது வரக்கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்து நமக்குச் சொல்கிறது. மாறாக, தேவனுடைய சத்தத்தை நாம் கேட்கத் தவறும்போது, நம் மீது வரக்கூடிய சாபங்களைக் குறித்து எஞ்சியிருக்கிற ஐம்பத்தி நான்கு வசனங்கள் நமக்குச் சொல்கின்றன.

*7. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஏழு ஆசீர்வாதப் பகுதிகளைக் குறித்து இங்கு பார்ப்போம்:*

*(அ) .................... - சூழ்நிலைகளின் கீழ் வாழாமல், மேலே உயர்த்தப்படுகிற வாழ்க்கைமுறை.*

*(ஆ) கனி கொடுத்தல் - வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ................. நிறைந்தவர்களாய் வாழ்தல்.*

*(இ) நம்முடைய சரீரம், மனம் மற்றும் நம் ஆவியில் நல்ல ........................................ வாழ்தல்.*

*(ஈ) ........................ அல்லது நல்வாழ்வு வாழ்வீர்கள் - நிறைய பணம் இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய தேவைகள் சந்திக்கப்படும்படி போதுமான அளவு உங்களிடம் இருக்கும். மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளத்தக்கதாகவும் உங்களிடம் இருக்கும்.*

*(உ) நீங்கள் எல்லாவற்றையும் மேற்கொண்டு, ................. ...............*

*(ஊ) நீங்கள் வாலாயிராமல், ............................. - அதாவது நீங்கள்தான் தீர்மானம் எடுக்கிற நபராக இருப்பீர்கள். நீங்கள் அங்குமிங்கும், மற்றவர்களுடைய தீர்மானங்களினால் அலைக்கழிக்கப்பட மாட்டீர்கள்.*

*(எ) நீங்கள் கீழாகாமல், ................................*

*நம்முடைய வாழ்க்கையில் காணப்படும் சாபங்களை இனங்கண்டறியக்கூடிய ஒரே நிபுணர், பரிசுத்த ஆவியானவர் மட்டுமே. அவர்தான் அதை தனிப்பட்ட விதத்தில் நமக்கு வெளிப்படுத்த வேண்டும். பொதுவான கோட்பாடுகளை நாம் கற்றுக் கொண்டாலும், பரிசுத்த ஆவியானவரிடமிருந்து தனிப்பட்ட பயன்பாட்டையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*8. ஆசீர்வாதங்களுக்கு அப்படியே நேரெதிரான ஏழு முக்கியமான சாபங்களைப் பார்ப்போம்:*

*(அ) .................................... என்பது தாழ்மையிலிருந்து வித்தியாசமானது. உண்மையில், நாம் நம்மையே தாழ்த்தவில்லை என்றால், நாம் அவமதிக்கப்பட்டு, தாழ்த்தப்படுவோம்.*

(ஆ) ..................... கொடுக்கத் தவறுதல் அல்லது மலட்டுத்தன்மை.

(இ) எல்லா வகையான ..................... - உபாகமம் 28-ம் அதிகாரத்திலுள்ள பட்டியலில் ஒரு வியாதியும் விடப்படவில்லை.

(ஈ) ..................... அல்லது தோல்வி. ஒரு சோதனையாக, குறுகிய காலத்திற்கு பற்றாக்குறையோடு வாழலாம். ஆனால் நீண்ட காலத்திற்கு அப்படி வாழ்ந்தால், அது சாபம்.

(உ) ......................... - சத்துருவாகிய பிசாசின் கையில் சிக்கியிருக்கின்ற நிலை.

(ஊ) தலையாயிராமல், ......................... இருத்தல்.

(எ) மேலாயிராமல், .............................. இருத்தல்.

## சாபத்தின் கீழ் வாழ்வதற்கான அறிகுறிகள்

9. டெரிக் பிரின்ஸ் தொடர்ந்து செய்த தன் ஊழியத்தில், ஒரு சாபத்தின் கீழ் ஒருவர் இருப்பதற்கான சாத்தியத்தை வெளிப்படுத்தக்கூடிய அறிகுறிகளை பட்டியலிட்டார். ஒரு அறிகுறி இருப்பதை வைத்து, நீங்கள் ஒரு சாபத்தின் கீழ் இருக்கின்றீர்கள் என்று அர்த்தமல்ல என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். ஆனாலும் உங்களுடைய சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். உண்மை நிலையை வெளிப்படுத்தும்படி, தேவனிடம் ஜெபிக்க வேண்டியதும் அவசியம். உங்களுடைய வாழ்க்கையில், பல அறிகுறிகள் காணப்படுவதை நீங்கள் கவனிக்கின்றீர்கள் என்றால், நீங்கள் ஒரு சாபத்தின் கீழ் இருப்பதற்கு நிறைய சாத்தியக்கூறுகள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஏழு அறிகுறிகளின் பட்டியல் இதோ:

(அ) மனரீதியாக அல்லது .............................. உடைந்து போகுதல் - ஜனங்கள் மனரீதியாக அல்லது உணர்வுரீதியாக நொறுங்கிப் போகிற ஒரு நிலையாய் இது இருக்கிறது.

(ஆ) திரும்பத் திரும்ப அல்லது அடிக்கடி வரும் ......................... - சாபங்கள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடந்து செல்கின்றபடியால், இது பரம்பரை

*வியாதியாக இருக்கலாம். இவ்விஷயத்தில் இது குறிப்பாக, உண்மையாயிருக்கிறது. சில சூழ்நிலைகளில், வியாதிக்கான காரணத்தை மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியாமல் போய் விடுகிறது.*

*(இ) மலட்டுத்தன்மை, ............................ உண்டாகிற நிலை அல்லது மாதவிடாயில் வரும் பிரச்சனைகள்.*

*(ஈ) ...................................... முறிவு. குடும்ப உறவுகளில் பிரிவினை உண்டாகுதல். குடும்பத்தில் பிரிவினை - குடும்பங்கள் பிளவுபட்டு காணப்படுகிற சூழ்நிலைகளையும், திருமண உற வுகள் முறிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலைகளையும், பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட சூழ்நிலைகளையும், பிள்ளைகள் ஒருவர் மற்றவரிடமிருந்து பிரிக்கப்பட்ட சூழ்நிலைகளையும் இதன் கீழ் கொண்டு வரலாம். இது பெரும்பாலும் சாபம் கிரியை செய்கிறது என்பதற்கான ஒரு அறிகுறியாகும்.*

*(உ) ........................................... பற்றாக்குறை நிலை - தேவன் சில நேரங்களில் பற்றாக்குறை சூழ்நிலையின் மூலம் நம்மைச் சோதிக்கிறார். அதுவும் குறுகிய காலத்திற்கு மட்டுமே. ஆனால் எப்பொழுதுமே உங்களுக்கு பற்றாக்குறை சூழ்நிலைதான் காணப்படுகிறது என்றால், ஒவ்வொரு மாதமும் குடும்பச் செலவுகளை உங்களால் சமாளிக்க முடியவில்லை என்றால், சாபம் அங்கே வேலை செய்கிறது என்பதற்கு இது வலிமையான ஒரு அறிகுறியாயிருக்கிறது.*

*(எ) நிறைய ...................... நடக்கின்ற சூழ்நிலை - எப்பொழுதுமே நிறைய விபத்துக்கள் உங்களுக்கு நடக்கின்றதா?*

*(ஏ) குடும்பத்தில் நிறைய ............................, அகால மரணங்களும், இயற்கைக்கு மாறான மரணங்களும் நடக்கின்ற சூழ்நிலை. உங்களுடைய குடும்பத்தில் இப்படிப்பட்ட மரணங்கள் நிறைய நடக்கின்றதா?*

*இந்தப் பட்டியலில் இல்லாத இன்னும் நிறைய விஷயங்கள், ஒரு சாபத்தின் விளைவாக உண்டாகக்கூடியவைகளாக இருக்கின்றன. ஆனால் அவை பல வித்தியாசமான நபர்களுடன் கொண்டிருக்கிற உறவின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன.*

ஒரு சாபம் என்பது தீங்கு செய்யும் ஒரு நீண்ட கரமாக கடந்த காலத்திலிருந்து வந்திருக்கலாம். அது எவ்வளவு தூரம் பின்னால் இருந்து தாக்குகிறது என்பதை நீங்கள் அறியாதிருக்கலாம். அது வெளியே நீட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும், நீங்கள் வெற்றியை அடையும் அந்த நேரத்தில், நீங்கள் செல்ல விரும்பும் உயரத்தை அடைகின்ற அந்த நேரத்தில், இந்தத் தீங்கின் கரம், உங்களைத் தடுமாறி விழச் செய்கின்றது. நீங்கள் திரும்பவும் எழுந்து, முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் திரும்பவும் கடினமாய் முயற்சித்து, அந்த உயரத்தை அடைகின்ற நேரத்தில், நீங்கள் திரும்பவும் தடுமாறி விழச் செய்யப்படுகின்றீர்கள். இதுதான் உங்களுடைய வாழ்க்கையின் நிலையாயிருக்கிறது. பலருடைய வாழ்க்கையிலும் இதுதான் நடக்கின்றது என்பதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். பல நேரங்களில் நிறைய பேர் இவ்வாறு சொல்வார்கள்: "இதேதான் என் அப்பாவுக்கும் நடந்தது, என் தாத்தாவுக்கும் நடந்தது. இப்பொழுது இது என க்கும் நடக்கின்றது."

இன்னொரு எளிமையான படத்தையும் பார்க்கலாம். கடந்த காலத்திலிருந்து ஒரு இருண்ட நிழல் உங்களுடைய வாழ்க்கையின் மீது படர்ந்திருக்கிற ஒரு நிலை. தேவனுடைய ஆசீர்வாதம் எனும் சூரிய வெளிச்சத்தை இது மறைக்கின்றது. மற்றவர்கள் இந்த சூரிய வெளிச்சத்தில் வாழ்வதை நீங்கள் பார்க்கின்றீர்கள். அது அங்கே இருக்கின்றது, அது உண்மை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் எப்பொழுதாவது அரிதாகத்தான் சூரிய வெளிச்சம் உங்கள் மீது முழுமையாக, பிரகாசமாகப் படுகின்றது. இவற்றுள் ஏதாவது ஒன்று உங்களுக்குப் பொருந்தும் என்றால், டெரிக்கின் செய்தியை நாம் மறுஆய்வு செய்கின்ற இந்நேரத்தில், நீங்கள் தேவனை நாடித் தேட வேண்டும். குறிப்பாக, உங்களுடைய தேவை என்ன, உங்களுடைய பிரச்சனை என்ன, அதற்கான தீர்வு என்ன என்பதை பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குக் காண்பிக்கும்படி ஜெபியுங்கள்.

## ஆசீர்வாதங்கள், சாபங்கள்: வேதாகமக் காரணங்கள்

*10. நீதிமொழிகள் 26:2-ல், இதை எழுதியவர் ஒரு முக்கியமான குறிப்பை வெளிப்படுத்துகிறார். அவர் சொல்கிறார்: “அடைக்கலான் குருவி அலைந்து போவதுபோலும், தகைவிலான் குருவி பறந்து போவதுபோலும், காரணமில்லாமல் இட்ட சாபம் தங்காது.” வேறு வார்த்தைகளில் இதை இப்படிச் சொல்லலாம். ஒரு சாபம் இருக்கிறதென்றால், அதற்கு நிச்சயம் ஒரு .......................... இருக்க வேண்டும். ஏதோ ஒன்று அதற்குக் காரணமாக இருக்கின்றது. ஆகையால் சாபத்திலிருந்து விடுதலையாவதற்கு முன், அதற்கான காரணத்தைக் கண்டறிந்து செயல்பட வேண்டியது அவசியம். சில நேரங்களில், இது அத்தியாவசியமானதாக இருக்கிறது. பெரும்பாலும், இது உதவிகரமாய் இருக்கின்றது.*

உபாகமம் 28-ம் அதிகாரத்திற்குச் செல்வோம். ஆசீர்வாதமோ, சாபமோ அதற்கான பிரதான காரணம் அங்கே எழுதப்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக, இது மிகவும் எளிமையானதாக இருக்கிறது. உபாகமம் 28:1-2 வசனங்களை வாசிப்போம்:

> *இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும்.*

“கவனமாய் கீழ்ப்படிவாயானால்” என்றுதான் பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு, “உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு நீ கவனமாய் செவிகொடுப்பாயானால்........” என்று சொல்கிறது. எபிரெய மொழியில், இந்தச் சொற்றொடர், செவிகொடுத்தல் என்ற வார்த்தையைத் திரும்பச் சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிறது. “நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு மிகவும் கவனமாய் தொடர்ந்து செவிகொடுத்து (இது மிகவும் முக்கியமாக இங்கு வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது),

அவர் என்ன சொல்கிறாரோ, அதைச் செய்வீர்கள் என்றால்...." என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆக, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் பிரதானமான காரணம்: தேவனுடைய சத்தத்திற்கு கவனமாய் செவிகொடுத்து, அவர் சொல்வதைச் செய்ய வேண்டும் என்பதுதான். இதை நாம் மிகவும் எளிமையாக, சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

சாபங்கள் எல்லாவற்றிற்கும் பிரதான காரணமானது, அப்படியே இதற்கு நேரெதிராக இருக்கின்றது. இதே அதிகாரத்தின் 15-ம் வசனத்தை வாசிப்போம்:

> *இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லா கற்பனைகளின்படியும், கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்கு செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன் மேல் வந்து, உனக்குப் பலிக்கும்.*

*11. தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுப்பதால் ............................... உண்டாகும்.*

*12. தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கத் தவறுவதால் ................................ உண்டாகும்.*

*13. சாபங்களுக்கு வேறு வகையான குறிப்பிட்ட காரணங்களும் இருக்கின்றன. அவை வேறு விதமான வித்தியாசமான வழிகள் மூலமாகவும் வருகின்றன. அவற்றைக் குறித்தும் வேதாகமம் பேசுகின்றது. நாம் பொதுவானவைகளைக் குறித்துப் பார்த்தோம். குறிப்பிட்ட ஒரு சில விஷயங்களை இங்கே பார்ப்போம்:*

*(அ) தேவன் ஜனங்கள் மீது சாபத்தைக் கூறுவதற்கான முக்கியக் காரணங்கள், முதல் இரண்டு கட்டளைகளை மீறுவதே ஆகும்: தேவனுக்கு மேலே அல்லது அவருக்கு இணையாக மற்ற தெய்வங்களை வழிபடுதலும், விக்கிரக ஆராதனையும், பில்லிசூனியம் மற்றும் மாய மந்திரக் கிரியைகளும் இதில் உள்ளடங்கியிருக்கிறது. இந்தக் கட்டளைகளை மீறுவதால் உண்டாகும் சாபம், மூன்றாம் நான்காம் தலைமுறைவரைக்கும் செல்கின்றது.*

*(ஆ) உபாகமம் 27:15-26 வசனங்களில், பன்னிரண்டு சாபங்கள் உரத்த சத்தமாய் அறிவிக்கப்படுவதைக் குறித்து நாம்*

வாசிக்கின்றோம். வாக்குப் பண்ணப்பட்ட தேசத்திற்குள் இஸ்ரவேல் ஜனங்கள் நுழையும்போது, அவர்கள் இந்த ......... ................................ தங்கள் மீதே அறிவிக்க வேண்டியிருந்தது. அவர்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவில்லை என்றால், அவர்கள் தாமாகவே இந்தச் சாபங்களின் கீழ் வந்து விடுவார்கள். இதைச் செய்யாமல், அவர்கலால் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைய முடியாது. இது தேவனோடு நமக்கு உண்டாகிற உறவிலும் பொருந்துகிறது. நாம் கீழ்ப்படிவோம் என்றால், நாம் ஆசீர்வாதங்களின் கீழ் வருகின்றோம். மாறாக, நாம் கீழ்ப்படியவில்லை என்றால், சாபங்களின் கீழ் வரக்கூடிய மெய்யான ஆபத்திற்குள் நாம் சிக்கிக் கொள்வோம்.

உபாகமம் 27:15-ம் வசனத்திலும், அதைத் தொடர்ந்து வருகின்ற வசனங்களிலும், எழுதப்பட்டிருக்கிற பன்னிரண்டு சாபங்களை இங்கே தொகுத்துப் பார்ப்போம்:

(இ) ......................................... - பொய்யான தெய்வங்களை வழிபடுகிறவர்கள்.

(ஈ) ......................................... கனயீனம் செய்கிறவர்கள் - நம்முடைய பெற்றோருடன் எல்லா விஷயங்களிலும் ஒத்துப் போக முடியாமல் போகலாம். ஆனால் நாம் அவர்களை கனம் பண்ண வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இது அவருடைய கட்டளையாயிருக்கிறது. இதை நம்முடைய நன்மைக்காக அவர் செய்கிறார்.

(உ) தன் ....................... செய்யும் நம்பிக்கைத் துரோகம் - நீதிமொழிகள் 17:13 சொல்கிறது: "நன்மைக்கு தீமை செய்கிற வன் எவனோ, அவன் வீட்டை விட்டு தீமை நீங்காது."

(ஊ) பெலவீனர்களுக்கும், உதவியற்றவர்களுக்கும் .................. செய்தல் - கருக்கலைப்பு செய்கிறவர்கள் இதற்கு பிரதானமான ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். இதன் நிமித்தம், இவர்கள் சாபத்தின் கீழ் வருகின்றார்கள். தேவன் இதற்கு ஒரு தீர்வைத் தந்திருக்கிறார். நாம் தேவனுக்கு நன்றி சொல்வோம்.

(எ) இயற்கைக்கு முரண்பட்ட, முறையற்ற ..........................., குறிப்பாக, தன் குடும்பத்தாரில் ஒருவரோடு, எடுத்துக்காட்டிற்கு,

*தகப்பன் மகளோடு, பிள்ளைகள் ஒருவர் மற்றவரோடு தவறாக பாலியல் உறவு கொள்ளுதல்.*

*(ஏ) ஆன்டி-...................... (யூதர்களுக்கு எதிரான விரோதப்போக்கு) - ஒரு தனிநபரோ அல்லது ஒரு தேசமோ இப்படிப்பட்ட சிந்தையோடு செயல்படும்போது, அவர்கள் மீது சாபம் உண்டாகிறது. கடந்த 19 நூற்றாண்டுகளில் நிகழ்ந்த வரலாற்றைச் சிந்தித்துப் பாருங்கள். யூதர்களை சபித்த ஒவ்வொரு தேசமும், சாபத்தின் கீழ் வந்ததை நீங்கள் பார்க்க முடியும்.*

*(ஐ) எரேமியா 17:5-6 வசனங்களை வாசித்துப் பாருங்கள்: ''மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதை தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற ......... ............................. மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்கிறார்.'' தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட கிருபையையும், ஆசீர்வாதத்தையும் இந்த மனுஷன் அறிந்திருந்தான். ஆனால் பிறகு இவன் தன் சொந்த மாம்ச பெலத்தையும், தன் சொந்த முயற்சிகளையும் சார்ந்து, பின் வாங்கி விட்டான் (கலாத்தியர் 3:1-14 வசனங்களை வாசித்துப் பாருங்கள்).*

*(ஒ) சகரியா 5:1-4 வசனங்களை வாசித்துப் பாருங்கள். சகரியா ஒரு தரிசனத்தைக் கண்டான். அதில் அவன் ஒரு பறக்கும் சுருளைக் காண்கிறான். அதன் இரு பக்கத்திலும், ஒரு சாபம் எழுதப்பட்டிருந்தது.*

*(1) அதன் ஒரு பக்கத்தில் இருந்த சாபம், ......................... மீது வந்தது.*

*(2) அதன் இன்னொரு பக்கத்தில் இருந்த சாபம், .......... ............................. மீது வந்தது. தரிசனத்தில், இந்தச் சுருள் ஒரு நபருடைய வீட்டிற்குள் சென்று, அங்கேயே தங்கி விடும். முழு குடும்பமே சிதறி விடும். இதுதான் ஒரு சாபத்தின் தன்மையாய் இருக்கிறது. அது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் பாதிப்பதில்லை. மாறாக, அதைச் சுற்றியிருக்கிற எல்லாவற்றையும் அரித்து, அழிக்கக்கூடிய தன்மை உடையதாயிருக்கிறது.*

*(ஓ) தேவனை வஞ்சித்தல் அல்லது தேவனுக்குரியதைத் திருடுதல் (மல்கியா 3:8-10). ...................................... செலுத்த வேண்டிய கடமை கிறிஸ்தவர்களுக்கு இருக்கிறது என்று டெரிக் இங்கு போதிக்கவில்லை. மாறாக, தேவனுடைய கிருபையின் கீழ் வாழ்வது, நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்வதைக் காட்டிலும் நம்மை அதிக தாராள இருதயமுள்ளவர்களாய் உருவாக்கியிருக்க வேண்டும். தேவனிடம் கஞ்சத்தனமாய் நடந்து கொண்டால், அது நம்மை சாபத்தின் கீழ் கொண்டு வரும். அது மிகவும் மோசமான தரித்திரத்திற்கு நேராக நம்மை நடத்தும். காரணம், நம்மிடம் இருக்கும் எல்லாம், தேவனிடமிருந்தே வந்தது. நாம் இலவசமாய் கொடுப்பதை, பல மடங்கு நமக்கு திருப்பிக் கொடுக்க, தேவன் வல்லவராயிருக்கிறார்.*

*(ஔ) சுவிசேஷத்தின் பெயரில் எதையாகிலும் பிரசங்கித்தால், அது சுவிசேஷத்தின் சத்தியத்தை தவறாக வழிநடத்தக்கூடிய விதத்தில் எடுத்துச் சொல்வதாகி விடும் (கலாத்தியர் 1:8-9).*

சாபங்களின் கீழ் நாம் ஏன் வரக் கூடும் என்பதற்கான பல்வேறு காரணங்களை இந்தச் செய்தியில், டெரிக் நமக்குப் போதித்திருக்கிறார். பத்து கட்டளைகளில் முதல் இரண்டோடு தொடர்புடைய சாபங்கள் நான்காம் தலைமுறைவரை தொடரும் என்ற சத்தியத்தை எண்ணிப் பார்க்கும்போது, தங்களுடைய **30** முன்னோர்களில் ஒருவர் கூட மந்திரவாதம், விக்கிரக ஆராதனை மற்றும் பில்லிசூனியக் கிரியைகளில் ஈடுபட்டதில்லை என்று வெகு சிலரால் மட்டுமே சொல்ல முடியும்.

இந்தப் பாடத்தின் வழியாக, நாம் பிரச்சனையைப் பார்க்க ஆரம்பித்திருக்கிறோம். நம் முன்னோர்கள் செய்த பாவம்தான் அதற்குக் காரணம், நம் மீது எந்தத் தவறும் இல்லை என்றாலும், மென்மையான இருதயத்தோடு, நாம் தான் மனந்திரும்ப வேண்டும். அதுதான் இந்தப் பிரச்சனைக்கு தீர்வாயிருக்கும். நாம் ஜெபிக்கும்போது, பிரச்சனையின் வேர் எங்கே இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும்படி, பரிசுத்த ஆவியானவரிடம் நாம் கேட்க வேண்டும். அப்பொழுது அந்தப் பாவத்தை அறிக்கை செய்து, நம் வாழ்க்கையின் மீது, நம் குடும்பத்தின் மீது, நம் தொழிலின் மீது, நம் சபையின் மீது, நம் தேசத்தின் மீது காணப்படுகிற சாபத்தை நம்மால் உடைத்தெறிய முடியும்.

இந்தச் செய்தியை ஆரம்பித்தபோது, இயேசு கிறிஸ்துவின்

சிலுவையின் மூலம் இந்தத் தீர்வை தேவன் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்திருக்கிறார் என்பதை நாம் கற்றுக் கொண்டோம். கலாத்தியர் 3:13-14 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: "(சிலுவை) மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று." ஆதியாகமம் 24:1-ம் வசனம் இவ்வாறு நமக்குச் சொல்கிறது: "கர்த்தர் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்." ஆக, சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் தியாக பலி மரணத்தின் மூலம், ஆபிரகாமின் ஆசீர்வாதத்தைப் பெறுகின்றோம் என்று கலாத்தியர் 3-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும்போது, அது நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்கின்றோம்.

இந்தத் தொடரின் இரண்டாவது செய்தியை நாம் கேட்கப் போகிறோம். ஒவ்வொரு சாபத்திலிருந்தும் நாம் எவ்வாறு விடுதலையாக்கப்பட முடியும் என்பதைக் குறித்த ஒரு முழுமையான புரிதல் நமக்கு உண்டாகும்படி, ஜெபிப்போம்.

*அன்பு நிறைந்த கர்த்தராகிய இயேசுவே,*

*ஒரு புதிய வெளிச்சத்தை நீர் எனக்குக் கொடுத்திருக்கிறீர். உமக்கு நன்றி. என் வாழ்க்கையில் எதிர்மறையான, அழிவின் விளைவை உண்டாக்கக்கூடிய சாபத்தை தயவு செய்து எனக்கு வெளிப்படுத்தும். என் குடும்பத்தின் மீதும், என் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றவர்கள் மீதும் இருக்கக்கூடிய சாபங்களை எனக்கு வெளிப்படுத்தும். ஒவ்வொரு சாபத்திலிருந்தும் நான் விடுபட விரும்புகிறேன். உம்மோடு எனக்கு இருக்கும் ஐக்கியத்திற்கு தடையாயிருக்கிற சாபத்தை நான் அகற்றி விட விரும்புகிறேன். உம்முடைய பிள்ளையாகிய எனக்காக நீர் ஆயத்தம் செய்து வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை பெற்று அனுபவிக்க விரும்புகிறேன்.*

*இன்று நான் ஆசீர்வாதத்தைத் தெரிந்துகொள்கிறேன். உயர்வை, பெருக்கத்தை, ஆரோக்கியத்தை, செழிப்பை, வெற்றியை நான்*

*தெரிந்துகொள்கிறேன். உம்முடைய கிருபையின் மூலமாய், நான் வாலாய் அல்ல, தலையாய் மாற விரும்புகிறேன். கீழாய் அல்ல, மேலாய் வாழ விரும்புகிறேன். ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் உம்முடைய மகிமை விளங்க பயன்படுத்தும்படி எனக்கு உதவி செய்யும். எப்பொழுதும் உமக்கு நன்றியுள்ளவனாய் வாழ என க்கு கிருபை தாரும்.*

*இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

இந்தத் தொடரின் இரண்டாவது செய்தியில், நம்மை ஒரு சாபத்தின் கீழ் கொண்டு வரக்கூடிய இன்னும் அதிகமான சூழ்நிலைகளை டெரிக் நமக்கு தொடர்ந்து காண்பிக்கப் போகின்றார். அதற்குப் பிறகு ஒவ்வொரு சாபத்திலிருந்தும் எவ்வாறு விடுதலையாக்கப்பட முடியும் என்பதை நோக்கிய நடைமுறை வழிமுறைகளைக் கற்றுக் கொண்டு, நாம் அதில் நடப்போம்.

390-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/43**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் பதிமூன்று>>*

# சாபத்திலிருந்து விடுதலை - பாகம் 2[4286]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

ஜனங்களுடைய வாழ்க்கையில் பொதுவாக சாபங்கள் கிரியை செய்யக்கூடிய விதத்தைக் குறித்த ஒரு படத்தை, இந்தத் தொடரின் முதல் செய்தியில், டெரிக் பிரின்ஸ் நமக்குக் கொடுத்தார். பிறகு அவர் பாவத்தின் அடிப்படை வேர்க் காரணங்களைக் குறித்து நமக்கு விளக்கிச் சொன்னார். தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் இருப்பதும், அவர் என்ன சொல்கிறாரோ அதைச் செய்யாமலிருப்பதும்தான் சாபத்திற்கான பிரதானமான காரணமாய் இருக்கிறது.

பிறகு சாபங்கள் எந்த வழிகள் மூலம் வருகின்றன என்பதைக் குறித்து நாம் பார்த்தோம்:

1. முதலில், சாபங்கள் **தேவனிடமிருந்து** வருகின்றன. முதல் இரண்டு கட்டளைகளை மீறுவதன் மூலம், அவை வருகின்றன. தேவனுக்கே மேலே அல்லது அவருக்கு இணையாக வேறு தெய்வங்களை வணங்குவதால் அவை உண்டாகின்றன. இதில் மந்திரவாதமும், பில்லிசூனியக் கிரியைகளும், விக்கிரக ஆராதனையும் உள்ளடங்கியிருக்கிறது. இந்தக் கட்டளைகளை மீறுவதால் உண்டாகும் இந்த சாபம், மூன்றாம் நான்காம் தலைமுறை வரை செல்கின்றது.

உபாகமம் 27:15-26 வரையுள்ள வசனங்களில், பன்னிரண்டு சாபங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குப் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தபோது, அவர்கள் இந்த சாபங்களை தங்கள் மீதே அறிவித்துக் கொள்ள வேண்டும்.

இதோ, அவற்றை தொகுத்துப் பார்க்கலாம்:

2. **விக்கிரக ஆராதனை** - பொய்யான தெய்வங்களை வழிபடுதல்.

3. **பெற்றோரை கனயீனம் செய்தல்** - நம் பெற்றோரை கனம் பண்ண வேண்டும் என்பது ஒரு வாக்குத்தத்தத்தோடு கொடுக்கப்பட்ட முதல்

கட்டளையாயிருக்கிறது.

**4. அயலானுக்கு விரோதமாய் செய்கிற நம்பிக்கைத் துரோகம்**

**5. பெலவீனருக்கும், உதவியற்றவருக்கும் அநீதி செய்தல்** - கருக்கலைப்பு செய்வதும் இதில் அடங்கியிருக்கிறது

**6. இயற்கைக்கு முரண்பட்ட, முறையற்ற, தவறான பாலியல் உறவு கொள்ளுதல்** - குறிப்பாக, ஒரே குடும்ப உறவுகளுக்குள் தவறான உறவு கொள்ளுதல்

**7. ஆன்டி-செமிட்டிஸம்** - யூதர்களுக்கு விரோதமான போக்கைக் கடைபிடிப்பதால் ஒரு தனிநபர் மீது அல்லது ஒரு தேசத்தின் மீது உண்டாகும் சாபம்.

**8. தன் மாம்ச பெலத்தின் மீது அல்லது இன்னொரு மனுஷன் மீது நம்பிக்கை வைப்பதால்** உண்டாகும் சாபம்.

**9. திருடுகிறவர் மீது** அல்லது **பொய்யாணை இடுகிறவர் மீது** உண்டாகும் சாபம்

**10. தேவனை வஞ்சிக்கிறவர் மீது, தேவனுக்குரியதை திருடுகிறவர் மீது** உண்டாகும் சாபம்.

**11. பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால் உண்டாகும் சாபம்.**

நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய ஒவ்வொரு சாபத்திலிருந்தும் விடுதலையாக்கப்படுகிற அந்த மிகவும் முக்கியமான, நம்மை உற்சாகத்தின் உச்சிக்கே கொண்டு செல்லக்கூடிய பகுதிக்குச் செல்வதற்கு முன், சாபம் உண்டாவதற்கான இன்னும் அதிகமான காரணங்களைக் குறித்து வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற மற்ற இடங்களையும் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

சாபத்திலிருந்து விடுதலையாகுதல் என்ற தலைப்பின் இரண்டாவது செய்தியை இப்பொழுது நாம் பார்ப்போம் அல்லது கேட்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது**

**கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்,**

**கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

*1. சில சூழ்நிலைகளில், தம்முடைய வாயாய் இருந்து சாபங்களைப் பேசும்படி, தேவன் தம் சார்பில் சிலரை சில நேரங்களில் பயன்படுத்துகிறார். பல எடுத்துக்காட்டுகளை வேதாகமத்தில் நாம் பார்க்க முடியும்.*

*(அ) எரிகோ பட்டணம் அழிக்கப்பட்ட பிறகு, அதைத் திரும்பக் கட்டியெழுப்புகிறவன் சபிக்கப்பட்டவன் என்று .......................... சொன்னான் (யோசுவா 6:26).*

*(ஆ) சவுலும் யோனத்தானும் கொல்லப்பட்ட கில்போவா மலைகளில் இனி பனியும் மழையும் பெய்யாமல் போவதாக என்று .............................. புலம்பினான் (2 சாமுவேல் 1:21).*

*(இ) சீரியனாகிய நாகமானிடம் தன் வேலைக்காரனாகிய கேயாசி, தனக்குத் தெரியாமல் மறைமுகமாக, கள்ளத்தனமாக பணம் வாங்கியபடியால், ................... அவனை சபித்தான். அதன் விளைவாக, நாகமானின் தொழுநோயினால் கேயாசியும், அவனுடைய சந்ததியாரும் என்றென்றைக்குமாய் பாதிக்கப்பட்டனர் (2 இராஜாக்கள் 5).*

*(ஈ) .................... அத்திமரத்தை சபித்தார். அதன் இலைகள் உதிர்ந்து போய், 24 மணி நேரத்தில், அது மரித்துப் போய் விட்டது (மாற்கு 11:12-14).*

## ஒரு உறவின் அதிகாரத்தின் மூலம் சாபங்கள் வருதல்

*2. சாபங்கள் வருவதற்கான ஒரு முக்கியமான வழியைக் குறித்து இன்றைய கிறிஸ்தவர்கள் மிகவும் குறைவாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். அது ............................ அதிகாரத்தின் மூலம் வரும் சாபமாகும். இவர்கள் உறவின் நிமித்தம் அதிகாரமுடைய நபர்களாயிருக்கின்றனர்.*

அதிகாரம் என்ற வார்த்தை, இன்றைக்கு இவ்வுலகத்தில் பெரும்பாலும் விரும்பப்படாத ஒரு வார்த்தையாயிருக்கிறது. ஆனாலும் உண்மை என்னவென்றால், அதிகாரம் என்ற ஒன்று, நிஜமாகவே இருக்கின்றது. அதிகாரம் மனுஷனாய் உருவாக்கப்படவில்லை. மாறாக, அது தேவனிடமிருந்து வந்திருக்கிறது. பல்வேறு வித்தியாசமான

உறவுகளில், ஒரு நபருக்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் இதை விரும்பலாம் அல்லது விரும்பாமல் போகலாம். சில குறிப்பிட்ட முக்கியமான சூழல்களில், ஒரு கணவனுக்கு தன் மனைவியின் மீது அதிகாரம் இருக்கிறது. பெற்றோர்களுக்கு தங்களுடைய பிள்ளைகளின் மீது அதிகாரம் இருக்கிறது. ஆசிரியர்களுக்கு தங்களுடைய மாணவர்கள் மீது அதிகாரம் இருக்கிறது. சபைப் போதகர்களுக்கு தங்களுடைய சபையார் மீது அதிகாரம் இருக்கிறது. இவையெல்லாம் ஒரு சில எடுத்துக்காட்டுகளாய் இருக்கின்றன.

இந்த அதிகாரத்தோடு அமைந்திருக்கும் உறவுகளின் நிமித்தம், ஒரு நபர் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கும் இன்னொருவர் மீது பேசுகிற வார்த்தைகளுக்கு விசேஷமான இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை இருக்கிறது. அவை ஆசீர்வாதங்களாக இருக்கலாம் அல்லது அவை சாபங்களாய் இருக்கலாம். நீங்கள் வேதாகமத்தை வாசித்துப் பாருங்கள். ஒன்றை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடுத்து இரண்டாவதாக பெற்றுக் கொள்ளக்கூடிய மிக முக்கியமான ஆசீர்வாதம், அவருடைய தகப்பனின் ஆசீர்வாதமாகும்.

*3. உறவின் அதிகாரத்தில் காணப்படும் ஒரு சில எடுத்துக்காட்டுகள்:*

*(அ) ராகேலின் மீது யாக்கோபுக்கு அதிகாரம் இருந்ததுபோல, ஒரு மனைவியின் மீது அவளுடைய ......................... இருக்கும் அதிகாரம்.*

*(ஆ) ............................ தங்களுடைய பிள்ளைகளை ஆசிர்வதிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான நேரங்களில் ஒரு தாய் அல்லது தகப்பன் பேசுகிற எதிர்மறையான வார்த்தைகள், அவர்களுடைய பிள்ளைகளின் மீது சாபமாய் விழுந்து விடுகின்றன.*

*(இ) .............................. தங்களுடைய மாணவர்கள் மீது அதிகாரம் இருக்கிறது. ஆனால் இது தவறாகப் பயன்படுத்தப்பட்டு, அந்தச் சிறுபிள்ளையின் மீது ஒரு சாபமாகப் போய் முடியலாம். அது அவர்களுடைய வாலிப வயதிலும் தொடருகிறது.*

அதிகார உறவின் நிமித்தம் வருகின்ற சாபங்களில் பிசாசின் கிரியை நடக்கின்றது என்று சொல்லலாம். யாக்கோபு **3:14-15** வசனங்களில்

இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:

*உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.*

வேறு வார்த்தைகளில் இவ்வாறு சொல்லலாம்: உங்களுடைய எண்ணங்களையும், உங்களுடைய உணர்வுகளையும் தவறானவைகளாய் வைத்துக் கொண்டு, நீங்கள் பேசுவீர்கள் என்றால், உங்களுடைய வார்த்தைகளில் பிசாசின் கிரியைதான் வெளிப்படும். ஒரு விசில் குக்கரைப் பயன்படுத்தி டெரிக் கொடுத்த விளக்கம், உங்களுடைய நினைவில் இருக்கிறதா? விசில் இங்கே சாபம் போல இருக்கின்றது. நீராவி வரும்போது, விசில் வருகின்றது. விசில் வருவதைத் தடுக்க வேண்டுமென்றால், அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. கொதிப்பதற்கு முன்பே பாத்திரத்தை எடுத்து விட வேண்டும்.

ஆகையால் ஒரு பெற்றோரோ, ஒரு ஆசிரியரோ அல்லது ஒரு கணவரோ அதிகமாய் கோபமடையும்போது, பொறுமையிழக்கும்போது, விரக்தியின் உச்சிக்குச் செல்லும்போது, அவர்கள் அடுப்பிலிருந்து பாத்திரத்தை இறக்கி விட வேண்டும். இல்லையென்றால், நீராவி வெளியே வரும். விசிலின் சத்தமும் அதோடு சேர்ந்து வரும். அப்பொழுது மிகவும் கடின மான, கடுமையான, இரக்கமற்ற, அன்பற்ற, அநீதியான வார்த்தைகள் பேசப்படும். இந்த வார்த்தைகளோடு சாபமும் சேர்ந்து வெளிப்படும்.

*4. சாபம் வரக்கூடிய இன்னொரு மிக முக்கியமான, வழக்கமான ஒரு வழி, தன் .......... பேசி திணித்துக் கொள்கின்ற சாபங்கள். ஈசாக்கை ஏமாற்றுவதால் யாக்கோபின் மேல் வரக்கூடிய சாபம், தன் மேல் வரட்டும் என்று ரெபேக்கா சொன்னாள். அவளுடைய வாழ்க்கையே அவளுக்கு கசப்பாய் இருந்தது என்று பிறகு நாம் வாசிக்கின்றோம். ஒரு சாபத்தின் கீழ் இருப்பதற்கான தெளிவான அடையாளமாய் அது இருக்கிறது.*

*5. நாம் பயன்படுத்துகிற ................................ குறித்து, நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாம் நம்மைக்*

*குறித்தே எதிர்மறையாகப் பேசக் கூடாது. "என்னால் இதை ஒருபோதும் செய்ய முடியாது", "நான் வெற்றி பெறவே மாட்டேன்", "நான் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன்", "நான் ஒரு தோல்வி", "இனியும் என்னால் இதை சகித்துக் கொள்ள முடியாது", "நான் மரித்தால் நலமாயிருக்கும்" என்பதுபோன்ற வார்த்தைகளை நிறைய பேர் பேசுகின்றார்கள். சில பொதுவான எடுத்துக்காட்டுகள்தான் இவை. இந்த வாக்கியங்களில், கடைசி வாக்கியத்தைப் பேசுவதன் மூலம், நாம் மரணத்தின் ஆவியை வரவேற்கின்றோம். அவனுக்கு நிறைய அழைப்புகள் எல்லாம் தேவையில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

*6. .................................. ஒரு வாக்கியத்தை உங்கள் மீதே நீங்கள் பேசி விட்டீர்கள் என்றால், எதிர்மறையான ஒன்றை உங்கள் மீதே நீங்கள் திணித்துக் கொண்டீர்கள் என்றால், ஆக்கப்பூர்வமான ஒன்றைப் பேசுவதன் மூலம், நீங்கள் அதைத் திரும்பப் பெற வேண்டும். சங்கீதம் 118:17-ம் வசனத்தில், நீங்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டைப் பார்க்க முடியும்: "நான் சாவாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் (அறிவிப்பேன்)."*

*7. அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசுவை ............ முறை மறுதலித்த பிறகு, அவன் தன்னை நேசிக்கிறான் என்பதை இயேசு அவனிடம் மூன்று முறை உறுதிப்படுத்திக் கொண்டார்.*

*8. மத்தேயு 27:24-25 வசனங்களில், நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்:*

> *கலகம் அதிகமாகிறதே அல்லாமல், தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லை என்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாக கைகளைக் கழுவி, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்," என்றான். அதற்கு ஜனங்கள் எல்லோரும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக," என்று சொன்னார்கள்.*

இது என்ன? தங்கள் மீது தாங்களே திணித்துக் கொண்ட சாபம். இந்த வார்த்தைகளின் மூலம், ............................ வரலாற்றில் மிகப் பெரிய

சோகம் தொடர்ந்தது. ஒரு சோகத்தின் இழை யூதர்களின் வரலாற்றின் ஊடாக பின்னி, நெய்யப்பட்டிருக்கிறது. 19 நூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலகட்டத்தில் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. நம்மைக் குறித்தே நாம் தவறான வார்த்தைகளை பேசக் கூடாது என்பதற்கு இது ஒரு நல்ல பாடமாய் இருக்கிறது.

தேவன் ஆபிரகாமை சாபங்களிலிருந்து பாதுகாத்தார் என்று முந்தின செய்தியில் டெரிக் குறிப்பிட்டிருந்தார். “உன்னை சபிக்கிறவனை நான் சபிப்பேன்,” என்று அவர் சொல்லியிருந்தார். தேவனால் யூதர்களை ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் பாதுகாக்க முடியவில்லை. அவரால் அவர்களை அவர்களிடமிருண்டு காப்பாற்ற முடியவில்லை. இது நம்முடைய வாழ்க்கையிலும் பல முறை உண்மையாயிருக்கிறது. நம்மைக் குறித்து நாம் என்ன சொல்கிறோம் என்பதைத் தவிர, மற்ற எல்லாவற்றிலிருந்தும் தேவன் நம்மைப் பாதுகாக்கிறார்.

*9. சாபங்கள் உண்டாவதற்கான அடுத்த பொதுவான காரணம், வேதாகமத்திற்கு முரண்பட்ட விதத்தில் உடன்படிக்கைகளைச் செய்வதாகும். பொய்யான தெய்வங்களை வழிபடுகிறவர்களோடு நீங்கள் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொள்வீர்கள் என்றால், நீங்கள் அந்தப் பொய்யான தெய்வங்களோடும் உடன்படிக்கை செய்து கொள்கின்றீர்கள் என்று அர்த்தம். மேற்கத்திய உலகத்தில் மிகவும் அதிகமாக, பொதுவாகக் காணப்படும் ஒரு எடுத்துக்காட்டு, ப்ரீமேசன்ரி என்ற ஒரு அமைப்பாகும். இது அந்த மேசன்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும் மகா பயங்கரமான சாபங்களை வருவித்திருக்கிறது. பழங்குடி சமூகத்தினரை எடுத்துக் கொள்வோம் என்றால், தங்களுடைய சமூகத்தில் ஒருவரை சேர்த்துக் கொள்ளும்படி அவர்கள் நடத்துகிற விழாக்களும் அல்லது அவர்கள் பின்பற்றுகிற சில மதச்சடங்குகளும் சாபங்களுக்குக் காரணமாய் அமைகின்றன.*

*10. சாபங்களுக்கான இன்னொரு பொதுவான காரணம், சாத்தானுடைய ஊழியர்கள் .............................. சாபங்களைப் பேசுவதால் உண்டாகின்றன. இவை வெவ்வேறு சமூகங்களில், வெவ்வேறு வித்தியாசமான பெயர்களில் வருகின்றன. ஆனால் இவை எல்லாவற்றிற்கும் வல்லமை, பிசாசிடமிருந்துதான் வருகின்றன. வேதாகமத்தில் காணப்படும் இரண்டு*

*எடுத்துக்காட்டுகள், பிலேயாம் (எண்ணாகமம் 22:4-6) மற்றும் கோலியாத் (1 சாமுவேல் 17:23).*

*11. பழக்கப்பட்ட பொருட்களை அல்லது ............................ சம்பந்தப்பட்ட பொருட்களை சாபங்கள் உண்டாவதற்குக் கடைசி காரணமாக டெரிக் சொன்னார். உபாகமம் 7:26-ல், மந்திரவாதக் கிரியைகளோடு சம்பந்தப்பட்ட பொருட்களைக் குறித்து நாம் வாசிக்கின்றோம்: ''அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக. அதைச் சீ என்று வெறுத்து, முற்றிலும் அருவருக்கக்கடவாய். அது சாபத்திற்குள்ளானது.''*

இந்தப் பாடத்தின் போதனையைக் கற்றுக் கொண்ட பிறகு, சாபத்திலிருந்து உங்களுக்கு விடுதலை வேண்டும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்றால், நீங்கள் வீட்டிற்குச் சென்று, உங்களுடைய வீட்டில் என்னவெல்லாம் இருக்கின்றது என்று சோதித்துப் பாருங்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தவிர, வேறு தெய்வங்களுக்கு மகிமையைச் செலுத்தக் கூடிய பொருட்கள் ஏதாகிலும் இருக்கிறதா என்று பாருங்கள். டெரிக் தன்னுடைய தனிப்பட்ட கோட்பாட்டைக் குறித்துச் சொன்னார். இயேசு கிறிஸ்துவை கனயீனம் செய்யக்கூடிய எந்த ஒரு பொருளுக்கும் அவர் தன் வீட்டில் அனுமதி கொடுப்பதில்லை என்பதுதான் அது.

டெரிக் மற்றும் ரூத் அடிக்கடி பெற்றோர்கள் கொண்டு வருகிற பிரச்சனைகளுக்கு தீர்வைக் கொடுத்திருக்கிறார்கள். பிள்ளைகள் இரவில் நன்றாகத் தூங்குவதில்லை, அவர்கள் அமைதியற்ற நிலையில் காணப்படுகிறார்கள், அழுகின்றார்கள், பயப்படுகின்றார்கள் என்று பெற்றோர்கள் அவர்களிடம் சொல்லியிருக்கின்றனர். ஒரு பொதுவான காரணம், சாத்தான் உள்ளே நுழையும்படி அனுமதியைக் கொடுக்கிற ஒரு பொருள், அந்த வீட்டினுள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றது என்பதுதான். இப்படிப்பட்ட சூழ்நிலையில், நீங்கள் உங்களுடைய வீடு முழுவதும் தேடிப் பார்க்க வேண்டும். மந்திரவாதக் கிரியைகளோடு தொடர்புடைய பொருள் எதையாகிலும் கண்டுபிடிப்பீர்கள் என்றால், முதலில் அதை அகற்ற வேண்டும். துரதிஷ்டத்தை அகற்றும் என்று பெரும்பாலானோர் நம்புகிற மூடநம்பிக்கையோடு சம்பந்தப்பட்ட பொருளையும் நாம் அகற்ற வேண்டும். அது துரதிஷ்டத்தை அகற்றுவதில்லை. மாறாக, அது சாத்தானுக்குக் கதவைத்திறக்கின்றது.

## *ஒரு சாபத்திலிருந்து எவ்வாறு விடுதலையாக்கப்பட முடியும்?*

சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் மரணத்தின் மூலம், சாபத்திலிருந்து விடுதலையாக்கும்படி, உங்களுக்கு உதவக்கூடிய வழிமுறைகளை இப்பொழுது நாம் பார்ப்போம்.

*12. சாபங்களிலிருந்து விடுதலையாக்கக்கூடிய நான்கு அடிப்படைப் படிகள் இவை:*

*(அ) ............................... - பிரச்சனையை கையாளும்படி, முதலில் அது எங்கே இருக்கிறது என்று நாம் பார்க்க வேண்டும்.*

*(ஆ) ............................... - நம்முடைய மனம் மாற வேண்டும். நாம் செல்லும் திசையும் மாற வேண்டும். நீங்களோ அல்லது உங்களுடைய முன்னோர்களோ உங்களை சாபத்திற்குள் தள்ளக்கூடிய காரியம் எதையாகிலும் செய்திருந்தால், அதை அறிக்கை செய்ய வேண்டும்.*

*(இ) ............................... - நீங்கள் இனி சாபத்தினால் உண்டாகக்கூடிய தீமையான பாதிப்புகளின் கீழ் இருக்க மாட்டீர்கள் என்று உறுதியாய் நீங்கள் அதை நிராகரிக்க வேண்டும்.*

*(ஈ) ........................ இயேசுவின் இரத்தத்தினால் நீங்கள் மீட்கப்பட்டிருக்கிறபடியால், அந்தச் சாபம் இனியும் உங்களுடைய வாழ்க்கையின் எந்த ஒரு பொல்லாத பாதிப்பையும் உண்டாக்கி விடாதவாறு, நீங்கள் அதை தொடர்ந்து எதிர்த்து நிற்க வேண்டும்.*

*யாக்கோபு 4:7 சொல்கிறது:*

> *ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் (எதிரியாகிய பிசாசுக்கு அல்ல. தேவன் ஒருவருக்கே கீழ்ப்படிந்திருங்கள். பிறகு அது தொடர்ந்து சொல்கிறது). பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். (அப்பொழுது என்ன நடக்கும்?) அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்.*

நீங்கள் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யும்போது, சாத்தான் உங்களை விட்டு ஓடிப் போவான். எதிர்த்து நிற்பதென்றால், சில

நேரங்களில், தொடர்ந்து நடக்க வேண்டிய ஒன்றாக இருக்கின்றது. இது பலத்த காற்று வீசுகின்ற ஒரு சூழலில், நீங்கள் கதவை அடைத்து வைத்திருக்க வேண்டிய நிலையில் இருப்பதுபோல இருக்கின்றது. நீங்கள் கதவைத் திறந்தால், காற்று உள்ளே வந்து விடும்.

*13. உங்களுடைய விடுதலைக்கு வேதவசனம் ஒரு தெளிவான வழியைக் கொடுக்கின்றது.*

*(அ) கலாத்தியர் 3:13-14 வசனங்கள்தான் இதற்கு ஒரு சிறந்த வேதப்பகுதியாகும்: "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி ..............................................; ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று."*

*(ஆ) எபேசியர் 1:7 சொல்கிறது: "அவருடைய (தேவனுடைய) கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய (இயேசுவினுடைய) .................................. பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (இயேசுவுக்குள்) நமக்கு உண்டாயிருக்கிறது.*

*(இ) கொலோசெயர் 1:12-14 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற ........................ ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."*

*14. இதை நீங்கள் உறுதியாய் பெற்றுக் கொள்ளும்போது, கிறிஸ்துவுக்குள் உங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள். காரணம், இயேசுவே நம்முடைய .............................. பிரதான ஆசாரியராய் இருக்கிறார் (எபிரெயர் 3:1). உங்களுடைய அறிக்கையின் அடிப்படையில், நீங்கள் அவரைக் குறித்து என்ன சொல்கின்றீர்களோ, உங்களுடைய பிரதான ஆசாரியராகிய அவர் அதைச் செய்வார்.*

*15. அடுத்ததாக, .......................... உங்களை ஒப்புக்கொடுங்கள். ஆசீர்வாதங்களுக்கு நாம் எவ்வாறு தகுதி பெறுகின்றோம் என்பது உங்கள் நினைவிலிருக்கிறதா? தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவர் என்ன சொல்கிறாரோ, அதைச் செய்வதன் மூலம் நாம் தகுதியடைகின்றோம். ஆகையால் உங்களுடைய விடுதலையை நீங்கள் பெற்றுக் கொள்ளும்போது, உங்களுடைய மனதில் ஒரு உறுதியான தீர்மானத்தை எடுத்து, உங்களை ஒப்புக்கொடுத்திடுங்கள். "இப்போதிலிருந்து தேவன் என்ன சொல்கிறார் என்ற சத்தத்திற்கு நான் செவிகொடுத்து, அதைச் செய்யப் போகிறேன்," என்று சொல்லுங்கள்.*

*16. அடுத்த படி, நீங்களோ அல்லது உங்களுடைய முன்னோர்களோ செய்த .................. அறிக்கை செய்வதாகும். காரணம், உங்களுடைய முன்னோர் செய்த பாவங்கள் உங்களை பல வழிகளில் பாதிக்க முடியும். உங்களுடைய முன்னோர்கள் செய்த பாவங்களுக்கு நீங்கள் பொறுப்பாக முடியாது என்றாலும், அவை உங்களை மோசமான விதத்தில் பாதிக்கும் என்பது உண்மை.*

*17. உங்களுக்கு எதிராக ஏதோ ஒரு விதத்தில் பாவம் செய்திருக்கிற மற்றவர்களை நீங்கள் ........................ வேண்டும். காரணம், உங்களுடைய இருதயத்தில் மன்னியாமை இருந்தால், அது உங்களுடைய ஜெபங்களுக்கு பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு தடையாய் இருக்கும். நாம் மன்னிக்கப்பட வேண்டும் என்றால், மற்றவர்களை மன்னிப்பதில் நாம் விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.*

*18. கடைசியாக, .............................. தொடர்புடைய எல்லா கிரியைகளையும் நீங்கள் விட்டொழிக்க வேண்டும். நீங்களோ அல்லது உங்களுடைய முன்னோர்களோ அவற்றோடு தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். "பழக்கப்பட்ட" அல்லது "தொடர்புடைய" பொருட்களை உங்களுடைய வீட்டை விட்டு நீங்கள் அகற்ற வேண்டும். காரணம், அவை ஒரு சாபத்தையும் தங்களோடு கொண்டு வருகின்றன.*

நீங்கள் இந்த நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்து விட்ட பிறகு, இயேசுவின் நாமத்தில் உங்களையே நீங்கள் விடுதலை செய்து கொள்ள முடியும். இயேசு சொன்னார்: "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக்

கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத்தேயு 16:19; மத்தேயு 18:18)

*19. .......................... நாமத்தினால் நீங்கள் விடுதலையைப் பெற்ற பிறகு, ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை நீங்கள் அறிக்கை செய்ய வேண்டும், அதை எதிர்பார்க்க வேண்டும். காரணம், ஆபிரகாமின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாகவே, நாம் சாபத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறோம்.*

டெரிக் வழக்கமாகச் செய்யும் அறிக்கை:

*சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் தியாகபலி மரணத்தின் மூலம், சாபத்தின் கீழ் வாழ்ந்த நிலையை விட்டு நாம் வெளியேறி, ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். இதில் தேவன் நம்மை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்திருக்கிறார்.*

எத்தனை காரியங்களில்? சகல காரியங்களிலும் தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை நீங்கள் விரும்புகிறீர்களா? இதை தேவனே உங்களுக்காக ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இது பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வேறு வார்த்தைகளில், பரிசுத்த ஆவியானவரே இந்த ஆசீர்வாதங்களை நிர்வகிக்கிறார் என்று சொல்லலாம். இதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். காரணம், நாம் பரிசுத்த ஆவியானவருடன் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவீர்கள் என்றால், நீங்கள் பரிசுத்த ஆவியானவரை கனம் பண்ணவில்லை என்றால், அவர் ஆசீர்வாதத்தை தடுத்து விடுவார். அவர் அதை நிறுத்தி வைத்து விடுவார். தேவனுடைய பண்டகசாலையின் திறவுகோல் அவரிடம்தான் இருக்கிறது. நீங்கள் ஆசீர்வாதப் பொக்கிஷங்களை விரும்புவீர்கள் என்றால், பண்டகசாலையின் காப்பாளாரோடு நட்புறவை நீங்கள் நிச்சயமாய் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு சாபத்தின் நிழல் உங்களுடைய வாழ்க்கையின் மீது விழுந்திருக்கிறது என்று நீங்கள் உணருவீர்கள் என்றால், டெரிக் ஜெபித்த விடுதலைக்கான ஜெபம் கீழே இருக்கிறது. நீங்களும் ஜெபியுங்கள்:

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரன் என்றும், தேவனிடம் வருவதற்கு நீர் ஒருவரே வழியாயிருக்கிறீர்*

*என்றும் நான் விசுவாசிக்கிறேன். என்னுடைய பாவங்களுக்காக நீர் மரித்தீர், மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். என் மீது வர வேண்டிய ஒவ்வொரு சாபத்தையும் நீர் உம் மேல் ஏற்றுக் கொண்டு, சிலுவையில் சாபமாகவே தொங்கினீர். சாபத்திலிருந்து மீட்கப்பட்டு, ஆசீர்வாதத்திற்குள் நான் பிரவேசிக்கும்படி நீர் அப்படிச் செய்தீர். உமக்கு நன்றி.*

*கர்த்தராகிய இயேசுவே, நானோ அல்லது என் முன்னோர்களோ செய்த பாவங்களை நான் அறிக்கை செய்கிறேன் (உங்களுக்குத் தெரிந்த பாவங்களை பட்டியலிடுங்கள்). என்னை மன்னியும். எனக்கு எதிராக தவறு செய்தவர்களை, என்னைக் காயப்படுத்தியவர்களை நானும் மன்னிக்கின்றேன். தேவனாகிய நீர் என்னை மன்னிக்கின்றீர். நானும் அவர்களை மன்னிக்கின்றேன். நான் என்னையும் மன்னிக்கின்றேன்.*

*மந்திரவாதக் கிரியைகளோடு எனக்கு இருக்கிற எல்லாத் தொடர்புகளையும் நான் விட்டு விடுகிறேன். அதோடு தொடர்புடைய எல்லாப் பொருட்களையும் நான் அகற்றி விடுகின்றேன். என்னை நான் ஒப்புக்கொடுக்கிறேன். கர்த்தாவே, விசுவாசத்தினால், இப்பொழுது உம்முடைய மன்னிப்பை நான் பெற்றிருக்கிறேன். தேவனுடைய பிள்ளையாய் எனக்கிருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, என்னை நானே சாபங்களிலிருந்து இப்பொழுது விடுவித்துக் கொள்கிறேன். என்னுடைய அதிகாரத்தின் கீழ் இருப்பவர்களையும் சாபங்களிலிருந்து நான் விடுதலையாக்குகிறேன். இப்பொழுதே இயேசுவின் நாமத்தில், நான் விடுதலையை அறிவிக்கிறேன். நான் அதை விசுவாசத்தினால் உரிமை பாராட்டி, பெற்றுக் கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

இப்பொழுது தேவனுக்கு நன்றி சொல்ல ஆரம்பியுங்கள். காரணம், நன்றி சொல்லுதல் என்பது விசுவாசத்தை வெளிப்படுத்துகிற ஒரு நிச்சயமான அடையாளமாயிருக்கிறது.

உங்களுடைய வாழ்க்கையில் திரும்பவும், பிசாசு தன் அதிகாரத்தை நிலைநிறுத்தும்படி முயற்சிக்கின்றான் என்பதுபோல நீங்கள் உணருகின்றீர்கள் என்றால், இந்த அறிக்கையைச் செய்ய மறவாதீர்கள்.

**சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் தியாகபலி மரணத்தின் மூலம், சாபத்தின் கீழ் வாழ்ந்த நிலையை விட்டு நாம் வெளியேறி, ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். இதில் தேவன் நம்மை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்திருக்கிறார்.**

391-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/29**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# விடுதலை ஊழியத்தின் அடிப்படைகள் என்ற பாடத்திற்கான அறிமுகம்

தீய ஆவிகளிடமிருந்து விடுதலையாக்குகிற ஊழியம், சபையின் ஒரு அங்கம் என்பதை சபையின் பல பகுதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை, அதை எதிர்க்கிறார்கள் என்றாலும், இது வேதாகமத்தில் எழுதப்பட்ட சத்தியமாயிருக்கிறது. இயேசு பல தருணங்களில் இதை வெளியரங்கமாய் செயல்படுத்திக் காண்பித்திருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டு செய்திகள் அடங்கிய இந்தத் தொடரில், இயேசு நமக்கு முன்பாக வைத்திருக்கிற மாதிரியை ஆராய்வதிலிருந்து டெரிக் பிரின்ஸ் ஆரம்பிக்கின்றார். அவர் தொடர்ந்து பின் வரும் காரியங்களையும் வெளிப்படுத்துகிறார்:

தீய ஆவிகளிடமிருந்து ஜனங்களை விடுதலையாக்குகிற அதிகாரம், எவ்வாறு சீஷர்களை ஆயத்தப்படுத்துவதிலும், அவர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் இன்றியமையாத ஒரு அங்கமாயிருக்கிறது

❖ பிசாசுகள், தீய அல்லது அசுத்த ஆவிகளின் சுபாவம்

❖ பிசாசுகளின் குணம் அல்லது அவை செயல்படும் விதம்

❖ பிசாசுகள் தங்கி வாசம் பண்ணுமிடம்

❖ பிசாசுகள் எவ்வாறு உள்ளே நுழைகின்றன எவ்வாறு விடுதலையாக்கப்பட வேண்டும்?

❖ ஏன் சிலர் மட்டும் விடுதலையாக்கப்படவில்லை

தீய ஆவிகளிடமிருந்து விடுதலையாக்குகிற ஊழியம், தேவனுடைய ராஜ்யத்திற்கும், சாத்தானுடைய ராஜ்யத்திற்கும் இடையே நடக்கின்ற யுத்தத்தை எல்லோரும் பார்க்கும்படி வெளியே கொண்டு வருகின்றது. இது தேவனுடைய ராஜ்யம், சாத்தானுடையதைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவிற்கு மிகவும் அதிக வல்லமையுடையதாய் இருக்கிறது என்ற மாறா உண்மையை தெளிவாக நிலைநிறுத்துகிறது.

**1963**-ம் ஆண்டு, முதல் முறையாக டெரிக், தன்னுடைய சபை அங்கத்தினர்களில் ஒருவர் மூலம் பிசாசின் கிரியைகள் வெளிப்பட்டதை

எதிர்கொண்டார். இயேசுவின் நாமத்தில், அவர் அதைத் துரத்தினார். இது இயேசு செய்த இந்த விடுதலை ஊழியத்தைக் குறித்து வேதாகமம் என்ன வெளிப்படுத்துகிறது என்பதை ஆழமாய் ஆராயும்படி, டெரிக்கை உந்தித் தள்ளியது. அவருடைய ஆரம்பகட்ட ஆராய்ச்சியிலிருந்து, டெரிக் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு விடுதலையின் ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்து விட்டார். வல்லமையான அற்புதங்களை அவர் கண்டார். நிறைய பேரை, அவர் விடுதலைக்குள் வழிநடத்தினார். விடுதலை தேவை என்று கர்த்தராகிய இயேசு இப்பொழுது உங்களுக்கு வெளிப்படுத்தலாம் அல்லது மற்றவர்களுக்கு விடுதலை செய்யும் ஊழியத்தைச் செய்யும்படி அவர் உங்களை ஆயத்தப்படுத்தலாம். எதுவாயிருந்தாலும், இந்தத் தொடர் உங்களை நல்ல விதத்தில் ஆயத்தப்படுத்தும்.

*பாடம் பதிநான்கு>>*

*விடுதலை ஊழியத்தின் அடிப்படை - பாகம் 1*[4128]

# எதிரியை எவ்வாறு அடையாளம் காணுதல்

**பிசாசுகளைக் குறித்து அறிந்து கொள்ள எப்பொழுதும் நீங்கள் விரும்பினீர்கள், ஆனால் கேட்பதற்கு பயப்பட்டீர்கள்**

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

விடுதலையின் ஊழியம் என்பது தேவனைப்போலவே நாம் அதிகமாய் உருமாறும்படி, அவர் நமக்குத் தந்திருக்கிற சுத்திகரிப்பின் கிரியையினுடைய ஒரு அங்கமாக இருக்கின்றது. ஜனங்களை ஒடுக்குகிற பிசாசுகளின் கிரியைகளிலிருந்து அவர்களை விடுதலையாக்க வேண்டிய ஊழியம், நீண்ட காலமாக சபையினால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அதுதான் இயேசுவினுடைய ஊழியத்தின் தனித்தன்மையை பறை சாற்றுகிற, விசேஷமான தனி முத்திரையைக் கொண்ட ஒன்றாயிருக்கிறது. எனவே மற்ற பாரம்பரியங்களை விட்டு விட்டு, அவருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டியவர்களாய் நாம் இருக்கின்றோம்.

பிசாசுகளிடமிருந்து விடுதலையாக்குகிற ஊழியத்தைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இயேசு இந்தப் பூமியில் தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது, தீய ஆவிகளை அவர் கையாண்ட விதம்தான், ஜனங்களை பெரிய அளவில், மிகவும் அதிகமாகப் பாதித்தது. இயேசு சுகமளிக்கும் அற்புதங்களைச் செய்தார், ஜனங்களுக்கு உணவளித்து போஷித்தார், இயற்கையைக் கட்டுப்படுத்தினார், இன்னும் பல அற்புதங்களைச் செய்தார். கிட்டத்தட்ட அவர் செய்த எல்லா அற்புதங்களும், பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் பிசாசுகளைத் துரத்துகிற அற்புதங்கள் எதுவும் பழைய ஏற்பாட்டில் எழுதப்படவில்லை. அதன் விளைவாக, அதை நேரில் கண்ட ஜனங்கள்

அதினால் உடனடியாக பற்றிப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் அதைக் குறித்து உற்சாகமும் அடைந்தனர்.

தீய ஆவிகளைக் கையாளும் விஷயத்தில் இயேசு பயன்படுத்தின மாதிரியை, இந்தப் பாடத்தில் நாம் ஆராயப் போகின்றோம். விடுதலையின் ஊழியமும், சுகமளிக்கும் ஊழியமும் எவ்வாறு நெருக்கமாக ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதையும் நாம் பார்ப்போம். சுவிசேஷகருடைய ஊழியத்தில், விடுதலையின் ஊழியம் எவ்வளவு முக்கியமான ஒரு கருவியாய் இருந்தது, இருக்கிறது என்பதை வேதவசனங்களிலிருந்து டெரிக் நமக்குப் போதிப்பார். தீய ஆவிகளைக் கையாளும்படி முதலில் தம் சீஷர்களுக்கு அதிகாரமும், வல்லமையும் கொடுக்காமல், இயேசு ஒருபோதும் ஒருவரையும் சுவிசேஷம் அறிவிக்கும்படி அனுப்பினதில்லை.

இந்த அஸ்திபாரத்தைப் போட்ட பிறகு, பிசாசுகளின் சுபாவம், பிசாசுகளின் குணம் மற்றும் அவை செயல்படும் விதம், மனுஷனுடைய ஆளுமையில் பிசாசுகள் முக்கியமாய் எங்கே தங்கி வாசம் பண்ணுகின்றன என்பவற்றைக் குறித்த வேதாகமத்தின் அடிப்படையிலான புரிந்துகொள்ளுதலுக்குள் டெரிக் நம்மை நடத்துவார். இந்தத் தொடரின் இரண்டாவது செய்தியில், சிலுவையில் இயேசு செய்த கிரியையின் மூலம், பிசாசுகளிடமிருந்து எவ்வாறு விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை நாம் கற்றுக் கொள்வோம்.

விடுதலை ஊழியத்தின் அடிப்படைகள் என்ற தொடரின் முதல் செய்தியை நாம் கேட்போம். பிறகு முடிவுரையை வாசித்து, கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதிலளிக்க முற்படுவோம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

ஏசாயா **61:1**-ல், ஏசாயா தீர்க்கதரிசி இவ்வாறு எழுதியிருக்கிறான்:

*கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்.*

*சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்.*

*இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயம் கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் கூறவும் என்னை அனுப்பினார்.*

“சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்”, “கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலைக் கூறவும்” என்ற வார்த்தைகள், இயேசு தம்முடைய ஊழியத்தின் ஒரு பகுதியாக விடுதலையின் ஊழியத்தைச் செய்வார் என்று தீர்க்கதரிசனமாகச் சொல்கின்றன. **“சிறைப்பட்ட"** மற்றும் **“கட்டுண்ட"** என்ற இரண்டு வார்த்தைகளும், பிசாசினால் ஒடுக்கப்பட்டு, அவனுடைய ஆதிக்கத்தின் கீழ் வாழ்கின்றவர்களை சுட்டிக் காண்பிக்கும்படி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

நம்முடைய வாழ்க்கையில் அல்லது நம்முடைய உதவி தேவைப்படுகிற மற்றவர்களுடைய வாழ்க்கையில் நடக்கின்ற பிசாசுகளின் செயல்பாடுகளைப் பார்க்கும்படி, தேவன் நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறக்கும்போது, விடுதலையின் கிரியைக்குள் கடந்து செல்வதற்கு தைரியமும், நீடியபொறுமையும் அவசியமாயிருக்கிறது. அவர் இந்த வெளிப்பாட்டை நமக்குக் கொடுப்பதற்கான நோக்க, அவர் நம்மை விடுதலைக்குள் நடத்த விரும்புகிறார். சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் மரணத்தின் மூலம், அவர் இந்த விடுதலையை நமக்காக முன்னேற்பாடாக செய்து வைத்திருக்கிறார். சிலுவையில் நிகழ்ந்த பரிமாற்றத்தை நாம் இவ்வாறாகவும் பார்க்கலாம். அதாவது **தீமையின் பிடியிலிருந்து நாம் விடுவிக்கப்படும்படி, இயேசு தீமையின் பிடிக்குள் விடப்பட்டார்.**

நமக்குள் பயத்தை விதைக்கின்ற பிசாசுகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நம்முடைய விடுதலையை பெற்று விடாதபடி நம்மை அச்சுறுத்துகிற பிசாசுகளின் முயற்சியைக் கண்டு, நாம் சோர்ந்து போய் விடக்கூடாது. 1 யோவான் 4:18-ல் தேவனுடைய வார்த்தை இவ்வாறு சொல்கிறது: “அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.” நாம் தேவனுடைய பூரண அன்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவனுடைய நல்தயவின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். நம்மை எப்பொழுதும் தங்களுக்கு அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்று நாடுகிற பிசாசுகளிடமிருந்தும், பாவத்தின் ஆதிக்கத்திலிருந்தும் நம்மை விடுதலையாக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவனுடைய இந்த விருப்பத்தின் மீதும், அவருடைய நல்தயவின் மீதும் நாம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

## *இயேசுவின் மாதிரி*

*1. வேதாகமம், ............. வார்த்தைகளை மாற்றி மாற்றி பயன்படுத்துகிறது: பிசாசு, அசுத்த ஆவி, பொல்லாத ஆவி. அதோடு கூட, வேதாகமம், சில குறிப்பிட்ட வகை ஆவிகளையும் குறித்துப் பேசுகிறது. பயத்தின் ஆவி, பலவீனத்தின் ஆவி, ஒடுங்கின ஆவி (மனச்சோர்வின் ஆவி) என்ற ஆவிகளையும் குறித்து வேதாகமம் பேசுகிறது.*

*2. மாற்கு 1:23-ல், ''அசுத்த ......................'' என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கிரேக்க மொழியில், ''அசுத்த ஆவியினால்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய ஆங்கிலத்தில் இதைச் சிறந்த முறையில் சொல்ல வேண்டுமென்றால்,* **''அசுத்த ஆவியினுடைய ஆதிக்கத்தின் கீழ்''** *என்று சொல்லலாம்.*

*3. மாற்கு 1:25-ல் எழுதியிருக்கிறபடி, இயேசு அந்த மனுஷனை ஒன்றும் செய்யவில்லை, அவர் அந்த ........................ இருந்த ஆவியைத் துரத்தினார். ஜெப ஆலயத்தை விட்டு அந்த மனுஷனைத் துரத்துவதால், அது அந்தச் சூழ்நிலையை எவ்விதத்திலும் மாற்றப் போவதில்லை. மாறாக, அந்தப் பிரச்சனையின் வேராக, அந்த மனுஷனுக்குள் இருந்த ஆவியை இயேசு துரத்தினார்.*

*4. அந்த மனுஷன் சாதாரணமாக நடந்து கொண்டான் என்று இந்த வேதப்பகுதியில் எந்த இடத்திலும் சுட்டிக்காண்பிக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை உடையவராய் அங்கிருந்த ...................... பிரசன்னம்தான், கண்களுக்குத் தெரியாத விதத்தில் அந்த மனுஷனுக்குள் இருந்த பிசாசை வெளியே கொண்டு வந்தது.*

*5. ''எதுவும் பேசாமல், இவனை விட்டு வெளியே போ,'' என்று இயேசு அதட்டியவுடன், வெளியரங்கமான சரீரப்பிரகாரமான ......................... அங்கே உண்டானது - அது ஜெப ஆலயத்தில் நடக்கக்கூடிய வழக்கமான ஒன்று அல்ல.*

*6. மாற்கு 1:32-ல், 'பிசாசு பிடித்தவர்கள்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்' என்ற அர்த்தத்தில், கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது ......................... ஒடுக்கப்பட்டு, அதனுடைய ஆதிக்கத்தின் கீழ் இருப்பது என்று இதற்கு அர்த்தம். ஒரு கிறிஸ்தவர், பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டிருக்க முடியாது. காரணம், இயேசுவுக்குச் சொந்தமானவர். ஆனாலும் பல தருணங்களில், பல உண்மையான கிறிஸ்தவர்கள் கூட பிசாசுகளினால் பாதிக்கப்படுகிறார்கள், பிசாசுகளினால் ஆட்கொள்ளப்படுகிறார்கள், பிசாசுகளினால் உபத்திரவப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் பல விஷயங்களில், அவர்கள் முழுமையான ஒரு கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.*

*7. மாற்கு 1:32-ஐ வாசிப்போம்: "சாயங்காலமாகி சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்." ........................., பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டிருத்தலுக்கும் இடையே இயேசு எந்த வகையிலும் வித்தியாசத்தைப் பார்க்கவில்லை என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். கிட்டத்தட்ட எப்பொழுதுமே, வியாதிப்பட்டவர்களுக்கும், பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டவர்களுக்கும் இயேசு ஒட்டுமொத்தமாக ஒரே ஊழியத்தைத்தான் செய்தார்.*

*8. மிகவும் அரிதாக, விதிவிலக்காக, ஒருவேளை சிறைச் சாலைகளில் இருப்பவர்களுக்கும், மனநல மருத்துவமனை களில் இருப்பவர்களுக்கும்தான் விடுதலை தேவைப்படும் என்ற எண்ணம் பலருக்குள் இருக்கின்றது. ஆனால் அது உண்மை அல்ல. இயேசு கட்டுப்பாடான யூதர்களைக் கையாண்டார். அவர்கள் ஒவ்வொரு ஓய்வுநாளும் ......................... சந்தித்தார்கள். வாரத்தின் எஞ்சிய நாட்களில், அவர்கள் தங்களுடைய குடும்பங்களை அக்கறையாய் கவனித்துக் கொண்டார்கள், தங்களுடைய வயல்வெளியை பராமரித்தார்கள், கடலில் மீன்பிடித்தார்கள், தங்களுடைய வணிகத்தைச் செய்தார்கள், இன்னும் பல காரியங்களில் ஈடுபட்டார்கள். அடிப்படையில், அவர்கள் தேவபக்தியுள்ளவர்கள், சமுதாயத்தில் கௌரவமான நிலையில் இருந்தவர்கள். ஆனால் அவர்களுடைய*

*வாழ்க்கையின் சில விஷயங்களில், அவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் வாழவில்லை. ஒரு குற்றவாளிக்கோ அல்லது ஒரு மனநோயாளிக்கோ அல்லது ஒரு பைத்தியத்திற்கோதான் விடுதலை தேவைப்படும் என்ற எண்ணம் நமக்குள் இருக்கக்கூடாது.*

*9. லூக்கா 4:40-41 வசனங்களில், சுகமளிக்கும் ஊழியமும், விடுதலையின் ஊழியமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை நாம் திரும்பவும் பார்க்கிறோம். ஜனங்கள் .............................. படியால், அங்கு வந்தனர். ஆனால் பல சூழ்நிலைகளில், அவர்களுக்கு சுகம் உண்டாக வேண்டுமென்றால், தீய ஆவிகள் துரத்தப்பட வேண்டியதாயிருந்தது. இந்தச் சம்பவத்தில், இயேசு அவர்கள் ஒவ்வொருவர் மீதும் தன் கைகளை வைத்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.*

## *சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்*

*10. தீய ஆவிகளை துரத்தும்படி முதலில் அதிகாரம் கொடுக்கப்படாமல், புதிய ஏற்பாட்டில் ஒருவரும் ........................... பிரசங்கிக்கும்படி அனுப்பப்படவில்லை. இதில் பன்னிரண்டு பேர் அனுப்பப்பட்ட சம்பவமும் (மத்தேயு 10:5-8), எழுபது பேர் அனுப்பப்பட்ட சம்பவமும் (லூக்கா 10:17), மாற்கு 16 மற்றும் மத்தேயு 28-ல் இயேசு கொடுத்த முக்கியமான கட்டளைகளும் இதில் உள்ளடங்கியிருக்கிறது. பிலிப்பு, வேதாகமத்தில் சுவிசேஷகர் என்றழைக்கப்பட்ட ஒரே நபராயிருந்தான். அவனும் பிசாசுகளைத் துரத்தினான் என்று எழுதப்பட்டிருக்கிறது (அப்போஸ்தலர் நடபடிகள் 8:5-8).*

*11. நமக்குள் அல்லது நம் உதவியை நாடுகிற மற்ற வர்களுக்குள் பிசாசுகளை அடையாளம் கண்டறியும்படி நாம் முற்படும்போது, ஆவியானவரின் இரண்டு வரங்கள் (1 கொரிந்தியர் 12:7-11) நமக்கு உதவி செய்கின்றன:*

*(அ) .............................. பகுத்தறிதல்*

*(ஆ) ................... உணர்த்தும் வசனம்*

## பிசாசுகள், தீய அல்லது அசுத்த ஆவிகளின் சுபாவம்

*12. இந்த இரண்டு முக்கியமான வரங்களைத் தவிர, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட மண்டலத்தில், நமக்குள் அல்லது மற்றவர்களுக்குள் பிசாசுகளின் பிரசன்னத்தைக் குறித்து நம்மை எச்சரிக்கக்கூடிய இன்னும் பல அறிகுறிகள் இணைந்து காணப்படுகின்றன. முதல் அறிகுறி, பிசாசுகள் ........................... - ஒரு சரீரத்திற்குள் நுழையும்படி தீவிர வாஞ்சை கொண்ட சரீரமற்ற நபர்கள்.*

*13. சாத்தான், தீய ஆவிகளுக்கு இரண்டு முக்கியமான இலக்குகளை வேலையாகக் கொடுத்திருக்கிறான்:*

*(அ) கிறிஸ்துவை இரட்சகராக ...................... கொள்ள விடாதபடி உங்களைத் தடுப்பதாகும்.*

*(ஆ) முதல் இலக்கை அடைவதில் அவை தோற்று விட்டால், அவற்றின் இரண்டாவது இலக்கு இதுதான்: கர்த்தராகிய இயேசுவுக்காக பலனுள்ள விதத்தில் ............................ உங்களைத் தடுப்பதாகும்.*

*14. மாம்சத்திற்கும், பிசாசுகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டியது, அத்தியாவசியமானதாயிருக்கிறது:*

*(அ) .................... என்பது ‘‘பழைய சுபாவத்தை’’ அல்லது ‘‘பழைய மனுஷனை’’ குறிக்கின்றது.*

*(ஆ) ........................., ஒரு மனுஷனுடைய ஆளுமைக்குள் நுழைந்து, ஆக்கிரமிப்பு செய்கிறவைகளாயிருக்கின்றன.*

நீங்கள் இதை இவ்வாறாகவும் சிந்திக்கலாம். மாம்சம் என்பது பிணமாகவும், பிசாசுகளை பிணந்தின்னிக் கழுகுகளாகவும் சிந்தித்துப் பாருங்கள். பிணங்கள் இல்லாத இடத்தில், கழுகுகளுக்கு வேலைசில்லை. “பிணங்கள் எங்கேயோ, அங்கே கழுகுகள் கூடும்,” என்று இயேசு சொன்னார். மாம்ச சிந்தையிலும், அதன் பாவத்திலும் ஊறிப் போயிருக்கிற, இரட்சிக்கப்படாத மனுஷனுடைய சரீரத்தின் மீது, கழுகுகள் வந்து கூடும் என்பது நிச்சயம்.

*15. மாம்சம் மற்றும் பிசாசுகள் என்ற பிரச்சனைகளுக்கான தீர்வுகள் முற்றிலும் வித்தியாசமானது.*

*(அ) மாம்சம் என்ற பிரச்சனைக்கான தீர்வு, ................ - கலாத்தியர் 5:24 சொல்கிறது: "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."*

*(ஆ) பிசாசுகள் என்ற பிரச்சனைக்கான தீர்வு, அவைகளைத் ..........................................*

*இந்தத் தீர்வுகளை நீங்கள் இடம் மாற்ற முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - அதாவது* **நீங்கள் மாம்சத்தை துரத்த முடியாது. நீங்கள் பிசாசுகளை சிலுவையில் அறையவும் முடியாது.**

## *பிசாசுகளின் குணங்களும், அவற்றின் நடவடிக்கைகளும்*

நீங்கள் உண்மையான, நேர்மையான, அர்ப்பணிப்புள்ள ஒரு கிறிஸ்தவராக இருக்கின்றீர்கள். உங்களுடைய வேதாகமத்தை தினமும் வாசிக்கின்றீர்கள், ஜெபிக்கின்றீர்கள், கர்த்தராகிய இயேசுவோடு ஒழுங்கான ஐக்கியம் கொண்டிருக்கிறீர்கள், வாஞ்சையோடு கர்த்தருக்கு ஊழியம் செய்கின்றீர்கள். ஆனால் விசித்திரமான ஒரு பிரச்சனையை நீங்கள் சந்திக்கின்றீர்கள். ஏதோ ஒன்று உங்களை வேதனைப்படுத்துகிறது, ஏதோ ஒன்று உங்களுக்கு எரிச்சலைக் கொடுக்கின்றது, ஏதோ ஒன்று உங்களை கீழே தள்ளுகிறது, ஏதோ ஒன்று உங்களைக் கட்டிப் போடுகின்றது, ஏதோ ஒன்று உங்களை அடிமைப்படுத்துகின்றது. நீங்கள் எல்லா தீர்வையும் முயற்சித்து விட்டீர்கள். நீங்கள் ஜெபித்திருக்கிறீர்கள், நீங்கள் உபவாசித்திருக்கிறீர் கள், உங்களை மரித்தவர்களாக எண்ணியிருக்கிறீர்கள். ஆனாலும் உங்களுடைய பிரச்சனையை இன்னும் தீர்க்க முடியவில்லை. இதுதான் உங்கள் நிலை என்றால், நிச்சயமாக, நீங்கள் ஒரு பிசாசோடு போராடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லலாம்.

*16. பிசாசுகளின் ஒன்பது* **குணங்களைச் சார்ந்த நடவடிக்கைகள்** *கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்டவை உங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் என்றால் அல்லது இவை மிகவும் தீவிரமாய் உங்களுக்கு எதிராக கிரியை செய்து கொண்டிருக்கின்றன*

என்றால், நீங்கள் சோதித்துப் பார்க்க ஆரம்பிக்க வேண்டும். உங்களுக்கு விடுதலை தேவையாயிருக்கலாம். இவை பிசாசுகளின் நடவடிக்கைகள் என்பதையும், சரீரங்கள் இல்லாத ஆவிகளோடு நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

(அ) பிசாசுகள் ............................ - தீமையைச் செய்யும்படி அவை ஜனங்களைத் தூண்டுகின்றன. பெரும்பாலும், அவை அதை வார்த்தையின் வடிவிலோ, தவறான ஆலோசனை களைக் கொடுக்கிற சத்தத்தின் மூலமாகவோ செய்கின்றன.

(ஆ) பிசாசுகள் ........................ - அவை உங்களை நன்கு அறிந்திருக்கின்றன. அவை உங்களுடைய நடவடிக்கைகளை கண்காணிக்கின்றன. அவை உங்களுடைய பெலவீன நேரங்களையும், உங்களுடைய தனிப்பட்ட பெலவீன ங்களையும் அறிந்திருக்கின்றன. எப்பொழுது எப்படி உங்களுடைய வாழ்க்கைக்குள் நுழைய வேண்டும் என்பதை அவை அறிந்திருக்கின்றன.

(இ) பிசாசுகள் ................................ - இது பெரும்பாலும் மன்னியாமையின் விளைவினால் நடக்கின்றது. உங்களுடைய இருதயத்தில் ஒருவரை நீங்கள் இன்னும் மன்னியாமல் இருக்கின்றீர்கள் என்றால், வேதனைப்படுத்துகிற பிசாசுகளுக்கு நீங்கள் ஒரு எளிதான, நியாயமான இலக்காக இருப்பீர்கள். ஆர்த்ரைட்டீஸ், காலோ கையோ மடங்கி முறுக்கிக் கொள்ளுதல், முடக்கு வாதம், உறுப்பு செயலிழந்து போகுதல் போன்றவை மூலம், பிசாசுகள் சரீரப்பிரகாரமான வேதனை களைக் கொடுக்கின்றன. பொய் சொல்லி, குற்றஞ்சாட்டுகிற ஆவி, பைத்தியமாகி விடுவோமோ என்று பயப்படுகிற நிலைக்குக் கொண்டு செல்கிறது. அது உங்களுடைய சமாதானத்தையும், இரட்சிப்பைக் குறித்து உங்களுக்குள் இருக்கும் நிச்சயத்தையும் திருடி விடுகிறது. பிசாசுகள் மனதளவில் இப்படிப்பட்ட வேதனைகளைக் கொடுக்கின்றன.

(ஈ) பிசாசுகள் ......................... - கட்டாயப்படுத்தி, நிக்கோடின், ஆல்கஹால் மற்றும் பெருந்தீனிப் பழக்கத்திற்குள் ஈடுபடுத்துவது, பிசாசுகளின் கிரியையாக இருக்கிறது.

*(உ) பிசாசுகள் ................................ - நீங்கள் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவிடமிருந்து மன்னிப்பைப் பெற்ற பிறகும், அதே பாவத்தைத் திரும்பவும் செய்வதற்கான தீவிர விருப்பம், நீங்கள் அதை வெறுத்தாலும், உங்களுக்குள் இருக்கும் என்றால், நீங்கள் அதற்கு அடிமைப்பட்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.*

*(ஊ) பிசாசுகள் ................................ - அவை உங்களை அழுக்காக, அசுத்தமாக உணர வைக்கின்றன. குறிப்பாக, நீங்கள் தேவனை ஆராதிக்கும்படி அவை அப்படிச் செய்கின்றன.*

*(எ) பிசாசுகள் ........................... - தற்பெருமை, வஞ்சனைக்குக் கதவைத் திறந்து விடுகின்றது. ஆவிக்குரிய வஞ்சனையின் எல்லா வடிவங்களும், பிசாசிடமிருந்து உண்டாகின்றன.*

*(ஏ) பிசாசுகள் பெலவீனப்படுத்துகின்றன, களைப்படையச் செய்கின்றன, வியாதிப்படுத்துகின்றன அல்லது ........................ - சாத்தான் ஒரு கொலைபாதகன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.*

*(ஐ) பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் வழக்கமாக ஏதோ ஒரு விஷயத்தில், ............................. இருப்பார்கள். ஆனால் இளைப்பாறுதலோடும், மெய்யான சமாதானத்தோடும் வாழ்கிறவர்களுக்கு விடுதலை தேவைப்படாது.*

## *பிசாசுகள் தங்கி வாசம் பண்ணக்கூடிய இடங்கள்*

நீதிமொழிகள் **25:28**-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது:

> *தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்.*

இந்த வசனம், ஒரு மனுஷனுடைய உள்ளான சுபாவத்தை ஒரு பட்டணத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறது. ஆவிக்குரிய பாதுகாப்புகள் ஒரு மனுஷனுக்குள் இல்லையென்றால், அந்தப் பட்டணத்திற்குள் கிட்டத்தட்ட எல்லா வகையான தீய ஆவிகளும் நுழைய முடியும். போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையான ஒரு நபரை சிந்தித்துப் பாருங்கள். இந்த வசனம் அந்த நபரைக் குறித்து துல்லியமாகப் பேசுகிறது. அவனுடைய மதிற்சுவர்கள் உடைந்து கிடக்கின்றபடியால், எல்லா வகையான தீமைகளும் அவனுக்குள் நுழைய முடியும்.

ஒரு பட்டணத்தில், நிறைய வித்தியாசமான பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதியில், பணக்காரர்கள் வாழ்கின்றனர். இன்னொரு பகுதியில், ஏழை மக்கள் குடிசைகளில் வாழ்கின்றனர். வேறொரு பகுதியில், வணிகமும், வங்கிப் பரிமாற்றங்களும் நடக்கின்றன. விளையாட்டுகள் விளையாடுவதற்கென்று இன்னொரு பகுதி இருக்கின்றது. குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் இன்னொரு பகுதியில் வாழ்கின்றனர். உங்களுக்குள்ளும், எனக்குள்ளும், ஒரு பட்டணம் இருக்கின்றது. அதன் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான ஆவிகள் வாசம் பண்ணுகின்றன.

*17. பிசாசுகள் நமக்குள் ஒரு தாக்கத்தை உண்டாக்கும்படி கீழ்க்காணும் பத்து விஷயங்களில் முயற்சிக்கின்றன:*

*(அ) மனப்பான்மைகளும், ............................ - நிறைய தீய ஆவிகள் கூட்டமாக சேர்ந்து இந்த விஷயத்தில் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும், அடுத்த ஆவிக்கு வழியைத் திறந்து விடுகின்றன. மிகவும் மோசமான ஒரு வேர்ப் பிரச்சனை, நிராகரிக்கப்படுதலாகும். அது பல்வேறு வகையான உணர்வுப் பிரச்சனைகளில் கொண்டு போய் விடுகின்றது: தனிமை, சுயப்பரிதாபம், துன்பம், மனச்சோர்வு, விரக்தி, முடிவில் மரணம். இதே போன்றதொரு இன்னொரு பிரச்சனை, முரட்டாட்டமாகும். இது மனக்கசப்பு, பகைவைராக்கியம், கோபம், வன்முறை போன்ற பிரச்சனைகளுக்குள் கொண்டு போய் விடுகிறது.*

*(ஆ) .............., யுத்தகளமாயிருக்கிறது - இந்தப் பகுதியைப் பாதிக்கும் குணமுடைய ஆவிகள்: சந்தேகம், அவிசுவாசம், குழப்பம், இருமனம், மனக்கோளாறு.*

*(இ) ................ - இந்தப் பகுதியைப் பாதிக்கும் முக்கியமான ஆவி, பொய் சொல்லுகின்ற ஆவியாகும். ஆனால் குற்றப்படுத்துகிற ஆவி, புறங்கூறுகிற ஆவி, மிகைப்படுத்திப் பேசுகிற ஆவி, தேவ தூஷணம் சொல்கிற ஆவி, அசுத்த வார்த்தைகளைப் பேசுகிற ஆவி, எதிர்மறையான வார்த்தைகளைப் பேசுகிற ஆவியையும் நாம் இதோடு சேர்க்க வேண்டும்.*

*(ஈ) ....................... - இது கட்டாய பாலியல் பாவங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது. எடுத்துக்காட்டிற்கு,*

*சுய இன்பம், வேசித்தனம், ஓரினச் சேர்க்கை, பெண்களுக்கிடையேயான தவறான பாலுறவு, ஒரு ஆண் பெண்ணைப் போன்ற நடை உடை பாவனையுடன் வாழ்கின்ற பாவம், இன்னும் பல.*

*(உ) ........................ - இயல்புக்கு முரணான, தகாத விருப்பங்களையும், ஆசை இச்சைகளையும் இது குறிப்பிடுகின்றது. இது ஆரோக்கியமற்றதாய், அழிவுக்கேதுவானதாய் மாறி விடுகின்றது. "கண்களின் இச்சை" மற்றும் "மாம்சத்தின் இச்சையைக்" குறித்து 1 யோவான் 2:16 பேசுகிறது. தவறான காட்சிகளைக் கண்டு இன்பமுறுதலும், பெருந்தீனிப் பழக்கமும் (அளவுக்கு அதிகமாக இச்சையோடு உண்ணுகின்ற பழக்கமும்) இதில் உள்ளடங்கியிருக்கிறது.*

*(ஊ) .................................. - விரக்தி எனும் மரக்கன்றிலிருந்து கிளைகள் வளருவதுபோல இது இருக்கின்றது. மது அருந்தும் பழக்கத்தை, புகைபிடிக்கும் பழக்கத்தை, அளவுக்கு அதிகமாக இச்சையோடு உண்ணும் பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்று நாம் விரும்பலாம். ஆனால் இந்தத் தவறான பழக்கங்கள் எந்த வேரிலிருந்து வளருகின்றன என்பதை தேவனே நமக்கு வெளிப்படுத்தும்படி, நாம் அவரிடம் ஜெபிக்க வேண்டும். நாம் இந்த வேர்ப் பிரச்சனையைக் கையாளவில்லை என்றால், ஒரு தவறான பழக்கத்திலிருந்து இன்னொரு தவறான பழக்கம் என மாறிக் கொண்டே இருப்போம்.*

*(எ) ............................ மண்டலம். - இந்தப் பரந்து விரிந்த மண்டலம், ஆழமான, அந்தகாரமான ஒரு படுகுழியாயிருக்கிறது. வெளியே இருந்து பார்க்கும்போது, மரியாதைக்குரிய ஒன்றாக இருப்பதுபோல தெரிந்தாலும், இதன் ஒவ்வொரு பகுதியிலும் பிசாசின் ஆதிக்கம் மட்டுமே காணப்படுகிறது.*

*(ஏ) எல்லா பொய்யான ................. - மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சாத்தான், ஒரு சிறந்த நிபுணனாக இருக்கின்றான். ஒவ்வொரு பொய்யான மதத்திலும் பிசாசின் பிண்ணனி நிச்சயமாக இருக்கின்றது.*

*(ஐ) ........................ - வேதவசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு*

*விலகி, போதிக்கப்படுகிற வேற்றுமையான உபதேசங்கள் (எடுத்துக்காட்டிற்கு, 1 தீமோத்தேயு 1-3 பகுதியை வாசித்துப் பாருங்கள்).*

*(ஓ) நம்முடைய மாம்ச .................... - இது எப்பொழுதும் இல்லையென்றாலும், வலிப்பு போன்ற வியாதிகளைக் குறிக்கின்றது.*

இவ்வளவு ஆழமாய், இந்தக் காரியங்களையெல்லாம் நாம் கற்றுக் கொள்வதற்குக் காரணம், நாம் விடுதலையாக வேண்டும் என்பதற்காகத்தான். நம்மைக் குற்றப்படுத்தும்படி, தேவன் இந்த வெளிப்பாட்டிற்குள் நம்மைக் கொண்டு வரவில்லை. மாறாக, சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் கிருபாதார பலி மரணத்தின் மூலம், நம்மை விடுதலையாக்கும்படியாகவே தேவன் இதைச் செய்கின்றார்.

விடுதலை ஊழியத்தின் அடிப்படை என்ற இந்தத் தொடரின் இரண்டாவது செய்தியில், எவ்வாறு விடுதலையாக்கப்பட வேண்டும், திரும்பவும் பிசாசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வராமல், எவ்வாறு நம் விடுதலையைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை டெரிக் நமக்கு வெளிப்படுத்தப் போகிறார்.

இதை முடிக்கின்ற இந்த நேரத்தில், இந்த முக்கியமான வெளிப்பாட்டை கர்த்தராகிய இயேசுவிடம் ஒப்புக்கொடுத்து, ஜெபிப்போம்:

*பிதாவாகிய தேவனே, என் வாழ்க்கையில், கண்களுக்குத் தெரியாத விதத்தில் கிரியை செய்து கொண்டிருக்கிற பிசாசுகளைக் குறித்து இந்த வெளிப்பாட்டை எனக்குக் கொடுத்திருக்கிறீர். உமக்கு நன்றி. என் வாழ்க்கையில் காணப்படுகிற தீய ஆவிகளின் ஆதிக்கம் ஒவ்வொன்றையும் எனக்கு வெளிப்படுத்தும். கிறிஸ்துவுக்குள் முழுமையான விடுதலையைக் கண்டடைய எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில், ஜெபிக்கின்றேன். ஆமென்.*

நீங்கள் ஜெபித்து, கர்த்தருக்காக காத்திருக்கின்ற நேரத்தில், எந்தத் தீய ஆவிகளிடமிருந்து உங்களை விடுதலையாக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அவற்றை உங்களுக்குக் காண்பிக்கும்படி அவரிடம் கேளுங்கள். உங்களை ஒடுக்கிக் கொண்டிருப்பதாக நீங்கள் உணருகிற ஆவிகளைக் குறித்து எழுதுங்கள். எதிரியை எவ்வாறு துரத்துவது என்பதைக் கற்றுக் கொள்ளும்படி நாம் முற்படும்போது, நீங்கள் நன்றாக

ஆயத்தமான நிலையில் இருப்பீர்கள்.

392-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/29**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் பதினைந்து>>*

*விடுதலை ஊழியத்தின் அடிப்படை - பாகம் 2*[4129]

# எதிரியை எவ்வாறு வெளியேற்றுவது ?

*அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இந்தத் தொடரின் முதல் செய்தியில், நம்முடைய எதிரியாகிய பிசாசைக் குறித்தும், பிசாசு தன்னுடைய ஆதிக்கத்தின் மூலம் நம்மை எந்தெந்த வழிகளிலெல்லாம் ஒடுக்கும்படி நாடுகிறான் என்பதைக் குறித்து நாம் கற்றுக் கொண்டோம். குறிப்பாக, இயேசு இந்தப் பூமியில் ஊழியம் செய்தபோது, பிசாசுகளை எவ்வாறு கையாண்டார் என்பதையும் நாம் கற்றுக் கொண்டோம். விடுதலையின் ஊழியத்திற்கும், சுகமளிக்கும் ஊழியத்திற்கும் இடையே உள்ள தொடர்பையும் கற்றுக் கொண்டோம். முதலில், பிசாசுகளை வெளியே துரத்துவதற்கான அதிகாரத்தைக் கொடுக்காமல், தேவனுடைய ராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிக்கும்படி ஒருவரும் ஒருபோதும் அனுப்பப்பட்டதில்லை என்பதையும், பிசாசுகளின் சுபாவம் மற்றும் அவற்றின் குணங்களையும், பிசாசுகள் வாசம் பண்ணக்கூடிய முக்கியமான இடங்கள் எவை என்பதையும் நாம் கற்றுக் கொண்டோம்.

நம்முடைய வாழ்க்கையின் இந்த முக்கியமான விஷயத்தில், இயேசு கிறிஸ்துவின் மூலம், முழுமையான விடுதலைக்குள் தேவன் நம்மை நடத்த விரும்புகிறார். இந்தச் செய்தியிலும், நாம் அதைக் குறித்து தொடர்ந்து கற்றுக் கொள்வோம். ஆவிக்குரிய பிரச்சனையை நாம் கையாளும்போது, நாம் அந்தப் பிரச்சனையின் வேர்ப் பகுதிக்குச் செல்ல வேண்டும். எங்கே அந்தப் பிரச்சனை ஆரம்பித்தது என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிசாசுகள் எவ்வாறு உள்ளே வருகின்றன என்பதைக் குறித்து டெரிக் நமக்குப் போதிக்கப் போகின்றார். செய்தியின் முடிவில், நாம் எவ்வாறு விடுதலையாக்கப்பட முடியும் என்பதை நமக்குக் காண்பிப்பார்.

ஏன் சிலர் விடுதலையாக்கப்படவில்லை என்பதற்கான விளக்கம், இந்தச் செய்தியின் கடைசி பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களை விடுதலையாக்க முடியாது என்ற அர்த்தத்தில் இது சொல்லப்படவில்லை. மாறாக, விடுதலை உண்டாகாதபோது அல்லது ஒரு பகுதியளவு மட்டுமே விடுதலை உண்டாகும்போது, எதைத் திரும்பவும் சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். செய்தியின் கடைசியில், திரும்பவும் பிசாசினுடைய ஆதிக்கத்தின் கீழ் வராதபடி, நம்முடைய விடுதலையை நாம் எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்த சில ஆலோசனைகளை டெரிக் நமக்குக் கொடுக்கிறார். இது நமக்கு உதவியாயிருக்கும்.

'எதிரியை எவ்வாறு வெளியேற்றுவது' என்ற செய்தியை இப்பொழுது நாம் கேட்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

உங்களை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட்டிருக்கிறபடியால், நீங்கள் இந்தச் செய்தியை திரும்பவும் நினைவுகூர்ந்து, கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது, உங்களுக்குள் ஒரு மாற்றம் உண்டாகும் என்று நிச்சயமாக நம்பலாம். ஒடுக்கப்பட்ட நிலையில் நாம் வாழ வேண்டும் என்று தேவன் ஒருபோதும் நினைத்ததில்லை. தேவனுடைய சுத்திகரிப்பின் வேலையில், விடுதலையின் ஊழியம் ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றது. நீங்கள் இன்னும் சில ஆவிகளிடமிருந்து விடுதலையாகவில்லை என்பதுபோல உணருவீர்கள் என்றால், கீழ்க்காணும் போதனையைப் பின்பற்றிச் செயல்படுங்கள். நீங்கள் தவற விட்ட படிகள் அல்லது நிபந்தனைகள் ஏதாகிலும் இருந்தால், அதை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி, கர்த்தரிடம் ஜெபியுங்கள். இயேசு சர்வ வல்லவர். அவருடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிற நிபந்தனை களை நாம் பூர்த்தி செய்யும்போது, அவருக்கு எதிராக ஒரு பிசாசும் நிற்க முடியாது. எதிரியிடமிருந்து நாம் விடுதலையைப் பெற்றுக் கொள்வோம்.

யோவேல் 2:32 சொல்கிறது: "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்." சிலுவையில் இயேசு நமக்காக விலைக்கிரயம் கொடுத்து வாங்கின நம்முடைய

இரட்சிப்பின் ஒரு அங்கமாக, விடுதலையின் ஊழியம் இருக்கிறது. இது நம் கர்த்தராகிய கிறிஸ்துவினுடைய ஆளுகையின் கீழ் நம்மைக் கொண்டு வருவதற்கு அத்தியாவசியமானதாயிருக்கிறது.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

## *மனுஷர்களுடைய ஆளுமைக்குள்ளும், அவர்களுடைய வாழ்க்கைக்குள்ளும் பிசாசுகள் எவ்வாறு நுழைகின்றன?*

குறிப்பாக, ஏழு வழிகள் மூலம் வருகின்றன:

**1. மந்திரவாத, பில்லிசூனியக் கிரியைகள்: -**

*(அ) உங்களுடைய ............................ எங்கோ ஒரு இடத்தில், மந்திரவாத, பில்லிசூனியக் கிரியைகள் நடந்திருக்கின்றன. மந்திரவாத, பில்லிசூனியக் கிரியைகளைக் குறித்து நாம் பேசும்போது, நாம் பொய்யான தெய்வங்களை வழிபடுவதைக் குறித்துப் பேசுகின்றோம். இது "எனக்கு முன்பாக வேறு எந்த தெய்வங்களையும் வழிபடாதே" மற்றும் "வழிபடும்படி உனக்கென்று ஒரு விக்கிரகத்தைச் செய்து கொள்ளாதே" என்ற முதல் இரண்டு அடிப்படை கட்டளைகளை மீறுகிற ஒரு செயலாகும். விக்கிரகத்தின் எல்லா வடிவங்களும், ஜனங்களை உடனடியாக பிசாசுகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகின்றன.*

*(ஆ) யாத்திராகமம் 20-ல் எழுதப்பட்டிருக்கிற இந்த முதல் இரண்டு கட்டளைக் குறித்து சொல்லும்போது, தகப்பன்மார்கள் செய்கிற பாவத்தை மூன்றாம், ...................... தலைமுறை வரை விசாரிப்பேன் என்று தேவன் சொல்கிறார் (5-ம் வசனம்). அப்படியென்றால், நம்முடைய 30 முன்னோர்களில் ஒருவர் மந்திரவாத, பில்லிசூனியக் கிரியைகளில் ஈடுபட்டிருந்தார் என்றால், அது பிசாசு நம் வாழ்க்கைக்குள் நுழைவதற்கு கதவைத் திறந்து விடும்.*

*(இ) .............................. தேவையை தேவன் வெளிப்படுத்தும்போது, பிரச்சனை இருப்பதற்காக ஒருவரும் நம்மைக் குற்றப்படுத்துவதில்லை. இயேசுவின் மூலம்*

*தேவன் நமக்குத் தருகின்ற தீர்வை நாம் நிராகரித்தால்தான், ஆக்கினைத்தீர்ப்பு வரும்.*

**2. மந்திரவாத, பில்லிசூனியக் கிரியைகளில் நம்முடைய தனிப்பட்ட ஈடுபாடு** - *மந்திரவாத, பில்லிசூனிய, விக்கிரக ஆராதனைக் கிரியைகளில் ஒருவன் ஈடுபடுவான் என்றால், அது கர்த்தராகிய இயேசுவுக்கு .................................. என்று உபாகமம் 18:10-12 வசனங்கள் நமக்குச் சொல்கின்றன. மந்திரவாதக் கிரியைகளில் பாதுகாப்பாக ஈடுபடுவதற்கு எந்த வழியும் இல்லை, எவ்விதத்திலும் இல்லை.*

**3. கருவிலேயே உண்டாகும் பாதிப்புகள்**

*(அ) பலர் தங்களுடைய தாயின் .................. இருக்கும்போதே, அவர்களுடைய வாழ்க்கையின் அந்தக் கட்டத்திலேயே ஒரு பொல்லாத ஆவி அவர்களுக்குள் நுழைந்து விடுகின்றது.*

*(ஆ) .................................., மிகவும் பொதுவான ஒரு காரணமாக இருக்கின்றது. ஏதோ ஒரு காரணத்தினால், அம்மா, தன் கருவில் வளரும் குழந்தையை நிராகரித்து விடுகின்றாள் - திருமணமாகாத நிலையில் கர்ப்பமானதன் நிமித்தம் உண்டாகிற நிந்தை அவமானமோ, அவளுடைய கணவன் அவளை விட்டு பிரிந்து சென்றதோ அல்லது பொருளாதார அழுத்தமோ அதற்கு காரணமாக இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், அந்தச் சிறு குழந்தை அந்த உணர்வுகளுக்கு மிகவும் மென்மையானதாயிருக்கிறது. அதன் விளைவாக, நிராகரிப்பின் ஆவி ஏற்கனவே தனக்குள் இருக்கின்ற நிலையில், அந்தக் குழந்தை பிறக்கின்றது.*

*(இ) ஒரு .................... பெண் சில நேரங்களில், அதிர்ச்சியான அல்லது பயத்தின் ஒரு தருணத்தை எதிர்கொண்டிருக்கலாம். இதன் விளைவாக, பயத்தின் ஆவி அந்தக் குழந்தையைப் பாதிக்கிறது. முடிவில், அந்தக் குழந்தை, பயத்தின் ஆவியோடு பிறக்கின்றது.*

**4. விழுந்துபோன பழைய சுபாவத்தின் ஆதிக்கம்** - *பலர் தங்களைச் சுற்றியிருப்பவர்களை விழுந்துபோன பழைய சுபாவத்தின் ஆதிக்கத்தின் மூலம் ............................ தங்களுடைய பிடிக்குள் வைத்துக் கொள்ளும்படி நாடுகிறார்கள்.*

5. **சிறுவயதின் ஆரம்பத்தில் உண்டாகும் அழுத்தங்கள்**

*(அ) ஒரு சிறுபிள்ளையின் ஆவிக்குரிய மற்றும் உணர்வுரீதியான ....................................., விடாப்பிடியான பிசாசின் அழுத்தத்திலிருந்து காத்துக் கொள்வதற்கு, போதுமான வலிமையைக் கொண்டதாக இருப்பதில்லை.*

*(ஆ) யாக்கோபு 3:16 சொல்கிறது, "................ விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் (குழப்பமும்) சகல துர்ச்செய்கைகளுமுண்டு." பெற்றோருக்கு இடையே சண்டை சச்சரவுகளும், பகைவைராக்கியமும், பிரிவினையும் காணப்பட்டால், அது அவர்களுடைய பிள்ளைகளை பிசாசின் அழுத்தத்திற்குள் கொண்டு செல்கிறது. 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் அந்தப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றனர்.*

*(இ) டெரிக் கவனித்துப் பார்த்து அறிந்து கொண்ட ஒரு விஷயத்தை இங்கு சொல்கிறார்: 80 சதவீத பிசாசு பிரச்சனை கள், ஒரு சிறுபிள்ளையின் வாழ்க்கையில் ............ வயதிற்கு முன்பே ஆரம்பித்து விடுகிறது. இதற்கு பெற்றோரே காரணமாக இருக்கிறார்கள்.*

6. **ஒரு கணப்பொழுதில் அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உண்டாகும் பெலவீனம்** - *இது ஒரு கணப்பொழுதில் சரீரத்திலோ அல்லது உணர்விலோ உண்டாகும் ......................... - இது சூழ்நிலைகளைப் பொறுத்து ஒரு நபரை பல்வேறு வகையான பிசாசுகளின் ஆதிக்கத்தின் கொண்டு வருகின்றது. வருத்தம், ஏமாற்றம் அல்லது வலிப்பு என்பதை இதற்கு எடுத்துக்காட்டுகளாய் இருக்கின்றன.*

7. **பாவச் செயல்கள் அல்லது பழக்கங்கள்** - *ஒரு குறிப்பிட்ட ......... பழக்கத்தை விடாமல், திரும்பத் திரும்பச் செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட தருணத்தில் அது பிசாசின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுகின்றது. திரைப்படங்கள், இசை, புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் இன்டர்நெட் போன்றவற்றில் காணப்படுகிற தீமையான விஷயங்களை பார்ப்பதாலும் இது உண்டாகிறது.*

## *எவ்வாறு விடுதலையாக்கப்படுகிறோம்?*

இப்பொழுது நாம் இந்த செய்தித்தொடரின் உச்சகட்டத்திற்கு வந்திருக்கிறோம் - **எவ்வாறு விடுதலையாக்கப்படுகிறோம் ?**

*8. விடுதலையைப் பெறும் விஷயத்தில் தொடர்புடைய முக்கியமான காரியங்களை டெரிக் பட்டியலிட்டிருக்கிறார். அதை கீழ்க்காணும் வரிசையில் பார்ப்போம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் இவையனைத்தும் தொடர்புடையவைகளாய் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. காரணம், தேவன் ஒரு சூத்திரத்தின் அடிப்படையில் செயல்படுவதில்லை. ஆனால் இவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்வோம் என்றால், நிச்சயம் அது பிரயோஜனமாயிருக்கும்.*

*(அ)* **தாழ்மை** *- தேவனுக்கு முன்பாக வர வேண்டும் என்றால், ஒரு முக்கியமான நிபந்தனை, ஒளிவுமறைவில்லாமல், நேர்மையாய், உண்மையாய் வர வேண்டும். காரணம், அவர் சத்தியத்தின் தேவனாய் இருக்கிறார். ஆனால் நேர்மையாய், உண்மையாய் வருவதற்கு* ....................... *அவசியமாயிருக்கிறது. பிரச்சனையை நாம் நியாயப்படுத்த முயற்சிக்கக்கூடாது. அதை ஒத்துக் கொள்ள வேண்டும். அது ஒன்றும் அவ்வளவு பெரிய பிரச்சனை இல்லை என்பதுபோலவும் நாம் நடந்து கொள்ளக்கூடாது. நம்முடைய கௌரவம் முக்கியமா அல்லது நமக்கு விடுதலை முக்கியமா? ஒரு தெளிவான தீர்மானத்தை நாம் எடுக்க வேண்டும். அது உங்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்குமென்றால், அது தற்பெருமையோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையாகத்தான் இருக்கும்.*

*(ஆ)* **இயேசுகிறிஸ்துவின் மீதிருக்கும் உங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்** *- அவர் நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியராக இருக்கிறார் (எபிரெயர் 3:1; எபிரெயர் 4:14). ஆகையால் நாம் சரியான* ...................... *செய்யும்போது, இயேசு நமக்கு உதவி செய்யும்படி வருகிறார். மாறாக, நாம் சரியான அறிக்கையைச் செய்யாதபோது, அவர் வர மாட்டார்.*

*(இ) பாவத்தை அறிக்கை செய்யுங்கள் - நீங்களோ அல்லது உங்களுடைய முன்னோர்களோ செய்த பாவத்தை,*

*தேவனுடைய வார்த்தையும், பரிசுத்த ஆவியானவரும் உணர்த்தும்போது, நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும். தேவன் வெளிப்படுத்துகிற ஒவ்வொன்றையும் நாம் அறிக்கை செய்ய வேண்டும். நம் குடும்பத்தார் செய்த பாவங்களோடு நம்மை அடையாளப்படுத்திக் கொண்டு, அவற்றை பாவமாக நாம் அறிக்கை செய்ய வேண்டும்.*

*(ஈ) எல்லா பாவங்களிலிருந்தும் மனந்திரும்ப வேண்டும் -*

*(1) மனந்திரும்புதல் இல்லாமல் ........................ இல்லை. பிசாசுகளை விட்டுப் பிரிவதற்கு உங்களுக்கு மெய்யாகவே விருப்பம் இல்லையென்றால், தேவன் ஏன் உங்களுடைய நண்பர்களிடமிருந்து உங்களை விடுதலை செய்ய வேண்டும்?*

*(2) நீதிமொழிகள் 28:13 சொல்கிறது: "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்." - அறிக்கை செய்து, .......................... தேவனுடைய இரக்கத்தைப் பெறுவதற்கான இரண்டு திறவுகோல்களாய் இருக்கின்றன.*

*(3) தேவன் சர்வத்தையும் ஏற்கனவே அறிந்தவராய் இருக்கிறார். நம்முடைய பாவங்களைக் குறித்து அறிந்து கொள்ளும்படி, அவற்றை ........................... என்று அவர் நம்மிடம் கேட்கவில்லை. அவர் ஏற்கனவே அவற்றை அறிந்திருக்கிறார். அவர் நம் மீது இரக்கம் காண்பிக்கும்படியாகவே, 'அறிக்கை செய்யுங்கள்' என்று நம்மிடம் சொல்கிறார். காரணம், அவர் நம்மை நேசிக்கிறார்.*

*(உ) மந்திரவாத பில்லிசூனியக் கிரியைகள், விக்கிரக ஆராதனை, சாபங்கள் மற்றும் ......................... சமூகங்களோடு (குறிப்பாக, ப்ரீமேசன்ரி) இருக்கும் தொடர்பை முறித்து விடுங்கள் - இது மனந்திரும்புதலின் ஒரு பகுதியாக இருக்கின்றது. ஆனால் இது இன்னும் அதிக முக்கியத்துவம் உடையதாய் இருக்கிறது. எனவே இதைத் தனியாகச் செய்ய வேண்டும்.*

*(ஊ) மற்றவர்களை மன்னியுங்கள் - எல்லோரையும் மன்னியுங்கள்*

*(1) மாற்கு 11:25-ல், இயேசு இவ்வாறு சொல்கிறார்: "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது,* **ஒருவன் பேரில்**

*உங்களுக்கு* **யாதொரு குறை** *உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு ..........................'' - இந்த நிபந்தனையிலிருந்து ஒருவரும் விலக்கி வைக்கப்படவில்லை.*

*(2) மன்னிக்க வேண்டியது, நம் பொறுப்பாயிருக்கிறது. பிரதானமாக, அவர்கள் நிமித்தம் அல்ல, மாறாக, நம் நிமித்தம், நாம் அதைச் செய்ய வேண்டும். அவர்கள் தங்களை ................. வரும்வரை, நாம் காத்திருக்கக் கூடாது. மன்னித்தல் என்பது மேலான, ஆவிக்குரிய நிலையோ அல்லது உணர்ச்சிப்பூர்வமான ஒன்றோ அல்ல. மாறாக, நம்முடைய நன்மையைக் குறித்த வெளிச்சம் உள்ளவர்களாய் நாம் அதைச் செய்ய வேண்டும்.*

*(ஐ) வெளியே துரத்துங்கள் - இவை அழகான, சுருக்கமான, ஆனால் வல்லமையான, அழுத்தமான வார்த்தைகளாய் இருக்கின்றன. விடுதலை பெறுகின்ற விஷயத்தில், நாம் எதுவும் செய்யாமல் சும்மா இருக்க முடியாது. நாம் எழுந்து செயல்பட வேண்டும். எளிமையான வழி, மூச்சை அழுத்தமாய் வெளியே விடுவதாகும். எபிரெய மற்றும் கிரேக்க மொழிகளில், ஆவி என்ற வார்த்தைக்கு, 'உயிர்மூச்சு அல்லது சுவாசம்' என்ற அர்த்தம் கொண்ட வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நம் நுரையீரல்களில் இருக்கும் புகையை நீக்க வேண்டும் என்றால், நாம் மூச்சை வெளியேற்ற வேண்டும். நாம் ஒரு தீய ஆவியிடமிருந்து விடுதலையாக்கப்பட வேண்டுமென்றால், மூச்சை அழுத்தமாய் வெளியே விடுவதன் மூலம், நாம் அதை நம் சரீரத்திலிருந்து* ...................................

## *ஏன் சிலர் விடுதலையாக்கப்படுவதில்லை?*

ஜனங்களை ஜெபத்தில் வழிநடத்துவதற்கு முன், டெரிக் கையாண்ட இரண்டாவது கடைசி விஷயம், ஏன் சிலர் விடுதலையாக்கப்படுவதில்லை என்பதுதான். இது விடுதலையின் ஊழியத்தில் ஈடுபடப் போகிற வர்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாயிருக்கிறது. தங்களுடைய தனிப்பட்ட விடுதலையை நாடுகிறவர்களுக்கும் இது உதவிகரமாயிருக்கும்.

விடுதலையைப் பெறவில்லை என்றால், அதற்கு அடிப்படைக் காரணம், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததுதான். இங்கு விடுதலை என்பது பெரும்பாலும் ஆவிக்குரிய வல்லமைக்கான ஒரு சோதனை யாய் இருக்காது. மாறாக, ஜனங்கள் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்களா என்பதற்கான ஒரு சோதனையாய் இருக்கிறது. ஜனங்கள் நிபந்தனைகளை பூர்த்தி செய்து விட்டார்கள் என்றால், அவர்கள் விடுதலையாக்கப்படுவார்கள். இது நீங்கள் தனிப்பட்ட விதத்தில் விடுதலையைப் பெறும்படி காத்திருக்கின்ற சூழ்நிலையாக இருக்கலாம் அல்லது விடுதலை தேவைப்படுகிற இன்னொருவருக்கு ஊழியம் செய்கிற சூழ்நிலையில் நீங்கள் இருக்கலாம். இந்தச் சூழ்நிலையில், நீங்கள் உங்களையே ஒரு சிறிய, சாதாரண நபராக பார்க்கலாம். ஆனால் நீங்கள் வெற்றியின் நாயகராகிய கிறிஸ்துவின் பிரதிநிதியாய் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

*9. விடுதலை இங்கே கிடைக்காதபோது, சோதித்துப் பார்க்க வேண்டிய ஒன்பது விஷயங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டிருக்கின்றன:*

*(அ)* **மனந்திரும்பாத நிலை** - .......................... *விருப்ப மில்லாதவர்களுக்கு வேதாகமம் விடுதலையை ஏற்படுத்தி வைக்கவில்லை.*

*(ஆ)* **நாட்டமின்மை** - *விடுதலை,* .................................. *. மட்டுமே உண்டாகிறது. ஆர்வமும், நாட்டமும் இல்லாமல், எதுவும் செய்யாமல் இருப்பது ஒரு பிரச்சனையாகும். குறிப்பாக, ஓரியண்டல் என்ற பொய்யான மார்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இது பெரிய பிரச்சனையாயிருக்கிறது. காரணம், அவர்கள் தங்களுடைய மனதை நடுநிலையின் மீது பதிக்கும்படி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் விடுதலையை நாடித் தேடுகிற ஒரு நிலைக்கு அவர்களைக் கொண்டு வரும்படி, ஒரு உந்துதல் அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது. கிறிஸ்து நமக்கு தீய ஆவிகளின் மீதுதான் அதிகாரம் கொடுத்திருக்கிறார். மனுஷனுடைய சுயசித்தத்தின் மீது அவர் நமக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. இன்னொருவருக்காக நாம் சித்தம் கொண்டு தீர்மானிக்க முடியாது. தங்களுக்குத் தேவையான விடுதலையை அவர்கள்தான் வாஞ்சிக்க வேண்டும்.*

*(இ)* **சுயநலம்** - ..................... *மீதான ஒரு விருப்பம். சில விடுதலையின் ஊழியங்களில், தாங்கள் விடுதலையாக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் உண்மையில் ஜனங்களுக்குள் இருப்பதில்லை. காரணம், அவர்கள் ஏழைகளாய், நிராகரிக்கப்பட்டவர்களாய், புற க்கணிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். அந்த நிலையில் வாழும்போதுதான் மற்றவர்களுடைய கவனம் அவர்கள் மீது விழுகின்றது. சுயநலம், பிசாசின் கவனத்தை ஈர்க்கின்ற ஒரு அழைப்பாயிருக்கிறது.*

*(ஈ)* **மந்திரவாத, பில்லிசூனிய, விக்கிரக ஆராதனைக் கிரியைகளோடு இருக்கும் தொடர்பை முறித்துக் கொள்ளத் தவறுதல்** - ............................... *சம்பந்தப்பட்ட பொருட்கள், பயன்படுத்தி பழக்கப்பட்டுப்போன பொருட்கள், விக்கிரகங்கள், பாலியல் இன்பத்தைத் தூண்டக்கூடிய பொருட்கள், துன்மார்க்கமான புத்தகங்கள், இசை, திரைப்படங்கள் மற்றும் பத்திரிக்கைகளோடு இருக்கும் தொடர்பை முறித்துக் கொள்ள வேண்டும். நினைவுப்பொருட்களாக தங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளை யாரும் பெரும்பாலும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் அவற்றோடு ஒரு தீய ஆவி சேர்ந்தே இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.*

*(உ)* **தீய, விழுந்துபோன சுபாவம் கொண்ட உறவுகளை முறித்துக் கொள்ளத் தவறுதல்** - *எந்தவொரு ஒழுங்கும் அர்ப்பணிப்பும் இல்லாத உறவுகளை, உணர்ச்சிப்பூர்வமான உறவுகளை, ஆழமும் நேர்மையும் இல்லாத உறவுகளை, ஆதிக்கம் செலுத்தி தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்கிற உறவுகளை, தன்னுடைய தனிப்பட்ட லாபத்திற்காக பயன்படுத்திக் கொள்கிற உறவுகளை, தவறான நோக்கம் கொண்ட* ...................... *நாம் முறிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதற்கு நமக்கு தேவனுடைய கிருபை அவசியமாயிருக்கிறது.*

*(ஊ)* **இப்பொழுதும் ஒரு சாபத்தின் கீழ் வாழ்கின்ற நிலை** - *சிலர் சாபத்தின் கீழ் வாழ்கின்றார்கள் என்றால், அந்த சாபம் முறிக்கப்படும்வரை, அவர்களை சுகமாக்க முடியாது. அவர்களை விடுதலையாக்க முடியாது. காரணம், அந்தச் சாபம் அங்கே தங்கியிருக்கும்படி பிசாசுக்கு சட்டப்பூர்வமான*

*உரிமையைக் கொடுத்திருக்கிறது. எனவே முதலில், சாபத்தை முறிக்க வேண்டும். பிறகு அங்கே விடுதலை உண்டாகும்.*

*(எ)* **ஒரு குறிப்பிட்ட பாவத்தை அறிக்கை செய்யத் தவறுதல்** *- இது எந்தப் பாவமாகவும் இருக்கலாம். ஆனால் பொதுவான எடுத்துக்காட்டுகளாக, கருக்கலைப்பு, மற்றவர்களை தவறாகப் பயன்படுத்துதல், கள்ள உடலுறவு அல்லது ......................... வெளியே உறவு கொள்ளுதல்.*

*(ஏ) தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தினால் இன்னும் பிரிக்கப்படாத நிலை - ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள். ஆனால் செங்கடலின் தண்ணீரினால்தான், அவர்கள் எகிப்திலிருந்து பிரிக்கப்பட்டார்கள். ...................... தான், எகிப்தியர் அவர்களை பின் தொடருவதிலிருந்து தடுத்தது.*

*(ஐ) ஒரு பெரிய யுத்தத்தின் பகுதியில், சபையார் சேர்ந்து செயல்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது - சிலரை "சாத்தானுடைய யுத்தகளங்கள்" என்று டெரிக் சொல்கிறார். சிலருக்காக கிறிஸ்துவின் முழு ....................... பொறுப்பேற்று செயல்பட வேண்டும்.*

## *நம்முடைய விடுதலையை எவ்வாறு காத்துக் கொள்வது?*

கடைசியாக, நம்முடைய விடுதலையை காத்துக் கொள்ளும்படி உறுதி செய்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் பார்க்கப் போகின்றோம். இது மிகவும் அதிக முக்கியத்துவம் உடைய ஒரு விஷயமாயிருக்கிறது. காரணம், மத்தேயு **12:43-45** வசனங்களில் இயேசு இவ்வாறு சொல்கிறார்:

> *அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல், "நான் விட்டு வந்த என் வீட்டுக்கு திரும்பிப் போவேன்," என்று சொல்லி, அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு, திரும்பிப் போய், தன்னிலும் பொல்லாத*

*வேறு ஏழு ஆவிகளை தன்னோடே கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும். அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும்.*

*ஒரு ஆவி வரும்போது, அந்த மனுஷனுடைய இருதயம் ஒரு வெற்றிடமாக, சுத்தம் செய்யப்பட்டு, ஜோடிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறது. வீடு சுத்தம் செய்யப்பட்டிருப்பதில் எந்தப் பிரச்சனையுமில்லை. சகலமும் ஒழுங்கு செய்யப்பட்டு, ஜோடிக்கப்பட்டிருப்பதில் எந்தப் பிரச்சனையுமில்லை. பிறகு இங்கு என்னதான் பிரச்சனை? வீடு வெற்றிடமாக இருக்கின்றது. ஒருவரும் அங்கு வாசம் செய்யவில்லை. உள்ளே வரும்படி, ஒருவருக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. உங்களுடைய வாழ்க்கையை விட்டு வெளியே பிசாசை நிற்கச் செய்யக்கூடிய வலிமை கொண்டவர் ஒரே ஒருவர் மட்டுமே. அவர் இயேசு. இயேசு தங்கியிருக்கிற ஒவ்வொரு இடமும் பாதுகாப்பானதாக இருக்கிறது. ஆனால் எங்கே அவர் ஆண்டவராக, கர்த்தராக இல்லையோ, அது பாதுகாப்பற்ற ஒரு இடமாக இருக்கின்றது.*

*10. இயேசு நமக்காக விலைக்கிரயம் செலுத்தி வாங்கியிருக்கிற விடுதலையை காத்துக் கொள்ளும்படி, நாம் பின் வரும் எட்டு காரியங்களைச் செய்ய வேண்டும்:*

*(அ)* **வெற்றிடம் இல்லையென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்** - *ஆவிக்குரிய உலகத்தில், உங்களுடைய ஆளுமையின் எந்தப் பகுதி கர்த்தராகிய இயேசுவின் ஆளுகைக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்படவில்லையோ, அங்கே ஒரு அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருக்கிறது. இங்கு ................. இருக்கிறது. இதைப் பார்க்கும்போது, அதை தனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பாக எதிரியாகிய பிசாசு அறிந்து கொள்கிறான். அவன் வரும்போது, இன்னும் மோசமான ஏழு பொல்லாத ஆவிகளோடு வந்து, அதை தன் வசிப்பிடமாக ஆக்கிக் கொள்வான்.*

*(ஆ)* **துதியின் ஆடையை அணிந்து கொள்ள வேண்டும்** - *கர்த்தராகிய இயேசுவை நீங்கள் ..........................போது, அது பிசாசை அதிக அளவில் தொந்தரவு செய்கின்றது. அவன்*

உங்களைக் கவலைப்படுத்துவதைக் காட்டிலும், நீங்கள் அவனை மேலும் மேலும் அதிகமாய் கவலைப்படுத்துகிறீர்கள் (ஏசாயா 61:3).

(இ) **தேவனுடைய சர்வ ஆயுதங்களையும் தரித்துக் கொள்ளுங்கள்** - எபேசியர் 6:14-17 வசனங்கள், தேவனுடைய ................................ குறித்துப் பேசுகிற முக்கியமான ஒரு வேதப்பகுதியாய் இருக்கிறது. ஆனால் வேதாகமத்தில் இன்னும் பல வேதவசனங்களும் இதைக் குறித்துப் பேசுகின்றன. இது நம்முடைய பாதுகாப்புக்கென்று தேவன் நமக்காக செய்து வைத்திருக்கிற முன்னேற்பாடாயிருக்கிறது.

(ஈ) **தேவனுடைய வார்த்தையினால் உயிர்வாழுங்கள்** - மத்தேயு 4:4 சொல்கிறது, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." டெரிக் குறிப்பிட்ட அந்தப் பட்டியலை நினைப்பூட்டிக் கொள்ளுங்கள்: உண்மை, விசுவாசம், உணர்வுகள். இந்த வரிசையை மாற்றாமல், நாம் பின்பற்ற வேண்டும். தேவனுடைய ......................... உண்மைகள் இருக்கின்றன. விசுவாசம் உண்மைகளை விசுவாசிக்கிறது. அப்பொழுது உணர்வுகள் ஒரு ஒழுங்குக்குள் வருகின்றது. ஆனால் நீங்கள் இந்த வரிசையை மாற்றி விடுவீர்கள் என்றால், உங்களுடைய உணர்வுகளின்படி வாழ ஆரம்பிப்பீர்கள் என்றால், நீங்கள் உங்களுடைய நம்பிக்கையாகிய நங்கூரத்தை இழந்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

(உ) **தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்** - அப்பொழுது பிசாசு நம்மை விட்டு ஓடிப் போவான் என்று யாக்கோபு 4:7-ல், வேதாகமம் நமக்குச் சொல்கிறது. ஆனால் முதலில், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும், பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். மாறாக, .................... கீழ்ப்படிந்து, தேவனுக்கு எதிர்த்து நிற்கிற பொதுவான தவறை நாம் செய்யாமலிருப்போம்.

(ஊ) **சரியான ஐக்கியத்தைக் காத்துக் கொள்ளுங்கள்** - 1 யோவான் 1:7 நமக்குச் சொல்கிறது, "அவர் (தேவன்) ஒளியிலிருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால்,

*ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.'' சுத்திகரிப்பின் கிரியை நமக்குள் நடக்க வேண்டுமென்றால், நாம் தேவனுடைய ஒளியில் நடக்க வேண்டும், தேவனுடன் .................................... நிலைத்திருக்க வேண்டும்.*

*(எ)* **ஒழுக்கக்கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டும்** - *சுயக்கட்டுப்பாடு, குடும்பத்தின் ஒழுக்கக்கட்டுப்பாடு, அரசாங்கத்தின் ஒழுக்கக்கட்டுப்பாடு, பள்ளிக்கூட ஒழுக்கக்கட்டுப்பாடு, சபை ஒழுக்கக்கட்டுப்பாடு இன்னும் பல ஒழுக்கக்கட்டுப்பாடுகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. ................................ கீழ் இருக்க மறுக்கிறவன், ஒரு முரட்டாட்டக்காரனாயிருப்பான். 1 சாமுவேல் 15:23 சொல்கிறது, ''இரண்டகம் பண்ணுதல், பில்லிசூனியப்பாவத்துக்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது.''*

*(ஏ) இயேசுவை வாழ்க்கையின் மையமாகக் கொண்டிருங்கள் - சாத்தானை வெளியேற்றிய பிறகு அங்கே ஒரு வெற்றிடம் உண்டாகிறது. இப்பொழுது அது இயேசுவினால் நிரப்பப்பட வேண்டும். இப்பொழுது ................... மீது நாம் நம் கவனத்தைப் பதிக்க வேண்டும். அவரே நமக்கு வெளிச்சமாய் இருக்கிறார். சாத்தான் அந்தகார இருளாய் இருக்கிறான். வெளிச்சம் உள்ளே பிரவேசிக்கும்போது, இருள் வெளியே விரட்டப்படுகிறது. இப்பொழுது வெளிச்சத்தின் மீதுதான் நம் கவனம் இருக்க வேண்டும்.*

*செய்தியின் இந்த கட்டத்தில், தங்களுக்கு விடுதலை தேவை என்று உணருகிற ஒவ்வொருவருக்கும் டெரிக் ஒரு அழைப்பைக் கொடுத்தார். தன்னோடு சேர்ந்து ஜெபிக்கும்படி, அவர் அழைத்தார். அவர் ஜெபித்த ஜெபம் பதிவு செய்யப்பட்டு, கீழே எழுதப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் உங்களுக்கென்று பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது தீய ஆவிகளிடமிருந்து விடுதலை பெற விரும்புகிற மற்றவர்களுக்கு உதவும் நோக்கத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம்:*

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரன் என்றும், தேவனிடம் செல்வதற்கான ஒரே வழியாய் நீர் இருக்கிறீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். என்னுடைய பாவங்களுக்காக நீர் சிலுவையில் மரித்தீர் என்றும், மரித்தோரிலிருந்து நீர் உயிரோடு எழுந்தீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுது உம்முடைய இரக்கத்தையும், பாவமன்னிப்பையும் பெறும்படி நான் வருகின்றேன். நீர் என்னை மன்னித்து, உம்முடைய பிள்ளையாய் என்னை ஏற்றுக் கொள்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன். நீர் என்னை ஏற்றுக் கொள்கிறபடியால், நான் என்னை தேவனுடைய பிள்ளையாய் ஏற்றுக் கொள்கிறேன்.*

*இப்பொழுதும் கர்த்தாவே, எனக்குள் இருக்கிற இந்த மோசமான பிரச்சனையை நீர் அறிந்திருக்கிறீர். பிசாசின் ஆதிக்கம் என்னை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது. கர்த்தாவே, உம்முடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்து, உம்முடைய விடுதலையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். முதலில், என்னைக் காயப்படுத்திய, எனக்கு எதிராக செயல்பட்டவர்களை நான் மன்னிக்கிறேன். அவர்கள் எல்லோரையும் நான் மன்னிக்கின்றேன். (இப்பொழுது ஒரு கணம் அமைதலாக நின்று, நீங்கள் மன்னிக்க வேண்டிய நபர்களின் பெயர்களை உங்களுக்கு மட்டும் கேட்கத்தக்க மெல்லிய சத்தத்தில் சொல்லுங்கள்.) கர்த்தாவே, இவர்கள் எல்லோரையும் நான் மன்னித்து விட்டேன். என்னுடைய எல்லா மனக்கசப்புகளையும், பகைவைராக்கியங்களையும், வெறுப்புகளையும், கோபங்களையும், முரட்டாட்டங்களையும் கீழே வைக்கின்றேன். நீர் என்னை மன்னித்து விட்டீர் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் அதற்காக உமக்கு நன்றி சொல்கிறேன்.*

*சாத்தானோடும், மந்திரவாத பில்லிசூனியக் கிரியைகளோடும், அவற்றின் வல்லமையோடும், இரகசிய சமுகங்களோடும், சாத்தானுடைய எல்லைக்குட்பட்ட வேறு எந்த ஒரு விஷயத்தோடும் எனக்கிருந்த தொடர்பை நான் துண்டித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு எல்லைக்குள் இருந்ததற்காக, நான் மனந்திரும்புகிறேன். இப்பொழுது நான் அதற்கு என்*

*முதுகைக் காண்பிக்கிறேன். கர்த்தாவே, என் வாழ்க்கையில் ஒரு சாபம் காணப்பட்டால், அந்த சாபத்திலிருந்து நான் மீட்கப்படும்படி, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி, நீர் சிலுவையில் சாபமாக்கப்பட்டீர் என்ற மாறா உண்மைக்காக நான் உமக்கு நன்றி சொல்கிறேன். சாபத்திலிருந்து கிடைத்த விடுதலையை இப்பொழுது பெற்றுக் கொண்டு, ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்கிறேன். நான் அதை உரிமைபாராட்டி எடுத்துக் கொள்கிறேன்.*

*கர்த்தாவே, என்னுடைய ஆளுமையின் எந்தப் பகுதியிலாவது ஒரு தீய ஆவி ஆக்கிரமிப்பு செய்திருக்கிறது என்றால், இப்பொழுதே நான் அதை எதிர்த்து நிற்கிறேன். நான் அவைகளை வெறுக்கிறேன் என்று உம்மிடம் சொல்ல விரும்புகிறேன். அவை எனக்கு எதிரிகள். நான் அவைகளோடு சமாதானம் செய்து கொள்ள மாட்டேன். இனி என் வாழ்க்கையில் அவைகளுக்கு எந்த இடமும் இல்லை. இயேசுவின் நாமத்தில், நான் அவைகளை எதிர்த்து நிற்கிறேன். என்னை விட்டு வெளியேறும்படி, நான் அவைகளுக்கு கட்டளை கொடுக்கிறேன். இயேசுவின் நாமத்தில், இப்பொழுதே நான் அவைகளை வெளியே விரட்டுகிறேன். ஆமென்.*

இப்பொழுது இந்தக் கணத்தில், நீங்கள் ஜெபிப்பதை நிறுத்தி விட்டு, கெட்ட சுவாசத்தை வெளியேற்றுவதுபோல, இந்தத் தீய ஆவிகளை பலவந்தமாய் ஊதி வெளியே அனுப்ப வேண்டும். பலமாய், மூச்சை வெளியே விட வேண்டும். இயேசு உங்களை விடுதலையாக்கும்போதே, நீங்கள் அவருக்கு நன்றி சொல்ல ஆரம்பியுங்கள். விடுதலையின் கிரியை முழுமையடையும்வரை, உங்கள் கவனம் இதில் நிலையாய் பதிந்திருக்கட்டும்.

விடுதலையாக்கப்பட்ட பிறகு, உங்களுடைய விடுதலையைக் காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைக் குறித்த பட்டியலுக்குத் திரும்புங்கள். காரணம், இவ்விதத்தில்தான் நீங்கள் கிறிஸ்துவுக்குள் தொடர்ந்து விடுதலையாய் வாழ முடியும்.

**393**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/40**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# தேவனுடைய வார்த்தை, உங்களுடைய ஒருபோதும் வற்றிப் போகாத ஊற்று என்ற பாடத்திற்கான அறிமுகம்

வேதாகமத்தைக் குறித்து நீங்கள் நினைக்கும்போது, உங்களுக்குள் என்ன எண்ணம் வருகின்றது? நீங்கள் அதை நேசிக்கிறீர்களா? உங்களுடைய வாழ்க்கையில் அது உண்டாக்குகிற நல்ல விளைவுகளை விரும்புகிறீர்களா? இல்லையென்றால், அது உங்களைக் குழப்புகிறதா? அதை நினைத்தாலே, உங்களுக்கு அலுப்பாக இருக்கிறதா? டெரிக் பிரின்ஸ் சில முக்கியமான வாக்கியங்களைச் சொன்னார்: "நாம் தேவனுடைய வார்த்தையை நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாக நாம் தேவனை நேசிக்கவில்லை"; "நம்முடைய தேவைகள், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் சந்திக்கப்பட்டிருக்கின்றன"; "நாம் தேவனுடைய வார்த்தையை பொருட்படுத்தாமல், அலட்சியம் செய்து விட்டு, தேவனுடைய திவ்விய சுபாவத்தில் பங்கெடுக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது".

உண்மை என்னவென்றால், நம்மில் பெரும்பாலானோர் நம்முடைய வாழ்க்கையில் வேதாகமத்திற்கு பிரதானமான முதலிடத்தைக் கொடுப்பதில்லை என்பதுதான். காரணம், நம்மை உருமாற்றக்கூடிய அளவிற்கு அதற்குள் இருக்கும் அளப்பறிய ஆற்றலைக் குறித்து நமக்கு எந்த எண்ணமும் கிடையாது. வேதாகமம் அதைக் குறித்து நமக்குச் சொல்கிறது.

❖ விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும்.

❖ அது புதிய பிறப்பை உண்டாக்குகிறது.

❖ அது பால், அப்பம், திட உணவு என ஆவிக்குரிய போஷாக்கை நமக்குக் கொடுக்கிறது.

❖ தேவனுடைய வார்த்தை, நம் மனதைப் பிரகாசிப்பிக்கின்றது.

❖ அது நம் சரீரங்களுக்கு சுகம் கொடுக்கின்றது.

❖ தேவனுடைய வார்த்தை, சாத்தானை மேற்கொள்ளும்படி நமக்கு பெலனளிக்கின்றது.

❖ தேவனுடைய வார்த்தையின் மூலம், நாம் பாவத்தை மேற்கொள்கிறோம்.

❖ தேவனுடைய வார்த்தையினால், நாம் சுத்திகரிக்கப் படுகின்றோம்.

❖ நம்முடைய உள்ளான நிலையை வெளிப்படுத்தும்படி, அது ஒரு கண்ணாடியாய் இருக்கின்றது.

❖ பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கிறிஸ்துவும் நமக்குள் வருவதற்கு, இதுவே பிரதானமான ஒரே வழியாயிருக்கிறது.

இந்தப் பட்டியலை நாம் வாசிக்கும்போது, இந்த ஆச்சரியமான நன்மைகள் எனக்கு வேண்டாம் என்று பெரும்பாலும் யாரும் சொல்ல மாட்டார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் வேதவசனங்களின் சத்தியங்களை ஆழமாய் தோண்டியெடுப்பதற்கும், அவற்றின் நன்மையான பலன்களை நமக்கு உண்டாக்கும்படி அவற்றிற்கு அனுமதி கொடுப்பதற்கும் குறிப்பிட்ட காலமாகிறது. தேவன் தம்முடைய இரகசியங்களை மேம்போக்காக வாசிக்கிறவர்களுக்கு வெளிப்படுத்த மாட்டார். தேவனுடைய வார்த்தையும், தேவனுடைய ஆவியானவரும் இணைந்து சிருஷ்டிப்பில் எல்லாவற்றையும் உருவாக்கினர் என்பதுதான் உண்மை. இப்பொழுது நாம் தேவனுடைய வார்த்தையைப் பெற்று, அதன் கிரியை நமக்குள் நடக்கும்படி நாம் அனுமதிக்கும்போது, அதே வல்லமை நமக்கும் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

*பாடம் பதினாறு>>*

# தேவனுடைய வார்த்தை, உங்களுடைய ஒருபோதும் வற்றிப் போகாத ஊற்று-பாகம் 1[4322]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இந்த உலகத்தில், நமக்குக் கிடைக்கக்கூடியதாய் நிறைய விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் வேதாகமத்தைக் காட்டிலும் அதிக தனிச்சிறப்பு கொண்ட, முக்கியமான ஒரு விஷயம் வேறு எதுவும் இல்லை என்பதுதான் உண்மை. 2 பேதுரு 1:2-4 வசனங்களில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:

> *[2]தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. [3]தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, [4]இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

“வாழ்க்கைக்கும், தேவபக்திக்கும் வேண்டிய எல்லாவற்றையும் தேவனுடைய திவ்விய வல்லமை நமக்குத் தந்திருக்கிறது,” என்று 3-ம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். இது ஒரு ஆச்சரியமான காரியம். ஆனால் தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழும்படி, நம் வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றும்படி நமக்குத் தேவையான இந்தக் காரியங்களை

நாம் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்ற கேள்விக்கு நேராக இது நம்மை நடத்த வேண்டும்.

மேற்கண்ட இந்த வேதப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிற நீளமான வாக்கியத்தின் மெய்யான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும்படி, நாம் இதை சிறு சிறு வாக்கியங்களாகப் பிரிக்க வேண்டும். அது நமக்கு உதவியாயிருக்கும். நாம் அப்படிச் செய்யும்போது, இவ்வேதப்பகுதியைக் குறித்த தெளிவான ஒரு புரிதலைப் பெறுகின்றோம். பின்வருமாறு, நாம் இதைப் பிரிக்கலாம்.

❖ வாழ்க்கைக்கும் தேவபக்திக்கும் வேண்டிய எல்லாவற்றையும் தேவனுடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்திருக்கிறது.

❖ தமது மகிமையினாலும், காருணியத்தினாலும் அழைத்த தேவனை அறிகிற அறிவின் மூலம், தேவபக்தி நிறைந்த ஒரு வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான சகலமும் நமக்குக் கிடைக்கின்றன.

❖ தமது மகிமையினாலும், காருணியத்தினாலும், தேவன் நமக்கு மிகவும் விலையேறப்பெற்ற, உயர்வான, மகத்தானவாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார் (பிரதானமாக, தேவன் அதை பரிசுத்த ஆவியானவர் மூலமாக, தம் வார்த்தையில் எழுதி வைத்திருக்கிறார்).

❖ அவருடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிற மகத்தான, மிகவும் உயர்வான, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மூலம், அவருடைய திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் நாம் மாற முடியும்.

❖ அவருடைய திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் மாற வேண்டுமென்றால், தவறான இச்சைகளின் மூலம் இவ்வுலகத்தில் உண்டான சீர்கேடுகளுக்கு நாம் தப்பியிருக்க வேண்டும்.

தேவனுடைய திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் மாறும்படி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அழைப்பு, ஆச்சரியமான ஒன்றாக இருக்கின்றது. ஆனால் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற மகத்தான, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் எவ்வாறு கனம் பண்ணுகிறோம் என்பதைச் சார்ந்துதான், அப்படிச் செய்யக்கூடிய திறன் நமக்கு இருக்கிறது என்ற உண்மையிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. அதாவது தேவனுடைய வார்த்தையை தவிர்த்து விட்டு, அதை அலட்சியம் செய்து விட்டு, அவருடைய திவ்விய சுபாவத்தில் பங்கெடுக்கலாம் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

'அஸ்திபாரம் போடுதல்' என்ற செய்தித்தொடரில், எபிரெயர் **6:1-2** வசனங்களில் எழுதப்பட்டிருக்கிற ஆறு அடிப்படை அஸ்திபாரப் போதனை களைக் குறித்துப் பார்த்தோம். "நீங்கள் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறதைக் காட்டிலும் அதிகமாய் தேவனை நேசிக்க மாட்டீர்கள் (அதாவது நீங்கள் தேவனுடைய வார்த்தையை எந்த அளவிற்கு நேசிக்கிறீர்களோ, அந்த அளவிற்குத்தான் தேவனை நேசிப்பீர்கள்)," என்று டெரிக் பிரின்ஸ் ஒரு சில முறை சொல்லியிருந்தார். தேவன் மீது நீங்கள் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறீர்கள் என்பதை சோதித்து அறிய வேண்டுமா? வேதாகமத்தின் மீது நீங்கள் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்தாலே போதும்.

நம்முடைய வாழ்க்கையில் வேதாகமத்திற்கு பிரதானமான முதலிடம் கொடுக்க வேண்டும். காரணம், இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களுக்குள் நாம் செல்லும்போது, வேதாகமம்தான், எல்லாவற்றையும் சோதித்து அறிவதற்கும், எது நன்மையானது என்று அறிந்து அதை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொள்வதற்கும் நமக்கு உதவி செய்யும். தேவனுடைய வார்த்தை தரும் ஆச்சரியமான நன்மைகளைக் குறித்து டெரிக் நமக்கு எடுத்துக் காண்பிக்கப் போகிறார். தேவனுடைய மகத்தான, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மூலம் நாம் எவ்வாறு இயேசுவைப்போல இன்னும் இன்னும் அதிகமாய் மாற முடியும் என்பதையும், அவருடைய திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் எவ்வாறு மாற முடியும் என்பதையும் டெரிக் நமக்கு விளக்கிச் சொல்லப் போகிறார்.

'தேவனுடைய வார்த்தை, உங்களுடைய ஒருபோதும் வற்றிப் போகாத ஊற்று' என்ற தொடரின் முதல் செய்தியைக் கேட்போம். பிறகு முடிவை வாசித்து, கேள்விகளுக்கு பதிலளிப்போம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இந்தச் செய்தியில், தேவனுடைய வார்த்தையை நம்முடைய வாழ்க்கையில் பின்பற்றி, அதைப் பயன்படுத்துவோம் என்றால், அது என்ன செய்யும் என்பதைக் குறித்த பல்வேறு வித்தியாசமான அம்சங்களை டெரிக் படிப்படியாக வெளிப்படுத்திக் காண்பிக்க ஆரம்பித்தார். பெரும்பாலான கிறிஸ்தவர்கள், இந்த ஆற்றலைக் ஒருபோதும் புரிந்து

கொண்டதில்லை. காரணம், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் அதன் வல்லமையை இன்னும் பார்த்ததில்லை. வேதாகமத்தின் மகத்தான மதிப்பைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டதில்லை அல்லது அவர்களுக்குப் போதிக்கப்பட்டதில்லை. விசுவாசிகளின் வாழ்க்கையில், வேதாகமம் வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலை அளவிட முடியாது. அது வெளிப்படுத்துகிற நீதியின் பாதையில் நாம் நடப்போம் என்றால், நாம் அதைப் புரிந்து கொண்டு, விசுவாசித்து, பெற்றுக் கொள்வோம் என்றால், அது நம் வாழ்க்கையில் உண்டாக்கக்கூடிய நன்மையான விளைவுகளை அளவிட முடியாது. வேதாகமத்திற்கு எல்லைகள் இல்லை. எதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கிற நம்மிடம்தான் எல்லைகள் இருக்கிறது. நாம் அதை விரும்பி, வாஞ்சிக்க வேண்டும், நாம் அதினால் போஷிக்கப்பட வேண்டும். அது நம் சரீரத்தில், நம் மனதில், நம் ஆவியில் முழுமையான ஒரு கிரியையைச் செய்யும்படி நாம் அதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

## வேதவசனங்களைக் குறித்த பொதுவான உண்மைகள்

*1. யோவான் 10:35-ல், இயேசு வேதாகமத்திற்கு இரண்டு பெயர்களைப் பயன்படுத்துகிறார். அவருடைய ஜன ங்களில் பெரும்பாலானோர் அப்பொழுதிலிருந்து அதைப் பயன்படுத்துகிறார்கள்: ...................... வார்த்தை மற்றும் வேதவசனங்கள்.*

*2. வேதாகமத்தின் இவ்விரண்டு பெயர்களும் ஒரே அர்த்தம் கொண்டிருக்கவில்லை:*

*(அ) இயேசு ......................* **தேவனுடைய வார்த்தை** *என்று அழைத்தபோது,* **அது தேவனிடமிருந்து வந்தது** *என்ற அர்த்தத்தில் சொல்கிறார். அது தேவனிடமிருந்து நேரடியாக வந்த ஒரு செய்தியாக இருக்கின்றது. வேதாகமம், பலரால் எழுதப்பட்டிருந்தாலும், பல்வேறு வழிகள் மூலம் அது வந்தாலும், வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற சகலமும் தேவனிடமிருந்துதான் வந்திருக்கின்றன. இது தேவனுடைய*

*வார்த்தை. இது தேவனுடைய செய்தி. இதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

*(ஆ) வேதவசனம் என்ற வார்த்தையின் அர்த்தம், எழுதப்பட்ட வார்த்தை என்பதாகும். இது ஒரு வரையறைக்கு உட்பட்டது. வேதாகமத்தில் இல்லாத பல வார்த்தைகளை தேவன் பேசியிருக்கிறார். ஆனால் வேதாகமத்தில் எழுதப்பட்ட வார்த்தைகள், நம்முடைய நன்மைக்காக, தேவனே தீர்மானித்து, எழுதி வைத்திருக்கிறவைகளாகும். வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற ஒவ்வொன்றும், ...................... நன்மைக்காக என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த பூமியில் ஒரு சிறந்த வாழ்க்கையை வாழும்படி, இந்த உலகத்திலிருந்து தேவனோடு நித்தியத்திற்குள் ஒரு பாதுகாப்பான பிரயாணத்தைச் செய்து கடந்து செல்லும்படி நாம் அறிந்து கொள்ள வேண்டிய சகலமும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.*

சங்கீதம் **33:6** சொல்கிறது:

> *கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டன.*

'சுவாசம்' என்ற வார்த்தை வருகின்ற இடத்தில், எபிரெய மொழியில் 'ஆவி' என்ற அர்த்தமுடைய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. காரணம், தேவனுடைய ஆவியானவர் தம்முடைய வார்த்தையுடன் வருகின்றார் என்ற படம்தான் இங்கு நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது. இந்த முழு பிரபஞ்சமும் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டது என்று இவ்வசனம் நமக்குச் சொல்கிறது. இது சிக்கலான ஒரு விஷயம் கிடையாது. இது கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய வாயின் சுவாசமும் (ஆவியானவரும்) இணைந்து உருவானது.

*3. தேவனுடைய சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலும், தேவனுடைய இரண்டு பிரதிநிதிகள் இணைந்து செயல்பட்டனர்: தேவனுடைய .................. மற்றும் தேவனுடைய ஆவியானவர். சிருஷ்டிப்பின் நிகழ்வைக் குறித்து ஆதியாகமத்தில் நீங்கள் வாசிப்பீர்கள் என்றால், இது எவ்வளவு உண்மை என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.*

*4. நம்மை ஆச்சரியத்தில் தடுமாறச் செய்யும் சிந்தனையாக டெரிக் இதை நம் முன் வைக்கின்றார்: நாம் வேதாகமத்தை வாசித்து, அதை உள்வாங்கிக் கொண்டு, அது தன் கிரியையை நமக்குள் செய்யும்படி நாம் அனுமதிக்கும்போது, சர்வ வல்ல தேவனுடைய, எல்லாவற்றையும் .............................. வல்லமை நமக்குள் கிரியை செய்கின்றது. இந்த பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும்படி தம்முடைய வார்த்தையையும், தம்முடைய ஆவியானவரையும் தவிர வேறொன்றையும் தேவன் பயன்படுத்தவில்லை. இப்பொழுது நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது, அதே வார்த்தை மற்றும் அதே ஆவியான வரின் வல்லமை நமக்குக் கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றது.*

*5. ஒரு விசுவாசியாகிய நம்முடைய வாழ்க்கையில், வேதாகமம் செய்யக்கூடிய கிரியைக்கு நாம் ஒருபோதும் எல்லைகளை நியமித்து விடக் கூடாது. நாம் வெளியே சென்று, நட்சத்திரங்களையும் சூரியனையும் பார்க்கும்போது, பெருங்கடல்களையும் மலைகளையும் பார்க்கும்போது, தேவனுடைய சிருஷ்டிப்பின் மாபெரும் வல்லமையை நாம் அவற்றில் பார்க்கின்றோம். இப்பொழுது நான் என் வேதாகமத்தை .................................., இவையெல்லாவற்றையும் சிருஷ்டித்த அதே வார்த்தையும், அதே ஆவியானவரும் எனக்குள் கிரியை செய்கின்றார்கள் என்று நமக்கு நாமே நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள முடியும்.*

*6. .................................... தேவனுடைய வார்த்தை வல்லமையாய் கிரியை செய்கிறது என்று 1 தெசலோனிக்கேயர் 2:13-ல், பவுல் தெளிவாக எழுதியிருக்கிறார். அவிசுவாசம், தேவனுடைய வார்த்தையின் மூலம் உண்டாகிற நன்மைகள் கிடைத்து விடாதபடி தடுக்கின்றது. ஆனால் விசுவாசத்தில் நம்முடைய இருதயத்தை வேதவசனத்திற்கு திறந்து, நாம் என்ன வாசிக்கிறோமோ அதை விசுவாசிப்போம் என்றால், அது நம் வாழ்க்கையில் வல்லமையாய் கிரியை செய்கிறது.*

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், நிருப ஆசிரியர் குறிப்பிட்ட சில விஷயங்களை எழுதியிருக்கிறார். முதலில், அவர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்தும், அவர்கள் எவ்வாறு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பலத்த

அற்புதங்களாலும், அடையாளங்களாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் விடுதலையாக்கப்பட்டார்கள் என்பதைக் குறித்தும் எழுதியிருக்கிறார். ஆனால் அவிசுவாசத்தினால், தேவன் அவர்களுக்கு வாக்குப் பண்ணியிருந்த தேசத்திற்குள் அவர்கள் நுழையவில்லை. எபிரெயர் 4:2-ல், அவர் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து இவ்வாறு சொல்கிறார்:

> *ஏனெனில் சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல, நமக்கும் அறிவிக்கப்பட்டது. கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.*

*7. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டபோது, அது ஆசீர்வாத பலன்களைக் கொண்டு வரவில்லை. காரணம், அது .............................. கலக்கப்படவில்லை. தேவனுடைய வார்த்தையோடு நாம் நம் விசுவாசத்தைக் கலக்கும்போது மட்டுமே, தேவன் நினைத்திருக்கிற காரியத்தை அது நம் வாழ்க்கையில் செய்கின்றது.*

எபிரெயர் 4:12-ல், நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்:

> *தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.*

*8. இந்த வசனம், தேவனுடைய வார்த்தையைக் குறித்த மிகவும் வலிமையான உண்மைகளை வெளிப்படுத்துகிறது.*

*(அ) அது ..............................; அது மரித்தது அல்ல.*

*(ஆ) அது ..............................*

*(இ) அது இருபுறமும் கூர்மையான பட்டயத்தைக் காட்டிலும் ............................ அல்லது இன்றைய வழக்கத்தில் சொன்னால், அது ஒரு மருத்துவரின் அறுவைக் கத்தியைக் காட்டிலும் கூர்மையானது.*

*(ஏ) ஊவியல் நிபுணரின் பரிசோதனையைக் காட்டிலும், இது கூர்மையானது. நமக்குள் மிகவும் நெருக்கமாய் இருக்கின்ற ............மற்றும் ஆத்துமாவை பிரிக்கக் கூடியதாய் இது இருக்கின்றது.*

*(உ) எங்கே அறுவைக் கத்தியால் ஊடுருவ முடியாதோ, அங்கே இது ஊடுருவக் கூடியதாய் இருக்கிறது. இது ........................., ஊனையும் பிரிக்கக்கூடியதாய் இருக்கிறது.*

*(ஊ) இது இருதயத்தின் நினைவுகளையும், யோசனை களையும் .................................... இருக்கிறது என்றும் இந்நிருப ஆசிரியர் எழுதுகிறார். ஒருமுறை ஒருவர் இவ்வாறு சொன்னார்: ''நீங்கள் உங்களுடைய வேதாகமத்தை வாசிக்கும்போது, வேதாகமமும் உங்களை வாசிக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.''*

நாம் வேதாகமத்தை பயபக்தியுடன் வாசிக்க வேண்டும். காரணம், அது நமக்குள் இருக்கின்ற காரியங்களை வெளிப்படுத்தப் போகிறது. அவை அங்கே இருக்கின்றன என்று நமக்குக் கூட தெரியாது. நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். காரணம், அவர் அதை எப்பொழுதும் தன்னுடைய இரக்கத்தினால் செய்கின்றார். வாழ்க்கையில் மெய்யாகவே வெற்றியடைவதிலிருந்து நம்மைத் தடுக்கக்கூடிய பிரச்சனைகள் நமக்கு இருக்கலாம். அந்தப் பிரச்சனையைக் குறித்து நாம் இன்னும் அறியாத நிலையில் கூட இருக்கலாம். ஆனால் நீங்கள் வேதாகமத்திற்குச் சென்று, அது உங்களைப் பரிசோதிக்கும்படி இடம் கொடுக்கும்போது, மனுஷனுடைய அறுவைக் கத்தி அடைய முடியாத இடத்திற்குள்ளும் இந்த அறுவைக் கத்தி சென்றடையும். உங்களுக்கு இருக்கிறது என்று நீங்களே அறியாத பிரச்சனைகளையும் இது சுட்டிக் காண்பிக்கும்.

*9. ........................... நம்மில் அநேகருக்கு ஒரு பிரச்சனை யாய் இருக்கிறது. ஆனால் நம்மில் பலர் அதைக் குறித்து அறியாதிருக்கிறார்கள். நீங்கள் வேதாகமத்தில் நேரத்தை செலவிடுவீர்கள் என்றால், சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ உங்களுடைய வாழ்க்கையில் மறைந்திருக்கும் அந்தத் தற்பெருமையின் வேரை நீங்கள் கண்டுபிடிக்க ஆரம்பிப்பீர்கள். அதை நீங்கள் தேவனுக்கு முன்பாக*

*களைந்தெறிய வேண்டும். அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*

## *வேதாகமம் உண்டாக்கும் நல்ல விளைவுகள்*

வேதாகமத்தின் வார்த்தைகள் விசுவாசத்தோடு கலக்கப்படும்போது மட்டுமே, அது விரும்பத்தக்க நல்ல விளைவுகளை நம் வாழ்க்கையில் உண்டாக்குகிறது என்று ஆரம்பத்தில் நாம் பார்த்தோம். இது நம்மை ஒரு கேள்விக்கு நேராக நடத்துகிறது. அதற்கு அத்தியாவசியமாய் தேவைப்படுகிற விசுவாசம் நம்மிடம் இல்லையென்றால், நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விதான் அது. இப்பொழுது நற்செய்தி என்னவென்றால், நம்மிடம் விசுவாசம் இல்லையென்றாலும், நாம் அதைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுதான். இது வேதாகமம் உருவாக்கக்கூடிய **முதல் நல்ல விளைவாய்** இருக்கிறது.

*10. ரோமர் 10:17 சொல்கிறது: “விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.” இதில் இரண்டு படிகள் இருக்கின்றன.*

*(அ) நீங்கள் உங்களுடைய இருதயத்தைத் திறந்து, தேவனுடைய வார்த்தையை வாசித்து, அதை தியானிக்கும்போது, அது உங்களுடைய வாழ்க்கையில் பிரதானமான முதல் இடத்தை எடுத்துக் கொள்கிறது. அப்பொழுது .................... வருகின்றது. கேள்வி அல்லது செவிகொடுத்தல் என்பது மற்ற எல்லாவற்றையும் வெளியேற்றி விட்டு, தேவனுக்கு மட்டும் செவிகொடுக்கிற ஒரு மனப்பான்மையாக இருக்கிறது. மற்ற எல்லா கண்ணோட்டங்களையும் கவனிப்பதை நிறுத்தி விட்டு, தேவன் எவ்வாறு உங்களுடைய சூழ்நிலையைக் காண்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றீர்கள்.*

*(ஆ) நீங்கள் தொடர்ந்து செவிகொடுக்கும்போது, அங்கே ........................ வருகின்றது. இது கிரியைகளின் ஒரு தொடர்ச்சியாய் இருக்கிறது. இது ஒரு கணப்பொழுதில் உடன டியாக நடப்பதில்லை. நீங்கள் உங்களுடைய கவனத்தை தேவனுடைய வார்த்தையின் மீது பதிக்கும்போது, நீங்கள் உங்களுடைய இருதயத்தையும் மனதையும் அதற்கு திற க்கும்போது, அங்கே கேள்வி அல்லது செவிகொடுத்தல்*

*உண்டாகிறது. செவிகொடுத்தலில் இருந்து, விசுவாசம் உருவாகி வளருகின்றது.*

*11. வேதாகமம் உருவாக்கக்கூடிய* **இரண்டாவது நல்ல விளைவு,** *புதிய மனுஷனாகும். புதிய பிறப்பு என்பது தேவனால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு அற்புத நிகழ்வாகும். நம்முடைய இருதயத்தில் நாம் பெற்றுக் கொண்ட சத்திய வார்த்தையினால், அவர் நம்மைப் பிறக்கச் செய்திருக்கிறார் (யாக்கோபு 1:18; யோவான் 1:12-13).*

*(அ) 1 பேதுரு 1:23-ல், பேதுரு இந்த சத்தியத்தை இன்னும் விவரமாய் எழுதியிருக்கிறார்: "அழிவுள்ள ...................... அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே (பிறந்திருக்கிறீர்களே)."*

*ஆக, இந்தப் புதிய ஜீவனை, இந்தப் புதிய நபரை, இந்தப் புதிய மனுஷனைப் பிறக்கச் செய்திருக்கிற வித்து, தேவனுடைய வார்த்தையாகிய வித்தாயிருக்கிறது. இது அழிவில்லாத வித்து. இது சிதைந்து அழிந்து போகாது. இது ஒருபோதும் மாறாது. இவ்வுலகத்தில் நாம் பயன்படுத்துகிற விதைகள், எல்லா வகையான மாற்றங்களுக்கும் உட்படுகின்றன. அவை அழிந்தும் போகின்றன. ஆனால் தேவனுடைய வார்த்தையாகிய விதை அவ்வாறு அழிந்து போவதில்லை. விதையின் தன்மை, அது விளையச் செய்யும் பொருளின் தன்மையைத் தீர்மானிக்கிறது. நீங்கள் ஆப்பிள் விதையை விதைப்பீர்கள் என்றால், ஆப்பிள் மரம் வளருகின்றது. ஆரஞ்சு மரம் வளருவதில்லை. அதேபோல, தேவனுடைய வார்த்தையாகிய விதையின் தன்மை, அதிலிருந்து வெளியே வரக்கூடிய ஜீவனின் தன்மையைத் தீர்மானிக்கிறது. இது அழியாத ஒரு விதையாக இருக்குமென்றால், இதிலிருந்து எப்படிப்பட்ட ஜீவன் உண்டாகும்? அழியாத ஜீவன். சிதைந்து அழிய முடியாத ஒரு ஜீவன். இது தேவனுடைய ஜீவன். காரணம், இது தேவனுடைய வித்திலிருந்து உண்டாகிறது.*

*(ஆ) தேவனுடைய ....................... உண்டாகிற புதிய பிறப்பைக் குறித்து 1 யோவான் 3:9-ல் நாம் வாசிக்கின்றோம். யோவான் எழுதுகிறார்: "தேவனால் பிறந்த எவனும் பாவம்*

*செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால், பாவம் செய்ய மாட்டான்.'' நாம் ஒருபோதும் பாவம் செய்ய மாட்டோம் என்ற அர்த்தத்தில் இது சொல்லவில்லை. மாறாக, புதிய மனுஷனுடைய சுபாவத்தினாம் பாவம் செய்ய முடியாது என்பதைத்தான் இது சொல்கிறது. காரணம், அவன் அழியாத வித்தினால் மறுபடியும் பிறந்திருக்கிறான். எனவே அவன் சீர்கெட்டுப் போக முடியாத ஒரு நபராய் இருக்கின்றான்.*

*(இ) ............ மனுஷனுடைய சுபாவத்தையும் நாம் கையாள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இது கிறிஸ்து உள்ளே வருவதற்கு முன்பிருந்த நிலையாய் இருக்கின்றது. பாவம் செய்யாதபடி, பழைய மனுஷனால் தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. காரணம், முரட்டாட்டம் செய்வதுதான் அவனுடைய சுபாவமாயிருக்கிறது. ஆனால் நாம் மறுபடியும் பிறந்து, கிறிஸ்தவ விசுவாசிகளாய் மாறிய பிறகு, எந்த சுபாவம் நம்மைக் கட்டுப்படுத்துகிறதோ, அதன் அடிப்படையில்தான் நாம் நடத்துகின்ற வாழ்க்கையும் இருக்கும். புதிய மனுஷனுடைய சுபாவத்தின் கட்டுப்பாட்டில் நாம் வாழும்போது, பாவமற்ற ஒரு வாழ்க்கையை நாம் வாழ்வோம்.*

*நீங்கள் மறுபடியும் பிறந்த பிறகு, உங்களுக்குள் உண்டாயிருக்கிற புதிய சுபாவம், உணவிற்காக, போஷாக்கிற்காக, புதிதாய் பிறந்த ஒரு குழந்தையைப்போல அழுகின்றது. இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், தேவனுடைய வார்த்தை, புதிய ஜீவனைப் பிறப்பிக்கின்ற ஒரு வித்தாய் மட்டுமல்ல, புதிய ஜீவனுக்கு ஊட்டமளிக்கின்ற போஷாக்காகவும் இருக்கின்றது. நம்முடைய வாழ்க்கையில், தேவனுடைய வார்த்தை உண்டாக்கக்கூடிய* **மூன்றாவது விளைவாகவும்** *இருக்கின்றது.*

*12. 1 பேதுரு 2:1-3 வசனங்களில் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்: ''இப்படியிருக்க, கர்த்தர் தயை உள்ளவர் என்பதை நீங்கள் ருசி பார்த்தது உண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த*

*குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ......................... மேல் வாஞ்சையாயிருங்கள்.'' இவ்வசனத்தில் வரும் 'இப்படியிருக்க' என்ற வார்த்தை, புதுப் பிறப்பைச் சுட்டிக் காண்பிக்கிறது. நீங்கள் மறுபடியும் பிறந்த பிறகு, அன்றாடம் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையினால் ஊட்டம் பெற்று போஷிக்கப்படும்படி கற்றுக் கொள்வதைக் காட்டிலும், முக்கியமான அவசரமான ஒரு காரியம் வேறு எதுவுமில்லை. ஆரம்பத்தில், எளிதாக செரிமானம் ஆகக்கூடிய யோவான், அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் ரோமர் நிருபத்தை வரிசையாக வாசிப்பது நல்லது.*

*13. மறுபடியும் பிறந்த ஒருவருக்கு டெரிக் ஆலோசனை கொடுக்க நேர்ந்தால், அவர் என்ன ஆலோசனைகள் கொடுப்பார்:*

*(அ) முதல் ஆலோசனை, ......................... தொடர்ந்து, ஒழுங்காக வாசிக்க வேண்டும். ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் அதை வாசிப்பீர்கள் என்றால், நீங்கள் சீராக வளருவீர்கள்.*

*(ஆ) 2-வது ஆலோசனை: வேதாகம வாசிப்போடு, .................... கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது, தேவன் உங்களோடு பேசுகின்றார். நீங்கள் ஜெபிக்கும்போது, நீங்கள் தேவனோடு பேசுகின்றீர்கள். ஆக, வேத வாசிப்பையும், ஜெபத்தையும் இணைத்துப் பார்ப்பீர்கள் என்றால், நீங்கள் தேவனோடு இரு வழி ஐக்கியத்தில் இருப்பதைப் பார்க்க முடியும்.*

*(இ) மூன்றாவது ஆலோசனை: உங்களுடைய விசுவாசத்தை .................... செய்யுங்கள். நீங்கள் இயேசுவை விசுவாசிக்கின்றீர்கள் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ளட்டும். அதற்காக நீங்கள் ஒரு தெருவின் மூலையில் நின்று, பிரசங்கிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, ''நான் இயேசுவை விசுவாசிக்கிறேன்!'' என்று நீங்கள் மற்ற வர்களிடம் சொல்லத்தக்க ஒரு வாய்ப்பை ஏதோ ஒரு விதத்தில் தேவன் உங்களுக்கு நிச்சயம் உருவாக்கிக் கொடுப்பார். நீங்கள் உங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யவில்லை*

என்றால், அது உலர்ந்து, வாடி, வதங்கி உதிர்ந்து விடும். விசுவாசம் அறிக்கை செய்யப்பட்டாக வேண்டும்.

(ஈ) நான்காவது ஆலோசனை: மற்ற கிறிஸ்தவ விசுவாசிகளுடன் ............................ கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்களுடைய பெலத்தில் தனித்து நின்று எதையும் செய்து விட முடியாது. ஒருவர் மற்றவருடைய உதவி அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தை, வழக்கமாக, ஒழுங்காக அறிவிக்கப்படுகிற ஒரு இடத்தில் அவர்கள் இருக்க வேண்டும். மற்ற கிறிஸ்தவர்களோடு ஒன்றாய் சேர்ந்து தேவனை ஆராதிக்கக்கூடிய வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

14. மத்தேயு 4:4-ல், இயேசு சொன்னார்: “மனுஷன் .......................... மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே (உபாகமம் 8:3).” இயேசு இங்கு என்ன சொல்கிறார்? அப்பம் நம்முடைய சரீரத்திற்கு எவ்வளவு அவசியமாயிருக்கிறதோ, அவ்வளவு அத்தியாவசியமானதாய் நம்முடைய ஆவிக்குரிய பெலத்திற்கு தேவனுடைய வார்த்தை இருக்கிறது. இவ்வுலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற ஜனங்களால், மற்ற பல விஷயங்கள் இல்லாமல் வாழ முடியாது. ஆனால் எங்கே ரொட்டி, அரிசி அல்லது மற்ற தானியங்கள் முக்கியமான உணவாக இருக்கின்றதோ, அங்கே ஜனங்கள் அதைத்தான் பிரதானமான தங்களுடைய தேவையாக நாடுகிறார்கள். ஆனால் அதைக் காட்டிலும், தேவனுடைய வார்த்தைதான், நம்முடைய பிரதானமான உணவாக இருக்க வேண்டும்.

15. வேதாகமம், நம்முடைய அடுத்த கட்ட உணவாக, திட உணவைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 5:12-ல், இந்நிருப ஆசிரியர் யூத விசுவாசிகளைக் கடிந்து கொள்கிறார். சிறுவயதிலிருந்தே வேத வசனங்களைக் கற்றுக் கொள்ளக்கூடிய விலையேறப்பெற்ற அனுகூலம் அவர்களுக்கு இருந்தாலும், சோம்பேறித்தனத்தினால், மற்றவர்களுக்கு போதிக்கக்கூடிய ஒரு நிலைக்கு அவர்கள் உயரவில்லை. அவர்கள் அந்த நிலைக்கு

*வந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் வரவில்லை. மாறாக, அவர்கள் பாலைத்தான் அருந்திக் கொண்டிருந்தார்கள்.*

*(அ) நிருப ஆசிரியர் தொடர்ந்து எபிரெயர் 5:13-ல் எழுதுகிறார்: "பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான் (அனுபவமில்லாத வனாயிருக்கிறான்)." நீங்கள் எத்தனை வருடங்கள் ஒரு கிறிஸ்தவ விசுவாசியாய் இருக்கின்றீர்கள் என்பதைக் கொண்டு, உங்களுடைய ஆவிக்குரிய முதிர்ச்சியை அளவிட முடியாது. எவ்வகையான உணவு உங்களுக்கு செரிக்கத்தக்கதாய் இருக்கிறது, நீங்கள் எவ்வகையான உணவை உண்கிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் அதை அளவிட முடியும். நீங்கள் பத்து வருடங்களாக ஒரு கிறிஸ்தவ விசுவாசியாய் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் நீங்கள் பாலை மட்டுமே அருந்துகிறீர்கள் என்றால், ஆவிக்குரிய விதத்தில் நீங்கள் இன்னும் ஒரு ........................ இருக்கிறீர்கள். உங்களுடைய வளர்ச்சி அங்கே தடைபட்டுக் கிடக்கின்றது. உங்களால் வளர்ச்சியடையவே முடியாது.*

*(ஆ) நாம் எவ்வாறு வளர்ச்சியடைய முடியும் என்று எபிரெய நிருப ஆசிரியர் தொடர்ந்து விளக்கிச் சொல்கிறார். 14-ம் வசனத்தில் அவர் சொல்கிறார்: "பலமான ............................. நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை உடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்." நாம் எவ்வாறு இதில் முதிர்ச்சியடைகின்றோம்? ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசித்து, நாம் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு சூழ்நிலையிலும் அதைப் பின்பற்றி, பயன்படுத்தி, பயிற்றுவிப்பதன் மூலம் முதிர்ச்சியடைகின்றோம். காரணம், வேதாகமம்தான், ஒவ்வொரு சூழ்நிலையின் மீதும் வெளிச்சத்தைக் காண்பிக்கிறது.*

*16. தேவனுடைய வார்த்தை, நம் வாழ்க்கையில் உண்டாக்கும் நான்காவது விளைவு, ........................ வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சங்கீதம் 119:130 சொல்கிறது: "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும் (பேதைகளுக்கு புரிதலைக் கொடுக்கும்)." நம்முடைய மனதில் தேவனுடைய*

*வார்த்தை என்ன கிரியை செய்கின்றது என்பதைக் குறித்து இது பேசுகிறது. இது நமக்கு புரிதலையும், வெளிச்சத்தையும் கொடுக்கிறது.*

*கென்யாவிலிருந்த ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஒன்றில், டெரிக் முதல்வராக இருந்தபோது, எவ்வாறு மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது என்ற ஒரே விஷயம்தான் அவர் முன் எப்பொழுதும் இருந்தது. நீங்கள் கல்வியைக் கற்றுக் கொண்ட பிறகும், நீங்கள் ஒரு முட்டாளாக இருக்க முடியும் என்ற விஷயத்தை அவர் எப்பொழுதும் தன் மாணவர்களிடத்தில் சுட்டிக் காண்பித்தார். கல்வி முக்கியமான, அத்தியாவசியமான ஒன்றாக இருந்தாலும், கல்வி, ஞானமாகாது. இன்றைய உலகின் பெரும்பாலான பிரச்சனைகளுக்கு, கல்வி கற்ற முட்டாள்கள்தான் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மையாயிருக்கிறது.*

*17. தேவனுடைய வார்த்தை உண்டாக்கக்கூடிய 5-வது விளைவு, நம் மாம்ச ............................ உண்டாகிற சுகமாகும். சங்கீதம் 107:17-20 வசனங்களை வாசித்துப் பாருங்கள். தங்களுடைய பாவங்களின் நிமித்தம் மரண வாசலில் இருந்த ஜனங்களைக் குறித்து இது பேசுகிறது. அவர்கள் கர்த்தரை நோக்கி கதறினார்கள். தேவன் அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்களுடைய கதறலுக்கு செவிகொடுத்தார். 20-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது: "தேவன் தமது வசனத்தை அனுப்பி, அவர்களை குணமாக்கி, அவர்களை அழிவுக்கு தப்புவிக்கிறார்."*

*18. மேற்கண்ட வேதப்பகுதியின் 19-20 வசனங்களில், தேவனுடைய இரக்கத்தின் மூன்று முக்கியமான செயல்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது:*

*(அ) அவர் தம்முடைய .................. அனுப்புகிறார்.*

*(ஆ) அவர் நம்மை வியாதியிலிருந்து ..........................*

*(இ) சாத்தானின் வல்லமையிலிருந்து அவர் நம்மை ..............*

*19. நம் சரீர சுகத்தைக் குறித்த இன்னொரு முக்கியமான வேதப்பகுதி, நீதிமொழிகள் 4:20-22 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது: "என் மகனே, என் வார்த்தைகளைக்*

*கவனி. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக் கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.''*

*தேவனுடைய வார்த்தையைக் குறித்து, நான்கு விஷயங்களைச் செய்யும்படி நாம் இங்கு அறிவுறுத்தப்படுகிறோம்:*

*(அ) தேவனுடைய வார்த்தையின் மீது .................. செலுத்த வேண்டும் - முழுமையான, சிதறாத கவனத்தை நாம் கொடுக்க வேண்டும்.*

*(ஆ) தேவனுடைய வார்த்தைக்கு நம் செவியை ..................... வேண்டும் - தாழ்மையாய், கற்றுக் கொள்வதற்கு வாஞ்சையுள்ளவர்களாய் நாம் இருக்க வேண்டும்.*

*(இ) நம்முடைய .................... விட்டு அவை பிரியாதிருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் மீது நிலையான கவனத்தை நாம் பதித்திருக்க வேண்டும்.*

*(ஈ) நம்முடைய ...................... மையத்தில் வைத்து அவற்றைக் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கையின் ஓட்டத்தை அவைதான் தீர்மானிக்கின்றன.*

*20. இந்த நான்கு கட்டளைகளையும் நாம் பின்பற்றுவோம் என்றால், தேவனுடைய வார்த்தை நமக்கு ஜீவனாகவும், நம் ....................... நல்ல ஆரோக்கியமாகவும், மருந்தாகவும் இருக்கும் என்று 22-ம் வசனம் சொல்கிறது.*

இந்த ஆச்சரியமான நன்மைகளை நம் வாழ்க்கையில் பெறும்படி, நாம் ஜெபிப்போம். தேவனுடைய உதவியை நாடுவோம்.

*பரலோகப் பிதாவே,*

*உம்முடைய வார்த்தைக்காக, உமக்கு நன்றி. மாம்சத்தில் வெளிப்பட்ட வார்த்தையாகிய இயேசுவுக்காகவும், உம்முடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்திற்காகவும் உமக்கு நன்றி சொல்கிறேன். ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் அது உண்டாக்கக்கூடிய வல்லமையான விளைவுகளை நான் பார்க்க ஆரம்பித்திருக்கிறேன். என் வாழ்க்கையில் உம்முடைய*

*வார்த்தைக்கு பிரதானமான இடத்தைக் கொடுக்கவும், சரியான கவனத்தை அதன் மீது பதிக்கவும் எனக்கு உதவி செய்யும்.*

*இப்பொழுது நான் பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலோடும், அவர் கொடுக்கிற வெளிச்சத்தோடும் வேதாகமத்தை வாசிக்கிறேன். அதன் வார்த்தைகளை ஆழமாய் உள்வாங்கி, அவை எனக்குள் கிரியை செய்யும்படி நான் இடம் கொடுக்கிறேன். சர்வ வல்ல தேவனுடைய சிருஷ்டிப்பின் சகல வல்லமையும் எனக்குள் கிரியை செய்வதாக. நான் என்ன வாசிக்கிறேனோ, அதோடு என் விசுவாசத்தைக் கலப்பதற்கு உதவி செய்யும். உம்முடைய ஜீவனும், வல்லமையும் நிறைந்த வார்த்தை, எனக்குள் ஆழமாய் என்ன கிரியை செய்யும்படி அனுப்பப்பட்டதோ, அதை அது நிறைவேற்றுவதாக.*

*வேதாகமத்தை விசுவாசிக்கிறவர்களுக்குள் அது உண்டாக்கக்கூடிய நன்மைகளை நான் முழுமையாய் அனுபவிக்க விரும்புகிறேன். எனவே எனக்குள் எங்காவது தற்பெருமையின் வேர் மறைந்திருக்கிறதா என்று என்னை சோதித்துப் பாரும். எனக்கு அதை வெளிப்படுத்தும். அதை அகற்றும்படி எனக்கு கிருபை தாரும். உம்முடைய வார்த்தையை நான் பெற்றுக் கொண்டு, அதை விசுவாசிக்கும்போது, அது எனக்குள் விசுவாசத்தையும், புதிய மனுஷனையும் உண்டாக்குகிறது. அது எனக்கு ஆவிக்குரிய போஷாக்காகிய பாலையும், அப்பத்தையும், திட உணவையும் கொடுக்கின்றது. அது என் மனதிலே வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அது என் மாம்ச சரீரத்திற்கு சுகத்தைக் கொடுக்கிறது. உம்முடைய வார்த்தையின் மூலம் என க்குக் கிடைக்கின்ற இந்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நான் நன்றி சொல்கிறேன்.*

*இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

இந்த செய்தித்தொடரின் இரண்டாவது செய்தியில், மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த விளைவுகளில் முதல் மற்றும் கடைசி விளைவைப் பயன்படுத்தி, விசுவாசம் உண்டாவதற்கும், சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இடையே உள்ள தொடர்பை டெரிக் விளக்கிக் காண்பிப்பார். பிறகு அவர் தொடர்ந்து, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை உண்டாக்கக்கூடிய இன்னும் ஐந்து விளைவுகளைக்

குறித்துப் போதிப்பார். கடைசியில், தேவனுடைய சித்தத்தோடு நம்முடைய சிந்தையை ஒத்திருக்கச் செய்யும்படி அவர் நமக்கு உதவி செய்வார். அப்பொழுது தேவனுடைய வார்த்தையின் அதிகபட்ச தாக்கத்தை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

394-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/38**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

பாடம் பதினேழு>>

# தேவனுடைய வார்த்தை, உங்களுடைய ஒருபோதும் வற்றிப் போகாத ஊற்று-பாகம் 2[4323]

## அறிமுகம்

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இந்தத் தொடரின் முதல் செய்தியில், வேதாகமத்தின் மகத்தான வல்லமையைக் குறித்தும், அதன் முக்கியத்துவத்தைக் குறித்தும் டெரிக் போதிக்க ஆரம்பித்தார். தேவனுடைய வார்த்தை என்றால், தேவனிடமிருந்து வருகின்ற வார்த்தை என்று நாம் புரிந்து கொண்டோம். வேதவசனம் என்றால், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை என்பதையும் நாம் புரிந்து கொண்டோம்.

❖ தேவனுடைய வார்த்தையைக் குறித்து, இதுவரை நாம் பார்த்த சில காரியங்களை ஒருமுறை திரும்பப் பார்ப்போம்:

❖ தேவனுடைய வார்த்தையும், தேவனுடைய ஆவியானவரும் ஒன்றாய் இணைந்து எல்லாவற்றையும் சிருஷ்டித்தனர்.

❖ நாம் வேதாகமத்தை வாசித்து, அதை உள்வாங்கிக் கொண்டு, அதன் கிரியை நமக்குள் நடக்கும்படி நாம் இடம் கொடுக்கும்போது, சர்வ வல்ல தேவனுடைய சிருஷ்டிப்பின் சகல வல்லமையும் நமக்குள் கிரியை செய்கிறது.

❖ தேவனுடைய வார்த்தை, அதை விசுவாசிக்கிறவர்களுக்குள் வல்லமையாய் கிரியை செய்கிறது.

❖ தேவனுடைய வார்த்தையோடு நம் விசுவாசத்தைக் கலக்கும்போது மட்டுமே, நமக்குள் அது தேவன் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கின்றது.

❖ தேவனுடைய வார்த்தை, ஜீவனுள்ளது, வல்லமையானது, கூர்மையானது, ஊடுருவிச் செல்லக்கூடியது, பிரித்தறியக்கூடியது, வகையறுக்கக்கூடியது.

தேவனுடைய வார்த்தை நம்முடைய வாழ்க்கையில் உண்டாக்கக்கூடிய சில முக்கியமான விளைவுகளைக் குறித்து டெரிக் இந்தத் தொடரின் முதல் செய்தியில் **(4322)** போதித்திருந்தார்:

*1. விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும்.*

*2. தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் பெற்றுக் கொள்ளும்போது, புதுப் பிறப்பு தேவனால் உண்டாகிறது.*

*3. தேவனுடைய வார்த்தை, புதுப் பிறப்பிற்கான வித்தாய் இருப்பது மட்டுமல்ல. அது புதிய ஜீவனுக்கு வேண்டிய ஆவிக்குரிய போஷாக்கையும் கொடுக்கிறது. பால், அப்பம் மற்றும் திட உணவாக அது இருக்கிறது.*

*4. தேவனுடைய வார்த்தை, நம் மனதிற்கு வெளிச்சத்தையும், புரிதலையும் கொடுக்கிறது.*

*5. தேவனுடைய வார்த்தை நம் சரீரங்களுக்கு வியாதியிலிருந்சுகத்தைக் கொடுக்கிறது.*

இந்த செய்தித்தொடரின் இரண்டாவது செய்தியில், மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த விளைவுகளில் முதல் மற்றும் கடைசி விளைவைப் பயன்படுத்தி, விசுவாசம் உண்டாவதற்கும், சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இடையே உள்ள தொடர்பை டெரிக் தன்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் விளக்கிக் காண்பிப்பார். பிறகு அவர் தொடர்ந்து, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை உண்டாக்கக்கூடிய இன்னும் ஐந்து விளைவுகளைக் குறித்துப் போதிப்பார். கடைசியில், தேவனுடைய சித்தத்தோடு நம்முடைய சிந்தையை ஒத்திருக்கச் செய்யும்படி அவர் நமக்கு உதவி செய்வார். அப்பொழுது தேவனுடைய வார்த்தையின் அதிகபட்ச தாக்கத்தை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி**

## வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.

தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தோடு பெற்றுக் கொள்ளும்போது, அதற்குள்ளே இருந்து வெளிப்படக்கூடிய பேராற்றலை, வல்லமையை, ஜீவனை பலர் ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை. டெரிக், நல்ல உயர் கல்விப் பின்னணியிலிருந்து வந்தவர். அவர் தம்முடைய படிப்பில் குறிப்பாக தத்துவவியலில் நிறைய வெற்றிகளைப் பெற்றிருந்தார். தத்துவவியல் என்றால், இவ்வுலக ஞானத்தின் மீது அன்பு என்று அர்த்தம். ஆனாலும் இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்த சமயத்தில், இராணுவத்தில் இருந்தபோது, அவர் வேதாகமத்தை வாசித்தார். அப்பொழுது அவர் இயேசுவை சந்தித்தார். அன்று அவர் இரண்டு முக்கியமான முடிவுகளுக்கு வந்தார். அதை அவர் ஒருபோதும் மாற்றியதில்லை. முதல் முடிவு, இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதாகும். இரண்டாவது முடிவு, வேதாகமம், மெய்யான, இன்றைக்கும் பொருந்தக்கூடிய, தொடர்புடைய ஒரு புத்தகம் என்பதாகும். இந்த இரண்டு முடிவுகளும், அவருடைய வாழ்க்கையின் போக்கை நிரந்தரமாக, முற்றிலுமாக மாற்றியமைத்தது. அவர் தன்னுடைய வாழ்க்கையை, வேதாகமத்தைப் புரிந்து கொள்வதற்கும், அதைப் போதிப்பதற்கும் அர்ப்பணித்தார்.

தத்துவவியலின் பல்வேறு முக்கியமான கருத்தியல்களை டெரிக் கற்றிருந்தாலும், அவை ஒவ்வொன்றும் தன்னுடையதுதான் சரி என்று உரிமைபாராட்டிலும், அவை ஒன்றோடொன்று ஒத்துப் போகவில்லை என்பதை அவர் கண்டுபிடித்தார். அப்பொழுது அவர் கொலோசெயர் **2:3**-ஐ வாசித்தார்: “அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.” அப்பொழுது அவர் தனக்குள் இவ்வாறு சொல்லிக் கொண்டார்: “கிறிஸ்துவுக்குள் ஞானம், அறிவு என்ற எல்லா பொக்கிஷங்களும் அடங்கியிருக்கும்போது, குப்பைத் தொட்டிகளில் கொட்டப்பட்டிருக்கிற மனுஷனுடைய ஞானத்தை நான் தேடிக் கொண்டிருக்கிறேன்?” இதே கேள்வியை நாமும் நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். ஞானம், அறிவு என்ற எல்லா பொக்கிஷங்களும் தேவனுடைய வார்த்தையாகிய இயேசுவுக்குள் நமக்குக் கிடைக்கக்கூடியதாய் இருக்கும்போது, நாம் ஏன் ஞானத்தை வேறு எங்கோ தேடிக் கொண்டிருக்கிறோம்?

நீங்கள் இந்தப் பாடத்தை தொடர்ந்து கற்றுக் கொள்ளும்போது,

விசுவாசியின் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு இருக்க வேண்டிய மகத்தான முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ளும்படி கர்த்தரிடம் ஜெபியுங்கள். அப்பொழுது உங்களுடைய வாழ்க்கையில் நன்மைகளைப் பார்க்க ஆரம்பிப்பீர்கள். வேதாகமத்தின் மீது புதிதாய் உங்களுக்குள் உண்டாயிருக்கிற அன்பையும், அறிவையும் நீங்கள் மற்ற வர்களோடு பகிர்ந்து கொள்வீர்கள்.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

*1. நீதிமொழிகள் 4:20-22 வசனங்களை, தேவனுடைய மருந்து புட்டியாக டெரிக் புரிந்து கொள்கிறார். செவி கொடுத்தல் என்றால் என்ன என்பதற்கு ஒரு தெளிவான விளக்கத்தை இங்கு தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.*

*(அ) என் ...................... கவனி. நம் கவனத்தை சிதறடிக்கும் எல்லா விஷயங்களையும் ஒதுக்கி வைத்து விட்டு, முழுமையான, சிதறாத கவனத்தை நாம் கொடுக்க வேண்டும். தேவனே நம்மிடம் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்பதை கவனமாய் கேட்பது பயனுள்ளதாயிருக்கும்.*

*(ஆ) உங்களுடைய ............. சாய்த்து, தாழ்த்தி கேளுங்கள். தேவனே நமக்கு ஆசிரியராய் இருக்கிறார். நாம் அவருடைய மாணவர்கள். எனவே நாம் நம்மையே தாழ்த்தி, கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உண்மையான விருப்பமுடையவர்களாய், கற்றுக் கொள்ளக் கூடியவர்களாய் வாழ வேண்டும். இதை நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.*

*(இ) தேவனுடைய வார்த்தை உங்களுடைய ................ விட்டு பிரியாதிருக்க வேண்டும். நம் கவனம் நிலையாய் பதிந்திருக்க வேண்டியது அவசியம். நம்முடைய ஒரு கண்ணை நம் சூழ்நிலைகளின் மீதும், இன்னொரு கண்ணை கர்த்தர் மீது வைத்திருக்கக்கூடிய நிலையை நாம் தவிர்க்க வேண்டும்.*

*(ஈ) அவற்றை உங்களுடைய ......................... மையத்தில் வைத்துக் காத்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய ஆளுமையின் மையமாகிய உங்களுடைய இருதயத்திற்குள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு செல்வதுதான் இந்தக் கட்டளைகளின் நோக்கமாக இருக்கின்றது. காரணம்,*

*"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள். அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்," என்று 23-ம் வசனம் சொல்கிறது.*

## வேதாகமம் உருவாக்குகிற அடுத்த விளைவுகள்

இப்பொழுது நாம் தொடர்ந்து, நமக்குள் வேதாகமம் உருவாக்கக்கூடிய அடுத்த முக்கியமான விளைவுகளைக் குறித்து பார்ப்போம். ஒரு நினைப்பூட்டுதலாக, முந்திய பாடத்தில் நாம் கற்றுக் கொண்ட முதல் ஐந்து விளைவுகளைப் பார்ப்போம்:

- ❖ விசுவாசம்
- ❖ புதிய மனுஷன்
- ❖ ஆவிக்குரிய போஷாக்கு
- ❖ மனதளவில் உண்டாகும் வெளிச்சம்
- ❖ சரீர சுகம்

2. ................. மீது வெற்றிதான் ஆறாவது விளைவாயிருக்கிறது. சங்கீதம் 119:11-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது: "நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்." தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் நாம் காத்துக் கொள்ளும்போது, அது நம் வாழ்க்கையின் திசையை தீர்மானித்து, நம்மை நடத்துகிறது. பாவம் செய்யாதபடி, அது நம்மை பாதுகாக்கிறது.

3. பேரழிவிற்கு நேராக நம்மை தந்திரமாய் இழுத்து நடத்தும்படி, சாத்தானிடம் .............. இருக்கின்றன. நம்மை தவறாய் நடத்தும்படி, வெற்றி, சந்தோஷம், பெயர்-புகழ் என்ற அறிவிப்புப் பலகைகளை அவன் ஆங்காங்கே வைத்திருக்கிறான். ஆனால் அவையனைத்தும் கண்ணிகளாய், ஆபத்துக்களாய் இருக்கின்றன. அவை பேரழிவில் முடிகின்றன. இதற்குத் தீர்வு, சங்கீதம் 17:4-ல் எழுதப்பட்டிருக்கிறது: "நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய (சாத்தானுடைய) பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொள்கிறேன்."

4. .................... மீது வெற்றி என்பது ஏழாவது விளைவாயிருக்கிறது. நாம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் இருக்கின்றோம் என்று எபேசியர் 6:12 சொல்கிறது. ஆவிக்குரிய பல்வேறு ஆயுதங்களைக் குறித்து அங்கு எழுதப்பட்டிருக்கிறது. 17-ம் வசனத்தில் பவுல் இவ்வாறு எழுதுகிறார்: "தேவ

வசனமாகிய (கிரேக்க மொழியில் ரேமா அல்லது பேசப்பட்ட தேவனுடைய வார்த்தை) ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்."

**5.** ஒவ்வொரு முறையும் நீங்கள் வேதாகமத்தை மேற்கோள் காண்பித்துப் பேசும்போது, ஆவியானவரின் ......................... அது மிகவும் கூர்மையாய் கிரியை செய்கிறது. அங்கே பிசாசு பின் வாங்கித்தான் ஆக வேண்டும். மத்தேயு 4-ம் அதிகாரத்தில், இயேசு நமக்கு ஒரு மாதிரியைக் காண்பித்திருக்கிறார். சாத்தானுடைய சோதனைகளை மூன்று முறை அவர் எதிர்கொண்டபோது, உபாகமம் புத்தகத்திலிருந்து வசனத்தை மேற்கோள் காண்பித்து, "எழுதப்பட்டிருக்கிறதே" என்று மூன்று முறையும் அவர் பதிலளித்தார்.

*6. 1 யோவான் 2:14 சொல்கிறது: "வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்." தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் ................................ ...... என்றால், அது உங்களுக்கு ஆவிக்குரிய பெலனையும், சாத்தான் மீது வெற்றியையும் கொடுக்கும்.*

*7. வெளிப்படுத்தின விசேஷம் 12:11-ல், சாத்தான் மீது வெற்றியடைவதற்கான திறவுகோல்கள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வசனம் சொல்கிறது: "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், அதற்கு தப்பும்படி, தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை அவர்கள் (தேவனுடைய ஜனங்கள்) ஜெயித்தார்கள்." மூன்று திறவுகோல்கள் பின்வருமாறு:*

*(அ) ........................................... இரத்தம் - இயேசுவின் இரத்தம் மட்டுமே நம்முடைய பாவங்களைக் கழுவி சுத்திகரித்து, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறது.*

*(ஆ) அவர்களுடைய ............................ வார்த்தைகள் - இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்திருக்கிறது என்று தேவனுடைய வார்த்தை என்ன சொல்லியிருக்கிறதோ, அதையே நாம் சாட்சியாக அறிக்கை செய்ய வேண்டும்.*

*(இ) ........................ நேரிடுகிறதாயிருந்தாலும், நாம் நம் வாழ்க்கையையும் பெரிதாக எண்ணி, அதை நேசிக்கக்கூடாது. எல்லாவற்றையும் கொடுப்பதற்கு, உச்சகட்ட தியாகம் தேவைப்பட்டால், அதையும் செய்வதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.*

வேதாகமத்தின் இந்த வசனம் மற்றும் பல வசனங்களின் அடிப்படையில் ஒரு அறிக்கையை பின்வருமாறு எழுதி, பிசாசுக்கு எதிரான ஒரு அறிக்கையாக இதை டெரிக் மற்றும் ரூத் பிரின்ஸ் பயன்படுத்தினார்கள். சாத்தானுக்கு விரோதமான ஒரு ஆயுதமாக தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றது:

> *என் சரீரம், இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட, தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட, பரிசுத்த ஆவியானவர் தங்கி வாசம் பண்ணுகின்ற ஒரு ஆலயமாக இருக்கின்றது. தேவனுடைய பணிக்கென்றும், அவருடைய மகிமைக்கென்றும் என்னுடைய சரீரத்தின் அவயங்களை தேவனுடைய நீதியின் ஆயுதங்களாக தேவனிடம் இணங்கச் செய்து அர்ப்பணிக்கின்றேன். பிசாசுக்கு என்னுடைய வாழ்க்கையில் இடமில்லை. அவனுக்கு என் மீது எந்த வல்லமையும் இல்லை. எனக்கு விரோதமாக எவ்விதத்திலும் அவன் உரிமை பாராட்ட முடியாது. இயேசுவின் இரத்தம் எல்லா பிரச்சனைகளையும் விலைக்கிரயம் செலுத்தி தீர்த்திருக்கிறது. ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவின் இரத்தத்தினாலும், என் அறிக்கையின் வார்த்தைகளினாலும் நான் சாத்தானை மேற்கொண்டு ஜெயித்திருக்கிறேன். மரணமே நேரிடுகிற தாயிருந்தாலும், நான் என் வாழ்க்கையை பெரிதாக நேசிக்க மாட்டேன். அதற்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன். என் சரீரம் கர்த்தராகிய இயேசுவுக்குரியது. கர்த்தரும் என் சரீரத்திற்கு உரியவர்.*

*8. நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை உண்டாக்கக்கூடிய எட்டாவது விளைவு, அது நம்மைக் கழுவி சுத்திகரிக்கின்றது அல்லது .......................................... (பரிசுத்தமாக்குகிறது). புறம்பே அல்ல, உள்ளே, தேவனுடைய வார்த்தையின் மூலம் நம்மையே நாம் எவ்வாறு சுத்திகரித்துக்*

*கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வது, எவ்வளவு விலையேறப்பெற்ற ஒரு சிலாக்கியமாக இருக்கின்றது!*

*எபேசியர் 5:25-27 வசனங்களில், ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவையும், கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துவின் மணவாட்டி என்றழைக்கப்படுகிற அவருடைய சபைக்கும் இடையே உறவையும் ஒப்பிட்டு, பவுல் எழுதியிருக்கிறார்.*

> *[25]புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, [26]தாம் அதை திருவசனத்தைக் கொண்டு, தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், [27]கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.*

அப்படிப்பட்ட ஒரு சபையைத்தான், தம்முடைய மணவாட்டியாக ஏற்றுக் கொள்ளும்படி இயேசு முன்குறித்திருக்கிறார். ஆனால் அப்படிப்பட்ட ஒரு மணவாட்டியாக சபை மாற வேண்டுமென்றால், அது தேவனுடைய வார்த்தையினால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட வேண்டும். வேதாகமத்தை வாசித்து, பிரசங்கிக்கப்பட்டு, போதிக்கப்படுகிற வார்த்தையை கேட்டு, அது பரிசுத்தமாக்கப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தை ஒழுங்கும்கிரமமுமாக போதிக்கப்படுகிற சபையில் ஒரு வித்தியாசம் இருக்கும். அவர்களுடைய ஆராதனையில் தூய்மையும், பரிசுத்தமும் இருக்கும். தேவனுடைய வார்த்தையின் சுத்திகரிக்கிற கிரியை இல்லாத சபையில், வெறுமனே கூடி வந்து, தங்கள் உணர்வுகளை மட்டுமே வெளிப்படுத்துகிற ஒரு சபையில், அப்படிப்பட்ட ஒரு நிலை காணப்படாது. சபையில் மெய்யான, தூய்மையான ஆராதனை காணப்பட வேண்டுமென்றால், அதற்கு ஒரே வழி, ஜனங்கள் தேவனுடைய வார்த்தையினால் ஒழுங்கும்கிரமமுமாக கழுவி சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்பதுதான்.

*9. நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை உண்டாக்கக்கூடிய ஒன்பதாவது விளைவு, அது ஒரு ......................... போல செயல்படுகிறது. யாக்கோபு 1:23 சொல்கிறது: “என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக்*

*கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்.'' வேதாகமம், நம்முடைய புறத்தோற்றத்தைக் காண்பிக்கிற ஒரு கண்ணாடியைப் போல செயல்படுவதில்லை. மாறாக, அது நம்முடைய மெய்யான ஆவிக்குரிய நிலையை நமக்குக் காண்பிக்கிற ஒரு கண்ணாடியாக இருக்கிறது. நாம் அதைக் குறித்து ஒன்றைச் செய்ய வேண்டும்.*

*10. நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் நன்மைக்காக, இந்தக் கண்ணாடியைப் பார்க்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாயிருக்கிறது. 2 கொரிந்தியர் 3:18-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: ''நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.'' தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் நாம் தொடர்ந்து பார்க்கும்போது, நாம் தேவனுடைய ................ அதில் வெளிப்படுவதைப் பார்க்கின்றோம். நாம் அதைப் பார்க்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை மகிமையின் மேல் மகிமை அடையச் செய்து, அந்த சாயலாகவே நம்மை உருமாற்றுகிறார்.*

*11. நாம் இந்தச் சத்தியத்தை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் நீங்கள் பார்க்கவில்லை என்றால், ....................... ஆவியான வரால் கிரியை செய்ய முடியாது. கண்ணாடியிலிருந்து நீங்கள் உங்களுடைய கண்களை விலக்கும்போது, பரிசுத்த ஆவியான வர் உங்களுக்குள் தம் கிரியையை நிறுத்தி விடுகிறார். ஆகையால் நீங்கள் உருமாற்றப்பட வேண்டுமென்றால், கண்ணாடியில் பார்க்கும்படி நேரம் செலவிடுங்கள். நீங்கள் கண்ணாடியில் தொடர்ந்து பார்க்கும்போது, உங்களை உருமாற்றுவதற்கு பரிசுத்த ஆவியானவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.*

*12. நம்முடைய மதிப்பு என்ன என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்? நம் ஒவ்வொருவருக்காகவும் தேவன் என்ன ................................ என்பதை அறிந்து கொள்வதன் மூலம், நாம் நம் மதிப்பை அறிந்து கொள்கிறோம். இந்தப்*

*பிரபஞ்சத்திலேயே மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றாகிய இயேசுவின் இரத்தத்தினால் தேவன் நம்மை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். தேவன் தாம் செலுத்திய விலைக்கிரயத்தின் அடிப்படையில் நம்மைப் பார்க்கிறார். அவருடைய பார்வையில், நாம் முடிவில்லா மதிப்பை உடையவர்களாய் இருக்கின்றோம்.*

*12. பத்தாவது விளைவு, வேதாகமத்தின் மூலமாகத்தான் தேவன் நம்மிடம் வருகின்றார் என்பதாகும். வேதாகமத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளை உங்களை ஒருபோதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தவில்லை, அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை என்றால், அது என்ன சொல்கிறது என்பதை நீங்கள் ஒருபோதும் கேள்விப்பட்டதே இல்லை என்று அர்த்தம். காரணம், அது ஆச்சரியப்படுத்துகிற, அதிர்ச்சியைக் கொடுக்கிற ஒரு புத்தகமாயிருக்கிறது. இயேசு தம்முடைய சீஷர்களிடம் பேசியபோது, அவர் இவ்வாறு சொன்னார்: "ஒருவன் என்னில் ......................., அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோவான் 14:23).*

இந்த வசனம் நம்மை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்கிறது! இந்தப் பிரபஞ்சத்தையே சிருஷ்டித்த சர்வ வல்ல தேவனே நம் பிதாவாயிருக்கிறார். பிதாவாகிய அவரும், அவருடைய குமாரனாகிய இயேசுவும், பெலவீனர்களாகிய, தகுதியற்றவர்களாகிய நம்மிடம் வருகின்றனர். அவர்கள் வந்து நமக்குள் வாசம் பண்ணுகின்றன ர். இதற்கு என்ன நிபந்தனை? அவருடைய வார்த்தையைக் காத்துக் கொள்வதுதான். அதற்கு செவிகொடுத்து, அதன்படி செய்து, அதைப் பின்பற்றி வாழ்வதாகும்.

## *தேவனுடைய வார்த்தையை எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும்?*

விசுவாசிகளாகிய நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையினால் என்ன செய்ய முடியும் என்பதைக் குறித்து கற்றுக் கொள்ளும்போது, அது நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. ஆனால் அதே நேரத்தில், முழு இருதயத்தோடு அதைப் பெற்றுக் கொள்ளும்படி, நமக்கு இருக்க வேண்டிய சரியான மனப்பான்மையையும், தகுதியையும் குறித்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

14. ஏசாயா 66:2-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது: "ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்." தேவன் ஒருவனை தயவாய் நோக்கிப் பார்க்க வேண்டுமென்றால், அவனுக்குள் இருக்க வேண்டிய மூன்று முக்கியமான குணங்களைக் குறித்து இது சொல்கிறது:

(அ) .......................... இருக்க வேண்டும். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது," என்று மத்தேயு 5:3-ல் இயேசு சொன்ன வார்த்தைகளை நாம் நினைவுகூர வேண்டும். அதற்காக நாம் கோழைகளாக, பயத்தில் வாழ வேண்டும் என்று அர்த்தமல்ல. நாம் நம்மில் எவ்வளவு பெலனற்றவர்களாய் இருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். தேவன் இல்லாமல் நம்மால் வாழ முடியாது என்ற நிலையை இது சுட்டிக் காண்பிக்கிறது.

(ஆ) ................................ ஆவியை உடையவர்களாய் இருக்க வேண்டும். நாம் பேசின, செய்த பல விஷயங்கள் தேவனை வேதனைப்படுத்தியிருக்கின்றன. அவை அவரை நம் வாழ்க்கையை விட்டு வெளியே நிறுத்தியிருக்கின்றன. அவை தேவன் நமக்குள் வாசம் பண்ண முடியாமல் செய்து விட்டன. இவை எல்லாவற்றிற்காகவும் வருந்துகிற இருதயம்தான், நொறுங்குண்ட இருதயமாகும்.

(இ) அவருடைய வார்த்தைக்கு .................................... - அச்சுறுத்தப்பட்டவர்களாய் நாம் வாழ்வதை தேவன் விரும்பவில்லை. மாறாக, தேவபக்தியும், பயமும் உள்ளவர்களாய் நாம் வாழ வேண்டும். கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தினால் உண்டாகக்கூடிய ஆசீர்வாதங்களைக் காட்டிலும் மேலான வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் முழு வேதாகமத்திலும், வேறு எதிலும் இல்லை.

15. தேவன் தமது மாணவர்களை அவர்களுடைய குணத்தின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கிறார். அவர்களுடைய அறிவுப்பூர்வமான சாதனைகளின் அடிப்படையிலோ அல்லது அவர்கள் எவ்வளவு பட்டயப் படிப்புகளை முடித்திருக்கிறார்கள் என்பதன் அடிப்படையிலோ அவர் தேர்ந்தெடுப்பதுல்லை. தம்முடைய மாணவர்களாக ஏற்றுக் கொள்ள விரும்பும்

*நபர்களிடம் தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை 25-ம் சங்கீதம் வெளிப்படுத்துகிறது.*

*(அ) சங்கீதம் 25:8-9 சொல்கிறது: "கர்த்தர் நல்லவரும், உத்தமருமாயிருக்கிறார். ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார். சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்." இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் முதல் நிபந்தனை: ..................... அல்லது சாந்தகுணம்*

*(ஆ) இதே சங்கீதத்தின் 12-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது: "கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ, அவனுக்கு தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார்." தேவன் எதிர்பார்க்கிற இரண்டாவது குணம், கர்த்தருக்கு ..............................*

*(இ) 14-ம் வசனத்தில், இரண்டாவது குணம் திரும்பவும் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: "கர்த்தருடைய .................... அவருக்கு பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையை தெரியப்படுத்துவார்." இங்கு* **'இரகசியம்'** *என்ற வார்த்தைக்கு,* **'கர்த்தருடைய இரகசிய ஆலோசனை'** *என்று அர்த்தம். தேவன் தம்முடைய இரகசியமான திட்டங்களை தமக்குப் பயந்தவர்களோடு பகிர்ந்து கொள்கிறார். ஆகையால் இந்த மனப்பான்மையை நாம் பண்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

*16. கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை .................. கொள்ளாதவர்கள், கர்த்தரை விடாமுயற்சியோடு தேடினாலும், அவரை நோக்கிக் கூப்பிட்டாலும், கர்த்தர் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க மாட்டார் என்று நீதிமொழிகள் 1:28-29 சொல்கிறது.*

*17. யாக்கோபு 1:21 சொல்கிறது: "நீங்கள் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து விட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்." இதில் இரண்டு*

*நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன: ................................ மற்றும் சாந்த குணம்.*

*18. தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ, அதைச் செய்வதற்கு நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். யோவான் 7:17-ல், இயேசு இவ்வாறு சொன்னார்: "அவருடைய (தேவனுடைய) சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்வான்." இங்கு இயேசு என்ன சொல்கிறார்? அறிகிற அறிவில் மட்டுமே உங்களுடைய ஆர்வம் இருக்குமென்றால், தேவன் உங்களை சந்திக்க மாட்டார். ஆனால் நீங்கள் தேவனுடைய சித்தத்தை ............... விரும்பினால், தேவன் உங்களுக்கு சத்தியத்தை வெளிப்படுத்துவார்.*

*19. முன்பு நாம் பார்த்த சங்கீதம் 119:11-ம் வசனத்திற்கு திரும்பவும் செல்வோம். தேவனுடைய ஆசீர்வாதத்தையும், செழிப்பையும் நீங்கள் மெய்யாகவே விரும்புவீர்கள் என்றால், நீங்கள் தேவனுடைய வார்த்தையை உங்களுடைய இருதயத்தில் பொக்கிஷமாகக் காத்துக் கொள்ள வேண்டும். அதைச் செய்வதற்கு ஒரு சிறந்த வழி, வேதவசனத்தை ............................*

இந்தப் பாடத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிற இந்த நேரத்தில், நம்மையே நாம் கர்த்தரிடத்தில் அர்ப்பணிப்போம்:

*கிருபை நிறைந்த பிதாவே,*

*உம்முடைய வார்த்தைக்காக, அதில் அடங்கியிருக்கிற மகத்தான, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுக்காக உமக்கு நன்றி. எனக்கென்று நீர் வைத்திருக்கிற எல்லா நன்மைகளையும் நான் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய வெறுமையை, எனக்கு நீர் எவ்வளவு தேவையாயிருக்கிறீர் என்று நான் பார்க்கும்படி எனக்கு உதவும். நொறுங்குண்ட இருதயத்தோடு உம் முன்பாக வரவும், உம்முடைய வார்த்தைக்கு நடுங்கியவனாக நிற்கவும் எனக்கு கிருபை தாரும். தேவபக்தியும் பயமும் உள்ளவனாய், தாழ்மையாய் உம் முன்பாக வரும்படி எனக்கு உதவி செய்யும். உமக்கு பயப்படுகிற பயத்தையும், அதினால் உண்டாகிற ஆச்சரியமான ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும்*

*நான் தெரிந்து கொள்கிறேன். மனந்திரும்புதலோடும், சாந்தகுணத்தோடும் உம்மிடம் வருகின்றேன். உம்முடைய சித்தத்தை அறிந்து கொள்வதோடு நின்று விடாமல், நான் அதைச் செய்ய விரும்புகிறேன். ஆகையால் உம்முடைய வார்த்தையை மனப்பாடம் செய்ய, அதை தியானிக்க, அதை சந்தோஷத்தோடு பெற்றுக் கொள்ள தயவு செய்து எனக்கு உதவும்.*

*என் வாழ்க்கையில் உம்முடைய வார்த்தையின் சம்பூரண நன்மைகளையும் நான் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். உம்முடைய வார்த்தையின் மூலம், பாவத்தின் மீதும், சாத்தானின் மீதும் எனக்கு வெற்றியைத் தந்திருக்கிறீர். உமக்கு நன்றி. அது என்னை சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறது. உமக்கு நன்றி. அது ஒரு கண்ணாடியைப் போல செயல்பட்டு, என்னுடைய உண்மையான ஆவிக்குரிய நிலையை எனக்குக் காண்பிக்கிறது. நான் மாறும்படி அது எனக்கு உதவுகிறது. உமக்கு நன்றி. ஒவ்வொரு நாளும் உம்மை இன்னும் அதிகமாய் நேசிக்கும்படி நான் கற்றுக் கொள்ளும்போது, உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்க எனக்கு உதவி செய்யும். நான் அப்படிச் செய்யும்போது, பிதாவாகிய நீரும், குமாரனாகிய இயேசுவும் எனக்குள் வந்து வாசம் பண்ணுவீர் என்று நான் விசுவாசிக்கிறேன்.*

*இது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி, தாழ்மையாய் நிற்கச் செய்கிறது. உமக்கு நன்றியுள்ளவனாய் என்னை இது வாழச் செய்கின்றது. உமக்கு நன்றி. உமக்கு நன்றி. உமக்கு நன்றி!*

*இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

395-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/28**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துதல் என்ற பாடத்திற்கான அறிமுகம்

மூன்று செய்திகள் கொண்ட இந்த செய்தித்தொடரில், பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக் கொள்வதற்கு வேதவசனத்தில் கொடுக்கப்பட்ட மாதிரியை நமக்கு எடுத்துக் காண்பிப்பதிலிருந்து டெரிக் பிரின்ஸ் ஆரம்பிக்கின்றார். முதலில், அவர் இரண்டு வித்தியாசமான ஞாயிற்றுக்கிழமைகளைக் குறித்துப் பேசுகிறார். ஒன்று, உயிர்த்தெழுதல் ஞாயிறு. இன்னொன்று, பெந்தேகோஸ்தே ஞாயிறு. இவ்விரண்டிலும் பரிசுத்த ஆவியான வர் கொடுக்கப்பட்டபோது, வித்தியாசமான விளைவுகள் உண்டாயின. அதைக் குறித்தும் அவர் பேசுகிறார். பிறகு ஜனங்கள் எப்பொழுது எவ்வாறு பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர் என்பதைக் குறித்த சில எடுத்துக்காட்டுகளை அவர் வேதாகமத்திலிருந்து எடுத்து நம் முன் வைக்கிறார். அது இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட தளத்திற்குள் நுழையச் செய்கிற ஒரு அனுபவமாயிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதைக் குறித்த அடிப்படைப் போதனையைக் கொடுத்த பிறகு, பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் குறித்து டெரிக் விவரமாக விளக்கிச் சொல்கிறார். 1 கொரிந்தியர் 12:7-11 வசனங்களில் பவுல் எழுதியிருக்கிறபடி அவர் இதைப் போதிக்கிறார்:

> *[7]ஆவியானவருடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*
> *[8]எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியானவராலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியான வராலே அறிவை உணர்த்தும் வசனமும், [9]வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலே குணமாக்கும் வரங்களும், [10]வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. [11]இவைகளையெல்லாம் அந்த*

*ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.*

இந்த வேதப்பகுதி, பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களை நமக்கு வெளிப்படுத்துகிறது. வேதாகம போதகர்கள் இவற்றை வழக்கமாக மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

❖ வெளிப்படுத்தலின் வரங்கள் - ஞானத்தின் வார்த்தையைப் பேசுதல், அறிவை உணர்த்தும் வார்த்தையைப் பேசுதல், ஆவிகளைப் பகுத்தறிதல்.

❖ வல்லமையின் வரங்கள் - விசுவாசம், அற்புதங்களை நிகழ்த்தும் வரம், குணமளிக்கும் வரம்

❖ குரல் வரங்கள் - பற்பல பாஷைகளைப் பேசும் வரம், பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரம், தீர்க்கதரிசன வரம்

இந்தத் தொடரின் இரண்டாவது, மூன்றாவது செய்திகள், இந்த வேதபாடத்திலுள்ள மற்ற செய்திகளிலிருந்து வித்தியாசப்பட்டிருக்கின்றன. இவற்றில் போதனைகளைக் காட்டிலும், செயல் விளக்கங்கள்தான் அதிகமாக இருக்கும். டெரிக் எவ்வாறு பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் செயல்படுகிறார் என்பதை நீங்கள் நேரடியாகப் பார்ப்பீர்கள். மற்றவர்களும் அவ்வாறு செயல்படும்படி அவர் உற்சாகப்படுத்துவதையும் நீங்கள் பார்ப்பீர்கள்.

பரிசுத்த ஆவியானவரின் வரங்களை நாம் கருவிகளாய் பயன்படுத்த வேண்டும். நாம் அவற்றை பொம்மைகளாய் பயன்படுத்தக்கூடாது. இந்தப் பூமியில் இயேசுவின் ராஜ்யத்தை நிறுவும்படி, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட தளத்தில் பயன்படுத்தத் தக்கதாக, தேவன் அவற்றை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

*பாடம் பதினெட்டு>>*

*ஆவிக்குரிய வரங்களைப் யன்படுத்துதல்-பாகம் 1*[4154]

# பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

டெரிக்கின் போதனைகளை இந்த வேதபாட வழிகாட்டியின் மூலம், இதில் கொடுக்கப்பட்டிருக்கிற வரிசையின்படி நீங்கள் பின்பற்றி வருகின்றீர்கள் என்றால், இந்தப் பாடத்தை ஆவியான வரின் முழுக்கு ஞானஸ்நானம் என்ற செய்தியில் ஏற்கனவே நாம் கற்றுக் கொண்டதை நீங்கள் நினைவுகூருவீர்கள். பெந்தேகோஸ்தே ஞாயிறன்று பொழியப்பட்ட பரிசுத்த ஆவியானவரை அவர்கள் பெற்றுக் கொண்டதைப்போல, நீங்களும் ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், பிறகு இந்த முக்கியமான போதனையை இன்னும் அதிகமாய் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பாக இந்தப் பாடத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதை அனுபவப்பூர்வமாகவும் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்களால் இதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க முடியும்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

சபைக்குள் நடக்கின்ற இவ்விஷயம் வருந்தத்தக்கது. சபையின் சுவிசேஷக, பெந்தேகோஸ்தே, கரிஸ்மாட்டிக் பிரிவினருக்கிடையே, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுதல் என்றால் என்ன என்பதைக் குறித்த பெரிய குழப்பமும், தவறான புரிதலும் அதிகமாக காணப்படுகிறது. எடுத்துக்காட்டிற்கு, ஒரு நல்ல பாப்டிஸ்ட் இவ்வாறு

சொல்வார்: “நல்லது, நான் மறுபடியும் பிறந்தபோதே, பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக் கொண்டேன். இன்னும் பெற்றுக் கொள்வதற்கு வேறு ஒன்றுமில்லை.” அதற்கு பெந்தேகோஸ்தே விசுவாசி ஒருவர் இவ்வாறு சொல்வார்: “இல்லை. நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆவியானவருக்குள் முழுக்கு ஞான ஸ்நானம் பெற்று, அந்நிய பாஷைகள் பேசும்வரை, நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள முடியாது.” அவர்கள் ஒருவர் மற்ற வர் மீது கோபம் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

பெரும்பாலான விஷயங்களில், நேர்மையான கிறிஸ்தவர்கள் வேதவசனத்தின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் ஒத்துப் போக மாட்டார்கள். இங்கே உண்மை என்னவென்றால், இவர்கள் இருவரும் பேசிய வார்த்தைகள், பாதி சரியாகவும், மீதி பாதி தவறாகவும் இருக்கிறது. இந்தச் செய்தியின் மூலம், இந்தக் குழப்பத்தின் முடிச்சை அவிழ்ப்பதற்கு டெரிக் நமக்கு உதவி செய்கிறார். உண்மை இதுதான். ஜனங்கள், இரண்டு வித்தியாசமான வழிகளில், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டன ர் என்பதைக் குறித்து புதிய ஏற்பாடு பேசுகிறது. இவ்விரண்டு வழிகளையும் நாம் வித்தியாசப்படுத்த அறிந்து கொள்வோம் என்றால், அங்கே எந்தக் குழப்பமும் இருக்காது. இவ்விரண்டு வழிகளையும் தெளிவாக வரையறைக்கும்படி, அவற்றை விவரிக்கும்படி, அவற்றுக்கிடையே உள்ள வித்தியாசத்தை தெளிவுபடுத்தும்படி இரண்டு வரலாற்றுச் சூழ்நிலைகளை புதிய ஏற்பாட்டிலிருந்து டெரிக் பயன்படுத்தினார்.

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

## பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்ள வேண்டிய இரண்டு வழிகள்

*1. கிறிஸ்தவ சபையில் பெரிய அளவில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இரண்டு ஞாயிற்றுக்கிழமைகள் இருக்கின்றன:*

*(அ) முதல் ஞாயிறு, ................................. ஞாயிறு (யோவான் 20:19-22).*

*(ஆ) இரண்டாம் ஞாயிறு, ............... ஞாயிறாகும். இது ஏழு வாரங்களுக்குப் பிறகு வந்தது (அப்போஸ்தலர் நடபடிகள் 2:1-4).*

இந்த இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும், விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் அவை ஒன்றுக்கொன்று வித்தியாசமான அனுபவங்களாகும். இதில் ஒவ்வொரு அனுபவத்தின் தன்மையையும் நாம் பார்க்கும்போது, நாம் இதோடு எந்த நிலையில் தொடர்பு கொண்டிருக்கின்றோம் என்பதை தனிப்பட்ட விதத்தில் நம்மால் புரிந்து கொள்ள முடியும். பின் வரும் கேள்விகளுக்கும் நம்மால் பதிலளிக்க முடியும்: நான் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டிருக்கிறேனா? இன்னும் நான் பெற்றுக் கொள்ள வேண்டிய அனுபவம் ஏதாகிலும் இருக்கிறதா? பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதில் என்ன சம்பந்தப்பட்டிருக்கிறது?

## *உயிர்த்தெழுந்த ஞாயிறு*

யோவான் **19:20-22** வசனங்களில், உயிர்த்தெழுந்த ஞாயிறன்று நிகழ்ந்த சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்த பிறகு, முதலில் இயேசு தம்முடைய சீஷர்களிடம் தோன்றினார். இந்த வேதப்பகுதியின் அடிப்படையில், பின் வரும் ஆறு கேள்விகள் அமைந்திருக்கின்றன.

> *19வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத் தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று, “உங்களுக்குச் சமாதானம்,” என்றார். 20அவர் இப்படிச் சொல்லி, தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.*
>
> *21இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி, “உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. பிதா என்னை அனுப்பினதுபோல, நானும் உங்களை அனுப்புகிறேன்,” என்று சொல்லி, 22அவர்கள் மேல் ஊதி, “பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்,” என்றார்.*

*2. 19-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற, வாரத்தின் முதல் நாள் என்பது ......................... குறிக்கின்றது. காரணம், ஓய்வுநாள் (சனிக்கிழமை) என்பது ஏழாம் நாளாயிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை என்பது புதிய வாரத்தின் முதல் நாளாகும்.*

*3. இயேசு தம்முடைய ........................., தம் விலாவையும் தம் சீஷர்களிடம் காண்பித்தார் (19-ம் வசனம்). சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்ட அதே சரீரத்தைத்தான் அவர்கள் பார்க்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு மெய்ப்பித்துக் காண்பிக்கும்படி அவர் அப்படிச் செய்தார். அதே சரீரமாயிருந்தாலும், அது மகிமையாய் உருமாற்றப்பட்ட சரீரமாயிருந்தது.*

*4. 22 -ம் வசனத்தில், 'ஊதினார்' என்ற வார்த்தை, உலக வழக்கில், ............................. இசைக்கருவியை வாசிப்பவரோடு இணைத்துப் பயன்படுத்தப்படுகிறது. அருமையான இசையை வெளிக்கொண்டு வரும்படி, அவர் தன்னுடைய இசைக்கருவியின் வாய்ப்பகுதியில் ஊதுகிறார். இயேசு எட்ட தள்ளி நின்று, அவர்கள் அனைவர் மீதும் ஒட்டுமொத்தமாக ஊதியிருப்பார் என்று சொல்ல முடியாது. மாறாக, அவர் அவர்கள் ஒவ்வொருவர் மீதும் தனிப்பட்ட விதத்தில் ஊதினார். அவர் அப்படிச் செய்யும்போது, ''பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்,'' என்று சொன்னார்.*

*5. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிற இந்தக் குறிப்பிட்ட நேரத்தில், சீஷர்கள் பழைய ஏற்பாட்டு இரட்சிப்பிலிருந்து புதிய ஏற்பாட்டு ........... ....................... கடந்து சென்றனர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், இன்னும் செலுத்தப்படாத, ஆனால் தீர்க்கதரிசனங்கள் மற்றும் மாதிரிகள் மூலம் வாக்குப்பண்ணப்பட்ட ஒரு பலியின் மீது விசுவாசம் வைப்பதன் மூலம், ஜனங்கள் இரட்சிக்கப்பட்டனர். அவர்களுடைய விசுவாசம், இன்னும் நிறைவேறாத ஒன்றை முன் நோக்கிப் பார்த்தது. ஆனால் புதிய ஏற்பாட்டில், இயேசு சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய பலியை விசுவாசிப்பதன் மூலம், நாம் இரட்சிக்கப்படுகிறோம். இது வரலாற்றில் நிகழ்ந்து முடிந்த ஒரு சம்பவமாயிருக்கிறது. இயேசு மரித்தபோது, ''எல்லாம் முடிந்தது'' என்று அவர் சொன்னார். எனவே நாம் இயேசுவால் செய்து முடிக்கப்பட்ட வேலையை பின் நோக்கிப் பார்க்கின்றோம்.*

*6. இங்கு சீஷர்களுக்கு நடந்த இந்த விஷயம், நமக்கு ஒரு ................ வைக்கப்பட்டிருக்கிறது. இந்த உருமாற்றம், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை முகமுகமாய் நேரில் சந்தித்ததன் மூலமாகவும், அவரிடமிருந்து ஆவியானவரின் சுவாசம் ஊதப்பட்டதன் மூலமாகவும் நிகழ்ந்தது.*

*7. 'ஆவி' என்ற வார்த்தைக்கு, கிரேக்க மொழியில் 'நியுமா' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. 'காற்று' என்ற வார்த்தைக்கும், 'சுவாசம்' என்ற வார்த்தைக்கும், 'நியுமா' என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்படுகிறது. அவர் அவர்கள் மேல் ஊதி, 'பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்,' என்றார் (22-ம் வசனம்). அதாவது, 'பரிசுத்த ...................... பெற்றுக் கொள்ளுங்கள்,' என்ற அர்த்தத்திலும் அவர் சொல்கிறார். அது அவர்களுக்கிடையே தனிப்பட்ட விதத்தில், அதாவது, இயேசுவுக்கும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இடையே நேரடியாக நிகழ்ந்த பரிமாற்றமாகும். அவர்கள் புது சிருஷ்டியாய் மாறினார்கள். இது நமக்கு ஆதியில் நிகழ்ந்த சிருஷ்டிப்பை நினைப்பூட்டுகிறது. தேவன் ஏதேன் தோட்டத்தில் ஒரு களிமண் சரீரத்தை வடிவமைத்தபோது, அவர் ஆதாமுக்குள் ஜீவ சுவாசத்தை ஊதினார். அவன் சிருஷ்டிக்கப்பட்டான். அவன் ஜீவாத்துமா ஆனான்.*

சீஷர்களுக்கு திடீரென்று வேதவசன வெளிப்பாடு உண்டாகவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, அவர்கள் இயேசுவை சந்தித்தார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டார்கள். அதன் மூலம், அவர்கள் தேவனுடைய நித்திய ஜீவனை, உயிர்த்தெழுதலின் ஜீவனை, ஒருக்காலும் அழிந்துபோகாத ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த ஜீவனை எதுவும் தோற்கடிக்க முடியாது. யோவான் இதைக் குறித்து பிறகு இவ்வாறு சொல்கிறார்: "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்" (1 யோவான் 5:4). உங்களுக்குள் அந்த ஜீவன் இருக்கும்போது, உங்களையும் எதுவும் தோற்கடிக்க முடியாது. அது தோற்கடிக்கப்பட முடியாத ஜீவனாயிருக்கிறது. அது எல்லா தீங்குகளையும் மேற்கொண்டு ஜெயித்திருக்கிறது. அது ஒப்புயர்வற்ற ஜீவனாய் இருக்கிறது. இது ஆச்சரியமாய் இருக்கிறது. ஆனால் ஊழியத்திற்கு வேண்டிய ஆயத்தத்தில் சீஷர்கள் இன்னும் குறை வுபட்டிருந்தனர்.

இது நிகழ்ந்து ஒரு சில நாட்களுக்குள், பேதுரு திரும்பவும் மீன் பிடிக்கச் சென்று விட்டான். தேவன் அவனைக் குறித்து என்ன திட்டம் வைத்திருந்தார் என்பதை அவன் இன்னும் அறியவில்லை. எருசலேம் பட்டணத்தில் சீஷர்கள் ஒரு தாக்கத்தையும் உண்டாக்கவில்லை. பட்டணம் எவ்விதச் சலனமுமில்லாமல், அதே நிலையில்தான் இருந்தது. ஒவ்வொரு நாளும் அவர்கள் தேவாலயத்தில் தேவனை துதித்து, உயர்த்தி, கனம் பண்ணினார்கள். ஆனால் அது எருசலேமில் எந்த மாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை.

*8. அவருடைய உயிர்த்தெழுதல் நிகழ்ந்து சில நாட்கள் ஆன பிறகு, இயேசு சொன்னார்: "நீங்கள் இவைகளுக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக்கா 24:48-49). இன்னும் வர வேண்டியது நிறைய இருக்கிறது என்று இயேசு இங்கு சொல்கிறார். காரணம், அவர்கள் இன்னும் பிதாவாகிய தேவனுடைய ........................ ........... பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் அவரைப் பெற்றுக் கொண்டபோது, கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ்வதற்கு வேண்டிய பெலன் அவர்களுக்கு உண்டானது.*

*9. அப்போஸ்தலர் நடபடிகள் 1:4-5 வசனங்களில், லூக்கா இவ்வாறு எழுதியிருக்கிறார்: "அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி, 'யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞான ஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல், என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்,' என்று கட்டளையிட்டார்." - ...................... வாக்குத்தத்தம் பரிசுத்த ஆவியானவரே என்பதை இது சந்தேகத்திற்கிடமில்லாமல் நமக்கு உறுதிப்படுத்துகிறது. அவர் ஒரு பொருளாய் அல்ல, ஒரு நபராய் நமக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறார்.*

*10. அப்போஸ்தலர் நடபடிகள் 1:8-ல், பரிசுத்த ஆவியான வருடைய வருகையின் நோக்கத்தைக் குறித்து இயேசு தொடர்ந்து விளக்கிப் பேசுகின்றார்: "பரிசுத்த ஆவியான வர் உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்." சாட்சியாய் வாழும்படி ............... கொடுப்பதுதான், பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவதைக் குறித்த வாக்குத்தத்தத்தின் நோக்கமாயிருக்கிறது. ஆனால் பெந்தேகோஸ்தே நாளுக்கு முன்பு, அவர்கள் அவரை இன்னும் பெற்றிருக்கவில்லை என்பதுதான் உண்மை.*

## *பெந்தேகோஸ்தே ஞாயிறு*

முதலில் அப்போஸ்தலர் நடபடிகள் **2:1-4** வசனங்களுக்குச் செல்வோம். இந்த வசனங்கள், அப்போஸ்தலர் நடபடிகள் **1:8**-ம் வசனத்திலும், இன்னும் மற்ற இடங்களிலும் எழுதப்பட்டிருக்கிற வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைக் குறித்துப் பேசுகின்றன:

> *[1]பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, ஓரிடத்திலே வந்திருந்தார்கள். [2]அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. [3]அல்லாமலும், அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. [4]அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.*

*11. மேற்கண்ட இந்த வேதப்பகுதியில், மூன்று படிப்படியான நிலைகள் காணப்படுகின்றன.*

*(அ) மூழ்குதல் - முதலில், பரிசுத்த ஆவியானவர் பலத்த காற்றைப்போல இறங்கினார். அவர்கள் இருந்த வீடு முழுவதையும் அவர் நிரப்பினார். இதற்குரிய வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஞான*

*ஸ்நானம் என்றால், நனைதல் அல்லது மூழ்குதல் என்று அர்த்தம். ஆக, ஒவ்வொரு முழுக்கு ஞானஸ்நானத்திலும் ........................... என்ற ஒன்று நடக்கின்றது. தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தில், நீங்கள் தண்ணீருக்குள் மூழ்கி, பிறகு அதிலிருந்து எழுந்து வெளியே வருகின்றீர்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் என்பது, ஆவியானவர் உங்கள் மீது இறங்கி வருகின்றார். அவர் மேலேயிருந்து உங்களை முழுவதுமாய் நனைக்கின்றார்.*

*(ஆ) நிரப்பப்படுதல் - இரண்டாவதாக, ‘‘அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டன ர்,’’ என்று வசனம் சொல்கிறது. ஒவ்வொருவரும் தங்களுக்குள் ............................. அளவிற்கு பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக் கொண்டனர்.*

*(இ) வெளியே வழிந்தோடுதல் - மூன்றாவதாக, வெளியே வழிந்தோடும் அளவிற்கு அவர்கள் நிரப்பப்பட்டனர். வெளியே வழிந்தோடுதல், அந்நிய பாஷைகளை அவர்கள் பேச ஆரம்பித்தபோது நிகழ்ந்தது. ................................ அவர்கள் பேச வேண்டிய வார்த்தைகளைக் கொடுத்தார். ‘‘இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்,’’ என்று மத்தேயு 12:34-ம் வசனத்தில் இயேசு சொன்னார். வேறு வார்த்தைகளில், இதை இவ்வாறு சொல்லலாம். வெளியே வழிந்தோடும் அளவிற்கு உங்களுடைய இருதயம் நிரப்பப்படும்போது, அந்த வழிந்தோடுதல் உங்களுடைய வாய் வார்த்தைகளின் மூலமாக நடக்கின்றது. இது முழுமையாய் வேதவசனத்திற்கு ஒத்திருக்கிறது. அவர்கள் முழுமையாய் நிரப்பப்பட்டு, அதற்கு மேலும் உள்வாங்க முடியாது, கொள்ள முடியாது எனும்போது, அங்கே வழிந்தோடுதல் நடக்கின்றது.*

கோட்பாட்டளவில் பார்க்கும்போது, நீங்கள் இதை எந்த நேரத்திலும் நிறுத்த முடியும். சீஷர்கள் நனைக்கப்பட்டு, ஆனால் நிரப்பப்படுகிற நிலைக்குச் செல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது, அவர்கள் நனை க்கப்பட்டு, நிரப்பப்பட்டு, ஆனால் வழிந்தோடுதலின் நிலைக்கு செல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் நமக்காக சிறந்த ஒன்று கிடைக்கும்படி இருக்கும்போது, ஏன் அதற்கும் குறைவான நிலையில் நாம் நின்று விட வேண்டும் ?

12. அப்போஸ்தலர் நடபடிகள் 2-ம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் மூலம் சீஷர்கள் மீது இறங்கின வல்லமை, எல்லோரும் பார்க்கக்கூடிய விதத்தில் வெளிப்பட்ட வல்லமையாயிருந்தது. மேலேயிருந்து முழுமையாய் நனைக்கப்படுகிற இந்த அனுபவத்தில் சில முக்கியமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன:

(அ) இது வெளிப்படுத்தப்பட்ட ..................... - இது நிகழ்ந்தது என்பதை அங்கிருந்த எல்லோரும் அறிந்திருந்தனர். இது ஒரு உள்ளான அனுபவம் கிடையாது.

(ஆ) அது ...................................... நிகழ்வு - இது இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட நிகழ்வு என்பதில் சந்தேகமே இல்லை. ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வளவு பெரிய ஜன க்கூட்டத்தின் முன் பேதுரு எழுந்து நின்று, தன்னுடைய முதல் பிரசங்கத்தைச் செய்தான். அவன் கல்வியறிவு இல்லாதவன். ஆகையால் தேவனுடைய உதவியில்லாமல் அவனால் இதைச் செய்திருக்க முடியாது.

(இ) ........................ வாழ்வதற்கு வேண்டிய தைரியத்தை அவர்கள் பெற்றுக் கொண்டனர். முன்பு அவர்களிடம் அது இல்லை. முன்பு அவர்கள் மறுபடியும் பிறந்திருந்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது இறங்கும்வரை, சாட்சியாய் வாழ்வதற்கு வேண்டிய தைரியம் அவர்களிடம் இல்லை.

(ஈ) அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள், .............................. இருக்கும் வெளிச்சத்தை அவர்கள் பெற்றுக் கொண்டன ர். எந்த ஒத்த வார்த்தை வேதாகம அகராதியும், பிரசங்கக் குறிப்புகளும் இல்லாம்அல், பேதுரு எழுந்து நின்று, "யோவேல் தீர்க்கதரிசியி தீர்க்கதரிசனம் உரைத்தபடியே இது நடந்தது," என்று பிரசங்கித்தான். ஒரு மணி நேரத்திற்கு முன்பு, அவனால் அப்படி சொல்லியிருக்க முடியாது. அவனுக்குள் எந்த வெளிச்சமும் இல்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் இற ங்கியவுடன், உடனே, அந்தக் கணப்பொழுதிலே, வேதவசன ங்கள் உயிரோட்டமுள்ளவைகளாய், புதிய வெளிச்சத்தோடு அவர்களுக்கு வெளிப்பட்டன.

*(உ) அவர்கள் அப்போஸ்தல ஊழியத்திற்குள் அனுப்பப்பட்டனர். பெந்தேகோஸ்தேக்குப் பிறகு, திரும்பவும் மீன் பிடிக்கப் போவதைக் குறித்து, பேதுரு ஒருபோதும் பேசவில்லை. இயேசு முன்பே தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தபடி, அவர்கள் .................. பிடிக்கிறவர்களாய் மாறினர்.*

*(ஊ) எருசலேம் முழுவதும் அந்தத் தாக்கத்தை உணர்ந்தது. ஒரு சில மணி நேரங்களுக்குள், எருசலேமிலிருந்த ஒவ்வொருவரும், அங்கு ஏதோ வழக்கத்திற்கு மாறான ஒன்று நடந்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டனர். உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து அவர்கள் மறுபடியும் பிறந்தபோது, அங்கு எதுவும் மாறி விடவில்லை. ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்குள் ........................................................ பெற்றபோது, வார்த்தை வெகு விரைவாய் பரவியது.*

கீழ்க்காணும் அட்டவணை, உயிர்த்தெழுதல் ஞாயிறுக்கும், பெந்தேகோஸ்தே ஞாயிறுக்கும் இடையே உள்ள மூன்று முக்கியமான வேறுபாடுகளை எடுத்துக் காண்பிக்கிறது:

| உயிர்த்தெழுதல் ஞாயிறு | பெந்தேகோஸ்தே ஞாயிறு |
|---|---|
| உயிர்த்தெழுந்த கிறிஸ்து | மகிமையா பரமேறிச் சென்ற கிறிஸ்து |
| ஆவியானவர் சுவாசமாய் ஊதப் பட்டார் | ஆவியானவர் மேலிருந்து ஊற்றப் பட்டார் |
| விளைவு - புதிய ஜீவன் | விளைவு - வல்லமை |

இவ்விரண்டு அனுபவங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. இங்கு முதல் அனுபவம் மட்டும் போதுமா அல்லது இரண்டாவது அனுபவம் மட்டும் போதுமா என்பதல்ல கேள்வி. மறுபிறப்பு அனுபவத்தின் வழியாகச் செல்கிற மறுபடியும் பிறக்கின்ற தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், பரிசுத்த ஆவியானவரை தங்களுடைய புதிய ஜீவனாகப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டில் எழுதியிருக்கிற படி, மறுபடியும் பிறக்கின்ற தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெற வேண்டும். கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழும்படி வேண்டிய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட

வல்லமையை அதன் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. மாறாக, இவை ஒன்றோடொன்று முழுமையாய் இசைந்து பொருந்தக் கூடியவைகளாய் இருக்கின்றன.

## *பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்*

### வேதவசனத்தில் காணப்படும் எடுத்துக்காட்டுகள்

*13. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற இயேசுவின் கட்டளை, யோவான் 20:22-ல் எழுதப்பட்டிருக்கிறது. இது ஒரு பரிந்துரை அல்ல. மாறாக, இது ஒரு .................. என்பதை நாம் கவனிக்க வேண்டும்.*

*14. "பெந்தேகோஸ்தே எனும் நாள் வந்தபோது," என்று அப்போஸ்தலர் நடபடிகள் 2:1 சொல்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 2-ம் அதிகாரத்திற்குப் பிறகு, பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக் கொள்ளுதல் என்றாலே அது எப்பொழுதும் ......................... ஞாயிறு அனுபவத்தைத்தான் குறிக்கின்றது. இதை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டிற்கு, அப்போஸ்தலர் நடபடிகள் 8:12, 14-17 வசனங்களை வாசித்துப் பாருங்கள். இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்ற இந்த விசுவாசிகள், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது என்று இதைக் குறித்து இந்த வசனங்களில் மூன்று முறை நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுதல் ஞாயிறின் அனுபவத்தை அல்ல, பெந்தேகோஸ்தே ஞாயிறின் அனுபவத்தை அவர்கள் பெற வேண்டியிருந்தது.*

*15. அப்போஸ்தலர் நடபடிகள் 10:46-47 வசனங்களில், கொர்நேலியுவின் வீட்டார் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் அந்த முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டனர் என்பதற்கு ஆதாரமாக, அவர்கள் ........................... பேசினார்கள் (46-ம் வசனம்).*

*16. அப்போஸ்தலர் நடபடிகள் 19:2-ல், பவுல் எபேசு பட்டணத்திற்கு வந்தபோது, அங்கு சில சீஷர்களை அவன் சந்தித்தார் என்று நாம் வாசிக்கின்றோம். ஆனால் அவர்கள் ஏதோ ஒரு விஷயத்தில் குறைவுபட்டிருக்கிறார்கள் என்பதை*

*அவர் அறிந்து கொண்டார். ஆகையால் அவர் அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்: "நீங்கள் விசுவாசித்தபோது, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டீர்களா?" அதற்கு அவர்கள் பவுலிடம், "பரிசுத்த ஆவியானவர் ஒருவர் உண்டு என்பதையே நாங்கள் கேள்விப்பட்டதில்லை," என்று பதிலளித்தனர். அவர்கள் விசுவாசித்தபோதே, பரிசுத்த ............................ ... அவர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்றால், இது அர்த்தமற்ற ஒரு கேள்வியாக இருந்திருக்கும். பவுல் இங்கு மறுபடியும் பிறப்பதைக் குறித்து பேசவில்லை. அவர் பெந்தேகோஸ்தே ஞாயிறு அனுபவத்தைக் குறித்துதான் பேசினார்.*

**பரிசுத்த ஆவியானவரை எவ்வாறு பெற்றுக் கொள்வது....**

*17. பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் தனித்துவம் வாய்ந்த முத்திரை, அதன் உச்சநிலை, அந்நியா பாஷைகளில் ........................... - இந்த முத்திரை, வெளியே தெரியக்கூடிய ஒன்றாகும். இது இந்த ஈவைப் பெற்றுக் கொள்கிறவர்களை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக் கொள்ளும்போது, மனுஷர்களாலும், சாத்தானாலும் நாம் தனியே அடையாளப்படுத்தப்படுகிறோம்.*

*18. இந்த முத்திரை, புதிய ஏற்பாடு முழுவதிலும் பின் வரும் வழிகளில் வெளிப்படுத்தப்பட்டது:*

*(அ) சீஷர்கள் இந்த முத்திரையை தங்களுடைய தனிப்பட்ட ....................... பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் பத்து நாட்கள் காத்திருந்தனர். ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் திரும்பவும் ஒருபோதும் காத்திருக்கவில்லை.*

*(ஆ) அப்போஸ்தலர்கள் மற்றவர்களிடமும் இந்த முத்திரையை எதிர்பார்த்தனர். கொர்நேலியுவின் வீட்டாரிடம் நிகழ்ந்த விஷயத்தைக் குறித்து ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தோம். இது கவனிக்க வேண்டிய ஒரு எடுத்துக்காட்டாகும். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசியபோது, பேதுரு அவர்களுடைய கனியையோ அல்லது போதனையையோ சோதித்துப் பார்க்கவில்லை. அவர்கள் ............................................ எடுக்கும்படி பேதுரு கட்டளையிட்டார்.*

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதைக் குறித்து வேதவசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மாதிரியை பின் வரும் பகுதியில் நாம் வாசிக்கின்றோம். நீங்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், பிறகு நீங்கள் இதைப் பயன்படுத்தி, மற்றவர்களும் கற்றுக் கொள்ளும்படி உதவி செய்யலாம்.

*19. கேளுங்கள் - லூக்கா 11:13-ல், இயேசு சொல்கிறார்: "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" கேட்க வேண்டிய பொறுப்பை இங்கு இயேசு நம் மீதுதான் வைத்திருக்கிறார். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனுடைய மறுபடியும் பிறந்த பிள்ளையாக இருக்கின்றீர்கள் என்றால், ஒரே வழியாகிய குமாரனாகிய இயேசுவின் மூலம், நீங்கள் பிதாவாகிய தேவனிடம் வருகின்றீர்கள் என்றால், வேதவசனத்தின் அடிப்படையில் நன்மையான ஒன்றை நீங்கள் ஜெபித்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் ஒருபோதும் தீமையான ஒன்றைப் பெற மாட்டீர்கள். இது ..................... உத்தரவாதம்.*

*20. தாகமுள்ளவர்களாயிருங்கள் - யோவான் 7:37-39 வசனங்களில் வாசித்துப் பாருங்கள்: பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்கிற படி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்," என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால், பரிசுத்த ஆவியானவர் இன்னும் அருளப்படவில்லை.*

தாகமுள்ளவர்கள்தான் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள முடியும். இது ஒரு ஆச்சரியமான உருமாற்றமாக நிகழ்கின்றது. தாகமுள்ள ஒரு நபர் இருக்கின்றார். அவருக்கே போதுமான அளவு அவரிடம் இல்லை. இந்த நிலையில், அதே நபர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்போது, ஒரு நதி அல்ல, ஜீவ ..................... புரண்டோடுகிற ஒரு வாய்க்காலாக மாறி விடுகின்றார்.

21. என்னிடம் வாருங்கள் - "என்னிடம் வந்து பானம் பண்ணக்கடவன்," என்று யோவான் 7:37-ல் இயேசு அழைப்பு கொடுக்கிறார். நீங்கள் பரிசுத்த ஆவியானவருக்குள் ஞான ஸ்நானம் பெற வேண்டுமென்றால், முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடிய ஒரே நபராகிய .................... நீங்கள் செல்ல வேண்டும்.

22. பானம் பண்ணுங்கள் (பருகுங்கள்) - அதே வசனத்தில், நாம் அதை குடிக்க வேண்டும் என்று இயேசு நமக்குச் சொல்கிறார். உங்கள் மீது ஊற்றப்படுகிற, கண்களால் பார்க்க முடியாத ஆவியானவரை, உங்களுடைய .................. திறந்து, நீங்கள் பருக வேண்டும். அவர் திரவம் அல்ல, ஆவியானவர். எனவே ஆவியானவராகிய சுவாசத்தை நாம் உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும்.

23. வெளியே வழிந்தோடும்படி திறந்து விட வேண்டும் - உங்கள் மீது ஊற்றப்படுகிற ஆவியானவரை நீங்கள் குடித்த பிறகு, உங்களுடைய வாயின் வழியே வழிந்தோடும்படி நீங்கள் திறந்து விட வேண்டும். இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் உள்ளே நிரப்படுதல் நடக்கும்போது, .......................................... ........................... வெளியே வழிந்தோடுதலும் அங்கே நடக்கும்.

சாத்தானுடைய ஆட்சேபணை அல்லது எதிர்ப்புகள்

24. முதலில், குற்றஞ்சாட்டுகிற அந்தப் பழைய பிசாசு, உங்கள் அருகிலேயே நின்று, நீங்கள் அந்நிய பாஷைகளில் பேச ஆரம்பிக்கும்போது, "இது உண்மையல்ல. நீயாகவே இதைச் செய்து கொள்கிறாய்," என்று சொல்லுவான். அது உண்மைதான். அப்போஸ்தலர் நடபடிகள் 2:4-ஐ நினைவில் கொள்ளுங்கள். அது சொல்கிறது: "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே (வார்த்தைகளின்படியே) வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்." ஆகையால் பரிசுத்த ஆவியானவர் வார்த்தைகளைக் கொடுக்கிறார். ................ பேசுகிறோம்.

25. "நீ சரியானதைத்தான் பெற்றுக் கொண்டாய் என்பது எப்படி உனக்குத் தெரியும்?" இது சாத்தான் கொண்டு

*வருகிற இரண்டாவது ஆட்சேபணை அல்லது எதிர்ப்பு. இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்படி, நாம் லூக்கா 11:13-ம் வசனத்திற்குச் செல்ல வேண்டும். நாம் நன்மையான ஈவைக் கேட்கும்போது, தேவன் தீமையானதைத் தர மாட்டார் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. எபிரெயர் 11:6-ம் வசனமும் இவ்வாறு சொல்கிறது: "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிற வர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்." ஆகையால் நாம் அவரை ............................... தேடும்போது, அவர் நமக்கு பரிசுத்த ஆவியானவரை பலனாகக் கொடுப்பார் என்று விசுவாசிப்போம்.*

நீங்கள் இன்னும் பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறாததால், அந்நிய பாஷைகளில் பேசுகிற இந்த முத்திரை உங்களிடம் இல்லாமல் இருக்கலாம். அல்லது ஒருவேளை நீங்கள் அதைப் பெற்றிருக்கலாம். ஆனால் வெளியே வழிந்தோடுகிற அனுபவம் உங்களிடம் இல்லாமல் இருக்கலாம். அல்லது வெளியே வழிந்தோடும் அனுபவம் உங்களிடம் இருக்கிறது. ஆனால் அது சரியானதுதானா என்ற சந்தேகம் உங்களுக்குள் இருக்கலாம். தொடர்ந்து அதைச் செய்வதற்கு உங்களிடம் விசுவாசமோ, தைரியமோ இல்லாமல் இருக்கலாம். உங்களால் அதை மெய்யாகவே கட்டவிழ்த்து விட முடியவில்லை. உங்களால் அதை முழுமையாக வெளியே வழிந்தோடச் செய்ய முடியவில்லை என்றால், இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. சிறந்ததைப் பெறும்படி தேவனிடம் நேரடியாகச் செல்வதுதான் புத்திசாலித்தனம். நாம் எதிர்பார்ப்பு நிறைந்தவர்களாய் இருப்போம்!

பெந்தேகோஸ்தே ஞாயிறு அனுபவத்தின் மூலம், பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக் கொள்கிற ஒரு அனுபவத்திற்குள் டெரிக் ஜனங்களை ஜெபத்தில் வழிநடத்தினார். அந்த ஜெபம் பின் வரும் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது:

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே,*

*நீர் தேவனுடைய குமாரன் என்றும், நீர் என்னுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தீர் என்றும், மரித்தோரிலிருந்து திரும்பவும் உயிரோடு எழுந்தீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். பாவ மன்னிப்பிற்காகவும், சுத்திகரிப்பிற்காகவும் நான் உம்மை*

*நம்புகிறேன். நீர் என்னை தேவனுடைய பிள்ளையாய் ஏற்றுக் கொண்டிருக்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன். நீர் என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறபடியால், நான் தேவனுடைய பிள்ளை என்ற உண்மையை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.*

*ஒருவருக்கு எதிராக என் இருதயத்தில் வெறுப்பும், பகைவைராக்கியமும் இருக்கிறதென்றால், நான் அதை கீழே வைக்கிறேன். தேவன் என்னை மன்னித்ததுபோல, நானும் மற்றவர்களை மன்னிக்கின்றேன். மந்திரவாதக் கிரியைகளில், விக்கிரக ஆராதனையில் நான் ஈடுபட்டிருந்தேன் என்றால், நான் அதை பாவமாக ஏற்றுக் கொள்கிறேன். என்னை மன்னியும். சாத்தானோடும், அவனுடைய மந்திரவாத பில்லிசூனிய வல்லமையோடும் எனக்கிருக்கிற எல்லா தொடர்புகளையும் இயேசுவின் நாமத்தில் நான் அறுத்தெறிந்து விடுகிறேன்.*

*கர்த்தராகிய இயேசுவே, நீர் ஒருவர் மட்டுமே பரிசுத்த ஆவியான வருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடியவராக இருக்கின்றீர். நான் உம்மிடம் வருகின்றேன். என் சரீரத்தை உம்முடைய ஆவியானவர் தங்கி வாசம் பண்ணுகிற ஆலயமாக ஒப்புக் கொடுக்கிறேன். என் நாவை உம்முடைய நீதியின் ஆயுதமாக அர்ப்பணிக்கின்றேன். புதிய மொழியில் உம்மை ஆராதிக்கும்படி என் நாவை உமக்கு இணங்கச் செய்கிறேன். விசுவாசத்தினால், இப்பொழுதே நான் இதைப் பெற்றுக் கொள்கிறேன். நான் அதற்காக உமக்கு நன்றி சொல்கிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

இப்பொழுது சுவாசித்து, அவரை உள்வாங்கிக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் பேச ஆரம்பியுங்கள். உங்களுடைய வாயைத் திறந்து, புதிய மொழியைப் பேச ஆரம்பியுங்கள்.

**396**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/34**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

பாடம் பத்தொன்பது>>

ஆவிக்குரிய வரங்களைப் யன்பபடுத்துதல்-பாகம் 2[4155]

# வியாக்கியானம் செய்தலும், தீர்க்கதரிசனம் உரைத்தலும்

## அறிமுகம்

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

முந்தின பாடத்தில், பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞான ஸ்நானம் பெறுவதைக் குறித்தும், அதன் விளைவாக, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட முத்திரையாய் வெளிப்படுகிற அந்நிய பாஷைகளில் பேசுதலைக் குறித்தும் நாம் பார்த்தோம். தேவனுடைய நோக்கங்களின்படி, பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்குஞானஸ்நானம் என்பது, ஒரு இலக்கு என்பதைக் காட்டிலும், அது ஒரு நுழைவாயிலாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு முடிவல்ல. மாறாக, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமையோடு வாழ்கின்ற ஒரு வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருக்கிறது. இயற்கை உட்பட்ட பெலத்தில், கிறிஸ்தவ ஜீவியத்தை முழுமையாய் வாழ்வதென்பது சாத்தியமற்றது. இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட தளத்திற்குள் ஊடுருவி வாழ வேண்டியது அவசியமாயிருக்கிறது.

சபையானது எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் குறித்த கர்த்தருடைய நோக்கத்தை, அப்போஸ்தலர் நடபடிகள் என்ற ஒரு புத்தகம் மட்டுமே அதிகாரப்பூர்வமான விதத்தில் பதிவு செய்து வைத்திருக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் 28 அதிகாரங்களில் ஒவ்வொன்றும், முற்றிலும் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் நிகழ்ந்த சம்பவங்களை விவரமாய் பதிவு செய்து வைத்திருக்கின்றன. ஆகையால் இயேசுகிறிஸ்துவினுடைய சபையின் அங்கமாகிய நம்முடைய வாழ்க்கையும் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும் என்ற அதே எதிர்பார்ப்பு, நமக்கும் இருக்க வேண்டும்.

இந்தச் செய்தியும், ‘வல்லமை மற்றும் வெளிப்பாட்டின் வரங்கள்’ என்ற

அடுத்த செய்தியும் **(4156)**, டெரிக் பிரின்ஸ் வேதபாட வழிகாட்டியின் மற்ற பாடங்களிலிருந்து வித்தியாசப்பட்டிருக்கின்றன. இதில் போதனை ஒரு பகுதியாக இருந்தாலும், போதனையைக் காட்டிலும் அதிக பயிற்சி இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. கற்றுக் கொண்டதை, கூட்டத்திலேயே பயிற்சி செய்து பார்க்கும்படி டெரிக் ஜனங்களை உற்சாகப்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தை கிரியை செய்வதை நேரில் பார்க்கும்போது, அந்த அனுபவம் அதிக சந்தோஷத்தை உங்களுக்குக் கொடுக்கும். நம்பிக்கையினால் நீங்கள் நிரப்பப்படுவீர்கள். இதன் பொருளடக்கம் மற்றும் கேள்விகளோடு, டெரிக் பிரின்ஸ் எழுதிய 'ஆவியானவரின் வரங்கள்' என்ற புத்தகத்திலிருந்து அவர் போதித்த மற்ற போதனைகளின் சில தகவல்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

டெரிக் குறிப்பிட்ட ஆவிக்குரிய வரங்களில் மூன்றாவது வகை, 'குரல் வரங்களாகும்'. இந்த வரங்களை, குரல் எழுப்பும் நம் உறுப்புகள் மூலமாக மட்டுமே செயல்படுத்த முடியும். எனவே இந்தப் பெயர் இவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வரங்களை செயல்படுத்தும்படி டெரிக் ஜனங்களை வழிநடத்துவதைப் பார்க்கும்போது, நீங்களும் இவற்றைச் செயல்படுத்தக் கூடியவர்களாய் மாற ஆரம்பிக்கின்றீர்கள். விசுவாசிகளின் சரீரமாகிய சபையானது வல்லமையாய் பெலப்படுவதற்கு இது மிகச் சிறந்த ஒரு வழியாக இருக்கின்றது.

இங்கு பதிலளிப்பதற்கு நிறைய கேள்விகள் இருக்காது. முன்பு குறிப்பிட்டபடி, டெரிக்கின் மற்ற போதனைகளிலிருந்து கூடுதல் தகவல்கள் இங்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதை மிகவும் கவன மாக வாசியுங்கள். உங்களுக்குத் தேவையான குறிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

கூடுதல் தகவல்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக:

## *பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்*

புதிய ஏற்பாடு, கிறிஸ்தவ வாழ்க்கையை, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட

வல்லமையோடு வாழ்கின்ற ஒரு வாழ்க்கையாக படம் பிடித்துக் காண்பிக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவயங்களாய் நாம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால், இவ்வுலகத்தில் அவருக்கு வல்லமையான சாட்சியாய் வாழ வேண்டுமென்றால், பரிசுத்த ஆவியான வரின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஒன்பது வரங்களைக் குறித்தும், நம் வாழ்க்கையில் அவை செயல்பட வேண்டிய விதத்தைக் குறித்தும் நமக்கு ஒரு புரிதல் வேண்டும். 1 கொரிந்தியர் 12:7-11 வசனங்கள், பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் குறித்து வெளிப்படுத்துகிற பிரதானமான வேதப்பகுதியாக இருக்கின்றது:

> *[7]ஆவியானவருடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத் திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. [8]எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியானவராலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலேயே அறிவை உணர்த்தும் வசனமும், [9]வேறொருவனுக்கு அந்த ஆவியான வராலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியான வராலேயே குணமாக்கும் வரங்களும், [10]வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. [11]இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவன வனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.*

இந்த வரங்களெல்லாம் இயற்கைக்கு அப்பாற்ப்பட்டவை. நம் கல்வித் தகுதியினாலோ, நம் திறமை அல்லது நம் தாலந்தினாலோ இவற்றுள் ஒன்றையும் நாம் செயல்படுத்தி விட முடியாது. ஞானத்தை அல்லது அறிவை உணர்த்தும் வார்த்தை என்பது, 15 வருடங்கள் கல்லூரியில் படித்து, மூன்று பட்டயப்படிப்புகளை முடிப்பதால் வரக்கூடிய ஞானமோ அல்லது அறிவோ அல்ல. இது பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுகிற ஞானமாய் அல்லது அறிவாய் இருக்கிறது. சுகம் என்பது, ஒரு மருத்துவரோ அல்லது ஒரு அறுவை சிகிச்சை நிபுணரோ கொடுக்கின்ற சிகிச்சையினால் உண்டாகிற ஒன்று அல்ல. நாம் மருத்துவ விஞ்ஞானத்தைக் கனம் பண்ணுகிறோம். நாம் அதற்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றோம். இது **இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில்** உண்டாகிற சுகமாயிருக்கிறது.

*1. வரங்கள், பரிசுத்த ஆவியானவரின் .............................. (7-ம் வசனம்). உங்களுக்குள் வாசம் பண்ணுகிற ஆவியான வரை கண்களால் பார்க்க முடியாது. அவரை நம்முடைய உணர்வுகளால் உணர முடியாது. ஆனால் நம் மூலமாய் கிரியை செய்கிற வரங்கள், மனுஷனுடைய உணர்வுகள் மீது ஒரு தாக்கத்தை உண்டாக்குகின்றன. இது உங்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரை, மற்ற மனுஷர்கள் தங்களுடைய உணர்வுகள் மூலம் உணர்ந்தறியத்தக்க விதத்தில், வெளியே கொண்டு வருகின்றன.*

*2. வரங்கள், ஒரு தனிநபருக்குக் கொடுக்கப்பட்டாலும், அவை .............................. (7-ம் வசனம்) நன்மைக்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு வார்த்தைகளில், தேவன் உங்களுக்கு தீர்க்கதரிசன வரத்தைக் கொடுக்கும்போது, நீங்கள் அதைத் தவறான வழியில் தாறுமாறாக பயன்படுத்துவீர்கள் என்றஅல், நீங்கள் உங்களையே வஞ்சிப்பது மட்டுமல்ல, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் மற்ற அங்கத்தினர்களையும் நீங்கள் வஞ்சித்து விடுகிறீர்கள். வரங்களைப் பயன்படுத்துவதில் உண்மையான உக்கிராணக்காரர்களாய் நாம் இருக்க வேண்டும். வரங்களோடு, அவற்றைப் பயன்படுத்தும் விதத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய பொறுப்பும் சேர்ந்தே வருகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

புரிந்து கொள்வதற்கு வசதியாக, வேதபோதகர்கள் இந்த ஒன்பது வரங்களை மூன்று மூன்றாக, மூன்று வகையாகப் பிரித்திருக்கின்றனர்.

*3. வெளிப்பாட்டின் வரங்கள்:*

*(அ) .................... வார்த்தையைப் போதிக்கும் வரம் - இந்தக் கேள்விக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கின்றோம்? “நாம் கட்டியெழுப்புகின்றோமா? அல்லது நாம் தகர்த்து, உடைக்கின்றோமா?” இது காலத்தைப் பொறுத்தது. “நாம் நடுகின்றோமா அல்லது நாம் அறுவடை செய்கின்றோமா?” இதுவும் காலத்தைப் பொறுத்தது. ஞானத்தோடு சம்பந்தப்பட்ட இக்கேள்விக்கு ஆம் என்றோ, இல்லை என்றோ உங்களால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. காலம்தான் அதைத்*

*தீர்மானிக்கின்றது. சரியான, ஏற்ற நேரத்தை யார் வெளிப்படுத்துவார்? பரிசுத்த ஆவியானவர். ஞானத்தின் வார்த்தையை நேரடியாகக் கொடுப்பதன் மூலம், அவர் அதைச் செய்கிறார். இது அவருடைய ஒரு முக்கியமான வழிமுறை யாயிருக்கிறது.*

*(ஆ) ............... உணர்த்தும் வார்த்தை - தெளிவாக தெரியக்கூடிய விதத்தில் இது உண்டாக்கும் மிக முக்கியமான ஒரு விளைவு, சத்தியத்தைக் குறித்த உணர்வை இது கொண்டு வருவதுதான். இரண்டாவதாக, மற்ற வழிகள் மூலம், தேவன் நமக்குக் காண்பித்துக் கொண்டிருக்கிற ஒரு காரியத்தை இது உறுதிப்படுத்துகிறது. மூன்றாவதாக, சில சூழ்நிலைகளில், வரப்போகிற காரியத்திற்கு இது நம்மை ஆயத்தப்படுத்துகிறது.*

*(இ) ..................... பகுத்தறிதல் - கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், ஒழுங்காக இயங்குவதற்கு இது மிகவும் முக்கியமானது. இது விசுவாசிகள் பரிசுத்த ஆவியான வரின் பிரசன்னத்தை உணருவதன் விளைவாகவும், தேவன் எந்தெந்த வழிகளிலெல்லாம் கிரியை செய்கிறார் என்பதை அறிந்து கொள்வதன் விளைவாகவும் உண்டாகிறது. இது மற்ற மனுஷர்களுடைய குணத்தையும், அவர்களுடைய இருதயத்தின் நோக்கத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. வியாதிக்கும், சண்டை சச்சரவுகளுக்கும் காரணமான பொல்லாத ஆவிகளையும் இது நமக்கு வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தில், ஆவிகளைப் பகுத்தறிகிற இந்த வரம் முழுமையான அளவில் செயல்படும்போது, அது சபைக்கும், இவ்வுலகத்திற்கும் மிக முக்கியமான ஒரு ஊழியத்தைச் செய்கிறது.*

*4. வல்லமையின் வரங்கள்*

*(அ) ........................ - தேவன் தம்முடைய விசுவாசத்தை மனுஷருக்குக் கொடுக்கும்போது, தேவன் நேரடியாகப் பேசுவதால் உண்டாகக்கூடிய அதே விளைவுகளை, மனுஷனாலும் பேசி உண்டாக்க முடியும். யாருக்கு தேவனுடைய விசுவாசம் வருகின்றதோ, அவர்கள் தங்களுடைய மனதையும் தாண்டி, தங்களுடைய ஆவியையும், இருதயத்தையும் ஊடுருவும்படி*

*தேவனுடைய வார்த்தைக்கு அனுமதி கொடுக்கிறார்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, விசுவாசத்தின் அற்புதமான வார்த்தைகள் வெளிப்படுகின்றன. இந்த வார்த்தைகளுக்கு, சிருஷ்டிப்பின் மீதும், மரணத்தின் மீதும், சாத்தானின் மீதும் வல்லமை இருக்கிறது. சரீரப் பிரகாரமான, ஆவிக்குரிய எல்லாவற்றின் மீதும் இவை அதிகாரத்தைச் செயல்படுத்துகின்றன. இவை தீமையானவைகளை உடைத்து நிர்மூலமாக்குகின்றன. நன்மையும், நீதியுமானது எதுவோ, அவற்றை தேவனுடைய விசுவாசத்தினாலே இவை கட்டியெழுப்புகின்றன.*

*(ஆ) ..................................... - சரீரப் பிரகாரமான பரிபூரண சுகத்தை இது இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் ஜன ங்களுக்குக் கொடுக்கிறது. சுகம் இப்படி உண்டாகும்போது, யார் மூலமாய் இந்த வரம் வெளிப்பட்டதோ, அவர் மூலமாய் இந்த வரம் கொடுக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் உயிர்த்தெழச் செய்யும் வல்லமையின் மூலம், சுகமளிக்கும் வரம் கிரியை செய்யலாம். இவ்வரம் சுகமளிக்கும் ஒரு ஊழியத்தில் வெளிப்படும். பலர் பரிபூரண சுகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். பரிசுத்த ஆவியானவருடைய வழிகாட்டுதலின் கீழ், குறிப்பிட்ட தனிநபர்களும் சுகமடைகின்றனர். சுகமளிக்கும் வரங்கள், இன்னும் அதிக சுகம் உண்டாகும்படி ஒரு சூழலை உண்டாக்குகின்றன. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ஒரு வழியை இவை திறந்து விடுகின்றன.*

*(இ) ............................. - ஒரு விதத்தில், சுகமளிக்கும் வரங்கள், அற்புதங்களை நிகழ்த்தும் வரத்தோடு ஒன்றாய் இணைந்து விடுகின்றன. உடனடியாக, கண்களுக்குத் தெரியும் விதத்தில் உண்டாகிற சுகம், ஒரு அற்புதமாகும். இன்னொரு விதத்தில் பார்த்தால், அற்புதங்கள், விசுவாசத்தோடு ஒன்றாய் இணைந்திருக்கின்றன. ஆனால் வல்லமை வரங்களில், அற்புதங்களை நிகழ்த்தும் ஊழியமானது, குணமளிக்கும் ஊழியத்திற்கு முன்னே வருகின்றது (1 கொரிந்தியர் 12:28). சபையின் இன்றைய தேவை என்ன என்பதை இதிலிருந்து தெளிவாக நாம் புரிந்து கொள்ள முடியும். அற்புதங்களை நிகழ்த்தும் வரம் தான், சபையின் அந்த அத்தியாவசியமான*

*தேவையாயிருக்கிறது. காரணம், அதைத்தான் தேவனுடைய பிரசன்னம் மற்றும் வல்லமையின் பிரத்தியட்சமான ஒரு வெளிப்பாடாக இவ்வுலகம் பார்க்க வேண்டும். எனவே தேவன் முழுமையாய் இந்த வரத்தை தம்முடைய ஜனங்களுக்கு திரும்பக் கொடுக்க வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும்.*

*5. குரல் வரங்கள் - இவற்றைக் குறித்து அதிக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்ப்போம்:*

*(அ) ............................... - விசுவாசிக்குப் புரியும் மொழியில், பரிசுத்த ஆவியானவரின் உந்துதலால் பேசப்படுகிற வார்த்தைகள்.*

*(ஆ) பற்பல .................... பேசும் வரம். இது பரிசுத்த ஆவியானவருக்குள் பெறும் முழுக்குஞானஸ்நானத்தின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட முத்திரை அல்ல. மாறாக, இது ஒரு ஈவாக இருக்கின்றது.*

*(இ) பற்பல பாஷைகளின் ....................... - பற்பல பாஷைகள் பேசப்படுவதைக் கேட்கிறவர்கள், அவற்றைப் புரிந்து கொள்ளும்படி, அவற்றின் அர்த்தம் பரிசுத்த ஆவியான வரால் கொடுக்கப்படுகிறது.*

*6. 1 கொரிந்தியர் 12:11-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார். ஒவ்வொரு விசுவாசியும் தனக்குள் ஆவியானவர் ஜீவிக்கின்றார் என்பதற்கு ஒரு வெளி அடையாளமாக, குறைந்தபட்சம் ஒரு .............. பெற்றுக் கொள்வதற்கு அவர் உரிமையும், தகுதியும் உடையவராயிருக்கிறார். ஆனால் அது என்ன வரம் அல்லது அவை என்ன வரங்கள் என்பதை ஆவியான வரே தீர்மானிக்கிறார். எனவே நம்முடைய வாழ்க்கையில் குறைந்தபட்சம் ஒரு ஆவிக்குரிய வரமாவது செயல்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும்.*

*7. 1 கொரிந்தியர் 12:31-ல், பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ''இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள். இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.'' ஆகையால் ................ வழியே, அதிக மேன்மையான வழியாய் இருக்கின்றது. 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில், இந்த அன்பின் வழியைக் குறித்து விவரமாய்*

*சொல்லப்பட்டிருக்கிறது. அன்பு ஒரு ஈவு அல்ல. அது ஒரு கனி (கலாத்தியர் 5:22) என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஆனால் அன்பின் வழி, முக்கியமான வரங்களை நாம் நாட வேண்டும் என்ற வார்த்தைகளுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை மறுத்து விடவில்லை, அதற்கு மாற்றாக அமைந்து விடவும் இல்லை.*

*8. வரங்கள், ..................... அல்ல. அவை கருவிகள். வேலையைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளாய், அவை உங்களுக்கு தேவைப்படுகின்றன. தேவன் தரும் இந்தக் கருவிகளை நீங்கள் நிராகரிப்பீர்கள் என்றால், உங்களால் வேலையைச் செய்ய முடியாது. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நீங்கள் செய்யவில்லை என்றால், நீங்கள் அதற்கு தேவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றீர்கள்.*

*9. தேவனுடைய அன்பைக் குறித்து பேசிய பிறகு, 1 கொரிந்தியர் 14:1-ல் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "அன்பை நாடுங்கள். ஞான வரங்களையும் விரும்புங்கள். விசேஷமாய் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்." அன்பு மற்றும் ஆவிக்குரிய வரங்கள், இவையிரண்டும் நம்முடைய விருப்பத் தெரிவுகள் அல்ல. இவை ஒன்றுக்கொன்று மாற்றானவைகளும் அல்ல. இவையிரண்டும் நமக்கு அத்தியாவசியமானவைகளாய் இருக்கின்றன.*

## குரல் வரங்களை இன்னும் அதிகமாய் அறிவோம்

*10. பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "நீங்கள் எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன். ஆகிலும், அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படி அர்த்தத்தையும் சொல்லா விட்டால், தீர்க்கதரிசனம் சொல்கிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன். ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்கிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்" (1 கொரிந்தியர் 14:5). இந்த அதிகாரத்தில், 'பக்திவிருத்தி' மற்றும் 'பக்திவிருத்தி உண்டாகச் செய்தல்' என்ற வார்த்தைகள்தான், முக்கியமான வார்த்தைகளாய் இருக்கின்றன. இந்த வார்த்தைகள், ஒரு*

*தனிநபரை, சபையை கட்டியெழுப்புவதைக் குறித்த அர்த்தத்தில் பேசுகின்றனர். அந்நிய பாஷைகளில் பேசுவது நல்லதுதான்; ஆனால் அதன் மூலம் நீங்கள் .................... மட்டுமே பக்திவிருத்திக்கேதுவாக கட்டியெழுப்பிக் கொள்கிறீர்கள் என்று பவுல் சொல்கிறார். மாறாக, நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்வீர்கள் என்றால், நீங்கள் சபை முழுவதையும் பக்திவிருத்திக்கேதுவாக கட்டியெழுப்புகிறீர்கள் என்றும் பவுல் சொல்கிறார். அதே நேரத்தில், நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசிய பிறகு, அதை வியாக்கியானம் செய்து விளக்கிச் சொல்வீர்கள் என்றால், அது தீர்க்கதரிசனத்திற்கு இணையான நன்மையைச் செய்யும் என்றும் பவுல் சொல்கிறார்.*

*11. ஆவிக்குரிய வரங்களை நாம் .................... நாட வேண்டும் என்று 1 கொரிந்தியர் 14:12-13 வசனங்கள் நமக்குச் சொல்கின்றன. இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். நாம் அந்நிய பாஷைகளில் பேசும்போது, அதை வியாக்கியானம் பண்ணத்தக்கதாக, நாம் ஜெபிக்க வேண்டும் என்றும் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.*

*12. 1 கொரிந்தியர் 14:26-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "நீங்கள் கூடி வந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான். ஒருவன் போதகம் பண்ணுகிறான். ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான். ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது." தேவனுடைய ஜனங்களாய் நாம் ஒன்றுகூடி வரும்போது, பெற்றுக் கொள்வதற்காக மட்டும், நாம் வரக்கூடாது. மாறாக, நம்முடைய பங்காக ஒன்றைக் கொடுக்கும்படி நாம் வர வேண்டும். அப்படிச் செய்வதற்கான ஒரு முக்கியமான வழி, பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் செயல்படுவதாகும். திரும்பவும் ஒன்றைக் கவனியுங்கள். இங்கு நோக்கம், .............. ..........................................கட்டியெழுப்புவதாகும்.*

## *பலவித பாஷைகளில் பேசுதல்*

**1** கொரிந்தியர் **14:18-19** வசனங்களில் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக

என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் (நன்றி சொல்கிறேன்). அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்." அந்நிய பாஷைகளில் பேசுவதை கடுமையாக விமர்சிப்பவர்கள், 19-ம் வசனத்தை மேற்கோள் காண்பித்துப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் 18-ம் வசனத்தை வாசிக்கவில்லை. அவர்கள் கேட்கிறார்கள்: "அறியாத மொழியில் பத்தாயிரம் வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும், அறிந்த மொழியில், ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே நான் விரும்புகிறேன் என்று பவுலே சொல்கிறாரே ?" அது சரிதான். ஆனால் கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்த மற்ற எல்லா விசுவாசிகளைக் காட்டிலும், அவர் அதிகமாய் அந்நிய பாஷைகளைப் பேசினதற்காக தேவனுக்கு நன்றி சொல்கிறாரே, அதையும் நாம் கவனிக்க வேண்டுமல்லவா ?

எவ்வளவாய் கொரிந்து சபையார் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள் என்பதை பவுலின் நிருபங்களிலிருந்து நீங்கள் பார்க்கும்போது, பவுல் அவர்களைக் காட்டிலும் மேலதிகமாய், மிகவும் அதிகமாய் பேசினார் என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியும். ஆனால் ஜனங்கள் அல்லது விசுவாசிகள் பொதுவாகக் கூடுகின்ற இடங்களில் அவர் அதைச் நிச்சயமாகச் செய்திருக்க மாட்டார் என்பதையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அப்படியென்றால், பவுல் எங்கே அந்நிய பாஷைகளில் பேசியிருப்பார் ? நிச்சயமாக, தேவனோடு அவர் செலவிட்ட தனிப்பட்ட ஐக்கிய நேரங்களில்தான், அவர் பேசியிருப்பார். இரண்டு வகையான பாஷைகள் முற்றிலும் வித்தியாசமானவை என்பதை இது நமக்கு தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறது. பவுலே அதைச் சொல்கிறார். பொது இடத்தில், ஜனங்களுக்கு முன்பாக நின்று, ஒரு மணி நேரம் அவர் அந்நிய பாஷையில் பிரசங்கித்திருப்பார் என்றால், அது ஒருவருக்கு ஒரு நன்மையையும் செய்திருக்காது. அது ஒருவரையும் பக்திவிருத்திக்கேதுவாக கட்டியெழுப்பியிருக்காது. அது ஒருவருக்கும் உதவி செய்திருக்காது. சபை கூடுகையில், நம்முடைய இலக்கு என்னவாய் இருக்கிறது ? நம்முடைய சக விசுவாசிகளுடன், நம் வேத அறிவை பரிமாறிக் கொள்ள வேண்டும், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும், அவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். இந்த அடிப்படையில்தான் நாம் செயல்படுகின்றோம். அவர்களுக்குப் புரியும் விதத்தில், நாம் அவர்களிடம் பேச வேண்டும்.

"பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்ற முந்தின செய்தியில், அந்நிய பாஷைகளில் பேசுதலை, பரிசுத்த ஆவியானவரின் முத்திரையாக கற்றுக் கொண்டோம். ஆனால் இங்கே 'பற்பல பாஷைகள்' அல்லது 'பலவித பாஷைகளில்' பேசுகிற வரத்தின் மீது நாம் கவனம் செலுத்துகின்றோம் (1 கொரிந்தியர் 12:28). இதோடு சேர்த்து, மற்ற இரண்டு குரல் வரங்களாகிய தீர்க்கதரிசனம் உரைத்தலைக் குறித்தும், பாஷைகளை வியாக்கியானம் செய்வதைக் குறித்தும் நாம் பார்ப்போம்.

*13. பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு விசுவாசிக்கும், தனிப்பட்ட விதத்தில் தேவனோடு வேறொரு பாஷையில் தொடர்பு கொள்வதற்கும், ஐக்கியம் கொள்வதற்கும் தேவனே உரிமை தந்திருக்கிறார். அந்த வரத்தையும் அவரே கொடுத்திருக்கிறார். 1 கொரிந்தியர் 14:2-4 வசனங்களில் பவுல் இவ்வாறு சொல்கிறார்: "ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்..........அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்." அந்நிய பாஷையில் பேச வேண்டும் என்பதற்கான மூன்று முக்கிய காரணங்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன:*

*(அ) நீங்கள் .................... பேசுகின்றீர்கள். இது மகத்தான, மிகவும் விசேஷமான ஒரு உரிமை அல்லது சிலாக்கியமாகும். உங்களுடைய ஆவியிலிருந்து, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியோடு நேரடியாகத் தொடர்பு கொள்கிற ஒரு விஷயமாய் இது இருக்கின்றது.*

*(ஆ) நீங்கள் ........................ பேசுகின்றீர்கள். நாம் இவற்றை புரிந்து கொள்ள முடியாது.*

*(இ) நீங்கள் உங்களையே ............................................ கட்டியெழுப்பிக் கொள்கிறீர்கள்.*

இவற்றைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லையென்றாலும், இவையே போதுமானது. ஆனால் இன்னும் நிறைய காரணங்கள் இருக்கின்றன.........

*14. 'பற்பல பாஷைகளைப் பேசுதல்' என்ற வரம், நம்முடைய தனிப்பட்ட பயன்பாட்டிற்கும் அப்பாற்ப்பட்டதாய், அதையும் தாண்டிய ஒன்றாக இருக்கிறது. பலவித பாஷைகளைப் பேசுதலில், பல வித்தியாசமான வடிவங்கள் இருக்கின்றன. இது பரந்து விரிந்த ஒரு விஷயமாயிருக்கிறது. பின் வருபவை இதில் உள்ளடங்கியிருக்கிறது:*

*(அ) பற்பல பாஷைகளில் ஒரு வகை, சபைக் கூடுகையில், அறியாத மொழியில் சத்தமாகப் பேசி விட்டு, பிறகு, அதற்குரிய ................................. கொடுப்பதாகும்.*

*(ஆ) பற்பல பாஷைகளைப் பேசுவதால் உண்டாகும் இன்னொரு பலன், அவிசுவாசிகளுக்கு இது ஒரு அடையாளமாய் பயன்படுத்தப்படுவதாகும். இது மிகவும் அரிதாக நடந்தாலும், தேவனுடைய ஜனங்கள் ஒன்று கூடி வரும்போது அல்லது தேவனுடைய ஜனங்கள் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது இது நடக்கின்றது. ஒரு விசுவாசி, தான் அறியாத மொழியில் பேசுகிறார். ஆனால் அங்கிருக்கிற அவிசுவாசி அந்த மொழியைப் புரிந்து கொள்கிறார். எனவே இது ............................ ஒரு அடையாளமாக இருக்கிறது.*

*(இ) நீங்கள் பலவிதமான பாஷைகளில் பேசும்போது, கோபம் வெளிப்படுகிற அனுபவம் வழக்கமான ஒன்றாயிருக்கிறது. இது வேகமாக பாய்ந்தோடும் நீரோட்டம்போல வெளிப்படுகிறது. ............. ஆவிகளின் சக்தியை எதிர்கொள்ளும்போது, இது நடக்கின்றது. எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியவில்லை. என்ன சொல்ல வேண்டும் என்றும் உங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் பற்பல பாஷைகளைப் பேசுவதன் மூலம் வெளிப்படுகிறார்.*

*(ஈ) பற்பல பாஷைகளைப் பேசுவதன் மூலம், நாம் தேவனை .............................. - இது தேவனோடு எளிமையான விதத்தில் தொடர்பு கொள்ளும் ஒரு வழிமுறையாயிருக்கிறது.*

1 கொரிந்தியர் 12:28-ல், வரங்களின் பட்டியலை எழுதிய பிறகு, எல்லா விசுவாசிகளும் பலவித பாஷைகளைப் பேசும் ஊழியத்தை உடையவர்களாய் செயல்படுவதில்லை என்பதை பவுல் தெளிவாக சுட்டிக் காண்பிக்கிறார். 29-30 வசனங்களில், அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

"எல்லோரும் அப்போஸ்தலர்களா? எல்லோரும் தீர்க்கதரிசிகளா? எல்லோரும் போதகர்களா? எல்லோரும் அற்புதங்களைச் செய்கிற வர்களா? எல்லோரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா? எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லோரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?" பதில் பெறும்படி அல்ல, ஒரு குறிப்பை உணர்த்தும்படியே பவுல் இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்டிருக்கிறார். இந்தக் கேள்விகள் கேட்கப்பட்ட விதத்திலிருந்தே, **இல்லை** என்பதுதான் இவை ஒவ்வொன்றிற்கும் பதில் என்பதை பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்வார்கள்.

பலவித பாஷைகளைப் பேசும் வரம் எல்லோருக்கும் இல்லை என்று இவ்வசனங்கள் சொல்கிறபடியியால், பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறும்போது, அதன் முத்திரையாக, அந்நிய பாஷைகளில் பேசுதல் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சிலர் ஊகித்து விடுகிறார்கள். ஆனால் பவுல் இங்கு என்ன கேள்வியைக் கேட்கின்றார்? "ஒரு பொதுக் கூடுகையில், எல்லோரும் பற்பல பாஷைகளைப் பேசுகிறார்களா?" என்பதுதான் அவருடைய கேள்வி. இதற்கு 'இல்லை' என்பதுதான் பதில். ஆவியானவருக்குள் முழுக்கு ஞான ஸ்நானம் பெற்று, தேவனோடு தங்களுடைய தனிப்பட்ட ஐக்கியத்தின் நேரத்தில், அறியாத அந்நிய பாஷையில் பேசக் கூடியவர்களுக்கு, பொதுக் கூடுகையில் பலவித பாஷைகளைப் பேசும் ஊழியம் இல்லை. அப்படிப்பட்ட பலரை டெரிக் அறிந்திருந்தார். ஆகையால் பரிசுத்த ஆவியானவருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் பெறும்போது வெளிப்படக்கூடிய முத்திரையைக் குறித்து பவுல் இங்கு பேசவில்லை. விசுவாசிகளின் பொதுக்கூடுகையில் நடக்கக்கூடிய பல்வேறு வகையான ஊழியங்களைக் குறித்துதான் அவர் இங்கு பேசுகின்றார்.

## *வியாக்கியானம் பண்ணும் வரம்*

*15. .............................. வரம் இல்லாமல், வியாக்கியானம் பண்ணும் வரம் இருக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் அருளுகின்ற அந்நிய மொழியில் ஒருவர் பேசுகிறார். இப்பொழுது அதற்குரிய விளக்கத்தை, அல்லது வியாக்கியானத்தை, அந்த நபர் மூலமாகவோ அல்லது வேறொருவர் மூலமாகவோ அதே பரிசுத்த ஆவியானவர் ஒரு வரமாகத் தருகின்றார். இது அறிவுப்பூர்வமான ஒரு புரிதலாயிருக்காது. மாறாக, அறியாத*

*மொழியில் முன்பு சொல்லப்பட்ட காரியத்தை, அறிந்த மொழியில் விளக்கி எடுத்துச் சொல்வதாய் இது இருக்கிறது.*

*16. இதை ஒரு மொழிபெயர்ப்பு என்று சொல்வதை விட, இது ஒரு ..................................... என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகையால், பற்பல பாஷைகளைப் பேசும்போது எடுத்துக் கொண்ட நேரம், வியாக்கியானம் சொல்லும்போது எடுத்துக் கொள்கிற நேரத்தோடு ஒத்துப் போகாமல் இருக்கலாம். அறியாத மொழியில் முதலில் சொல்லப்பட்ட ஒரு விஷயத்தை, பிறகு அறிந்த மொழியில் எடுத்துச் சொல்கிற ஒரு காரியமாய் இது இருக்கிறது. வார்த்தைக்கு வார்த்தை அப்படியே மொழிபெயர்க்கப்பட்ட ஒன்றாக, வியாக்கியானம் வெளிப்படுவதற்கும் சாத்தியமிருக்கிறது. தனக்குத் தெரியாத ஒரு மொழியில் பேசப்பட்ட ஒன்றிற்கு, ஒருவர் வியாக்கியானம் கொடுத்த நிகழ்வும் நடந்திருக்கிறது. இதை டெரிக் பல தருணங்களில் நேரில் கண்டிருக்கிறார். அதற்குப் பிறகு, அந்த மொழியை அறிந்த வேறொருவர் அதை சரிபார்த்து, அது அப்படியே வார்த்தைக்கு வார்த்தை துல்லியமாய் மொழிபெயர்க்கப்பட்டது என்பதை ஒப்புக் கொண்ட நிகழ்வும் அதே இடத்தில் நடந்திருக்கிறது.*

வியாக்கியானம் பண்ணும் வரத்தைப் பயன்படுத்துகிறவர்களை கவனித்துப் பார்ப்பீர்கள் என்றால், அவர்கள் அந்த வரத்தில் செயல்படும்போது, அவர்களுடைய ஆளுமையும், குணங்களும் கூட அங்கு வெளிப்படுவதை நீங்கள் பார்ப்பீர்கள். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பாருங்கள். எடுத்துக்காட்டிற்கு, ஆமோஸ், ஓசியா, ஏசாயாவின் வார்த்தைகளை வாசித்துப் பாருங்கள். இன்றைய காலத்திற்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பொருந்தி போகக்கூடிய ஒரு காலகட்டத்தில்தான் அவர்கள் வாழ்ந்தார்கள். ஒருவருடைய வார்த்தைகளில், இன்னொருவருடைய வார்த்தைகளின் அடிப்படையில் நீங்கள் தவறு கண்டுபிடிக்க முடியாது. காரணம், அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் உந்துதலினால் பேசினார்கள்.

பரிசுத்த ஆவியானவர், ஒரு மனுஷனுடைய ஆளுமையை நேசிக்கிறார். அதில் அவர் பிரியமாயிருக்கிறார். அவர் அதை கனம் பண்ணுகிறார். எனவே அவர் ஒருபோதும் ஒரு மனுஷனை ஒரு இரப்பர் ஸ்டாம்ப் போல பயன்படுத்த மாட்டார். அவர் ஒரு மனுஷனுடைய ஆளுமையை ஒதுக்கி

வைத்து விட்டு, அந்த மனுஷனை ஒரு ரோபட் போல அல்லது ஒரு எந்திரத்தைப்போல பயன்படுத்த மாட்டார். ஆனால் ஒரு பொல்லாத ஆவி அதைச் செய்யும். தேவனுடைய ஆவியானவருக்கும், சாத்தானுடைய தீய ஆவிகளுக்கும் இடையே உள்ள பெரிய வித்தியாசம் இதுதான். தேவன் தான் மனுஷனுடைய ஆளுமையை உருவாக்கினார். அவர் அதை கனம் பண்ணுகிறார். அவர் அதற்கு மதிப்பளிக்கிறார். அவரே அதை பண்படுத்தி, வளர்க்கின்றார். ஆனால் பிசாசோ அதன் மீது ஏறுகிறான், அதை மிதிக்கின்றான். அவன் அதை அவமதிக்கின்றான். ஒரு விஷயம், தேவனுடைய ஆவியானவரிடமிருந்து வருகின்றதா அல்லது பிசாசினுடைய தீய ஆவி அங்கே கிரியை செய்கின்றதா என்பதை நீங்கள் அறிந்து கொள்வதற்கு இது ஒரு வழியாயிருக்கிறது. ஒரு ஆவி, மனுஷனுடைய ஆளுமையை அடிமைப்படுத்தி, அவனை அவமதிக்கின்றது என்றால், அது நிச்சயம் தேவனுடைய ஆவியானவருடைய கிரியையாக இருக்க முடியாது.

1 கொரிந்தியர் 14:28-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: “அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே (பொதுக் கூடுகையிலே) பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசக்கடவன்.” அறியாத அந்நிய மொழியில் பேசி ஜெபிக்க வேண்டும் என்பதைப்போல நீங்கள் உணருகின்றீர்கள். ஆனால் நீங்கள் சபையில், ஒரு பொதுக்கூடுகையில் இருக்கின்றீர்கள். அதற்கு வியாக்கியானம் (அர்த்தம்) கொடுக்கப்பட முடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்பொழுது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? பதில், மிகவும் எளிமையானதுதான். நீங்கள் அதை உங்களுக்குள் செய்து கொள்ளுங்கள். உங்களுக்கும், தேவனுக்கும் இடையே மட்டும் நீங்கள் பேசிக் கொள்ளுங்கள்.

வியாக்கியானம் செய்யும் வரம், வித்தியாசமான வழிகளில் செயல்படுகின்றது. ஒரு பொதுவான கோட்பாட்டிலிருந்து ஆரம்பிப்போம். 1 கொரிந்தியள 12:6 சொல்கிறது: “கிரியைகளிலேயும் (வரம் செயல்படுகின்ற விதங்களில்) வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.” வேறு வார்த்தைகளில், இரண்டு மனுஷர்கள் ஒரே ஊழியத்தை உடையவர்களாய் இருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கையில் அது செயல்படுகிற விதம் வித்தியாசமான தாக இருக்கும் என்று சொல்லலாம். வியாக்கியானம் பண்ணும் வரம் செயல்படுகிற வழிகளில் சிலவற்றை நாம் பார்க்கலாம்:

❖ **ஒரு அறிமுக வார்த்தை அல்லது வாக்கியம்** - முதல் வாக்கியத்தை விசுவாசத்தோடும், தைரியத்தோடும் நாம் பேச ஆரம்பிப்போம் என்றால், எஞ்சிய வார்த்தைகள் தொடர்ந்து வரும். ஆனால் நாம் பின் வாங்குவோம் என்றால், ஒன்றும் வராது.

❖ **வார்த்தைகள் அல்லது வேதவசனத்தோடு ஒரு விதமான அழுத்தம்** - அறியாத மொழியில் பேசப்பட்ட வார்த்தைகளுக்கு விளக்கம் பொதுவாக இவ்வாறுதான் வரும். அந்த நபர் தன் வயிற்றுக்குள் "பட்டாம்பூச்சிகள்" பறப்பதைப்போல உணருவார் அல்லது ஒரு வகையான அழுத்தத்தை உணருவார் அல்லது தேவன் ஒன்றைச் செய்ய விரும்புகிறார் என்று உணருவார். பிறகு சில வார்த்தைகள் அல்லது ஒரு வேதவசனம் மனதிற்குள் வரும். இது உங்களுக்கு நடக்கின்றது என்றால், நீங்கள் அந்த வேதவசனத்தை அல்லது அந்த வார்த்தைகளைப் பேச வேண்டும். பிறகு நீங்கள் அதற்கான முழுமையான விளக்கத்தோடு முன்னேறிச் செல்வீர்கள்.

❖ **ஒரு பொதுவான சிந்தை அல்லது எண்ணம்** - ஒரு பொதுவான சிந்தை ஒரு நபருக்குக் கொடுக்கப்படுகிறது. அவரே தன் சொந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, அதற்கு வடிவம் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் அதற்குரிய வார்த்தைகளைக் கொடுக்கவில்லை. மாறாக, அவருடைய உந்துதல் மூலம், தொடர்ச்சியான சிந்தைகளைக் கொடுக்கிறார். அந்த நபரே அதை தன் வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தும்படி விட்டு விடுகிறார்.

❖ **கேட்கின்ற வார்த்தைகள், பார்க்கின்ற வார்த்தைகள் அல்லது பார்க்கின்ற படங்கள்** - வார்த்தைகளை கேட்பதன் மூலம் அல்லது சுருளில் எழுதப்பட்ட வார்த்தைகளை பார்ப்பதன் மூலம், வியாக்கியானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். மற்றவர்கள் ஒரு தரிசனத்தைப் பார்க்கிறார்கள் அல்லது மனதில் ஒரு படத்தைப் பார்க்கிறார்கள். பிறகு தாங்கள் என்ன பார்க்கிறார்களோடு, அதோடு தொடர்புபடுத்துகிறார்கள்.

## *தீர்க்கதரிசன வரம்*

தீர்க்கதரிசனம் என்றால், விசுவாசி புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் பேசக்கூடிய திறன் என்று வரையறுக்கலாம். வார்த்தைகள், பரிசுத்த ஆவியானவரின் உந்துதலால் கொடுக்கப்படுகின்றன. தீர்க்கதரிசனம், உந்துதால் கொடுக்கப்படுகிற ஒரு பிரசங்கம் அல்ல.

அது மனுஷனுடைய கல்வியறிவிலிருந்து, ஞானத்திலிருந்து, அவன் பெற்ற இறையியல் பயிற்சியிலிருந்து வருவதில்லை. மற்ற எல்லா வரங்களைப்போலவே, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட கிரியையின் மூலமாக மட்டுமே இது சாத்தியமாயிருக்கிறது.

*(அ) தீர்க்கதரிசன வரம், பலவித பாஷைகளைப் பேசுதல் மற்றும் வியாக்கியானம் பண்ணுதல் என்ற வரங்களுக்கு ஒரு படி அடுத்த நிலையில் இருக்கின்றது. அறியப்பட்ட ஒரு மொழியில் இது பேசப்பட்டாலும், பரிசுத்த ஆவியானவரே இதைக் கொடுக்கின்றார். ........................ புரிதலின் அடிப்படையில் இது வருவதில்லை. மாறாக, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில், பரிசுத்த ஆவியானவர் மூலம் இது கொடுக்கப்படுகிறது.*

*(ஆ) வியாக்கியானம் பண்ணுதலும், தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால், முதலில் ................... மொழியில் பேசப்பட்ட வார்த்தைகளுக்கு, அவற்றோடு தொடர்புடைய விதத்தில் பிறகு வியாக்கியானம் கொடுக்கப்படுகிறது. ஆனால் தீர்க்கதரிசனமோ, அறியப்பட்ட மொழியில் ஆரம்பிக்கின்றது.*

பெந்தேகோஸ்தே நாளில், பேதுரு அங்கிருந்த ஜனக்கூட்டத்தாரிடம் இவ்வாறு பேசினான்: “தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில், நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்” (அப்போஸ்தலர் நடபடிகள் **2:16-17**). கடைசி நாட்களில் என்ன செய்வேன் என்று தேவன் சொல்லியிருந்தாரோ, அவர் அதை அப்படியே செய்து கொண்டிருக்கிறார். அவர் தம்முடைய ஆவியை எல்லா ஜனங்களின் மேலும் ஊற்றிக் கொண்டிருக்கிறார். விதிவிலக்கே இல்லை, மனுக்குலத்தில் ஒவ்வொருவரும் கடைசி நாட்களில் ஊற்றப்படுகிற பரிசுத்த ஆவியானவரின் அனுபவத்தைப் பெறப் போகின்றார்கள். இது அவர்களை இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும்படி நடத்தப் போகிறது.

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போது, என்ன நடக்கும் என்று யோவேல் சொன்னான்? “உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் **தீர்க்கதரிசனம் சொல்வார்கள்.** உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள். என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும்

அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது **அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்**" (அப்போஸ்தலர் நடபடிகள் **2:17-18**).

இந்த வேதப்பகுதியில், தீர்க்கதரிசனத்தைக் குறித்து முக்கியமாக வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசி நாட்களில், தீர்க்கதரிசனம் உரைத்தல் என்ற இந்த அழகான ஆவிக்குரிய வெளிப்பாடு, எங்கும் வாழ்கின்ற தேவனுடைய ஜனங்களுக்கு திரும்பவும் கொடுக்கப்படப் போகிறது. இன்றைக்கு பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம்மில் பெரும்பாலானோர் இதுவரை பார்த்திராத விதத்தில், முன் ஒருபோதும் அறிந்திராத விதத்தில், இன்னும் வல்லமையான விதத்தில், இன்னும் அதிகமாய் பரந்து விரிந்த அளவில், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதை பார்க்கப் போகிறோம்.

தீர்க்கதரிசனம் உரைக்கின்ற ஒரு நபர் சபையிடம் என்ன சொல்கிறார்? 1 கொரிந்தியர் 14:3-4 வசனங்களை வாசித்துப் பாருங்கள்: "தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்................ தீர்க்கதரிசனம் சொல்கிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்." தீர்க்கதரிசனம் என்பது, தேவபக்திவிருத்திக்கு ஏதுவாக கட்டியெழுப்பும்படி, அறிவுறுத்தி புத்தி சொல்லும்படி, ஆறுதல் உண்டாகப் பேசும்படி உரைக்கப்படுகிறது. காரணம், தேவன் விசுவாசிகளை ஊக்கமிழக்கச் செய்ய மாட்டார், கடுமையான வார்த்தைகளைப் பேசி கீழே தள்ள மாட்டார். தீர்க்கதரிசனம் உரைத்தலில் இருக்கும் மூன்று பிரதானமான நோக்கங்களைக் குறித்து, நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பார்ப்போம்.

முதல் நோக்கம், பக்திவிருத்திக்கு (edify) ஏதுவாகப் பேசுவதாகும். ஆங்கிலத்தில் இவ்வார்த்தை, முந்திய காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு பழைய வார்த்தையைப்போல தெரிகின்றது. பலருக்கு இது திருச்சபையோடு சம்பந்தப்பட்ட ஒரு வார்த்தையாக இருக்கின்றது. ஆனால் எடிஃபைஸ் (edifice) என்ற ஆங்கில வார்த்தை, பெரும்பாலானோருக்கு பழக்கப்பட்ட ஒரு வார்த்தையாக இருக்கின்றது. இது ஒரு கட்டிடத்தைக் குறிக்கின்றது. ஆகையால் எடிஃபை (edify) என்றால், "பெலப்படுத்துதல் அல்லது கட்டியெழுப்புதல்" என்று அர்த்தம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோரை இன்னும் அதிக பலன் கொடுக்கிறவர்களாய் உருவாக்கும்படி தீர்க்கதரிசனம் சொல்லப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியை மிகவும் பிரயோஜமான விதத்தில் செய்யும்படி இவ்வரம் பயன்படுத்தப்படுகிறது. தீர்க்கதரிசன வரத்தை நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள் என்றால், பிறகு

நீங்கள் யாருக்கு தீர்க்கதரிசனம் சொல்கிறீர்களோ, அவர்களை அது கட்டியெழுப்பி, பெலப்படுத்த வேண்டும். உங்களையும் அது அவ்வாறு கட்டியெழுப்பி, பெலப்படுத்த வேண்டும்.

இரண்டாவது நோக்கம், அறிவுறுத்தி, புத்தி சொல்வதாகும். "செயல்விரைவுபடுத்துதலும், ஊக்கம் கொடுப்பதும், எச்சரிக்கை விடுப்பதும், அனல் மூட்டி எழுப்பி விடுவதும்," இதில் அடங்கியிருக்கிறது. எச்சரிக்கை விடுத்தல் என்றால், அதில் கடிந்து கொள்ளுதலும், கடுமையான எச்சரிக்கையும் சேர்ந்தே வருகின்றது. ஆனால் அறிவுறுத்துதல் என்றால், குற்ற உணர்வுக்குள் தள்ளும்படி விமர்சித்தல் அல்ல. ரோமர் **8:1** சொல்கிறது: "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிற வர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை."

மூன்றாவது நோக்கம், ஆறுதல் சொல்வதாகும். இன்றைய வார்த்தைகளில் சொன்னால், "உற்சாகமூட்டுதல்" என்று சொல்லலாம்.

## *வியாக்கியானம் சொல்லும் வரம் மற்றும் தீர்க்கதரிசனம் உரைக்கும் வரத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?*

செய்தியைக் கேட்பதன் அல்லது பார்ப்பதன் மூலமே, இந்தப் பகுதியின் மதிப்பை சிறப்பான விதத்தில் உணர முடியும். வியாக்கியானம் சொல்லும் வரம் மற்றும் தீர்க்கதரிசனம் உரைக்கும் வரத்தைக் குறித்து டெரிக் போதிக்கும்போது, அவர் பல நடைமுறை குறிப்புகளையும், நமக்கு உதவிகரமாய் இருக்கக்கூடிய வார்த்தைகளையும் சொல்கிறார்.

வேதவசனத்திலிருந்து இன்னும் அதிக ஊக்கம் கொடுக்கக்கூடிய வார்த்தைகளைப் பார்த்து, நாம் இதை முடிப்போம்:

"மூப்பராகிய சங்கத்தார் உன் மேல் கைகளை வைத்தபோது, தீர்க்கதரிசனத்தினால் **உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்** பற்றி அசதியாயிராதே" **(1** தீமோத்தேயு **4:14).** இன்னொரு வசனத்தை வாசிப்போம். "இதன் நிமித்தமாக, நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால், உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" **(2** தீமோத்தேயு **1:6).** தீமோத்தேயுவுக்குள் ஒரு குறிப்பிட்ட வரம் இருப்பதை பவுல் பார்த்தார். அதைத்தான் அவர் தீமோத்தேயுவுக்கு எழுதின கடிதத்தில் தெளிவாக எழுதியிருக்கிறார். உங்களுக்குள் ஒரு வரம் இருக்கிறது என்றால், அது

உங்களிடம் இருக்கிறது என்று அர்த்தம்.

"அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" (1 பேதுரு 4:10). பவுலின் வார்த்தைகளுக்கு ஒத்த விதத்தில், அதே வார்த்தைகளைத்தான் பேதுருவும் பயன்படுத்தியிருக்கிறார். உங்களிடம் இல்லாத ஒன்றைக் கொண்டு, நீங்கள் ஊழியம் செய்ய முடியாது. முதலில், நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் ஊழியம் செய்து, ஒருவரையொருவர் பெலப்படுத்திக் கொள்ளத்தக்கதாக, எல்லா கிறிஸ்தவர்களும் வரங்களைப் பெற்றுக் கொள்வார்கள் என்று பேதுரு அனுமானம் செய்து கொண்டார். கொடுப்பதற்கு ஒன்றுமில்லாத நிலையில் வாழ்வதுதான், மெய்யான தரித்திரமாயிருக்கிறது. கிறிஸ்துவின் மீது தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்கிற, சபைக்குச் செல்கிற 90 சதவீத கிறிஸ்தவர்களின் பரிதாப நிலையாய் இது இருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கும்படி தேவன் வைத்திருக்கிற நன்மையை அவர்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகையால் அவர்களால் அதைக் கொடுக்க முடியவில்லை. ஆனால் இது தேவனுடைய சித்தம் கிடையாது. பரிசுத்த ஆவியானவரின் தனித்துவமான வெளிப்பாட்டைக் கொடுக்கக்கூடிய இந்த நன்மை இல்லாமல், இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளாகிய நாம் வாழ வேண்டிய அவசியமில்லை. "ஆவியான வருடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.......இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியான வர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடு க்கிறார்" (1 கொரிந்தியர் 12:7,11).

ஒவ்வொரு விசுவாசிக்கும் தனித்துவமான வரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், எந்த நேரத்தில், யாருக்கு, என்ன வரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தை, அவருடைய விருப்பத்தை இது கட்டுப்படுத்தாது. காரணம், அவருக்குள்ளே இருந்துதான் எல்லா வரங்களும் வருகின்றன. எடுத்துக்காட்டிற்கு, நீங்கள் ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கின்றீர்கள். உங்களுக்கு முன்பாக, ஒருவர் மரித்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில், நீங்கள் அங்கே நின்று கொண்டு, "ஐயோ, சுகமளிக்கும் வரம் என்னிடம் இல்லையே. இப்பொழுது என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே," என்று புலம்ப வேண்டியதில்லை. நீங்கள் பரிசுத்த

ஆவியானவரால் நிரப்பப் பட்டிருக்கிறீர்கள் என்றால், உங்களுக்குத் தேவையான சகலமும் அவருக்குள் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அந்தக் கணத்தில், பரிசுத்த ஆவியானவர், உங்கள் மூலமாய் சுகமளிக்கும் வரத்தை வெளிப்படுத்துவதை எதுவும் தடுக்க முடியாது. உங்களுடைய வாழ்க்கையில் சுகமளிக்கும் வரம், தொடர்ந்து, அடிக்கடி வெளிப்பட்டால்தான், உங்களிடம் அந்த வரம் இருக்கிறது என்று அர்த்தம் என்ற உங்களுடைய வார்த்தைகளை வேதவசனம் ஒத்துக் கொள்ளவில்லை. தேவைப்படுகிற எந்த ஒரு வெளிப்பாட்டையும், தேவனால் எந்த ஒரு நபருக்கும் கொடுக்க முடியும். ஆனால் இது வரங்களை உடையவர்களாய் இருக்கின்ற நிலைக்கு பொருந்தாது. பிலேயாமின் கழுதைக்கு தீர்க்கதரிசன வரம் இருந்தது என்று நாம் சொல்ல மாட்டோம். ஏன்? காரணம், இது ஒரே ஒரு முறைதான் நிகழ்ந்தது.

ஆகையால் பவுல், ஆவியானவரின் வரங்களை பட்டியலிட ஆரம்பிக்கும்போதும், முடிக்கும்போதும் ஒன்றை நமக்கு நினைப்பூட்டுகிறார். நாம் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியான வரின் குறிப்பிட்ட ஒரு வெளிப்பாட்டை உடையவர்களாய் வாழ்வதற்கு உரிமையுள்ளவர்களாயிருக்கிறோம். அதற்காக தேவன் நமக்கு ஒரே ஒரு வெளிப்பாட்டைத்தான் கொடுப்பார் என்ற அர்த்தத்தில் பவுல் இங்கு எழுதவில்லை. ஆனால் நாம் நம்முடைய ஆவிக்குரிய சுதந்தரத்தில் வாழும்போது, நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளை அனுபவிப்பதற்கு உரிமை உடையவர் களாயிருக்கிறோம். இந்த வெளிப்பாடுகள் இல்லாமல் ஒரு விசுவாசி வாழ்கின்றார் என்றால், அவருடைய வாழ்க்கைக்கென்று தேவன் செய்து வைத்திருக்கிற முன்னே ற்பாடுகளை அனுபவிக்காமல், அதற்குக் கீழான நிலையில் வாழ்கின்றார் என்று அர்த்தம்.

அடுத்த செய்தியில், வல்லமை மற்றும் வெளிப்பாட்டின் வரங்களைக் குறித்து டெரிக் போதிக்கப் போகிறார். அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் அவர் செயல்படுத்திக் காண்பிக்கப் போகிறார்.

397-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/29**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபது>>*

*ஆவிக்குரிய வரங்களைப் யன்படுத்துதல்-பாகம் 3*[4156]

# வல்லமை மற்றும் வெளிப்பாட்டின் வரங்கள்

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

முந்தின பாடத்தில், குரல் வரங்களைக் குறித்து டெரிக் நமக்குப் போதித்தார். பலவிதமான பாஷைகளைப் பேசுவதைக் குறித்தும், அவற்றை வியாக்கியானம் செய்வதைக் குறித்தும், தீர்க்கதரிசனம் உரைப்பதைக் குறித்தும் நாம் அதில் கற்றுக் கொண்டோம். இந்தப் பாடத்தில், வல்லமையின் வரங்களைக் குறித்து நாம் கற்றுக் கொண்டு, நாம் அவற்றைச் செயல்படுத்திப் பார்க்கப் போகின்றோம். இதில் விசுவாச வரம், சுகமளிக்கும் வரம், அற்புதங்களை நிகழ்த்தும் வரம் என்பவைகளைக் கற்றுக் கொள்வோம். அடுத்ததாக, வெளிப்பாட்டின் வரங்களைக் குறித்து அறிந்து கொள்வோம். ஞானத்தை வெளிப்படுத்தும் வார்த்தையைப் பேசும் வரம், அறிவை உணர்த்தும் வார்த்தையைப் பேசும் வரம், ஆவிகளைப் பகுத்தறியும் வரம் என்பவைகளை இதில் நாம் கற்றுக் கொள்வோம்.

முந்தின செய்தியைப்போலவே, இந்தச் செய்தியிலும் இந்த வரங்கள் செயல்படுவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள், கேட்கப் போகிறீர்கள். போதனை மட்டும் இதில் இருக்காது. வரங்களின் நடைமுறை பயன்பாட்டை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். நீங்கள் இவற்றை பயிற்சி செய்தும் பார்ப்பீர்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு கிரியை செய்கின்றார் என்பதைக் குறித்து ஆச்சரியமான ஒரு வெளிப்பாட்டை இது நமக்குக் கொடுக்கிறது. திரும்பவும் சொல்கிறேன், பதிலளிக்கும்படி வழக்கம்போல, நிறைய கேள்விகள் இதில் இருக்காது. டெரிக் பிரின்ஸ் எழுதிய ‘ஆவியானவரின் வரங்கள்’ என்ற புத்தகத்திலிருந்து அவர் போதித்த மற்ற போதனைகளின் சில தகவல்கள் இதில் கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

1 கொரிந்தியர் 12-ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், பவுல் ஒரு வாக்கியத்தை எழுதியிருக்கிறார். அது அவர் எழுதிய நிருபங்களில் பல இடங்களில் காணப்படுகிறது. “அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து, நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.” டெரிக் தன்னுடைய மற்ற போதனைகளிலும் இதைச் சொல்லியிருக்கிறார். அவர் கவனித்த ஒரு முக்கியமான விஷயத்தை இங்கு சொல்கிறார். “நீங்கள் அறியாமையில் இருப்பது எனக்கு விருப்பமல்ல,” என்று தேவன் பவுல் மூலம் சபைக்குச் சொன்ன ஒவ்வொரு தருணத்திலும், அந்த முக்கியமான சத்தியங்களைக் குறித்த மிகவும் மோசமான அறியாமையில்தான் சபையானது சிக்கியிருந்தது!

நாமும் அந்த இடத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை. காரணம், ஆவிக்குரிய வரங்களைக் குறித்த சத்தியத்தை தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே அவருடைய ராஜ்யத்தை இந்தப் பூமியில் ஸ்தாபிக்கும்படி, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை கட்டியெழுப்பும்படி நாம் அவரிடம் ஜெபிக்கும்போது, அந்த வரங்களில் செயல்படும்படி அவரே நம்மை பயன்படுத்துவார். அவரே நம்மை பெலப்படுத்துவார்.

ஒரு நினைப்பூட்டுதலாக, பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் குறித்து பேசுகிற இந்த முக்கியமான வேதப்பகுதியை நாம் வாசிப்போம்:

> *4வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவர் ஒருவரே.*
> *5ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு. கர்த்தர் ஒருவரே.*
> *6கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. 7ஆவியான*
> *வருடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. 8எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியானவராலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*
> *9வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலேயே குணமாக்கும்*

*வரங்களும், [10]வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. [11]இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.*

## *வல்லமையின் வரங்கள்*

### விசுவாசம்

*1. விசுவாசத்தின் மூன்று முக்கியமான வடிவங்களைக் குறித்து வேதாகமம் பேசுகிறது:*

*(அ) .............................. விசுவாசம் - ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'' என்று எழுதியிருக்கிறபடி (ஆபகூக் 2:4; ரோமர் 1:17; கலாத்தியர் 3:11), நமக்குள் உருவாகிற இந்த விசுவாசம்தான் நம்மை இரட்சிக்கிறது.*

*(ஆ) விசுவாசம், ஒரு ......... - கிறிஸ்துவின் குணாதிசியத்தை காலப்போக்கில் வளர்ப்பதன் மூலம் இது உண்டாகிறது. ஆவியின் கனிகளில் ஒன்றாக விசுவாசத்தை அல்லது உண்மையை கலாத்தியர் 5:22-ம் வசனம் பட்டியலிடுகிறது. பவுல் பயன்படுத்திய கிரேக்க பெயர்ச்சொல், பிஸ்டிஸ் என்பதாகும். இது விசுவாசம் என்பதற்கான அடிப்படை வார்த்தையாக இருக்கின்றது. விசுவாசத்தைக் குறிக்கும் கிரேக்க மற்றும் எபிரெய வார்த்தைகள், பிரதானமாக குணாதிசியத்தைக் குறிக்கின்றன, அறிவு சம்பந்தப்பட்ட ஒன்றைக் குறிக்கவில்லை. விசுவாசம் உண்மையில், தேவனுக்கு நாம் காண்பிக்க வேண்டிய உண்மையையும், அர்ப்பணிப்பையும் சுட்டிக் காண்பிக்கிறது. இது ஒரு குறிப்பிட்ட போதனையைக் குறிக்கவில்லை. போதனை என்பது இரண்டாம் பட்சம்தான்.*

*(இ) விசுவாசம், ஒரு ......... - இந்த வரத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவர் தற்காலிகமாக தேவனுடைய சொந்த விசுவாசத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியையே ஒரு விசுவாசிக்குக் கொடுக்கிறார். இது மனுஷனுடைய அளவையெல்லாம்*

தாண்டி, அதற்கெல்லாம் அப்பாற்பட்டதாய், தேவனுடைய விசுவாசமாக இருக்கின்றது. இது எவ்வளவு அளவு என்பது இங்கு முக்கியமல்ல. இதன் தரமே இங்கு முக்கியம். ஒரு மலையைப் பெயர்ப்பதற்கு இந்த வகையான விசுவாசத்தின் ‘‘கடுகு விதையளவே’’ போதுமானது. இதற்கு நாம் உரிமை பாராட்ட முடியாது. தேவன் இதை ஒரு ஈவாக நமக்குக் கொடுக்கிறார்.

2. மாற்கு 11:12-14 மற்றும் 20-24 வசனங்களில், ஒரு அத்திமரத்தை இயேசு சபித்த சம்பவத்தை நாம் வாசிக்கின்றோம். இயேசு ஒன்றைச் சொல்கிறார். அது பெரும்பாலும், ‘‘தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்,’’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில், கிரேக்க மொழியில், ‘‘தேவனுடைய விசுவாசத்தை உடையவர்களாயிருங்கள்,’’ என்று எழுதப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கின்றது. இயேசு இங்கு சொல்கிறார், ‘‘தேவனுடைய விசுவாசம் உங்களுக்குள் இருக்கிறது என்றால், நீங்கள் பேசுகிற வார்த்தைகளும், நீங்கள் செய்கிற காரியங்களும், .................... தாமே அதைச் செய்தால் எவ்வளவு வல்லமையாய் இருக்குமோ, அவ்வளவு வல்லமையாய் அது நடக்கும்.’’ இது உங்களுடைய விசுவாசம் அல்ல. இது தேவனுடைய விசுவாசம்.

3. பிறகு இயேசு மாற்கு 11:23-ம் வசனத்தில் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்: எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, ‘‘நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ,’’ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். ‘எவனாகிலும்’, அவன் சொல்வது ‘எதுவாயிருந்தாலும்’, அது அவனுக்கு உண்டாகும் என்ற வார்த்தைகள் வல்லமையான வார்த்தைகளாய் இதில் இருக்கின்றன. ஆனால் நீங்களாகவே ஒரு தீர்மானத்தை எடுத்து, இதைச் செய்து விட முடியாது. ஒரு குறிப்பிட்ட சூழலில், தேவன் தம்முடைய சொந்த .............................. ஒரு ஈவாக உங்களுக்குக் கொடுக்கும்போது மட்டுமே இது நடக்கும்.

*4. மத்தேயு 17:20-ல் இதே போன்ற வார்த்தைகளை இயேசு பேசுகிறார்: "கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல, அது அப்புறம் போம். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்." அது தேவனுடைய விசுவாசமாய் இருந்தால், உங்களுக்கு அது நிறைய தேவைப்படாது என்று இயேசு இங்கு சொல்கிறார். விதைகளிலேயே மிகவும் சிறிய கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்குப் போதும் என்று அவர் சொல்கிறார். அதாவது, உங்களுடைய விசுவாசம் எவ்வளவு என்ற அந்த அளவு இங்கு முக்கியமல்ல. உங்களுடைய விசுவாசத்தின் .................. முக்கியம்.*

*5. விசுவாச வரம் என்பது, ஒரு குறிப்பிட்ட வேலைக்காக, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், தேவனுடைய விசுவாசத்தின் சிறிய ........... விதையளவு உங்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒன்றாகும். நீங்கள் அதைப் பயன்படுத்தும்போது, தேவன் செயல்படுவதுபோலவே நீங்களும் செயல்படுவீர்கள். அது முடிந்தவுடன், நீங்கள் திரும்பவும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உங்களுடைய சொந்த விசுவாசத்தின் நிலைக்கு வந்து விடுகிறீர்கள்.*

*இந்த வரம், வல்லமையை வெளிப்படுத்தும் மற்ற இரண்டு வரங்களாகிய சுகங்களை அளிக்கும் வரத்தையும், அற்புதங்களைச் செய்யும் வரத்தையும் செயல்பட வைக்கும் ஒரு ஊக்கியாக செயல்படுகிறது. இவ்விரண்டு வரங்களும் பன்மையில் சொல்லப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.*

**சுகங்களை அளிக்கும் வரம்**

*6. சுகமளிக்கும் வரங்களை இரண்டு வழிகளில் புரிந்து கொள்ளலாம்:*

*(அ) ஒவ்வொரு சுகமும் தனித்துவமான ஒரு .................*

*(ஆ) சில குறிப்பிட்ட வியாதிகளுக்கென்று அல்லது வலிப்பு, மூட்டு வாதம் போன்ற வியாதிகளுக்கென்று .......................... வரங்களை சிலர் பெறுகின்றனர்.*

*7. சுகமளிக்கும் ஒரு வரம் அல்லது சுகமளிக்கும் வரம் என்பது, ........................... எதிராக செயல்படும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகமளிக்கும் வல்லமையாகும். காரணம், சுகம், வியாதியோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. வியாதிப்பட்டவர்களை மட்டுமே சுகமாக்க முடியும்.*

*8. லூக்கா 5:17-ல் முக்கியமான ஒரு காரியம் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவினுடைய ஊழியத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைக் குறித்து இது பேசுகிறது: "பின்பு ஒருநாள் அவர் உபதேசித்துக்கொண்டிருக்கிறபோது, கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது பிணியாளிகளை குணமாக்கத்தக்கதாக கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று." வியாதிப்பட்டவர்களை சுகமாக்கும்படி, கர்த்தருடைய வல்லமை அங்கே பிரசன்னமாகியிருந்தது என்ற வார்த்தைகளை நாம் இங்கு கவனிக்க வேண்டும். ஆக, தேவனுடைய சுகமளிக்கும் வல்லமை வியாதியை துரத்தி விட்டு, அங்கே ........................ கொடுக்கின்றது. கைகளை வைக்குதலின் மூலம், எண்ணெய் பூசி ஜெபிப்பதன் மூலம், இன்னும் பல வித்தியாசமான வழிகள் மூலம், பரிசுத்த ஆவியானவர் கட்டவிழ்த்து விடுகிற இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகமளிக்கும் வல்லமையாய் இது இருக்கிறது.*

*9. சுகம் என்பது எப்பொழுதும் உடனடியாய் நடக்கக்கூடிய ஒன்று அல்ல. தேவன் நம்மைத் தொடும்போது, முழுமையான சுகத்தை நாம் பெற்றுக் கொள்வதில்லை. அந்த சுகத்திற்காக நாம் தொடர்ந்து அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அதன் மூலம் அந்த ...................... நாம் இணைக்கப்பட்ட நிலையில் இருக்கின்றோம்.*

**அற்புதங்களைச் செய்யும் வரம்**

*10. ....................... தாண்டிய நிலையில், அற்புதங்கள் வேலை செய்கின்றன. டெரிக் ஒரு எடுத்துக்காட்டைப் பயன்படுத்தினார். நடுக்காதில் வீக்கம் ஏற்பட்டால், அதை சுகமாக்க முடியும். ஆனால் நடுக்காது என்ற முக்கியமான*

*அவயமே இல்லையென்றால், இல்லாத ஒன்றை சுகமாக்க முடியாது. சுகத்தையும் தாண்டிய விதத்தில், அங்கே ஒரு சிருஷ்டிப்பின் அற்புதம் நிகழ்ந்தாக வேண்டும்.*

*11. சுகத்தோடு ஒப்பிடுகையில் இன்னொரு வித்தியாசத்தையும் நாம் பார்க்க முடியும். அற்புதங்கள் பெரும்பாலும் ............................ நிகழக்கூடியவை. சுகத்தை உடனடியாக உணர்ந்தறிய முடியாது. சுகம் படிப்படியாக நிகழக்கூடியதாய் இருக்கிறது.*

*12. ஒரு அற்புதம், பெரும்பாலும் சிறுபிள்ளைத்தனமான ....................... கிரியையின் மூலம் கட்டவிழ்க்கப்படுகிறது. எலியா தீர்க்கதரிசி இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவன் வழக்கத்திற்கு மாறான காரியங்களைச் செய்தான். அங்கே சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட அற்புதங்கள் நிகழ்ந்தன.*

## வெளிப்பாட்டைக் கொடுக்கும் வரங்கள்

ஞானத்தின் வார்த்தைக்கும், அறிவை உணர்த்தும் வார்த்தைக்கும் இடையே உள்ள ஒற்றுமை மற்றும் வேறுபாடுகளை கவனிப்பது நமக்கு பிரயோஜனமாயிருக்கும். முதலில், ஞானம் மற்றும் அறிவு, இவ்விரண்டையும் முற்றிலும் வித்தியாசமான விஷயங்களாக நாம் பிரித்து விட முடியாது. காரணம், இவை நெருக்கமான விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. ஆவியானவரின் ஒன்பது வரங்களையும் குறித்து நாம் ஆராய்ந்து கற்றுக் கொண்டு வருகின்றோம். அவற்றுக்கிடையே ஒன்றையொன்று வேறுபடுத்திப் பார்க்கும்படி நாம் முயற்சிக்கவில்லை. அவை வானவில்லின் நிறங்களைப் போல இருக்கின்றன: ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு. ஒரு வானவில்லின் நிறங்களைக் கண்டறிவது சுலபமானதுதான். ஆனால் ஊதா எங்கே முடிகின்றது, கருநீலம் எங்கே ஆரம்பிக்கின்றது என்ற அந்தக் குறிப்பிட்ட புள்ளியை உங்களால் சொல்ல முடியாது. கருநீலம் எங்கே முடிகின்றது, நீலம் எங்கே ஆரம்பிக்கின்றது என்பதை உங்களால் வரையறுக்க முடியாது. அவை ஒன்றோடொன்று கலந்திருக்கின்றன.

ஆவிக்குரிய வரங்களைக் குறித்தும், நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கிற மற்ற ஆவிக்குரிய விஷயங்களைக் குறித்தும் இது உண்மையாயிருக்கிறது. ஞானம் மற்றும் அறிவு என்ற விஷயங்களை தனித்தனியாகப் பேசுவதில் எந்தத் தவறுமில்லை. ஆனால் அவை

சந்திக்கின்ற புள்ளிகளும் உண்டு. எங்கே ஞானம் முடிகின்றது, எங்கே அறிவு ஆரம்பிக்கின்றது என்ற புள்ளியை உங்களால் ஒருபோதும் சொல்ல முடியாது. “இது ஞானத்தின் வார்த்தையா அல்லது அறிவை உணர்த்தும் வார்த்தையா ?” என்ற கேள்வி உங்களுக்குள் எழக்கூடிய நேரங்களும் உண்டு. பெரும்பாலான நேரங்களில், அங்கே ஒன்று இருக்கும்போது, இன்னொன்றும் வந்து விடுகின்றது.

ஞானத்திற்கும், அறிவுக்கும் இடையே உள்ள பிரதானமான வித்தியாசம் இதுதான்: அறிவு, நமக்கு உண்மைகளைக் கொடுக்கிறது. அந்த உண்மைகளைக் கொண்டு, என்ன செய்ய வேண்டும் என்பதை ஞானம் நமக்கு வெளிப்படுத்துகிறது. இவ்வுலகத்தில் உங்களிடம் எல்லா ஞானமும் இருந்து, உண்மைகள் எதுவும் இல்லையென்றால், உங்களால் அதை நேரடியாகப் பயன்படுத்த முடியாது. மறுபுறத்தில், எல்லா உண்மைகளையும் நீங்கள் அறிந்து, உங்களிடம் ஞானம் இல்லையென்றால், நீங்கள் அவற்றைக் கொண்டு, தவறான காரியத்தைத்தான் செய்வீர்கள்.

### ஞானத்தின் வார்த்தை

ஞானத்தின் வார்த்தையைப் பேசும் வரம் என்பது என்ன ? தேவனுடைய ஒட்டுமொத்த ஞானத்தின் ஒரு மிகச் சிறிய பகுதி, பரிசுத்த ஆவியானவரால், நேரடியாக, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் அருளப்படுகிறது. “ஒருவனுக்கு ஆவியானவராலே ஞானத்தைப் போதிக்கும் வார்த்தை கொடுக்கப்படுகிறது,” என்று 1 கொரிந்தியர் 12:8 சொல்கிறது. தேவனிடத்தில் சர்வ ஞானமும் இருக்கின்றது. ஆனால் நல்ல வேளையாக, தேவன் தம்முடைய ஞானம் முழுவதையும் ஒரேயடியாக உங்களிடமும் என்னிடமும் கொடுத்து விடுவதில்லை. காரணம், அது நம்மை மூழ்கடித்து விடும். இந்த வரம், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வழிமுறையின் மூலம் நமக்குக் கொடுக்கப்படுகிறது. காரணம், இயற்கையான வழிமுறைகள் மூலம் இதை நாம் பெற முடியாது. பரிசுத்த ஆவியானவரே இதை நமக்கு அருளுகின்றார். நமக்கு நாமே இதை ஒருக்காலும் பெற்றுக் கொள்ள முடியாது.

*13. “ஞானத்தின் வார்த்தை” என்றுதான் பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ‘ஞானத்தின் ஒரு வார்த்தை’ என்று கிரேக்க மூல மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இது ஞானத்தின் வார்த்தையைப் பேசும் வரமாக இருந்தாலும், இது விசுவாச வரத்தைப்போலவே இருக்கின்றது. தேவனிடம் சர்வ ஞானமும் இருக்கின்றது. ஒரு*

*சூழ்நிலையில், நமக்கு ஞானம் தேவைப்படுகிறது. இயற்கையான வழிமுறைகளின் மூலம், அது நமக்குக் கிடைக்கவில்லை. அந்த நிலையில், தேவனே நமக்கு ........................................... ஒரு ஞானத்தின் வார்த்தையைத் தருகின்றார். அவருடைய சொந்த ஞானத்திலிருந்து ஒரு கடுகு விதையளவு நமக்குத் தருகின்றார்.*

*14. இந்த ஞானம் நமக்கு ஒரு ............................ கொடுக்கிறது. என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதை இது நமக்கு வெளிப்படுத்துகிறது.*

## *வேதவசனத்தில் தேவனுடைய ஞானத்தின் வார்த்தைகள் வெளிப்பட்ட நிகழ்வுகள்*

❖ மீன்கள் மற்றும் மனுஷரைக் குறித்த ஞானத்தின் வார்த்தைகள் - எங்கே மீன்களைப் பிடிக்கும்படி வலைகளைப் போட வேண்டும் என்று இயேசு சீமோன் பேதுருவிடம் சொன்ன சம்பவம், லூக்கா **5:4-10** வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. எங்கே மீன் பிடிக்க வேண்டும் என்பதைக் குறித்த வழிகாட்டுதலைக் கொடுக்கும் தேவனுடைய ஞானத்தின் வார்த்தையையே இயேசு அவனுக்குக் கொடுத்தார். அவன் அந்த வார்த்தையைப் பின்பற்றி நடந்தபோது, வலை கிழியத்தக்க அளவில் அவன் மீன்களைப் பிடித்தான். அவனுடன் சேர்ந்து மீன் பிடித்த யாக்கோபு மற்றும் யோவானின் உதவியோடு, அவர்களுடைய படகிலும் மீன்களை நிரப்பினான். அவர்களால் எல்லா மீன்களையும் படகுகளில் நிரப்ப முடியவில்லை. அவர்களுடைய படகுகள் மூழ்க ஆரம்பித்தன.

❖ வெற்றி பவனியைக் குறித்த ஞானத்தின் வார்த்தை - மத்தேயு **21:1-7** வசனங்களை வாசித்துப் பாருங்கள். எருசலேமிற்குள் அவர் வெற்றி பவனி செல்லும்படி, ஒரு கழுதையை எங்கேயிருந்து கொண்டு வர வேண்டும் என்பதைக் குறித்து இயேசு தம் சீஷர்களிடம் சொன்னார். சகரியா **9:9**-ல் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இது செய்யப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. வேதவசனங்கள் மூலம், தேவனுடைய ஆவியானவர் வழியாக, அந்த நாளுக்கான தேவனுடைய திட்டம் என்ன என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் ஏறி பயணிக்கும்படி, ஒரு கழுதைக்குட்டி அங்கே இருந்தது என்பது அவருக்குத் தெரியும். அந்தக் கழுதைக் குட்டி எங்கே இருந்தது என்பதை அவர் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட்டின் வழியாக அறிந்திருந்தார்.

பிறகு அவர் தம் சீஷர்களை அந்த இடத்திற்கு நேராக அனுப்பினார். வேதவசனத்தைக் குறித்து இயேசுவுக்கு இருந்த அறிவிலிருந்துதான், இந்த ஞானத்தின் வார்த்தை வெளிப்பட்டது. வேதவசனங்களைக் குறித்த அறிவுதான், வெளிப்பாட்டின் வரங்களுக்கு அடிப்படையாய் இருக்கிறது.

❖ ஊழியத்தைக் குறித்த ஞானத்தின் வார்த்தை - நம்முடைய அடுத்த எடுத்துக்காட்டில், மிகவும் நெருக்கடியான ஒரு நடைமுறைப் பிரச்சனை, ஞானத்தின் வார்த்தையினால் தீர்க்கப்பட்டதை பார்ப்போம். அப்போஸ்தலர் நடபடிகள் 6:1-4 வசனங்களில், ஒரு பிரச்சனையைக் குறித்து வாசிக்கின்றோம். ஆதித் திருச்சபையில் ஒரு பிரிவினை உண்டாகக்கூடிய சூழ்நிலை உருவானது. அரமாயிக் அல்லது எபிரெய மொழியைப் பேசும் யூதக் கிறிஸ்தவர்களுக்கும் (எபிரெயர்களுக்கும்), கிரேக்க மொழியைப் பேசும் யூதக் கிறிஸ்தவர்களுக்கும் (ஹெலினிஸ்ட்ஸ்) இடையே பிரிவினை உண்டாகக்கூடிய சூழ்நிலை உருவானது. ஆகையால் பரிசுத்த ஆவியான வர் அப்போஸ்தலர்களுக்கு ஞானத்தின் வார்த்தையைக் கொடுத்தார். அவர்கள் தங்களுடைய பிரதானமான ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும். மற்ற விசுவாசிகள், சபையாரிலிருந்து ஏழு பேரை தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களை பந்தி விசாரிப்பு பணிக்காக, அப்போஸ்தலர்கள் நியமிக்க வேண்டும்.

❖ எந்தச் சாலை என்பதைக் குறித்த ஞானத்தின் வார்த்தை - அப்போஸ்தலர் நடபடிகள் 8:26-30 வசனங்களில், சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியத்தில் நிகழ்ந்த சம்பவத்தை வாசிக்கின்றோம். ஆவிக்குரிய மண்டலத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவம், எங்கே மீன் பிடிக்க வேண்டும் என்று இந்த பூமிக்குரிய மண்டலத்தில் இயேசு தம் சீஷர்களிடம் சொன்ன நிகழ்வோடு அப்படியே ஒத்திருக்கிறது. இரதத்தை நோக்கிச் செல்லும்படி பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவிடம் சொன்னார். பிலிப்பு வழிகாட்டுதலை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டான். இந்த வழிகாட்டுதலை கொடுத்ததன் மூலம், யாருக்கு சுவிசேஷம் சொல்ல வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அந்த நபருக்கு மிகவும் அருகாமையில், கூப்பிடுதூரத்தில், அவர் பிலிப்புவைக் கொண்டு சென்றார். இந்த முழு நிகழ்வும் தேவனால் ஆயத்தம் செய்யப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலியைக் குறித்த மிகவும் முக்கியமான தீர்க்கதரிசனம் ஏசாயா 53-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதை வாசித்துக் கொண்டிருந்த அந்த நபர் அதற்கான பதிலை அறிய விரும்பினான். அதற்காக அவன் ஏங்கினான். பிலிப்புவும் அதை அவனுக்கு விளக்கிச் சொல்லி, இரட்சிப்பிற்கு நேராக அவனை நடத்தினான்.

❖ தேவன் இரட்சிக்க விரும்புகிற நபர்களைக் குறித்த ஞானத்தின் வார்த்தை - அப்போஸ்தலர் நடபடிகள் 10:9-16 வசனங்களை வாசித்துப் பாருங்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியத்தில், எப்பொழுது எங்கே செல்ல வேண்டும் என்ற வழிகாட்டுதலைப் பெற்றுக் கொள்வதற்கு, ஞானத்தின் வார்த்தையைப் பேசும் வரம் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை இந்த நிகழ்வு நமக்கு சுட்டிக் காண்பிக்கிறது. ரோம நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு, செசரியா எனும் பட்டணத்திலே வாழ்ந்து வந்தான். அவன் தேவனுக்கு முன்பாக உண்மையாய் வாழ்ந்து வந்தான். ஒரு தூதன் ஒரு தரிசனத்தில் அவனுக்குத் தோன்றினான். யோப்பாவிலிருந்த சீமோன் பேதுருவிடம் ஆட்களை அனுப்பும்படி தூதன் சொன்னான். தேவன் பேதுருவை, அவனுடைய தனிப்பட்ட விருப்பம், அபிமானம், பின்னணி மற்றும் அவன் பெற்றிருந்த பயிற்சிக்கு எதிராக வழிநடத்தினார். ஒரு புறஜாதி மனுஷனுடைய வீட்டிற்கு சுவிசேஷச் செய்தியைக் கொண்டு செல்லும்படி, தேவன் அவனிடம் சொன்னார்.

நியாயப்பிரமாணம் மற்றும் கிருபையைக் குறித்த ஞானத்தின் வார்த்தை - அப்போஸ்தலர் நடபடிகள் 15-ல், ஒரு மிக முக்கியமான, இக்கட்டான பிரச்சனையைக் குறித்து விவாதிக்கும்படி எருசலேமில் சபையார் எல்லோரும் கூடி வந்ததைக் குறித்து வாசிக்கின்றோம். சபைக்குள் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் பெருகிக் கொண்டிருந்த புறஜாதி கிறிஸ்தவர்களைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதுதான் அந்த விவாதம். 13-18 வசனங்களில், யாக்கோபு ஞானத்தின் வழிகாட்டுதல் உள்ள வார்த்தைகளைப் பேசினான். ஆமோஸ் 9:11-12 என்ற பழைய ஏற்பாட்டு வேதவசனங்களைக் குறித்து அவனுக்கிருந்த அறிவின் அடிப்படையில் அவன் அந்த ஞானத்தின் வார்த்தைகளைப் பேசினான். திரும்பவும் சொல்கிறேன், ஞானத்தின் வார்த்தைகள் எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறிவின் அடிப்படையில்தான் இசைந்தே செல்கின்றன. 19-20 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிற இந்த ஞானத்தின் வார்த்தை, எளிமையான நான்கு நிபந்தனைகளைச் சொல்கின்றது. இது கூடியிருந்த சபையாருக்குள் முழுமையான ஒருமனப்பாட்டைக் கொண்டு வந்தது.

செல்ல வேண்டிய இடத்தைக் குறித்த ஞானத்தின் வார்த்தை - ஊழியத்தில் வழிகாட்டும் ஞானத்தின் வார்த்தையைக் குறித்த கடைசி எடுத்துக்காட்டு இது. இது பவுலின் இரண்டாம் மிஷனரி பயணத்தின்

போது நிகழ்ந்தது. அவரும் சீலாவும், இன்று ஆசிய மைனர் என்று அறியப்படுகிற ஒரு இடத்திற்குச் சென்றிருந்தனர். முதல் மிஷனரி பயணத்தில், பவுலும் பர்னபாவும் சென்றிருந்த இடங்களின் வழியாக, அவர்கள் திரும்பவும் அப்பொழுது கடந்து சென்றிருந்தனர். அங்கிருந்து அடுத்து எங்கே செல்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

அப்போஸ்தலர் நடபடிகள் 16:6-10 வசனங்களில், மிக முக்கியமான ஒரு சம்பவத்தை நாம் வாசிக்கின்றோம். ஆசிய மைனர் பகுதியின் மேற்கு கடற்கரையில் இருந்த ஆசிய மாகாணத்தை நோக்கித்தான் அவர்கள் சென்று கொண்டிருந்தனர். ஆனால் அங்கு செல்ல வேண்டாம் என்று பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் சொன்னார். “உலகமெங்கும் சென்று, எல்லோருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்,” என்று இயேசு தம் சீஷர்களிடம் சொல்லியிருந்தார் (மாற்கு 16:15). ஆனால் இவர்கள் இங்கு ஆசிய மாகாணத்திற்குள் செல்ல முயற்சிக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரோ, வேண்டாம் என்று சொல்கிறார். பிறகு அவர்கள் வடக்கு திசையில் சென்று, கருங்கடலின் தெற்கு கரையோரம் இருந்த பித்தினியா நாட்டுக்குப் போகலாம் என்று நினைத்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் ‘வேண்டாம்’ என்று சொன்னார். அப்பொழுது அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் வடமேற்கு பக்கமாய் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் மக்கெதோனியா செல்ல வேண்டும் என்று தேவன் அவர்களுக்குக் காண்பித்தார். மக்கெதோனியாவில் அவர்கள் தேவனுடைய மகா வல்லமையான கிரியையைக் கண்டார்கள். அங்கே செல்லும்படி தேவன் கொடுத்த வழிகாட்டுதலுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் அங்கே சென்றபடியால், தேவனுடைய வல்லமையான கிரியையைக் கண்டார்கள். அங்கே கதவு திறந்திருந்தது. ஜனங்களுடைய இருதயம் திறந்திருந்தது. வழி, அங்கே அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

## அறிவை உணர்த்தும் வார்த்தை

ஞானத்தின் வார்த்தை என்பது பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுகிற தேவனுடைய ஒட்டுமொத்த ஞானத்தின் ஒரு சிறிய பகுதி என்று டெரிக் விளக்கம் கொடுத்தார். அறிவை உணர்த்தும் வார்த்தைக்கும் அதே போன்றதொரு விளக்கம் இருக்கின்றது. அது பரிசுத்த ஆவியானவரால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அருளப்படுகிற தேவனுடைய ஒட்டுமொத்த அறிவின் ஒரு சிறிய பகுதியாய் இருக்கின்றது. “வேறொருவனுக்கு அந்த ஆவியானவராலேயே அறிவை உணர்த்தும்

வசனம் கொடுக்கப்படுகிறது," என்று 1 கொரிந்தியர் 12:8 சொல்கிறது.

ஞானத்தின் வார்த்தையைப்போலவே, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட அறிவு என்பது நம்முடைய கல்வியறிவு மற்றும் பயிற்சியின் மூலமாகவோ, மூளையறிவு சார்ந்த வாதங்கள் மூலமாகவோ வருவதில்லை. இது நேரடியாக பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்கு உண்டாகிறது. இது முழுமையாக தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் மட்டுமே நடக்கின்றது. என்னுடைய சித்தத்தின்படி நான் தீர்மானித்து, அறிவை உணர்த்தும் வார்த்தையை நான் பெற்று விட முடியாது. எனக்கு அறிவு தேவையாயிருக்கலாம். தேவனிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ளும்படி நான் ஆயத்தமாயிருக்கலாம். என் இருதயத்தை திறந்து வைத்திருக்கலாம். ஆனால் அவர் அதைக் கொடுப்பதென்பது, முற்றிலும் அவருடைய கரங்களில்தான் இருக்கின்றது.

## வேதவசனத்தில் அறிவை உணர்த்தும் வார்த்தை வெளிப்பட்ட நிகழ்வுகள்

❖ ஒருவருடைய குணம், அவர் எங்கிருந்தார் என்பதைக் குறித்த அறிவு வெளிப்படும் வார்த்தை - இந்த முதல் எடுத்துக்காட்டின் பின்னணி இதுதான். மெசியாவாகிய இயேசுவை சந்திக்க வரும்படி, பிலிப்பு நாத்தான்வேலுக்கு அழைப்பு கொடுக்கிறான். இயேசு நாசரேத்திலிருந்து வந்திருந்தார் என்று நாத்தான்வேல் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் நாசரேத்திலிருந்து நன்மை ஏதும் வரக்கூடுமோ என்ற எண்ணம் அவனுக்குள் இருந்தபடியால், தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்ட மெசியா அந்தப் பட்டணத்திலிருந்து வருவார் என்று விசுவாசிப்பது அவனுக்குக் கடினமாக இருந்தது. ஆகையால் நாத்தான்வேல் இயேசுவிடம் வந்தபோது, நிறைய கேள்விகளோடும், சந்தேகத்தோடும், கடுமையான விமர்சனப் பார்வையோடும் வந்திருந்தான். யோவான் 1:47 சொல்கிறது: "இயேசு நாத்தான்வேலை தம்மிடத்தில் வரக் கண்டு, அவனைக் குறித்து, 'இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்,' என்றார். அதற்கு நாத்தான்வேல் சொன்ன பதில் இதுதான்: "நீர் என்னை இதற்கு முன்பு ஒருபோதும் சந்தித்ததில்லை. நான் எப்படிப்பட்ட குணமுள்ளவன் என்பது உமக்கு எப்படித் தெரியும்?" யோவான் 1:48-ம் வசனத்தை வாசியுங்கள். இயேசு அவனை நோக்கி, "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்." இதைக் கேட்டவுடன், இயேசுவைக் குறித்த அழுத்தமான ஒரு உணர்த்துதலை

நாத்தான்வேல் உடனடியாகப் பெற்றுக் கொண்டான் (49-ம் வசனம்). ஞானத்தின் வார்த்தையைக் குறித்து, நாம் பார்த்தோமே, அதே போன்றதொரு விளைவுதான் இதிலும் உண்டாகிறது.

❖ தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்த அறிவை வெளிப்படுத்தும் வார்த்தை - கிணற்றின் அருகே சமாரிய பெண்ணை இயேசு சந்தித்த நிகழ்வு, நன்கு அறியப்பட்ட ஒன்றாக இருக்கின்றது (யோவான் 4:1-26). இதுதான் அறிவை உணர்த்தும் வார்த்தையின் இரண்டாம் எடுத்துக்காட்டாக இருக்கின்றது. அவர் முதலில் அவளிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார். அது அவளுக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. அவர்கள் ஒரு உரையாடலுக்குள் சென்றனர். ஒரு கிணற்றிலிருந்து தொடர்ச்சியாக வாரியிறைக்கத் தேவையில்லாத ஜீவத் தண்ணீரைக் குறித்து அவர் அவளிடம் பேச ஆரம்பித்தார். அது மட்டுமல்ல, அவளுக்கு ஐந்து கணவர்கள் இருந்தனர் என்பதும், அப்பொழுது அவள் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த நபரோடு அவளுக்கு திருமணம் ஆகவில்லை என்பதும் தனக்குத் தெரியும் என்பதை இயேசு வெளிப்படுத்தினார். தன்னுடைய கடந்த கால விவரங்களையெல்லாம் இயேசு வேறு எவ்விதத்திலும் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்பதை அவள் நிச்சயமாக அறிந்து கொண்டாள். அவர் அந்தப் பெண்ணிடம் பேசியபோது, அவளுடைய தற்காப்பு வாதங்களெல்லாம் உடனடியாக உடைந்து நொறுங்கிப் போயின. "நிச்சயமாகவே, நீர் ஒரு தீர்க்கதரிசி," என்று அவள் சொன்னாள்.

❖ நேர்மையற்ற செயலை வெளிப்படுத்திய அறிவை உணர்த்தும் வார்த்தை - அறிவை உணர்த்தும் வார்த்தையைப் பேசும் வரத்தை நிச்சயமாக செயல்படுத்திய ஒரு நபர், அப்போஸ்தலனாகிய பேதுரு ஆவார். அது அவருடைய ஊழியத்தில் ஆதாரமாக வெளிப்பட்டது. அப்போஸ்தலர் நடபடிகள் 5:1-11 வசனங்களில், ஆதித் திருச்சபையில் நிகழ்ந்த ஒரு திடுக்கிடச் செய்யும் சம்பவத்தைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். பேதுருவின் மூலம் இந்த வரம் அங்கே வெளிப்படுகிறது. இந்தச் சூழ்நிலையின் பின்னணி இதுதான். ஆதித் திருச்சபையின் காலத்தில் வாழ்ந்த விசுவாசிகள், தங்களுடைய நிலங்களையும், மற்ற உடைமைகளையும் விற்று, அதில் கிடைக்கும் பணத்தை, சபையின் பணிக்காகவும், ஊழியத்திற்காகவும், அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்து கொடுத்தனர்.

அனனியா, சப்பிராள் என்றழைக்கப்பட்ட ஒரு தம்பதியினர் அங்கு இருந்தனர். அவர்கள் தங்களுடைய உடைமையை விற்று, அதில்

ஒரு பகுதியை தங்களிடம் மறைத்து வைத்துக் கொண்டு, ஆனால் முழு பணத்தையும் கொடுப்பதுபோல நடித்தனர். அறிவை உணர்த்தும் வார்த்தையைக் கொண்டு, பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொல்கிறார்கள் என்று பேதுரு அவர்கள் மீது குற்றஞ்சாட்டினான். அவர்கள் இருவரும் மரித்துப் போனார்கள். பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட அறிவின் பிரசன்னத்திற்கு முன்பாக இவர்கள் இருவராலும் வாழ முடியவில்லை. இன்றைக்கு எத்தனை பேர் தேவனுக்கு முன்பாக நல்லவர்களைப்போல நடித்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? உண்மையில் அவர்கள் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாகக் கொடுப்பதைப்போல மாய்மாலமாக காண்பித்துக் கொண்டு இருக்கிறார்கள்? தேவனுடைய இந்த நியாயத்தீர்ப்பு நமக்கு ஒரு எச்சரிக்கையைக் கொடுக்கிறது. பொய்யாய் ஏமாற்றி நடிக்கின்ற வர்கள் ஒவ்வொருவரையும் தேவன் இப்படித்தான் நடத்துகிறார் என்று அர்த்தமல்ல. மாறாக, மாய்மாலக்காரர்களைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார் என்பதையே இது காண்பிக்கிறது.

❖ தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஊழியக்காரனைக் குறித்த அறிவை வெளிப்படுத்தும் வார்த்தை - அப்போஸ்தலர் நடபடிகள் 9-ம் அதிகாரத்தில், அறிவை உணர்த்தும் வார்த்தையைக் குறித்த இன்னொரு எடுத்துக்காட்டை நாம் வாசிக்கின்றோம். இயேசுவை விசுவாசிக்கிறவர்களை சிறைச்சாலைக்குள் தள்ளி, தண்டிக்கும்படி, தர்சுவைச் சேர்ந்த சவுல், தமஸ்கு பட்டணத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார். சவுல் தமஸ்குவை நெருங்கியபோது, ஒரு பிரகாசமான வெளிச்சத்தில், கர்த்தராகிய இயேசு சவுலை தடுத்தி நிறுத்தினார். அவர் தம்மையே சவுலுக்கு வெளிப்படுத்தினார். சவுல் குருடாக்கப்பட்டார். அவருடைய கரத்தைப் பிடித்து, பட்டணத்திற்குள் அழைத்துச் செல்ல வேண்டியதாயிருந்தது.

தமஸ்கு பட்டணத்தில், அனனியா என்ற பெயர் கொண்ட ஒரு விசுவாசி இருந்தார். அவர் ஒரு அப்போஸ்தலர் அல்ல. அவர் ஒரு சுவிசேஷகரும் அல்ல. வேதாகமம் அவரை ஒரு 'சீஷன்' என்று அழைக்கின்றது (அப்போஸ்தலர் நடபடிகள் 9:10). பிரசங்கியார்களையும், மிஷனரிகளையும், மற்ற கிறிஸ்தவ தலைவர்களையும் தவிர, வேறு ஒருவருக்கும் தேவன் வெளிப்பாடுகளையும், வரங்களையும் கொடுப்பதில்லை என்றுதான் சிலர் விசுவாசிக்கிறார்கள். ஆனால் அறிவை உணர்த்தும் வார்த்தையின் வரத்தை தேவன் அனனியா என்ற இந்த சீஷனுக்குக் கொடுத்தார்.

10-12 வசனங்களில், சவுலின் பெயரும், விலாசமும் அனனியாவுக்குக் கொடுக்கப்பட்டதைக் குறித்து வாசிக்கின்றோம். சவுல் ஒரு தரிசனத்தில் என்ன பார்த்திருந்தார் என்பதை அவரால் அறிந்து கொள்ள முடிந்தது. ஒன்றை நாம் இங்கு கவனிக்க வேண்டும். அவர் பெற்றுக் கொண்ட அறிவின் வார்த்தையோடு, ஒரு வழிகாட்டுதலாக ஞானத்தின் வார்த்தையும் சேர்ந்து கிடைத்தது: அனனியா சவுலிடம் சென்று, தன் கரங்களை அவர் மீது வைப்பார் என்றால், அவர் தன்னுடைய பார்வையைப் பெற்றுக் கொள்வார்.

முதலில் அனனியாவிற்கு அங்கு செல்ல விருப்பமில்லை. கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும்படியே சவுல் தமஸ்குவிற்கு வந்திருந்தான் என்று சொல்லி, அனனியா தன் எதிர்ப்பை கர்த்தரிடம் தெரிவித்தான். ஆனால், "நீ போ. அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்," என்று சொல்லி, கர்த்தர் அனனியாவை இணங்கச் செய்தார் (அப்போஸ்தலர் நடபடிகள் 9:15). அனனியாவின் கீழ்ப்படிதல், சவுலை இயேசு கிறிஸ்துவுக்குள்ளும், அவர் மீதான விசுவாச நிறைவிற்குள்ளும் கொண்டு வந்தது. இது ஆதித் திருச்சபையில் காணப்பட்ட தேவனுடைய நடத்துதலின் மிக முக்கியமான ஒரு காலகட்டமாக இருந்தது.

❖ ஒன்றை உறுதிபடுத்துவதைக் குறித்த அறிவை உணர்த்தும் வார்த்தை - முந்தின பகுதியில், அப்போஸ்தலர் நடபடிகள் 10-ம் அதிகாரத்திலிருந்து ஒரு வேதப்பகுதியை நாம் பார்த்தோம். ஞானத்தின் வார்த்தைக்கான ஒரு எடுத்துக்காட்டாக நாம் இதைக் கற்றுக் கொண்டோம். செசரியாவில் வாழ்ந்த புறஜாதியாருக்குப் பிரசங்கிக்கும்படி, ஒரு தரிசனத்தின் மூலம் பேதுரு வழிநடத்தப்பட்டார். இந்த ஞானத்தின் வார்த்தையைத் தொடர்ந்து, அறிவின் வார்த்தை வெளிப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். பெரும்பாலும் இந்த இரண்டு வரங்களும் ஒன்றாய் சேர்ந்து வேலை செய்கின்றன என்று டெரிக் சொல்லியிருக்கிறார். பேதுருவுக்கு இந்தத் தரிசனம் கிடைத்த பிறகு, செசரியாவில் வாழ்ந்த கொர்நேலியுவின் வீட்டிலிருந்து வந்தவர்கள், கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்கள். பேதுரு இன்னும் மேல்வீட்டறையில்தான் இருந்தார். அவன் அங்கே ஜெபித்துக் கொண்டிருந்தார், தரிசனத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அப்போஸ்தலர் நடபடிகள் 10:19-21 வசனங்களை வாசிப்போம்: பேதுரு அந்த தரிசனத்தைக் குறித்து சிந்தனை பண்ணிக் கொண்டிருக்கையில்,

ஆவியானவர், “இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூட போ. நானே அவர்களை அனுப்பினேன்,” என்று அவனுக்குச் சொன்னார். அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப் போய், “இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான். நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன ?” என்றான்.

அந்த மனுஷர்கள் அங்கே வந்திருக்கிறார்கள் என்பதையோ அல்லது யார் அவர்களை அனுப்பினார்கள் என்பதையோ பேதுரு கேட்டு அறிந்து கொள்வதற்கு முன், பரிசுத்த ஆவியானவர் பேதுருவிடம் சொல்லி விட்டார். சற்று முன், பேதுரு ஒரு தரிசனத்தில் பெற்றுக் கொண்ட காரியத்தை உறுதிப்படுத்தும் விதமாக, இந்த அறிவை உணர்த்தும் வார்த்தை அமைந்தது. இந்த நிலையில், கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்று, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அதிக அளவு அழுத்தத்தை தேவன் பேதுருவின் மீது வைக்க வேண்டியதாயிருந்தது. காரணம், ஒரு புறஜாதி மனுஷனுடைய வீட்டிற்குச் சென்று, சுவிசேஷம் அறிவிப்பதென்பது, பேதுருவினுடைய சுபாவத்திற்கும், பின்னணிக்கும், அவர் வளர்ந்த விதத்திற்கும் முரண்பட்டதாக இருந்தது. ஆகையால், ஞானத்தின் வார்த்தையைத் தொடர்ந்து, அறிவை உணர்த்தும் வார்த்தை வெளிப்படுகிறது. முதலில் கொடுக்கப்பட்ட ஞானத்தின் வார்த்தையை உறுதிப்படுத்தும் விதத்தில், அறிவை உணர்த்தும் வார்த்தை செயல்படுகின்றது.

❖ ஆயத்தப்படுத்தும்படி கொடுக்கப்பட்ட அறிவின் வார்த்தை - அப்போஸ்தலர் நடபடிகள் 20-ம் அதிகாரத்தில், பவுல் எருசலேமுக்குச் செல்லும் வழியில், எபேசு சபையின் மூப்பர்களை அவர் சந்தித்தார் என்று வாசிக்கின்றோம். அவருடைய பிரயாணத்தின் இடையில் அவர் சந்தித்த சபைகளின் விசுவாசிகளில் பலர், அவரைக் குறித்த அறிவை உணர்த்தும் வார்த்தையை பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்றுக் கொண்டனர் என்று அவர் அவர்களிடம் அப்பொழுது சொன்னார். பவுல் அவர்களிடம் இவ்வாறு சொன்னார்: “இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். அங்கே எனக்கு நேரிடும் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்” (அப்போஸ்தலர் நடபடிகள் 20:22-23). நமக்கு விவரங்கள் தெரியவில்லை. ஆனால் ஒவ்வொரு பட்டணத்திலும், பவுல் விசுவாசிகளை சந்திக்கும்படி கூடும்போது, “கட்டுகளும்,

உபத்திரவங்களும்” அவருக்காக எருசலேமில் காத்திருக்கின்றன என்று பரிசுத்த ஆவியானவர் அவரை எச்சரிக்கின்றார்.

## ஆவிகளைப் பகுத்தறிதல்கள்

*15. பகுத்தறிதல் என்றால், ஒன்றிற்கும் இன்னொன்றிற்கும் இடையே உள்ள வித்தியாசங்களை இனங்கண்டறிவதாகும். ஆவிகளை ............................ என்பது, ஆவிகளுக்கு இடையே உள்ள வித்தியாசங்களை இனங்கண்டறிவதாகும். இது ஆவிக்குரிய விதத்தில் நடக்க வேண்டிய ஒன்றாகும்.*

பகுத்தறிதல், வித்தியாசமான வழிகளில் நடக்கின்றன. சில நேரங்களில், அது ஒரு தரிசனம்போல வருகின்றது. உண்மையில், ஒன்றை நீங்கள் அதில் பார்க்கின்றீர்கள். ஆனால் வெளியே அது இல்லை. இரண்டு முக்கியமான எடுத்துக்காட்டுகளை நாம் வேதவசனங்களில் பார்க்க முடியும். யோவான் ஸ்நானகன், புறாவின் வடிவில் பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது இறங்கி வருவதைப் பார்த்தான் (யோவான் 1:32-34). இரண்டாவது எடுத்துக்காட்டை, வெளிப்படுத்தின விசேஷம் 16:13-14 வசனங்களில் வாசிக்க முடியும். அப்போஸ்தலனாகிய யோவானுக்கு ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டது. தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள், வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து புறப்பட்டு வருவதை அவன் கண்டான்.

## பகுத்தறிதலை வளர்த்துக் கொள்ளுதல்

பகுத்தறிதலைக் குறித்த மிகவும் முக்கியமான ஒரு உண்மையைக் குறித்து எபிரெயர் 5:14 சொல்கிறது. இது எல்லா வரங்களைக் குறித்தும் பல்வேறு விஷயங்களில் உண்மையாக இருக்கிறது. “பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானோந்திரியங்களை உடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.”

நம்மில் வெகு சிலரே, முதல் முறை வரங்களை பயன்படுத்த ஆரம்பிக்கும்போது, அதை மிகச் சரியாகச் செய்கிறார்கள். ஆனாலும் சரியான பயிற்சியின் மூலம், நாம் அவற்றைக் குறித்து சரியாகப் புரிந்து கொண்டு, அவற்றை ஒழுங்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலைக்கு நம்மால் வர முடியும். எல்லாவற்றையும் ஒழுங்காக, கச்சிதமாகச் செய்ய

வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். முதல் முறை செய்யும்போதே, அதை மிகச் சரியாகச் செய்ய வேண்டும் என்று இவர்கள் நினைப்பார்கள். அப்படிச் செய்ய முடியவில்லை என்றால், அவர்கள் அதை ஒருபோதும் செய்ய மாட்டார்கள். ஆவியான வரின் வரங்களைப் பயன்படுத்துவதைக் குறித்த விஷயத்தில், இது பலருக்கு ஒரு பிரச்சனையாக இருக்கின்றது. ஏசாயாவைப்போல தங்களால் தீர்க்கதரிசனம் சொல்ல முடியவில்லை என்றால், அவர்கள் தீர்க்கதரிசனமே சொல்ல மாட்டார்கள். இதுதான் அவர்களது எண்ணம். இது உண்மையில் முட்டாள்தனம். ஏசாயா எப்படி ஆரம்பித்தான் என்பது யாருக்குத் தெரியும்?

குறிப்பாக, பகுத்தறிதலை நாம் பண்படுத்தி, வளர்க்க முடியும். நன்மை, தீமையை பகுத்தறியக்கூடிய விதத்தில், நாம் நம் உணர்வுகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதன் முக்கியத்துவத்தைக் குறித்து எபிரெயர் 5:14 சொல்கிறது. உங்களுடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் பிரயாணத்தில், சாத்தான் வைத்திருக்கிற ஒவ்வொரு கண்ணியிலும் நீங்கள் விழுவீர்கள் என்றால், அது தேவனுக்கு மகிமையைக் கொண்டு வராது. அதேபோல, நேர்மையான ஒரு நபருக்கும், மாய்மாலம் செய்து ஏமாற்றுகிற ஒரு நபருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை பகுத்தறியத் தெரியாமலும் இருப்பதும், தேவனுக்கு மகிமையைச் செலுத்தாது. நமக்குக் கிடைக்கும்படி தேவன் வைத்திருக்கிற பகுத்தறிதலை நம்மில் பலர் ஒழுங்காக பயன்படுத்திக் கொள்வதில்லை. இது தேவனை கனயீனம் செய்கின்றது.

## ஆவிகளை பகுத்தறிதல் என்றால் என்ன?

ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தோடு சம்பந்தப்பட்ட சில விளக்கங்களை நாம் பார்ப்போம். முதலில், இந்த வரம், தீய ஆவிகளைப் பகுத்தறிதலை மட்டும் சுட்டிக் காண்பிக்கவில்லை. கிறிஸ்தவ ஜீவியத்தில், நாம் சந்திக்கின்ற ஆவிகள், பல வகையைச் சேர்ந்தவைகளாய் இருக்கின்றன:

❖ பரிசுத்த ஆவியானவர் (தேவனுடைய ஆவியானவர்)

❖ நல்ல தூதர்கள்

❖ விழுந்துபோன, தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்யும் தூதர்கள் (பிசாசுகள் அல்லது தீய ஆவிகள்)

❖ மனுஷனுடைய ஆவி (ஒவ்வொரு மனுஷனும் தனக்குள் ஆவியை உடையவனாயிருக்கிறான்).

இரண்டாவதாக, 'பகுத்தறிதல்கள்' என்று பன்மையில் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், ஒவ்வொரு பகுத்தறிதலும், இந்த வரத்தின் ஒரு செயல்பாடாக இருக்கின்றது என்று அர்த்தம். சுகமளிக்கும் வரங்களையும், அற்புதங்களைச் செய்யும் வரங்களையும்போல, இது ஆவிகளைப் பகுத்தறியும் வரங்களாக இருக்கின்றது. ஒவ்வொரு சுகமும், ஒவ்வொரு அற்புதமும் வரத்தின் ஒரு செயல்பாடாக இருப்பதுபோல, ஒவ்வொரு பகுத்தறிதலும் இருக்கின்றது. மூன்றாவதாக, ஆவிகளைப் பகுத்தறியும் வரம், தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றது. நம்முடைய விருப்பப்படி, இதைப் பயன்படுத்த முடியாது.

## *ஆவிகளைப் பகுத்தறிதல்களைக் குறித்து வேதவசனங்களில் எழுதப்பட்ட நிகழ்வுகள்*

**(1) பரிசுத்த ஆவியானவரை பகுத்தறிதல்**

*(அ) புறாவின் வடிவில் காணப்பட்டார் - யோவான் 1:29, 31-33 வசனங்களில், யோவான் ஸ்நானகனுடைய வார்த்தைகள் தெளிவாகச் சொல்கின்றன. புறாவின் வடிவில், பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது இறங்கியதைக் கண்டேன் என்று அவன் சொல்கிறான். அங்கிருந்த மற்ற வர்கள் அந்த தரிசனத்தைப் பார்க்கவில்லை. இந்தப் பகுத்தறிதல் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில், குறிப்பாக, யோவானுக்குக் கொடுக்கப்பட்டது. காரணம், அது அவனுக்குத் தேவையாயிருந்தது. இதன் மூலம், யார் மெசியா என்பதை அவன் அறிந்து கொண்டான்.*

*(ஆ) அக்கினி நாவுகள் - அப்போஸ்தலர் நடபடிகள் 2-ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவர், அக்கினி நாவுகள் என்ற வடிவத்தில், அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தார் என்று வாசிக்கின்றோம். 3-4 வசனங்களை வாசிப்போம்: "அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் (இயேசுவினுடைய சீஷர்கள் ஒவ்வொருவர் மேலும்) வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்." இது பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு*

*அப்பாற்ப்பட்ட விதத்தில், வெளிப்பட்ட ஒரு நிகழ்வாகும். பரிசுத்த ஆவியானவர் அந்த அக்கினி நாவுகள் அல்ல. அவர் அவ்விதத்தில் வெளிப்பட்டார்.*

**(2) தூதர்களை அடையாளம் கண்டறிதல்**

*(அ)* **மனுஷ குமாரன் மேல் ஏறுகிற, இறங்குகிற தூதர்கள்** *- யோவான் 1:50-51 வசனங்களை வாசித்துப் பாருங்கள்: இயேசு நாத்தான்வேலுக்குப் பிரதியுத்தரமாக, "அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்? இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய். வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும், இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்." இது தூதர்களை அடையாளம் கண்டறிவதைக் குறித்த ஒரு முக்கியமான குறிப்பாயிருக்கிறது.*

*(ஆ)* **கெத்சமேனே தோட்டத்தில்.......** *- இயேசுதாமே இங்கு தேவதூதர்களின் பிரசன்னத்தைக் கண்டு உணருகின்றார். அவருடைய ஊழியத்தின் முடிவில், அவர் கைது செய்யப்பட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்பு, அவர் கெத்சமேனே தோட்டத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார். துக்கம் மிகுந்த நிலையில், அவர் ஜெபித்தார். "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரை (இயேசுவை) பலப்படுத்தினான்," என்று லூக்கா 22:43 சொல்கிறது. இந்த நிகழ்விலிருந்து ஒன்றைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. இயேசு ஒருவர் மட்டுமே அந்த தூதனை ஆவிக்குரிய பகுத்தறிதல் மூலம் கண்டார். மற்றவர்கள் அங்கிருந்தாலும், அவர்கள் அந்த தூதனைப் பார்க்கவில்லை.*

*(இ) உயிர்த்தெழுதலில்........ - இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, மகதலேனா மரியாள் தூதனைக் கண்டாள். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவானால் அல்லது அப்போஸ்தலனாகிய பேதுருவால் அந்தத் தூதனைப் பார்க்க முடியவில்லை (யோவான் 20:1-12).*

*(ஈ) கடலில் ஆபத்தான பிரயாணம் செய்தபோது - அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், பவுல் ஒரு கைதியாய்*

*ஒரு கப்பலில் கொண்டு போகப்படுவதைக் குறித்து நாம் வாசிக்கிறோம். பெருங்காற்று மழையில் அவர்கள் அகப்பட்டார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் 27:18 சொல்கிறது. மெலித்தா என்ற தீவின் அருகே தப்பிக் கரை சேர வேண்டிய நேரமாய் அது இருந்தது. கடும் புயல் அடித்த அந்த மோசமான சூழ்நிலையின் மத்தியில், பவுல் எழுந்து நின்று, கடந்த இரவில் ஒரு தூதனைப் பார்த்தேன் என்று கப்பலில் இருந்த மற்றவர்களிடம் சொன்னான் (22-26 வசனங்கள்). அங்கிருந்தவர்களில் பவுல் மட்டுமே, தூதர்களைக் குறித்த அறிவும் உணர்வும் உடையவனாய் இருந்தான். தூதனுடைய வார்த்தைகள், 100 சதவீதம் அங்கே உறுதிப்படுத்தப்பட்டன.*

**(3) மனுஷருடைய ஆவிகளைப் பகுத்தறிதல்**

*(அ)* **இயேசு மனுஷருடைய இருதயங்களை அறிந்திருந்தார்** *- யோவான் 2-ம் அதிகாரத்தில் இயேசுவைக் குறித்து வேதவசனம் என்ன சொல்கிறது என்பதைக் கவனிப்போம்: “பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும்,* **இயேசு எல்லோரையும் அறிந்திருந்தபடியால்,** *அவர்களை நம்பி இணங்கவில்லை.* **மனுஷருடைய உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்,** *மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை” (யோவான் 2:23-25). இயேசுவை ஒருவரும் ஏமாற்ற முடியாது. மனுஷனுக்குள்ளே கண்களால் காண முடியாத எண்ணங்களையும் அவரால் பார்க்க முடியும்.*

*(ஆ) பேதுருவும், சீமோன் என்ற மாயவித்தைக்காரனும் - அப்போஸ்தலர் நடபடிகள் 8-ம் அதிகாரத்தில், பகுத்தறியும் வரத்தைப் பயன்படுத்தி, பேதுரு எவ்வாறு சீமோன் என்ற மாயவித்தைக்காரனை கையாண்டான் என்று வாசிக்கின்றோம். சீமோன் அந்த சமாரியா பட்டணத்தில், தன்னுடைய மாந்திரீக, மாயவித்தைகளால் அங்கு வாழ்ந்தவர்கள் மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தான். பிலிப்பு பிரசங்கித்த சுவிசேஷத்தை அவன் கேட்டான். பிலிப்புவினால் நடந்த அற்புத அடையாளங்களைக் கண்டு, அவன் பிரமித்தான். அவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு, ஒரு சீஷனாகவும்*

*மாறினான். பிறகு பேதுருவும், யோவானும் அங்கே வந்தார்கள். அவர்கள் அங்கே மனந்திரும்பியவர்களுக்காக ஜெபித்தார்கள். அப்போஸ்தலர்கள் இருவரும் அவர்கள் மீது கைகளை வைத்தார்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் பிரத்தியட்சமாய், தம் வல்லமையோடு அவர்கள் மீது இறங்கினார். அப்போஸ்தலர் நடபடிகள் 8:18-23 வசனங்களை வாசித்துப் பாருங்கள். சீமோனுடைய இருதயத்தில் இருந்த தவறான நோக்கங்களையும், அவனுக்குள் இருந்த நேர்மையற்ற தன்மையையும், கபடத்தையும் பேதுரு இந்த வரத்தின் மூலம் பார்த்தான். சீமோன் முன்பே அங்கு இருந்தபோதிலும், பிலிப்பு அவனுக்குள் இருந்த இந்தத் தீமையைப் பார்க்கவில்லை என்பது உண்மை. சீமோனின் உள்ளான தீய சுபாவத்தின் வெளிப்பாடு, பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டது.*

(இ) பவுலும், முடமான மனுஷனுடைய விசுவாசமும் - அப்போஸ்தலர் நடபடிகள் 14-ம் அதிகாரத்தில், முடமான ஒரு மனுஷனுக்குள் இருந்த விசுவாசத்தை பவுல் பகுத்தறிந்த சம்பவத்தை நாம் வாசிக்கின்றோம். இந்த அதிகாரத்தின் 8-10 வரையுள்ள வசனங்களை வாசிப்போம்: "லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனை பவுல் உற்றுப் பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு, 'நீ எழுந்து காலூன்றி, நிமிர்ந்து நில்,' என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்."

அது ஒரு பெரிய கூட்டமாக இருந்திருக்க வேண்டும். பவுல் தன் பிரசங்கத்தின் நடுவில் ஒரு மனுஷனைப் பார்க்கிறார். அவனுக்குள் இருந்த விசுவாசத்தையும் அவர் காண்கிறார். அவர் தன் பிரசங்கத்தின் நடுவில், "எழுந்து, உன் கால் ஊன்றி நில்!" என்று அந்த மனுஷனைப் பார்த்து சொன்னார். அந்த மனுஷனும் விசுவாசத்தில் எழுந்து நின்று, நடக்க ஆரம்பித்தான். இந்த அற்புதத்தில், பவுல் பரிசுத்த ஆவியானவரையோ அல்லது தீய ஆவிகளின் கிரியைகளையோ பார்க்கவில்லை. மாறாக, ஒரு மனுஷனுக்குள் இருந்த விசுவாசத்தை அவர் கண்டார்.

*(4) தீய ஆவிகளை பகுத்தறிதல் - இயேசுவின் ஊழியத்தில், இந்த வரம், சுகமளிக்கும் ஊழியத்தோடு தொடர்புடைய விதத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. சுவிசேஷ நூல்களில், சரீர*

*வியாதிகள் பெரும்பாலும் தீய ஆவிகளின் கிரியைகளாகத்தான் சுட்டிக் காண்பிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றன. இது குறிப்பிடத்தக்க முக்கியமான ஒரு விஷயமாகும்.*

*(அ) ஊமை மற்றும் செவிடு, தீய ஆவிகளின் கிரியைகள் - ஊமையாயிருந்த ஒரு மனுஷனை இயேசு சுகமாக்கின அற்புதம்தான், முதல் எடுத்துக்காட்டு. மத்தேயு 9:32-33 வசனங்களை வாசித்துப் பாருங்கள்: "அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். பிசாசு துரத்தப்பட்ட பின்பு, ஊமையன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, 'இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை,' என்றார்கள்." ஒரு தீய ஆவிதான், பேச முடியாதபடி அவனை ஒரு ஊமையாக்கி வைத்திருந்தது என்பதை இயேசு பகுத்தறிந்து கொண்டார். அதுதான் அவனுடைய குரல் நாண்களை பயன்படுத்த விடாதபடி, அவனைத் தடுத்துக் கொண்டிருந்தது. இயேசு அந்த தீய ஆவியைத் துரத்தியபோது, அந்த மனுஷன் உடனடியாகப் பேசினான். தீய ஆவிகள்தான் எல்லா ஊமை நிலைக்கும் காரணமாக இருக்கின்றன என்ற முடிவுக்கும் நாம் வர முடியாது. ஆனால் இந்தச் சம்பவத்தில், தீய ஆவி இதன் பின்னணியில் இருந்தது. இயேசு அதை அறிந்து கொண்டார். இவ்வகையான பகுத்தறிதலுக்கு இன்னும் நிறைய பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. ஒரு முக்கியமான எடுத்துக்காட்டை, மாற்கு 9:17-27 வசனங்களில் பார்க்க முடியும். ஊமையும் செவிடுமான ஆவியை இயேசு இந்த அற்புதத்தில் கண்டறிந்தார்.*

*(ஆ) கூனியாக்கி வைத்திருந்த தீய ஆவி - ஒரு பெண்ணை பதினெட்டு வருடங்களாக பெலவீனப்படுத்தி வைத்திருந்த ஒரு தீய ஆவி, இன்னொரு எடுத்துக்காட்டாய் இருக்கிறது. லூக்கா 13:11-17 வசனங்கலை வாசித்துப் பாருங்கள். இயேசு அதைக் கண்டறிந்து, அந்த பெலவீனப்படுத்தும் ஆவியை துரத்தினார். அந்த ஆவி அவளைக் கட்டி வைத்திருந்தது என்று இயேசு சொன்னார். அந்த தீய ஆவியின் வல்லமையிலிருந்து அவள் விடுதலையாக்கப்பட்டவுடன், உடனடியாக அவள் சுகமானாள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்த ஆவி*

*அவளை விட்டு வெளியேறியவுடன், அந்தக் கணமே அவளால் நிமிர்ந்து நிற்க முடிந்தது. அவளை சுகமாக்கும்படி, அவளுடைய பெலவீனத்திற்கான காரணத்தை முதலில் இயேசு அறிந்து கொள்ள வேண்டியிருந்தது.*

*(இ) குறி சொல்லும் ஆவி - நாம் பார்க்கப் போகும் கடைசி எடுத்துக்காட்டு, பிலிப்பி பட்டணத்தில் பவுலும் சீலாவும் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது நிகழ்ந்த சம்பவமாகும். அப்போஸ்தலர் நடபடிகள் 16:16-18 வசனங்களை வாசிப்போம்: "நாங்கள் ஜெபம் பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின் தொடர்ந்து வந்து, 'இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர். இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்,' என்று சத்தமிட்டாள். இப்படி அநேக நாள் செய்து கொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப் பார்த்து, 'நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்,' என்று அந்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று."*

அந்தப் பெண் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் உண்மை. சுவிசேஷம் பிரசங்கித்த இவர்களைக் குறித்து அவள் விளம்பரம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அதை ஒரு தீய ஆவி அவள் மூலமாகச் செய்து கொண்டிருந்தது. பவுல் இதை பகுத்தறிந்து கொண்டவராய், அந்த ஆவியை அவளை விட்டு வெளியே துரத்தினார். இன்றைக்கு நமக்கும் அதே பகுத்தறியும் திறன் இருக்க வேண்டும். குறி சொல்லும் பிசாசுகள் சபையில் நிறைய இருக்கின்றன. டெரிக் சென்ற இடங்களிலெல்லாம், நல்ல 'ஆவிக்குரிய' சபை போன்று தெரியக்கூடிய இடங்களிலும், அவர் பில்லிசூனிய, மாந்திரீக, குறிசொல்லும் பிசாசுகளை எதிர்கொண்டிருக்கிறார். ஜாதகம், ஜோதிடம் மற்றும் ஒளஜா பலகை போன்றவைகள் மூலம் கிறிஸ்தவர்கள் தங்களையே முட்டாள்களாக்கிக் கொண்டதை இவர் கண்டிருக்கிறார். அவர்கள் குறி சொல்லும் இதே பிசாசின் பிடிக்குள் சிக்கியிருக்கிறார்கள்.

**ஆவிகளைப் பகுத்தறிவதால் உண்டாகும் விளைவுகள்**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒரு ஒழுங்கின் கீழ் இயங்குவதற்கு, ஆவிகளைப் பகுத்தறியும் இந்த வரம் மிகவும் முக்கியமானது. இந்த வரம் பயன்படுத்தப்படும்போது, விசுவாசிகள், பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உணருகின்றன. தேவன் செயல்படுகிற விதங்களையும் அவர்கள் அறிந்து கொள்கின்றனர். இந்த வரம், மனுஷருடைய இருதயங்களில் இருக்கும் நோக்கங்களையும், மனுஷருடைய குணங்களையும் வெளிப்படுத்துகிறது. அது மட்டுமல்ல, வியாதிகள் மற்றும் சண்டை சச்சரவுகளுக்குக் காரணமான தீய ஆவிகளையும் இது அடையாளம் காணச் செய்கிறது. கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையில், ஆவிகளைப் பகுத்தறியும் வரம் முழு வீச்சில் செயல்படும்பொது, அது சபைக்கும், இவ்வுலகத்திற்கும் தேவையான மிக முக்கியமான ஒரு ஊழியத்தைச் செய்கிறது.

**வல்லமை மற்றும் வெளிப்பாட்டின் வரங்களைப் பயன்படுத்துதல்**

'குரல் வரங்கள்' என்ற முந்தின பாடத்தில் செய்ததைப்போல, இந்தப் பாடத்திலும் டெரிக், இந்த வரங்களில் சிலவற்றை எவ்வாறு நடைமுறையில் பயன்படுத்துவது என்பதை ஆச்சரியமான விதத்தில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். ஆவியானவரின் வரங்களை பயன்படுத்த வேண்டுமென்றால், பரிசுத்த ஆவியானவருக்கு உணர்வுள்ளவர்களாய் நாம் வாழ வேண்டும். அதோடு தைரியமும், ஊக்கமும் நமக்குள் இருக்க வேண்டும். சில நேரங்களில், நாம் செய்யும்படி தேவன் நம்மிடம் எதிர்பார்க்கின்ற காரியங்கள் அந்த நேரத்தில் விசித்திரமாகத் தெரியலாம். ஆனால் நாம் உண்மையாய், தேவனுக்குக் கீழ்ப்படிந்து செயல்படும்பொது, அவருடைய ஆவியானவரின் ஆச்சரியமான கிரியைகளை, வெளிப்பாடுகளை நாம் பார்ப்போம். தேவனுடைய ராஜ்யம் இந்தப் பூமியில் நிறுவப்படுவதையும் நாம் பார்ப்போம்.

ஆவியானவரின் வரங்களைச் செயல்படுத்துதல் என்ற இந்த செய்தித்தொடர் இத்துடன் முடிவடைகின்றது. ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தின் இன்னும் பல முக்கியமான அம்சங்களை, நாம் தொடர்ந்து நம் வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டு, வளருவோம்.

398-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/18**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி ஒன்று>>*

# அறிக்கையிடுதலின் வல்லமை4320

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

எபேசியர் நிருபத்தில், தேவன் தம்முடைய ஜனங்களைக் குறித்து, ஏழு வித்தியாசமான படங்களைக் கொடுத்திருக்கிறார். இது நமக்கு ஆச்சரியமான ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. அவையாவன: எக்லேஷியா அல்லது அரசாங்க கூடுகை, கிறிஸ்துவின் சரீரம், தேவனுடைய சிறந்த கைவேலைப்பாடு, குடும்பம், ஆலயம், மணவாட்டி, ராணுவம்.

எபேசியர் 1:22-ல், 'சபை' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை, 'எக்லேஷியா' என்ற வார்த்தையாகும். இதிலிருந்துதான் 'எக்லேஷியாலஜி' என்ற ஆங்கில வார்த்தை நமக்குக் கிடைத்திருக்கிறது. 'எக்லேஷியா' என்ற பெயர்ச்சொல், 'அழைக்கப்பட்ட' என்ற அர்த்தமுடைய ஒரு வினைச்சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய ஜனக்கூட்டத்திலிருந்து அழைக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட்ட ஜன ங்களைத்தான் இது குறிக்கின்றது. ஒரு விசேஷமான நோக்கத்திற்காக அழைக்கப்பட்ட ஜனங்களை, சபையை இது குறிக்கின்றது. நாம் தேவனுடைய விசேஷமான நோக்கத்திற்கென்று, இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பதன் மூலம், இவ்வுலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றைய புதிய ஏற்பாட்டுக் காலத்தில், கிரேக்க மொழியின் உலக வழக்கில், எக்லேஷியா என்ற வார்த்தைக்கு மிகவும் விசேஷமான ஒரு அர்த்தம் உண்டு. "அரசாங்க கூடுகை" என்பது இதன் அர்த்தமாகும். வேதவசனத்தில், தேவனுடைய ஒழுங்கின்படி தேவனுடைய ஜனங்கள் கூடி வரும்போது, அவருடைய ஜனங்களின் அந்தக் கூடுகையை குறிக்கும்படி வழக்கமாக பயன்படுத்தப்படுகிற பெயர், 'சீயோன்' என்பதாகும். சீயோனை க் குறித்தும், விசுவாசிகளாகிய நமக்கு சீயோனோடு இருக்கும் நம் உறவைக் குறித்தும் வேதவசனம் என்ன சொல்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்:

*[22]நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், [23]பரலோகத்தில் பெயர் எழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், [24]புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும், நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.*

(எபிரெயர் 12:22-24)

இது எதிர்காலத்தில் நடக்கப் போகிற ஒரு நிகழ்வல்ல என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். “நீங்கள் இவ்விடத்திற்கு வெகு சீக்கிரத்தில் வரப் போகின்றீர்கள்,” என்று இந்த நிருப ஆசிரியர் எழுதவில்லை. நீங்கள் ஏற்கனவே இங்கு வந்து விட்டீர்கள் என்றுதான் அவர் சொல்கிறார்! தேவனுடைய அரசாங்கத்தின் கூடுகையில் நாம் ஏற்கனவே ஒரு அங்கமாக இருக்கின்றோம். இதன் ஒரு பகுதி பரலோகத்திலும், இதன் ஒரு பகுதி பூமியிலும் இருந்தாலும், நாம் எல்லோரும் இந்த ஒரு கூடுகையில் ஒன்றாய் கூடி வந்திருக்கிறோம். “இந்த சந்தோஷக் கூடுகையில் அல்லது கொண்டாட்டக் கூடுகையில், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களும் இணைந்திருக்கிறார்கள்,” என்று நியூ இன்டர்நேஷனல் மொழிபெயர்ப்பு சொல்கிறது. இது உன்னத தமான மகிமையும், கனமும் நிறைந்த ஒரு கூடுகையாயிருக்கிறது. இங்கு அதிகாரமும் இருக்கிறது. இதுதான் சீயோனைக் குறித்த படமாய் இருக்கிறது. நாம் இதில் ஒரு அங்கமாய் இருக்கிறோம்!

இயேசு கிறிஸ்துவின் மீது நம் விசுவாசத்தை வைப்பதன் மூலம், இந்த முழு பிரபஞ்சத்தையே நிர்வகிக்கிற தேவனுடைய முக்கியமான அரசாங்க கூடுகையின் ஒரு அங்கமாய் நாம் இருக்கிறோம். இந்தக் கூடுகையின் தலையாகிய இயேசு கிறிஸ்து, பிதாவாகிய தேவனுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கிறார். சபையோராகிய நாம் (இந்தக் கூடுகையின் ஒரு அங்கமாய் இருக்கிற தேவனுடைய ஜனங்களாகிய நாம்), இந்தப் பூமியில், தேவனுடைய அதிகாரத்தை உடையவர்களாய், அவருடைய பிரதிநிதிகளாய் இருக்கின்றோம். இப்பொழுது நமக்குள் எழ வேண்டிய கேள்வி இதுதான்: “தேவன் நமக்குத் தந்திருக்கிற இந்த மிக

முக்கியமான அதிகாரத்தை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?" இந்தக் கேள்விக்கான பதிலை, டெரிக் பிரின்ஸின் இந்த முக்கியமான, வல்லமையான போதனையில் நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இந்தப் போதனையின் வழியாகக் கடந்து செல்லும்போது, திரை விலகும். தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் மற்றும் வல்லமையை முற்றிலும் புதிய வழியில், நீங்கள் நிச்சயமாக பார்க்க ஆரம்பிப்பீர்கள். அவருடைய ஜனங்களாகிய நாம், "தேவனுடைய கோலாக" அதைப் பயன்படுத்தி, எவ்வாறு நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், நம்முடைய குடும்பங்களிலும், நம்முடைய சபைகளிலும், நம்முடைய சமுதாயத்திலும், நம்முடைய தேசத்திலும், இன்னும் மற்ற தேசங்களிலும் எவ்வாறு மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்பதையும் நிச்சயமாகப் பார்போம். பரிசுத்த ஆவியானவரின் உந்துதல் மற்றும் வழிநடத்துதலின்படி, நாம் வேதவசனத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்து அறிக்கை செய்யும்போது, தேவனுடைய வார்த்தையும் அவருடைய ஆவியானவரும் ஒன்றாய் சேர்ந்து அங்கே கிரியை செய்கின்றனர். எல்லாவற்றையும் சிருஷ்டித்த அதே வல்லமை, நாம் அறிவித்து அறிக்கை செய்த வார்த்தைகளுக்கும் இருக்கின்றது.

விசுவாசத்தோடும், தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஆழமான மரியாதையோடும், பயபக்தியோடும், நாம் வருகின்றோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஆர்வமும், செயல்தீவிரமும், மென்மையான உணர்வும் நமக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் அதை அகங்காரத்தோடு, தற்பெருமையோடு அணுக மாட்டோம். தேவனுடைய வார்த்தைக்கு வல்லமை இருக்கிறது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் உந்துதல் மற்றும் வழிநடத்துதலின்படி நாம் அதைப் பயன்படுத்தவில்லை என்றால், நாம் பிரச்சனைக்குள் சிக்கிக் கொள்வோம். காரணம், நமக்கு போதுமான அதிகாரம் இருக்காது. அப்போஸ்தலர் நடபடிகள் 19:11-17 வசனங்களில், இயேசுவின் வல்லமையை அதற்குரிய அதிகாரம் இல்லாமல் பயன்படுத்த முயற்சித்த ஸ்கேவா என்பவனுடைய ஏழு குமாரர்களைக் குறித்து நாம் வாசிக்கின்றோம்:

*[11]பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். [12]அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர் மேல் போட, வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன. [13]அப்பொழுது தேசாந்தரிகளாய் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து, 'பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பெயரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்,' என்றார்கள். [14]பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள்.*

*[15]பொல்லாத ஆவி அவர்களை நோக்கி, 'இயேசுவை அறிவேன். பவுலையும் அறிவேன். நீங்கள் யார்?' என்று சொல்லி,*

*[16]பொல்லாத ஆவியை உடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும், காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள். [17]இது எபேசுவில் குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரிய வந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.*

இயேசுவிடம் அதிகாரம் இருக்கிறது. பவுலிடமும் அதிகாரம் இருந்தது. ஆனால் ஸ்கேவா என்பவனுடைய மகன்களிடம் அதிகாரம் இல்லை. சட்டப்படியான அதிகாரம், சரியான உறவின் ஐக்கியத்திலிருந்து வருகின்றது. ஆகையால் இயேசுவோடும், தேவனுடைய வார்த்தையோடும், அவருடைய பரிசுத்த ஆவியானவரோடும் சரியான உறவின் ஐக்கியத்தில் நாம் இணைந்திருக்கும்போது, அவருடைய சார்பில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும்படி அவர் நமக்கு அதிகாரம் கொடுக்கிறார். டெரிக் இவ்வாறு சொல்கிறார்:

*ஒரு சூழ்நிலைக்குள் தேவனுடைய அதிகாரத்தை கட்டவிழ்த்து விடுவதற்கு மிகச் சிறந்த ஒரு வழி, விசுவாசத்திலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் கீழும் இருந்து, அதை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதாகும். காரணம், ஒன்றை நினை வில் வைத்துக் கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தை,*

*அதன் சுவாசமாகிய ஆவியானவருடன் சேர்ந்து செல்ல வேண்டும். இவ்விரண்டும் சேர்ந்து செல்லும்போது, அதாவது, தேவனுடைய ஜீவசுவாசமாகிய ஆவியானவர் நம்முடைய வாயிலிருந்து வல்லமையாய் தேவனுடைய வார்த்தையை புறப்படச் செய்யும்போது, நம்மால் அதை ஒரு சூழ்நிலைக்குள் கட்டவிழ்த்து விட முடியும். அந்தச் சூழ்நிலையில், சர்வ வல்ல தேவனுடைய அதிகாரத்தோடு அது வல்லமையாய் கிரியை செய்கிறது.*

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

*1. அதிகாரப்பூர்வமாக அறிவித்தல் என்ற வினைச்சொல், ஒரு லத்தீன் வார்த்தையிலிருந்து வருகின்றது. இதன் அர்த்தம், ............................. சொல்வதாகும்.*

*2. அறிக்கை செய்தல் அல்லது அறிக்கை என்றால், ...................... சொல்வதாகும்.*

*3. வேதாகமத்தின்படி, விசுவாசிகளாகிய நமக்கு, அறிக்கை என்றால், தேவன் தம்முடைய வார்த்தையில் ஏற்கனவே என்ன சொல்லியிருக்கிறாரோ, அதையே நம் .......................... திரும்பச் சொல்வதாகும். நாம் நம்முடைய வாயின் வார்த்தைகளை தேவனுடைய வார்த்தையுடன் ஒத்திசைந்திருக்கச் செய்கின்றோம். இயேசுவின் முழு வல்லமை மற்றும் அதிகாரத்தைப் பெறும்படி, இவ்விதத்தில் நாம் நம்மையே ஆயத்தப்படுத்திக் கொள்கிறோம்.*

*4. எபிரெயர் 3:1-ல், நம்முடைய "அறிக்கையின் பிரதான .................." என்று இயேசு அழைக்கப்படுகிறார். நாம் அறிக்கை செய்யவில்லை என்றால், நமக்கு பிரதான ஆசாரியர் எவரும் இல்லை என்று இது நமக்குச் சொல்கிறது.*

*5. இயேசுவின் விசுவாசிகளாகிய நம்மைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறதோ, அதையே நாமும் சொல்லும்போதெல்லாம், பரலோகத்தில் நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிற இயேசு தம்முடைய ............................, தம்முடைய ஆசீர்வாதத்தையும் நமக்கு கட்டவிழ்த்து விடுகிறார். ஆனால் நாம் அமைதியாய் இருப்போம் என்றால், பிரதான*

*ஆசாரியராய் அவர் நமக்குச் செய்கிற ஊழியத்தை நாம் தடுத்து நிறுத்தி விடுகிறோம். அது மட்டுமல்ல, நாம் தவறான அறிக்கையைச் செய்வோம் என்றால், இன்னும் மோசமான ஒரு சூழலை நாம் உருவாக்கி விடுகிறோம். எதிர்மறையான சக்திகள் நம்மைச் சூழ்ந்து கொண்டு, நம் மீது ஆளுகை செய்யும்படி நாம் அவைகளுக்கு அழைப்பு கொடுத்து விடுகின்றோம்.*

*6. மேலும், அதிகாரப்பூர்வமாக அறிவித்தல் என்றால், உறுதியான முனைப்போடு அறிக்கை செய்தல் என்றும் சொல்ல வேண்டும். அறிக்கை செய்தல் அல்லது அறிவித்தல் என்பது, ஒரு ஆவிக்குரிய .......................... - இது தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை ஒரு சூழ்நிலைக்குள், நம்முடைய வாழ்க்கைக்குள், ஒரு சபையின் சூழலுக்குள், ஒரு அரசியல் சூழ்நிலைக்குள் கட்டவிழ்த்து விடுகின்றது.*

தேவனுடைய வல்லமை கட்டவிழ்க்கப்பட வேண்டிய சூழ்நிலைகள், இன்று நம் முன் நிறையவே இருக்கின்றன. உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையோ, உங்களுடைய குடும்பமோ, உங்களுடைய சபையோ, உங்களுடைய தேசமோ, இன்னும் சூழ்நிலை வேறு எதுவாயிருந்தாலும், அதற்குள் அறிக்கை செய்து, தேவனுடைய வார்த்தையைக் கட்டவிழ்த்து விடுவதைக் காட்டிலும் மேலான, சிறந்த ஒரு தீர்வு இருக்க முடியாது.

*7. அறிவித்தல், ஒரு .......................... வேலையாயிருக்கிறது. பாரம்பரியமாக, கட்டியக்காரன் என்பவன் ஒரு ராஜாவிடமிருந்தோ அல்லது ஒரு பிரபுவிடமிருந்தோ அல்லது உயர் பதவியிலிருக்கும் ஒரு அதிகாரியிடமிருந்தோ அதிகாரம் பெற்றவனாய், செல்ல வேண்டிய அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று, அந்த ஆட்சியாளனுடைய சித்தத்தையும், முடிவையும் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் அறிவிப்பான்.*

*8. பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் இது தெளிவாக இல்லையென்றாலும், பிரசங்கித்தல் என்ற வார்த்தைக்கு, கட்டியம் கூறுதல் என்ற வார்த்தைதான் உண்மையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு 'அறிவித்தல்' என்று அர்த்தம். எடுத்துக்காட்டிற்கு, டெரிக், மத்தேயு 24:14-ம் வசனத்தை பயன்படுத்தியிருக்கிறார்: "ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும்*

*சாட்சியாக பிரசங்கிக்கப்படும் (அறிவிக்கப்படும்). அப்பொழுது முடிவு வரும்.''*

*9. டெரிக், நம்முடைய வேதாகமத்தை மோசேயின் கோலோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் (யாத்திராகமம் 4:1-5, 17). பாலைவனத்தில் தேவன் மோசேயை சந்தித்த அந்த நிகழ்வில், அவனுடைய கோல் ஒரு பாம்பாக மாறியது. இதில் மூன்று முக்கியமான விஷயங்கள் காணப்படுகின்றன. இவை நம்மையும், தேவனுடைய வார்த்தையையும் தொடர்புபடுத்திக் காட்டுகின்றன:*

*(அ) மோசே தன் கையிலிருந்த அந்தக் கோலுடைய .................... அறியாதவனாயிருந்தான். அவ்வளவு வல்லமையை அவன் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை, கற்பனை செய்யவுமில்லை.*

*(ஆ) தேவனுடைய கட்டளையின்படி, மோசே தன் கோலை கீழே போட்டான். அது ஒரு பாம்பாக மாறியது. அதைக் கண்டு, அவன் .............................. - அவன் அதை விட்டு விலகி ஓடினான் என்று வேதவசனம் நமக்குச் சொல்கிறது.*

*(இ) யாத்திராகமம் புத்தகத்தின் எஞ்சிய பகுதி முழுவதும், மோசேயின் கோல், அவனுடைய .............................. அடையாளமாக மாறியது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கிடைத்த விடுதலை, அந்தக் கோலினால் நிறைவேறியது. ஒவ்வொரு முறையும், மோசே தன் கோலினை உயர்த்தியபோது, தேவன் அங்கே இடைபட்டார்.*

*10. ......................., இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு புத்தகம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மோசேயின் கோலைப்போல, இதற்குள் வல்லமை இருக்கின்றது. முதல்முறை நீங்கள் இதைப் பார்க்கும்போது, அது தெரியாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் இதைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கும்போது, உண்மையில் இதன் வல்லமையை ஒரு எல்லைக்குள் அடக்கி வைக்க முடியாது என்பதை உணருவீர்கள்.*

## தேவனுடைய வார்த்தையின் வல்லமை

*11. சங்கீதம் 33:6 சொல்கிறது: "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் ........................ அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது." இவ்வசனத்தில், 'சுவாசம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை, 'ஆவி' என்ற அர்த்தமுடைய வார்த்தையாகும். தேவனுடைய வார்த்தையும், தேவனுடைய ஆவியானவரும் இணைந்துதான் எல்லாவற்றையும் சிருஷ்டித்தனர் என்பதை இது வெளிப்படுத்துகிறது. இதுவரை இருந்த ஒவ்வொன்றும், இப்பொழுது இருக்கின்ற ஒவ்வொன்றும், இனி இருக்கப் போகிற ஒவ்வொன்றும் இந்த இரண்டு சக்திகளைத்தான் தங்களுடைய ஆரம்பமாகக் கொண்டிருக்கின்றன, கொண்டிருக்கும்.*

**2** பேதுரு **3:5-7** வசனங்களில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிப்போம்: "பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலை கொண்டிருக்கிற பூமியும் உண்டாயின என்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு, அழிந்து போகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது."

*12. இந்த வேதப்பகுதியிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்கின்றோம். தேவனுடைய வார்த்தையினால், ........................ பூமியும் உண்டாக்கப்பட்டன. தேவனுடைய வார்த்தையினால், அவை இந்த நிலையில் காக்கப்படுகின்றன. தேவனுடைய நேரம் வரும்போது, தேவனுடைய வார்த்தையினால், இவை அழிந்து போகும். ஆக, தேவனுடைய வார்த்தை, சிருஷ்டிக்கிறது, காக்கிறது, அழிக்கின்றது.*

*13. ஏசாயா 55:10-11 வசனங்களில் தேவன் இவ்வாறு சொல்கிறார்: "என் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தையும் அப்படி இருக்கும்." வேறு வார்த்தைகளில் அதை இவ்வாறு சொல்லலாம்: "என் வார்த்தை, என் .......................... வேகமாக முன்னோக்கி செல்லும்.*

*14. 2 கொரிந்தியர் 3:6-ம் வசனத்தில், "....எழுத்து கொல்லுகிறது...." என்று பவுல் எழுதுகிறார். சுவாசமில்லாமல், ஆவியானவர் இல்லாமல் பேசப்படுகிற வெற்று வார்த்தையினால், ஜீவனைக் கொண்டு வர முடியாது. காரணம், தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளதாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையும், ...................... சேர்ந்து செயல்பட வேண்டும். ஒரு பிரசங்கம் முழுவதும் வேதவசனங்களால் நிரம்பியிருக்கலாம். ஆனால் அதில் ஆவியானவரின் சுவாசம் இல்லையென்றால், அது உலர்ந்த, வெறுமையான ஒரு பிரசங்கமாயிருக்கும். அதில் ஜீவன் இருக்காது. அது மரணத்தைத்தான் கொண்டு வரும்.*

தேவனுடைய வார்த்தையை அதிகாரப்பூர்வமாக அறிவித்தல், அதை ஒரு சூழ்நிலைக்குள் கட்டவிழ்க்கின்றது. அதற்கு தைரியமும், நம்பிக்கையும் அவசியமாயிருக்கிறது. இது கோழைகளுக்குரிய விஷயம் கிடையாது. நீங்கள் உங்களுடைய மனதில் ஒரு உறுதியான தீர்மானத்தை எடுத்து இவ்வாறு சொல்ல வெண்டும்: "நான் இதை விசுவாசிக்கிறேன். இது தேவனுடைய வார்த்தை. நான் இதைச் சொல்லும்போது, என் இருதயத்தில் விசுவாசித்து, என் வாயினால் அறிக்கை செய்வேன் என்றால், தேவனே இதைச் சொன்னால் என்ன நடக்குமோ, அது அங்கே நடக்கும். பரிசுத்த ஆவியானவர் என் மூலம் அதைச் சொல்லும்போது, அங்கே அவ்வளவு மகத்தான வல்லமை வெளிப்படும். உங்களால் இதை விசுவாசிக்க முடிகின்றதா? தேவன் அங்கே பேச வேண்டியதில்லை. தேவனுடைய ஆவியானவர், தேவனுடைய வார்த்தையை உங்களுடைய வாயின் மூலம் வேகமாக புறப்படச் செய்யும்போது, இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கும்படி தேவன் பேசின சமயத்தில் வெளிப்பட்ட அதே வல்லமை இப்பொழுதும் வெளிப்படும்.

## *தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குங்கள்*

யாத்திராகமம் 4-ம் அதிகாரத்திற்குத் திரும்பிச் செல்வோம். எரிகின்ற முட்செடியில் தோன்றின தேவனை மோசே சந்தித்தான். அங்கு நாம் பார்க்கின்ற முதல் விஷயம், அவன் பயந்தான் என்பதுதான். அவன் தன் கோலை கீழே போட்டான். அது ஒரு பாம்பாக மாறியது. அவன் அதை விட்டு விலகி ஓடினான். அதிகாரப்பூர்வமாக அறிவிக்கின்ற விஷயத்தில் நாம் நல்ல பலன்களைக் கொடுக்க வேண்டுமென்றால், தேவனுடைய வார்த்தைக்குப் பயப்படுவதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குவதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

*15. ஏசாயா 66:1-2 வசனங்களில், தேவனுடைய ................ பெற்றுக் கொள்கிற மனுஷன் யார் என்று கர்த்தர் நமக்குச் சொல்கிறார். "............... சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்." மோசேயைப்போல, முதலில், நாம் தேவனுடைய வார்த்தைக்குப் பயந்து, நடுங்க வேண்டும்.*

*16. நாம் ஏன் தேவனுடைய வார்த்தைக்கு முன் பயந்து நடுங்க வேண்டும் என்பதற்கான இரண்டு காரணங்களை யோவான் சுவிசேஷம் நமக்குக் காண்பிக்கிறது:*

*(அ) யோவான் 12:47-48 வசனங்களை வாசிப்போம். இயேசு அதில் இவ்வாறு சொல்கிறார்: "ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமல் போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை. நான் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் தள்ளி, என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற ஒன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்."*

தேவனுடைய வார்த்தை, நம்முடைய .................. - ஒவ்வொரு முறையும் நாம் வேதாகமத்தைத் திறந்து, அதை வாசிக்கும்போது, ஒரு நாள் நம்மை நியாயந்தீர்க்கப் போகிற அதே வசனத்தைத்தான் இப்பொழுது நாம் வாசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே நாம் பயந்து நடுங்க வேண்டும் என்று இது சொல்வதில் எந்த ஆச்சரியமுமில்லை.

*(ஆ) யோவான் 14:23-ல், இயேசு இன்னொரு ஆச்சரியமான வாக்கியத்தைப் பேசுகிறார்: "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்."*

*நாம் வேதாகமத்தைத் திறந்து, அதில் எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையை நாம் விசுவாசிப்போம் என்றால்,*

*பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுவும் நம்மிடம் வந்து, தங்களுடைய ................................ நம்மை ஆக்கிக் கொள்வர். தேவனுடைய வார்த்தையைக் குறித்த பிரமிப்பு கலந்த பயபக்தியை நாம் வெளிப்படுத்தும்போது, நம்முடைய வாழ்க்கையில் அதன் சம்பூரண நன்மைகளையும் நாம் பெறுவோம்.*

## *தேவனுடைய வார்த்தையை உறுதியாய் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்*

மோசே செய்த இரண்டாவது காரியம், அந்தக் கோலை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொண்டான். விசுவாசத்தினால், அவன் அதைப் பற்றிப் பிடித்தபோது, அது திரும்பவும் ஒரு கோலாக அவனுடைய கரத்தில் மாறியது. ஆகையால் நாம் நடுங்குவதோடு நின்று விடாமல், தேவனுடைய வார்த்தையை உறுதியாய் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளவும் வேண்டும்.

*17. சங்கீதம் 149-ம் அதிகாரம், 5-ம் வசனத்திலிருந்து வாசித்துப் பாருங்கள். ................................ கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிற வர்களைக் குறித்து, சங்கீதக்காரன் ஆச்சரியமான சில வாக்கியங்களைத் தொடர்ந்து எழுதியிருக்கிறான். இருபுறமும் கூர்மையான பட்டயம் நம் கையில் இருக்க வேண்டும் என்றும், தேவனை உயர்த்தும் உன்னதமான துதி நம் வாயிலும் இருக்க வேண்டும் என்று இது நமக்குச் சொல்கிறது. இவற்றைக் கொண்டு, தேசங்களை நாம் பழி வாங்க முடியும், ஜனங்களை தண்டிக்கவும் முடியும். இந்தக் காட்சியில் உங்களை வைத்து பார்க்க முடிகின்றதா?*

*18. சங்கீதம் 149-ம் அதிகாரத்தின் முடிவில், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை நாம் தேசங்களின் மீது அமல்படுத்த வேண்டும், செலுத்த வேண்டும் என்று எழுதப்பட்டிருப்பதை நாம் வாசிக்கின்றோம். "இந்தக் கனம் (அல்லது இந்த விசேஷ உரிமை) அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாவதாக," என்றும் நாம் வாசிக்கின்ரோம். தேசங்களின் மீது ..................................... செலுத்துகிற விசேஷ உரிமையை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இந்த வெளிச்சத்தில்,*

*நம்மையே நாம் பார்க்க ஆரம்பிக்கும்போது, நம்முடைய ஜெப வாழ்க்கை நிச்சயமாகவே உருமாற்றப்படும்.*

*19. எழுதப்பட்ட நியாயத்தீர்ப்புகளை நாம் செலுத்த வேண்டும் என்று இவ்வசனம் சொன்னாலும், இவை நம்முடைய நியாயத்தீர்ப்புகள் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். இவை தேவனுடைய நியாயத்தீர்ப்புகள். தேசங்கள் மீதும், அவற்றை ஆள்பவர்கள் மீதும் இவற்றைச் செலுத்தக்கூடிய விசேஷ உரிமையை தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.*

*20. தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை செலுத்தும்படி, நாம் அவற்றை ..............................................*

## *தேவனுடைய வார்த்தையை முன்னோக்கி நீட்டுங்கள்*

மோசே எகிப்துக்குத் திரும்பிச் சென்றபோது, அவன் அடுத்ததாக என்ன செய்தான்? அவன் தன் கோலை நீட்டினான். அந்தக் கோலில் இருந்த அதிகாரத்தை அவன் பயன்படுத்தினான். நாமும் அதையே செய்ய வேண்டும். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை எடுத்து, எந்தச் சூழ்நிலையில் தேவனுடைய அதிகாரம் தேவைப்படுகிறதோ, அந்தச் சூழ்நிலைக்குள், அதை நோக்கி, தேவனுடைய வார்த்தையை அனுப்ப வேண்டும். அதைச் செய்வதற்கு ஒரு சிறந்த வழி, விசுவாசத்திலும், பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் கீழும் நின்று, அதை அதிகாரப்பூர்வமாய் அறிவிக்க வேண்டும். காரணம், ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையோடு, அதன் ஜீவசுவாசமாகிய தேவனுடைய ஆவியானவரும் சேர்ந்து செல்ல வேண்டும். இவ்விரண்டும் ஒன்றாய் சேர்ந்து செல்லும்போது, அதாவது தேவனுடைய ஆவியானவர், தேவனுடைய வார்த்தையை உந்துவிசையோடு நம் வாய் மூலம் வேகமாக அனுப்பும்போது, நாம் அதை ஒரு சூழ்நிலைக்குள் வல்லமையான விதத்தில் கட்டவிழ்த்து விடுகின்றோம். சர்வ வல்ல தேவனுடைய சர்வ அதிகாரத்தையும் தனக்குள் கொண்டதாய், அது அந்தச் சூழ்நிலைக்குள் ஊடுருவிச் செல்கிறது.

*21. அது ..................... கோல் என்று அழைக்கப்பட்டாலும், மோசேதான் அதை தன் கையில் பிடித்திருந்தான். வெற்றியைக் கொண்டு வரும்படி, மோசே அதைப் பயன்படுத்தியபோது, அது தேவனுடைய கோலாய் செயல்பட்டது. தேவன் அந்தச் சூழ்நிலையில் மகிமைப்பட்டார்.*

*22. அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதற்கான ஒரு திறவுகோல், வேதவசனத்தை ............................ நமக்குரியதாக்கிக் கொள்வதாகும். எடுத்துக்காட்டிற்கும், எபிரெயர் 13:5-ல், வேதாகமம் இவ்வாறு சொல்கிறது: "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை." தேவன் சொன்ன இவ்வார்த்தைகளை தனிப்பட்ட விதத்தில் நமக்குரியதாக்கிக் கொண்டு, "தேவனே, நீர் என்னை விட்டு விலகுவதுமில்லை. நீர் என்னைக் கைவிடுவதுமில்லை," என்று நாம் அறிக்கை செய்யலாம். இது வேதாகம சத்தியத்தை எடுத்து, நம்முடைய வாழ்க்கையிலும் நம் சூழ்நிலைகளிலும் பயன்படுத்திக் கொள்வதாகும்.*

கீழ்க்காணும் பகுதியில், நேரடியாக வேதவசனங்களிலிருந்து எடுக்கப்பட்ட அறிக்கைகளை நீங்கள் பார்ப்பீர்கள். இவை செய்தியில் பயன்படுத்தப்பட்டன:

**அவநம்பிக்கையை எதிர்கொள்ளும்போது செய்ய வேண்டிய அறிக்கை:**

"கர்த்தாவே, என்னைக் குறித்து நீர் வைத்திருக்கிற திட்டங்களை நான் அறிவேன். நான் உமக்கு நன்றி சொல்கிறேன். அவை தீமையானவை அல்ல. அவை நல்ல திட்டங்கள். அவை அழிவுக்கேதுவானவை அல்ல. அவை சமாதானத்திற்கும், நல்வாழ்விற்கும் ஏதுவானவை. எனக்கு ஒரு நல்ல எதிர்காலத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கும்படி நல்ல திட்டங்களையே நீர் வைத்திருக்கிறீர். உமக்கு நன்றி. (எரேமியா 29:11)

**மரணத்தைக் குறித்த அந்தகார, எதிர்மறையான பயத்தை எதிர்கொள்ளும்போது செய்ய வேண்டிய அறிக்கை**

"நான் சாவாமல் வாழ்ந்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்." (சங்கீதம் 118:17)

**நமக்கு விரோதமான அநீதியான குற்றச்சாட்டுகளை, பேச்சுகளை, ஜெபத்தை எதிர்கொள்ளும்போது செய்ய வேண்டிய அறிக்கை:**

"நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். நமக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நாம் குற்றப்படுத்துவோம். இது கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்முடைய சுதந்தரமும், கர்த்தரால் நமக்குண்டான நீதியுமாயிருக்கிறது." (ஏசாயா 54:17)

நம்மைக் குற்றப்படுத்துகிற நாவுகளை நாம் குற்றப்படுத்த முடியும் என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். காரணம், அவர்கள் தேவனுடைய நீதியை குற்றஞ்சாட்டுகிறார்கள். அது எப்பொழுதுமே தோல்வியில் முடிகிற ஒரு யுத்தமாயிருக்கிறது.

அதற்குப் பிறகு, டெரிக்கும், ரூத்தும் இவ்வாறு சொல்வார்கள்: "எங்களுக்கு விரோதமாக பேசியவர்களை, ஜெபித்தவர்களை, எங்களுக்கு விரோதமாக தீங்கும் பொல்லாங்கும் செய்ய நினைத்தவர்களை நாங்கள் மன்னிக்கின்றோம். கர்த்தருடைய நாமத்தினால் நாங்கள் அவர்களை அசீர்வதிக்கின்றோம்."

அவர்கள் எதிர்மறையானவைகளை நேர்மறையானவைகளைக் கொண்டு இடமாற்றம் செய்கின்றார்கள். காரணம், மற்றவர்கள் உங்களை சபிக்கும்போது, நீங்கள் திரும்ப அவர்களை சபிக்காதீர்கள் என்று வேதாகமம் சொல்கிறது. மாறாக, அவர்களை ஆசீர்வதியுங்கள். தீமை உங்களை ஜெயிக்கும்படி இடம் கொடுக்காதீர்கள் என்று பவுல் எழுதியிருக்கிறார். மாறாக, தீமையை நன்மையினால் வெல்லுங்கள். தீமையை மேற்கொண்டு ஜெயிக்கக்கூடிய அளவிற்கு, நன்மைக்குத்தான் போதுமான வல்லமையும், பெலனும் இருக்கின்றது.

நம்முடைய குடும்பம் மற்றும் ஊழியங்களின் மீது நடக்கின்ற தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டிய

அறிக்கை: "எங்களுடைய கதவுகள் இரும்பு மற்றும் வெண்கலத்தினால் பூட்டப்பட்டிருக்கும். நாங்கள் பாதுகாப்பாய் இருப்போம். எங்கள் நாட்களுக்குத் தக்க பெலன் எங்களுக்கு உண்டாயிருக்கும். யெஷூரனுடைய தேவனைப்போல் ஒருவரும் இல்லை. அவர் வானங்களின் மேலும், தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறி, எங்களுக்கு உதவி செய்யும்படி வருகின்றார். அநாதி தேவனே எங்களுக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் எங்களுக்கு ஆதாரம். அவர் எங்களுக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்துவார். 'அவர்களை அழித்துப் போடு' என்று அவர் எங்களுக்குக் கட்டளையிடுவார்." **(உபாகமம் 33:25-27)**

இந்த வகையான அறிக்கையை நாம் செய்யும்போது, ஒரு விஷயத்தை முக்கியமாக நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கு நாம் மனுஷர்களைக் குறித்து பேசிக் கொண்டிருக்கவில்லை. நம்முடைய சத்துருக்கள் என்று நாம் சொல்லும்போது, வானங்களில் கிரியை செய்கின்ற தீய ஆவிக்குரிய சக்திகளைக் குறித்து நாம் பேசிக்

கொண்டிருக்கிறோம். நம்முடைய எதிரிகள், மாம்சமும் இரத்தமும் அல்ல (எபேசியர் 6:12). நம்முடைய சபை போதகர், நம் எதிரி அல்ல. கணவனோ அல்லது மனைவியோ, நம் எதிரி அல்ல. சில நேரங்களில், நாம் அப்படி நினைக்கலாம். ஆனால் அது அப்படி அல்ல! நாம் மனுஷர்களுக்கு விரோதமாக யுத்தம் செய்யவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்த ஆயுதங்கள் மிகவும் வல்லமையானவை. ஆகையால் நாம் இவற்றை சரியான சூழ்நிலையில், சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும்.

**பணத் தேவைகள், வியாதியிலிருந்து சுகம் உண்டாக வேண்டிய தேவையுள்ள சூழ்நிலைகளில் செய்ய வேண்டிய அறிக்கை**

"நாம் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாய், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாய் இருக்கும்படி, தேவன் எங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" (2 கொரிந்தியர் 9:8)

'தேவன் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்' என்ற எளிமையான வார்த்தைகள், இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவர் அதைச் செய்ய வல்லவர் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நாம் அதை விசுவாசிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. அவர் எதைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதையும் இவ்வசனம் சொல்கிறது. கிரேக்க மொழியில், 'எல்லாவற்றிலும்' என்ற அர்த்தத்தில் வருகின்ற வார்த்தை, ஐந்து முறையும், சம்பூரணம் என்ற அர்த்தமுடைய வார்த்தை, இரண்டு முறையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பவுலைக் காட்டிலும், இவ்வளவு நிறைய சம்பூரணத்தை ஒரு வசனத்திற்குள் எழுதுவதென்பது சாத்தியமற்ற விஷயமாயிருக்கிறது. இது கிருபையினால், விசுவாசத்தின் மூலம் சாத்தியமாயிருக்கிறது.

**பெலன் தேவைப்படுகிற நேரத்தில் செய்ய வேண்டிய அறிக்கை**

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலிப்பியர் 4:13).

**சுகம்**

"நாங்கள் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, இயேசுதாமே தமது சரீரத்தில் எங்களுடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் சுகமானோம்" (2 பேதுரு 2:24).

கடந்த காலத்திலேயே நமக்கு சுகம் உண்டாயிருப்பதாக இவ்வசனம்

சொல்கிறது. ஒன்றை நாம் உற்று நோக்கி கவனிக்க வேண்டும். கிறிஸ்துவின் கிருபாதார பலியில் உண்டான சுகத்தைக் குறித்து வேதாகமம் பேசும்போது, அது எதிர்காலத்தில் உண்டாகப் போகும் ஒன்று என்ற அர்த்தத்தில், வேதவசனம் ஒருபோதும் பேசுவதில்லை. இயேசு வருவதற்கு 700 வருடங்களுக்கு முன்பு, ஏசாயா சொன்னான், "அவருடைய தழும்புகளால் நாம் சுகமாகிறோம்." சிலுவையில் நம் கிருபாதார பலியாக, இயேசு மரித்த பிறகு, அதை பின்னோக்கி திரும்பிப் பார்த்து, பேதுரு இவ்வாறு சொல்லியிருக்கிறான்: "அவருடைய தழும்புகளால் சுகமானோம்."

இது முற்றிலும் ஒரு புதிய கண்ணோட்டத்தை நமக்குக் கொடுக்கிறது. அதற்காக நாம் இனி வியாதிப்படவே மாட்டோம் என்றும் இதற்கு அர்த்தமல்ல. மாறாக, வியாதியை ஜெயமாய் எதிர்கொள்ளும்படி, இது நமக்கு வித்தியாசமான ஒரு அடிப்படையைக் கொடுக்கிறது. சில நேரங்களில், இந்த அறிக்கையை நாம் தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையா அல்லது நம் வியாதியின் அறிகுறிகளா, எது அதிக நம்பகமானது ? இதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

## *தேசங்களின் பிரச்சனைகளில் தலையிடுதல்*

தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக. ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது. அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர். ராஜாக்களை தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர். இருளில் இருக்கிறதை அவர் அறிவார். வெளிச்சம் அவரிடத்தில் தங்கும். அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம். அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி, 'என்ன செய்கிறீர் ?' என்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை." (தானியேல் 2:20-22 மற்றும் தானியேல் 4:34-35 வசனங்கள்).

பாருங்கள், இதில் சில வார்த்தைகள், மெய்த் தேவனை விசுவாசியாத நேபுகாத்நேச்சார் ராஜா பேசிய வார்த்தைகளாய் இருக்கிறது. அந்த

நேரத்தில், அவன் தேவனை விசுவாசித்திருந்தான் என்று வேதவசனம் சொல்கிறது. ஆனால் நேபுகாத்நேச்சாருடைய வாழ்க்கையில் தேவன் செய்த மகத்தான கிரியையை நினைவுகூர்ந்து பாருங்கள். எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பதை மட்டும் நாம் கற்றுக் கொள்வோம் என்றால், தேவனால் எவ்வளவு மோசமான, துன்மார்க்கமான, பொல்லாத ராஜாக்களையும், ஆட்சியாளர்களையும் மாற்ற முடியும் என்பதை நாம் புரிந்து கொள்வோம். இது நமக்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது.

கர்த்தாவே, வலிமையான பராக்கிரமசாலிகளுக்கு எதிராக வலிமையற்ற நிலையில் நிற்கின்ற எங்களுக்கு உதவி செய்வதில் உமக்கு ஒப்பான வர் ஒருவருமில்லை. ஓ தேவனே, எங்கள் கர்த்தாவே, எங்களுக்கு உதவி செய்யும். எங்களுக்கு துணையாய் இரும். நாங்கள் உம்மையே நம்பியிருக்கின்றோம். இவ்வளவு பெரிய ராணுவத்திற்கு எதிராக, உம்முடைய நாமத்தில் நாங்கள் எழுந்து நிற்கின்றோம். ஓ கர்த்தாவே, நீரே எங்கள் தேவன். மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும். **(2 நாளாகமம் 14:11)**

எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் ஒருவரே தேவன். இந்தப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களையும் நீர் ஆளுகை செய்கிறீர். உம்முடைய கரத்திலே வல்லமையும், பராக்கிரமமும் இருக்கிறது. ஒருவரும் உம்மை எதிர்த்து நிற்க முடியாது. **(2 நாளாகமம் 20:6)**

பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக. உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். கர்த்தர் ஜாதிகளின் (தேசங்களின்) ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார். கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும் (தேசமும்), அவர் தமக்கு சுதந்தரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது. **(சங்கீதம் 33:8-12)**

இவையெல்லாவற்றிலும் யார் வெற்றி பெறுவார்? தேவனை கர்த்தராகக் கொண்ட தேசம்தான் இவையெல்லாவற்றிலும் வெற்றி பெறும். தேசங்கள் மற்றும் ஐக்கிய தேசங்கள் மற்றும் அரசாங்கங்களின் திட்டங்களெல்லாம் தேவனுடைய திட்டத்திற்கு முரண்பட்டவைகளாக இருக்குமென்றால்,

அவை ஒன்றுக்கும் உதவாத, நிச்சயமாக தோல்வியில் முடிவடையும் திட்டங்களாக மட்டுமே இருக்கும்.

**இஸ்ரேல் தேசத்திற்காக செய்ய வேண்டிய அறிக்கை**

ஆகாமியத்தின் (துன்மார்க்கரின்) கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின் மேல் நிலைத்திராது. (சங்கீதம் 125:3)

இந்தச் சூழ்நிலையில், துன்மார்க்கரின் கொடுங்கோல் என்பது எதைக் குறிக்கின்றது ? இஸ்லாம். நீதிமான்களுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்தரம் எது ? தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட இஸ்ரேல் தேசம்தான் அந்த சுதந்தரம். வேதாகமம் ஒன்றை தெளிவாகச் சொல்கிறது. அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும், அது ஒரு பொருட்டல்ல. அவர்கள் என்ன செய்தாலும், அது ஒரு பொருட்டல்ல. துன்மார்க்கரின் கொடுங்கோல், நீதிமான்களுக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தின் மீது நிலைத்திருக்க முடியாது என்ற வேதாகமத்தின் வார்த்தைதான் உண்மையானது.

இப்பொழுது நீங்கள் இதை விசுவாசத்தோடு சொல்ல வேண்டும். உங்களைச் சுற்றி சகலமும் நேரெதிராக நடந்தாலும், அந்த நேரத்தில்தான் நீங்கள் இதை அறிக்கை செய்ய வேண்டும். நீங்கல் அந்தக் கோலை உயர்த்தி நீட்ட வேண்டும். அப்பொழுது உங்களுடைய பாம்பு, மற்ற மந்திரவாதிகள் எல்லோருடைய பாம்புகளையும் விழுங்குவதை நீங்கள் பார்ப்பீர்கள்.

சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கி, பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள். வீட்டின் மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக. அது வளரும் முன் உலர்ந்து போகும். (சங்கீதம் 129:5-6).

யாக்கோபின் நிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரித்து, ஜாதிகளுடைய (தேசங்களுடைய) தலைவரின் நிமித்தம் ஆர்ப்பரியுங்கள். சத்தத்தைக் கேட்கப் பண்ணி, துதித்து, “கர்த்தாவே, இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும்,” என்று சொல்லுங்கள். (எரேமியா 31:7).

ஜாதிகளே (தேசங்களே), நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலை சிதறடித்தவர் அதைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள். (எரேமியா 31:10)

இந்தப் பாடத்தின் முடிவிற்கு இப்பொழுது நாம் வந்தாலும், இது

உங்களுடைய வாழ்க்கையில் உண்டாகிற ஒரு மாற்றத்தின் ஆரம்பமாக இருக்கட்டும். ஒரு பிரச்சனையை நீங்கள் எதிர்கொள்ளும்போது, அந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லையா? ஜெபியுங்கள். அந்தச் சூழ்நிலையில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டிய சரியான வேதவசனத்தைக் காண்பிக்கும்படி பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள்.

399-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/25**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி இரண்டு>>*

# நன்றி பாராட்டுதல், துதித்தல் மற்றும் ஆராதித்தல்[4267]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

ஜெபம் என்பது நம்முடைய தேவைகளையெல்லாம் ஒரு ஷாப்பிங் பட்டியல்போல ஆயத்தம் செய்து, தேவனிடம் சென்று, அவைகளைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம்தான் பலரிடம் இருக்கிறது. ஆனால் இது ஜெபத்தைக் குறித்த சரியான பார்வை கிடையாது. இது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட, ஒரு குறுகிய எல்லைக்குட்பட்ட ஜெபமாய் இருக்கிறது. ஜெபத்தை, இசைக்கருவிகள் வாசிக்கப்படுகிற ஒரு நிகழ்வோடு ஒப்பிடலாம். ஆனால் இங்கு ஒரு இசைக்கருவி அல்ல. பல இசைக்கருவிகள் ஒன்றாய் இசைந்து வாசிக்கப்படுகின்றன. ஆக, ஜெபத்தின் ஒவ்வொரு அம்சமும், ஒரு இசைக்குழுவில் வாசிக்கப்படுகிற ஒரு இசைக்கருவியைப்போல இருக்கின்றது.

ஒரு இசைக்கருவி வாசிக்கப்படுவதைக் கேட்கும்படி, அது அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் வித்தியாசமான பலவகையான இசைக்கருவிகளை ஒரு இசைக்குழுவிற்குள் கொண்டு வந்து, அவை எல்லாவற்றையும் இணைத்து வாசிக்கும்போது, அங்கே அழகான, ஒருங்கிணைந்த ஒரு இசை உருவாகின்றது. இவற்றின் மூலம், முடிவே இல்லாத விதத்தில், இன்னும் பல வகையான இசையை உருவாக்க முடியும். இசைக்கருவிகளை வாசிக்கும்படி நாம் பயிற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. அதேபோல, சரியான பலன் கொடுக்கும் ஜெபத்தை ஏறெடுக்கும்படி, நமக்கும் பயிற்சி தேவைப்படுகிறது. தேவனுக்கு நன்றி. அதற்கான வழிமுறைகளை தேவன் தம்முடைய வார்த்தையில் நமக்காக எழுதி வைத்திருக்கிறார். நாம்தான் அந்தப் பொக்கிஷங்களை தோண்டி எடுக்க வேண்டும். அப்பொழுது தேவனோடு நமக்கிருக்கும் உறவில் நாம் ஆழமாய் வேர் விட்டு, கனிகளைக் கொடுக்கும் ஒரு நிலைக்கு வளருவோம்.

இந்தச் செய்தியில், ஜெபத்தின் மூன்று முக்கியமான அம்சங்களைக் குறித்து, டெரிக் நமக்குக் கற்றுக் கொடுக்கப் போகின்றார். தேவனிடம் அணுகுவதற்கான வழிகளாகவும் நாம் இவற்றைப் பார்க்கலாம். நன்றி பாராட்டுதல், துதி மற்றும் ஆராதனை என்பவைதான் அவை. நாம் எவ்வாறு தேவனை அணுக வேண்டும் என்பதற்கு சில முக்கியமான நிபந்தனை களை தேவனே நமக்குக் கொடுத்திருக்கிறார். நன்றிபாராட்டுதலும், துதியும் இல்லாமல், தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைவதற்கு வேறு எவ்வழியும் இல்லை.

இந்த மூன்று அம்சங்களில் ஒவ்வொன்றும், தேவனை அணுகுவதற்கும், அவரைத் தொடர்புகொள்வதற்குமான ஒரு வழியாய் இருக்கின்றன. ஆனால் இவை ஒவ்வொன்றும் தேவனுடைய வித்தியாசமான குணங்களோடு தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. நன்றிபாராட்டுதல், துதி மற்றும் ஆராதனையை வேறுபடுத்தி அறிய உதவும்படி, பின்வருமாறு அவற்றை வரையறுக்கலாம்:

❖ நன்றி பாராட்டலின் மூலம், தேவன் நல்லவர் என்ற உண்மையை அங்கீகரிக்கின்றோம்.

❖ துதியின் மூலம், தேவன் மிகவும் பெரியவர் என்ற உண்மையை அங்கீகரிக்கின்றோம்.

❖ ஆராதனையின் மூலம், தேவன் பரிசுத்தமானவர் என்ற உண்மையை அங்கீகரிக்கின்றோம்.

ஆக, நன்றிபாராட்டுதல், தேவனுடைய நல்தயவோடு நம்மை இணைக்கின்றது. துதி, தேவன் மகத்துவமானவர் என்ற உண்மையோடு நம்மை இணைக்கின்றது. ஆராதனைதான், மனுஷனுடைய ஆத்துமாவின் உயரிய, உன்னதமான செயலாய் இருக்கின்றது. அது நம்மை தேவனுடைய பரிசுத்தத்தோடு இணைக்கின்றது.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இதுவரை நாம் கற்றுக் கொண்ட மற்ற செய்திகளை விட, இந்தச் செய்தி நீளமான ஒன்றாயிருந்தாலும், நம்முடைய ஜெப வாழ்க்கையில்

விடுதலையைக் கொடுக்கக்கூடிய நிறைய ஆச்சரியமான சத்தியங்கள் இதில் அடங்கியிருக்கிறது. நம்முடைய ஜெபங்களுக்கு எப்பொழுதுமே ஏன் பதில் கிடைப்பதில்லை என்பதற்கான சில காரணங்களையும் நாம் புரிந்து கொள்ளும்படி இது நமக்கு உதவுகிறது. தேவன் தம்முடைய வார்த்தையில் எழுதி வைத்திருக்கிற வழிமுறைகளின் அடிப்படையில் நாம் தேவனை அணுகுவதில்லை என்பது ஒரு காரணமாயிருக்கிறது.

கேள்விகளின் பகுதியை வேகவேகமாக கடந்து செல்வதற்குப் பதிலாக, ஆற அமர உட்கார்ந்து, ஒவ்வொரு பகுதியிலும் கணிசமான நேரத்தைச் செலவிட்டு, இதில் பங்கெடுங்கள். அப்பொழுது இந்தப் போதனையை உங்களால் நன்றாக உள்வாங்கிக் கொள்ள முடியும். நீங்கள் கற்றுக் கொண்டதை, பின்பற்றி வாழவும் ஆரம்பிப்பீர்கள். வேதாகம அறிவு, நம் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை உண்டாக்கவில்லை என்றால், அது நமக்கு பிரயோஜனமற்றதாய் இருக்கும். அது கர்த்தரோடு புத்தம் புதிய நேரடி சந்திப்பிற்குள் நம்மைக் கொண்டு வர வேண்டும். கள யதார்த்தம் என்னவென்றால், நம்மில் பெரும்பாலானோர் நிறைய அறிந்திருக்கிறோம். ஆனால் மிகவும் குறைவாகத்தான் பின்பற்றுகிறோம். ஆகையால் நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும். கர்த்தர் ஏற்கனவே வெளிப்படுத்திய விஷயங்களை நாம் கவனத்தில் முக்கியமானவைகளாக எடுத்துக் கொள்ளாதபோது, அவர் ஏன் இன்னும் அதிகமானவைகளை நமக்கு வெளிப்படுத்த வேண்டும்?

ஒவ்வொரு பகுதியிலும் கவனமாய் நேரத்தை செலவிட்டு, பின் வரும் கோடிட்ட இடங்களை நிரப்புக:

*1. .............................. மூலம்,* **தேவன் நல்லவர்** *என்ற மாறா உண்மையை நாம் அங்கீகரிக்கின்றோம்.*

*2. ............................ மூலம்,* **தேவன் பெரியவர்** *என்ற மாறா உண்மையை நாம் அங்கீகரிக்கின்றோம்.*

*3. ............................ மூலம்,* **தேவன் பரிசுத்தமானவர்** *என்ற மாறா உண்மையை நாம் அங்கீகரிக்கின்றோம்.*

## *பகுதி 1 - நன்றி பாராட்டுதல்*

எபிரெயர் **12:28** சொல்கிறது: “ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்.”

*4. ''கிருபையை பற்றிக் கொள்ளக்கடவோம்,'' என்று இந்த மொழிபெயர்ப்பு சொல்கிறது. இன்னொரு மொழிபெயர்ப்பு, ''நாம் ............ சொல்லக்கடவோம்,'' என்று சொல்கிறது. இவ்விரண்டுமே சரியான மொழிபெயர்ப்புகள்தான். ஒரிஜினல் கிரேக்க மொழியில், 'கிருபையை பெற்றுக் கொள்ளுதல்' என்ற இடத்தில், காரிஸ் (charis) என்ற முக்கியமான வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது நன்றி சொல்வதைக் குறிக்கின்றது.*

*5. ......................., நன்றிபாராட்டுவதற்கும் இடையே நேரடித் தொடர்பு இருக்கின்றது. நன்றியுணர்வு இல்லாத மனுஷன், தேவனுடைய கிருபைக்கு வெளியே இருக்கின்றான். தேவனுடைய கிருபையின் கீழ், நீங்கள் வாழ்கின்றீர்கள் என்றால், உங்களால் நன்றியற்றவராக வாழ முடியாது.*

கொலோசெயர் **3:15-17** வசனங்களில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதல் உள்ளவர்களாயிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடு பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாக பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்).

*6. தேவனுக்கு ............... சொல்லாமல், ஒன்றைச் செய்வதற்கு நமக்கு ஒருபோதும் அனுமதி கொடுக்கப்படவில்லை.*

*7. நாம் செய்கிற ஒவ்வொரு விஷயத்தையும் இரண்டு வழிமுறைகளில் செய்ய வேண்டும் என்று வேதவசனம் நமக்குச் சொல்கிறது: 1) இயேசுவின் நாமத்தில் செய்ய வேண்டும். 2) இயேசுவின் மூலம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இது ஒரு ஆச்சரியமான ........................... நமக்குப் போடுகிறது. நாம் செய்ய வேண்டிய காரியங்களை எந்த எல்லைக்குள் இருந்து செய்ய வேண்டும் என்பதை இது நியமிக்கின்றது.*

எபேசியர் 5:18-20 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: “துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியான வரால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்).”

*8. நாம் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்கும்போது, நாம் எப்பொழுதும் தேவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருப்போம். தேவனுக்கு நன்றி சொல்லுமடி நாம் எவ்வளவு நேரம் செலவிடுகிறோம் என்பதை வைத்தே, நமக்குள் இருக்கும் ................................ நிறைவை நாம் அளவிட முடியும். தேவனுக்கு நன்றி சொல்வதை நாம் நிறுத்தி விடும்போது, ஆவியானவரின் நிறைவு நம்மிலிருந்து கசிய ஆரம்பித்து விடுகின்றது. இது ஒரு நிச்சயமான அடையாளமாகும்.*

1 தெசலோனிக்கேயர் 5:16-18 வசனங்கள் சொல்கின்றன: “எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள் (நன்றி சொல்லுங்கள்). அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.”

*9. ............................. நாம் நன்றி சொல்ல வேண்டும் என்பதுதான் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நாம் நன்றி சொல்லவில்லை என்றால், நாம் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே இருக்கிறோம் என்று அர்த்தம். இது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித்ததல்ல. நாம் தேவனுக்கு நன்றி சொல்லவில்லை என்பதுதான் இங்கு பிரச்சனையாயிருக்கிறது.*

பிலிப்பியர் 4:6 சொல்கிறது: “நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய (நன்றியுணர்வோடே கூடிய) ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் (தேவனிடத்தில்) தெரியப்படுத்துங்கள்.

*10. ..................... இல்லாமல், நாம் ஒருபோதும் நம் விண்ணப்பத்தை தேவனிடம் கொண்டு வரக்கூடாது. ஜான் வெஸ்லி இவ்வாறு சொன்னார்: "ஜெபத்தின் மூலமாகத்தான் தேவன் எல்லாவற்றையும் செய்கின்றார்; ஜெபம் இல்லாமல் அவர் ஒன்றையும் செய்வதில்லை என்றுதான் நான் ஆழமாக நம்புகிறேன்."*

*தேவனுடைய வீட்டிற்குள் வருவதைக் குறித்து 100-ம் சங்கீதம் சொல்கிறது. 4-ம் வசனத்தை வாசிப்போம்: "அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரை துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள் (அவருடைய வாசல்களில் நன்றியுணர்வோடும், அவருடைய பிரகாரங்களுக்குள் துதியோடும் நுழையுங்கள். அவருக்கு நன்றியுணர்வுள்ளவர்களாய் வாழுங்கள். அவருடைய நாமத்தை உயர்த்துங்கள்)."*

*11. தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைவதற்கு இரண்டு கட்ட நுழைவாயில்களைக் கடந்து செல்ல வேண்டும். முதலில், .................. - இரண்டாவது, அவருடைய பிரகாரங்கள். வாசல், உங்களை பிரகாரங்களுக்குள் நுழையச் செய்கிறது. பிரகாரங்கள், உங்களை தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழையச் செய்கின்றது.*

*12. நம்முடைய வாழ்க்கையில் எல்லாமே தவறாகச் சென்று கொண்டிருக்கலாம். கொந்தளிப்பான சூழ்நிலைகள் காணப்படலாம். நாம் ஏன் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற கேள்வி நமக்குள் எழலாம். ஆனால் சங்கீதம் 100:5-ம் வசனம், ஒருபோதும் மாறாத மூன்று காரணங்களை நமக்குக் கொடுக்கிறது.*

(அ) கர்த்தர் ........................

(ஆ) அவருடைய .................... என்றென்றைக்குமுள்ளது.

(இ) அவருடைய .................. தலைமுறை தலைமுறையாய் தொடருகின்றது.

நம்முடைய உணர்வுகள் மற்றும் நம் சூழ்நிலைகள் மீது நம் கவனத்தை நாம் பதிக்கக்கூடாது. மாறாக, நாம் நம்முடைய கவனத்தை நித்திய தேவன் மீதும், ஒருபோதும் மாறாத அவருடைய குணங்கள் மீதும் பதிக்க

வேண்டும். அவர் எவ்வாறு நம்மை நடத்திக் கொண்டு வருகின்றார் என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் அப்படிச் செய்வோம் என்றால், நாம் இடைவிடாமல் தேவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருப்போம். தேவனுக்கு நன்றி சொல்வதற்கென்று நிறைய விஷயங்கள் நம்மிடம் இருக்கின்றன. நாம் அதைச் செய்யவில்லை என்றால், அது வெட்கப்பட வேண்டிய விஷயமாயிருக்கும்.

லூக்கா 17-ம் அதிகாரத்தில் நாம் ஒரு சம்பவத்தை வாசிக்கின்றோம். பத்து குஷ்டரோகிகள் இயேசுவிடம் வந்தார்கள். அவர் அவர்களை சுகமாக்கினார். ஆசாரியனிடம் தன்னைக் காண்பித்து விட்டு, அவர்களில் ஒருவன் மட்டுமே இயேசுவிடம் வந்து அவருக்கு நன்றி சொன்னான். 17-19 வசனங்களை வாசித்துப் பாருங்கள்: அப்பொழுது இயேசு, "சுத்தமான வர்கள் பத்து பேர் அல்லவா, மற்ற ஒன்பது பேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக் காணோமே," என்று சொல்லி, அவனை நோக்கி, "நீ எழுந்து போ. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது (இவை கிரேக்க மொழியிலிருந்து வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகள்)," என்றார்.

*13. பத்து குஷ்டரோகிகளும் சுகமாக்கப்பட்டனர். ஆனால் அவர்களில் ஒருவன் மட்டுமே திரும்பி வந்து, இயேசுவிடம் நன்றி சொன்னான். எல்லோரும் சரீர அளவில் சுகம் பெற்றுக் கொண்டனர். ஆனால், திரும்பி வந்து நன்றி சொன்ன இவன் ஒருவன் மட்டுமே, ...................... ஆவிக்குரிய நித்திய பூரண சுகத்தைப் பெற்றுக் கொண்டான். இவன் ஒருவன் மட்டுமே, இயேசுவிடம் நெருங்கி வந்தான்.*

*14. யோவான் 6:1-14 வசனங்களில், இயேசு செய்த ஒரு அற்புதத்தைக் குறித்து வாசிக்கின்றோம். ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்களைக் கொண்டு, இயேசு ஐயாயிரம் பேருக்கும் அதிகமானோருக்கு திருப்தியாய் உணவளித்தார். அந்த நேரத்தில், ஒரு அற்புதத்தைச் செய்யும்படி, இயேசு தேவனிடம் ஜெபிக்கவில்லை. அவர் அங்கு செய்ததெல்லாம், தேவனுக்கு ............. சொன்னதுதான் (23-ம் வசனத்தையும் வாசியுங்கள்).*

நன்றி பாராட்டுதலின் முக்கியத்துவத்தை முழுமையாய் புரிந்து கொள்ளும்படி, நன்றியற்ற தன்மையைக் குறித்து வேதாகமம் என்ன

சொல்கிறது என்பதை ஆராய்ந்து பார்ப்பது நமக்கு உதவியாயிருக்கும்.

*15. ரோமர் 1-ல், தேவனை அறிகிற அறிவிலிருந்து, மகா பயங்கரமான துன்மார்க்கத்திற்குள், பாவம் நிறைந்த வாழ்க்கைக்குள் வீழ்ந்துபோன மனுக்குலத்தின் வீழ்ச்சியைக் குறித்து பவுல், மிகவும் நேர்த்தியாக எடுத்துரைக்கின்றார். மிகவும் பயங்கரமான, அச்சுறுத்தக்கூடிய ஒரு பட்டியலை வேதாகமம் நமக்கு இந்த அதிகாரத்தின் முடிவில் கொடுக்கின்றது. மனுஷன் எவ்வளவு மோசமாக வீழ்ந்து கொண்டிருக்கின்றான் என்பதை வேதாகமம் நமக்கு வெளிப்படுத்து கிறது. இதையெல்லாம் வாசிக்கும்போது, எவ்வாறு மனுஷன் இவ்வளவு மோசமாக வீழ்ந்து போனான் என்ற கேள்வி நமக்குள் எழுகின்றது. ரோமர் 1:21-ல், பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வசனம் சொல்கிறது: "அவர்கள் தேவனை அறிந்தும், அவரை ............ என்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து (நன்றி சொல்லாமலுமிருந்து), தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது."*

*2 தீமோத்தேயு 3:1-2 சொல்கிறது: "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிற வர்களாயும், தாய்தகப்பன் மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்.......... இருப்பார்கள்"*

*16. இந்தப் பட்டியலில், எந்த வார்த்தைக்கு முன், 'நன்றியறியாதவர்கள்' என்ற வார்த்தை வந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். ................................ என்ற வார்த்தைக்கு முன் அது வந்திருக்கிறது. நன்றியறியாதவர்களாய் வாழும் வாழ்க்கை, பரிசுத்தமில்லாமல் வாழும் வாழ்க்கைக்குச் சமமாயிருக்கிறது. நன்றியறியாதவர்களாய் வாழ்கின்றீர்கள் என்றால், உங்களால் பரிசுத்தமாய் வாழ முடியாது. மாறாக, நன்றி பாராட்டுகிறவர்களாய் நீங்கள் வாழ்வீர்கள் என்றால், அது நீங்கள் பரிசுத்தமாய் வாழ்வதற்கு பேருதவியாய் இருக்கும்.*

1 கொரிந்தியர் 10:7-10 வசனங்களை வாசித்துப் பாருங்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான பிறகு, இஸ்ரவேல் ஜனங்கள் செய்த அதே தவறுகளுக்குள் விழுந்து போகாதபடி, பவுல் கிறிஸ்தவர்களை எச்சரிக்கின்றார். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிப்போம்: "(7-ம் வசனம்)...........அவர்களில் சிலர் விக்கிரக ஆராதனைக்காரர் ஆனதுபோல, நீங்களும் ஆகாதிருங்கள். (8-ம் வசனம்).........அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக. (9-ம் வசனம்) ................. அதுபோல நாமும் கிறிஸ்துவை பரீட்சை பாராதிருப்போமாக. (10-ம் வசனம்) அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்."

*17. எண்ணாகமம் 21-ஐ வாசித்துப் பாருங்கள். நீண்ட, களைப்படையச் செய்கிற ஒரு பிரயாணத்தின் நிமித்தம், இஸ்ரவேல் ஜனங்கள் பொறுமையிழந்தார்கள், சலிப்படைந்து, ஊக்கமிழந்தார்கள். அவர்கள் தேவனுக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் .......................... ஆரம்பித்தனர். அப்பொழுது தேவன் கொள்ளிவாய் சர்ப்பங்களை ஜனங்களுக்குள் அனுப்பினார். அவை ஜனங்களைக் கடித்தன. அநேகர் அங்கே மரித்துக் கொண்டிருந்தார்கள். ஒன்றுக்கொன்று நேரெதிரான இரண்டு சாத்தியக்கூறுகளை நாம் இங்கே எதிர்கொள்கின்றோம்: ஒன்று, தேவனுக்கு நன்றியுணர்வுள்ளவர்கள் வாழலாம். அல்லது, தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கலாம். நீங்களே தீர்மானம் எடுங்கள். அதை உறுதியாய் செயல்படுத்துங்கள்.*

## *பாகம் 2 - துதித்தல்*

துதித்தலைக் குறித்து டெரிக் என்ன சொன்னார் என்பதை நினைவுகூருங்கள். நம்முடைய துதியின் மூலம், தேவன் எவ்வளவு பெரியவர், வல்லமையுள்ளவர் என்பதை நாம் நினைவுகூருகின்றோம்.

*18. சங்கீதம் 48:1 சொல்கிறது: "கர்த்தர் பெரியவர். அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்." மகத்தான விதத்தில், தேவனை ஆர்ப்பரித்து துதிப்பதன் மூலம், அவர் எவ்வளவு பெரியவர், வல்லவர் என்ற உண்மையை நாம் வெளிப்படுத்துகிறோம். வேறு வார்த்தைகளில், நம்முடைய துதி, அவருடைய ...........................*

*..... ஏற்ற விதத்தில் வெளிப்பட வேண்டும். அப்படியென்றால், அது அளவிட முடியாத விதத்தில் வெளிப்பட வேண்டும். துதியின் வல்லமையையும், அதன் சாத்தியத்தையும் நாம் ஒருபோதும் பயன்படுத்தி தீர்த்து விட முடியாது.*

தேவனுடைய பட்டணத்தைக் குறித்த ஒரு வருணனையை ஏசாயா நமக்குக் கொடுக்கிறார். இரட்சிப்பின் மூலமாகவும், இயேசுவின் இரத்தத்தின் மூலமாகவும், நாம் இந்தப் பட்டணத்திற்குள் நுழைகின்றோம், நுழையக் கூடிய உரிமையைப் பெற்றிருக்கின்றோம்.ஏசாயா **60:18**-ல், இந்தப் பட்டணத்தைக் குறித்த மிகவும் அழகான ஒரு படம் கொடுக்கப்பட்டிருக்கிறது: "இனி கொடுமை உன் தேசத்திலும், அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்பட மாட்டாது. உன் மதில்களை இரட்சிப்பு என்றும், உன் வாசல்களை துதி என்றும் சொல்வாய்."

*19. தேவனுடைய பிரசன்னத்தைச் சூழ்ந்திருக்கும் சுவர், .................... என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அதன் வாசல்களுக்கெல்லாம் ஒரு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. துதி என்பதுதான் அது. வேறு வார்த்தைகளில், நீங்கள் சுவரைக் கடந்து செல்ல விரும்பினால், நீங்கள் துதி எனும் வாசல் வழியாகக் கடந்து செல்ல வேண்டும். துதி இல்லாமல், அங்கு உள்ளே செல்வதற்கு வழியே இல்லை. தேவனுடைய பிரசன்னத்திற்குள் உடனடியாகச் செல்வதற்கு, அது ஒன்று மட்டுமே வழியாக இருக்கிறது.*

*20. சங்கீதம் 22:3-ல், கர்த்தரை நோக்கிப் பார்த்துச் சொல்லப்படுகிற வார்த்தைகளை நாம் வாசிக்க முடியும்: "இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீர் நீரே பரிசுத்தர்." துதியின் மூலம், ராஜாதி ராஜாவாகிய இயேசுவுக்கு நாம் ஒரு ............................ கொடுக்கின்றோம். அவர் கிருபை நிறைந்தவர். நம்மிடம் அவர் அதை வற்புறுத்துவதில்லை. அவர் நம் மத்தியில் வருகின்றார். ஆனால் நம் துதியின் சிங்காசனத்தை நாம் அவருக்குக் கொடுக்கவில்லை என்றால், நாம் அவருடைய ராஜரீகத்தை, ஆளுமையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அர்த்தம்.*

*21. சங்கீதம் 106:47 சொல்கிறது: "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி (உமது பரிசுத்த நாமத்திற்கு நன்றி செலுத்தி), உம்மைத்*

துதிக்கிறதில் மேன்மை பாராட்டும்படி (உம்மை துதிப்பதன் மூலம் ஜெயமெடுக்கும்படி) எங்களை இரட்சித்து, எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்.'' திரும்பவும் இதே ஒழுங்கு வரிசையை இங்கே கவனியுங்கள்: முதலில், **நன்றி பாராட்டுதல்.** இரண்டாவது, **துதித்தல்.** அது மட்டுமல்ல, நாம் தேவனை துதிக்கும்போது, நாம் ................................ - பண்டைய ரோமக் கலாச்சாரத்திலும், பண்டைய உலகத்திலும் வெற்றி பவனி என்பது, வெற்றியை அடைவதோடு நின்று விடுவதில்லை. ஏற்கனவே அடைந்த வெற்றியை கொண்டாடும் ஒரு நிகழ்வாகவும் அது இருக்கின்றது.

22. மெய்யாகவே நாம் தேவனைத் துதிக்கும்போது, நாம் அவரிடம் வெற்றியைக் கேட்கவில்லை. ஏற்கனவே வெற்றி சொந்தமாக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை நாம் கொண்டாடுகின்றோம். அவருடைய வெற்றியில் நாம் இணைகின்றோம். 2 கொரிந்தியர் 2:14-ல், பவுல் எழுதியிருக்கிறார்: ''கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (நன்றி).''

23. சங்கீதம் 30:11-12 வசனங்களை வாசிப்போம்: ''என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர். என் மகிமை அமர்ந்திராமல், உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சி என்னும் கட்டினால் என்னை இடைக்கட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன் (என்றென்றைக்கும் உமக்கு நன்றி சொல்வேன்). நம்முடைய துக்கத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி, இரட்டு எனும் சாக்கு உடையை தேவன் நம்மிடமிருந்து களையும்போது, அவர் அதை ஒரு நோக்கத்திற்காகச் செய்கிறார். அது என்ன நோக்கம்? கடைசிவரை, நம்முடைய .................. அவரைத் துதிக்க வேண்டும் என்பதுதான் அது.

24. நம் .........., தேவனுக்கு துதியைச் செலுத்துகிற நம் மகிமையாய் இருக்கிறது (சங்கீதம் 16:9 மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள் 2:26).

*25. துக்கத்தினாலும், மனச்சோர்வினாலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு, ஏசாயா 61:3-ம் வசனம், ஆறுதலைக் கொடுக்கின்றது: "சீயோனிலே துயரப்பட்டவர்களை சீர்படுத்தவும் (ஆறுதல் கொடுக்கவும்), அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ......................... ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்."*

எரேமியா **33:11**-ல், துதி அல்லது நன்றி பாராட்டுதலின் இன்னொரு அம்சத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இரண்டுமே முக்கியமானவை. தேவனுடைய ஜனங்கள் திரும்ப மீட்கப்படுவதைக் குறித்து இது பேசுகிறது. எருசலேமின் தெருக்களில் என்ன சத்தம் கேட்கப்படும் என்பதைக் குறித்தும் இது பேசுகிறது. நாம் இதை வாசிப்போம்: "களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும், சேனை களின் கர்த்தரைத் துதியுங்கள்; கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும் (மூன்று காரணங்களில் இரண்டு காரணங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது), கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திர பலிகளைக் கொண்டு வருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்கிறார். 'ஸ்தோத்திர பலிகள்' என்ற இடத்தில், 'துதி பலிகள்' என்று ஒரு மொழிபெயர்ப்பிலும், 'நன்றி பலிகள்' என்று இன்னொரு மொழிபெயர்ப்பிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

*26. துதி என்பது ஒரு ........... என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாக இருக்கிறது. இது எப்பொழுதும் சுலபமாக இருக்காது. இதற்கு நீங்கள் ஒரு விலைக்கிரயம் செலுத்த வேண்டும். கர்த்தரைத் துதிக்க வேண்டிய மிகவும் முக்கியமான நேரம் எது தெரியுமா? துதிக்க வேண்டும் என்பதைப்போல உணராத நேரத்தில்தான், நீங்கள் அதிகமாய் துதிக்க வேண்டும். உங்களுடைய உணர்வுகள், உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும்படி இடம் கொடுக்காதீர்கள். உங்களுடைய உணர்வுகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாக இருந்தாலும், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தேவனுடைய வார்த்தையே உங்களுக்குச் சொல்வதாக.*

எபிரெயர் **13:15-16** வசனங்களில், நமக்கு இவ்வாறு அறிவுறுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. "ஆகையால் அவருடைய நாமத்தை துதிக்கும்

உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை (நன்றி பலியை) அவர் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்."

*27. துதித்தல் அல்லது நன்றி செலுத்துதல் என்பது, பல நேரங்களில் ஒரு பலியாக இருக்கின்றது என்பதில் சந்தேகமே இல்லை. எந்த சூழ்நிலையில், மிகவும் அதிகமான விலைக்கிரயத்தை நாம் செலுத்த வேண்டியிருக்கிறதோ, அந்தச் சூழ்நிலையில் இவை ......................... மிகவும் பிரியமான பலியாக இருக்கின்றன. ஒரு சூழ்நிலையில் சகலமும் நமக்கு விரோதமாக எழும்பி நிற்கும்போது, அந்த நேரத்தில்தான், முக்கியமாக, நாம் தேவனை விசுவாசத்தோடு துதிக்க வேண்டும். இது ஒரு பலியாக இருக்கிறது.*

*28. துதி என்பது ஒரு ஆவிக்குரிய ........... என்று சங்கீதம் 8:2-ம் வசனம் சொல்கிறது: "பகைஞனையும், பழிகாரனையும் அடக்கிப் போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களின் நிமித்தம், குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்."*

*29. மத்தேயு 21:16-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். தேவாலயத்தில், ......................... அவரைத் துதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வேதபாரகரும், பிரதான ஆசாரியர்களும் இயேசுவிடம் முறையிட்டபோது, சங்கீதம் 8:2-ம் வசனத்தை மேற்கோள் காட்டி, அவர் இவ்வாறு சொன்னார்: "ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?"*

*30. "நீர் பெலன் உண்டு பண்ணினீர்," என்று சங்கீதக்காரன் சொன்னான். "துதி உண்டாகும்படி செய்தீர்," என்று இயேசு சொன்னார். சரியான விதத்தில் ஏறெடுக்கப்படுகிற துதி தான், தேவனுடைய ஜனங்களுக்கு அவர் உண்டு பண்ணியிருக்கிற .................. என்பதை இது நமக்குச் சொல்கிறது. நாம் எவ்வளவு பெலவீன ர்களாயிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல. இந்த ஆயுதத்தை எதுவும் தடுக்க முடியாது. மிகவும் பெலவீனர்களாகிய*

*குழந்தைகள், பாலகர்கள் எனும் எடுத்துக்காட்டைத்தான் தாவீது இங்கு பயன்படுத்துகிறான். ஆனாலும் அவர்கள் தேவனை துதிக்கும்போது, அது சாத்தானுடைய வாயை அடைத்து விடுகிறது.*

*31. சங்கீதம் 50:23 சொல்கிறது: "ஸ்தோத்திர (துதி) பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். தன் வழியை செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன்." இதை இன்னொரு விதமாகவும் சொல்லலாம்: நாம் தேவனுக்கு துதி பலியை செலுத்தும்போது, நம்முடைய சூழ்நிலைக்குள் தேவனுடைய இரட்சிப்பு வெளிப்படும்படி, நாம் ஒரு வழியை ஆயத்தம் செய்கின்றோம்.*

**2** நாளாகமம் **20**-ம் அதிகாரத்தில் ஒரு சம்பவத்தை நாம் வாசிக்கின்றோம். யோசபாத் ராஜாவிற்கு எதிராக ஒரு பெரிய இராணுவம் வந்திறங்கி இருந்தது. லேவியர்களில் ஒருவன் மூலம், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் யுத்தத்திற்கான திட்டம் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. உண்மையில், அவர்கள் அங்கு யுத்தம் பண்ண வேண்டியதில்லை. **21**-ம் வசனத்திலிருந்து வாசியுங்கள்: "பின்பு அவன் (யோசபாத்) ஜனத்தோடே ஆலோசனை பண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தை துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்பாக நடந்து போய், 'கர்த்தரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றும் உள்ளது,' என்று கர்த்தரைப் பாடவும் பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடி துதி செய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலை தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரை கர்த்தர் எழும்பப் பண்ணினதால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்."

*32. துதியாகிய ஆயுதம், அவர்களுக்கு முழுமையான ........................ பெற்றுத் தந்தது. அவர்களுடைய எதிரிகள், ஒருவர் மற்றவருக்கு விரோதமாக எழும்பி, ஒருவர் மற்றவரைக் கொன்று போட்டனர். அவர்கள் யுத்தகளத்திற்கு வந்தபோது, அவர்களுடைய எதிரிகள் எல்லோரும் மரித்துப் போயிருந்தனர். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், எதிரிகளின் ஐசுவரியங்களைக் கொள்ளையிடுவதுதான். துதியின் வல்லமையைக் குறித்த பிரமாண்டமான ஒரு படமாய் இது இருக்கிறது!*

*33. யோனா 2-ம் அதிகாரத்தில், யோனா ஜெபித்துக் கொண்டிருந்ததைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். எது அவனுடைய சூழ்நிலையை மாற்றியது. தேவனுக்கு நன்றி சொல்லி, அவரை துதிக்க ஆரம்பித்தபோதுதான், அவனுடைய சூழ்நிலை மாறியது. 9-10 வசனங்களை வாசிப்போம்: "நானோவெனில் துதியின் சத்தத்தோடே (நன்றியின் சத்தத்தோடே) உமக்கு ...................... - நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன். இரட்சிப்பு கர்த்தருடையது என்றான் (யோனா). கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார். அது யோனாவை கரையிலே கக்கி விட்டது."*

துதியின் வல்லமையைக் குறித்த இன்னொரு அழகான எடுத்துக்காட்டைக் குறித்து அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் வாசிங்கின்றோம். பவுல் மற்றும் சீலா செய்த ஊழியத்தில் இது நிகழ்ந்தது. பவுல் அங்கே விடுதலையின் ஊழியத்தைச் செய்தார். குறி சொல்லும் ஒரு பெண்ணிடமிருந்து ஒரு பிசாசையும் அவர் துரத்தியிருந்தார். அந்தப் பட்டணம் முழுவதிலும் கலகம் உண்டாயிற்று. பவுல் மற்றும் சீலாவுடைய வஸ்திரங்களை கிழித்து, அவர்களை மிகவும் மோசமாக அடித்தனர். கடைசியில், பலத்த பாதுகாப்பு நிறைந்த ஒரு சிறைச்சாலையில் அவர்களை அடைத்தனர். அப்போஸ்தலர் நடபடிகள் **16:25-26** சொல்கிறது: "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடிதியிலே (திடீரென்று) சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லோருடைய கட்டுகளும் (சங்கிலிகளும்) கழன்று போயிற்று."

*34. துதியானது, அங்கே இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ............................ உண்டு பண்ணி, எல்லோருடைய சங்கிலிகளையும் கழன்று போகச் செய்தது.*

*யார், எப்பொழுது, எவ்வாறு தேவனை துதிக்க வேண்டும் என்பதை கீழ்க்காணும் பகுதியில், நீங்கள் சுருக்கமாகப் பார்க்க முடியும்.*

*35. நாம் எப்பொழுது தேவனை துதிக்க வேண்டும்?*

*(அ) ஒவ்வொரு .............., எப்பொழுதும், என்றென்றைக்கும் (சங்கீதம் 145:2)*

*(ஆ) ............ காலங்களிலும் - தொடர்ந்து (சங்கீதம் 34:1).*

*36. நாம் எவ்வாறு தேவனை துதிக்க வேண்டும்?*

*(அ) முழு ......................... (சங்கீதம் 111:1)*

*(ஆ) .................... போற்றிப் பாட வேண்டும் (சங்கீதம் 47:7)*

*(இ) ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால், ................... உயர்த்தி துதிக்க வேண்டும் (சங்கீயம் 63:4-5).*

*(ஈ) ....................... துதியுங்கள் (சங்கீதம் 149:3)*

*(உ) ..............., நடனத்தோடும் துதியுங்கள் (சங்கீதம் 150:4)*

*37. யார் தேவனை துதிக்க வேண்டும்?*

*(அ) சங்கீதம் 148-ல் மட்டும், 29 வகையான .......................... கர்த்தரை துதிக்க வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது.*

*(ஆ) ............. யாவும் தேவனை துதிப்பதாக (சங்கீதம் 150:6).*

*38. கடைசியாக ஒரு கேள்வி. யார் தேவனை துதிக்க மாட்டார்கள்? ................................ (சங்கீதம் 115:17). நீங்கள் தேவனை துதிக்கவில்லை என்றால், இது என்ன நோய் என்பதற்கான அறிக்கை உங்களிடமே இருக்கின்றது. நீங்கள் சரீரப்பிரகாரமாக இன்னும் மரிக்கவில்லை என்றாலும், நீங்கள் ஆவிக்குரியபிரகாரம் மரித்துக் கிடக்கின்றீர்கள் என்று அர்த்தம்.*

## *பாகம் 3 - ஆராதனை*

ஆராதனையின் மூலம், தேவன் பரிசுத்தமானவர் என்ற உண்மையை நாம் அங்கீகரிக்கின்றோம். ஆராதனைதான், எந்த ஒரு மனுஷனும் செய்யக்கூடிய உயரிய, உன்னதமான ஒரு செயல் என்று டெரிக் நமக்குப் போதித்தார். அதை அவர் தனிப்பட்ட விதத்திலும் விசுவாசிக்கின்றார். துதி மற்றும் நன்றி தெரிவித்தல், பிரதானமாக நம் வாய் வார்த்தைகளின் மூலம் வெளிப்படுகின்றது. நாம் நம் வாய் வார்த்தைகள் மூலம் அவற்றைப் பேசுகின்றோம். நாம் அவற்றை பாடல்களாகப் பாடுகின்றோம். நாம் அவற்றை ஆர்ப்பரித்தும் செய்கின்றோம். ஆனால் ஆராதனை என்பது பிரதானமாக நம் வாய் வார்த்தைகள் மூலம் வெளிப்படுவதில்லை. மாறாக,

இது நம் சரீரத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையாய் இருக்கிறது. இது நம் இருதயத்தின் சிந்தையை பிரதிபலிக்கின்றது.

*39. ஆராதனைக்கென்று சில குறிப்பிட்ட நிலைகள் மற்றும் தன்மைகள் இருக்கின்றன:*

*(அ) தலை ..................... - முட்செடியில் தேவன் தோன்றி தன்னிடம் பேசிய பிறகு, மோசே எகிப்திற்குத் திரும்பினான். அவர்கள் அவனுடைய வார்த்தைகளைக் கேட்டபோது, மூப்பர்கள் தலைகுனிந்து தொழுது கொண்டார்கள் (யாத்திராகமம் 4:31).*

*(ஆ) தலை குனிந்து தொழுது கொள்வது மட்டுமல்ல. ......................... மேல் பகுதி முழுவதையும் தாழ்த்துவதாகும்.*

*(இ) கர்த்தரைத் தொழுது கொள்ளுதல் என்றால், ................. விரித்து, உள்ளங்கைகளை மேல்நோக்கி வைத்திருப்பதாகும். இது தேவனுக்கு நன்றி சொல்லும் ஒரு வழியாகும். அது மட்டுமல்ல, அவர் நமக்குக் கொடுக்க விரும்புகிறதைப் பெற்றுக் கொள்ளும்படியாகவும், நாம் மேல்நோக்கி நம் கைகளை விரிக்கின்றோம்.*

*(ஈ) ...................... படியிடுவது, ஆராதனையின் தனித்துவம் வாய்ந்த முக்கியமான ஒரு நிலையாயிருக்கிறது. சபையார் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு தொழுதுகொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவரின் மிகவும் வல்லமையான சந்திப்புகளை அனுபவித்திருக்கிறார்கள் என்பதை டெரிக் நம்முடன் பகிர்ந்து கொண்டார்.*

*(உ) தேவனுக்கு முன்பாக நம் முகம் குப்புற விழுந்து .. ................................ ஆராதனையாயிருக்கிறது. வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய மனுஷர்களில் பெரும்பாலும் எல்லோருமே தங்களுடைய வாழ்க்கையின் முக்கியமான ஒரு காலகட்டத்தில் தேவனுக்கு முன்பாக தங்கள் முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இது ஆராதனையின் உச்சகட்ட வடிவமாக, செயலாக இருக்கின்றது.*

ஏசாயா **6:1-3** வசனங்களில் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்: “உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்ன

தமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன் (ஏசாயா இக்காட்சியைக் கண்டான்). அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் (அல்லது சேராப் என்ற அக்கினிமயமான சிருஷ்டிப்புகள்) அவருக்கு மேலாக நின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகள் இருந்தன. அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரையொருவர் நோக்கி, 'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது,' என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.

*40. ஆராதனை மற்றும் துதிக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறித்த ஆச்சரியமான சத்தியத்தை இந்த வேதப்பகுதி நமக்குக் காண்பிக்கிறது. துதி, நம் வாய் வார்த்தைகள் மூலம் சத்தமாக வெளிப்படுகிறது. அவர்கள் கர்த்தரைத் துதித்தார்கள். "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது," என்று அவருடைய பரிசுத்தத்தைக் குறித்து சத்தமாக அறிவித்தார்கள். ஆனால் ஏசாயா பார்த்த முதல் விஷயம் அதுவல்ல. அவன் பார்த்த முதல் விஷயம், ...................... - அந்த சேராபீன்களிடம் ஆறு செட்டைகள் (இறக்கைகள்) இருந்தன. முதல் இரண்டு செட்டைகளைக் கொண்டு, அவை தங்கள் முகத்தை மூடிக் கொண்டன. அடுத்த இரண்டு செட்டைகளைக் கொண்டு, அவர் தங்கள் பாதத்தை மூடிக் கொண்டன. அது என்ன? அது ஒரு சிந்தை. இது என்ன? இது ஆராதனை. ஆராதனை என்பது, தேவனுக்கு முன்பாக நம் முகத்தையும், சரீரத்தையும் மூடிக் கொண்ட நிலையில், பயபக்தியுடன் அவரைத் தொழுதுகொள்வதாகும்.*

*41. சேராபீன்களிடம் இன்னும் இரண்டு செட்டைகள் இருந்தன. அவற்றைக் கொண்டு அவை பறந்தன. பறப்பதை நாம் செய்ய வேண்டிய பணியாகவும், முகத்தையும் கால்களையும் மூடிக் கொள்வதை ஆராதனையாகவும் நாம் எடுத்துக் கொள்வோம் என்றால், இது என்ன விகிதத்தில் நடக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்வோம். நான்கு செட்டைகள் ஆராதனைக்காகவும், இரண்டு செட்டைகள்*

பணிக்காகவும் வேறுபிரிக்கப்பட்டிருக்கின்றன. இது சரியான விகிதமாயிருக்கிறது. கர்த்தருக்கு நாம் செய்யும் ஊழியத்தில், பணிக்கு நாம் கொடுக்கும் நேரம் மற்றும் முக்கியத்துவத்தைப்போல இரண்டு மடங்கு அதிகமான நேரத்தையும் முக்கியத்துவத்தையும் நாம் ஆராதனைக்குக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, .................. முந்தி ஆராதனை இருக்க வேண்டும்.

42. பணி எதுவும் செய்யாமல், ஆராதனை மட்டும் செய்வோம் என்றால், போலியாய் மாய்மாலம் செய்கின்றோம் என்று அர்த்தம். மத்தேயு 4-ம் அதிகாரத்தில், இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்ட சம்பவத்தைக் குறித்து வாசிக்கின்றோம். தன்னை ................................ பணிந்து கொள்ளும்படி சாத்தான் இயேசுவை சோதிக்கிறான். அதற்கு இயேசு சொன்ன பதில், 10-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது: "அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்து, அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே." ஆராதனையைத் தொடர்ந்து, பணி செய்யப்பட வேண்டும்.

## அடுத்த 5 கேள்விகள், 95-ம் சங்கீதத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது:

1 கர்த்தரைக் கெம்பீரமாய் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையை சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

2 துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

3 கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார்.

4 பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது. பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

5 சமுத்திரம் அவருடையது. அவரே அதை உண்டாக்கினார். வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.

6 நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து, குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

*[7] அவர் நம்முடைய தேவன். நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.*

*[8] இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்திரத்தில் கோபம் மூட்டின போது, சோதனை நாளில் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.*

*[9] அங்கே உங்கள் பிதாக்கள் என்னை சோதித்து, என்னை பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.*

*[10] நாற்பது வருஷமாய் நான் அந்த சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப் போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,*

*[11] என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லை என்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.*

43. முதல் 2 வசனங்களில், கம்பீரமாய் ஆர்ப்பரித்து, ஏறெடுக்கப்படுகிற ...................... பார்க்கின்றோம்.

44. நாம் ஏன் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும், தேவனை துதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை 3-5 வசனங்கள் நமக்குக் கொடுக்கின்றன. ......................, ஒழுங்கும் கிரமமுமாய் எழுதப்பட்ட ஒரு புத்தகம். கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்று சொல்வதோடு அது நின்று விடவில்லை. ஏன் என்ற காரணத்தையும் அது நமக்குச் சொல்கிறது.

45. தேவனுடைய ஆச்சரியமான சிருஷ்டிப்புகளுக்காக, நாம் தேவனுக்கு நன்றி சொல்கின்றோம், அவரைத் துதிக்கின்றோம். ஆனால் அது ஆராதனைக்குள் நுழையும் ஒரு வாசலாக மட்டுமே இருக்கின்றது. ஆராதனைக்குள் செல்லும் ஒரு அணுகுமுறையாக அது இருக்கின்றது. ஆராதனை, 6-ம் வசனத்தில் ஆரம்பிக்கின்றது. நாம் ஆராதனைக்குள் செல்லும்போது, அது ................................. குறிக்கிறது என்பதை நீங்கள் உடனடியாக கவனிப்பீர்கள். நாம் நம் வாய் வார்த்தைகளின் மூலம் துதித்து ஆர்ப்பரிப்பதிலிருந்து, ஒரு சரீர நிலைக்குள்ளாய் கடந்து செல்கின்றோம்.

46. நம்முடைய ஆராதனையின் மூலம், கர்த்தரை நம் தேவனாய் நாம் அங்கீகரிக்கின்றோம். இது மற்ற எல்லா

வழிகளைக் காட்டிலும், மேலான ஒரு வழியாய் இருக்கின்றது. காரணம், ஆராதனை என்பது ........................ மட்டுமே உரியதாயிருக்கிறது.

47. ''இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்,'' என்று 8-ம் வசனம் ஆரம்பிக்கின்றது. இது ஆரம்பத்தில் சம்பந்தமே இல்லாததுபோல தெரியலாம். ஆனால் ஆச்சரியமான ஒரு இரகசியம் இதில் இருக்கிறது. அதாவது நாம் ஆராதிக்கும்போது, மெய்யாகவே நாம் தேவனுடைய ........................ கேட்கின்றோம். நாம் ஆராதிக்கும்போது, பேசுவதன் முடிவுக்கு நாம் வருகின்றோம். நாம் சத்தமாய், ஆர்ப்பரித்து, தேவனை துதித்தோம். அது நல்லது, சரியானது. ஆனால் அது முடிவல்ல. இங்கே முடிவு என்பது ஒரு விதத்தில், தேவனுக்கு முன்பாக பயபக்தியோடு நிற்கின்ற ஒரு நிலையாய் இருக்கின்றது. இந்நிலையில் நாம் பேசுவதற்கு ஒன்றுமில்லை. நாம் அமைதியாய், அமர்ந்திருக்கின்றோம்.

48. யாக்கோபின் கிணறு என்ற இடத்தில், ஒரு சமாரிய பெண்ணை இயேசு சந்தித்த நிகழ்வு, யோவான் 4-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. 23-ம் வசனத்தில், இயேசு சொல்கிறார்: ''உண்மையாய் தொழுது கொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.'' இது குறிப்பிடத்தகுந்த விசேஷமான ஒரு வாக்கியமாக இருக்கின்றது. தம்மை ஆராதித்துத் தொழுது கொள்கிறவர்களை சர்வ வல்ல தேவன், நாடி தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் நாம் தேவனை, அவர் நியமித்த வழிமுறைகளின்படிதான் ஆராதிக்க வேண்டும். அதாவது நாம் அவரை ஆவியிலும், ........................ ஆராதிக்க வேண்டும்.

49. வேதாகமத்தின்படி, மனுஷன், ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று கூறுகளை உடையவனாய் இருக்கிறான். யோவான் 4:24-ல், இயேசு தொடருகின்றார்: ''தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள

*வேண்டும்.'' துதிக்கும்போதும், நன்றி சொல்லும்போதும், நம் ஆத்துமா அதில் ஈடுபடுகின்றது. ஆனால் நாம் ஆராதிக்கும்போது, நம்முடைய …………, தேவனுடைய ஆவியுடன் நேரடி ஐக்கியத்தில் இணைகின்றது.*

பழைய ஏற்பாட்டு பலிகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, பலியில் எவையெல்லாம் கொடுக்கப்பட வேண்டும், எவையெல்லாம் கொடுக்கப்படக் கூடாது என்பதை கர்த்தர் நமக்கு கட்டளைகளாகக் கொடுத்திருக்கிறார். லேவியராகமம் **2:1-2** வசனங்களை வாசித்துப் பாருங்கள். தூபவர்க்கம் என்றழைக்கப்படுகிற ஒரு நறுமணப் பொருளை ஒவ்வொரு பலியிலும் சேர்க்கும்படி அவர் கட்டளை கொடுக்கிறார்: “ஒருவன் போஜன பலியாகிய காணிக்கையை கர்த்தருக்கு செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக. அவன் அதின் மேல் எண்ணெய் வார்த்து (எண்ணெய் - பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாக இருக்கிறது), அதின் மேல் தூபவர்க்கம் போட்டு, அதை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டு வருவானாக. அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும், எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் எல்லாவற்றோடும் எடுத்து, அதை பலிபீடத்தின் மேல் ஞாபகக் குறியாக தகனிக்கக்கடவன். அது கர்த்தருக்கு சுகந்த வாசனை யான தகனபலி.”

*50. பலியில் பல்வேறு விஷயங்கள் இருந்தன. அதில் மாவு இருந்தது, எண்ணெய் இருந்தது. அவற்றுள் ஒரு பகுதி மட்டுமே தகனிக்கப்பட்டது. ஆனால் தூபவர்க்கம் ………………………… தகனிக்கப்பட்டது.*

*51. பழைய ஏற்பாட்டில், தூபவர்க்கம் என்பது ………………………… ஒரு மாதிரியாக இருக்கின்றது. தேவனுக்கு நாம் செலுத்தும் காணிக்கைகளில், ஆசாரியர்களாகிய தேவனுடைய ஊழியக்காரர்களும் பங்கு பெற்றனர். ஆனால் நம்முடைய பலியில், ஒரு விஷயம் மட்டும், தேவனைத் தவிர வேறு ஒருவருக்கும் செல்லவில்லை. அது தூபவர்க்கமாகிய ஆராதனை யாகும். ஆராதனையை வேறு எந்த ஒரு மனுஷனுக்கும் நாம் செலுத்தக்கூடாது. நாம் அதை கர்த்தருக்கு மட்டுமே கொடுக்க வேண்டும். இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது.*

*52. தூபவர்க்கம் என்பது ஒரு மரத்திலிருந்து கிடைக்கின்ற ஒரு நறுமண பட்டையாகும். அதை எரிக்கும்போது, அழகான வாசனையை அது கொடுக்கின்றது. அது பார்ப்பதற்கு அழகாக இல்லையென்றாலும், அதற்குள் இந்த அழகான .................... .............. இருக்கின்றது. தேவன் இதைத்தான் விரும்புகிறார். இதுதான் நம்முடைய ஆராதனையாய் தேவனுக்கு முன்பாக இருக்கின்றது. இது ஒரு அழகான, சுகந்த, நறுமண வாசனை யாய் தேவனுடைய நாசிகளில் எழும்புகிறது.*

இதன் இன்னொரு பக்கத்தில் பார்க்கும்போது, தேவனுக்கு செலுத்த வேண்டிய பலிகளில் ஒன்றை சேர்க்கவே கூடாது என்றும் எழுதப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இதே அதிகாரத்தின் 11-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள்: "நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் எந்த போஜனபலியும் புளித்த மாவினால் செய்யப்படாதிருப்பதாக. புளித்த மாவுள்ளதொன்றையும், தேனுள்ளதொன்றையும் கர்த்தருக்கு தகன பலியாக தகனிக்க வேண்டாம்."

*53. அக்கினியில் எரிக்கப்படுவதற்கு முன், தேன் இனிப்பானதாக, சுவையானதாக இருக்கிறது. ஆனால் அது எரிக்கப்பட்ட பிறகு, கறுப்பாக, பிசுபிசுப்பானதாக, பார்ப்பதற்கே அருவருப்பானதாக மாறி விடுகின்றது. ஆக, கர்த்தர் இங்கு என்ன சொல்கிறார்? "......................... நிலைத்து நிற்கத் தகுதியில்லாத எதையும் ஆராதனை பலியாக எனக்கு செலுத்தாதே. தூபவர்க்கத்தை எனக்கு பலியாக செலுத்து. அக்கினியில் அதிக நேரம் அது எரியும்பொது, அது மேலும் மேலும் நறுமணமாக மாறுகின்றது. ஆனால் அக்கினியில் சோதிக்கப்படும்போது, கறுப்பாக பிசுபிசுப்பானதாக, அருவருப்பானதாக மாறக்கூடிய எதையும் எனக்கு ஆராதனை பலியாக செலுத்தாதே."*

ஆராதனையைக் குறித்த இறுதியான, ஒரு தெளிவான படம், 1 கொரிந்தியர் 6:16-17 வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது: "வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறான் என்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. அப்படியே கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாய் இருக்கிறான்."

*54. முதல் எடுத்துக்காட்டு, ஒழுக்கக்கேடான தவறான விதத்தில், ........................... பாலியல் உறவு கொள்வதைக் குறிக்கின்றது. ஆனால் அதற்கு இணையாக, ஆவியில் கர்த்தரோடு ஒன்றாய் இசைந்திருக்கிற ஒரு நபரைக் குறித்து பவுல் பேசுகிறார். வேறு வார்த்தைகளில், இரண்டு வகையான ஐக்கியங்கள் இருக்கின்றன என்று சொல்லலாம். ஒன்று, சரீரப்பிரகாரமான ஐக்கியம். இன்னொன்று, ஆவியில் ஒன்றாய் இசைந்திருக்கிற ஐக்கியம்.*

*55. ஆராதனை என்பது நம் ஆவி, நேரடியாக தேவனோடு ஒன்றாய் இசைந்திருப்பதற்கான ஒரே வழியாய் இருக்கின்றது. அந்த ...................................... ஆவிக்குரிய கனி உண்டாகிறது. ஆராதனை என்பது, நம்மை ஆவிக்குரிய விதத்தில் கனி கொடுக்கிறவர்களாய் மாற்றுகிறது. உங்களால் அதை பார்க்க முடிகின்றதா? ஆகையால் ஆராதனையைக் குறித்து நீங்கள் சிந்திக்கும்போது, உங்களுடைய ஆவி, தேவனோடு ஒரே ஆவியாய் இசைந்திருப்பதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.*

நன்றி சொல்லுதல், துதி மற்றும் ஆராதனை நிறைந்த ஒரு வாழ்க்கைமுறைக்குள் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இதில் தேர்ந்தவர்களாய் மாற வேண்டுமென்றால், நமக்கு பயிற்சியும், நீடிய பொறுமையும் தேவையாயிருக்கிறது. ஆனால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குள் அவற்றைத் தழுவி ஏற்றுக் கொள்ளும்படி எடுக்கின்ற முயற்சியை, புத்தம்புதிய விதத்தில் தேவனை சந்தித்து, அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவருடைய பிரசன்னத்தை அனுபவிக்கின்ற ஆச்சரியமான ஆசீர்வாதத்தோடு ஒப்பிடுகையில், அது மங்கலாகத் தெரியும்.

தேவன் எவ்வளவு நல்லவர் என்பதை சிந்தித்து, இப்பொழுதே நேரம் செலவிட்டு, அவருக்கு நன்றி சொல்லுங்கள். **1** தெசலோனிக்கேயர் **5:18**-ம் வசனத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதை நினைவுகூருங்கள்: **"எல்லாவற்றிலும்** ஸ்தோத்திரம் செய்யுங்கள் (நன்றி சொல்லுங்கள்). அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது." நன்றி சொல்லுதல் என்பது விசுவாசத்தின் ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. அது ஆவிக்குரிய சூழ்நிலைகளை மாற்ற ஆரம்பிக்கின்றது. நம் இருதயத்தின் நிலையையும் மாற்றுகின்றது. நன்றி சொல்லிய பிறகு, தேவன் எவ்வளவு பெரியவர்,

வல்லவர் என்பதை நினைத்து, அவரை துதிக்க ஆரம்பியுங்கள். இது நம்முடைய சூழ்நிலைகளைக் குறித்த நம் கண்ணோட்டத்தை மாற்றுவதற்கு உதவி செய்யும். இது தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து நம் சூழ்நிலைகளைப் பார்க்கக்கூடிய திறன் உள்ளவர்களாய் நம்மை மாற்றும். கடைசியாக, தேவன் பரிசுத்தமானவர் என்பதை நினைத்து, அவரை ஆராதியுங்கள். நாம் இதைச் செய்யும்போது, இயேசுகிறிஸ்துவைப் பார்க்கின்ற நாம், அவரைப் போலவே உருமாற ஆரம்பிப்போம்.

400-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/68**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி மூன்று>>*

# இரத்தத்தை எவ்வாறு பயன்படுத்துவது[4255]

*அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அவர் அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழுந்தார் என்ற இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் விசுவாசித்து, புரிந்து கொள்வோம் என்றால், இயேசுவின் இரத்தத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்ற நம்முடைய முதல் பார்வையை நாம் பெற்றுக் கொள்கிறோம். அவருடைய இரத்தம்தான், நம்முடைய பாவத்தைக் கழுவி சுத்திகரித்திருக்கிறது என்பதை நாம் கற்றுக் கொள்கிறோம். ஆனால் வேதாகமம், இயேசுவின் இரத்தத்தைக் குறித்து நிறையவே பேசியிருக்கிறது. நம்முடைய தேவைகளை சந்திக்கிற தேவனுடைய முன்னேற்பாடாக, நாம் அதை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளும்போது, அது நம்முடைய வாழ்க்கையில் உண்டாக்கக்கூடிய பாதிப்பைக் குறித்தும் வேதாகமம் அதிகமாகப் பேசியிருக்கிறது.

“மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது,” என்று லேவியராகமம் 17:11 சொல்கிறது. நம்முடைய வாழ்க்கையை மீட்கும்படி இயேசு தம்முடைய ஜீவ இரத்தத்தை விலைக்கிரயமாக செலுத்தினார் என்ற ஒரு புரிதலை, ஒரு வெளிச்சத்தை இது உடனடியாக நமக்குக் கொடுக்கின்றது. நம்மை ஆச்சரியத்தின் உச்சிக்கே கொண்டு செல்லக்கூடிய கர்த்தருடைய முன்னேற்பாடு நமக்குக் கிடைக்கக்கூடியதாய் இருந்தாலும், நம்முடைய வாழ்க்கையில் அதை எவ்வாறு முழுமையாக பயன்படுத்திக் கொள்வது என்பதை நாம் இன்னும் அறியாமலிருக்கிறோம்.

இரத்தத்தைக் குறித்த ஒரு விதமான பயம், அநேகருக்குள் இருக்கிறது. அவர்கள் அதைக் குறித்து பேசவோ அல்லது சிந்திக்கவோ கூட விரும்புவதில்லை. ஆனால் இயேசுவின் இரத்தம், ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கைக்கும் அத்தியாவசியமானது. இயேசுவினுடைய இரத்தத்தைக்

குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதலுக்குள் வர வேண்டிய அவசியத்தை நாம் தவிர்க்க முடியாது. கர்த்தருடைய திருப்பந்தியில் பங்கெடுப்பதையும் நாம் ஒதுக்கி விட முடியாது. நாம் அதைத் தவிர்த்து, ஒதுக்குவோம் என்றால், அது ஈடு செய்ய முடியாத இழப்பாகி விடும். நம்முடைய வாழ்க்கையில் இரத்தத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை வேதவசனங்களின் மூலம் டெரிக் சிறந்த முறையில் நேர்த்தியாக நம்மை வழிநடத்துகிறார். யாத்திராகமம் 12-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிற பஸ்கா சடங்கின் வழியாக அவர் இதைச் செய்கிறார். இரத்தத்தின் ஏழு விதமான பயன்பாடுகளைக் குறித்து வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றைக் குறித்தும், அவர் நமக்குப் போதிக்கிறார்: மீட்பு, சுத்திகரிப்பு, நீதிமானாக்கப்படுதல், வேறுபிரிக்கப்படுதல், ஜீவன், பரிந்து மன்றாடுதல் மற்றும் நுழைவாயிலாய் இருத்தல்.

இயேசுவின் இரத்தத்தைக் குறித்து தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிற சத்தியங்களை நாம் தழுவி ஏற்றுக் கொள்ளும்போது, நாம் அதே நிலையில் இருக்க மாட்டோம். எளிமையாகச் சொன்னால், இந்த சத்தியங்கள் நம் வாழ்க்கையையே மாற்றக்கூடியவைகளாய் இருக்கின்றன.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்,
கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

விசுவாசிகளாகிய நம்முடைய வாழ்க்கையில், இயேசுவின் இரத்தம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று டெரிக் போதித்ததை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அது நமக்கு மீட்பைக் கொடுக்கிறது. அது நம்மை சுத்திகரிக்கின்றது. அது நம்மை நீதிமான்களாக்குகிறது. அது நம்மை வேறுபிரித்து பரிசுத்தமாக்குகிறது. அது நமக்கு ஜீவனைக் கொடுக்கிறது. அது நமக்காக பரிந்து மன்றாடுகிறது. அது நாம் தேவனிடம் செல்வதற்கான ஒரே வழியாக இருக்கின்றது.

நாம் இந்தப் பட்டியலைக் குறித்து எண்ணிப் பார்க்கும்போது, இயேசுவின் இரத்தம் இல்லாமல், தேவனுடைய நன்மைகளிலும், அவருடைய இரக்கத்திலும் நாம் பங்கெடுக்க முடியாது என்பதை சீக்கிரமாய் புரிந்து கொள்வோம். எபிரெயர் 12:14 சொல்கிறது: "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும்

நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே." சமாதானத்தை நாடுவதைக் குறித்து ஓரளவிற்கு நம்மில் பெரும்பாலானோர் அறிந்திருக்கிறோம். ஆனால் பரிசுத்தத்தைக் குறித்து என்ன சொல்வோம்? நாம் எவ்வாறு பரிசுத்தமாகின்றோம்? பரிசுத்தமாக்கப்படுகிற வழிமுறை, வேறுபிரிக்கப்படுதல் என்றழைக்கப் படுகிறது. எபிரெயர் 13:12 சொல்கிறது: "அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தம் செய்யும்படியாக, நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்."

தேவனை தரிசிக்க வேண்டுமென்றால், நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தின் மூலம், நாம் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். இது நம்முடைய வாழ்க்கையில் இயேசுவின் இரத்தம் செய்யக்கூடிய ஏழு முக்கியமான விளைவுகளில் ஒன்றாயிருக்கிறது. இயேசுவின் இரத்தத்தைக் குறித்த இந்த சத்தியத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டியது நமக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. நாம் இதை விட்டு விடக் கூடாது. காரணம், இது நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் மையப்புள்ளியாக இருக்கின்றது.

## *கோடிட்ட இடங்களை நிரப்புக:*

## *நாம் சாத்தானை மேற்கொண்டிருக்கிறோம்*

வெளிப்படுத்தின விசேஷம் 12:11 சொல்கிறது: "மரணமே நேரிடுகிற தாயிருந்தாலும், அதற்கு தப்பும்படி, தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (பிசாசை) ஜெயித்தார்கள்."

*1. "அவர்கள் அவனை ஜெயித்தார்கள்," என்று வசனம் சொல்லும்போது, 'அவர்கள்' என்ற வார்த்தை, இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கின்ற நம்மைப் போன்ற .............................. குறிக்கின்றது.*

*2. விசுவாசிகளாகிய நாம் 'அவனை' ஜெயித்தோம் என்று இது சொல்லும்போது, இது .................... குறித்து பேசுகின்றது. இது விசுவாசிகளுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடக்கின்ற நேரடி யுத்தம் என்று வேதவசனம் தெளிவாகக் காண்பிக்கிறது. இடையில் வேறு ஒருவரும் இல்லை என்பதையும் அது சொல்கிறது.*

*3. மூன்று முக்கியமான விஷயங்களைக் கொண்டு, விசுவாசிகள் சாத்தானை மேற்கொண்டார்கள் என்பதை நாம் இங்கு கற்றுக் கொள்கிறோம்.*

*(அ) .................................. இரத்தம். இவ்வுலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் இரத்தத்தை இது குறிக்கின்றது (யோவான் 1:29).*

*(ஆ) அவர்களுடைய வார்த்தையின் .............. - இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்திருக்கிறது என்று தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ, அதை நாம் சாட்சியாக அறிக்கை செய்ய வேண்டும். நாம் சாட்சியாக இதை அறிக்கை செய்யவில்லை என்றால், இரத்தத்தின் முழு பலன் நமக்கு உண்டாகாது.*

*(இ) முழுமையான ............................. - மரணமே நேரிடுகிற தாயிருந்தாலும், அவர்கள் தங்கள் ஜீவனையும் பெரிதாக எண்ணவில்லை.*

*4. இராணுவத்தில் சேர்க்கப்பட்ட ஒரு போர்வீரனைப்போல, கர்த்தருடைய போர்வீரர்களுக்கும், அவர்கள் தங்களுடைய ...............இழக்க மாட்டார்கள் என்ற உத்தரவாதம் கொடுக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக தங்களுடைய ஜீவனையும் கொடுக்க பயப்படாதவர்களைக் கண்டுதான், சாத்தான் பயப்படுகிறான்.*

*5. 1 யோவான் 2:17-ல், ஆச்சரியமான ஒரு வாக்கியத்தை நாம் வாசிக்கின்றோம்: "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போகும். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." நீங்கள் உங்களுடைய சித்தத்தை, முழுமையான அர்ப்பணிப்புடன் தேவனுடைய சித்தத்தோடு ஒன்றாய் இணைக்கும்போது, உங்களை எதுவும் மூழ்கடிக்க முடியாது, எதுவும் அசைக்க முடியாது, எதுவும் தோற்கடிக்க முடியாது. தேவனுடைய சித்தத்துடன் நீங்கள் உங்களையே அடையாளம் காணும்போது, தேவனுடைய சித்தத்தைக் குறித்த முழுமையான நிச்சயத்தையும், உறுதியும் பெற்றவர்களாய் நீங்கள் மாறுவீர்கள். நீங்கள் வாழ்வதோ, சாவதோ இரண்டாம் பட்ச முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. ஆனால் உங்களை எதுவும் தோற்கடிக்க முடியாது.*

வெளிபடுத்தின விசேஷம் 12:11-ல் எழுதப்பட்ட சத்தியத்தை தனிப்பட்ட விதத்தில் உங்களுக்குரியதாய் ஆக்கிக் கொள்ளும்படி, பின் வரும் அறிக்கையை நாம் செய்வோம்:

> *இயேசுவின் இரத்தம் எனக்காக என்ன செய்திருக்கிறது என்று தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ, அதை நான் சாட்சியாக அறிக்கை செய்து, சாத்தானை மேற்கொண்டு ஜெயிக்கிறேன்.*

உயிரோடு வாழ்வதைக் காட்டிலும், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## *பஸ்கா சடங்கு*

பஸ்காவைக் குறித்துக் கற்றுக் கொள்வதற்கு முன் ஒரு அறிமுகமாக, 1 கொரிந்தியர் 5:7-ம் வசனத்தை வாசிப்போம்: "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே." வேறு வார்த்தைகளில், எகிப்தில் அனுசரிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு பஸ்கா சடங்கு, சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் தியாகபலி மரணத்திற்கு ஒரு முன்னோட்டமாக, ஒரு தீர்க்கதரிசன படமாக இருந்தது என்று பவுல் இங்கு சொல்கிறார். கிறிஸ்துவே மெய்யான பஸ்கா. பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் அல்ல, அவருடைய இரத்தமே கடைசியில் நமக்கு நித்திய மீட்பை உறுதி செய்திருக்கிறது.

யாத்திராகமம் 12:21-23 வசனங்களுக்கு நாம் திரும்பிச் செல்வோம். பஸ்காவைக் குறித்த நிகழ்வை அங்கு வாசிப்போம்:

> *21அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து, "நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியை தெரிந்தெடுத்துக் கொண்டு பஸ்காவை அடித்து, 22ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்து, கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள். விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை விட்டு புறப்பட வேண்டாம். 23கர்த்தர் எகிப்தியரை அதம் பண்ணுகிறதற்கு கடந்து வருவார். நிலையின்*

*மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்து போவார்.*

*6. பஸ்கா சடங்கு, ஒரு ............................ இருக்கும் முக்கியமான பொறுப்பைக் குறித்து வேதாகமம் காண்பிக்கும் பல படவிளக்கங்களில் ஒன்றாயிருக்கிறது. காரணம், இஸ்ரவேலின் தகப்பன்மார்கள்தான், தங்களுடைய வீட்டாருக்கு பாதுகாப்பையும், இரட்சிப்பையும் பெற்றுக் கொடுக்கக்கூடியவர்களாய் இருக்கின்றனர். இஸ்ரவேலின் தகப்பன்மார்கள் தங்களுடைய இந்தப் பொறுப்பிலிருந்து தவறியிருந்தார்கள் என்றால், பஸ்காவினால் இஸ்ரவேல் ஜனங்கள் பாதுகாக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.*

*7. இது ............... என்றழைக்கப்படுகிறது. காரணம், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்ட வாசலை விட்டு விலகி கடந்து செல்வேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தார்.*

*8. ஒவ்வொரு குடும்பத்தின் தகப்பன்மாரும், தன் குடும்பத்தினரின் எண்ணிக்கைக்குத் தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியை தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு அவர்கள் அந்த ஆட்டுக்குட்டியை பலியாகக் கொல்ல வேண்டும். அதன் இரத்தத்தை அவர்கள் ஒரு .............................. பிடிக்க வேண்டும். அதன் இரத்தம் மிகவும் விலையேறப்பெற்றது. அதன் ஒரு துளிகூட நிலத்தில் சிந்தக்கூடாது.*

*9. ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, அதன் .................... ஒரு பாத்திரத்தில் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றது. இது பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு வழிமுறையாயிருந்தது. ஆனால் பாத்திரத்தில் இருக்கும் இரத்தம், ஒருவரையும் பாதுகாக்காது. அவர்கள் அந்தப் பாத்திரத்திலிருந்து இரத்தத்தை எடுத்து, தங்களுடைய வீட்டுக் கதவுகளின் இரண்டு நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் பூச வேண்டும் அல்லது தெளிக்க வேண்டும். ஆனால் வாசற்படியில் அவர்கள் அதைச் செய்யக்கூடாது. இரத்தத்தை ஒருவரும் மிதிக்கக்கூடாது.*

*10. ........................... விடுதலையே, பாத்திரத்திலிருந்த இரத்தத்தை எடுத்து கதவின் மீது பூசுவதில்தான் இருந்தது. அதைச் செய்யும்படி, ஈசோப்பின் கொத்தைப் பறியுங்கள் என்று தேவன் அவர்களிடம் சொன்னார். ஈசோப்பின் கொத்தை, பாத்திரத்திலிருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதை கதவுகள் மீது பூச வேண்டும் என்று அவர் அவர்களிடம் சொன்னார்.*

*11. இன்னொன்றையும் செய்யும்படி தேவன் இஸ்ரவேலர்களிடம் வலியுறுத்திச் சொன்னார். அவர்கள் தங்களுடைய ........................ உள்ளே இருக்க வேண்டும். அவர்கள் வெளியே செல்ல முடியாது. காரணம், இரத்தத்திற்கு வெளியே அங்கே எந்தப் பாதுகாப்பும் இல்லை. இது இன்றைக்கு நமக்கும் பொருந்துகிறது. அதாவது இயேசுவினுடைய இரத்தத்திற்கு வெளியே, நமக்கு மெய்யான பாதுகாப்பு எதுவும் இல்லை.*

*12. 1 பேதுரு 1:1-2 வசனங்களில், பேதுரு தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு வாழ்த்துக்கள் சொல்கிறார். அவர் அவர்களைக் குறித்து இவ்வாறு விவரித்துச் சொல்கிறார்: "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்." தெளிக்கப் படுவதற்கு முந்தி, .................................. வருவதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். கீழ்ப்படியாதவர்கள் மீது இரத்தம் தெளிக்கப்பட மாட்டாது. கீழ்ப்படியாதவர்களுக்கும், வீட்டிற்கு வெளியே சென்றவர்களுக்கும் இது கிடைக்காது. ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்வோம். இரத்தத்தில் பூரண பாதுகாப்பு உண்டாயிருந்தாலும், அது கீழ்ப்படிகிறவர்களுக்கு* **மட்டுமே** *கிடைக்கின்றது.*

பஸ்கா சடங்கிற்கு திரும்பவும் சொல்வோம் - இரத்தம் பாத்திரத்தில் இருக்கின்றது. அது வீட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும். அவர்கள் ஈசோப்பின் ஒரு சிறிய கொத்தைப் பறித்து, அதை இரத்தத்தில் முக்கி, நனைத்து, தங்கள் வீட்டுக் கதவின் மேல் தெளிக்க வேண்டும். அது அவர்களைப் பாதுகாத்தது.

இப்பொழுது நாம் இதை நமக்குப் பொருத்திப் பார்க்கப் போகின்றோம். கிறிஸ்துவே நம் பஸ்கா என்று பவுல் சொல்கிறார். அவர் நமக்காக பலியிடப்பட்டார். வேறு வார்த்தைகளில், 19 நூற்றாண்டுகளுக்கும் முன்பே, கிறிஸ்து கொல்லப்பட்டார். இதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இரத்தம் பாத்திரத்தில் இருக்கின்றது. ஆனால் பாத்திரத்தில் இருக்கும் இரத்தம் ஒருவரையும் பாதுகாக்காது. இஸ்ரவேலர்களுக்கு இருந்த அதே சூழ்நிலைதான் நமக்கும் இருக்கின்றது. பாத்திரத்தில் இருக்கும் இரத்தத்தை எடுத்து, நாம் வாழ்கின்ற இடத்திற்கு கொண்டு வர வேண்டும். அப்பொழுது நாம் பாதுகாக்கப்படுவோம் - நாம் கீழ்ப்படிந்திருக்க வேண்டியதும் அத்தியாவசியமாயிருக்கிறது. ஆக, இப்பொழுது கேள்வி என்னவென்றால், பாத்திரத்தில் இருக்கும் இயேசுவின் இரத்தத்தை, எவ்வாறு நாம் வாழ்கின்ற இடத்திற்குக் கொண்டு வரப் போகிறோம் என்பதுதான்.

13. வெளிப்படுத்தின விசேஷம் 12:11-ல், நாம் என்ன கற்றுக் கொண்டோம் என்பதை நினைவுகூருவோம். இரத்தம் நமக்காக என்ன செய்திருக்கிறது என்று தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ, அதை தனிப்பட்ட விதத்தில், சாட்சியாக நாம் அறிக்கை செய்ய வேண்டும். ஆக, நம்முடைய .................தான், பாத்திரத்தில் இருக்கும் இரத்தத்தை எடுத்து, நம் வாழ்க்கையில் பயன்படுத்துகிறது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

14. சாட்சி என்பது மிகவும் எளிமையான ஒரு விஷயமாகும். இது வேதவசனத்தின் அடிப்படையில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்வதாகும். ஒரு விதத்தில் பார்க்கும்போது, இது முக்கியமற்ற ஒன்றாகத் தெரியலாம். ஆனால் .......................... சிறிய கொத்துதான் நம்மைப் பாதுகாக்கின்றது. இதுவே நம் பாதுகாப்பாய், மிகவும் அதிக முக்கியத்துவம் உடைய ஒரு விஷயமாய் இருக்கின்றது.

15. எபிரெயர் 3:1 சொல்கிறது: "இப்படியிருக்க, பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவை கவனித்துப் பாருங்கள்." எபிரெய நிருபத்தை எழுதியவர், இயேசுவை நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர் என்று அழைக்கின்றார். அறிக்கை என்றால், அதே விஷயத்தை எழுத்தின்படியே திரும்பச் சொல்வதாகும். வேதாகமத்தையும், இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கின்ற விசுவாசிகளாகிய நமக்கு, ......................... என்றால், தேவன் தம்முடைய வார்த்தையில் என்ன சொல்லியிருக்கிறாரோ, அதையே நம்

வாயினால் திரும்பச் சொல்வதாகும்.

## *பாத்திரத்திலிருந்து இரத்தத்தை எடுத்து, உங்களுடைய வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?*

## *இயேசுவினுடைய இரத்தத்தின் ஏழு பயன்பாடுகள்*

### 1. மீட்பு: திரும்ப விலைக்கிரயம் செலுத்தி வாங்குவதாகும்

*16. எபேசியர் 1:7 சொல்கிறது: "இவருடைய (இயேசுவினுடைய) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (இயேசுவுக்குள்) நமக்கு உண்டாயிருக்கிறது." மீட்பு என்றால், விலைக்கிரயம் செலுத்தி, திரும்ப வாங்குவதாகும். நாம் பிசாசினுடைய கரங்களில் சிக்கியிருந்தோம். இயேசு தம்முடைய ..................................... விலைக்கிரயமாகச் செலுத்தி நம்மை வாங்கியிருக்கிறார்.*

*17. 1 பேதுரு 1:18-19 வசனங்கள் சொல்கின்றன: "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே." இங்கு 'ஆட்டுக்குட்டி' என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இது நம்மை திரும்பவும் பஸ்கா சடங்கிற்கு கொண்டு செல்கின்றது. பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு குற்றமற்றவராய் இருந்தார் என்றால், அவர் ஜென்மப் பாவமில்லாமல் பிறந்தவர் என்று அர்த்தம். அவர் மாசற்ற வர் என்றால், அவர் தனிப்பட்ட விதத்தில் பாவம் எதுவும் செய்யாதவர் என்று அர்த்தம். நாம் அவருடைய இரத்தத்தினால் .......................................*

*18. சங்கீதம் 107:2-3 சொல்கிறது: கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி, மீட்கப்பட்டவர்கள்.......அப்படி சொல்லக்கடவர்கள். நாம் மீட்கப்பட்டவர்கள் என்றால், நாம் அப்படி ........................ என்று இது நமக்குச் சொல்கிறது. நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் என்ற உண்மையை, சாட்சியாய் நாம்*

*அறிக்கை செய்ய வேண்டும். நாம் அப்படிச் சொல்லவில்லை என்றால், நாம் நம்முடைய மீட்பிற்கு சாட்சி பகரவில்லை என்று அர்த்தம். நம்முடைய சாட்சி பகருதல்தான், அதை நமக்காக வேலை செய்ய வைக்கின்றது. இல்லையென்றால், இரத்தம் இன்னும் பாத்திரத்தில்தான் இருக்கின்றது என்று அர்த்தம். மாறாக, நாம் அப்படிச் செய்யும்போது, எதிரியாகிய சாத்தானுடைய கரங்களின் கொடூரப் பிடியிலிருந்து நாம் மீட்கப்படுகின்றோம்.*

நாம் இதை தனிப்பட்ட விதத்தில் ஒரு அறிக்கையாகச் சொல்வோம்:

> *இயேசுவின் இரத்தத்தின் மூலம், நான் பிசாசினுடைய கரத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறேன்.*

**2. சுத்திகரிக்கப்படுதல்**

*19. 1 யோவான் 1:7 சொல்கிறது: “அவர் ஒளியிலிருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்.” மூல பாஷையில், இந்த வசனத்தின் எல்லா வினைச்சொற்களும் நிகழ்கால தொடர்வினைச் சொற்களாக எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது நாம் தொடர்ந்து ஒளியில் நடக்கும்போது, நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்ந்து ஐக்கியப்பட்டிருக்கும்போது, அவருடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் நம்மை எல்லா பாவங்களிலிருந்தும் தொடர்ந்து சுத்திகரித்துக் கொண்டே இருக்கின்றது. நாம் ........................... கொண்டிருக்கிறோம் என்பதுதான், நாம் வெளிச்சத்தில் நடக்கின்றோம் என்பதற்கான ஆதாரமாக இருக்கின்றது. நாம் ஐக்கியத்தை விட்டு வெளியேறுவோம் என்றால், நாம் வெளிச்சத்தை விட்டு வெளியே வந்து விட்டோம் என்று அர்த்தம். இப்பொழுது நாம் இருளில் இருக்கின்றபடியால், அவருடைய இரத்தம் இனி நம்மை சுத்திகரிக்காது.*

*20. வேசித்தனம், கொலை என்ற இரண்டு பயங்கரமான பாவங்களை தாவீது செய்தான். அந்தப் பாவங்களைக் குறித்து மனம் வருந்தி, அவற்றிலிருந்து மனந்திரும்பின நிலையில், 51-ம்*

*சங்கீதத்தை அவன் எழுதினான். அவன் தேவனை நோக்கி, மனந்திரும்புதலோடு பயங்கரமாய் கதறினான், அவருடைய இரக்கத்திற்காக மன்றாடினான். 7-ம் வசனத்தில், அவன் சொன்னான்: "நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும். அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும். அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்." இங்கே ஈசோப் என்ற வார்த்தை, பஸ்கா சடங்கை நமக்கு நினைவுபடுத்துகிறது. இரத்தம் நம்மை முழுமையாய் .............................*

தனிப்பட்ட விதத்தில், இதை நாம் அறிக்கையாகச் சொல்வோம். இதை நாம் அறிவிப்போம்:

> *நான் வெளிச்சத்தில் நடக்கும்போது, இயேசுவின் இரத்தம் என்னை இப்பொழுதும், எப்பொழுதும் எல்லா பாவங்களிலிருந்தும் தொடர்ந்து சுத்திகரித்துக் கொண்டே இருக்கும்.*

**3. நீதிமானாக்குகிறது**

கிரேக்க மொழியில் இந்த வார்த்தைக்கு பல்வேறு வகையான அர்த்தங்கள் உண்டு. ஆனால் இதன் அடிப்படை அர்த்தம், 'நீதிமானாய் ஆக்குதல்' என்பதாகும்.

*21. ரோமர் 5:9 சொல்கிறது: "நாம் அவருடைய (இயேசுவினுடைய) இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." நாம் நம்முடைய சுயநீதியினால் அல்ல, இயேசு கிறிஸ்துவின் நீதியினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்ற அர்த்தத்தில் இது பேசுகின்றது. நாம் நிரபராதிகளாய் விடுதலையாக்கப்பட்டு, நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறோம் என்ற அர்த்தத்திலும் இது பேசுகின்றது.*

*22. "நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன்" என்றால், "ஒருபோதும் பாவம் செய்திராத ஒரு நபராகவே நான் ஆக்கப்பட்டிருக்கிறேன்," என்று அர்த்தம். காரணம், ஒருபோதும் பாவம் செய்திராத இயேசு கிறிஸ்துவின் நீதியினால் நான் ... ............................ - அவர் எந்தக் குற்றமும் செய்ததில்லை. மூடி மறைக்கும்படியான ஒரு கடந்த காலம் அவருக்கு இல்லை.*

*23. ஏசாயா 61:10 சொல்கிறது: "கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழ்கின்றேன். என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்கிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னை சிங்காரித்துக் கொள்கிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்." .............................. மற்றும் நீதி என்ற இரண்டு விஷயங்களை நாம் இங்கு பெறுகின்றோம். நாம் இயேசு கிறிஸ்துவையும், சிலுவையில் நமக்குப் பதிலாக கிருபாதார பலியாக அவர் மரித்தார் என்பதையும் நாம் விசுவாசிக்கும்போது, இரட்சிப்பின் ஆடைகளால் நாம் உடுத்துவிக்கப்படுவோம். ஆனால் இதோடு முடிந்து விடவில்லை. நீதியின் சால்வையினாலும் நாம் மூடப்படுவோம்.*

கீழ்க்கண்டவாறு தனிப்பட்ட விதத்தில் அறிக்கை செய்வதன் மூலம், நம்முடைய சூழ்நிலையில் இயேசுவின் இரத்தத்தை நாம் பயன்படுத்துகிறோம்.

*இயேசுவின் இரத்தத்தின் மூலம், நான் குற்றவாளியாய் அல்ல, நிரபராதியாய் விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன். தேவன் என்னை நீதிமானாக காண்கிறார். ஒருபோதும் பாவம் செய்திராத நீதிமானாக, நான் ஆக்கப்பட்டிருக்கிறேன்.*

### 4. வேறுபிரித்து, பரிசுத்தமாக்குகிறது

இயேசுவின் இரத்தத்திற்கும், பரிசுத்தமாக்கப்படுதலும் இடையே உள்ள தொடர்பை புரிந்து கொள்ளும்படி, எபிரெயர் **13:12**-ம் வசனத்தை வாசிப்போம்: "அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தம் செய்யும்படியாக, நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்."

*24. வேறுபிரித்தல் என்ற வார்த்தைக்குரிய கிரேக்க வார்த்தை, ........................... என்ற வார்த்தையோடு தொடர்புடையது.*

*25. வேறுபிரித்து, பரிசுத்தப்படுத்துதலுக்கு இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, எதிர்மறையானது. இன்னொன்று, நேர்மறையானது:*

*(அ) இதன் ஒரு பக்கத்தில், நாம் ........................, கறை படுத்தக்கூடிய மற்ற எந்தவொரு விஷயத்திலிருந்தும் பிரித்தெடுக்கப்படுகின்றோம்.*

*(ஆ) இதன் இன்னொரு பக்கத்தில், நாம் தேவனுடைய பரிசுத்தத்தினால் ..............................................................*

எபிரெயர் **12:7-11** வசனங்களை வாசிப்போம். மாம்சப் பிரகாரமான தகப்பனுடைய ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்கும், தேவனுடைய ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கும் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை இங்கு நாம் வாசிக்கின்றோம்:

> *[7]நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால், தேவன் உங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? [8]எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளை களாயிருப்பீர்களே. [9]அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா? [10]அவர்கள் தங்களுக்கு நலம் என்று தோன்றினபடி கொஞ்சக் காலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார். [11]எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல், துக்கமாய் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.*

*26. மாம்சப்பிரகாரமான நம் தகப்பன்மார்கள் தங்களுக்கு சிறந்ததென்று தோன்றிய விதத்தில், நம்மை சிட்சித்தார்கள். ஆனால் தேவனுடைய ................. முற்றிலும் வித்தியாசமான ஒரு நிலையில் நடக்கின்றது - "அவருடைய பரிசுத்தத்தில் நாம் பங்கெடுக்கத்தக்கதாக, நம்முடைய பிரயோஜனத்திற்காகவே அவர் நம்மை சிட்சிக்கிறார். அவர் நம்மை ஒரு ஒழுக்கத்திற்குள் நடத்துகின்றார்." இது நம்முடைய நீதி அல்ல என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையாய், இது நம்முடைய பரிசுத்தம் அல்ல என்பதும் இருக்கின்றது. நாம் அவருடைய பரிசுத்தத்திலே பங்கெடுக்கின்றோம் என்பதுதான் உண்மை.*

*27. இயேசுவின் ................................ மூலம், நாம் அவருடைய பரிசுத்தத்தில் பங்கெடுக்கின்றோம்.*

நாம் இதை ஒரு தனிப்பட்ட அறிக்கையாகச் செய்வோம்:

*இயேசுவின் இரத்தத்தின் மூலம், நான் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறேன். நான் பாவத்தி லிருந்து தனியே பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறேன். நான் தேவனுடைய பரிசுத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறேன்.*

ஒவ்வொரு முறையும், இயேசுவின் இரத்தம் நமக்காக செய்திருக்கிறதைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ, அதை நாம் இவ்விதத்தில் அறிக்கைகளாகச் செய்யும்போது, நம்முடைய சாட்சி அறிக்கை எனும் ஈசோப்பை பாத்திரத்தில் இருக்கும் இரத்தத்தில் நனைத்து, நம் மீதே தெளித்துக் கொள்கிறோம்.

**5. ஜீவன்**

*28. இரத்தம்தான், ஆத்துமாவிற்காக ............................ செய்கிறது. லேவியராகமம் 17:11 சொல்கிறது: "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே." சிருஷ்டிகராகிய தேவனுடைய ஜீவன், இயேசுவின் இரத்தத்தில் இருக்கிறது என்பதைத்தான் இது நமக்குச் சொல்கிறது.*

*29. சாத்தானுடைய ராஜ்யத்தின் ஒட்டுமொத்த வல்லமையைக் காட்டிலும், இயேசுவினுடைய இரத்தத்தின் ஒரு துளியில், மிகவும் அதிகமான வல்லமை இருக்கின்றது. காரணம், தேவனை ஒருவரும் சிருஷ்டிக்கவில்லை. அவருடைய நித்திய, அளவில்லா, முடிவில்லா ஜீவனே அந்த இரத்தத்திற்குள் இருக்கின்றது. அந்த இரத்தத்தின் வல்லமையை நாம் பெற்றிருக்கிறோம். வேறு எதுவும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே அந்த ................ இருந்தது.*

யோவான் **6:53-57** வசனங்களில், இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தத்தைக் குறித்த சத்தியங்களை நாம் வாசிக்கின்றோம்:

*53 இயேசு அவர்களை நோக்கி, "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்*

*பண்ணாமலும் இருந்தால், உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். [54]என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிற வனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன். [55]என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது. என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. [56]என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான். நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். [57]ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிற வனும் என்னாலே பிழைப்பான்.*

*30. கர்த்தரின் திருப்பந்தியை, அவருடைய ...................... நினைவாக அனுசரிக்கின்றோம் என்று பலர் போதிக்கின்றனர். ஆனால் அதற்கும் அதிகமான ஒன்றைத்தான் வேதவசனம் நமக்குச் சொல்கிறது. நாம் இயேசுவின் மாம்சத்தைப் புசிக்கின்றோம், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுகிறோம் என்று வேதாகமம் சொல்கிறது. இதற்கான காரணம் எளிமையானது: சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்திற்குள், அவருடைய நித்திய ஜீவனை நாம் பெற்றுக் கொள்ளும்படியாக இதை அனுசரிக்கின்றோம்.*

**1** கொரிந்தியர் **10:16** சொல்கிறது: “நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா **?** நாம் பிட்கிற அப்பம், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா **?**”

*31. நாம் திருப்பந்தியை அனுசரிக்கும்போது, நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ............................, இரத்தத்திலும் பங்கெடுக்கின்றோம்.*

*பிறகு 1 கொரிந்தியர் 11-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:*

*[23]நான் உங்களுக்கு ஒப்புவித்ததை கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, [24]ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, “நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி*

*இதைச் செய்யுங்கள்," என்றார். [25]போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்," என்றார்.*

*[26]ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தை புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்.*

*32. நாம் ஏன் கர்த்தருடைய திருப்பந்தியில் பங்கெடுக்கின்றோம் என்பதற்கு இந்த வேதப்பகுதியிலிருந்து இரண்டு முக்கியமான காரணங்களை நாம் கற்றுக் கொள்கின்றோம்:*

*(அ) சரீரம் (அப்பம்) மற்றும் இரத்தத்தை (திராட்சை ரசம்), இவ்விரண்டையும் .......................... நினைவாகச் செய்கின்றோம். ஆனால் அவரை நினைவுகூருவதோடு நின்று விடாமல், நாம் இன்னொன்றையும் செய்கின்றோம். நாம் சரீரத்தையும், இரத்தத்தையும் உட்கொள்கின்றோம்.*

*(ஆ) கர்த்தராகிய இயேசு திரும்பவும் வரும்வரை, நாம் அவருடைய மரணத்தை ........................... - நாம் இதை எப்பொழுதாவது* **அரிதாக** *அனுசரிக்காமல், நாம் இதில்* **அடிக்கடி** *பங்கெடுக்க வேண்டும்.*

*33. நாம் கர்த்தருடைய திருப்பந்தியில் பங்கெடுக்கும்போது, இப்பொழுதைய இந்தக் காலகட்டத்தை விட்டு நாம் வெளியே வந்து விடுகின்றோம். ........................ தவிர, நமக்கு வேறு கடந்தகாலம் இல்லை. அவருடைய வருகையைத் தவிர, நமக்கு வேறு எதிர்காலம் இல்லை. இயேசு வரும்வரை, நாம் அவருடைய மரணத்தை அறிவிக்கின்றோம். ஒவ்வொரு முறையும், நாம் அதைச் செய்யும்போது, அவர் திரும்பவும் வருகின்றார் என்பதை நமக்கு நாமே நினைப்பூட்டிக் கொள்கிறோம்.*

இப்பொழுது நாம் இதை விசுவாசத்தினால் அறிக்கை செய்வோம்:

*கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் உம்முடைய இரத்தத்தை பானம் பண்ணும்போது, அதன் மூலம், உம்முடைய முடிவில்லாத,*

*நித்திய ஜீவனையே நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். நன்றி கர்த்தாவே.*

இப்பொழுதே, அவரைப் பெற்றுக் கொள்ளுங்கள். தேவனுடைய ஜீவன், உங்களை, உங்களுடைய இருதயத்தை, உங்களுடைய மனதை, உங்களுடைய சரீரத்தையும் கூட நிரப்புவதாக. காலப்போக்கில், இந்த ஜீவன் மரணத்தை விழுங்கி விடும். ஆனால் நம்முடைய சரீரத்தில், வியாதிகள் மற்றும் பெலவீனங்கள் மூலம் மரணத்தின் கிரியை நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஜீவனால் இந்த மரணத்தின் கிரியைகள் விழுங்கப்படுகின்றன. நம்முடைய புறம்பான மனுஷன் அழிந்து கொண்டே போகின்றான்; நம்முடைய உள்ளான மனுஷனோ நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகின்றான் என்று பவுல் எழுதியிருக்கிறார். இப்பொழுது நம்முடைய புறம்பான மனுஷன் தன் இலக்கை அடைவதற்கு வேண்டிய ஜீவன், நம்முடைய உள்ளான மனுஷனுக்குள் இருக்கின்றது.

### 6. பரிந்து மன்றாடுகின்றது

இயேசுவின் இரத்தத்தினால் நமக்கு உண்டாயிருக்கிற கடைசி இரண்டு நன்மைகள், இந்தக் காலகட்டத்திலிருந்து நம்மை வெளியே எடுத்து, நித்திய வானமண்டலங்களுக்குள் கொண்டு செல்கிறது. அங்குதான் நாம் சென்றடையப் போகின்றோம்.

புதிய உடன்படிக்கையின் கீழ் இப்பொழுது நமக்கு உண்டாயிருக்கிற அனுபவத்தை, பழைய உடன்படிக்கையின் கீழ், மலையில் தேவனை சந்தித்த மோசேயின் அனுபவத்தோடு ஒப்பிட்டு, எபிரெயர் 12-ம் அதிகாரத்தில் அதன் ஆசிரியர் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

*[22]நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், [23]பரலோகத்தில் பெயர் எழுதியிருக்கிற முதற்பேறான வர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப் பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், [24]புது உடன்படிக்கை யின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும், நன்மையானவை களைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.*

முதலில், “நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்” என்று கடந்த காலத்தில் நிகழ்ந்த ஒன்றாகச் சொல்லப்பட்டிருப்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். நாம் இங்கு **இனிமேல் வரப்போவதில்லை.** மாறாக, நாம் இங்கு ஏற்கனவே **வந்திருக்கிறோம்.**

*34. எட்டு விஷயங்களிடத்தில் நாம் வந்திருக்கிறோம்:*

*(அ) ................. மலை*

*(ஆ) ஜீவ தேவனுடைய நகரமாகியிய பரம ......................... - இது இப்பொழுது பூமியிலிருக்கின்ற எருசலேம் பட்டணத்தைக் குறிக்கவில்லை. மாறாக, இது பரம எருசலேமாகும்.*

*(இ) ஆயிரம் பதினாயிரமான .............................. - கொண்டாட்ட உணர்வில் கூடியிருக்கின்றனர்.*

*(ஈ) பரலோகத்தில் பெயர் எழுதியிருக்கிற முதற்பேறான வர்களின் ........... - இவர்கள் மறுபடியும் பிறந்தவர்கள். இவர்களுடைய பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.*

*(உ) எல்லோருக்கும் ...................... தேவன்*

*(ஊ) ........................ நீதிமான்களுடைய ஆவிகள்*

*(எ) புது ............................... மத்தியஸ்தராகிய இயேசு - இது நமக்குத் தேவையான இன்னொரு அம்சமாக இருக்கின்றது. காரணம், தேவனுடைய நியாயத்தீர்ப்பை ஒருபோதும் நம்மால் தனியாக சந்திக்க முடியாது. எல்லா பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிக்கக்கூடிய இயேசுவின் கிருபாதார பலி, நமக்குத் தேவையாயிருக்கிறது.*

*(ஏ) ஆபேலின் இரத்தம் பேசினதைக் காட்டிலும் மேலானவைகளைப் பேசுகிற ................................. இயேசுவின் இரத்தம்.*

இயேசுவின் இரத்தத்திற்கும், ஆபேலின் இரத்தத்திற்கும் இடையே உள்ள மூன்று முக்கியமான வித்தியாசங்கள்:

❖ ஆபேலின் இரத்தம், அவனுடைய சித்தத்திற்கு எதிராக சிந்தப்பட்டது. ஆனால் இயேசு தாமாகவே முன் வந்து, தம் இரத்தத்தைச் சிந்தினார்.

❖ ஆபேலின் இரத்தம், பூமியில் தெளிப்பட்டது. ஆனால் இயேசுவின் இரத்தமோ மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெளிக்கப்பட்டது.

❖ ஆபேலின் இரத்தம், பழிவாங்குதலுக்காக கதறியது. ஆனால் இயேசுவின் இரத்தமோ இரக்கத்திற்காக மன்றாடியது.

இந்த ஆச்சரியமான சத்தியத்தை நாம் அறிக்கை செய்வோம்:

*கர்த்தாவே, உமக்கு நன்றி. என்னால் ஜெபிக்க முடியாத நேரங்களிலும், இயேசுவின் இரத்தம் பரலோகத்தில் இப்பொழுதும் எனக்காக மன்றாடிக் கொண்டிருக்கிறது. அதற்காக உமக்கு நன்றி.*

### 7. பிரவேசிக்கும்படி அனுமதி தந்திருக்கிறது

எபிரெயர் 10-ம் அதிகாரத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:

*[19]ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், [20]அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், [21]தேவனுடைய வீட்டில் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், [22]துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். [23]அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.*

*35. எபிரெய நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிற மூன்று வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் ஒரு புதிய சத்தியத்தைக் கற்றுக் கொள்கின்றோம். இயேசுவே நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர் என்று எபிரெயர் 3:1 சொல்கிறது. "நம்முடைய அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்," என்று எபிரெயர் 4:14 சொல்கிறது. "நம்முடைய அறிக்கையை அசைவில்லாமல், உறுதியாய்*

*பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்,'' என்று எபிரெயர் 10:23 சொல்கிறது. நம்முடைய அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தேவை நமக்கு இருக்கிறதென்றால், அங்கே நிச்சயம் பயங்கரமான ................................ வரப் போகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம்மைச் சுற்றி நடக்கின்ற காரியங்கள் முரண்பட்டவைகளாகத் தெரிந்தாலும், சரியான அறிக்கையை நாம் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்.*

*36. ''புதிதும் ஜீவனுமான மார்க்கம்'' என்று 19-ம் வசனத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளை வாசிக்கும்போது, இதன் ஆசிரியர் ஒன்றை இங்கே நினைவுகூருகின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வருடத்திற்கு ஒருமுறை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்படி, திரைக்கும் கிருபாசனத்திற்கும் இடையே ஆரோன் இரத்தத்தை .................. முறை தெளிக்க வேண்டியிருந்தது.*

தேவனுடைய அளவற்ற பேரன்பை (Extravagant Love) விரித்துரைக்கும் டெரிக் பிரின்ஸின் இன்னொரு போதனையில், ஆரோனைப்போல இயேசுவும் தம்முடைய இரத்தத்தை ஏழு முறை சிந்தினார் என்று வேதவசனங்களிலிருந்து அவர் எடுத்துக் காண்பித்தார்: 1) கெத்சமெனே தோட்டத்தில், அவருடைய வியர்வை இரத்தத் துளிகளாக விழுந்தது (லூக்கா 22:44); 2) பிரதான ஆசாரியனுடைய வீட்டில், அவர் கோல்களினால் அடிக்கப்பட்டார் (மத்தேயு 26:67); 3) இயேசு வாரினால் அடிக்கப்பட்டார் (மத்தேயு 27:26); 4) அவருடைய தாடிமயிரெல்லாம் இழுக்கப்பட்டன (ஏசாயா 50:6). 5) முட்களினால் செய்யப்பட்ட ஒரு கிரீடத்தை அவருடைய தலையில் வைத்தனர் (மத்தேயு 27: 28,29); 6) இயேசுவினுடைய கைகளையும், கால்களையும் ஆணிகளால் சிலுவையில் அறைந்தனர் (மத்தேயு 27:35); 7) அவருடைய விலாப் பகுதி ஈட்டியினால் குத்தப்பட்டது (யோவான் 19:34).

இந்த ஆச்சரியமான சத்தியத்தை அறிக்கை செய்வோம்:

*கர்த்தாவே, உமக்கு நன்றி. இயேசுவின் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் மூலம், இந்தப் பிரபஞ்சத்திலேயே மகா பரிசுத்த ஸ்தலமாகிய உம்முடைய பிரசன்னத்திற்குள் நுழையும் அனுமதியை நான் பெற்றிருக்கிறேன்.*

இதை முடிக்கின்ற இந்நேரத்தில், இந்தச் செய்தியின் ஆரம்பத்தில் நாம் கற்றுக் கொண்ட வெளிப்படுத்தின விசேஷம் **12:11**-ம் வசனத்தை திரும்பவும் நினைவுகூருவோம்:

*மரணமே நேரிடுகிறதாயிருந்தாலும், அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

**402**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/47**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி நான்கு>>*

# சுகமடைவதை தடுக்கின்ற கண்களுக்குத் தெரியாத சில தடைகள்[4258]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

டெரிக் பிரின்ஸ் தன்னுடைய ஊழியம் முழுவதிலும், பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேவனுடைய வல்லமையினால் அற்புதவிதமாக சுகமாக்கப்பட்டதை நேரில் பார்த்திருக்கிறார். ஆனால் அதே நேரத்தில், அநேகர் சுகத்தைப் பெற்றுக் கொள்ளாமலும் போயிருக்கிறார்கள். தேவனுக்கு உண்மையாய் வாழ்ந்த அவருடைய பிள்ளைகளும் இதில் அடங்குவர். எனவே எல்லோரும் சுகத்தைப் பெற்றுக் கொள்வதில்லை என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியம். அதை மறைக்கும்படி நாம் முயற்சிக்கக்கூடாது.

ஏன் சிலர் சுகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள், ஏன் மற்றவர்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்வதில்லை என்பதற்கான காரணத்தை நம்மால் விளக்கிச் சொல்ல முடியாது. ஆனால் உபாகமம் 29:29-ம் வசனம், நமக்குச் சரியான திசையைக் காண்பிக்கிறது: "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." தேவனுடைய இரகசியங்கலையெல்லாம் துருவி ஆராயும்படி நாம் அழைக்கப்படவில்லை. மாறாக, வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களைக் கற்றுக் கொண்டு, அவற்றின்படி செயல்படும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தடையாயிருக்கும் சில காரியங்களை தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் அவற்றைக் கற்றுக் கொண்டு, புரிந்து கொண்டு, அவற்றின்படி செயல்படும்போது, நாம்

அந்தத் தடைகளை அகற்றுகின்றோம். கர்த்தரிடமிருந்து சுகத்தையும் நாம் பெற்றுக் கொள்கின்றோம். சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தடையாயிருக்கும் ஏழு பொதுவான விஷயங்களை, வேதவசனத்தின் அடிப்படையிலும், தன்னுடைய பரந்த அனுபவத்தின் அடிப்படையிலும், டெரிக் பிரின்ஸ் நமக்கு படிப்படியாகக் கற்றுக் கொடுக்கிறார். இவர் அதை ஒரு முறையான ஒழுங்கின்படி செய்கிறார். இது ஆச்சரியமான விதத்தில் தேவன் தரும் சுகத்தை நம்முடைய வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளும்படி, நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு உதவியாயிருக்கும்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம், நீங்கள் பெறும்படி தேவன் உங்களுக்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற சுகத்திற்கும், உங்களுக்கும் இடையே எழும்பி நிற்கின்ற, நீங்கள் அகற்ற வேண்டிய தடைகளைக் குறித்து, இந்தச் செய்தியின் மூலம் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்று நம்புகிறோம்.

இயேசுவின் தழும்புகளால் நாம் சுகமாக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதவசனம் நமக்குச் சொல்கிறது. சில நேரங்களில், இது உடன டியாக நிகழ்வதில்லை. ஆனால் அறியாமையினால், அவிசுவாசத்தினால், அறிக்கை செய்யாத பாவத்தினால், பகை வெறுப்பினால், மற்றவர்களை மன்னியாததினால், பில்லிசூனிய கிரியைகளில் ஈடுபடுவதினால், ஃபிரீ மேசன்ட்ரி போன்ற பொய்யான மதங்களில் ஈடுபாடு கொள்வதினால் உண்டாகிற சாபங்களோடு, கூடுதலாக எழும்பி நிற்கின்ற தடைகளை அகற்றுவதற்கு உங்களால் ஒன்றைச் செய்ய முடியும். அதோடு வியாதியை உண்டாக்குகிற அல்லது சுகத்தை தடுக்கின்ற பிசாசின் கிரியைகளைக் குறித்தும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். காரணம், நாம் இடம் கொடுப்போம் என்றால், நம் வாழ்க்கையில் கிரியை செய்வதற்கு பிசாசுக்கு சட்டப்பூர்வமான உரிமை உண்டு.

சுகத்தைக் குறித்த சத்தியத்தைக் கற்றுக் கொள்ளும்போது, ஒன்றை நாம் நிச்சயமாக நினைவில் கொள்ள வேண்டும். சுகத்திற்கான தேவையைக் காட்டிலும், தேவனோடு உள்ள உறவிற்கான தேவைதான் எல்லாவற்றையும் விட நமக்கு அதிமுக்கியமானதாக இருக்க வேண்டும்.

பெலத்திற்கான ஆதாரம் (The Source of Strength) என்ற தலைப்பில் டெரிக் பிரின்ஸ் போதித்த செய்தியிலிருந்து இதோடு தொடர்புடைய மூன்று முக்கியமான மேற்கோள்களைப் பார்ப்போம்:

*அடிப்படையில் பார்த்தால், நீங்கள் வல்லமையைக் குறித்து பேசுங்கள். ஜனங்களுடைய செவிகள் திறந்திருக்கும். சுகத்தைக் குறித்துப் பேசுங்கள். அவர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். முடிவே இராது. கிறிஸ்தவ ஊழியத்தின் ஆச்சரியமான சில விஷயங்களைக் குறித்து பேசுங்கள். ஜனங்கள் அதைக் கேட்க ஆயத்தமாயிருப்பார்கள். ஆனால் மெய்யாகவே தேவனை க் குறித்து, மிகவும் குறைவாக போதிக்கப்படுகிற ஒரு நிலையைத்தான் நான் பெரும்பாலும் காண்கிறேன். ஒன்றை நான் சொல்கிறேன். தேவனுக்குள் வேர் விடாத எந்த ஒரு விஷயமும், பிசாசினுடைய வெள்ளங்களில் அடித்துச் செல்லப்படும் என்பது நிச்சயமான உண்மை.*

*தேவனுடைய பிரதானமான விருப்பம், நம்மை ஒரு உடன்படிக்கைக்குள் கொண்டு வருவதோ அல்லது ஒரு பிரமாணத்திற்குள் கொண்டு வருவதோ அல்லது ஒரு வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் கொண்டு வருவதோ அல்ல. மாறாக, நம்மை அவரோடு சேர்த்துக் கொள்வதுதான், அவருடைய பிரதானமான விருப்பமாயிருக்கிறது. அதுதான் அவருடைய ஆழமான ஏக்கமாய், வாஞ்சையாயிருக்கிறது. அதில் அவர் உறுதியான நோக்கம் கொண்டிருக்கிறார். தேவனோடு ஆழமான, நெருக்கமான, தனிப்பட்ட ஐக்கியம் கொண்டிருப்பதுதான், இன்றைய ஆபத்தான உலகத்தில், ஒரே பாதுகாப்பாய் இருக்கிறது என்பதை ஒரு ஆலோசனையாய் நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்.*

*ஒன்றை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். நீங்கள் தேவனைத் தவிர்த்து விடுவீர்கள் என்றால், நீங்கள் எல்லாவற்றையும் தவற விட்டு விட்டீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நீங்கள் தேவனுக்குள் மறைந்து கொள்ளாமல், ஒரு போதனையிலோ அல்லது ஒரு சபை அமைப்பிலோ அல்லது மற்ற ஊழியங்களிலோ அதீத ஆர்வம் காட்டுகிறீர்கள் என்றால், நீங்கள் ஜீவநாடியாய் இருக்கும் ஒன்றையே தவற விட்டு விட்டீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.*

*அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவரால் முடிந்ததை, அவர் உங்களுக்குச் செய்வார். ஆனால் பரலோகத்தில் என்ன நடக்கின்றது என்பதை உற்றுக் கவனிப்பீர்கள் என்றால், தேவனுடைய இருதயத்தின் அழுகையை உங்களால் கேட்க முடியும். "நான் கொடுக்கிற எல்லா நன்மைகளும் அவர்களுக்கு வேண்டும். ஆனால் அவர்களுக்கு என் மீது, என்னைக் குறித்து எந்த ஆர்வமுமில்லை," என்று ஆழ்ந்த வருத்தத்தோடு தேவன் பேசுகிற வார்த்தைகளை உங்களால் கேட்க முடியும்.*

இது ஒருபோதும் நமக்குப் பொருந்த வேண்டாம் என்பதில் நாம் உறுதியாய் இருப்போம். தேவன் அருளும் சுகம், ஆச்சரியமானது. ஆனாலும் அது நமக்கு எப்பொழுதும் இரண்டாம் பட்சமான ஒரு விஷயமாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய விருப்பம், முழுவதுமாய் தேவனையே மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

## *கோடிட்ட இடங்களை நிரப்புக:*

### *அறியாமை*

பெரும்பாலும் பொதுவாக காணப்படும் முதல் தடை, அறியாமை ஆகும்.

*1. அறியாமையைக் குறித்து நாம் பேசும்போது, அது குறிப்பாக, தேவனுடைய ............................ குறித்த அறியாமையைக் குறிக்கின்றது. தேவனுடைய வார்த்தையின் தெளிவாக, எளிமையான சத்தியங்களையும், போதனைகளையும் குறித்து, ஏராளமான கிறிஸ்தவர்கள் இன்னும் அறியாமலிருக்கிறார்கள் என்பது உண்மை.*

*2. ஏசாயா 5:13-ல், தேவன் இவ்வாறு சொல்கிறார்: "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப் போகிறார்கள்." தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறியாமைதான், அவர்களுடைய முக்கியமான பிரச்சனை யாயிருந்தது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு குறிப்பாக, ........................ இயேசு என்ன செய்து முடித்தார் என்பதைக் குறித்த அறிவு இல்லாமல் இருப்பதுதான், முக்கியமான ஒரு பிரச்சனையாயிருக்கிறது.*

*3. இதே போன்ற ஒன்றை, ஓசியா 4:6-ம் வசனத்திலும் தேவன் சொல்கிறார்: "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் (அழிந்து போகின்றார்கள்)." நம்முடைய கற்றுக் கொள்ளுதல் என்பது படிப்படியாக நடக்க வேண்டிய ஒன்றாக இருக்கின்றது. ஆனாலும், தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆவிக்குரிய ஊட்டத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பசி நமக்குள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மால் ............................... வெளியே துரத்த முடியும்.*

நம்மை மன்னிக்கும்படி தேவனிடம் நாம் ஜெபிப்போம். தேவனுடைய வார்த்தையையும், அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்ளும்படி, நம்மையே முழுமையாக அவரிடம் அர்ப்பணிப்போம்.

> *ஓ தேவனே, உம்முடைய வார்த்தை மற்றும் உம்முடைய சித்தத்தைக் குறித்த அறியாமையில் நான் வாழ்கின்றேன். அது என்னுடைய தவறுதான். நான் அதை ஒத்துக் கொள்கிறேன். கர்த்தராகிய இயேசுவே, இதை ஒரு பாவமாக நான் அறிக்கை செய்கிறேன். நான் இதைக் குறித்து மனந்திரும்புகிறேன். என்னை மன்னியும். இந்த நாளிலிருந்து, உம்முடைய வார்த்தையை வாஞ்சையாய், ஜாக்கிரதையாய் நாடித் தேடும்படி எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## அவிசுவாசம்

சபையில் மிகவும் அதிகமாய் காணப்படும் அடுத்த தடை, அவிசுவாசமாகும்.

*4. பல சபைகளில், அவிசுவாசம் என்பது சாதாரணமான, எவ்விதத் தீங்கையும் உண்டாக்காத ஒரு பெலவீனமாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் அது உண்மையல்ல. அவிசுவாசம், ஒரு .............. என்றே புதிய ஏற்பாடு சொல்கிறது. நாம் இதைப் புரிந்து கொள்வோம் என்றால், அவிசுவாசத்தை விட்டு வெளியேறும்படி நாம் ஆயத்தமாவோம். நமக்கென்று தேவன் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறவைகளைப் பெறும்படி, நாம் விசுவாசிக்க ஆரம்பிப்போம். அதற்கு அங்கே ஒரு வழி திற க்கும்.*

*5. எபிரெயர் 3:12-13 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாள்தோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்." அவிசுவாசத்தை இந்நிருப ஆசிரியர் எவ்வாறு அழைக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர் அதை ........................ என்றழைக்கிறார். அவர் அதை பாவம் என்றழைக்கிறார்.*

அவிசுவாசத்தின் நிமித்தம், நாம் எல்லோருமே தேவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஆகையால் இப்பொழுது நாம் நம்முடைய விசுவாசத்தை மிகவும் எளிமையாக அறிக்கை செய்வோம்:

> *ஓ தேவனே, இயேசுவின் நாமத்தில் நான் உம்மிடம் வருகின்றேன். என்னுடைய அவிசுவாசம் எனும் பாவத்தை நான் அறிக்கை செய்கிறேன். நான் அதற்கு எந்த சாக்குபோக்கையும் சொல்லும்படி முயற்சிக்கவில்லை. நானே அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். என்னை மன்னியும். இந்தப் பாவத்திலிருந்து என்னை விடுதலையாக்கும். உம்முடைய விசுவாசத்தை எனக்குத் தந்தருளும். தனிப்பட்ட விதத்தில், நான் இதை அறிக்கையாகச் செய்கின்றேன். பிதாவாகிய தேவனை நான் விசுவாசிக்கின்றேன். அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவை நான் விசுவாசிக்கிறேன். பரிசுத்த ஆவியானவராகிய தேவனை நான் விசுவாசிக்கிறேன். இவர்கள் வேதாகமத்தில் தந்திருக்கிற வெளிப்பாட்டை நான் விசுவாசிக்கிறேன். தேவனுடைய மெய்யான, அதிகாரப்பூர்வமான வார்த்தையை நான் விசுவாசிக்கிறேன். "உம்முடைய வார்த்தையே சத்தியம்" (யோவான் 17:17) என்ற கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளை நான் விசுவாசிக்கிறேன். ஆமென்.*

## *அறிக்கை செய்யப்படாத பாவம்*

அறிக்கை செய்யப்படாத பாவம் என்ற இந்த மூன்றாவது தடை, எல்லோருடைய வாழ்க்கையிலும் காணப்படுவதில்லை. ஆனால் இது பலருடைய வாழ்க்கையில் காணப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

*6. நீதிமொழிகள் 28:13-ம் வசனத்தின் ஆரம்பப் பகுதி இவ்வாறு சொல்கிறது: "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்........" இது ஒன்றை நம் நினைவுக்குக் கொண்டு வருகின்றது. எப்படியாவது வாழ்க்கையில் வெற்றியடைந்து விட வேண்டும் என்று நாம் தீவிரமாக முயற்சிக்கலாம். அதற்காக நாம் பல விஷயங்களையும் நாடித் தேடலாம். ஆனால் உங்களுடைய வாழ்க்கையில் இன்னும் மன்னிக்கப்படாத பாவம் மூடப்பட்டு, மறைக்கப்பட்ட நிலையில் இருக்குமென்றால், நாம் .......................... மாட்டோம்.*

*7. தங்களுடைய பாவங்களை ....................... செய்யவில்லை என்றால், தேவனால் அவற்றைக் கண்டுபிடிக்க முடியாது என்றுதான் பலரும் சிந்திக்கின்றார்கள். ஆனால் இது அபத்தமானது. காரணம், தேவன் ஏற்கனவே எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். நீங்கள் என்னவெல்லாம் செய்திருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளும்படி, தேவன் உங்களை அறிக்கை செய்யச் சொல்லவில்லை. தேவன் உங்களை அறிக்கை செய்யச் சொல்கிறார். காரணம், நீங்கள் அதைச் செய்யும்போது, அவரால் உங்களுக்கு உதவி செய்ய முடியும். அவர் அதை அறிந்து கொள்ளும்படி அல்ல, உங்களுடைய நன்மைக்காகவே அவர் அதைச் செய்யச் சொல்கிறார்.*

*8. நீதிமொழிகள் 28:13-ம் வசனத்தின் இரண்டாவது பகுதி இவ்வாறு சொல்கிறது: "அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." நம் மீது .......................... காண்பிக்கும்படியே, நம் பாவத்தை அறிக்கை செய்யும்படி தேவன் நம்மிடம் சொல்கிறார். இதைப் பார்க்கும்படி, இவ்வசனம் நமக்கு உதவி செய்கிறது. இதில் நம்முடைய பங்கு, நம் பாவங்களை அறிக்கை செய்து, அவற்றை விட்டுவிடுவதுதான்.*

நம் வாழ்க்கையில், இன்னும் அறிக்கை செய்யப்படாத பாவம் ஏதாகிலும் இருந்தால், அதை நம் நினைவுக்குக் கொண்டு வரும்படி பரிசுத்த ஆவியானவரிடம் கேட்போம். நாம் அதை அறிக்கை செய்ய வேண்டும். தேவன் இதினால் ஒருபோதும் சங்கடப்பட மாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். உங்களுடைய இருதயத்தில் அமர்ந்திருந்து, கர்த்தருக்காக காத்திருங்கள். நம்மை

குற்ற உணர்வுக்குள் தள்ளும்படி அல்ல, நம்மை மீட்கும்படியாகவே, நம் பாவங்களை அறிக்கை செய்யும்படி, அவர் நம்மிடம் சொல்கிறார் என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் ஒன்றைக் குறித்து உங்களிடம் பேசுகின்றார் என்றால், அதைக் குறித்து இவ்வாறு ஜெபியுங்கள்:

*தேவனே, இது நான் செய்த பாவம் என்று ஒத்துக் கொள்கிறேன். என்னை மன்னியும். இந்தப் பாவத்தை விட்டு விலகும்படி, நான் தீர்மானிக்கிறேன். தயவு செய்து, என்னை மன்னியும். இயேசுவின் இரத்தத்தினால் என்னைக் கழுவி, சுத்திகரியும்.*

1 யோவான் **1:9** சொல்கிறது: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்." தேவனுடைய மன்னிப்பை நீங்கள் பெற்றுக் கொள்ளும்போது, அவருடைய இரக்கம் மற்றும் கிருபைக்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

இந்தப் பாவங்களின் நிமித்தம், உங்களையே நீங்கள் மன்னிக்க வேண்டிய அவசியம் இருந்தால், இவ்வாறு ஜெபியுங்கள்:

*தேவனே, நீர் என்னை மன்னித்திருக்கிறபடியால், நான் என்னையே மன்னிக்கின்றேன். ஆமென்.*

## *மற்றவர்களை மன்னியாத நிலையும், பகைவைராக்கியமும்*

அறியாமை, அவிசுவாசம், இன்னும் அறிக்கை செய்யாத பாவம் என்ற முந்தின மூன்று தடைகளோடு, இந்த நான்காவது தடை நெருக்கமான விதத்தில் தொடர்பு கொண்டிருக்கிறது. மற்றவர்களை மன்னியாத நிலையும், பகைவைராக்கியமும்தான் இந்தத் தடையாயிருக்கிறது. திரும்பவும் சொல்கிறேன், இதுவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. ஆனாலும் வேதவசனங்கள் என்ன சொல்கிறதோ, அதை நாம் கற்றுக் கொண்டு, அதை விசுவாசித்து, அதன் அடிப்படையில் செயல்படுவோம் என்றால், இந்தத் தடையை நாம் அகற்றி விட முடியும்.

மாற்கு **11:25**-ல், இயேசு இவ்வாறு சொல்கிறார்: "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை

உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்."

*9. மாற்கு சுவிசேஷத்திலிருந்து மேற்கோள் காண்பிக்கப்பட்டிருக்கிற இந்த வசனத்தில், ஜெபிக்கும்போது, நாம் என்ன சிந்தையில் இருக்க வேண்டும் என்பதைக் குறித்து இயேசு பேசுகின்றார். ஒருவருக்கு விரோதமான ................. நமக்குள் இருக்கின்றதா என்று நம்முடைய இருதயங்களை சோதித்துப் பார்க்கும்படி அவர் நமக்குச் சொல்கிறார்.*

*10. நம்முடைய இருதயத்தில், பகைவைராக்கியத்தையும், மற்றவர்களை மன்னியாத நிலையையும் வைத்துக் கொண்டு, நாம் .......................... என்றால், அது நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்காதபடி ஒரு தடையாய் மாறி விடும்.*

*11. நாம் எதற்காக ஜெபிக்கின்றோமோ, அதைப் பெற்றுக் கொள்ளும்படி, எதையும் மறைக்காமல், திறந்த இருதயத்தோடு நாம் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். நமக்கும் தேவனுக்கும் இடையே ஒரு தெளிவான ஜெப உரையாடல் இருக்க வேண்டும். ......................... விரோதமாக நம் இருதயத்தில் பகைவைராக்கியம் இருக்குமென்றால், முதலில் நாம் அவரை மன்னிக்க வேண்டும். பிறகுதான் நம் ஜெபங்களை நாம் தொடர வேண்டும்.*

*12. மன்னித்தல் என்பது ஒரு ................. அல்ல. இது உறுதியாய் சித்தங்கொண்டு நாம் எடுக்க வேண்டிய ஒரு தீர்மானமாக இருக்கின்றது. நாம் மற்றவர்களை மன்னிக்கும்போது, நம்மை மன்னிக்கும்படி தேவனுக்கு ஒரு வழியை நாம் அமைத்துக் கொடுக்கின்றோம். மற்றவர்கள் நமக்கு பட்ட கடன்களைக் காட்டிலும், மிகவும் அதிகமாக நாம் தேவனுக்குக் கடன்பட்டிருக்கிறோம். மன்னித்தல் என்பது ஆவிக்குரிய முதிர்ச்சி அடைந்தவர்கள் மட்டுமே செய்யக்கூடிய ஒன்று அல்ல. இது நம்முடைய நன்மைக்காக, நம் மீதே அக்கறையுள்ளவர்களாய் நாம் செய்யக்கூடிய ஒரு விஷயமாயிருக்கிறது.*

எபிரெயர் **12:14-15** வசனங்களை வாசிப்போம்:

*யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்து எழும்பி கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்.........எச்சரிக்கையாயிருங்கள்.*

பிரச்சனையை உண்டாக்கக்கூடிய, நம்மை கறைப்படுத்தக்கூடிய பகைவைராக்கியத்தின் வேர் ஏதாகிலும் நம் இருதயத்தில் இருந்தால் அதை வெளிப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவரிடம் நாம் ஜெபித்துக் கேட்போம். நம்முடைய பெற்றோர் நம்மை சரியாக நடத்தவில்லை என்று நாம் உணருவோம் என்றால், நாம் அவர்களை மன்னிக்க வேண்டும். நாம் அவர்களை கனம் பண்ண வேண்டும். காரணம், நம் பெற்றோரை நாம் கனம் பண்ண வேண்டும் (எபேசியர் **6:2-3**) என்பது ஒரு ஆசீர்வாத வாக்குத்தத்தத்தோடு வருகிற முதல் கட்டளையாக வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

*பரிசுத்த ஆவியானவரே, என் இருதயத்தில் இப்பொழுது என்னோடு பேசும் என்று இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கின்றேன். என் இருதயத்தில் பகைவைராக்கியம், மனக்கசப்பு, மன்னியாத நிலை ஏதாகிலும் இருந்தால், அதை எனக்கு வெளிப்படுத்தும். மன்னிப்பதற்கு விருப்பமுள்ளவனாய் நான் மாறும்படி எனக்கு உதவும்.*

ஒரு சில நிமிடங்கள், அமைதலாய் அமர்ந்திருந்து, கர்த்தருக்குக் காத்திருங்கள். அப்பொழுது அப்பொழுது அவர் அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலைகளை, அந்த நபர்களுடைய பெயர்களை அல்லது அவர்களுடைய முகங்களை உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வருவார். அப்படிப்பட்ட ஒன்றை கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்தும்போது, நீங்கள் பின்வரும் ஜெபத்தைச் செய்யலாம்:

*கர்த்தாவே, என் இருதயத்தில் பகைவைராக்கியமோ, மனக்கசப்போ, மன்னியாத நிலையோ இருந்தால், இப்பொழுதே நான் அவைகளை விட்டு விடுகிறேன். நான் அவற்றை கீழே வைத்து விடுகிறேன். ஒருவர் எனக்கு விரோதமாக தவறு செய்திருந்தால், என்னைக் காயப்படுத்தியிருந்தால், நான் அவர்களை மன்னிக்கின்றேன். தேவனே, நீர் என்னை மன்னியும். கர்த்தாவே, நான் அவர்களை உம்முடைய நாமத்தினால் மன்னிக்கின்றேன்.*

*கர்த்தராகிய இயேசுவே, நீர் என்னை மன்னிப்பீர் என்று விசுவாசிக்கின்றேன். நன்றி, கர்த்தாவே. இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## *பொய்யான தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுதல்*

நாம் பார்க்கப் போகின்ற அடுத்த தடையும், இன்றைக்கு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. பில்லிசூனிய, மாந்தரீகக் கிரியைகளில் ஈடுபடுவதுதான் அடுத்த தடையாய் இருக்கிறது. குறி சொல்லுதல், ஜோசியம் சொல்லுதல், ஔஜா பலகை, விக்கிரக ஆராதனை, ராசிபலன்-ஜாதகம் பார்த்தல், ராக் இசை போன்றவையெல்லாம் இதில் உள்ளடங்கியிருக்கிறது. மூட நம்பிக்கைகளும், சாத்தானை வழிபடும் முறைகளும் இன்றைய நம்முடைய கலாச்சாரத்தை ஊடுருவியிருக்கின்றன. இவையெல்லாம் எப்பொழுதும் சுகத்திற்கு தடையாய் இருக்கின்றன. டெரிக்கும், ரூத்தும் தங்களுடைய ஊழியத்தில் எண்ண முடியாத அளவிற்கு இதை அனுபவமாகக் கண்டிருக்கின்றன ர். சுகத்திற்காக ஜெபிக்கும்படி பலர் இவர்களிடம் வருவார்கள். ஆனால் மந்திரவாத, பில்லிசூனியக் கிரியைகளின் இருண்ட நிழல் அவர்களுடைய வாழ்க்கையின் மீது படிந்திருக்கும். அதுதான் அவர்களுக்கும், அவர்கள் நாடி வந்த சுகத்திற்கும் இடையே தடையாய் எழும்பியிருக்கிறது.

*13. யாத்திராகமம் 23-ம் அதிகாரத்தில், மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு பல கட்டளைகளைக் கொடுக்கிறான். ................ தேசத்தில் பின்பற்றப்படும் மதம் மற்றும் ஆராதனை வழிபாடுகளை விட்டு எவ்வாறு விலகியிருக்க வேண்டும், எவ்வளவு எச்சரிக்கையுடன் அதைப் பார்க்க வேண்டும் என்பதைக் குறித்தெல்லாம், அவர்கள் அங்கு வருவதற்கு முன்பே, மோசே அவர்களிடம் சொல்கின்றான்.*

*14. அந்த அதிகாரத்தின் 24-ம் வசனத்தில், மோசே சொல்கிறான்: "நீ அவர்களுடைய .................... பணிந்து கொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம் பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப் போடுவாயாக." வேறு வார்த்தைகளில் இதை இவ்வாறு சொல்லலாம்: பொய்யான தெய்வ வழிபாடுகளில் எவ்விதத்திலும் ஈடுபடக்கூடாது, எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.*

*15. அதன் அடிப்படையில் 25-26 வசனங்களில், மோசே தொடர்ந்து அவர்களிடம் இவ்வாறு பேசுகின்றான்: "உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள். அவர் உன் அப்பத்தையும், உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவார். கர்ப்பம் விழுகிறதும், மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவார்." எவ்வளவு ஆச்சரியமான வாக்குத்தத்தங்கள் இவை! கருச்சிதைவு உண்டாவதில்லை. மலடும் இருப்பதில்லை. பெண்களுக்கான பிரச்சனை எதுவுமில்லை. வியாதி இல்லை. பூரணமான ஆயுட்காலத்திற்கு உத்தரவாதம் உண்டு. யார் இவையெல்லாவற்றையும் வேண்டாம் என்று சொல்வார்கள்? ஆனால் .............................. தங்களுக்கிருக்கும் தொடர்பை முற்றிலும் முறித்துக் கொள்கிறவர்களுக்கு மட்டுமே இந்த எல்லா நன்மைகளும் உண்டாகும்.*

பொய்யான தெய்வங்களை வழிபடும் கிரியைகளின் ஈடுபாட்டிலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட வேண்டுமென்றால், பரிசுத்த ஆவியான வரிடமே அதைக் கேளுங்கள். தெரிந்தோ, தெரியாமலோ, அந்தக் கிரியைகளில் நீங்கள் எதில் ஈடுபட்டீர்கள் என்பதை உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வரும்படி, பரிசுத்த ஆவியானவரிடம் உதவி கேளுங்கள். அப்படிப்பட்ட ஒன்றை அவர் உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வருவார் என்றால், பின் வரும் ஜெபத்தை நீங்கள் செய்யலாம்:

*கர்த்தாவே, பொய்யான தெய்வங்களை வழிபடும் கிரியைகளில் அறிந்தோ, அறியாமலோ நான் பலமுறை ஈடுபட்டிருக்கிறேன். அது ஒரு பாவம் என்று நான் அறிக்கை செய்கிறேன். இப்பொழுதே நான் அதை விட்டு விடுகிறேன். என்னை மன்னியும். இப்பொழுது என்னை நான் அர்ப்பணிக்கின்றேன். திரும்பவும், இப்படிப்பட்ட காரியங்களில் நான் ஈடுபட மாட்டேன். கர்த்தாவே, என்னை மன்னியும். அவற்றின் ஆதிக்கத்திலிருந்து என்னை விடுதலையாக்கும். இப்பொழுதே எனக்கு அதைச் செய்தருளும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## *ஃப்ரீ மேசன்ட்ரி மற்றும் மற்ற பொய்யான மதங்கள்*

பொய்யான தெய்வங்களை வழிபடுவதில் நெருக்கமான விதத்தில் தொடர்புடைய இன்னொரு தடையைக் குறித்து யாத்திராகமம்

**23:32**-ல் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது: “அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் (தெய்வங்களோடும்) நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக.” தேவனுடைய ஜனங்கள், பொய்யான தெய்வங்களை வழிபடுகிற மற்ற ஜனங்களோடு ஏதோ ஒரு விதத்தில் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு சாத்தியம் இருக்கிறது. நீங்கள் அப்படிச் செய்வீர்கள் என்றால், அவர்களும் அவர்களுடைய பொய்யான தெய்வங்களும் செய்கிற பாவத்தோடு நீங்களும் உடன்படுகின்றீர்கள் என்று அர்த்தம்.

இது உங்களோடு எவ்விதத்திலும் தொடர்பில்லாத ஒரு விஷயம்போல தெரியலாம். இது உங்களுக்கு சாதாரணமான ஒன்றாக, அற்பமான ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் டெரிக் ஒரு குறிப்பிட்ட எடுத்துக்காட்டை சுட்டிக்காண்பித்தார். ஆங்கில மொழி பேசும் உலகம் முழுவதிலும் ஒரு இரகசிய சமுதாயம் மேலோங்கி இருக்கின்றது. இவர்களுக்குள் பொதுவான ஒரு உடன்படிக்கை இருக்கின்றது. இவர்கள் ஃப்ரீ மேசன்ட்ரி சமூகத்தின ர். நீங்கள் ஃப்ரீ மேசன்ட்ரியின் கிரியைகளில் ஈடுபடுகின்றீர்கள் என்றால், நீங்கள் ஒரு சாபத்தின் கீழ் இருக்கின்றீர்கள் என்று அர்த்தம். நீங்கள் மட்டுமல்ல, உங்களுடைய குடும்பத்தாரும், உங்களுடைய சந்ததியாரும் சாபத்தின் கீழ் வருகின்றனர். ஃப்ரீ மேசன்ட்ரி என்பது ஒரு பொய்யான மதமாகும்.

ஒரு எளிமையான எடுத்துக்காட்டைப் பார்ப்போம். ராயல் ஆர்க் டிகிரி, ஜாபுலோன் (JA-BUL-ON) என்ற பெயர் கொண்ட தெய்வத்தை அங்கீகரிக்கின்றது. ஜா (JA) என்றால் யேகோவா (JEHOVA) என்பதன் சுருக்கமாகும். புல் (BUL) என்றால் பாகால் (Baal) என்பதன் சுருக்கமாகும். ஒன் (ON) என்றால் ஒசிரிஸ் (Osiris) என்பதன் சுருக்கமாகும். மெய்யான தேவனையும், பாகாலையும், ஒசிரிஸ் என்பதையும் சேர்த்து, இணையாய் வைத்து, ஆராதிக்கும் எந்த ஒரு விஷயமும் தேவனுடைய பார்வையில் அருவருப்பானதாக இருக்கின்றது. யார் அதைச் செய்தாலும், அது ஒரு பொருட்டல்ல. எந்த வித்தியாசமுமில்லை. தேவன் மனுஷர் மத்தியில் பாரபட்சம் உள்ளவர் அல்ல.

ஃப்ரி மேசன்ட்ரியிலோ அல்லது அதே போன்ற இன்னொரு பொய்யான மதத்திலோ, இரகசிய சமுதாயத்திலோ அல்லது சாத்தானுடைய அமைப்பிலோ நீங்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கிறீர்கள் அல்லது உங்களுடைய கணவரோ அல்லது தகப்பனோ அல்லது இன்னொரு உறவினரோ அதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், அதை விட்டொழிக்கும் ஜெபத்தை பின்வருமாறு செய்யுங்கள்:

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நான் உம்மை நேசிக்கின்றேன். நான் உம்மை ஆராதிக்க விரும்புகிறேன். என் வாழ்க்கையிலோ அல்லது என் குடும்பத்திலோ ஃப்ரீ மேசன்ட்ரியின் சாபம் அல்லது இன்னொரு பொய்யான மதத்தின் சாபம் காணப்பட்டால், அதிலிருந்து என்னை விடுதலையாக்கும். என்னை மன்னியும். இப்பொழுதே அதன் வல்லமையை முறித்துப் போடும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## *சாபங்கள்*

டெரிக் குறிப்பிட்ட கடைசி தடை, சாபங்களோடு தொடர்புடைய தாயிருக்கிறது. ஒரு நபருடைய வாழ்க்கையில் அல்லது அவருடைய குடும்பத்தில் ஒரு சாபம் கிரியை செய்கிறது என்பதற்கான பொதுவான அறிகுறிகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட பல அறிகுறிகள் உங்களுடைய வாழ்க்கையிலோ அல்லது குடும்பத்திலோ காணப்படும் என்றால், ஒரு சாபம் உங்கள் மீது இருப்பதற்கான வாய்ப்பு அங்கே இருக்கின்றது. இப்பொழுது நற்செய்தி என்னவென்றால், நாம் சாபத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி, இயேசு சாபமாக்கப்பட்டார் **(கலாத்தியர் 3:13-14).** ஆனால் பெரும்பாலான நேரங்களில், நாம் சாபத்தின் வேரை முறித்து, ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

*16. ஒரு சாபத்தின் ஏழு முக்கியமான அறிகுறிகளின் பட்டியல் இதோ:*

*(அ) ................................ அல்லது உணர்வுரீதியாக உடைந்து போகுதல் - குறிப்பாக, குடும்பத்திற்குள் இப்படிப்பட்ட ஒரு வரலாறு காணப்படும்.*

*(ஆ) திரும்பத் திரும்ப அல்லது அடிக்கடி வரும் ......................... - சாபங்கள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடந்து செல்கின்றபடியால், இவை பரம்பரை வியாதியாக இருக்கலாம்.*

*(இ) மலட்டுத்தன்மை, ........................... உண்டாகிற நிலை அல்லது மாதவிடாயில் வரும் பிரச்சனைகள்.*

*(ஈ) ....................................... முறிவு. குடும்ப உறவுகளில் பிரிவினை உண்டாகுதல்.*

*(உ) தொடர்ச்சியாய் காணப்படுகிற .......................... பற்றாக்குறை நிலை - இது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே காணப்படுகிற பிரச்சனை அல்ல. இது எப்பொழுதும் காணப்படுகிற தரித்திரமாய் இருக்கிறது.*

*(எ) நிறைய ...................... நடக்கின்ற சூழ்நிலை*

*(ஏ) குடும்பத்தில் நிறைய ..........................., அகால மரணங்களும், இயற்கைக்கு மாறான மரணங்களும் நடக்கின்ற சூழ்நிலை.*

இந்தப் பட்டியலில் உள்ளவற்றைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். தேவன் இந்தக் காரியங்களையெல்லாம் உங்களுக்கு வெளிப்படுத்துகிறார் என்றால், உங்களை குற்ற உணர்வுக்குள் தள்ளும்படி அல்ல. மாறாக, இவற்றிலிருந்து உங்களை மீட்கும்படி அவர் இதைச் செய்கின்றார். அவர் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார். நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர் ஏற்கனவே முன் ஆயத்தமாகச் செய்து வைத்திருக்கிறார். பின் வரும் அறிக்கையை, நாம் முதலில் செய்வோம்:

*கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி. சாபத்திலிருந்து என்னை மீட்கும்படி, நீர் சாபமாக்கப்பட்டீர்.*

நீங்கள் அந்த ஜெபத்தைச் செய்யும்போது, சாபங்கள் உங்களை விட்டு அகற்றப்படும். உடனடியாக நீங்கள் உருமாற்றப்படுவீர்கள். உங்களுடைய வாழ்க்கையின் மீதிருந்த அந்த இருண்ட நிழல், தேவனுடைய வெளிச்சத்திற்கு வழி விட்டு விடும். ஒரு சாபத்தின் கீழ் இருப்பவர்களை விவரிக்கக்கூடிய ஒரு முக்கியமான வார்த்தை, விரக்தி. ஒவ்வொரு சாபத்திலிருந்தும் விடுதலையாகும்படி, பின் வரும் ஜெபத்தை நாம் செய்வோம்:

*கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி. சாபத்திலிருந்து மீட்கப்பட்டு, ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்கும்படி, நீர் சிலுவையில் சாபமாக்கப்பட்டீர். கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் என்ன செய்தீரோ, அதன் நிமித்தம், ஒவ்வொரு சாபத்திலிருந்தும் என்னையும் என் குடும்பத்தாரையும் உம்முடைய விலையேறப்பெற்ற நாமத்தினால் நான் விடுதலையாக்குகிறேன்.*

*உம்முடைய இரத்தத்தின் மூலம் சிலுவையில் நீர் விலைக்கிரயம் கொடுத்து வாங்கின ஆசீர்வாதத்தை நான் உரிமைபாராட்டி எடுத்துக் கொள்கிறேன். கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி.*

உங்களுடைய விடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வழி, தொடர்ந்து தேவனுக்கு நன்றி சொல்லி, அவரை துதித்து உயர்த்துவதுதான். இன்னும் இதைக் குறித்து அதிகமாய் அறிந்து கொள்ளும்படி, சாபத்திலிருந்து விடுதலை என்ற போதனைகளை திரும்பக் கேளுங்கள்.

## *பிசாசின் கிரியைகள்*

சுகத்தைப் பெறுவதற்கான தடைகளைக் குறித்து போதித்த பிறகு, டெரிக் பிரின்ஸ், இன்னொரு முக்கியமான விஷயத்தைக் குறித்து மிகவும் சுருக்கமாகப் பேசினார். வியாதியிலிருந்து சுகத்தைப் பெறும்படி நாடுகின்ற விஷயத்தில், நாம் இதைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். வியாதிகள் சில நேரங்களில் பொல்லாத ஆவிகளின் பிரசன்னத்தின் மூலம் உண்டாகின்றன அல்லது அதோடு தொடர்புடையதாய் இருக்கின்றன.

*17. லூக்கா 4:40-41 வசனங்களில், இயேசுவின் ஊழியத்தைக் குறித்து இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது: "சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலப்பல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களை சொஸ்தமாக்கினார். பிசாசுகளும், 'நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து,' என்று சத்தமிட்டு, அநேகரை விட்டுப் புறப்பட்டது." வியாதியஸ்தர்களை சுகமாக்கும்படி, அவர்கள் மீது ...................... வைத்து செய்யப்பட்ட ஊழியம், பிசாசுகளை துரத்தியது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.*

*18. ........................... இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை அங்கே கிரியை செய்தபோது, பொல்லாத ஆவிகளால் அங்கே நிற்க முடியவில்லை. அவை வெளியே ஓடின.*

தீய ஆவிகளிடமிருந்து விடுதலை என்பது ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை உண்டாக்கக்கூடிய மிகவும் முக்கியமான ஒரு போதனையாயிருக்கிறது. இந்தச் செய்தியில், டெரிக்

கொஞ்சம் அதைத் தொட்டிருந்தாலும், அதை இன்னும் முழுமையாய் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால், விடுதலை ஊழியத்தின் அடிப்படைகள் என்ற போதனைகளைக் கேட்கும்படி நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம். அதில் அவர் இன்னும் ஆழமாய் போதித்திருப்பார்.

403-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/24**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் என்ற பாடத்திற்கான அறிமுகம்

இது நான்கு செய்திகள் கொண்ட ஒரு செய்தித்தொடராக இருக்கின்றது. சாத்தானுடைய ராஜ்யத்தின் செயல்பாடுகளைக் குறித்து வேதாகமத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ, அதை டெரிக் பிரின்ஸ் இங்கு நமக்கு வெளிப்படுத்துகிறார். விசுவாசிகளாகிய நாம் எப்படிப்பட்ட ஒரு யுத்தத்தில் இருக்கின்றோம் என்பதை இதன் மூலம் நாம் புரிந்து கொள்கின்றோம்.

முதல் பாடத் தலைப்பு: "சாத்தானுடைய ராஜ்யத்தின் உள்கட்டமைப்பு." இந்தப் பாடத்தில், அதன் ஆரம்பம், அதன் அதிகார நிலைகள், அதன் ஆளுகையின் மண்டலம், எவ்வாறு அது செயல்படுகிறது என்பதைக் கற்றுக் கொள்கிறோம். இரண்டாவது பாடத்தில், மாந்திரீக, பில்லிசூனியத்தின் தன்மையைக் குறித்து டெரிக் நமக்கு விளக்குகின்றார். விழுந்துபோன மனுஷன் பின்பற்றுகிற மதத்தைக் குறித்தும், அது சபைக்குள் ஊடுருவும்படி எவ்வாறெல்லாம் நாடுகின்றது என்பதைக் குறித்து டெரிக் விளக்கிச் சொல்கிறார். அந்திக்கிறிஸ்துவின் ஆவி என்ற சத்தியத்தைக் குறித்து மூன்றாவது செய்தியில் நாம் கற்றுக் கொள்கிறோம். சபையின் வெற்றியைக் குறித்து கடைசி பாடத்தில் நாம் அறிந்து கொள்கிறோம்.

முடிவை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. தம்முடைய சபைக்காக இயேசு பெற்ற வெற்றிதான், இதன் முடிவாய் இருக்கப் போகிறது. ஆகையால் முதல் மூன்று பாடங்களில் கற்றுக் கொள்ளப் போகிற விஷயங்களின் நிமித்தம், நாம் பயப்படவோ அல்லது ஊக்கமிழக்கவோ தேவையில்லை. நாம் மேற்கொண்டு ஜெயிக்கிறவர்களாய் இருக்க வேண்டுமென்றால், எதிரி எவ்வாறு செயல்படுகிறான் என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாக இருக்கிறது. நாம் ஜெயிக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மைக் குறித்த தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 21:7 சொல்கிறது: "ஜெயங்கொள்கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாயிருப்பான்." ஆகையால்

மேற்கொண்டு ஜெயிக்கின்ற ஒவ்வொருவரும் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வார்கள். அப்படிச் செய்யத் தவறுகிறவர்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் **12:11** சொல்கிறது: "மரணம் நேரிடுகிற தாயிருந்தாலும், அதற்கு தப்பும்படி, தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் (இயேசுவின்) இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயித்தார்கள்." எல்லாவற்றையும் மேற்கொண்டு ஜெயிக்கிறவர்களிடம் மூன்று அத்தியாவசியமான கூறுகள் காணப்படும் என்று இவ்வசனம் சொல்கிறது:

❖ ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம்

❖ நம்முடைய சாட்சியின் வார்த்தைகள்

❖ நம்முடைய முழு அர்ப்பணிப்பு - உயிரோடு வாழ்வதைக் காட்டிலும், தேவனுடைய சித்தத்தைச் செய்வதுதான் மிகவும் முக்கியமான தாயிருக்கிறது.

*பாடம் இருபத்தி ஐந்து>>*

## நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் - பாகம் 1

# சாத்தானுடைய ராஜ்யத்தின் உள்கட்டமைப்பு[4262]

*அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் என்ற செய்தித்தொடரின் நான்கு செய்திகளில், இது முதல் செய்தியாக இருக்கின்றது. கிறிஸ்தவர்களாகிய நாம், மெய்யாகவே எதிரிகளை சந்திக்கின்றோம். இந்த உண்மையை என்றைக்காவது உணர்ந்திருக்கிறோமா? எதிரிகள் உங்களுக்கு விரோதமாக தீவிரமாகவும், வல்லமையாகவும் கிரியை செய்து கொண்டிருக்கும்போது, அங்கே உங்களுக்கு எதிரிகள் இருக்கின்றார்கள் என்ற விழிப்புணர்வே உங்களுக்குள் இல்லையென்றால், நீங்கள் மிகவும் ஆபத்தான ஒரு சூழ்நிலையில் சிக்கியிருக்கின்றீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நாம் எதிர்கொள்ளும் எதிரிகள், மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்கள் அல்ல. மாறாக, அவை நம் கண்களுக்குத் தெரியாத பொல்லாத ஆவிகளாய் இருக்கின்றன. இந்த செய்திகள் மூலம், டெரிக் பிரின்ஸ் நமக்குக் கற்றுக் கொடுக்கப் போகிற காரியங்களை, நம்முடைய ஐம்புலன்களைக் கொண்டு உணர்ந்தறிய முடியாது. “கண் காணாதவைகளை, காது கேட்காதவைகளை, மனுஷருடைய இருதயத்தில் தோன்றாதவைகளைக்,” குறித்து வேதாகமம் பேசுகிறது (1 கொரிந்தியர் 2:9). நம் கண்களுக்குத் தெரியாத, ஆவிக்குரியவைகளிக் குறித்து வேதாகமம் பேசுகிறது. நாம் பேசப் போகிற காரியங்களை, வேதவசனங்கள் மூலமாக மட்டுமே நம்மால் புரிந்து கொள்ள முடியும். வேறு எந்தத் தகவலையும் நாம் சார்ந்து கொள்ள முடியாது.

நாம் பார்க்கின்ற, தொட்டு உணருகின்ற, கேட்கின்ற, ருசிக்கின்ற விஷயங்கள்தான் மெய்யாகவே நிஜமானவை என்று பெரும்பாலானோர் நினைக்கின்றார்கள். உண்மையில், அவை மெய்யாகவே நிஜமானவை அல்ல என்ற ஒரு முடிவுக்குத்தான், எல்லாக் காலகட்டங்களிலும் தத்துவ அறிஞர்கள் வந்திருக்கிறார்கள். அவை தற்காலிகமானவை. அவை நிரந்தரமற்றவை. பெரும்பாலும், அவை நம்மை ஏமாற்றக்கூடியவை. எனவே உங்களுடைய உணர்வுகளை நீங்கள் சார்ந்து கொள்ள முடியாது. வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த வெவ்வேறு தத்துவ அறிஞர்கள் அந்த முடிவுக்கு எப்படி வந்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. வேதாகமமும் அதையே சொல்கிறது. கண்களால் காணக்கூடியவை தற்காலிகமானவை; ஆனால் கண்களால் காணப்படாதவை நித்தியமானவை என்று பவுல் எழுதியிருக்கிறார் (2 கொரிந்தியர் 4:18). வேறு வார்த்தைகளில், "உணர்வுகளின் உலகம்" தற்காலிகமானது என்று சொல்லலாம். அவை ஓரளவிற்குத்தான் நிஜமானவையாக இருக்கின்றது. அவை நிலைத்து நிற்பதில்லை. ஆனால் நம் கண்களால் காணமுடியாத, உணர முடியாத ஆவிக்குரிய உலகத்தின் காரியங்களோ மெய்யாகவே நிஜமானவைகளாய் இருக்கின்றன. அவை நீடித்து நிலைத்து நிற்கக்கூடியவைகளாய் இருக்கின்றன.

ஆகையால் இப்படிப்பட்ட ஒரு சத்தியத்தை கற்றுக் கொள்ளும்படி நாம் வரும்போது, முதலில் நம் மனதில் சில திருத்தங்களைச் செய்து, நமக்கு நாமே இவ்வாறு சொல்ல வேண்டும்: "நான் பார்க்கிற, தொட்டு உணருகிற, கேட்கிற, ருசிக்கிற விஷயங்களின் எல்லைக்குள் நான் என்னை உட்படுத்திக் கொள்ள மாட்டேன், மட்டுப்படுத்திக் கொள்ள மாட்டேன். மாறாக, நான் என் இருதயத்தையும், மனதையும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கின்ற வெளிப்பாட்டிற்கு திறந்து வைக்கின்றேன். ஆவிக்குரிய உலகத்தைக் குறித்து வேதவசனத்தின் மூலம், பரிசுத்த ஆவியான வர் கொடுக்கின்ற வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும்படி நான் தீர்மானிக்கிறேன்." பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்காக ஜெபித்தபோது, "தம்மைக் குறித்த ஞானத்தின் ஆவியையும், வெளிப்பாட்டின் ஆவியையும் தேவன் அவர்களுக்குக் கொடுப்பாராக," என்று ஜெபித்தார் (எபேசியர் 1:17). தேவன் நமக்கும் அதைக் கொடுப்பாராக என்று நாமும் ஜெபிக்க வேண்டும். அது சரியான ஜெபமாக இருக்கும். நாம் நம்முடைய இருதயத்தை அவருடைய வார்த்தைக்கும், ஞானம் மற்றும் வெளிப்பாட்டின் ஆவிக்கும் திறக்க வேண்டும். காரணம், இந்த சத்தியங்களை வெளிப்பாட்டின் மூலமாக மட்டுமே நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

வேதாகமம் வெளிப்படுத்துகிற பல சத்தியங்கள், முதலில் நம்மை அச்சுறுத்தக்கூடியவைகளாகத் தெரிகின்றன. ஆனால் நம்முடைய தீமைக்கு ஏதுவாக அல்ல, நமக்கு நன்மை உண்டாகும்படியாகவே தேவன் இந்தச் சத்தியங்களையெல்லாம் நமக்கு வெளிப்படுத்துகிறார் என்ற உண்மையில் நாம் இளைப்பாற வேண்டும். ஏற்கனவே இங்கே இருக்கின்றவைகளைக் குறித்த சத்தியத்தைத்தான் அவர் நமக்கு வெளிப்படுத்துகிறார். அவற்றை நாம் அறிந்திருக்கவில்லை என்றாலும், அவை அங்கே இருக்கின்றன என்பதுதான் உண்மை. ஆகையால் இதை நாம் புரிந்து கொண்டு, அதற்கேற்றபடி நாம் நடக்க வேண்டும்.

ஆவிக்குரிய யுத்தம் என்ற சத்தியத்தின் நிஜம் என்ன தெரியுமா? கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த யுத்தத்தின் நடுவில் இருக்கின்றோம் என்பதுதான் அந்த நிஜம். நாம் இதை அறிந்திருக்கிறோமா, இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல. யுத்தத்தைக் குறித்த சத்தியத்தை தேவன் படிப்படியாக நமக்கு வெளிப்படுத்துகிறார். இந்த யுத்தத்தினால் நமக்கு சேதம் எதுவும் உண்டாகி விடக்கூடாது என்பதற்காக, நம்மையே நாம் எவ்வாறு ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் தேவன் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். சிலுவையில் இயேசு நமக்காக ஜெயமெடுத்து வைத்திருக்கிற வெற்றியின் மூலம், நாமும் ஜெயமெடுக்கும்படி அதைச் செய்திருக்கிறார்.

## *கோடிட்ட இடங்களை நிரப்புக*

## *ஒன்றுக்கொன்று நேருக்கு நேராய் எதிர்த்து நிற்கின்ற ஆவிக்குரிய ராஜ்யங்கள்*

*1. ஒன்றுக்கொன்று ........................ ஈடுபடுகின்ற இரண்டு நேரெதிர் ராஜ்யங்களைக் குறித்து டெரிக் இந்தச் செய்தியில் போதிக்கிறார். மகா பிரிட்டன், ஸ்வீடன் போன்ற மன்ன ராட்சியின் கீழ் இருக்கிற தேசங்கள், இன்றைக்கும் இவ்வுலகில் இருக்கின்றன. ஆனால் நாம் இங்கு அதைக் குறித்துப்*

பேசவில்லை. இவ்வுலகத்தில் செயல்படும் ராஜ்யங்களைக் குறித்து நாம் பேசவில்லை. கண்களுக்குத் தெரியாத விதத்தில் இயங்கும் ஆவிக்குரிய ராஜ்யங்களைக் குறித்துதான் நாம் பேசுகிறோம். ஒன்று, தேவனுடைய ராஜ்யம். இன்னொன்று, சாத்தானுடைய ராஜ்யம்.

2. மத்தேயு 12-ம் அதிகாரத்தில், பரிசேயர்களால் இயேசு குற்றஞ்சாட்டப்படுவதைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினால் அவர் பிசாசுகளை துரத்துகிறார் என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு. அது தவறான விளக்கம், அது உண்மையாய் இருக்க முடியாது என்பதை இயேசு அவர்களிடம் சுட்டிக் காண்பித்தார்:

(அ) 26-ம் வசனத்தில், இயேசு சொல்கிறார்: "சாத்தானை சாத்தான் துரத்தினால், தனக்கு விரோதமாக தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே. அப்படிச் செய்தால், அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?" இதன் மூலம், சாத்தானுக்கு ஒரு ...................... இருக்கிறது என்று இயேசு நமக்குச் சொல்கிறார்.

(ஆ) இரண்டு வசனங்கள் தள்ளி, 28-ம் வசனத்தில், இயேசு சொல்கிறார்: "நான் தேவனுடைய ஆவியான வராலே பிசாசுகளை துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே." இங்கே இயேசு இன்னொரு ராஜ்யத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறார். அது ............................ ராஜ்யமாகும்.

3. தன்னுடைய ஊழியத்தின் ஒரு குறிப்பிட்ட அம்சம், இவ்விரண்டு ராஜ்யங்களையும் திறந்த வெளியிலே கொண்டு வந்து நிறுத்துகிறது என்பதை இயேசு சுட்டிக் காண்பித்தார். அது அவருடைய வல்லமை மற்றும் அதிகாரத்தினால், ............. .................. துரத்துகிற ஊழியமாகும். பிசாசுகள், கண்களுக்குத் தெரியாத ஆவிகளாய், சாத்தானுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாய் இருக்கின்றன. இயேசுவும், அவருடைய ஊழியர்களும், அவருடைய ஊழியத்தைப் பின்பற்றுகிறவர்களும் தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாய் இருக்கின்றன. பிசாசுகளைத் துரத்துகிற ஊழியம், தேவனுடைய ராஜ்யத்திற்கும், சாத்தானுடைய ராஜ்யத்திற்கும் இடையில் நடக்கின்ற

*யுத்தத்தை திறந்தவெளியில், கண்களால் பார்க்கக்கூடிய விதத்தில் கொண்டு வந்து முன்னே நிறுத்தின.*

*4. இயேசுவும் அவருடைய ஊழியர்களும் சாத்தானுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாகிய பிசாசுகளைத் துரத்தினார்கள் என்ற உண்மை, சாத்தானுடைய ராஜ்யத்தைக் காட்டிலும், .......................... ராஜ்யம் அதிக வல்லமை உடையது என்பதற்கு நம்பகமான, நிச்சயமான ஒரு ஆதாரமாக இருக்கின்றது.*

## *சாத்தானுடைய ராஜ்யத்தின் தன்மையும், உள்கட்டமைப்பும்*

எபேசியர் **6:12**-ம் வசனம், சாத்தானுடைய ராஜ்யத்தின் உள்கட்டமைப்பைக் குறித்து வெளிப்படுத்துகிற ஒரு முக்கியமான வசனமாக இருக்கின்றது:

> *ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல. துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.*

'மண்டலங்கள்' என்ற வார்த்தையை மொழிபெயர்ப்பாளர்கள் கூடுதலாக சேர்த்திருக்கின்றனர். இன்னொரு மொழிபெயர்ப்பு இதை 'வானங்கள்' என்று எளிமையாகச் சொல்கிறது.

டெரிக் பிரின்ஸ் கிரேக்க மொழியை நன்கு அறிந்திருந்தார். பல வருடங்களாக, இந்தச் சத்தியத்தை அவர் போதித்திருக்கிறார். இந்த வசனத்தை பின் வருமாறு அவர் மொழிபெயர்த்திருக்கிறார். இதை அவர் 'பிரின்ஸ் மொழிபெயர்ப்பு' என்றழைக்கின்றார். நாம் இதை வாசிப்போம்:

> *நம்முடைய மல்யுத்தப் போட்டி, சரீரங்களை உடைய மனுஷர்களுக்கு எதிராக நடக்கவில்லை. மாறாக, பல்வேறு மண்டலங்களில் ஆளுகை செய்யும் பொல்லாத துரைத்தனங்களோடும், கீழ்நோக்கிய தீய அதிகார வரிசைகளோடும், இவ்வுலகத்தில் அந்தகார வல்லமையினால் ஆதிக்கம் செய்யும் அதிபதிகளோடும், வானங்களில் கிரியை செய்யும் துன்மார்க்க ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு.*

3. இந்த வசனத்தை தியானம் செய்து, பின் வரும் கோடிட்ட பகுதிகளை நிரப்புங்கள்:

(அ) இது ஒரு மல்யுத்தப் போட்டி - இரண்டு தனிநபர் களுக்கிடையேயான போட்டிகளில், ............................... தான், தீவிரமான ஒரு போட்டியாக இருக்கின்றது.

(ஆ) மனுஷர்களோடு அல்ல, .................................. . நாம் யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ல வேண்டும். அவை சரீரங்கள் இல்லாத ஆவிக்குரியவைகளாய் இருக்கின்றன. ஆனால் அவற்றிற்கு நிச்சயம் ஆளுமைகள் உண்டு.

(இ) சாத்தானுடைய ராஜ்யம், நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு ராஜ்யமாக இருக்கின்றது. அதற்கு அவன் ........................ எடுத்துக் கொள்ள முடியாது. காரணம், அது தேவனால் கொடுக்கப்பட்ட கட்டமைப்பாக இருக்கின்றது. அவன் விழுந்தபோது, அதை அவன் தன்னோடு எடுத்துக் கொண்டான்.

(ஈ) சாத்தானுடைய ராஜ்யத்தின் ஆட்சியாளர்களுக்கு எதிராகத்தான் இந்த யுத்தம் நடக்கின்றது. சாத்தானுடைய ராஜ்யத்தில், ஆவிக்குரிய ......................... நிலைகள் இருக்கின்றன. ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். துணை ஆட்சியாளர்களும் இருக்கின்றனர். இன்னும் இப்படி பல்வேறு அதிகார நிலைகள் அதில் இருக்கின்றன.

(உ) ''அந்தகார வல்லமையோடு இவ்வுலகத்தை இப்பொழுது ஆளுகையும் ஆதிக்கமும் செய்யும் அதிபதிகள்'' என்ற வார்த்தைகள், சாத்தானுடைய ராஜ்யத்தையே குறிக்கின்றன. காரணம், 'ஆதிக்கம்' என்ற வார்த்தை, சாத்தானுக்கே உரியது. தேவன் ஒருபோதும் ........................ செலுத்த மாட்டார். ஆகையால் நாம் ஆதிக்கத்தை எதிர்கொள்ளும்போது, அங்கே அதற்குப் பின்னால் சாத்தான் இருக்கிறான் என்பது உண்மை.

(ஊ) இந்த ஒட்டுமொத்த உலகத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதுதான், சாத்தானுடைய குறிக்கோளாய், விருப்பமாய் இருக்கிறது. அதற்காகவே அவன் வியூகம் அமைத்து செயல்படுகிறான். அவன் தன் ........................ வல்லமையினால் அதன் மீது ஆதிக்கம் செலுத்துவான். பாருங்கள், தேவனுடைய

*ராஜ்யம், வெளிச்சத்தின் ராஜ்யமாய் இருக்கிறது. சாத்தானுடைய ராஜ்யம், அந்தகார இருளின் ராஜ்யமாயிருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்பவர்கள், தாங்கள் யாருக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறார்கள். தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் தெளிவாக, நிச்சயமாக அறிந்திருக்கிறார்கள். சாத்தானுடைய ராஜ்யத்திற்குள் இருப்பவர்களில் பெரும்பாலானோர், தாங்கள் யாருக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமலிருக்கிறார்கள். உண்மையில், அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறியாமலிருக்கிறார்கள்.*

*(எ) "வானங்களில் கிரியை செய்யும் துன்மார்க்க ஆவிகளின் சேனைகள்" என்பது, துன்மார்க்க, முரட்டாட்ட ஆவிகளின் ஒட்டுமொத்த ...................................... இருக்கிறது. இவை பொல்லாத வல்லமையை உடையவைகளாய் இருக்கின்றன. இவை "வானங்கள்" எனும் மண்டலத்தில் கிரியை செய்து கொண்டிருக்கின்றன.*

## *லூசிபரின் வீழ்ச்சி*

சாத்தானுடைய ராஜ்யம் எவ்வாறு வந்தது என்பதை ஆராயும்படி, ஏசாயா 14-ம் அதிகாரத்திற்குச் செல்வோம்:

> *12 அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே. ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே.*
>
> *13 நான் வானத்துக்கு ஏறுவேன். தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,*
>
> *14 நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.*
>
> *15 ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்.*

*6. லூசிபர் என்ற பெயரின் அர்த்தம், .................... கொண்டு வருகிறவன்; விடிவெள்ளி.*

*7. இந்த தூதன், லூசிபர் என்றழைக்கப்பட்டான். காரணம், இவன் மகிமையும், அழகும் நிறைந்தவனாய் காணப்பட்டான். ஆனால் இவன் வருந்தத்தக்க ஒரு தவறைச் செய்தான். இவன் தன்னை சிருஷ்டித்த தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தான். இவன் தன்னை தேவனுக்கு ............................ கொள்ளும்படி முயற்சித்தான்.*

*8. பிலிப்பியர் 2:6-7 வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: "இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்." தொடர்ந்து 9-11 வசனங்களை வாசித்துப் பாருங்கள்: "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை (இயேசுவை) உயர்த்தி..........எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." லூசிபர் செய்த கிரியைக்கு நேரெதிரான ஒன்றை இயேசு செய்தார். தேவனுக்கு ...................... இருப்பது இயேசுவினுடைய உரிமையாய் இருந்தாலும், அவர் தன்னையே தாழ்த்தினார். தேவன் அவரை உயர்த்தினார்.*

*9. ஏசாயா 14:13-14 வசனங்களில், 'நான்'; 'என்' என்ற அர்த்தத்தில், லூசிபர் ஐந்து முறை பேசினான். சிருஷ்டிகராகிய தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாய் சிருஷ்டிக்கப்பட்ட ஒன்று, சித்தங்கொண்டு செயல்படுவதைத்தான் இங்கு நாம் பார்க்கின்றோம். இங்கு முக்கியமான வார்த்தை, ......................... என்பதாகும்.*

*10. 14-ம் வசனத்தில், "உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்று எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளில், "நான் தேவனுக்குச் சமமாவேன்" என்ற அர்த்தம் வெளிப்படுகிறது. ஆக, தேவனுக்கு சமமான ஒரு நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்வதுதான் சாத்தானுடைய குறிக்கோளாய் இருந்தது. அவன் ஞானமும், அழகும், மகிமையும் நிறைந்தவனாய் இருந்தபடியால், 'என்னால் தேவனைப்போல இருக்க முடியும்,' என்று அவன் தனக்குத்தானே*

*சொல்லிக் கொண்டான். இந்த எண்ணத்தினால் உந்தப்பட்டு, அவன் அகங்காரத்துடன், துணிகரமாய் செயல்பட்டான்.*

முக்கியமான இதே விஷயத்தைக் குறித்த இன்னொரு படத்தை, எசேக்கியேல் 28-ம் அதிகாரத்தில் நாம் பார்க்கின்றோம். இதில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும், ஒன்று புலம்பலாகவோ அல்லது வேதனைகளின் நியாயத்தீர்ப்பாகவோ இருக்கின்றது. முதலில், தீரு அதிபதியைக் குறித்தும், இரண்டாவதாக, தீரு ராஜாவைக் குறித்தும் எழுதப்பட்டிருக்கிறது. தீரு அதிபதி, தன்னை தேவனாக அறிவித்துக் கொண்டாலும், அவன் ஒரு மனுஷனாய் இருந்தான். இன்னொரு பக்கத்தில், தீரு ராஜாவைக் குறித்த வருணனையை வாசிக்கும்போது, அவன் ஒரு மனுஷனல்ல என்பதை தெளிவாக நம்மால் பார்க்க முடியும்.

சாத்தானுடைய ராஜ்யம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் குறித்த சுவாரசியமான ஒரு படமாய் இது இருக்கிறது. தீரு அதிபதி என்பவன் ஆளுகை செய்கிற ஒரு மனுஷனாய் இருந்தான். ஆனால் அவனுக்குப் பின்னால், கண்களுக்குத் தெரியாத மண்டலத்தில், தீரு ராஜா எனும் சாத்தானுடைய ஆட்சியாளன் இருந்தான். தீரு அதிபதி எனும் மனுஷ ஆட்சியாளன், வெறும் பொம்மைதான். கண்களுக்குத் தெரியாத மண்டலத்திலிருந்து சாத்தானுடைய ஆட்சியாளன், கயிறுகளைக் கொண்டு இந்த மனுஷ ஆட்சியாளனை ஆட்டுவிக்கிறான். இந்தச் சத்தியங்களை நீங்கள் பார்க்க ஆரம்பிக்கும்போது, வரலாறும் அரசியலும் வித்தியாசமான வேறு ஒரு அர்த்தத்தில் உங்களுக்குத் தெரிய ஆரம்பிக்கும். “வரலாற்றில் சர்வாதிகாரிகள்” என்றழைக்கப்பட்டவர்களில் பலர், சாத்தானுடைய பொம்மைகளாக மட்டுமே இருந்திருக்கின்றனர். சாத்தான் விரும்புவதைச் செய்யும்படி, சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து கண்களுக்குத் தெரியாத கயிறுகளினால், அவர்கள் ஆட்டுவிக்கப்பட்டனர்.

பின் வரும் நான்கு கேள்விகளுக்கு பதிலளிக்கும் முன்னர், எசேக்கியேல் 28:12-19 வசனங்களை தயவு செய்து வாசித்து விடுங்கள்.

*11. பரலோகத்தில் ஆராதனையை நடத்த வேண்டிய பொறுப்பில், லூசிபர் இருந்தான் என்று பலரும் விசுவாசிக்கின்றனர். அது சரியோ அல்லது தவறோ, இவ்வேதப்பகுதியின் 13-ம் வசனத்தில், இசையைக் குறித்து அவனுக்கு நிறைய தெரியும் என்று எழுதப்பட்டிருக்கின்றது. விழுந்துபோனவனாய்,*

*சாத்தான் இப்பொழுதும் ................ பயன்படுத்தி, ஜனங்களை சிறைப்பிடிக்கின்றான்.*

*12. 13-ம் வசனத்தின் கடைசியிலும், 15-ம் வசனத்திலும், லூசிபர், ....................... ஒருவன் என்பதை நாம் கற்றுக் கொள்கின்றோம். அவன் தேவனைப்போல நித்தியமானவன் அல்ல.*

*13. ................. அல்லது முரட்டாட்டம் அவனில் கண்டுபிடிக்கப்படும்வரை, லூசிபர் குறைவற்றவனாய் இருந்தான் என்று 15-ம் வசனம் நமக்குச் சொல்கிறது. முரட்டாட்டம் எனும் பிரச்சனை, பெரும்பாலும் சாதாரணமாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் 1 சாமுவேல் 15:23-ல், முரட்டாட்டத்திற்கும், முன்பு லூசிபர் என்றழைக்கப்பட்ட பிசாசுக்கும் இடையே உள்ள தொடர்பை நாம் திரும்பவும் பார்க்கின்றோம்: "இரண்டகம் பண்ணுதல், பில்லிசூனியப் பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல், அவபக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது."*

*14. "உன் இருதயம் மேட்டிமையாயிற்று," என்ற எசேக்கியேல் 28:17-ம் வசனத்தின் வார்த்தைகளை வாசிக்கும்போது, முதல் பாவம், இந்தப் பூமியில் அல்ல, பரலோகத்தில் அரங்கேறியது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். இதற்கு ஆதாரமாய் இந்த வார்த்தைகள் இருக்கின்றன. இது ..................... எனும் பாவமாயிருக்கிறது. இதுதான் இப்பொழுதும் மிகவும் மோசமான, மிகவும் ஆபத்தான, எல்லா பாவங்களைக் காட்டிலும் மிகவும் பயங்கரமான ஒரு பாவமாயிருக்கிறது.*

இந்த வேதப்பகுதியை படிக்கும்போதெல்லாம், ஒரு கேள்வி நமக்குள் எழுகின்றது: "சாத்தான் பரலோகத்திலிருந்து வெளியே துரத்தப்பட்டான் என்றால், அவன் எப்படி இப்பொழுது வானங்களில் இருக்க முடியும்?" இதற்கான பதில் எளிமையானது. ஒன்றுக்கும் மேற்பட்ட வானம் இருக்கிறது என்பதுதான் பதில். ஆரம்பத்திலிருந்து, வேதாகமம் முழுவதும் தேடிப் பாருங்கள். பரலோகம் என்பது பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதியாகமம் 1:1-2; 2 கொரிந்தியர் 12:2; எபேசியர் 4:9-10).

## வானங்களில் நடக்கின்ற யுத்தம்

தானியேல் 10-ம் அதிகாரத்தில், ஒரு குறிப்பிட்ட தருணத்தில், தானியேல் நன்கு முதிர்ச்சியடைந்த ஒரு விசுவாசியாக செயல்பட்டான் என்பதை நாம் வாசிக்கின்றோம். 21 நாட்கள் (மூன்று வாரங்கள்) உபவாசமிருந்து ஜெபிக்கும்படி, அவன் தன்னை ஒப்புக்கொடுத்தான். இது 'தானியேல் உபவாசம்' என்றழைக்கப்படுகிறது. அவன் எல்லா வகையான உணவுகளையும் தவிர்த்து விடவில்லை. மாறாக, மிகவும் எளிமையான, அடிப்படையான உணவுகளை மட்டுமே அவன் உண்டான். அவன் திராட்சை ரசம் உட்கொள்ளவில்லை.

தன் ஜனங்களாகிய யூதர்களின் எதிர்காலத்தைக் குறித்துப் புரிந்துகொள்ளும்படி, அவன் ஆர்வமாய், ஊக்கமாய் தேவனை நாடினான். மூன்று வாரங்கள், அவன் ஜெபித்தான். ஒன்றும் நடக்கவில்லை. 21 நாட்களுக்குப் பிறகு, அவனுடைய ஜெபத்திற்கான பதிலை, வல்லமையான பரலோக தூதன் ஒருவன் ஆச்சரியமான விதத்தில் கொண்டு வந்தான். அந்தத் தூதனின் பிரசன்னம் அவ்வளவு வல்லமை நிறைந்ததாய் இருந்தது. தானியேலுடன் கூட இருந்தவர்களெல்லாம் அதைக் கண்டு, ஓடி, ஒளிந்து கொண்டார்கள். தானியேல் தனித்து விடப்பட்டவனாய், தன் சரீர பெலனையெல்லாம் இழந்த நிலையில் அங்கே இருந்தான். இயேசு உயிர்த்தெழுந்து, பரமேறிச் சென்ற பிறகு, யோவான் இயேசுவைக் கண்டபோது, செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்து கிடந்தான் என்று வெளிப்படுத்தின விசேஷம் 1:17-ல் நாம் வாசிக்கின்றோம். தானியேலும் இங்கு அந்த நிலையில்தான் இருந்தான். ஆனால் இந்தத் தூதன், தானியேலின் ஜெபத்திற்கான பதிலைக் கொண்டு வந்திருந்தான். இவன் தேவனால் அனுப்பப்பட்டிருந்தான்.

*15. தானியேல் 10-ம் அதிகாரத்தின் இந்த பகுதியில், ஜெபம் மற்றும் பரிந்து மன்றாடுதலைக் குறித்த சில முக்கியமான, உதவிகரமான குறிப்புகளை நாம் கற்றுக் கொள்கிறோம்.*

*(அ) தானியேல் ஜெபிக்க ஆரம்பித்த ............ நாள் அன்றே, தூதன் அனுப்பப்பட்டான். ஆனால் மூன்று வாரங்களாகியும் அவன் வரவில்லை. காரணம், தேவனுடைய சிங்காசனத்திலிருந்து, பூமியில் தானியேல் இருந்த இடத்தை வந்தடையும் வழியில், அவன் சாத்தானுடைய சந்திப்பை எதிர்கொண்டான்.*

*(ஆ) ...................... எதிர்கொண்ட எதிர்ப்பு, மனுஷர்களிடமிருந்து வரவில்லை. ஒரு தூதனை எந்த மனுஷனும் அவ்வளவு பெலத்தோடு எதிர்த்து நிற்க முடியாது. அது பூமியில் நடக்கவில்லை. அது தேவனுடைய பரலோகத்திலும் நடக்கவில்லை. மாறாக, அது பரலோகத்திற்கும், பூமிக்கும் இடையிலான ஒரு பகுதியில் நடந்தது. சாத்தானுடைய ராஜ்யம், அந்தப் பகுதியில் செயல்படுகின்றது.*

*(இ) தானியேலின் ஜெபம், .......................... செயல்பட வைத்தது. தேவனுடைய தூதன் அங்கிருந்து வந்தான். அது சாத்தானுடைய தூதர்களை தூண்டி விட்டு, தேவதூதனை எதிர்த்து நிற்கும்படி செய்தது.*

*(ஈ) அந்த நாட்கள் முழுவதும், தானியேல் தன் ஜெபத்தில் உறுதியாய் தரித்து நிற்க வேண்டியிருந்தது. தன் ஜெபத்திற்கான பதிலை அவன் பெறுவதற்கு முன், 21 நாட்களும் அவன் நீடிய பொறுமையோடு நிலைத்து நிற்க வேண்டியிருந்தது. சில நேரங்களில் நாம் ஜெபிக்கின்றோம். நமக்குப் பதில் கிடைக்கவில்லை. அதற்காக, நாம் தவறான காரியத்திற்காக ஜெபிக்கின்றோம் என்று அர்த்தமல்ல. உண்மையில், நாம் ...................... காரியத்திற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கே சாத்தானுடைய எதிர்ப்பு காணப்படுகிறது.*

*(உ) ............................ மூலம், தேவனுக்கு முன்பாக தன்னையே தாழ்த்தும்படி தானியேல் தீர்மானித்தான். தேவனுடைய தீர்வைப் புரிந்து கொள்ளும்படி, தானியேல் தன் இருதயத்தை அதற்கு நேராகத் திருப்பினான். தேவனுக்கு முன்பாக, நம்மையே தாழ்த்துவதற்கு, உபவாசம் என்பது தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு வழியாயிருக்கிறது.*

*(ஊ) தானியேலின் ஜெபம், ........... நாளிலேயே கேட்கப்பட்டது. பதிலோடு ஒரு தேவதூதன் அனுப்பப்பட்டான். ஆனால் 21 நாட்களாகியும், தேவதூதன் வரவில்லை. காரணம், பெர்சிய ராஜ்யத்தின் அதிபதி, வானங்களில் அந்த தேவதூதனை 21 நாட்கள் எதிர்த்து நின்றான்.*

*(எ) யூத ஜனங்களை, இஸ்ரவேலை அடிமைத்தனத்தின் கீழ் வைத்து, அவர்கள் தங்களுடைய சொந்த ...................... திரும்பி*

*விடாதபடி தடுப்பதுதான் சாத்தானுடைய நோக்கமாயிருந்தது. ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதைக் குறித்துதான் தானியேல் ஜெபித்துக் கொண்டிருந்தான்.*

*(ஏ) தூதனால் தன் சொந்த பலத்தில் அதை மேற்கொள்ள இயலவில்லை. அவனுக்கு ....................................... உதவி தேவைப்பட்டது. எப்பொழுதெல்லாம் காட்சியின் மையத்தில் மிகாவேல் வருகின்றானோ, அப்பொழுதெல்லாம் வரலாற்றின் மையத்தில் யூத ஜனங்கள் இருப்பார்கள் என்பதை நீங்கள் நிச்சயமாக அறிந்து கொள்ள முடியும். இதை தானியேல் 12:1 நமக்கு வெளிப்படுத்துகிறது. காரணம், அவர்களை அழிக்கும்படி சாத்தான் எடுக்கின்ற முயற்சிகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதும், எந்தத் தீங்கும் அணுகாதபடி அவர்களைக் கண்காணிப்பதும் அவனுடைய முக்கியமான வேலையாயிருக்கிறது.*

*(ஐ) தானியேல் 10:13-ல், தூதன் இவ்வாறு சொல்லி முடிக்கின்றான்: “நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன் (தனியே விடப்பட்டேன்).” இங்கு ‘ராஜாக்கள்’ என்று பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது நம்முடைய வழக்கமான பயன்பாட்டிற்கு முரண்பட்டதாக இருக்கிறது. அதிபதி என்பவன் உச்ச ஆட்சியாளராக இருந்தான்; ............................ அவனுக்குக் கீழ் இருந்தனர் என்பதுபோலத் தெரிகிறது.*

*(ஒ) தானியேல் 10:20-ல், தூதன் தானியேலிடம் இவ்வாறு சொல்கிறான்: “நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்பொழுது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் பண்ண திரும்பிப் போகிறேன்.” வேறு வார்த்தைகளில், ......................... பிரபுவோடே நடந்த யுத்தம் இன்னும் முடியவில்லை. பெர்சியாவின் பிரபு தோற்கடிக்கப்பட்டிருந்தால், பெர்சிய ராஜ்யத்திற்கு என்ன நடந்திருக்கும்? அது சரிந்து, வீழ்ந்து போயிருக்கும். சிறிது காலத்திற்குப் பிறகு, அது வீழ்ந்தது. ஆனால் அதுதான் கடைசி ராஜ்யம் அல்ல. அதற்குப் பிறகும் வேறு ராஜ்யங்கள் எழும்பின.*

ஓ) தானியேல் 10:20-ம் வசனத்தின் இரண்டாம் பகுதியில், தூதன் தொடர்ந்து இவ்வாறு சொல்கிறான்: "நான் போன பின்பு, கிரேக்க தேசத்தின் அதிபதி வருவான்." இது அடுத்த பெரிய ராஜ்யத்தை ஆளுகை செய்யும் ............................... ஆட்சியாளனைக் குறித்து நமக்கு வெளிப்படுத்துகிறது. அலெக்சாண்டர் எனும் பேரரசனுடைய ஆட்சியின் கீழ், கிரேக்க ராஜ்யம், பெர்சிய ராஜ்யத்தை முற்றிலும் உடைத்து நொறுக்கி, தோற்கடித்தது. பூமியினுடைய நிலப்பரப்பில், மிகப் பெரிய பகுதியின் அது ஆதிக்கம் செலுத்தியது. பத்து வருடங்களில், அலெக்சாண்டர் மேற்கே கிரீஸ் தேசத்திலிருந்து, கிழக்கே இந்தியா வரை கைப்பற்றினான். மத்திய தரைக்கடலின் தென் கரையிலிருந்த பகுதியையும் அவன் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். இது மிகப் பெரிய ராணுவ வெற்றிகளில் ஒன்றாயிருக்கிறது. ஆனால் இன்னொருவனும் சம்பந்தப்பட்டிருக்கிறான். சாத்தானுடைய அதிபதி அவனுக்குப் பின்னால் இருந்தான்.

16. பெர்சிய, கிரேக்க ராஜ்யங்களைக் குறித்து இன்னும் விளக்கிச் சொல்வதற்கு, இஸ்ரேலின் வரலாற்றை சுருக்கமாக பார்க்க வேண்டியது அவசியம். மனுக்குலத்தைக் குறித்த தேவனுடைய எல்லா நோக்கங்களும், யூதர்களை மையமாகக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். காரணம், யூதர்கள் மூலமாகத்தான் இரட்சகராகிய மெசியா வந்தார். தேவனுடைய நோக்கங்களெல்லாம் இஸ்ரேலை மையமாகக் கொண்டிருக்கிறபடியால், சாத்தானுடைய எதிர்ப்புகளும் இஸ்ரேலையே மையமாகக் கொண்டிருக்கின்றன. வேறு வார்த்தைகளில், நீங்கள் தேவனுடைய திட்டத்தின் மையத்தில் இருக்கின்றீர்கள் என்றால், அங்குதான் நீங்கள் சாத்தானுடைய அதிகபட்ச எதிர்ப்பை சந்திப்பீர்கள். யூதர்கள் தேவனுக்கு விரோதமாக எழும்பி, முரட்டாட்டம் செய்து, தங்களுடைய சொந்த தேசத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு, நான்கு புறஜாதி ராஜ்யங்கள் ஒன்றன் பின் ஒன்றாக யூதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தின:

*(அ) முதல் ராஜ்யம், ......................... ராஜ்யம். அது அவர்களை அகதிகளாகக் கொண்டு சென்றது.*

*(ஆ) இரண்டாவது ராஜ்யம், மேதோ-பெர்சிய ராஜ்யம் அல்லது ......................... ராஜ்யம். இதுதான் தானியேலின் காலத்தில் ஆட்சி செய்தது.*

*(இ) மூன்றாவது ராஜ்யம், ......................... ராஜ்யம்.*

*(ஈ) நான்காவது ராஜ்யம், .................... ராஜ்யம்.*

*17. தானியேல் 11:1-ல், தூதன் தானியேலிடம் இவ்வாறு சொல்கிறான்: "மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே நான் அவனை திடப்படுத்தவும், பலப்படுத்தவும் அவனுக்கு துணை நின்றேன்." இங்கு திரும்பவும் ஒன்றை நாம் பார்க்கின்றோம். மனுஷ ஆட்சியாளர்களும், மனுஷ தளபதிகளும் ஒரு வெற்றிடத்தில், தங்களுடைய சொந்த பெலத்தில் செயல்படுவதில்லை. அவர்களுக்குப் பின்னால், கண்களுக்குத் தெரியாத தூதர்கள் இருக்கின்றனர். அவர்கள் தேவதூதர்களாய் இருக்கலாம் அல்லது சாத்தானுடைய தூதர்களாய் இருக்கலாம். இந்தப் பூமியில் தேவனுடைய நோக்கங்களுக்காக வாழ்கின்ற மனுஷர்களையும், ஆட்சியாளர்களையும் தேவதூதர்கள் பெலப்படுத்துகிறார்கள். அந்த மனுஷர்களை சாத்தானுடைய தூதர்கள் எதிர்த்து நிற்கின்றார்கள். இந்த ஒரு முக்கியமான காரணத்திற்காகத்தான், கிறிஸ்தவர்களாகிய நாம், நம்முடைய தேசத்தை ஆளுகின்றவர்களுக்காக ............................. வேண்டும்.*

## *சாத்தானுடைய அரசாட்சி*

*18. லூசிபர் என்ற தன்னுடைய ஸ்தானத்திலிருந்து விழுந்துபோன சாத்தான், தேவனுக்கு விரோதமாக கிளர்ச்சி செய்யும் தன் ராஜ்யத்தை வானங்களில் ஸ்தாபித்தான். தேவனுக்கு விரோதமாக கிளர்ச்சி செய்யும் மற்ற தூதர்களை அவன் அங்கேயிருந்து கொண்டு ஆளுகை செய்கின்றான். சாத்தானையும், அவனோடு இருக்கின்ற மற்றவர்களையும் குறிப்பிடும்படி பயன்படுத்தப்படும் சொல், ........................... என்பதாகும். அவர்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்கின்றார்கள்.*

*19. எபேசியர் 2-ம் அதிகாரத்தில், பவுல் கிறிஸ்தவர்களாகிய நமக்கு எழுதுகிறார். சாத்தானுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறவர்களைக் குறித்து நாம் இங்கு வாசிக்கின்றோம்:*

> *[1]அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். [2]அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய (சாத்தான்) ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். [3]அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.*

*(அ) ''கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்'' என்று 2-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தை, முரட்டாட்டம் செய்பவர்களைக் குறிக்கின்றது. தேவனுக்கு விரோதமாக .............................. ஈடுபடும் எந்த ஒரு நபரும், நேரடியாக சாத்தானுடைய கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடுகிறார். நம்முடைய முரட்டாட்டத்தை கீழே வைத்து, இயேசுவுக்கு நம்மையே ஒப்புக்கொடுப்பதற்கு முன், இதுதான் நம் நிலையாயிருந்தது.*

*(ஆ) இது நம் மாம்சத்தின் விருப்பங்கள் மட்டுமல்ல. நம் ................ தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. நம்மையே அர்ப்பணிக்கும்வரை, அது தேவனுக்கு விரோதமாய் வாழ்ந்து வந்தது. உலகப்பிரகாரமான புத்திசாலிகள், தேவனை முகமுகமாய் எதிர்த்து நிற்கிற பகையாளிகளாய் இருக்கின்றன ர்.*

*(இ) ''கோபாக்கினையின் பிள்ளைகள்'' என்பது சாத்தானுடைய ராஜ்யத்தின் கீழ்த்தட்டில் இருக்கின்ற மனுஷர்களைக் குறிக்கின்றது. தேவனால் நியமிக்கப்பட்ட அதிபதியாகிய ...................... கிறிஸ்துவுக்கு தங்களை உண்மையாகவே அர்ப்பணிக்காதவர்கள் எல்லோருமே, முரட்டாட்டக்காரர்கள்தான். அவர்கள் எந்த இனத்தைச்*

சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம், அவர்கள் எந்த சபைப்பிரிவைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். அது ஒரு பொருட்டல்ல. தீய ஆவிக்குரிய வல்லமையாகிய சாத்தான், அவர்களைக் கட்டுப்படுத்துகிறான் என்பதுதான் உண்மை.

(ஈ) ''ஆகாயத்து அதிகார பிரபு'' என்று இந்த வேதப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தை, பூமியின் மேற்பரப்பை ஒட்டியிருக்கும் கீழ் .......................... குறிக்கின்றது. சாத்தான் அங்கிருந்து இந்த பூமியை ஆளுகை செய்கின்றான்.

20. யோபு 41:34-ல், லிவியாதானைக் குறித்த ஒரு முக்கியமான படம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கடலில் வாழும் இராட்சத மிருகமாகும். இது சாத்தானை க் குறிக்கின்ற ஒரு படமாக இருக்கின்றது. ''அது மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது. அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது (அது தற்பெருமையின் உச்சியிலிருக்கிறது).'' மனுஷனுடைய இருதயத்தில் .............................. நுழையச் செய்வதன் மூலம், சாத்தான் அவனை தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்ய வைக்கிறான். அது நம்மை சாத்தானுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகின்றது. இங்கு பிரச்சனை என்னவென்றால், தேவனைக் குறித்து நம்முடைய இருதயத்தின் சிந்தை என்ன வாக இருக்கின்றது என்பதுதான். இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவனிடம் சரணடைந்து, மெய்யாகவே அர்ப்பணிக்காத ஒரு இருதயம் நமக்குள் இருக்குமென்றால், நாம் லிவியாதானின் ராஜ்யத்தின் கீழ் இருக்கின்றோம் என்று அர்த்தம். அதுதான் உண்மை. நாம் சபையில் அழகான வார்த்தைகளையெல்லாம் பேசலாம். முக்கியமான உயர் பதவிகளிலும் நாம் இருக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால், நாம் லிவியாதானின் ராஜ்யத்தின் கீழ் இருக்கின்றோம். காரணம், அது தற்பெருமையின் பிள்ளைகளுக்கெல்லாம் ராஜாவாக இருக்கின்றது.

21. சாத்தானுக்கு இரண்டு முக்கியமான குறிக்கோள்கள் இருக்கின்றன:

(அ) முதல் குறிக்கோள்: மனுக்குலம் முழுவதன் மீதும் .......................... செலுத்த வேண்டும் என்பதாகும். ''அந்தகார

*வல்லமையினால் ஆதிக்கம் செய்யும் அதிபதி,'' என்று எபேசியர் 6:12-ல், டெரிக் பயன்படுத்திய வார்த்தையை நினைவுகூருங்கள்.*

*(ஆ) இரண்டாவது குறிக்கோள்: தேவனுக்கு மட்டுமே உரிய ........................ பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். தேவனுக்கு சமமான இடத்தை எடுத்துக் கொள்ளும்படி அவன் முயற்சித்தான். ஆனால் அவன் வெளியே விரட்டியடிக்கப்பட்டான். இருந்தாலும், இந்த முயற்சியை அவன் ஒருபோதும் கைவிடவில்லை. ஒவ்வொரு முறையும், அவன் ஆராதனையைப் பெற்றுக் கொள்ளும்போது, தன்னை தேவனாக உரிமைபாராட்டிக் கொள்கிறான். ஆனால் ஆராதனை தேவன் ஒருவருக்கு மட்டுமே உரியதாயிருக்கிறது.*

சாத்தானும் அவனுடைய தூதர்களும், பொய்யான தெய்வங் களாயிருக்கின்றனர். அவை கிரேக்கர்களும், ரோமர்களும், நார்ஸ் களும், இந்துக்களும் வழிபடுகின்ற தெய்வங்களாயிருக்கலாம், அவை ஒவ்வொன்றிற்கும் வித்தியாசமான பெயர்கள் இருக்கலாம். ஆனாலும் அவை பொய்யான தெய்வங்களாய் இருக்கின்றன. ஜனங்கள் அந்த தெய்வங்களை வணங்குகிறார்கள் என்றால், அவர்கள் சாத்தானையும், அவனுடைய தூதர்களையும் ஆராதிக்கின்றார்கள் என்று அர்த்தம்.

விழுந்துபோன மனுஷன், சாத்தானுடைய ராஜ்யத்தோடு தொடர்பு கொள்ளும்படி பின்பற்றுகிற ஒரு குறிப்பிட்ட வழி, பில்லிசூனியமாகும். பொய்யான தெய்வங்களை வழிபடுகிற எல்லா சமூகங்களிலும், இது வெவ்வேறு வித்தியாசமான வடிவங்களில் நிறைய காணப்படுகிறது. இது ஒரு மதவழிபாடாகும். இது தேவனுக்கு விரோதமான மனுஷனுடைய முரட்டாட்டத்தை வெளிப்படுத்துகிறது.

தேவனுடைய வல்லமை மற்றும் அதிகாரத்தின் பார்வையில், சாத்தானுடைய ராஜ்யத்தின் உள்கட்டமைப்பைக் குறித்து இந்தச் செய்தியில் நாம் கற்றுக் கொண்டோம். நம்மை பயத்திற்குள் நடத்தும்படி, தேவன் இந்த சத்தியங்களையெல்லாம் தம்முடைய வார்த்தையில் எழுதி வைத்திருக்கவில்லை. மாறாக, யுத்தத்திற்கு நம்மை ஆயத்தம் செய்யும்படியாகவே அவர் இதைச் செய்திருக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு யுத்தத்தில் இருக்கின்றோம். நாம் இதை அறிந்திருக்கிறோமோ, இல்லையோ, இதுதான் உண்மை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம், வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு வேண்டிய எல்லாவற்றையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

அவருக்கு மகிமை உண்டாகும்படி, அவருடைய பெலத்தில் நாம் எல்லாவற்றையும் மேற்கொண்டு ஜெயிக்க வேண்டும். அதற்கு நாம் கற்றுக் கொண்ட காரியங்களை பின்பற்றி வாழும்படி, கர்த்தருடைய உதவியை நாடுவோம். நாம் ஜெபிப்போம்:

*பரலோகப் பிதாவே,*

*என்னைச் சுற்றி தீவிரமாய் நடந்து கொண்டிருக்கிற ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்த ஒரு புதிய புரிதலை நீர் எனக்குத் தந்திருக்கிறீர். உமக்கு நன்றி. பயத்தின் ஆவியை நீர் எனக்குக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியும் உள்ள ஆவியையே நீர் எனக்குத் தந்திருக்கிறீர் (2 தீமோத்தேயு 1:7). உமக்கு நன்றி.*

*இந்த யுத்தத்தை ஒழுங்காக, ஜெயமெடுக்கும் விதத்தில் நான் செய்யும்படி, தேவனுடைய சகல ஆயுதங்களையும் நான் அணிந்து கொள்ள எனக்கு உதவி செய்யும். சத்தியம் எனும் கச்சையையும், நீதி எனும் மார்க்கவசத்தையும், சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி ஆயத்தமாக அதற்குரிய பாதரட்சைகளையும், விசுவாசம் எனும் கேடயத்தையும், இரட்சிப்பு எனும் ஹெல்மெட்டையும், ஆவியானவரின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையையும் நான் அணிந்து கொண்டு யுத்தம் செய்யும்படி எனக்கு உதவும் (எபேசியர் 6:10-20). எல்லா வகையான ஜெபங்களோடும், விண்ணப்பங்களோடும் எப்பொழுதும் நான் ஜெபிக்கும்படி எனக்கு உதவி செய்யும். அரண்களை நிர்மூலமாக்கும்படி நீர் எனக்குத் தந்திருக்கிற ஆவிக்குரிய ஆயுதங்களை நான் ஞானமாய் பயன்படுத்தும்படி எனக்கு உதவி செய்யும்.*

*என்னுடைய தனிப்பட்ட சித்தத்தை அல்ல, உம்முடைய சித்தத்தை மட்டுமே பின்பற்றி வாழ்ந்து, உம்முடைய பாதுகாப்பின் எல்லைக்குள் தங்கியிருக்கும்படி எனக்கு உதவி செய்யும். இன்றைக்கு நான் இதை அறிக்கை செய்கிறேன்: "தேவனாலே நாங்கள் பராக்கிரமம் செய்வோம். அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்" (சங்கீதம் 60:12; சங்கீதம் 108:13).*

*கிறிஸ்துவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

அடுத்த செய்தியில், பில்லிசூனியத்தின் தன்மையைக் குறித்து நாம் ஆராய்வோம். நம்மைச் சுற்றி இருக்கின்ற இவ்வுலகத்தில்

அதை அடையாளம் கண்டறியும்படி இது நம்மை சரியான விதத்தில் ஆயத்தப்படுத்தும்; சிலுவையின் மூலம் அதை மேற்கொள்ளவும், நமக்கு உதவி செய்யும்.

404-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/45**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி ஆறு>>*

# நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் - பாகம் 2

# பில்லிசூனியத்தின் தன்மை[4263]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இது “நாம் எதிர்கொள்ளும் எதிரிகள்” என்ற செய்தித்தொடரின் கீழ் வரும் இரண்டாவது செய்தியாக இருக்கின்றது. முந்தின செய்தியில், சாத்தானுடைய ராஜ்யத்தின் தன்மை மற்றும் உள்கட்டமைப்பைக் குறித்து நாம் கற்றுக் கொண்டோம். அவனுடைய ராஜ்யம் இரண்டு வெவ்வேறு மட்டங்களில் செயல்படுகின்றது என்பதை நாம் பார்த்தோம். அதன் மேல்மட்டம், வானங்களில் இருக்கின்றது. அது தேவனுடைய பரலோகம் கிடையாது. அது நாம் பார்க்கின்ற வானமும் கிடையாது. இவ்விரண்டிற்கும் இடையில் அது இருக்கின்றது. இந்த மேல்மட்டத்தில், தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்கிற சாத்தானுடைய தூதர்கள் இருக்கின்றனர். கீழ்மட்டத்தில், தேவனுக்கும், இரட்சகரும் மெசியாவுமாகிய இயேசுவினுடைய அரசாங்கத்தின் நீதிக்கும் சரணடையாத, தங்களை அர்ப்பணிக்காத மனுஷர்கள் இருக்கின்றனர். சாத்தானுடைய ராஜ்யத்தில் உள்ளவர்களைக் குறிக்கும்படி, முரட்டாட்டக்காரர்கள் என்ற வார்த்தையை டெரிக் பிரின்ஸ் குறிப்பிட்டார். அவர்கள் சாத்தானுடைய தூதர்களோ அல்லது அவர்கள் மனுஷர்களோ, அவர்கள் எல்லோரும் தேவனுக்கு விரோதமான முரட்டாட்டத்தில் எழும்பி நிற்கின்றனர்.

ஒரே மெய்த் தேவனை அறியாத இவ்வுலகத்தார் வழிபடும் பொய்யான தெய்வங்களைக் குறித்தும் டெரிக் தொடர்ந்து போதித்தார். அவை கிரேக்கத்திலிருந்தோ அல்லது ரோமர்களிடமிருந்தோ அல்லது மற்ற தேசங்களிலிருந்தோ வந்தவையாக இருக்கலாம். அவற்றிற்கு பல்வேறு வித்தியாசமான பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம். அவை சாத்தானுடைய ராஜ்யத்தின் தூதர்களை சித்தரிக்கின்றவையாக இருக்கலாம். வான

ங்களில் இருக்கும் இவைகளெல்லாம், பொய்யான மதங்களாலும், மெய்த் தேவனை அறியாத சமூகங்களாலும் ஆராதிக்கப்படுகின்றன. இவை சாத்தானுடைய தூதர்களாய் இருக்கின்றன.

இந்த சாத்தானுடைய தூதர்களை தொடர்பு கொள்ளும்படி, மனுஷர் நாடுகிற ஒரு குறிப்பிட்ட பொதுவான வழிமுறை, பில்லிசூனியமாகும். இது விழுந்துபோன மனுஷனுடைய மதமாயிருக்கிறது. இதில் கணக்கற்ற சடங்குகளும், வழிபாடுகளும் இருக்கின்றன. ஆனால் இதில் ஒரு பொதுவான விஷயம் இருக்கின்றது. அது வித்தியான பல்வேறு வழிமுறைகள் மூலம், சாத்தானுடைய வித்தியாசமான பல்வேறு ஆவிகளுடன் தொடர்பு கொள்வதாகும். பல வித்தியாசமான சடங்குகள் இருக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை, நம்மை கறைப்படுத்தக்கூடியவை, கொடூரமானவை, தவறான உணர்வுகளை நமக்குள் தூண்டக்கூடியவை. சாத்தானுக்கும் அவனுடைய ராஜ்யத்திற்கும் தங்களையே உகந்தவர்களாக்கிக் கொள்ளும்படி பல்வேறு காலகட்டங்களில் மனுஷர்கள் செய்த காரியங்கள், சிந்திப்பதற்கே மகா பயங்கரமானவைகளாய் இருக்கின்றன.

இந்தச் செய்தியில், பில்லிசூனியத்தின் தன்மையைக் குறித்து, டெரிக் நமக்குப் போதிக்கப் போகிறார். எங்கேயிருந்து அது வளர்ந்தது என்று அதன் வேரை ஆராயப் போகின்றார். பில்லிசூனியத்தை, மாம்சத்தின் ஒரு கிரியையாக, ஒரு தீய ஆவிக்குரிய வல்லமையாக நாம் பார்க்கப் போகிறோம். சபையில் அது எவ்வாறு தன்னை வெளிப்படுத்துகிறது என்பதைக் குறித்தும் நாம் அறிந்து கொள்வோம்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் அல்லது ஒரு பெரிய கிறிஸ்தவ தேசத்தில் வளர்ந்தவர்களுக்கு, பில்லிசூனியம் என்பது வேறு ஏதோ ஒரு காலத்தில், வேறு ஏதோ ஒரு இடத்தில் நிகழ்ந்த ஒன்றைப்போலத் தெரியலாம். இன்றைய காலத்திற்கு சம்பந்தமில்லாத ஒன்றைப்போல இது அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் பில்லிசூனியத்தின் கிரியைகளில் சிக்கிக் கொண்டவர்களுக்கு, அது எவ்வளவு நிஜமானது, அது எவ்வளவு மோசமான அழிவை உண்டாக்கக்கூடியது என்பது நன்றாகத் தெரியும். இதில் துளியும் சந்தேகமே இல்லை.

பில்லிசூனியம் என்பது நாம் நினைத்ததைக் காட்டிலும் மகா தந்திரமானது, நம் சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறது என்பதை இந்தச் செய்தியின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்டிருப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனாலும் நாம் தேவனுக்கு நன்றியுணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும். காரணம், தேவன் நம்மை அந்தகாரத்திலிருந்து வெளியே கொண்டு வந்து, தம்முடைய ஆச்சரியமான ஒளிக்குள் நம்மை நுழையச் செய்திருக்கிறார் **(1 பேதுரு 2:9).** நாம் இனி பில்லிசூனியத்தினுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்க வேண்டிய அவசியமில்லை. பில்லிசூனியத்தினால், மற்றவர்கள் மீது நாம் ஆதிக்கம் செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை. ஒரு மேலான வழியை நமக்குக் காண்பிக்கும்படி, கிறிஸ்து வந்தார்.

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

**1.** பில்லிசூனியத்திற்கும், தேவனுக்கு விரோதமாக .............................. செய்வதற்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு இருக்கின்றது.

**2.** சவுல் ராஜா, கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியத் தவறினான். அப்பொழுது சாமுவேல் தீர்க்கதரிசி இவ்வாறு சொன்னான்: "இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது. நீர் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாய் இராதபடிக்கு புறக்கணித்துத் தள்ளினார்." இந்த வசனத்தில், சாமுவே இரண்டு ஒப்பீடுகளைச் செய்கிறான்:

*(அ) இரண்டகம் பண்ணுதல், .............................. இன்னொரு வடிவமாக இருக்கிறது. இரண்டகம் பண்ணுதல், பில்லிசூனியத்தின் வேராக இருக்கிறது. அங்கே நீங்கள் முறைகேடான அதிகாரத்தைப் பார்க்க முடியும். பில்லிசூனியத்தின் முறைகேடான வல்லமையினால் அது தாங்கிப் பிடிக்கப்படுகிறது.*

*(ஆ) ...................................., விக்கிரக ஆராதனையின் இன்னொரு வடிவமாக இருக்கின்றது. முரட்டாட்டம் செய்கிற ஒரு நபர், தன்னுடைய தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்டே விக்கிரகங்களை உருவாக்குகிறார். இதுதான் விக்கிரக ஆராதனையாய் இருக்கிறது.*

*(இ) பில்லிசூனியம், மற்றவர்களை ................................ .. எடுக்கின்ற ஒரு முயற்சியாக இருக்கின்றது. ஏதோ ஒரு ஆவியை பயன்படுத்தி, நீங்கள் என்ன விரும்புகின்றீர்களோ, அதை அவர்கள் செய்யும்படி கட்டுப்படுத்தி நடத்துவதாகும். பரிசுத்த ஆவியானவர் இதைச் செய்வதில்லை. பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் மற்றவர்களை கட்டுப்படுத்தும்படி நாட மாட்டார்.*

## *பில்லிசூனியத்தின் மூன்று தன்மைகள்*

### பில்லிசூனியம், ஒரு மாம்சக் கிரியை

கலாத்தியர் **5:19-20** வசனங்களில், பவுல் இவ்வாறு சொல்கிறார்: “மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம்...........”

மாம்சக் கிரியைகள் என்ற இந்தப் பட்டியலின் நடுவில், விக்கிரக ஆராதனையும், பில்லிசூனியமும் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது இவை மனுஷனுடைய விழுந்துபோன சுபாவத்தின் கிரியைகளாக வெளிப்படுகின்றன. அதாவது மனுஷனுடைய விழுந்துபோன சுபாவமாகிய மாம்சம் அவ்விதத்தில்தான் செயல்படுகின்றது. நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின்படி, நாம் மற்றவர்களை கட்டுப்படுத்தி நடத்தவே விரும்புகிறோம். நாம் என்ன விரும்புகிறோமோ, அதை மற்றவர்கள் மூலமாய் நிறைவேற்றிக் கொள்ளும்படி, நாம் முற்படுகின்றோம், தீவிரமாய் முயற்சிக்கின்றோம். இதை அடையும்படி, பெரும்பாலும் முறைகேடான வழிமுறைகளைத்தான் நாம் பின்பற்றுகின்றோம்.

*4. இவ்வகையான செயல்பாட்டோடு, மூன்று முக்கியமான வார்த்தைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன:*

*(அ) ................................. - எடுத்துக்காட்டுகள்: சிறுபிள்ளைகள், மனைவிகள், தொழிலில் ஈடுபடுபவர்கள், சபைத்தலைவர்கள், சபை உறுப்பினர்கள். இவர்கள் மற்ற வர்களைக் கட்டுப்படுத்தி நடத்துவதன் மூலம், தங்களுடைய காரியங்களை சாதிக்கும்படி, நாடுகிறார்கள்.*

*(ஆ) .................................... - ஒரு தகப்பனோ, ஒரு ஆசிரியரோ அல்லது அதிகாரத்தில் இருக்கும் ஒரு நபரோ, தன்னுடைய*

*பொறுப்பின் கீழ் இருப்பவர்களை, சத்தமாய் கத்துவதன் மூலம், அச்சுறுத்துகிற வார்த்தைகள் மூலம், வன்செயல்கள் மூலம் தான் விரும்பினதை அடையும்படி நாடுவதாகும்.*

*(இ) .................................. - கட்டுப்படுத்துதல் மற்றும் அச்சுறுத்துதலின் நோக்கம், எப்பொழுதுமே ஒரு நபரையோ அல்லது ஒரு சூழ்நிலையையோ தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதாகும்.*

*5. பில்லிசூனியத்தின் பொதுவான சூழ்ச்சிகளில் ஒன்று, உங்களை .................................. தள்ளுவதாகும். அதற்கு நேரெதிராக, பரிசுத்த ஆவியானவர் ஜனங்களை குற்ற உணர்வுக்குள் தள்ளுவதில்லை. மாறாக, அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உணர்த்துவார் (யோவான் 16:8). குறிப்பிட்ட சில விஷயங்களின் மீது, அவர் தன் விரலை வைத்து, சுட்டிக் காண்பித்து, "நீ தவறு செய்து விட்டாய். நீ இதை இவ்வாறு செய்திருக்க வேண்டும். இப்பொழுதே நீ மனந்திரும்பி, உன் காரியங்களை சீர் செய்து கொள்," என்று சொல்கிறார். ஆனால் குற்ற உணர்வுக்கு ஒரு முடிவு என்பதே இருக்காது.*

*6. பில்லிசூனியத்தின் இன்னொரு முயற்சி, ஒரு குறிப்பிட்ட நபருடைய கருத்தும், ................................ மிகவும் முக்கியம் என்று உங்களை உணர வைப்பதாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் எதிர்கொள்ளும்போது, நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்: "இந்த நபருடைய அங்கீகாரம் எனக்கு அவ்வளவு முக்கியமானதா? என்னை கட்டுப்படுத்தி நடத்தும்படி, நானே இவருக்கு அனுமதி கொடுக்கப் போகிறேனா?" அது நமக்கு அவ்வளவு முக்கியமானதாக இருக்கக்கூடாது என்பதுதான் நம் முடிவாக இருக்க வேண்டும்!*

*7. யாக்கோபு 1:14 சொல்கிறது: "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்." அதிகாரத்தில் இருந்து, எல்லோரையும் கட்டுப்படுத்த வேண்டும், புகழின் உச்சிக்குச் செல்ல வேண்டும், பிரபலமாக வேண்டும் என்ற ........................... நம் எல்லோருக்குள்ளும் இருக்கின்றது. இந்த சுபாவத்தோடுதான் நாம் பிறந்திருக்கிறோம். சாத்தான் இதைப் பயன்படுத்திக்*

*கொள்வான் என்றால், அவன் நம்மை அவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் நிச்சயம் கொண்டு வந்து விடுவான்.*

**பில்லிசூனியம் - ஒரு ஆவிக்குரிய வல்லமை**

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமையைக் குறித்து நாம் பேசப் போகின்றோம். இது மனுஷனுடைய வல்லமையைக் காட்டிலும் அதிகமான ஒன்றாக இருக்கின்றது.

*8. இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமையின் எல்லா வெளிப்பாடுகளும் தேவனிடமிருந்து வருவதில்லை என்பதை நாம் மிகவும் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றுள் நிறைய வெளிப்பாடுகள், சாத்தானிடமிருந்து வருகின்றன. இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை, இரண்டு இடங்களிலிருந்து மட்டுமே வெளிப்படுகின்றன. ஆகையால் அது தேவனிடமிருந்து வரவில்லை என்றால், நிச்சயமாக, அது ............................ வருகின்றது.*

*9. சாத்தானுடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட கிரியைகள் முழுவதையும் மூன்று முக்கியக் கிளைகளாகப் பிரிக்கலாம்:*

*(அ) ................................ - இது வல்லமையின் கிளையாகும். இது சாபங்களை, தீய மந்திரங்களை உச்சரிப்பதன் மூலம் கிரியை செய்கிறது.*

*(ஆ) ................................ - இது குறி சொல்லுதலை ராசி (பலன்கள், ஜோசியம் பார்த்தல்) குறிக்கிறது. இது பில்லிசூனியத்தின் அறிவுக் கிளையாக இருக்கின்றது. அறிவைப் பெற வேண்டும் என்ற தவறான இச்சைதான், ஆதியில் மனுஷனை பாவத்தில் விழச் செய்தது.*

*(இ) .................................. - இது பொருட்கள் மூலம் கிரியை செய்கிறது. வசிய மருந்து, கவர்ந்திழுத்து தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளக்கூடிய பொருட்கள், பிசாசை மகிமைப்படுத்தும் இசை, போதை மருந்துகள். பில்லிசூனியம் என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்துதான், போதை மருந்து என்பதற்கான கிரேக்க வார்த்தை நேரடியாக வந்திருக்கிறது. அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்று நம்பப்படுகிற பொருட்களும் இதில் உள்ளடங்கும்.*

பில்லிசூனியத்தின் மகா பயங்கரமான வல்லமையை வெளிப்படுத்தும் ஒரே ஆயுதம், சாபங்களைப் பேசுகிற மிகவும் பழமையான நடைமுறையாகும். எண்ணாகமம் **22**-ல், பிலேயாமைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். அவன் ஒரு மந்திரவாதி. பிலேயாம் எப்படிப்பட்டவன் என்று அவனை வகையறுப்பது மிகவும் கடினமான ஒரு விஷயமாகும். இயற்கைக்கு அப்பாற்ப்பட்டவைகள் வரக்கூடிய இரண்டு வழிகளுக்கும், அதாவது தேவனுக்கும், சாத்தானுக்கும் அவன் தன் வாசலை திறந்து வைத்திருந்தான். இன்றைக்கும் இவனைப் போன்றவர்கள் நிறையவே இருக்கின்றனர். இவர்களைப் புரிந்து கொள்வதென்பது மிகவும் கடினமான ஒன்றாயிருக்கிறது. காரணம், சில நேரங்களில், இவர்கள் சரியாக நடந்து கொள்வார்கள். மற்ற நேரங்களில், இவர்கள் தவறாக நடந்து கொள்வார்கள். ஒருவர் தேவனுக்கு மட்டுமே திறந்த இருதயத்தோடு இருப்பார் என்றால், அவர் எப்பொழுதும் சரியானதைத்தான் செய்வார். ஒரு நபர் சாத்தானுக்கு மட்டுமே திறந்த இருதயத்தோடு வாழ்வார் என்றால், அவருடைய கிரியைகள் தவறானவைகளாய் இருக்கும். ஆனால் யாரைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும் என்று தெரியுமா? இவர்கள் சில நேரங்களில் தேவனுக்கும், சில நேரங்களில் பிசாசுக்கும் திறந்த இருதயத்தோடு வாழ்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லா சபைகளிலும் இருக்கின்றனர். இவர்களைப் புரிந்து கொள்வதற்கு அதிகாரமும், தைரியமும், இவர்களுடைய இருதயத்திலுள்ளதை அறிந்து கொள்ளும் திறனும் தேவையாயிருக்கிறது.

*10. வேதாகமத்தின் காலங்களில், யுத்தத்திற்குச் செல்லும் ராஜாக்களாலும், மற்றவர்களாலும் வழக்கமாகப் பின்பற்றப்படுகிற நடைமுறை இதுதான். அவர்கள் நேரடியாக யுத்தகளத்திற்குச் சென்று, யுத்தம் செய்வதோடு நின்று விட மாட்டார்கள். அவர்கள் ஆவிக்குரிய தளத்திலும், ................ செய்வார்கள். அவர்கள் இதற்காக ஒரு மந்திரவாதியை வரவழைத்து, தங்களுடைய எதிரிகளை சபிப்பார்கள். அதன் மூலம், அவர்கள் யுத்தத்தில் தங்களுடைய எதிரிகளைத் தோற்கடிக்கக்கூடிய ஒரு இடத்திற்குக் கொண்டு வருவார்கள் (எடுத்துக்காட்டிற்கு, எண்ணாகமம் 22:10-11 வசனங்களை வாசியுங்கள்).*

*11. அப்போஸ்தலர் நடபடிகள் 16:16-24 வசனங்களில் ஒரு சம்பவத்தை நாம் வாசிக்கின்றோம். பவுலும் சீலாவும்*

*பிலிப்பி பட்டணத்திற்கு வந்து, சுவிசேஷத்தை அங்கு முதல்முறையாக பிரசங்கித்தார்கள். அங்கு குறி சொல்கிற ஆவியை உடைய ஒரு அடிமைப் பெண், இவர்களுக்கு நேரே வந்தாள். கிரேக்க மொழியில் இது 'மலைப்பாம்பின் ஆவி' என்றழைக்கப்படுகிறது. அந்த பெண் சொன்ன விஷயம், .......................... - ஆனால் அந்த இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வெளிப்பாடு, சாத்தானிடமிருந்து அவளுக்கு உண்டானது. ஆகையால் அவளை விட்டு வெளியேறும்படி, பவுல் இயேசுவின் நாமத்தினால் அந்த ஆவிக்குக் கட்டளையிட்டார். அவளும் விடுதலையாக்கப்பட்டாள்.*

*12. பொல்லாத துன்மார்க்கர் மீது வரப்போகிற தேவனுடைய தண்டனைகளைக் குறித்து யோவான் எழுதியிருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 9:21-ல், அவர் இவ்வாறு சொல்கிறார்: "அவர்கள் தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும் (போதைமருந்துகளையும்), தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவில்லை." பில்லிசூனியத்தோடு இங்கு .......... ...................., வன்முறையும் சேர்ந்தே செல்கிறது. இன்றைய கலாச்சாரத்தில் காணப்படுகிற இவ்வளவு பயங்கரமான வன்முறைக்குக் காரணம், பெரிய அளவில் நடக்கின்ற பில்லிசூனியத்தின் கிரியைதான். ஆகையால் இந்த பிரச்சனை களுக்காக நாம் ஜெபிக்கும்போது, இந்தக் கிளைப் பிரச்சனை க்காக ஜெபிப்பதோடு மட்டும் நாம் நின்று விடக்கூடாது. இதன் வேர்ப் பிரச்சனைக்காகவும் நாம் ஜெபித்தே ஆக வேண்டும்.*

**சபைக்குள் நடக்கின்ற பில்லிசூனியக் கிரியை**

சபைக்குள் பில்லிசூனியக் கிரியை என்று சொன்னால், அது என்ன என்ற ஐடியாவே நிறைய எண்ணிக்கையிலான பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு இல்லை என்பதுதான் உண்மை என்று டெரிக் இந்தச் செய்தியில் சொன்னார். பில்லிசூனியம் எந்தெந்த வழிகளிலெல்லாம் சபைக்குள் ஊடுருவ முடியும் என்பதை நாம் அறிந்து கொள்வதற்கு கலாத்தியர் **3:1-5** வசனங்கள் நமக்கு உதவி செய்கின்றன. இது ஒரு முக்கியமான வேதப்பகுதியாக இருக்கிறது.

*[1]புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படியாமல் போகத்தக்கதாக, உங்களை மயக்கினவன்*

*யார்? இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. [2]ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயா, விசுவாசக் கேள்வியினாலேயா, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? [3]ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? [4]இத்தனை பாடுகளையும் வீணாய் பட்டீர்களோ? அவைகள் வீணாய் போயிற்றே. [5]அன்றியும் உங்களுக்குள்ளே ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயா, விசுவாசக் கேள்வியினாலேயா, எதினாலே செய்கிறார்?*

13. கலாத்தியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் கர்த்தராகிய இயேசுவை அறிந்து கொண்டனர். அவர்கள் இரட்சிக்கப்பட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் அற்புதங்களை நேரில் கண்டனர். ஆனாலும் அவர்கள் ..................................... என்று 1-ம் வசனத்தில் பவுல் நமக்குச் சொல்கிறார். அவர்கள் பில்லிசூனியத்தினுடைய ஆதிக்கத்தின் கீழ் வந்தனர்.

14. பில்லிசூனியக் கிரியை அங்கே செயல்படுகிறது என்பதற்கான ஆதாரம், ..................... என்ன நிகழ்ந்தது என்பதைப் பார்க்க முடியாதபடி, அது அங்கே மறைக்கப்பட்டிருந்ததுதான் (1-ம் வசனம்). சிலுவையில் இயேசு கிறிஸ்து அறையப்பட்டார் என்ற நிஜத்தை மறைக்க வேண்டும் என்பதுதான், சபைக்குள் நடக்கின்ற பில்லிசூனியக் கிரியையின் உச்சபட்ச நோக்கமாயிருக்கிறது.

15. உள்ளே நுழைந்த சாத்தானுடைய தீய வல்லமையினால், இரண்டு மோசமான விளைவுகள் உண்டாயின:

(அ) ............................. - தேவனைப் பிரியப்படுத்தும்படி, அவர்கள் மாம்சீகமான வழிகளுக்குள் திரும்பவும் சென்று விட்டனர் (3-ம் வசனம்).

(ஆ) ............................. - தேவனுக்கு முன்பாக நீதியை அடையும்படி, அவர்கள் எல்லா வகையான பிரமாணங்களையும்

கடைபிடிக்கும்படி முயற்சித்தனர். அதன் விளைவாக, கிறிஸ்துவினுடைய மரணத்தின் நோக்கத்தையே அவர்கள் தவற விட்டனர் (5-ம் வசனம்).

16. மாம்சம் மற்றும் நியாயப்பிரமாணத்தின் மூலம் நீதியை அடையும்படி முயற்சிப்பதால் உண்டாகக்கூடிய விளைவைக் குறித்து கலாத்தியர் 3:10-ல் சொல்லப்பட்டிருக்கிறது: "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் ............................. - நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே." பிரமாணத்தில் ஒரு சிறிய பகுதியை எப்பொழுதாவது கடைப்பிடித்தால், அது உங்களுக்கு ஒரு நன்மையையும் செய்யாது. நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பத ன் மூலம் நீங்கள் நீதிமானாக்கப்படப் போகிறீர்கள் என்றால், நீங்கள் நியாயப்பிரமாணம் முழுவதையும் எல்லா நேரங்களிலும் கடைபிடித்தாக வேண்டும். சத்தியம் என்னவென்றால், தேவனுடைய பார்வையில், நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலம், நம்மில் ஒருவரும் நீதிமானாக்கப்பட முடியாது. ஆக முடியும் என்றால், அது சாத்தானுடைய வஞ்சகமாய் இருக்கிறது.

17. கிறிஸ்தவம் என்பது, .......................... அடங்கிய ஒரு மார்க்கமல்ல. ஆனால் நாம் அதை அப்படி சுருக்கி விடுவோம் என்றால், சிலுவையின் தரிசனத்தை இழந்து விட்டோம் என்று அர்த்தம். தேவனுடைய வல்லமையையும் நாம் இழந்து விட்டோம் என்பதுதான் உண்மை.

18. இன்று சபையின் பெரும்பகுதியில் காணப்படும் பெலவீனத்தை சரி செய்யும்படி, இரண்டு முக்கியமான காரியங்களைச் செய்ய வேண்டும்:

(அ) முதல் காரியம்: திரும்பவும் சபையின் மையத்தில், இயேசுவின் ................ கொண்டு வரப்பட வேண்டும். காரணம், அதுதான் கிறிஸ்தவத்தை மற்ற மதங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. சிலுவையையும், அதன் தனித்தன்மையையும் நாம் அங்கிருந்து அகற்றும்போது, நம் திரும்பவும் நியாயப்பிரமாணங்களின்படி வாழ ஆரம்பித்து விடுகின்றோம்.

*மாற்றத்திற்கான வல்லமை, சிலுவை என்ற ஒரு இடத்திலிருந்து மட்டுமே வருகின்றது.*

*(ஆ) 2-வது காரியம் - சபையானது இயேசுவுக்குரிய தலைமையின் இடத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும். காரணம், தேவனே அவரை சபைக்கு ..................... வைத்திருக்கிறார் (எபேசியர் 1:23). அடிப்படைப் பிரச்சனை இதுதான். இயேசுவின் தலைமைக்குரிய ஸ்தானத்தை, சபையானது மெய்யாகவே ஏற்றுக் கொள்வதில்லை. தலை தான், எல்லா தீர்மானங்களையும் எடுக்கின்றது. சரீரம் அதைத் தொடருகின்றது. எத்தனை சபைகளில், மெய்யாகவே பரிசுத்த ஆவியானவர் மூலமாய், இயேசுவினால் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன? மாறாக, எல்லாச் சூழ்நிலைகளிலும் எந்த சக்தி கிரியை செய்து கொண்டிருக்கிறது? பில்லிசூனியம்.*

*19. பில்லிசூனியமானது, மாம்சத்தின் கிரியையாக கண்களால் பார்க்கக்கூடிய விதத்தில் வெளிப்பட்டாலும் அல்லது பில்லிசூனியமானது இயற்கை அப்பாற்ப்பட்ட விதத்தில் வெளிப்பட்டாலும், பில்லிசூனியம் .......................... கிரியை செய்கிறது என்பதை கிறிஸ்தவர்கள் அறிந்து விடக்கூடாது என்றுதான் சாத்தான் விரும்புகிறான்.*

*20. சிலுவையின் காட்சியை மறைக்க வேண்டும் என்று சாத்தான் விரும்புவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன:*

*(அ) முதல் காரணம்: சிலுவைதான், தேவன் தம்முடைய மீட்கப்பட்ட ஜனங்களுக்கென்று செய்து வைத்திருக்கிற எல்லா ............................................ அடிப்படையாயிருக்கிறது. வேறு எந்த அடிப்படையும் இல்லை. எபிரெயர் 10:14 சொல்கிறது: "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினால் இவர் (தேவன்) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்." வரலாற்றில் வாழ்ந்த, வாழ்கின்ற, இனி வாழப் போகிற எல்லா மனுஷர்களுக்கும் தேவையான எல்லாவற்றையும், தேவன், இயேசுவின் சிலுவை தியாக பலியின் மூலம் நிறைவாய் சந்தித்திருக்கிறார். இவையெல்லாம் சிலுவையின் மூலம் நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கிறது.*

*(ஆ) இரண்டாவது காரணம்: சிலுவையின் மூலமாகத்தான், சாத்தானுடைய ஒட்டுமொத்த ............................ உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு சிலுவையில் சாத்தானை தோற்கடித்தார். இந்தத் தோல்வி, முழுமையானது. இது நித்தியமானது. இதை திருப்ப முடியாது. சாத்தானால் இதை மாற்ற முடியாது. ஆனால் இந்த உண்மையை நாம் பார்க்க முடியாதபடி, அவனால் மறைக்க முடியும். அப்பொழுது நம்மால் வெற்றி வாழ்க்கை வாழ முடியாமல் போய் விடும். காரணம், நமக்காக வெல்லப்பட்ட ஜெயத்தைக் குறித்த வெளிச்சத்தை நாம் பெற்று இன்னும் கொள்ளவில்லை.*

*(இ) மூன்றாவது காரணம்: உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு வேண்டிய வல்லமை, சிலுவையிடமிருந்து மட்டுமே நமக்குக் கிடைக்கின்றது. சிலுவையில் நிகழ்ந்த இயேசுவினுடைய ............................ மூலமாக மட்டுமே, அவ்வாறு வாழ்வதற்கு வேண்டிய திறனும், வல்லமையும் நமக்குக் கிடைக்கின்றது. காரணம், அவருடைய தியாக பலி மரணம், பழைய மனுஷனை, மாம்ச சுபாவத்தை சிலுவையில் அறைந்திருக்கிறது. "நம்முடைய பழைய மனுஷன், அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான்," என்று பவுல் சொல்கிறார். "கிறிஸ்துவினுடையவர்கள் தங்களுடைய மாம்சத்தையும், அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்," என்று கலாத்திய நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நம் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் நம் மாம்ச சுபாவத்தின் மீது, சிலுவையின் கோட்பாட்டை பயன்படுத்தும்படி நாம் கற்றுக் கொள்ளவில்லை என்றால், நம்மால் அதன் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. ரோமர் 6-ல், பவுல் இவ்வாறு சொல்கிறார்: "நாம் இனி பாவத்திற்கு அடிமைகளாய் ஊழியம் செய்யாதபடி, நம்முடைய பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான்." (6-ம் வசனம்). இதுதான் சிலுவை நமக்காக செய்து வைத்திருக்கிற முன்னேற்பாடாகும்.*

சிலுவையின் நன்மைகள், நமக்கு படிப்படியாக உண்டாகின்றன. நாம் வேறுபிரிக்கப்படுகின்றோம். சிலுவையில் இயேசு செய்திருக்கிற காரியம், பூரணமாய், முழுமையாய் செய்து முடிக்கப்பட்ட ஒன்றாய் இருக்கிறது.

ஆனால் நாம் அந்த நன்மைகளை படிப்படியாகப் பெற்றுக் கொள்கிறோம். சிலுவையில் மூலம் உண்டாயிருக்கிற எல்லா நன்மைகளையும் முழுமையாய் சுதந்தரித்துக் கொண்டவர் என்று எவருமில்லை. இதுவரை ஒருவரும் அவற்றை பூரணமாய் பெற்றுக் கொண்டதில்லை. ஆனால் வேறுபிரிக்கப்படுகிற கிரியையின் வழியாக நாம் செல்வோம் என்றால், நாம் பரிசுத்தமாக்கப்படுவோம், தேவனுடைய சாயலுக்கு ஒத்தவர்களாய் உருமாற்றப்படுவோம், தேவன் சிந்திக்கிற விதத்தில் சிந்திப்போம், அவருடைய வழியில் வாழ்வோம். மேலும் மேலும் அவருடைய நன்மைகளை நாம் சுதந்தரித்துக் கொள்வோம்.

ஆனால் பில்லிசூனியம் உள்ளே நுழைந்தது என்றால், அது சிலுவையைப் பார்க்க முடியாதபடி மறைத்து விடும். ராஜாவுடைய பிள்ளைகளாய் வாழ வேண்டிய நாம், தரித்திரர்களாய் பிச்சைக்காரர்களைப்போல வாழ்ந்து கொண்டிருப்போம். இதற்குக் காரணம், தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கிற எல்லா நன்மைகளும் சிலுவையின் அடிப்படையில் மட்டுமே நமக்குக் கிடைக்கின்றன. சாத்தான் தந்திரமும், சூழ்ச்சித்திறனும் உள்ளவன். எங்கே துல்லியமாகத் தாக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். அவனால் சிலுவையை மறைக்க முடியும் என்றால், சபை அவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

வேறுபடுத்தி, சோதித்தறிய வேண்டிய இந்த முக்கியமான விஷயத்தில், கர்த்தராகிய இயேசு நமக்கு உதவி செய்யும்படி, நாம் அவரிடம் ஜெபிப்போம்:

*பரலோகப் பிதாவே,*

*இயேசுவினுடைய சிலுவையின் மூலம், என்னுடைய எல்லாத் தேவைகளையும் நீர் சந்தித்திருக்கிறீர். உமக்கு நன்றி. என் தேவைகளெல்லாம் சந்திக்கப்படுவதற்கு அது ஒன்றுதான் அடிப்படை என்று புத்தம் புதிய விதத்தில், நான் நினைப்பூட்டப்படுகிறேன். அது சாத்தானுடைய ஒட்டுமொத்த தோல்வியை உறுதிப்படுத்துகிறது. வெற்றிகரமான கிறிஸ்தவ ஜீவியம் வாழ்வதற்கு வேண்டிய வல்லமை அதிலிருந்து மட்டுமே எனக்குக் கிடைக்கின்றது.*

*என்னுடைய வாழ்க்கையின் மையத்தில் சிலுவையை வைப்பதற்கு எனக்கு உதவி செய்யும். நீதியை அடையும்படி, மாம்சீகமான, நியாயப்பிரமாண வழிகளைத் தேடி நான் அலையாதபடி என்னைக் காத்துக்*

*கொள்ளும். என்னுடைய நீதியின் கிரியைகளின் நிமித்தம், நான் நீதிமானாகவில்லை. மாறாக, உம்முடைய இரக்கம் மற்றும் கிருபையினால் நான் நீதிமானாயிருக்கிறேன் என்று நான் அறிவிக்கிறேன்.*

*கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சம் தயவு செய்து என் இருதயத்தில் விழுந்து, பிரகாசிக்கட்டும். என்னுடைய தனிப்பட்ட காரியங்களை சாதிக்கும்படி, கவனக்குறைவாக, பில்லிசூனியக் கிரியைகளை நான் நாடிச் சென்ற நேரங்களை எனக்கு வெளிப்படுத்தும். என்னுடைய வாழ்க்கையின் கட்டுப்பாட்டை நான் உம்மிடம் விட்டு விடுகிறேன். மற்ற வர்களை கட்டுப்படுத்தி நடத்தும்படி, அச்சுறுத்தும்படி, மற்ற வர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும்படி நான் இனி ஒருபோதும் முயற்சிக்கக்கூடாது. எனக்கு உதவி செய்யும். நான் பேசுகிற, செய்கிற எல்லாவற்றிலும் உம்முடைய உன்னதமான வழிகளைப் பின்பற்றி நடக்கும்படி எனக்கு உதவி செய்யும்.*

*இயேசுவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

அடுத்த செய்தியில், அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் குறித்து டெரிக் போதிப்பார். இந்தத் தொடரின் கடைசி செய்தியில், சபையின் வெற்றி என்ற ஆச்சரியமான நற்செய்தியை அவர் போதித்து முடிப்பார்.

405-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/29**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி ஏழு>>*

# நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் - பாகம் 3

# அந்திக்கிறிஸ்துவின் ஆவி[4264]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இது "நாம் எதிர்கொள்ளும் எதிரிகள்" என்ற செய்தித்தொடரின் மூன்றாவது செய்தியாக இருக்கின்றது. முதல் இரண்டு செய்திகளில், சாத்தானுடைய ராஜ்யத்தின் தன்மை மற்றும் அதன் உள்கட்டமைப்பைக் குறித்து நாம் பார்த்தோம். வேதவசனங்களின் மூலம், சாத்தானுடைய ராஜ்யம் எங்கே ஆரம்பித்தது என்பதை டெரிக் நமக்குக் காண்பித்தார். ஆதியில் லூசிபர் என்றழைக்கப்பட்ட பிரதான தூதன், தன்னோடு ஒரு கூட்ட தூதர்களை சேர்த்துக் கொண்டு, தேவனுக்கு விரோதமான முரட்டாட்டத்தில் அவர்களை தலைமையேற்று நடத்தினான். தேவனுக்கு விரோதமான ஒரு ராஜ்யத்தையும் அவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுவினான். புதிய ஏற்பாட்டில், அந்த இடம், "வானங்கள்" என்றழைக்கப்படுகிறது. சாத்தானுடைய ராஜ்யத்தை எதிர்த்து, வானங்களில் யுத்தம் செய்யும்படி, இயேசு கிறிஸ்துவின் சபையானது அழைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது செய்தியில், சாத்தானுடைய ராஜ்யத்தின் முக்கியமான கிரியைகளில் ஒன்றைக் குறித்து நாம் பார்த்தோம். அதன் வல்லமை முக்கியமாய் வெளிப்படுகிற பில்லிசூனியக் கிரியையைக் குறித்து நாம் அறிந்து கொண்டோம். பில்லிசூனியம் என்ற வார்த்தை இன்று பலருக்கு ஏதோ பழங்காலத்தோடு தொடர்புடைய ஒரு வார்த்தையைப்போல இருக்கின்றது. மத்திய காலகட்டத்திலிருந்து இது வந்தது, ஆனால் இது என்றோ ஒழிந்து போய் விட்டது, இன்றைக்கு இது நம்மோடு எவ்விதத்திலும் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்றுதான் இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இது முற்றிலும் தவறானதாகும். பில்லிசூனியம் இன்றைக்கும்

நிஜமாகவே கிரியை செய்து கொண்டிருக்கிறது. உண்மையில், இன்றைக்கு பில்லிசூனியம் கிரியை செய்கிறதைப்போல, மனுஷ வரலாற்றில் முன் ஒருபோதும் கிரியை செய்ததில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன். அவ்வளவு அதிகமாக, மிகவும் வலிமையாக, மிகவும் தீவிரமாக அது இன்று கிரியை செய்து கொண்டிருக்கிறது. ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளுக்கு முன்னால், கிறிஸ்தவ தேசங்கள் என்றழைக்கப்பட்ட பல தேசங்களில், இன்று பில்லிசூனியத்தின் கிரியை மிகவும் வேகமாக, மோசமாக ஊடுருவியிருக்கிறது.

பில்லிசூனியத்தைக் குறித்த ஒரு சுருக்கமான விளக்கத்தை மூன்று விஷயங்களில் டெரிக் நமக்குக் கொடுத்தார்.

❖ முதலில் மாம்சத்தின் ஒரு கிரியையாக வெளிப்படும் பில்லிசூனியத்தைக் குறித்து நாம் பார்த்தோம். மனுஷனுடைய விழுந்துபோன சுபாவம் தன்னையே வெளிப்படுத்துகிற வழிகளில் ஒன்றாய் இது இருக்கிறது. கட்டுப்படுத்துதல், அச்சுறுத்துதல், ஆதிக்கம் செலுத்துதல் என்ற மூன்று முக்கியமான வார்த்தைகளை டெரிக் சொன்னார். பில்லிசூனியத்தின் குறிக்கோள், மற்றவர்களைக் கட்டுப்படுத்தி நடத்தி, நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதை அவர்களை செய்ய வைப்பதாகும். அதற்கு இது முறைகேடான வழிகளை பயன்படுத்துகிறது. பில்லிசூனியம், தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்வதற்குச் சமமாயிருக்கிறது. தேவனுக்கு விரோதமாக மனுஷன் செய்கிற முரட்டாட்டத்தின் நிறைவேறுதலாய் இது இருக்கிறது.

❖ இரண்டாவதாக, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் சாத்தானுடைய மதமாய் பில்லிசூனியம் கிரியை செய்வதை நாம் பார்த்தோம். அதன் பல்வேறு அம்சங்கள் மற்றும் கட்டங்களைக் குறித்து நாம் அறிந்து கொண்டோம். பெரும்பாலான தேசங்களில், பில்லிசூனிய கிரியைகளைச் செய்கிற ஆசாரியன், மந்திரவாதி என்றழைக்கப்படுகிறான். பில்லிசூனியத்தில் ஈடுபடாத ஜனங்கள் வாழ்கின்ற ஒரு பகுதியை, இந்தப் பூமியில் நீங்கள் எங்கும் பார்க்க முடியாது. பில்லிசூனியம் என்பது பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே கிரியை செய்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் இது இவ்வுலகத்தின் பல இடங்களில், பொல்லாத ஒரு ஆவிக்குரிய கிரியையாக பெருமளவில் காணப்படுகிறது.

❖ மூன்றாவதாக, சபையில் காணப்படுகிற பில்லிசூனியக் கிரியையைக் குறித்து நாம் அறிந்து கொண்டோம். இது சாத்தான் பிரதானமாக

தாக்குகிற ஒரு இடமாக இருக்கின்றது. "முட்டாள் கலாத்தியரே, எவன் உங்களை மயக்கினான்?" என்று பவுல், கலாத்திய பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடம் கேட்கின்றார். சிலுவையில் அறையப்பட்ட இயேசு, அவர்களுடைய கண்களுக்குத் தெரியாதபடி மறைக்கப்பட்டிருந்தார் என்பதுதான் அவர்கள் மயக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கான ஆதாரம் என்று நாம் பார்த்தோம். அதன் விளைவாக, தன்னுடைய சிலுவை மரணத்தின் மூலம், இயேசு சம்பாதித்து வைத்திருந்த எல்லா நன்மைகளையும் பிசாசு அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டான்.

பில்லிசூனியத்தின் இந்த வேலை சபைக்குள் இரண்டு மோசமான பிரச்சனைகளை உண்டாக்கி விட்டது. ஒன்று, மாம்சீகமான கிரியைகள். பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து கொள்வதற்குப் பதிலாக, நம்முடைய மாம்சத்தை சார்ந்து கொண்டு வாழ்வதாகும். அடுத்ததாக, தங்கள் சுயநீதியின் கிரியைகளை நம்பி வாழ்வதாகும். இது மாம்சக் கிரியைகளின் நிறைவேறுதலாயிருக்கிறது. கிறிஸ்தவ சபைகள் தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்கிற பெரும்பாலான இடங்கள் இதற்குச் சாட்சியாய் இருக்கின்றன என்று டெரிக் சொல்கிறார். இவை பரிசுத்த ஆவியான வரின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட கிருபையையும், வல்லமையையும் விட்டு விலகி விட்டன. இவை தங்களுடைய மூளையறிவில் தோன்றிய வழிமுறைகளையும், தங்களுடைய மாம்ச பெலத்தில் எடுக்கின்ற முயற்சிகளையுமே நம்பியிருக்கின்றன. தாங்களாகவே வகுத்துக் கொண்ட விதிமுறைகளோடு இவை தங்களை இறுக்கமாய் இணைத்துக் கொண்டிருக்கின்றன.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இந்தச் செய்தியின் மூலம், சபையை ஊடுருவி, அதன் மீது ஆதிக்கம் செலுத்தும்படி, சாத்தான் நாடுகிற வழிமுறைகளில் ஒன்றைப் பார்க்கத்தக்கதாக, தேவன் உங்களுடைய கண்களை திறக்க ஆரம்பித்திருக்கிறார். "அந்திக்கிறிஸ்து" என்ற வார்த்தையை, நீங்கள் ஒருவேளை கேட்டிருக்கலாம். ஆனால் அதன் அர்த்தம் என்ன என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாமல் இருக்கலாம். கடைசியில் ஒரு அந்திக்கிறிஸ்து எழும்புவான் என்பது உண்மையாய் இருந்தாலும், தனிப்பட்ட நபர்கள் மற்றும் சில குழுக்களின் பின்னணியில் ஒரு தீய ஆவியும்

கிரியை செய்கிறது என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரே மெய்யான மெசியாவாகிய இயேசுவை எதிர்க்கும்படி, அவருடைய இடத்தை எடுத்துக் கொள்ளும்படி இது கிரியை செய்கிறது.

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

*1. ...................... என்ற வார்த்தை, 'கிறிஸ்டோஸ்' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானது. இது அப்படியே மெசியா என்று அர்த்தங்கொண்ட மெசாயா (*Maschiach*) என்ற எபிரெய வார்த்தையோடு தொடர்புடையதாயிருக்கிறது. அப்படியென்றால், 'அந்திக்கிறிஸ்து' (*antichrist*) என்று நாம் சொல்லும்போது, 'அந்திமெசியா' (*anti-Messiah*) என்று சொல்வதற்குச் சமமாயிருக்கிறது.*

*2. 'அந்தி (*anti*)' என்ற கிரேக்க முன்னுருபுச் சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. இவையிரண்டும் அந்திக்கிறிஸ்து என்ற வார்த்தைக்குப் பொருந்துகின்றன:*

*(அ) முதல் அர்த்தம், .................................. - ஆகையால் அந்திக்கிறிஸ்து, மெசியாவுக்கு எதிராக செயல்படுகிறான்.*

*(ஆ) இரண்டாவது அர்த்தம், .................................. - உண்மையான மெசியாவின் இடத்தில், ஒரு பொய்யான மெசியாவைக் கொண்டு வருவதுதான் அவனுக்கு உச்சபட்ச நோக்கமாக இருக்கின்றது.*

*அந்திக்கிறிஸ்து எனும் இந்தப் பொல்லாத சக்தி, முதலில், மெசியாவுக்கு எதிராக செயல்படுகிறது, அவரை ஒதுக்கி வைக்கிறது. பிறகு இரண்டாவதாக, அவருடைய இடத்தில் ஒரு பொய்யான மெசியாவைக் கொண்டு வருகின்றது. இந்த ஒட்டுமொத்த திட்டமும், இரண்டு கட்டங்களில் செயல்படுகின்றது. இதை நீங்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்து விடுவீர்கள் என்றால், சபை என்று தங்களை அழைத்துக் கொள்கிற பெரும்பாலான இடங்களில், அந்திக்கிறிஸ்துவின் ஆவி எவ்வளவு தீவிரமாக, உச்சகட்ட வேகத்தில் செயல்படுகிறான் என்பதை உங்களால் பார்க்க முடியும்.*

## *அந்திக்கிறிஸ்துவின் ஆவி*

*3. அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் குறித்துப் பேசும்போது, சாத்தானுடைய இந்தக் குறிப்பிட்ட கிரியையை, .................. எங்கே பிரசங்கிக்கப்படுகிறாரோ, அந்த இடங்களில் பார்க்க முடியும். இயேசுவைக் குறித்து நீங்கள் முன் ஒருபோதும் கேள்விப்பட்டிருக்கவில்லை என்றால், நீங்கள் இயேசுவை நிராகரிக்க முடியாது. பில்லிசூனியம் என்பது வித்தியாசமானது. பில்லிசூனியம், விழுந்துபோன ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கும் உரியதாயிருக்கிறது.*

*4. தேவன் நம்மை நடத்துகிற விஷயத்தில், தவறான வாய்ப்புகளே நமக்கு முன் வராதபடி அவர் பார்த்துக் கொள்வதில்லை. அவர் அதை உறுதி செய்வதில்லை. மாறாக, சரியான விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது நம் பொறுப்பாயிருக்கிறது. உண்மையான மெசியாவிற்கும், பொய்யான மெசியாவிற்கும் இடையே ..................... கொள்ள வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு மனுஷனுக்கும் கொடுக்கப்படப் போகிறது.*

அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் குறித்து பிரதானமாக விவரித்துப் பேசுகிற இரண்டு முக்கியமான வேதப்பகுதிகள், யோவான் எழுதிய முதல் நிருபத்தில் காணப்படுகிறது. முதல் பகுதி, 1 யோவான் **2:18-23** வசனங்களாகும்.

> *18 பிள்ளைகளே, இது கடைசி காலமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி, இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள். அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம். 19 அவர்கள் நம்மை விட்டு பிரிந்து போனார்கள். ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை. நம்முடையவர்களாயிருந்தார்களானால், நம்முடனே நிலைத்திருப் பார்களே. எல்லாரும் நம்முடையவர்கள் அல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்.*
>
> *20 நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். 21 சத்தியத்தை நீங்கள் அறியாததினால் அல்ல. நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும்,*

*சத்தியத்தினால் ஒரு பொய்யும் உண்டாயிராது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.*

*[22]இயேசுவை கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனே அல்லாமல், வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. [23]குமாரனை மறுதலிக்கிற வன் பிதாவை உடையவன் அல்ல. குமாரனை அறிக்கையிடுகிற வன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.*

இரண்டாவது முக்கியமான வேதப்பகுதி, 1 யோவான் 4:2-3 வசனங்களாகும்:

*[2]தேவ ஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால், மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. [3]மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கின்றது.*

இவ்விரண்டு வேதப்பகுதிகளையும் ஒன்றாய் சேர்த்துப் பார்ப்போம் என்றால், அந்திக்கிறிஸ்து மூன்று விதங்களில் வெளிப்படுகிறான் என்பதை நாம் பார்க்கிறோம்:

*(அ) முதலில், இங்கே பல அந்திக்கிறிஸ்துக்கள் இருக்கின்றனர். மனுஷ வரலாற்றில், பல .................................. தோன்றியிருக்கின்றனர், தங்கள் தீய கிரியைகளை வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.*

*(ஆ) பல அந்திக்கிறிஸ்துக்கள் அல்ல, ஒரு குறிப்பிட்ட அந்திக்கிறிஸ்து வருவான். அந்திக்கிறிஸ்து ........................ கடைசி வெளிப்பாடாக இருப்பான். மனுஷ வரலாற்றில், இவன் இன்னும் வெளிப்படவில்லை. கடைசியில், ஒரு குறுகிய காலகட்டத்திற்கு, ஒட்டுமொத்த மனுஷர்கள் எல்லோர் மீதும் தீமைகள் நிறைந்த பொல்லாத ஒருவன் ஆளுகை செய்வான் என்பதை வேதவசனம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.*

*(இ) மூன்றாவது வடிவம் இதுதான்: .................... அந்திக்கிறிஸ்துவின் மூலம் செயல்படுகிற அந்திக்கிறிஸ்துவின் ஆவி.*

*6. இந்த வேதப்பகுதிகளில், அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் குறித்த சில முக்கியமான அடையாளங்களை யோவான் நமக்காக எழுதி வைத்திருக்கிறார். இவற்றை கவனிக்க வேண்டியது நமக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது:*

*(அ) 1 யோவான் 2:19-ஐ வாசித்துப் பாருங்கள். அந்திக்கிறிஸ்து எப்பொழுதுமே ...................... ஜனங்களிடமிருந்துதான் தன் கிரியையை ஆரம்பிக்கிறான் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஆனால் அவன் ஒருபோதும் நிரந்தரமாய் அங்கேயே தங்கி விடுவதில்லை. காலப்போக்கில், அவனுடைய கிரியை வெளியரங்கமாகி விடும்.*

*(ஆ) இயேசுதான் மெசியா என்பதை இந்த அந்திக்கிறிஸ்துவின் ஆவி ................................ என்று 1 யோவான் 2:22-ம் வசனம் நமக்குப் போதிக்கிறது.*

*(இ) அதே வசனத்தில், யோவான் தொடர்ந்து மூன்றாவது அடையாளத்தையும் வெளிப்படுத்துகிறார். அந்திக்கிறிஸ்து, பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய கிறிஸ்துவையும் மறுதலிக்கிறான். ஆனால் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அந்திக்கிறிஸ்து மறுதலிக்கவில்லை என்பதை நாம் விழிப்போடு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மையில், அது தன்னை தேவனுடைய பிரதிநிதியாக அறிவித்துக் கொள்கிறது. அது என்ன செய்கிறது என்றால், தேவனுடைய திரித்துவத்தில், .................... தேவனுக்கும், குமாரனுக்கும் இடையே உள்ள உறவை அது மறுதலிக்கின்றது.*

*(ஈ) நான்காவதாக, ஏற்கனவே ....................... மெசியாவை அது மறுதலிக்கின்றது (1 யோவான் 4:2). மெசியா இனிமேல்தான் வரப்போகிறார் என்பதுபோலவும் அது போதிக்கின்றது.*

*ஒரு மதத்தையோ, ஒரு இயக்கத்தையோ அல்லது ஒரு தனிநபரையோ, நீங்கள் மதிப்பிடும்போது, அதைக் குறித்த ஒரு தெளிவான புரிதலைப் பெறும்படி, அந்திக்கிறிஸ்துவின் இந்த நான்கு அடையாளங்களும் விலைமதிக்க முடியாதவைகளாய் இருக்கின்றன.*

## *வரலாற்றில் காணப்படும் எடுத்துக்காட்டுகள்*

யூத மார்க்கம் மற்றும் இஸ்லாம் என்ற இரண்டு பெரிய மதங்களைக் குறித்த சில விவரங்களை டெரிக் சொன்னார். அந்திக்கிறிஸ்து ஆவியின் இந்த அடையாளங்களுக்கான ஆதாரங்கள் மற்றும் கிரியைகளை பார்த்து, புரிந்து கொள்ள நமக்கு உதவியாயிருக்கும்படி, அவர் இவற்றை நமக்குப் போதித்தார். அப்பொழுது அவர் இவ்வாறு சொன்னார்: "சத்தியத்தைப் பொறுத்தமட்டில், இதுதான் பிரச்சனை. அது விவாதத்திற்கு உட்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது. யாருடைய மனதையும் காயப்படுத்த வேண்டும் என்பது என் விருப்பமல்ல. மற்ற மதங்களை தாக்கிப் பேச வேண்டும் என்பது என்னுடைய எண்ணமும் அல்ல. சத்தியத்தை உங்களுக்கு எடுத்துக் காண்பிக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்."

*7. யூத மார்க்கம், அந்திக்கிறிஸ்துவின் ஆவியை நீண்ட காலமாய், தொடர்ந்து இடைவிடாமல் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிற மதமாய் இருக்கிறது. யோவான் வெளிப்படுத்தின அந்திக்கிறிஸ்துவின் நான்கு அடையாளங்கள், யூதமார்க்கத்தில் இருப்பதற்கான ஆதாரங்களை நாம் சோதித்துப் பார்ப்போம்:*

*(அ) இது நிச்சயமாக, தேவனுடைய .............................. தான் ஆரம்பித்தது. யூத மார்க்கத்தின் கிளையாகத்தான் கிறிஸ்தவம் உருவானது என்று பலரும் சொன்னாலும், உண்மையில் நிகழ்ந்தது இதுதான். உண்மையான கிறிஸ்தவம், பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சியாக உருவானது. அதன் ஒரு கிளையாகத்தான் யூத மார்க்கம் உருவானது.*

*(ஆ) இரண்டாவது அடையாளம், மிகவும் தெளிவாக இருக்கிறது. இயேசு மெசியா என்பதை யூத மார்க்கம், ............................*

*(இ) .................................... பிதா/குமாரனுக்கு இடையே உள்ள உறவை யூத மார்க்கம் மறுதலிக்கிறது. தான் தேவனுடைய குமாரன் என்று இயேசு அறிவித்ததை இது நிராகரிக்கின்றது. தேவனுக்கு ஒரு குமாரன் உண்டு என்பதை இது ஏற்றுக் கொள்வதில்லை.*

*(ஈ) ................... ஏற்கனவே வந்திருக்கிறார் என்பதை யூத மார்க்கம் மறுதலிக்கின்றது. மாறாக, மெசியா இனிமேல்தான் வருவார் என்றும் அது போதிக்கின்றது.*

*8. மத்தேயு 27:21-ல், பிலாத்து, யூத ஜனங்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றான்: “இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டும்?” அதற்கு அவர்கள், “பரபாசை” என்றார்கள். மனுஷர்களுக்கு என்ன நடக்கப் போகிறது என்பதைக் காண்பிக்கும்படி, ஒரு எதிர்மறையான எடுத்துக்காட்டாக இஸ்ரவேல் (யூத) ஜனங்கள் இருக்கின்றன ர். காரணம், நாம் எல்லோருமே இதே கேள்வியைத்தான் எதிர்கொள்ளப் போகிறோம். இரட்சகரும், சுகமாக்குகிறவரும், நீதியுள்ள ஒரே நபருமாகிய இயேசு நமக்கு வேண்டுமா? அல்லது துன்மார்க்கனும், அரசியல் கலகம் செய்கிறவனும், வன்முறையாளனுமாகிய பரபாஸ் நமக்கு வேண்டுமா? ஒரு விதத்தில், ................................ அந்திக்கிறிஸ்துவுக்கு மாதிரியாக இருக்கின்றான்.*

*9. ஒரு வாரத்திற்கு முன்பு, மத்தேயு 21-ம் அதிகாரத்தில், எருசலேமிற்குள் இயேசுவை ஆரவாரமாய் வரவேற்ற இதே ஜனக்கூட்டம், மத்தேயு 27-ம் அதிகாரத்தில், அவரை நிராகரித்தனர். ஜனக்கூட்டத்தை ஒட்டுமொத்தமாய் அவருக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்த ஆவிக்குரிய சக்தி எது? எந்த நோக்கமும் இல்லாமல், அவர்கள் இயேசுவுக்கு விரோதமாய் கோபத்தோடும், மூர்க்கத்தனத்தோடும், பொறாமையோடும் எழும்பினார்கள். அது ................................ ஆவியாகும். அது முதலில் அங்கே தோன்றி, அன்றிலிருந்து இன்று வரை யூத ஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும்படி முயற்சித்து வருகின்றது.*

*10. யோவான் 5:43-ல், இயேசு இவ்வாறு சொன்னார்: “நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால், அவனை ஏற்றுக் கொள்வீர்கள்.” இது ....................... உண்மை என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்திக்கிறிஸ்துவைக் குறித்த விஷயத்தில், எதிர்காலத்திலும் இது உண்மை என்று நிரூபிக்கப்படலாம்.*

*11. அந்திக்கிறிஸ்துவின் ஆவி இன்னொரு முக்கியமான விதத்தில், இஸ்லாம் என்ற மதத்தின் மூலம் வெளிப்படுகிறது என்று டெரிக் நமக்குப் போதித்தார். இது முகமதுவின் மதமாக இருக்கிறது. இஸ்லாம் என்றால், பரிபூரணம், முழுமை, நிறைவு என்று அர்த்தம். கிறிஸ்தவர்களும், சுவிசேஷ நூல்களும்*

*மெய்யான சத்தியத்தை திரித்து விட்டன என்று முகமது அறிவித்தார். ஆனாலும் இஸ்லாம் மூலம் அவர் அதை சரி செய்து விட்டதாகவும் அறிவித்தார். அந்திக்கிறிஸ்துவின் அடையாளங்கள், இஸ்லாம் மதத்தில் இருப்பதை நம்மால் பார்க்க முடியும்.*

*(அ) பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளிலிருந்துதான் இஸ்லாம் ஆரம்பித்தது. தேவனுடைய வெளிப்பாட்டிலிருந்து உருவானதாக, இது தன்னை அறிவித்துக் கொண்டது. ஆனாலும் கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அடிப்படைக் கோட்பாடுகளை இது மறுதலிக்கின்றது. எடுத்துக்காட்டிற்கும், ........................... கிறிஸ்து அடைந்த கிருபாதார பலி மரணத்தை இது மறுதலிக்கின்றது. இயேசு மரிக்கவில்லை என்றும், இயேசு மரிப்பதற்கு முன்பே ஒரு தூதன் வந்து அவருடைய ஆவியை எடுத்துச் சென்று விட்டான் என்றும் முகமது போதித்தார். அங்கே மரணம் இல்லை. அங்கே கிருபாதார பலி நடக்கவில்லை. அங்கே கிருபாதார பலி நடக்காததால், அங்கே நமக்கு மன்னிப்பும் உண்டாகாது. தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான நிச்சயம், ஒருபோதும் முஸ்லீம்க்குள்ளும் இருப்பதில்லை.*

*(ஆ) இரண்டாவதாக, இயேசு தேவனுடைய .................... என்பதை அவர்கள் மதவெறியோடே எதிர்க்கின்றனர். குர்ரான் இயேசுவை ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுக் கொள்கிறது. இரட்சகராய், மெசியாவாகக் கூட அது அவரை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அவர் தேவனுடைய குமாரன் என்று நாம் சொல்வோம் என்றால், மிகவும் மோசமான, கசப்பான ஒரு எதிர்ப்பை நாம் அவர்களிடமிருந்து எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தேவனுக்கு ஒரு குமாரன் தேவையில்லை என்பதுதான் இஸ்லாமின் நிலைப்பாடாக இருக்கிறது.*

*(இ) தேவனுடைய திரித்துவத்தில், பிதா-குமாரனுக்கு இடையே உள்ள ........................ அது மறுதலிக்கின்றது.*

## *கடைசியாக எழும்பும் அந்திக்கிறிஸ்து*

விவரங்களெல்லாம் தெளிவாக இல்லையென்றாலும், அந்திக்கிறிஸ்து வைக் குறித்து வேதவசனங்கள் என்ன சொல்கின்றன என்பதை நாம்

அறியாமலிருக்கக் கூடாது. சாத்தான் என்னவெல்லாம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதைக் குறித்த ஆவிக்குரிய விழிப்புணர்வும், அறிவும் நமக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவனுடைய திட்டங்களில், அவன் முன்னேறியிருக்கிறான் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

2 தெசலோனிக்கேயர் 2-ம் அதிகாரம், முக்கியமாக, அந்திக்கிறிஸ்து எவ்வாறு தோன்றுவான், அவன் எவ்வாறு தன்னை வெளியரங்கமாக வெளிப்படுத்துவான் என்பதைக் குறித்துப் பேசுகிறது. இது கர்த்தருடைய வருகைக்காக நம்மை ஆயத்தப்படுத்துபடியாகவும் பேசுகிறது. இவையிரண்டும் ஒன்றொடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. இவை ஒன்றோடொன்று இழையோடியிருக்கின்றன. காரணம், கர்த்தருடைய வருகைக்கு முன், சாத்தானுடைய கடைசி கிரியையாக அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான். கர்த்தர் அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்துவை தம்முடைய வருகையின் பிரகாசத்தினால் அழிப்பார் என்று 8-ம் வசனத்தில், பவுல் எழுதியிருக்கிறார்.

*12. கர்த்தராகிய, உண்மையான கிறிஸ்துவினுடைய வருகையின் ஒரு முக்கியமான நோக்கம், ..................... கிறிஸ்துவை வெளியேற்றுவதாகும். அந்திக்கிறிஸ்துவை தோற்கடித்து, அவனை வெளியே தூக்கி எறிவதுதான் இந்த நோக்கமாயிருக்கிறது.*

2 தெசலோனிக்கேயர் 2-ல், முதல் மூன்று வசனங்களை வாசிப்போம்:

> *[1]அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையும் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்கிறது என்னவென்றால், [2]ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாக சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். [3]எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு, எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.*

இந்த வசனங்களின் அடிப்படையில், பின் வரும் ஆறு கேள்விகளுக்கு பதிலளியுங்கள்:

*13. இந்த அதிகாரத்தின் மைய சத்தியம், நம் கர்த்தராகிய இயேசுவின் ............................... (1-ம் வசனம்). பாரௌசியா என்ற கிரேக்க வார்த்தைதான், வருகை என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இது வழக்கமாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கின்றது.*

*14. நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதைக் குறித்து 1-ம் வசனம் பேசுகிறது. இது இயேசுவோடு நாம் எடுத்துக் கொள்ளப்படும் அந்தத் தருணத்தைக் குறிக்கின்றது. 1 தெசலோனிக்கேயர் 4:17 சொல்கிறது: "பின்பு உயிரோடிருக்கும் நாமும் ............................ எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்."*

*15. "சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள்," என்று பவுல் 2-ம் வசனத்தில் சொல்கிறார். கர்த்தர் எப்பொழுது .................... அல்லது அவர் ஏற்கனவே வந்து விட்டார் என்பதைக் குறித்து பொய்யான தீர்க்கதரிசனங்களை மற்ற வர்கள் சொல்லும்போது, அதைக் கேட்டு, கலங்கி நிற்காதீர்கள். இப்படிப்பட்ட வஞ்சிக்கிற காரியங்களிலிருந்து உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள். இந்த அர்த்தத்தில்தான், அவர் இங்கு நமக்குப் பேசுகிறார்.*

*16. "எங்களிடத்திலிருந்து வந்ததாகத் தோன்றுகிற நிருபத்தினாலோ, ஆவியினாலோ அல்லது வார்த்தையினாலோ" என்ற வார்த்தைகள், வஞ்சிக்கிற காரியங்கள் பல்வேறு இடங்களிலிருந்து நம்மை நோக்கி வருகின்றன என்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றன. இவை தீய வஞ்சிக்கிற ஆவிகளாய் இருக்கின்றன. இவை தங்களுடைய வார்த்தைகளின் மூலம் வஞ்சிக்கின்றன. பவுலோ அல்லது மற்ற கிறிஸ்தவர்களோ சொன்னதாகச் சொல்லி, பொய்யானவைகளை இவை பரப்புகின்றன. எனவே எல்லா விஷயங்களையும் நாம் தேவனுடைய ........................... கொண்டு மதிப்பிடுவதில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.*

*17. "விசுவாச துரோகம் முந்தி நேரிடும்" என்று 3-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "அபாஸ்டசியா" என்று கிரேக்க மொழியில் இது வருகின்றது. இதன் அர்த்தம், .................. என்பதாகும். இதன் அர்த்தம், வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை அறிந்தே நிராகரிப்பதாகும்.*

*18. 3-ம் வசனம், அந்திக்கிறிஸ்துவிற்கு இருக்கும் இன்னும் இரண்டு பெயர்களை வெளிப்படுத்துகிறது.*

*(அ) ...................... மனுஷன் - தேவனுக்கு விரோதமான மனுஷனுடைய முரட்டாட்டம் மற்றும் தேவனுடைய பிரமாணங்களை நிராகரிக்கின்ற அந்தத் தன்மை முழுவதையும் தனக்குள் உடையவனாய் இவன் இருக்கின்றான்.*

*(ஆ) .................... மகன் - இவன் நித்திய பேரழிவிற்கு நேராக சென்று கொண்டிருக்கிறான்.*

*19. அந்திக்கிறிஸ்து, பாவ மனுஷன் மற்றும் கேட்டின் மகன் என்ற பெயர்களோடு கூட, வெளிப்படுத்தின விசேஷம் 13:1-2 வசனங்களில், நான்காவது பெயரும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது - அது ............... என்ற பெயராகும்.*

*20. வெளிப்படுத்தின விசேஷம் 13:2-ல், யோவான் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "வலுசர்ப்பமானது (சாத்தான்) தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும், மிகுந்த அதிகாரத்தையும் அதற்கு (மிருகத்திற்கு) கொடுத்தது." சாத்தான் தன் வல்லமையை மிருகத்திற்குக் கொடுப்பான். காரணம், மனுஷர்கள் எல்லோர் மீதும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு நிலைக்கு அது அந்த நபரைக் கொண்டு செல்லும். அவன் அதைக் கொண்டு, சாத்தான் மிகவும் விரும்புகிற ஒரு காரியத்தைச் செய்ய வைக்கும்படி, மனுஷர்களை உந்தித் தள்ளுவான் அல்லது கட்டாயப்படுத்துவான். அது என்ன காரியம்? ........................... (வெளிப்படுத்தின விசேஷம் 13:4).*

*21. வெளிப்படுத்தின விசேஷம் 13:6 சொல்கிறது: "அது தேவனை தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது." அந்த மிருகம் ................ முன்பாக நேரடியாக சவால் விடுகிறது*

என்பதைத்தான் இவ்வசனம் நமக்குச் சுட்டிக் காண்பிக்கிறது. அவன் ஒரு இரகசிய எதிரி கிடையாது. அவர் சர்வ வல்ல தேவனுக்கு முன்பாக தன் முஷ்டியை மடக்கிக் காண்பிப்பான்.

22. அடுத்த வசனம் சொல்கிறது: "............................... யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயிக்கும்படி அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது" (வெளிப்படுத்தின விசேஷம் 13:7). கிறிஸ்தவ மார்க்கத்தின் வெற்றி, எளிதில் சுலபமாக அடையக்கூடிய ஒன்றல்ல. ஒரு விதத்தில், வெளியே பார்க்கும்போது, தோற்கடிக்கப்படுவதற்கும், மேற்கொள்ளப்படுவதற்கும் விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டியது, நம் விசுவாசத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றது. ஆனால் உண்மையில், நாம் தோற்கடிக்கப்பட மாட்டோம். இது சிலுவையின் ஒரு படமாக இருக்கின்றது.

23. .................... ஒரு சடலமாய், இயேசு எல்லோர் முன்னிலையிலும், கடைசியாய் தெரிந்தார். அதை மாற்றிக் கொள்ளும்படி, அவர் ஒருபோதும் முற்பட்டதில்லை. தம்மை விசுவாசித்தவர்களுக்கு மட்டுமே, அவர் திரும்பவும் தோன்றினார்.

24. வெளிப்படுத்தின விசேஷம் 13:8-ம் வசனம், அதிர்ச்சி தரும் ஒரு விஷயத்தைப் பேசுகிறது: "உலகத் தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை (அந்த மிருகத்தை) வணங்குவார்கள்." தேவன் தமக்கென்று தெரிந்துகொண்ட ஜனங்களைத் தவிர, அவருடைய புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களைத் தவிர, மற்ற ................... எல்லோரும் அந்த மிருகத்தை வணங்குவார்கள் என்பதைத்தான் இது சுட்டிக் காண்பிக்கிறது.

25. வெளிப்படுத்தின விசேஷம் 13:11-ல், இரண்டாவது மிருகத்தைக் குறித்து நமக்குச் சொல்லப்படுகிறது. யோவான் இவ்வாறு எழுதுகிறார்: "பின்பு வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன். அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை உடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போல பேசினது." அவன் ஒரு ............................ போல இருந்தாலும், அவனுடைய சத்தம் வலுசர்ப்பத்தின் சத்தமாக இருந்தது. அவன்

*ஒரு கள்ள தீர்க்கதரிசியாகவும் அறியப்படுகிறான். பொய்யான மெசியாவுடன், பொய்யான மதம் தன்னை இணைத்துக் கொள்கிறது.*

*26. வெளிப்படுத்தின விசேஷம் 13:12-ம் வசனம், சாத்தான், மிருகம் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசி என்ற அவனுடைய பொய்யான ......................... நமக்கு வெளிப்படுத்துகிறது. ''அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும், அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆற சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தை பூமியும், அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.'' இந்த மூன்றுக்கும் இடையே, அவை ஒரு படத்தை உருவாக்குகின்ரன. அது ஒரு விதத்தில், கள்ளச் சபையின் படமாகும்.*

*27. வெளிப்படுத்தின விசேஷத்தில், இரண்டு நபர்களுக்கிடையே தெளிவாகத் தெரியக்கூடிய முரண்பாடுகளை நம்மால் பார்க்க முடியும்: சாத்தானுடைய ஆட்சியாளராய் இருக்கக்கூடிய துஷ்ட மிருகம் மற்றும் தேவனுடைய ஆட்சியாளராய் இருக்கக்கூடிய ............................... - ஒன்றை நம் நினைவில் ஆழமாகப் பதித்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாக இருக்கிறது. இந்த துஷ்ட மிருகத்தின் சுபாவத்தை நமக்குள் நாம் வளர்த்துக் கொள்ளக்கூடாது. மாறாக, ஆட்டுக்குட்டியானவரின் சுபாவத்தையே நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

*28. யோவான் 1:29, யோவான் ஸ்நானகன் இயேசுவைக் குறித்து இவ்வாறு சொல்கிறார்: ''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.'' இயேசு தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்ற பிறகு, பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது புறாவின் வடிவில் இறங்கினார். ஆட்டுக்குட்டியானவரின் ......................... உடையவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இற ங்குகிறார் என்பதைத்தான் இது நமக்குக் காண்பிக்கிறது.*

*29. வெளிப்படுத்தின விசேஷம் 5:5-6 வசனங்களில் நாம் இதை வாசிக்கின்றோம். ........................... ஒருவராலும் திற க்க முடியாததால், யோவான் அழுது கொண்டிருந்தான்.*

*அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் யோவானிடம், "நீ அழ வேண்டாம். இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கம் அதன் ஏழு முத்திரைகளையும் உடைப்பதற்கு ஜெயங்கொண்டிருக்கிறார்," என்று சொன்னான். ஆனால் சிங்கத்தை அல்ல, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியையே யோவான் கண்டான் என்று ஆறாம் வசனம் நமக்குச் சொல்கிரது. சிங்கம்தான், ஆட்டுக்குட்டியானவர்.*

*30. தேவனால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளருக்குள், ...................... சுபாவம் இல்லை. மாறாக, ஆட்டுக்குட்டியானவரின் சுபாவமே இருக்கின்றது. மற்ற எல்லோரைக் காட்டிலும், அவர் உயர்த்தப்பட்டிருக்கிறார். காரணம், அவர் தம் ஜீவனையே ஒப்புக் கொடுத்தார். அவர் தம்மையே தாழ்த்தினார். அவர் சாந்தம் மற்றும் தாழ்மையின் வழியே சென்றார். தன்னை கைது செய்ய வந்தவர்களையும், தன்னை தண்டித்தவர்களையும் அவர் எதிர்த்து நிற்கவில்லை. இந்தக் கடைசி நாட்களில், சபையானது இதே சுபாவத்தைத்தான் வெளிப்படுத்தியாக வேண்டும்.*

பல நூற்றாண்டுகளாக, சபை அங்கத்தினர்களும், சபைத் தலைவர்களும் துன்மார்க்கமாய், ஒழுக்கக்கேடாய், பொருளாசையும் பேராசையும் உள்ளவர்களாய் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அடிப்படைச் சத்தியங்களை வெளிப்படையாய் அவர்கள் மறுதலித்ததில்லை. உண்மையில், அவர்கள் அந்த சத்தியங்களை தங்களுடைய பதவிக்கும், அதிகாரத்திற்கும் ஆதரவான ஒரு வழிவாய்ப்பாய் பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பித்து, இன்று வரை, சபைத் தலைவர்களே, கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அடிப்படைச் சத்தியங்களை மறுதலித்திருக்கிறார்கள். இயேசு தேவன் என்பதையும், கன்னியின் வயிற்றில் அவர் பிறந்ததையும், அவருடைய கிருபாதார பலி மரணத்தையும், அவருடைய சரீர உயிர்த்தெழுதலையும், அவருடைய இரண்டாம் வருகையையும் இவர்கள் மறுதலித்திருக்கிறார்கள். அவர்களில் பலர், கிறிஸ்தவ சபை என்று தங்களை அழைத்துக் கொள்கிற இடங்களில், கனத்திற்கும், அதிகாரத்திற்கும் உரிய இடங்களை ஆக்கிரமித்திருக்கின்றனர். இந்த விதத்தில் பார்க்கும்போது, நாம் ஏற்கனவே விசுவாச துரோகத்தை சந்தித்திருக்கிறோம் என்றுதான்

சொல்ல வேண்டும்.

சாத்தான் தன்னுடைய தவறான போதனைகளின் மூலம் சபைக்குள் ஊடுருவுகின்றான். ஆனால் சபையானது இப்படிப்பட்ட மோசமான தவறுகள் உள்ளே ஊடுருவி விடாதபடி, வலிமையான அரண் கோட்டையாய் எழும்பி நிற்க வேண்டும்.

நமக்கு உதவி செய்யும்படி, கர்த்தரிடம் நாம் ஜெபிப்போம்:

*அன்பு நிறைந்த கர்த்தாவே, அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் குறித்த இந்த முக்கியமான சத்தியத்தை வேதவசனங்கள் மூலம் எனக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர். உமக்கு நன்றி. என்னுடைய வாழ்க்கையின் எந்தப் பகுதியிலாவது அந்திக்கிறிஸ்துவின் ஆவியினுடைய பாதிப்பு இருக்கிறதா என்று கண்டறிய எனக்கு உதவி செய்யும். மிகவும் முக்கியமாக, அந்த ஆவி எங்கே என் மீது ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை தயவு செய்து எனக்கு வெளிப்படுத்தும்.*

*பயங்கரமான எதிர்ப்பும், மரணமே கூட வந்தாலும், உண்மையான மெசியாவுக்காக, உண்மையான சபைக்காக நான் எப்பொழுதும் எழுந்து நிற்கும்படி எனக்கு தைரியத்தைத் தாரும். "மரணமே நேரிடுகிறதாயிருந்தாலும், தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் அறிக்கையினாலும், அவர்கள் பிசாசை ஜெயித்தார்கள்," என்று வெளிப்படுத்தின விசேஷம் 12:11 சொல்கிறது. மரணமே நேரிடுகிறதாயிருந்தாலும், இயேசுவின் இரத்தத்தினாலும், என் சாட்சியின் அறிக்கையினாலும் சாத்தானை ஜெயிக்கும்படி எனக்கு உதவி செய்யும்.*

*துஷ்ட மிருகத்தின் சுபாவத்திலிருந்து என்னை விடுதலையாக்கும். ஆட்டுக்குட்டியானவரின் சுபாவத்தை எனக்குள் உருவாக்கி, வளர்த்தருளும். ஆட்டுக்குட்டியானவரின் சுபாவத்தை உடைய என் மீது உம்முடைய ஆவியானவர் இறங்குவாராக, என் மீது தங்கியிருப்பாராக.*

*இயேசுவின் விலையேறப்பெற்ற நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

இந்தத் தொடரின் கடைசி செய்தியில், சபையின் வெற்றியைக் குறித்து,

டெரிக் போதிப்பார். நாம் எவ்வாறு தேவனுக்குக் கீழ்ப்படிய முடியும், நம் எதிரிகளை மேற்கொள்ள முடியும் என்பதைக் குறித்த ஆச்சரியமான, ஆக்கப்பூர்வமான ஒரு செய்தியாக இது இருக்கும். சபை வெற்றியாய் நடப்பதற்கு வேண்டிய வேதவசன நிபந்தனைகள் என்ன என்பதையும் அவர் நமக்கு வெளிப்படுத்துவார்.

**406**-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/42**

உங்களுடைய மதிப்பெண்ணை **410**-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி எட்டு>>*

# நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் - பாகம் 4

# சபையின் வெற்றி[4265]

*அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

இது "நாம் எதிர்கொள்ளும் எதிரிகள்" என்ற தலைப்பில் டெரிக் பிரின்ஸ் போதித்த செய்தித்தொடரின் நான்காவது மற்றும் கடைசி செய்தியாக இருக்கின்றது. இந்தத் தலைப்பில், "நாம்" என்ற வார்த்தை, தேவனுடைய ஜனங்களை, இயேசுகிறிஸ்துவின் சபையைக் குறிக்கின்றது. இன்று சபை சந்திக்கின்ற இரண்டு முக்கியமான சத்துருக்களாகிய பில்லிசூனியம் மற்றும் அந்திக்கிறிஸ்துவின் ஆவி அல்லது அதன் வல்லமையைக் குறித்து முந்தின இரண்டு செய்திகளில் டெரிக் நமக்குப் போதித்தார்.

பில்லிசூனியம் என்பது விழுந்துபோன மனுக்குலத்தின் உலகளாவிய மதமாயிருக்கிறது. இதன் மூலம், பல்வேறு காலகட்டங்களில், மனுஷர்கள், தேவனுக்கு விரோதமாய் எழும்பி நிற்கும் சாத்தானுடைய ராஜ்யத்தின் தூதர்களோடு தொடர்பு கொள்ளும்படி தொடர்ந்து நாடி வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் சாத்தானுடைய தூதர்களை தெய்வங்களாய் வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்திக்கிறிஸ்து என்பது இயேசுவின் சுவிசேஷம் முதலில் எங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறதோ, அதை எதிர்த்து நிற்கிற வித்தியாசமான வகையான தீய ஆவிக்குரிய வல்லமையாயிருக்கிறது. அந்தி என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு என்பதை டெரிக் சுட்டிக் காண்பித்தார். முதலில், அது எதிர்த்து நிற்கிறது. இரண்டாவதாக, அந்த இடத்தை எடுத்துக் கொள்ள முயற்சிக்கின்றது. அந்திக்கிறிஸ்து ஆவியினுடைய நோக்கம், உண்மையான மெசியாவாகிய இயேசுவை எதிர்த்து நிற்பதாகும். அவரை அகற்றுவதாகும். ஆனால் அதன் இரண்டாவது நோக்கம், பொய்யான மெசியாவைக் கொண்டு,

உண்மையான மெசியாவின் இடத்தை ஆக்கிரமிக்கும்படி முயற்சிப்பதாகும். இந்தப் பொய்யான ஆவிக்குரிய வல்லமை, இன்றைக்கு சபையில் மிகவும் தீவிரமாக கிரியை செய்து கொண்டிருக்கிறது என்பது உண்மை. முந்தின செய்தியின் முடிவில், அந்திக்கிறிஸ்துவின் ஆவி கடைசியில் எவ்வாறு வெளிப்படும், அந்திக்கிறிஸ்து அல்லது துஷ்ட மிருகம் எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைக் குறித்து வேதவசனத்தில் வரையப்பட்டிருக்கிற படத்தை டெரிக் நமக்குக் காண்பித்தார்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இந்த கடைசி செய்தியில், சபையின் வெற்றியைக் குறித்து வேதவசனத்தில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் சுருக்கமாகப் பார்த்தோம். வேதவசனத்தைக் கற்றுக் கொள்ளும் ஒரு மாணவனாய், டெரிக் தன்னைக் குறித்து என்ன சொல்கிறார்? ஒருவரும் முழுமையான சத்தியத்தை அறிந்திருக்கவில்லை என்றுதான் அவர் சொல்கிறார். சிலரைப்போல, டெரிக் வேதவசனங்களை அறிந்திருக்கிறார், அவற்றைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் அவர் வாஞ்சையாயிருக்கிறார். நீங்கள் ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது அல்லது ஒரு செய்தியைக் கேட்கும்போது, அது ஒரு பிரயாணத்தின் ஆரம்பமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதில் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், நாம் கற்றுக் கொண்டதை வேதவசனத்தோடு சேர்த்து, சோதித்துப் பார்க்க வேண்டும். அதற்கு சிறந்த வழி, வேதவசனம் என்ன சொல்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிறகு தேவனிடம் அதைக் குறித்த வெளிப்பாட்டிற்காக ஜெபிக்க வேண்டும். பிறகு அவருடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாக, நம் வாழ்க்கையில் அவற்றை நாம் பின்பற்ற வேண்டும்.

தேவனோடு கொண்டிருக்கிற ஐக்கியத்தின் மூலமாக மட்டுமே நமக்கு வெளிப்பாடு உண்டாகிறது. மாறாக, இவற்றை அறிவாக மட்டுமே நாம் பெற்றிருக்கிறோம் என்றால், நாம் வெளிப்பாட்டை தவற விட்டு விட்டோம் என்று அர்த்தம். ஒன்றைக் குறித்த போதனையை நாம் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதுதான். ஆனால் தேவனைக் குறித்த

அறிவில் பெருகும்படி, பிரதானமாக நாம் அழைக்கப்படவில்லை. தேவனை க் குறித்து தனிப்பட்ட விதத்தில், நெருக்கமாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சபையின் வெற்றி என்ற சத்தியத்தைக் குறித்து டெரிக் நமக்குப் போதிக்கும்போது, அது நம் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்ள வேண்டிய மிகச் சிறந்த ஒரு பாடமாக இருக்கின்றது. இது நமக்கு மேலும் மேலும் உற்சாகத்தை அதிகரித்துக் கொண்டே இருக்கும். சகலமும் நிறைவேற்றப்படும்போது மட்டுமே, நமக்காக தேவன் முன் குறித்திருக்கிற காரியங்களின் நிறைவை நாம் பார்ப்போம். அதைக் குறித்துதான் பவுல், 1 கொரிந்தியர் 2:9-10 வசனங்களில் எழுதியிருக்கிறார்: “எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை. காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.”

## *கோடிட்ட இடங்களை நிரப்புக:*

## *நாம் எவ்வாறு தேவனுக்குக் கீழ்ப்படிந்து, எதிரிகளை மேற்கொள்ள முடியும்?*

*1. வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற எல்லா ஆக்கப்பூர்வமான வாக்குத்தத்தங்களும், இயேசு தம்முடைய சபைக்குக் கொடுக்கப் போகின்ற கடைசி வெளிப்பாடும், சகலத்தையும் ..................... ............... மட்டுமே. தோல்வியைத் தழுவுகின்றவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தமும் இல்லை.*

*2. ரோமர் 12:21-ல், பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்: “நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.” நம் முன்பாக இரண்டு வாய்ப்புகள் மட்டுமே இருக்கின்றன. ஒன்று, நாம் மேற்கொள்வோம். அல்லது நாம் மேற்கொள்ளப்படுவோம் (தோற்றுப் போவோம்). மூன்றாம் நிலை எதுவும் இல்லை. தாங்கள் மேற்கொள்ளப்படும்படி*

*விட்டு விடுகிறவர்களுக்கு, தேவனுடைய ................................... வாக்குத்தத்தங்கள் எதுவும் இல்லை.*

*மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடு கிரியை செய்வதைப் பார்க்கும்படி, ஒரு தனி பயிற்சியை செய்யுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3-ம் அதிகாரங்களை வாசியுங்கள். மேற்கொண்டு ஜெயிக்கிறவர்களுக்கு தேவன் தந்திருக்கிற சில வாக்குத்தத்தங்களை நீங்கள் இங்கு வாசிக்க முடியும். அவற்றின் மதிப்பையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.*

*3. .................. இயேசு அடைந்த மரணத்தின் மூலம், மேற்கொண்டு ஜெயிப்பதற்கான வாய்ப்பை தேவன் நமக்காக ஏற்படுத்தி வைத்திருக்கிறார். உண்மையில், நாம் மேற்கொண்டு ஜெயிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 21:7-ல், அவர் இதை இவ்வாறு தொகுத்துச் சொல்கிறார்: "ஜெயங்கொள்கிற வன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாயிருப்பான்." ஜெயங்கொள்கிறவன் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கிறான். மாறாக, ஜெயமெடுக்காதவனோ ஒன்றையும் பெற்றுக் கொள்வதில்லை.*

*4. ஜெயங்கொள்வதென்பது, ஒரு தனிநபருக்கோ அல்லது குறிப்பிட்ட சிலருக்கோ உரிய ஏகபோக உரிமை கிடையாது. இது ஒரு அடையாளச் சீட்டோ அல்லது ஒரு போதனையோ அல்லது ஒரு சபைப்பிரிவோ கிடையாது. இது ஒரு ..............*

*5. இந்த சாத்தானுடைய சக்திகளை மேற்கொள்வதில், நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதல் விஷயம், மிகவும் முக்கியமானது. அது மிகவும் அடிப்படையானது. இயேசு தன்னுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம், ஏற்கனவே சாத்தானை தோற்கடித்து விட்டார். இந்த ..............., முழுமையானது, இறுதியானது, நிரந்தரமானது, திருப்பி மாற்ற முடியாதது. நீங்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், வெற்றியைப் பெறுவதற்கான எந்த அடிப்படையும் உங்களுக்குள் இல்லை என்று அர்த்தம்.*

*6. இயேசு மரித்தபோது, ''எல்லாம் முடிந்தது!'' என்று அவர் சொன்னார் (யோவான் 19:30). ஆம், எல்லாம் ...................... - அவர் என்ன செய்தாரோ, அதோடு ஒன்றையும் ஒருபோதும் கூட்ட வேண்டிய அவசியமில்லை. அவர் என்ன செய்தாரோ, அதிலிருந்து ஒன்றையும் ஒருபோதும் எடுக்கக் கூடாது.*

*7. கொலோசெயர் 2:13-15 வசனங்களில், மேற்கொள்வதைக் குறித்த சில முக்கியமான கோட்பாடுகள் நமக்கு போதிக்கப் பட்டிருக்கின்றன: ''உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களை யும் அவரோடே (குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடே) உயிர்ப்பித்து, அக்கிரமங்கள் எல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவில் இராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.''*

*(அ) இயேசு துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் ............................................ - இந்த செய்தித்தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட எபேசியர் 6:12-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிற அதே சக்திகள்தான் இவை.*

*(ஆ) இங்கு ............................ என்பது வெற்றி பெறுவதைக் குறிக்கவில்லை. ஏற்கனவே பெற்ற வெற்றியை கொண்டாடுகிற ஒரு கொண்டாட்டமாய் இது இருக்கிறது. பவுல் இங்கு என்ன அர்த்தத்தில் எழுதியிருக்கிறார்? தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் அடைந்த வெற்றியின் மூலம், இயேசு அந்த வெற்றிபவனியின் ரதத்தில் உட்கார்ந்திருக்கிறார். அவருக்குப் பின்னால், சாத்தானுடைய எல்லா சக்திகளும் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கின்றனர். கண்களால் பார்க்க முடியாத உலகத்தில், அவர் வெற்றிபவனியாய் வந்தார். இதுதான் முழுமையான வெற்றியாய் இருக்கிறது.*

*(இ) இந்த வெற்றியை அடைவதற்கு, இயேசு இரண்டு முக்கியமான காரியங்களைச் செய்தார். முதலில், நம்முடைய அக்கிரமங்களையெல்லாம் மன்னிப்பதன் மூலம், .............................. எனும் சாத்தானுடைய பயங்கரமான ஆயுதத்தின் கூர்ப் பகுதியை இயேசு உடைத்தார். நாம் செய்த எல்லாப் பாவங்களும் நமக்கு மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் முதலில் விசுவாசிக்க வேண்டும். மன்னிக்கப்படாத ஒரு பாவம் இருந்தாலும், சாத்தான் அதை நமக்கு விரோதமாகப் பயன்படுத்துவான். அதன் மூலம், அவன் நம்மை விரக்தியடையச் செய்வான். அவன் நம்மை பிரயோஜனமற்றவர்களாக்கி விடுவான்.*

*(ஈ) ..................... அடைவதற்கான வழியாய் இருந்த மோசேயின் நியாயப்பிரமாணத்தை இயேசு ரத்து செய்தார் (குலைத்து, ஒழித்துப் போட்டார்). இதுதான் அவர் செய்த இரண்டாவது காரியமாயிருந்தது. ஆனால் ஒன்றை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையிலிருந்தோ, இஸ்ரவேலின் வரலாற்றில் இருந்தோ, அல்லது மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களிலிருந்தோ அவர் அதை நீக்கி விடவில்லை என்பதை நாம் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். நீதியை அடைவதற்கான நிபந்தனையாய் இருந்த அதன் நிலையைத்தான் அவர் ரத்து செய்தார்.*

*(உ) நம்முடைய நீதி, இனி கட்டளைகளைக் கடைபிடிப்பதைச் சார்ந்திருப்பதில்லை. அது நம் ......................... சார்ந்திருக்கிறது. நீதிக்கான நிபந்தனையாய் இருந்த பிரமாணத்தை இயேசு சிலுவையில் அறைந்திருக்கிறார்.*

*8. இயேசு சிலுவையில் நம்முடைய மரணத்தை மரித்தார். அதன் விளைவாக, நாம் ............................ அல்ல என்று பரலோக நீதிமன்றம் சொல்லியிருக்கிறது! நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாய் இருக்கின்றோம். ஒருபோதும் பாவம் செய்திராத ஒரு நபராக, நிரபராதியாக நாம் அறிவிக்கப் பட்டிருக்கிறோம். நீதிமான் என்ற இந்த ஸ்தானத்தில் நாம் நிற்கும்போது, ஏற்கனவே சாத்தான் மீது இயேசு பெற்ற வெற்றியைப் உடையவர்களாய், அவன் மீது முற்றும்*

*ஜெயங்கொண்டவர்களாய் வாழ்கின்றோம். நாம் வெற்றியை அடைவதற்கு வேறு எந்த அடிப்படையும் இல்லை. சிலுவை மட்டுமே, அதற்கு ஒரே அடிப்படையாக இருக்கிறது.*

*9. குற்ற உணர்வு என்ற பிரதானமான, பயங்கரமான ஆயுதம் உட்பட, நமக்கு விரோதமாக சாத்தான் பயன்படுத்தக்கூடிய எல்லா ஆயுதங்களையும் இயேசு அவனிடமிருந்து உரிந்து கொண்டார். அதோடு சாத்தானை தோற்கடிப்பதற்கான ஆயுதங்களையும் இயேசு நமக்குத் தந்திருக்கிறார். 2 கொரிந்தியர் 10:3-5 வசனங்கள் சொல்கின்றன: "நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிற வர்கள் அல்ல. எங்களுடைய போர் ஆயுதங்கள் மாம்சத்திற்கு ஏற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிற வர்களாயிருக்கிறோம்."*

*(அ) சரீரப்பிரகாரமான ஆயுதங்களை நாம் பயன்படுத்த வேண்டியதில்லை. காரணம், சரீரங்களை உடைய நபர்களோடு நாம் யுத்தம் செய்வதில்லை. சாத்தானுடைய அரண்களை நிர்மூலமாக்கும்படி, நாம் ................................ ஆயுதங்களை பயன்படுத்த வேண்டும்.*

*(ஆ) ............. தான் யுத்தகளமாயிருக்கிறது. சாத்தான் மனுஷர்களுடைய மனதில் அரண்களை கட்டியெழுப்புகிறான். சுவிசேஷத்தின் சத்தியத்தை அவர்கள் விசுவாசித்து ஏற்றுக் கொண்டு விடாதபடி, அவன் இதைச் செய்கிறான். ஜெபம், பிரசங்கம், துதி, இன்னும் இதுபோன்ற பல ஆவிக்குரிய ஆயுதங்களை தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அவற்றின் வேலை, இந்த அரண்களை நிர்மூலமாக்கி, தேவனுடைய வார்த்தை உள்ளே பிரவேசிக்கும்படி, ஒரு வழியைத் திறப்பதாகும். அப்பொழுது தேவனுடைய வார்த்தை, ஜன ங்களை இரட்சித்து, அவர்களை மாற்றுகிறது.*

முந்தின செய்தியில், அந்திக்கிறிஸ்துவின் இரண்டு முக்கியமான சக்திகளைக் குறித்து நாம் கற்றுக் கொண்டோம். ஒன்று, யூத

மார்க்கம். இன்னொன்று, இஸ்லாம். நீங்கள் உடைத்து, நிர்மூலமாக்க வேண்டிய ஒரு குறிப்பிட்ட அரண், இவ்விரண்டிலும் இருக்கின்றது. யூதர் மனதில் எழும்பியிருக்கும் அரண் இதுதான்: "நான் இயேசுவை விசுவாசித்தால், இனி நான் யூதனாய் இருக்க முடியாது." இயேசுவைக் குறித்த சத்தியத்தை விசுவாசித்து ஏற்றுக் கொள்வதற்கு தடையாய், அவர்களுக்குள் எழும்பியிருக்கும் மிகவும் வலிமையான அரண் இதுதான். ஒரு முஸ்லீமின் மனதில் எழும்பியிருக்கும் அரண்: "தேவனுக்கு ஒரு குமாரன் தேவையில்லை. தேவனுடைய குமாரன் என்ற ஒருவர் இல்லை." யூதர்களையோ அல்லது முஸ்லீம்களையோ சுவிசேஷத்தின் மூலம் பலனுள்ள விதத்தில் நாம் சந்திக்க வேண்டும் என்றால், இந்த ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, இந்த அரண்களை நாம் நிர்மூலமாக்க வேண்டும். அப்பொழுதுதான் இவர்களுடைய வாழ்க்கையில் நம்மால் மெய்யாகவே ஒரு தாக்கத்தை உண்டாக்க முடியும்.

*(இ) கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும்படி, ஒவ்வொரு எண்ணத்தையும் ...................................., நமக்குக் கொடுக்கப்பட்ட உச்சகட்ட பொறுப்பாயிருக்கிறது. முதலில், சாத்தானுடைய சிறையிருப்பிலிருந்து ஜனங்களுடைய மனதை நாம் விடுதலையாக்க வேண்டும். பிறகு நாம் அவர்களுடைய மனதை இயேசுவுக்குக் கீழ்ப்படியும் கொண்டு வர வேண்டும்.*

## *சபை, வெற்றியில் நடப்பதற்கான ஏழு நிபந்தனைகள்*

### 1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பிரிவினை வராமல் காத்துக் கொள்ள வேண்டும்

*10. மத்தேயு 12:25-ல், மிகவும் முக்கியமான ஒரு வாக்கியத்தை இயேசு சொல்கிறார்: "தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய் போகும். தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது." சாத்தானுடைய பிரதானமான தாக்குதல், சபையை ............................ - காரணம், சபையாகிய நாம் பிரிந்து கிடக்கின்றோம் என்றால், நம்மால் ஜெயிக்க முடியாது.*

*11. நாம் செய்ய வேண்டியிய ஒரு காரியம், ............................ எதிர்த்து நிற்பதுதான். வேதவசனத்தின் அடிப்படையில், கிறிஸ்துவுக்குள் உண்மையான விசுவாசிகள்*

*இருக்கின்றார்களோ, கிறிஸ்துவை நேசிப்பதிலும், அவருக்காக வாழ்வதிலும் அர்ப்பணிப்போடு இருக்கின்றார்களோ, அவர்களை நம்முடைய சகோதரர்களாக, சகோதரிகளாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்கும் நமக்கும் இடையில் அநாவசியமான தடைகள் வராதபடி நாம் கவனமாய் பார்த்துக் கொள்ள வேண்டும்.*

*12. .................................. மீது நாம் கவனம் செலுத்த வேண்டும். எங்கே ஜனங்கள் உண்மையான அர்ப்பணிப்போடு சுவிசேஷம் அறிவிப்பதையும், ஜெபிப்பதையும், பரிந்து மன்றாடுவதையும் செய்கின்றார்களோ, அங்கே காணப்படுகிற தடைகளெல்லாம் கரைந்து, உருகி விடும்.*

**2. தேவனுடைய வார்த்தையின் முழுமையான சத்தியத்தை அறிந்து, அதை அறிவிக்க வேண்டும்**

2 தீமோத்தேயு 3-ம் அதிகாரம் இவ்வாறு ஆரம்பிக்கிறது: "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக." இந்த அதிகாரம், குறிப்பாக, கடைசி நாட்களில் நடக்கப் போகிறவைகளோடு தொடர்புடைய காரியங்களைப் பேசுகின்றது. மனுஷனுடைய குணமும், நடத்தையும் எந்த அளவிற்கு மோசமாக சீர்கெட்டு சிதைந்து போகும் என்ற ஒரு படத்தை இது வரைய ஆரம்பிக்கிறது. இந்தக் காலகட்டம் அதன் முடிவை நெருங்குகிற நேரத்தில், மனுஷனுடைய குணத்தில் பெருகிக் காணப்படுகிற 18 மோசமான ஒழுக்க சீர்கேடுகளை இது பட்டியலிடுகிறது. இந்த எல்லா மோசமான சீர்கேடுகளுக்கும் வேராயிருப்பது, சுயநலமே.

பவுல் தொடர்ந்து, காலத்தின் முடிவில் நடக்கின்ற இன்னும் பல்வேறு விஷயங்களை சுட்டிக்காண்பித்திருக்கிறார். அவபக்தி எவ்வளவு பயங்கரமாய் பெருகி காணப்படுகிறது என்பதையும் அவர் மிகவும் தெளிவாக எழுதியிருக்கிறார். இன்றைக்கு நாம் அதை நிறையவே கண்கூடாகப் பார்க்கின்றோம். பிறகு இந்த 3-ம் அதிகாரத்தின் முடிவில், தேவனுடைய தீர்வோடு அவர் வருகின்றார். 16-ம் வசனம் இவ்வாறு ஆரம்பிக்கிறது: "வேதவசனங்களெல்லாம் தேவ ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது."

*13. 2 தீமோத்தேயு 3:16-17 வசனங்களின்படி, நாம் எல்லா விதத்திலும் திறனும், பெலனும், தகுதியும் உடையவர்களாய் இருக்க வேண்டுமென்றால், ............................ முழுமையான*

*சத்தியத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சில முக்கியமான பகுதிகளை மட்டுமல்ல.*

*நாம் இந்தப் பகுதியை தொடர்ந்து வாசிப்போம். 2 தீமோத்தேயு 4:1-5 வசனங்களை வாசித்து, அதற்குப் பிறகு, பின் வரும் மூன்று கேள்விகளுக்கு பதிலளிப்போம்.*

> *[1]நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்ன மாகுதலையும், அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது. [2]சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. [3]ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, [4]சத்தியத்துக்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும்.*

*14. தேவனுக்கு முன்பாகவும், ..................... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், பவுல் நமக்கு கட்டளை கொடுக்கிறார் (1-ம் வசனம்). தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கு, இதைக் காட்டிலும் இன்னும் அதிக அதிகாரம் கொண்ட வேறொரு கட்டளை நமக்கு இல்லை.*

*15. 2-ம் வசனத்தில், பவுல் சொல்லியிருக்கிறபடி, தேவனுடைய வார்த்தையினால், நாம் உணர்த்தப்பட வேண்டும், நாம் கடிந்து கொள்ளப்பட வேண்டும், நாம் அறிவுறுத்தப்பட வேண்டும், நாம் எச்சரிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் எவ்வளவு விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோம் என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். ........................ ஊழியம் செய்யும்படி, போதிக்கும்படி அழைக்கப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் அப்படிப்பட்ட எதிர்பார்ப்பு இருக்க வேண்டும். ஆனால் ஒன்றை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு உணர்த்துதலை தேவன் கொண்டு வருகின்றார்*

*என்றால், அதற்கான நோக்கம், அந்தக் குறிப்பிட்ட பகுதியில் நம்மை மீட்க வேண்டும் என்பதுதான்.*

*16. 3 மற்றும் 4-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற படி, முன்பு சத்தியத்திற்கு செவியை சாய்த்து, விசுவாசத்திலும் போதனையிலும் உறுதியாய் கட்டியெழுப்பப்பட்ட சபைகளில், ............................ சத்தியமும், அதிகாரமும் இன்று தாக்கப்படுகிறது. அதன் அஸ்திபாரம் அசைக்கப்படுகிறது, தகர்க்கப்படுகிறது.*

*17. அப்போஸ்தலர் நடபடிகள் 20:26-ல், பவுல் சொல்கிறார்: "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." இது எதை சுட்டிக் காண்பிக்கிறது? தேவனுடைய முழு ஆலோசனையையும் அறிவிக்க விடாதபடி, நிறைய சமுதாய, பொருளாதார, சபைப்பிரிவின் ................................ காணப்படுகிறது.*

### 3. தேவனுக்கு முன்பாக, நாம் மனந்திரும்பி, நம்மையே தாழ்த்த வேண்டும்

1 பேதுரு **5:5-6** வசனங்கள், நம்மையே நாம் தாழ்த்த வேண்டியதன் அவசியத்தைக் குறித்துப் பேசுகின்றன. இவ்வசனங்களின் அடிப்படையில், அடுத்த மூன்று கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன:

> *5 அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்.*
>
> *"பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மை யுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."*
>
> *6 ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கும், அவருடைய பலத்தை கைக்குள் அடங்கியிருங்கள்.*

*18. தாழ்த்துகிற செயலில், முக்கியமான விஷயம், தாழ்மையாகும். நீங்கள் .............................. நடந்து கொள்ளலாம். ஆனால் உங்களுக்குள் தாழ்மை இல்லாமல் இருக்கலாம். காரணம், தாழ்மை என்பது ஒரு நடத்தை என்பதைக் காட்டிலும், முக்கியமாக, அது ஒரு மனப்பான்மையாக இருக்கிறது.*

*19. ''மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்'' என்று பேதுரு சொல்லும்போது, அது கிரேக்க மொழியில், ''தாழ்மை எனும் மேலங்கியை அணிந்து கொள்ளுங்கள்,'' என்ற அர்த்தத்தில் வருகின்றது. இங்கு ......................... என்ற வார்த்தை, அடிமைகள் மட்டுமே அணிகின்ற ஒரு உடையாக இருக்கின்றது.*

*20. ......................... என்பது நமக்காக தேவன் செய்யக்கூடிய ஒரு விஷயம் கிடையாது. நாம் அதைச் செய்ய வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கின்றார் (6-ம் வசனம்). இது நாம் எடுக்க வேண்டிய ஒரு தீர்மானமாக இருக்கின்றது.*

*21. எஸ்றா 8:21-23 வசனங்களில், நம்மையே நாம் தாழ்த்தும்படி, சபையார் கூடி .............................. இருப்பதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இது நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.*

*22. நம்முடைய அகங்காரத்தையும், சுயநலமான ஆணவத்தையும் மேற்கொள்ளும்படி தாவீது ஒரு வழிமுறையை சங்கீதம் 35:13-ல் வெளிப்படுத்துகிறான்: ''நான் உபவாசத்தால், என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன்.'' நாம் நம்முடைய ........................... தேவனுடைய சித்தம் மற்றும் சிந்தைக்குக் கீழ்ப்படுத்த வேண்டும்.*

### 4. தேவனுடைய சகல ஆயுதங்களையும் அணிந்து கொள்ளுங்கள்

வானங்களில் நடக்கின்ற ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து கற்றுக் கொள்ளும்போது, எபேசியர் **6:12**-ம் வசனத்தை நாம் பார்த்தோம். இந்த அதிகாரத்தின் **13**-ம் வசனம், 'ஆகையால்' என்ற வார்த்தையோடு ஆரம்பிக்கின்றது. டெரிக் இதை பலமுறை தன் போதனைகளில் சொல்லியிருக்கிறார். வேதாகமத்தில் 'ஆகையால்' என்ற வார்த்தையை நீங்கள் வாசிக்கும்போதெல்லாம், அந்த வார்த்தை ஏன் அங்கே இருக்கின்றது என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். இந்த விஷயத்தில், இப்பொழுது பெரிய அளவில் நடந்து கொண்டிருக்கிற யுத்தத்தின் நிமித்தம், இந்த வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஆகையால் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்." உங்களுடைய வேதாகமத்தில், இந்த முழு பகுதியையும், குறைந்தபட்சம் **18**-ம் வசனம் வரையிலாவது வாசியுங்கள். பிறகு பின் வரும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள்:

*23. 13-ம் வசனத்தில், எல்லா ஆயுதங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் அவற்றை நமக்கு போட்டு விடுவதில்லை. அவை தானாகவே நம் மீது விழுந்து விடுவதில்லை. நாம் தான் அவற்றை ............ ....................................*

*24. இந்த வேதப்பகுதியில், பவுல் ஏழு ஆயுதங்களைக் குறிப்பிடுகிறார்:*

*(அ) ..................... எனும் கச்சை*

*(ஆ) .................. எனும் மார்க்கவசம்*

*(இ) ............................ சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் எனும் பாதரட்சைகள் நம் கால்களில் அணியப்பட வேண்டும்.*

*(ஈ) ............................. எனும் கேடயம்*

*(உ) ....................... எனும் ஹெல்மெட்*

*(ஊ) தேவனுடைய ...................... எனும் ஆவியானவரின் பட்டயம்*

*(எ) ஆவிக்குள் ஏறெடுக்கப்படும் எல்லா வகையான ................... மற்றும் விண்ணப்பங்கள். ஜெபம் என்பது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையாக இருக்கிறது. நாம் அதை சரியான பாதையில் செலுத்துவோம் என்றால், அது பாய்ந்து எந்த இலக்கையும் துல்லியமாகத் தாக்கும்.*

*25. இந்த பட்டியலை ஆராய்ந்து பாருங்கள். அது ஒன்றை நமக்கு வெளிப்படுத்தும். நம் முதுகைத் தவிர, நம் தலையிலிருந்து நம் பாதங்கள் வரை அனைத்தும் முழுமையாக பாதுகாக்கப்படும் வகையில், ஆயுதங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. நாம் நம் .................. காண்பிப்போம் என்றால், அங்கே எந்தப் பாதுகாப்பும் இருக்காது.*

**5. தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை நமக்கு வேண்டும்**

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை, வெளியே கண்களால் பார்க்கக்கூடிய விதத்தில் வெளிப்பட்டதை அதன் ஒவ்வொரு அதிகாரத்திலும் நீங்கள் வாசிப்பீர்கள். இப்படிப்பட்ட சம்பவங்களையும்

நீங்கள் நீக்கி விடுவீர்கள் என்றால், ஒரு அதிகாரத்திலும் ஒன்றும் மிஞ்சாது என்பதுதான் உண்மை. கிறிஸ்தவ மார்க்கமே, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமை நமக்கு வேண்டும் என்ற அவசியத்தை நாம் உணர வேண்டும். நம்முடைய சொந்த பெலத்தில், நம்மால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க முடியாது, பலனுள்ள விதத்தில் நாம் செயல்படவும் முடியாது.

*26. 1 கொரிந்தியர் 4:20-ல், பவுல் ஒரு முக்கியமான வாக்கியத்தை எழுதியிருக்கிறார்: "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது." இதில் இறையியல் இருந்தாலும், இறையியல் மட்டுமே இதில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இதில் தர்க்கமோ, அறிவுப்பூர்வமான ஆதாரமோ இல்லை. இதில் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ............................ பகிரங்கமாக வெளிப்படுத்திக் காண்பிக்கப்படுகிறது.*

*27. இந்தச் செய்தித்தொடரின் முந்தின செய்தியில், சபையில் ..................... காட்சியை மறைப்பதுதான், பில்லிசூனியக் கிரியையாக இருக்கின்றது என்று பார்த்தோம். கலாத்தியர் 3-ம் அதிகாரத்திலிருந்து டெரிக் இதை நமக்கு எடுத்துக் காண்பித்தார். ஆனாலும் பவுல் தன் பிரசங்கத்தில் எதை பகிரங்கமாக வெளிப்படுத்திக் காண்பித்தார் என்று 1 கொரிந்தியர் 2:2-ல் சொல்லப்பட்டிருக்கிறது: "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே அன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்."*

*28. 1 கொரிந்தியர் 2:4-5 வசனங்களில், பவுல் தொடர்ந்து இவ்வாறு சொல்கிறார்: "உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்தில் அல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும், என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது." பவுலின் ஊழியத்தில், பரிசுத்த ஆவியானவர் சாட்சியாய் நின்றார். காரணம், அவர் ................ .................................. கிறிஸ்துவின் மீது கவனம் செலுத்தினார்.*

*29. கடைசி நாட்களைக் குறித்துச் சொல்லும்போது, 2 தீமோத்தேயு 3:8-ல், பவுல் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காண்பிக்கிறார். பாரவோன் முன்பாக, மோசேக்கும் எகிப்தின் மந்திரவாதிகளுக்கும் இடையே போட்டிதான் அது. இந்தக் கடைசி நாட்களிலும் அதுதான் திரும்ப நடக்கப் போகின்றது. இயேசுகிறிஸ்துவின் ஊழியர்களுக்கும், பொய்யான தெய்வங்களை வழிபடுகிற, பிசாசைப் பின்பற்றுகிறவர்களுக்கும் இடையே இது நடக்கப் போகின்றது. இதை ...................... முடிவு செய்யப் போவதில்லை. மாறாக, இது வல்லமையின் போட்டியாக இருக்கின்றது. யாருடைய வல்லமை பெரியது என்பது இங்கு முடிவு செய்யப்படப் போகின்றது.*

*30. தேவனுடைய வல்லமை வெளிப்படுகிற விஷயத்தில், குறிப்பாக, மூன்று வெளிப்படுத்தலின் வரங்கள் நமக்கு உதவியாயிருக்கின்றன: அறிவின் வார்த்தையை வெளிப்படுத்தும் வரம் - இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட மண்டலத்தில் சாத்தான் எப்படி கிரியை செய்கின்றான் என்பதை இது நமக்கு வெளிப்படுத்துகிறது. ........................ வார்த்தையைப் பேசும் வரம் - இது அவனுடைய செயல்பாடுகளை எவ்வாறு முறியடிப்பட்து என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆவிகளைப் பகுத்தறியும் வரம் - பிசாசின் வல்லமையையும், கிரியையையும் நாம் நேருக்கு நேராக எதிர்கொள்ளும்போது, அது எப்படிப்பட்ட ஆவி என்பதை இது நமக்கு வெளிப்படுத்துகிறது.*

**6. நாம் ஆனந்தக்களிப்புடன் உற்சாகமாக தேவனை துதிக்க வேண்டும்; தைரியமாய் அறிவிக்க வேண்டும்**

*31. ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் பயன்படுத்த வேண்டிய மூன்று ................................ எரேமியா 31:7-ம் வசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது: ''கர்த்தர் சொல்கிறது என்னவென்றால், 'யாக்கோபின் நிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரின் நிமித்தம் ஆர்ப்பரியுங்கள். சத்தத்தைக் கேட்கப் பண்ணி, துதித்து: கர்த்தாவே, இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்''' இந்த வசனத்தில் 'சொல்லுங்கள்' என்ற வார்த்தை, தேவனிடம் ஜெபியுங்கள் என்ற அர்த்தத்தில் பேசுகின்றது. ஆகையால் அந்த மூன்று*

*ஆயுதங்கள்: அறிவித்தல் (சத்தத்தைக் கேட்கப் பண்ணுதல்), துதித்தல், ஜெபித்தல்.*

*32. ஜெபம் என்பது நாம் என்ன விரும்புகிறோமோ, அதை தேவனிடம் கேட்பது மட்டும் அல்ல. ஜெபம் என்பது, வேதவசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய நோக்கத்தைக் கண்டுபிடித்து, அந்த ...................... நிறைவேறும்படி ஜெபிப்பதாகும். இது காபிரியேல் தூதனிடம், மரியாள் சொன்ன வார்த்தைகளில் மிகவும் அழகாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது: "உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" (லூக்கா 1:38).*

*33. காலத்தின் முடிவில், சீயோன் திரும்பவும் மீட்கப்படுவதைக் குறித்த தீர்க்கதரிசனமாய், 102-ம் சங்கீதம் இருக்கின்றது. 18-ம் வசனத்தை வாசிப்போம்: "பின் சந்ததிக்காக இது எழுதப்படும். சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்." தேவன் தமக்கென்று ஒரு ஜனத்தை சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார். அவரை ............................, உன்னதமான ஒரே நோக்கமாயிருக்கிறது.*

*34. ஒன்றொடொன்று தொடர்புடைய இரண்டு வேதப்பகுதிகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேவன் எவ்வாறு பெலத்தை உண்டுபண்ணுகிறார் என்பது நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. சங்கீதம் 8:2-ல், தாவீது சொல்கிறான்: "பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப் போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களின் நிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்." இந்த வசனத்தை, மத்தேயு 21:16-ல், இயேசு மேற்கோள் காண்பித்தபோது, இவ்வாறு சொன்னார்: "குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்." ஆக, துதிதான், தேவனுடைய ஜனங்களின் ..................... இருக்கின்றது. நமக்கு விரோதமாக சாத்தான் எறிகிற குற்றச்சாட்டுகளை இது அமர்த்தி, அடக்கிப் போடுகிறது.*

எரேமியா **31:7**-ம் வசனத்தை திரும்பப் பார்ப்போம். அறிவித்தல் என்பது கட்டியக்காரனின் வேலையாக இருக்கின்றது. தேவனுடைய வார்த்தையை நம்முடைய சூழ்நிலைகளுக்குள் நாம் அறிவிக்க வேண்டும். எதிர்மறையான வார்த்தைகளையும், தவறான அறிக்கைகளையும் மேற்கொள்ளும்படி

நாம் அவ்வாறு செய்ய வேண்டும். டெரிக், தான் பயன்படுத்துகிற அறிக்கைகளில் இரண்டு அறிக்கைகளை இங்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடுகிறார்.

*இரும்பும், வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழ் இருக்கும். உன் நாட்களுக்குத் தக்கதாய் உன் பெலனும் இருக்கும்.*

*யெஷூரனுடைய தேவனைப்போல் ஒருவரும் இல்லை. அவர் உனக்கு சகாயமாய் வானங்களின் மேலும், தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறி வருகிறார்.*

*அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்.*

*அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை 'அழித்துப் போடு' என்று கட்டளையிடுவார்.*

உபாகமம் **33:25-27**

*நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாய், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாய் இருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.*

2 கொரிந்தியர் **9:8**

## 7. முழுமையான அர்ப்பணிப்பு, நமக்கு இருக்க வேண்டும்

*35. வெளிப்படுத்தின விசேஷம் 12:11 சொல்கிறது: "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், அதற்கு தப்பும்படி, தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்." ஆக, இந்தப் பூமியில் வாழும் விசுவாசிகள் மூன்று காரியங்களின் மூலமாக, சாத்தானை ஜெயிப்பார்கள்: ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம், சாட்சியின் அறிக்கை, முழுமையான அர்ப்பணிப்பு. தங்களுடைய ........................... பின் வாங்குவதைக் காட்டிலும், கர்த்தரை மறுதலிப்பதைக் காட்டிலும், அவர்கள் தங்கள் ஜீவனையும் விடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் சகலத்தையும் மேற்கொண்டு ஜெயிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.*

செய்தியின் முடிவில் டெரிக் ஜெபித்த ஜெபத்தை நாம் திரும்பச் செய்வோம்:

*ஓ தேவனே, வெற்றிக்கான நிபந்தனைகளையும், எல்லாவற்றிற்கும் மேலாக, வெற்றிக்கான மகிமைக்குரிய சாத்தியத்தையும் உம்முடைய வார்த்தை எங்களுக்கு தெளிவுபட விளக்கியிருக்கிறது. நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம். கர்த்தாவே, எங்களுடைய பாவங்களையும், குறைவுகளையும் நாங்கள் அறிக்கை செய்ய விரும்புகிறோம். பல நேரங்களில், நாங்கள் உம்மை விசுவாசியாமல் இருந்திருக்கிறோம். நாங்கள் உமக்குக் கீழ்ப்படியாமல் இருந்திருக்கிறோம். கர்த்தாவே, அதற்காய் நாங்கள் வருந்துகிறோம். எங்கள் சார்பாகவும், இயேசு கிறிஸ்துவின் சபை முழுவதன் சார்பாகவும், நாங்கள் உம்முடைய மன்னிப்பைக் கேட்கின்றோம். கர்த்தாவே, உம்முடைய மகிமைக்காக, சகலத்தையும் மேற்கொண்டு ஜெயிக்கிற வர்களாய் நாங்கள் வாழ்வதற்குத் தேவையான நிபந்தனைகளை நாங்கள் பூர்த்தி செய்யும்படி, உம்முடைய பரிசுத்த ஆவியான வரின் வல்லமையினால் எங்களை பெலப்படுத்தும். இயேசுவின் நாமத்தில், நாங்கள் ஜெபிக்கின்றோம். ஆமென்.*

407-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/47**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் இருபத்தி ஒன்பது>>*

# இரண்டு அறுவடைகள்[4338]

## *அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

தற்பொழுதைய இந்தக் காலகட்டத்தின் கடைசி நாட்களை கருத்தில் எடுத்துக் கொள்ளும்போது, வேதவசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான சத்தியம், அறுவடையைக் குறித்ததாகும். விதைப்பின் காலமும், அறுவடையும், வேதாகமத்தின் முதல் புத்தகத்திலிருந்து கடைசி புத்தகம் வரை காணப்படுகிற ஒரு சத்தியமாக இருக்கின்றது. நோவாவின் காலத்தில், இது முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதியாகமம் 8:22-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள்: “பூமியுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும் இருக்கும்,” என்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

இயேசு இந்தச் சத்தியத்தைக் குறித்து பல்வேறு தருணங்களில் பேசியிருக்கிறார். காலத்தின் முடிவில் நடக்கின்ற ஆத்தும அறுவடையை தொடர்புபடுத்தி அவர் பேசியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் மழையாய் பொழியப்படுவதற்கு, அறுவடைதான் முக்கியக் காரணம் என்று வேதவசனம் வெளிப்படுத்துகிறது. இந்தச் செய்தியில், அறுவடையின் நிமித்தமே, மழை கொடுக்கப்படுகிறது என்ற ஒரு முக்கியமான புரிதலை டெரிக் நமக்குக் கொடுக்கிறார்.

அதோடு, நீதிமான்களின் அறுவடை மட்டும் அங்கு உண்டாகப் போவதில்லை. துன்மார்க்கரின் அறுவடையும் அங்கு உண்டாகும். ஒன்றுக்கொன்று நேரெதிரான, முரண்பட்ட இரண்டு அறுவடைகள் இங்கே நமக்கு முன்பாக காண்பிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் இந்தச் செய்தியை கேட்கப் போகின்றீர்கள் அல்லது பார்க்கப் போகின்றீர்கள். நீதிமான்களின் அறுவடையில் எது உங்களுடைய இடம் என்று தேவனிடமே ஜெபித்துக் கேளுங்கள். அறுவடையின் பலன்களைப் பெறும்படி, இந்தப் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை நிறுவும்படி, உங்களுடைய வாழ்க்கையில்,

நீங்கள் எவ்வாறு முதலீடு செய்யப் போகிறீர்கள்?

## முடிவு மற்றும் கேள்விகள்

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும், கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இந்தச் செய்தியைக் கேட்டவர்களில் பலர், காலத்தின் முடிவில் நடக்கின்ற அறுவடையைக் குறித்த இந்த போதனையை இப்பொழுதுதான் முதல் முறையாக கேட்டிருக்கிறார்கள். கர்த்தர் பரிசுத்த ஆவியானவரை பொழிந்தருளினார் என்பதற்கான முக்கியமான நோக்கங்களில் ஒன்றை நாம் புரிந்து கொள்ளும்படி, டெரிக் பிரின்ஸ் நமக்கு உதவியிருக்கிறார். நமக்கு ஆறுதலைக் கொடுப்பவராக, வழிகாட்டியாக, தேவனுடைய வரங்களை பகிர்ந்தளித்து, நிர்வகிப்பவராக செயல்படும்படி மட்டும் அவர் நமக்கு கொடுக்கப்படவில்லை. நமக்குள், நம் மூலமாக அவர் செய்யும் ஊழியத்தின் முக்கியமான ஒரு பங்கு, வரப் போகும் அறுவடைக்கு ஆயத்தப்படுத்துவதுதான்.

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

## மழையும் அறுவடையும்

ஒவ்வொரு விஷயத்தையும் எப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் குறித்த கட்டளைகளை, வழிமுறைகளை, மோசே, உபாகமம் புத்தகத்தில் கொடுக்கின்றான். வாக்குப் பண்ணப்பட்ட தேசத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை எவ்வாறு நடத்திக் கொள்ள வேண்டும், தேவன் அவர்களை நடத்திச் செல்கிற சுதந்தரத்தின் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் அவர்கள் எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என்பதையெல்லாம் மோசே அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறான்.

எகிப்திற்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஒரு சுருக்கமான ஒப்பீட்டை நாம் கீழே பார்க்கின்றோம். தேசம் மற்றும் அதன் தண்ணீரைக் குறித்த ஒப்பீடாக இது இருக்கிறது.

| | எகிப்து | இஸ்ரவேல் |
|---|---|---|
| 1. நில அமைப்பு | சம நிலப்பரப்பு | மலை, ........................ |
| 2.தண்ணீருக்கான முக்கிய ஆதாரம் | ................ ஆறு | பரலோகம் |
| 3.தண்ணீரின் கட்டுப்பாடு | மனுஷனுடைய .............................. | தேவனுடைய கட்டுப்பாட்டில் இருந்தது |

*4. இஸ்ரவேல் ஜனங்கள் உண்மையாய் கீழ்ப்படிந்து வாழ்வார்கள் என்றால், அவர்களுக்கு மழையைக் கொடுப்பேன் என்று .................. வாக்குப்பண்ணியிருந்தார். அது முடிவில், அறுவடையின் வாக்குத்தத்தமாக அவர்களுக்கு அமைந்திருந்தது.*

*5. வேதாகமத்தில், ..................... வாக்குத்தத்தம், எப்பொழுதும் அறுவடையின் வாக்குத்தத்தத்தோடு சேர்ந்தே வந்தது. இது கிட்டத்தட்ட ஒருபோதும் மாறுபடவே இல்லை.*

*6. இஸ்ரேல் தேசத்தில், இரண்டு முக்கிய பருவகாலங்கள் மட்டுமே இருக்கின்றன. ஒன்று, உலர்ந்த, கோடை .................... - இதில் மழை பெய்யாது. இன்னொன்று, ஈரமான, குளிர் காலம். இதன் ஆரம்பத்திலும், முடிவிலும் இரண்டு மழை பெரிய அளவில் பெய்யும். இடைப்பட்ட காலத்தில், இங்கு கொஞ்சம், அங்கு கொஞ்சம் என பரவலாக மழை பெய்யும்.*

*7. மூன்று வகையான மழை இஸ்ரேலில் பெய்கின்றது.*

*(அ) குளிர் காலத்தின் ஆரம்பத்தில், பெய்கின்ற மழையை, அவர்கள் ........... மாரி என்றழைக்கின்றனர். விவசாயத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, இந்த மழையின் நோக்கம், மண்ணை மென்மையாக்குவதுதான். காரணம், அது சூரிய வெப்பத்தினால் கடினப்பட்டிருந்தது. இந்த மழையின் நிமித்தம், விவசாயி அறுவடைக்கான ஆயத்த வேலைகளை இறங்குவார். இது வழக்கமாக, முழு தேசத்திலும் பெரிய அளவில் பெய்கின்ற மழையாயிருக்கிறது.*

*(ஆ) ............ காலம் முழுவதும், தேசமெங்கும் இடையிடையில் மழை தூறலாக விழுகின்றது.*

*(இ) குளிர்காலத்தின் முடிவில், பஸ்கா பண்டிகையை ஒட்டி, யூத காலண்டரின் முதல் மாதத்தில், பின் மாரி பெய்கின்றது. இதுவும் பெரிய அளவில் பெய்கின்றது. விவசாய பின்னணியில் பார்க்கும்போது, இந்தப் பின்மாரியின் நோக்கம், விதைகள், ............................ செய்வதாகும்.*

*8. முன் மழையோ அல்லது பின் மழையோ தவறினால், ...................... தவறிப் போகும். ஆகையால் மழை என்பது எப்பொழுதுமே அறுவடையோடு நெருக்கமான விதத்தில் தொடர்புடையதாயிருக்கிறது.*

*9. வேதாகமம் முழுவதிலும், மூன்று முக்கியமான அறுவடைகளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தானிய அறுவடை, திராட்சை அறுவடை (புதிய திராட்சை ரசம்), ............... எண்ணெய் அறுவடை.*

## உபாகமம் 11:13-14 வசனங்களை நாம் வாசிப்போம்:

> *[13]நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரை சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், [14]நீ உன் தானியத்தையும், உன் திராட்சை ரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்ற காலத்தில் உங்கள் தேசத்தின் முன்மாரியையும், பின்மாரியையும் பெய்யப் பண்ணுவேன்.*

*10. இது தேவனுடைய ஒரு ......... என்பதை கவனியுங்கள். மழை என்பது தேவனுடைய இறையாண்மையின் கீழ், அவருடைய சர்வாளுமையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது.*

## 14-ம் வசனத்தை திரும்பவும் வாசிப்போம்:

> *நீ உன் தானியத்தையும், உன் திராட்சை ரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்ற காலத்தில் உங்கள் தேசத்தின் முன்மாரியையும், பின்மாரியையும் பெய்யப் பண்ணுவேன்.*

*11. தேவனுடைய பொருளாதாரத்தில், ................ நோக்கம், நாம் அறுவடையை சேர்க்க வேண்டும் என்பதுதான்.*

*12. மழை என்பது ................ ஆவியானவரின் படம் என்பது வேதாகமம் முழுவதிலும் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒன்றாயிருக்கிறது. இதை சபையின் வரலாற்றில் கண்கூடாகப் பார்க்க முடியும். பெந்தேகோஸ்தே நாளில் நிகழ்ந்தது, முன்மாரியாக இருக்கின்றது. 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பரிசுத்த ஆவியானவர் பொழியப்பட்ட நிகழ்வுகள், பின்மாரியின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது.*

*13. இந்தப் பூமியில், பெரிய அளவில் வித்தியாசத்தை உண்டுபண்ணக் கூடிய கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் வழக்கமாக, பெரிய அளவில் படித்தவர்களாய் இருக்க மாட்டார்கள். இவர்கள் விசேஷமான கல்வியறிவைப் பெற்றவர்களாகவோ, அதிபுத்திசாலிகளாகவோ இருக்க மாட்டார்கள். ஆனால் ஆத்துமாக்களை அறுவடை செய்து, தேவனுடைய ............................. சேர்க்கும்படியாகவே ஆவியான வர் மழையாய் பொழியப்படுகிறார் என்ற தெளிவான ஒரு புரிதல் இவர்களுக்குள் இருக்கும். இதன் விளைவாக, இவர்கள் வெளியே சென்று தேசங்களையே தலைகீழாகத் திருப்பினார்கள். இவர்களுடைய ஆற்றலில் எந்த வித்தியாசமும் இல்லை. தேவனுடைய நோக்கத்தைக் குறித்து இவர்களுக்குள் இருக்கும் புரிதலில்தான் வித்தியாசம் இருக்கிறது.*

எரேமியா **5:23-24** வசனங்களை வாசிப்போம். எரேமியா தன்னுடைய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்களை கடிந்து கொள்கிறான். காரணம், தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் குறித்த ஒரு விழிப்புணர்வு அவர்களுக்குள் இல்லை. அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களைக் குறித்தே, கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

> *23 இந்த ஜனங்களோ (எரேமியாவின் காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள்) முரட்டாட்டமும், கலகமுமான இருதயமுள்ளவர்கள். முரட்டாட்டம் பண்ணிப் போய் விடுகிறார்கள் (இவர்கள் தேவனை விட்டுப் பிரிந்து சென்று விடுகின்றார்கள்). 24 அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும், பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்கிறதில்லை.*

*14. அறுவடையின் நிமித்தமே மழை பொழியப்படுகிறது என்பதை நாம் இங்கே திரும்பவும் பார்க்கின்றோம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் செய்த தவறு என்ன? அறுவடையைக் கொண்டு வருகிற மழைக்காகவும், அவர்கள் ......................... சார்ந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை.*

*15. தேவன் அறுவடைக்கான ......................... நியமித்திருக்கிறார் என்பதையும் எரேமியா 5-ம் அதிகாரத்தின் இவ்வசனங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவனே அவைகளை வேறுபிரித்திருக்கிறார். சாத்தானல் அவற்றைத் தொட முடியாது. 'வாரங்கள்' என்று சொல்லும்போது, அது நியமிக்கப்பட்ட ஒரு குறுகிய காலம் என்று நாம் அறிந்து கொள்கின்றோம்.*

*16. நீதிமொழிகள் 10:5 சொல்கிறது: "கோடை காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன். அறுப்புக் காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை (அவமானத்தை) உண்டாக்குகிற மகன்." அறுவடை நேரம் என்பது, ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய ஒரு நேரமாக இருக்கின்றது. எனவே ஆத்துமாக்களை அறுவடை செய்ய வேண்டிய நேரத்தில், .................................. மூலம், நம்முடைய பரலோகத் தகப்பனை நாம் வெட்கப்படுத்தி விடாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.*

*17. யோவேல் இரண்டாம் அதிகாரத்தில், மறுசீரமைப்பைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இது இயற்கையாய் நடக்கின்ற அறுவடையின் ஆவிக்குரிய வடிவத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, மழை தான், இங்கு ......................... உண்டாக்குகிற காரணியாக இருக்கின்றது. இங்கு மழை, பரிசுத்த ஆவியானவரை குறிக்கின்ற படமாக இருக்கின்றது.*

யோவேல் **2:23-24** சொல்கிறது:

> *23 சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து, களிகூருங்கள். அவர் தக்கபடி(உண்மையாய்) உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து (இது ஆதித்திருச்சபையின் மீது பெய்தது), உங்களுக்கு முன்மாரியையும், பின்மாரியையும்*

*(முதல் மாதத்தில்) வருஷிக்கப் பண்ணுவார். [24]களங்கள் தானியத்தினால் நிரம்பும். ஆலைகளில் திராட்சை ரசமும், எண்ணெயும் வழிந்தோடும்.*

18. கோதுமை (தானியம்), புதிய திராட்சை ரசம் மற்றும் எண்ணெயின் அறுவடையைக் கொண்டு வருவதே மழையின் நோக்கம் என்பதை இவ்வேதப்பகுதி நமக்கு திரும்பவும் வெளிப்படுத்துகிறது. .......... மாரி, அவற்றைக் கொண்டு வருகின்றது.

19. தேவனுடைய ஜனங்கள் ஒன்றுகூடி வந்து, கர்த்தரை நோக்கி, உபவாசமிருந்து ஜெபித்த பிறகு (யோவேல் 2:12-13), தேவன் சொல்கிறார்: "மாம்சமான யாவர் மேலும், நான் என் .................... ஊற்றுவேன்." (யோவேல் 2:28).

20. அப்போஸ்தலர் நடபடிகள் 2:17-ல், அப்போஸ்தலனாகிய பேதுரு, யோவேல் புத்தகத்திலிருந்து இந்த வேதப்பகுதியை ஒரு சிறிய மாற்றம் செய்து, மேற்கோள் காண்பித்துச் சொல்கிறார். தேவன் சொன்னதாக, யோவேல் இவ்வாறு சொல்கிறான்: "என் ஆவியை ஊற்றுவேன் (I will pour out my Spirit)." பேதுரு அதை இவ்வாறு சொல்கிறான்: "என் ஆவியிலிருந்து ஊற்றுவேன் (I will pour out of my Spirit)." கடைசி நாட்களில், தேவன் தம்முடைய ஆவியிலிருந்து ஒரு பகுதியை ........................ என்று பேதுரு சொல்கிறான். ஆனால் தேவன் தம்முடைய ஆவி முழுவதையும் ஊற்றுவார் என்று யோவேல் சொல்கிறான்.

21. ..................... யாவர் மீதும் தம் ஆவியானவரை ஊற்றுவேன் என்று தேவன் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இந்த உலகத்தைப் பார்க்கும்போது, மாம்சமானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். தேவன் தம்முடைய ஆவியானவரை இவர்கள் மீது இன்னும் ஊற்ற வேண்டியிருக்கிறது. இது உற்சாகமாக இருக்கின்றது. காரணம், இந்த ஜனங்களெல்லாம் தேவனால் சந்திக்கப்படப் போகிறார்கள்.

22. மத்தேயு 13:39-ல், இயேசு சொல்கிறார்: "அறுப்பு, உலகத்தின் முடிவு." இந்த ............., அறுவடை என்ற கிளைமாக்ஸில் வந்து முடியப் போகின்றது. அறுவடைதான்

*முடிவுக்கான வழியைத் திறந்து விடுகின்றது. 'முடிவு' என்று இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற வார்த்தை, 'முடிவு' என்ற வழக்கமான ஒரு வார்த்தையாக பயன்படுத்தப்படவில்லை. இது காலம் நிறைவடையும் ஒரு புள்ளியைக் குறிக்கின்றது. இந்தக் காலத்தின் சகல விஷயங்களும், ஒரு பிரமாண்ட கிளைமாக்ஸ் எனும் புள்ளியில் ஒன்றாய் கூட்டிச் சேர்க்கப்படுகின்றன.*

*23. யாக்கோபு 5:7-ம் வசனம், இந்த சத்தியத்தோடு ஒத்திசைந்து பேசுகின்றது. நாம் இதை வாசிப்போம்: "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் நீடியபொறுமையோடே காத்திருக்கிறான்." ஒரு விவசாயி அறுவடைக்காக ஏங்கலாம். அவன் எவ்வளவாய் ஏங்கியிருக்கிறான் என்பது ஒரு பொருட்டல்ல. முன் மழையையும், பின் மழையையும் அவன் பெறாதவரை, அறுவடை வரப் போவதில்லை. இது இயற்கையில் உண்மையாயிருக்கிறது. இது ............................ விஷயத்திலும் உண்மையாயிருக்கிறது.*

*24. யாக்கோபு 5:8-ம் வசனத்திலும், அவர் தொடர்ந்து இதையே சொல்கிறார்: "நீங்களும் நீடியபொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே." எது கிளைமாக்ஸ்? ..................... வருகைதான். ஆனால் அறுவடை சேர்க்கப்பட்ட பிறகு தான், அது நடக்கும். பின் மாரி பெய்யாதவரை, அறுவடையும் சேர்க்கப்பட முடியாது.*

*25. மூன்று நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும் என்பதை நாம் இங்கு பார்க்கின்றோம்:*

*(அ) ................ மாரி*

*(ஆ) ............................ சேர்க்கப்படுதல்*

*(இ) ...................... வருகை*

## *அறுவடையின் தரிசனம்*

*26. நீதிமொழிகள் 29:18 சொல்கிறது: "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்." அவர்கள்*

*ஒழுக்கமற்றுப் போவார்கள் என்ற அர்த்தத்தில் இது பேசுகிறது. ...................... தான், நம்மை ஒரு ஒழுக்கத்திற்குள் கொண்டு வருகின்றது.*

*27. அறுவடையை வெற்றிகரமாக நாம் ............... வேண்டுமென்றால், அறுவடையைக் குறித்த தரிசனம் நமக்குள் இருக்க வேண்டும்.*

*28. சமாரிய ஸ்தீரியுடன் இயேசு பேசிய பிறகு, அவர் தம் சீஷர்களிடம் இவ்வாறு சொல்கிறார்: "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்கிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்" (யோவான் 4:35). அவர்களுடைய ........................... தான், அங்கு வித்தியாசம் இருந்தது. சீஷர்களால் வெளியே தான் பார்க்க முடிந்தது. அறுவடைக்கு இன்னும் நான்கு மாதங்கள் ஆகும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இயேசு ஆவிக்குரிய கண்ணோட்டத்திலிருந்து பார்த்தார். ஆத்துமாக்களின் விளைநிலங்கள் இப்பொழுதே அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கின்றன என்று அவர் சொன்னார்.*

*29. மத்தேயு 9:36-37 வசனங்களில், இயேசுவுக்கும் அவருடைய .................................... இடையே தரிசனத்தில் இருந்த இந்த வித்தியாசத்தை நாம் திரும்பவும் பார்க்கின்றோம். அந்த வசனங்கள் இவ்வாறு சொல்கின்றன: இயேசு திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல தொய்ந்து போன வர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி, "அறுவடை மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம்," என்றார்.*

*30. மத்தேயு 25-ல், தேவனால் முற்றிலும் நிராகரிக்கப்படப் போகிற ஜனங்களைக் குறித்த மூன்று படங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன:*

*(அ) முட்டாள் ................... (1-13 வசனங்கள்)*

*(ஆ) உண்மையற்ற .......................... - தன்னுடைய தாலந்தை பயன்படுத்தாதவன் (14-30 வசனங்கள்)*

*(இ) 'வெள்ளாடு' .................. - இயேசுவின் சகோதரர்களை நிராகரித்தவர்கள் (31-46 வசனங்கள்)*

மத்தேயு **9:37**-ம் வசனத்தில், இயேசு இவ்வாறு சொல்கிறார்: "மெய்யாகவே அறுவடை மிகுதியாய் இருக்கிறது. ஆனால் வேலையாட்களோ குறைவு." அடுத்ததாக, அவர் என்ன சொல்கிறார்? "அறுவடைக்கு வேலையாட்களை நிறைய அனுப்பும்படி, அறுவடையின் கர்த்தரிடம் வேண்டிக் கொள்ளுங்கள்" (**38**- வசனம்). 'அனுப்பும்படி' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை மிகவும் வல்லமையான, வலிமையான ஒரு வார்த்தையாயிருக்கிறது என்பதை டெரிக் நமக்கு வலியுறுத்திச் சொன்னார். இயேசு ஜனங்களுக்குள்ளே இருந்து பிசாசுகளை வெளியே துரத்தினார் என்பதை சுட்டிக் காண்பிக்கும்படி பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைதான், இங்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே அறுவடைக்கு நேராக, பரிசுத்த ஆவியானவர் ஜனங்களை உந்தித் தள்ள வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். அதைத்தான் நாம் செய்ய வேண்டும்.

இயேசு எதைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. பொழுதுபோக்காக ஒன்றைச் செய்வதுபோல, நாம் அறுவடை நிலத்திற்குள், நுழைய முடியாது. நாம் அதை சாதாரணமாக செய்து விட முடியாது. பரிசுத்த ஆவியானவரின் உந்துதல் நமக்குள் இருக்க வேண்டும். நாம் நிறைய விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். பாதுகாப்பும், சுகபோகமாய் வாழ்வதும் இன்றைய சபையின் இரண்டு விக்கிரகங்களாக இருக்கின்றன. அவை விக்கிரகங்கள். ஒவ்வொரு ஞாயிறன்று காலையிலும், அவைதான் ஆராதிக்கப்படுகின்றன.

## ஒன்றன் பின் ஒன்றாய் நடக்கும் இரண்டு அறுவடைகள்

வெளிப்படுத்தின விசேஷம் **14:14-16** வசனங்களில், வெளிப்படுத்துகிற யோவான் இவ்வாறு எழுதுகிறார்:

> *[14]பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின் மேல் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவராய் தமது சிரசின் மேல் பொற்கிரீடத்தையும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையும் உடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன். [15]அப்பொழுது வேறொரு*

*தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி, "பூமியின் பயிர் முதிர்ந்தது. அறுக்கிறதற்கு காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்து விடும்," என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். [16]அப்பொழுது மேகத்தின் மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளை பூமியின் மேல் நீட்டினார். பூமியின் விளைவு அறுப்புண்டது.*

*31. முதல் அறுவடையில் சில முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் கவனிக்க வேண்டும்:*

*(அ) "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற வார்த்தைகள், ........................ குறிக்கின்றன. வேறொருவரும், இந்த வார்த்தைகளுக்குப் பொருத்தமானவராக இருக்க முடியாது. நாம் அறுவடையின் கர்த்தரிடம் ஜெபிக்க வேண்டும் என்று அவர் சொன்ன வார்த்தைகள், உங்களுடைய நினைவில் இருக்கிறதா? இயேசுதான் அறுவடையின் கர்த்தராய் இருக்கிறார்.*

*(ஆ) இவ்வேதப்பகுதியில், "பூமியின் பயிர் முதிர்ந்தது" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தைகள் இவ்வாறு சொல்கின்றன: அறுவடை ........................*

*(இ) "இயேசு தமது ........................ பூமியின் மேல் நீட்டினார்," என்று எழுதப்பட்டிருக்கிறது. அவர் அதை மிக வேகமாகவும், வலிமையான சக்தியைக் கொடுத்தும் செய்வார் என்ற அர்த்தத்தில்தான் இது நமக்குப் பேசுகிறது. அவர் அதை அவசரமாகச் செய்வார். அவர் அதை உடனடித் தேவையாகக் கருதி செய்வார்.*

*(ஈ) இந்த முதல் அறுவடையாகிய தானிய அறுவடை, .............................. அறுவடையாயிருக்கிறது.*

இப்பொழுது நாம், வெளிப்படுத்தின விசேஷம் **14:17-18** வசனங்களை வாசிப்போம்:

*[17]பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக் கொண்டு, பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான். [18]அக்கினியின் மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டு வந்து, கருக்குள்ள அரிவாளைப்*

பிடித்திருக்கிறவனை நோக்கி, "பூமியின் திராட்சைப்பழங்கள் பழுத்திருக்கிறது. கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்து விடும்," என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்.

32. முதல் அறுவடையைத் தொடர்ந்து நடக்கின்ற திராட்சைப்பழ அறுவடை, தானிய அறுவடையிலிருந்து வேறுபட்டிருக்கிறது. அதில் இரண்டு முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன:

(அ) இந்த அறுவடையை கர்த்தர் செய்யவில்லை. ஒரு ............ அதைச் செய்தான்.

(ஆ) இது ........................ அறுவடையாயிருக்கிறது. ஏசாயா 63:1-6 வசனங்கள், இதே போன்றதொரு காட்சியை நம் முன் நிறுத்துகிறது. திராட்சைப் பழங்களை மிதித்து, திராட்சை ரசத்தைச் செய்யும் ஆலையின் காட்சியாய் இது இருக்கிறது. இது நீதியை சரிக்கட்டும், நியாயத்தீர்ப்பின் நாளை நம் கண் முன் வைக்கிறது.

33. தேவனுடைய பிரச்சனை, துன்மார்க்கரை நியாந்தீர்ப்பதில் இல்லை. மாறாக, துன்மார்க்கரை ..................... ................... ஒரு வழியைக் கண்டுபிடிப்பதில்தான் தேவனுடைய பிரச்சனை இருந்தது. அவர் அதை சிலுவையின் மூலம் தீர்த்து விட்டார். சிலுவை மட்டுமே, அதற்கான ஒரே வழியாயிருந்தது. ஆனாலும் ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுதும் தேவனே நீதிபதியாய் இருக்கிறார். அவர்தான் இந்தப் பூமியின் துன்மார்க்கரை நியாயந்தீர்ப்பார்.

## நான்கு குதிரை வீரர்கள்

34. வெளிப்படுத்தின விசேஷம் 6-ம் அதிகாரத்தில், நான்கு முக்கியமான குதிரை வீரர்களைக் குறித்து வாசிக்கின்றோம்.

(அ) .............. குதிரை வீரன் - ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் அவன் புறப்பட்டான்.

(ஆ) .................. குதிரை வீரன் - மரணத்தையும், வன்முறையையும், இரத்தம் சிந்துதலையும் கொண்டு

*வருவான் (பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாக சமாதானத்தை பூமியில் இருந்து எடுத்துப் போடும்படியான அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது).*

*(இ) ..................... குதிரை வீரன் - பற்றாக்குறையையும், பஞ்சத்தையும் கொண்டு வருவான். அத்தியாவசிய பொருட்களை தராசில் நிறுத்துக் கொடுப்பான்.*

*(ஈ) ................ குதிரை வீரன் - மரணத்தைக் கொண்டு வருவான்.*

*இந்த நான்கு குதிரைகளும், தேவன் காலத்தை முடிவுக்குக் கொண்டு வருகின்ற நான்கு கட்டங்களைக் குறிக்கின்றது என்று டெரிக் நமக்குப் போதித்தார். பரலோகத்திலிருந்து ஒரு ஒழுங்கின்படி, இந்த நான்கு குதிரைகளும் வருகின்றன. அதாவது, தேவனுடைய நியாயத்தீர்ப்புகள், அவருடைய ஒழுங்கின்படி நடக்கின்றன.*

*வெள்ளைக் குதிரை, இயேசுவின் சுவிசேஷத்தை முன்னெடுத்துச் செல்கிறது. சங்கீதம் 45:3-5 வசனங்களில் சொல்லியிருக்கிறபடி, அவர் சத்தியத்தோடும், தாழ்மையோடும், நீதியோடும் முன் செல்கின்றார். அவர் தன்னுடைய பட்டயத்தை, தன் அரையிலே கட்டிக் கொண்டிருக்கிறார். சிவப்புக் குதிரையும், கறுப்புக் குதிரையும், மங்கின நிற குதிரையும் கொண்டு வரும் நியாயத்தீர்ப்புகள் அடுத்து உடனடியாக வரப்போகிறபடியால், சுவிசேஷம் அவசரம் அவசரமாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் முன்னெடுக்கப்படுவதைத்தான் இது படம் பிடித்துக் காண்பிக்கிறது. இந்த நான்கு குதிரைகளும் இன்று ஓடிக் கொண்டிருக்கின்றன.*

*இந்த உணர்வுதான், தன்னை நெருக்கி ஏவுகிறது என்றும் டெரிக் தொடர்ந்து சொன்னார். வெள்ளைக் குதிரையானது மற்ற குதிரைகளுக்கு முன்னால் செல்ல வேண்டும். மற்ற குதிரைகள், ஜனங்களை அடைவதற்கு முன், நாம் முதலில் ஜனங்களை அடைந்தாக வேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு இறங்குவதற்கு முன், தேவனுடைய இரக்கத்தின் செய்தியை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டும். இது*

மிகவும் அவசரமான ஒன்றாக கருதப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும். இனியும் நாம் காத்திருக்க முடியாது. இது நம்முடைய சௌகரியம் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. இது செய்யக்கூடிய சூழ்நிலை எப்பொழுது நமக்கு உண்டாகும் என்று நாம் காத்திருக்க முடியாது. இது அறுவடையின் நேரம். எனவே இது அறுவடையை அறுக்கின்ற விஷயமாயிருக்கிறது. தேவனுடைய இரக்கத்தின் செய்தியை, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஜனங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் இதைக் கேட்கின்ற இந்த நேரத்தில், நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு கணம் நின்று நிதானிப்போம். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியானவர் மூலம் உங்களுக்கு உணர்த்தும்படி அவரிடம் ஜெபியுங்கள். இவ்வுலகத்தில் கர்த்தரால் முன் குறிக்கப்பட்ட தேவையுள்ள இடத்தை நோக்கி உங்களை உந்தித் தள்ளும்படி, அறுவடையின் கர்த்தரிடம் மன்றாடுங்கள். உங்களுடைய இருதயத்தில் இப்பொழுது ஒரு வாஞ்சையுள்ள கதறலை நீங்கள் உணரலாம்.

உங்களுடைய இருதயத்தின் கதறலை வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நீங்கள் போராடிக் கொண்டிருக்கின்றீர்கள் என்றால், இதோ ஒரு ஆரம்பப்புள்ளி:

> *பரலோகப் பிதாவே, என்னுடைய கவனத்திற்கு இந்த முக்கியமான போதனையை நீர் கொண்டு வந்திருக்கிறீர். உமக்கு நன்றி. ஆத்துமாக்களின் அறுவடைக்கு ஏதுவாக, மாம்சமான யாவர் மீதும் உம்முடைய பரிசுத்த ஆவியானவர் மழையாய் ஊற்றப்பட வேண்டிய முக்கியமான தேவையை நான் பார்க்கிறேன். மனுஷருடைய இருதயங்களை மென்மைப்படுத்துகிற உம்முடைய மழைக்காக உமக்கு நன்றி. அது அவர்களுக்குள் உம்முடைய வார்த்தையின் விதைகளை முளைக்கச் செய்யட்டும்.*
>
> *என்னுடைய வாழ்க்கையைக் குறித்த உம்முடைய தரிசனத்தை எனக்குத் தாரும். என்னுடைய வாழ்க்கையை ஞானமாய் விதைக்கும்படி எனக்கு உதவி செய்யும். உம்முடைய இரக்கம் மற்றும் உம்முடைய கிருபையினால் பெருக்கமான விளைச்சலைக் கொண்டு*

*வர உதவி செய்யும். உம்முடைய கண்ணோட்டத்திலிருந்து காரியங்களைப் பார்க்கும்படி உதவி செய்யும். அறுவடைக்கு இன்னும் நான்கு மாதங்கள் ஆகும் என்று பார்க்காமல், அறுவடை இப்பொழுதே ஆயத்தமாயிருக்கிறது என்று பார்க்கும்படி உதவி செய்யும். அறுவடை செய்யாவிட்டால், அது கெட்டு அழுகிப் போகக் கூடிய ஆபத்தில் இருக்கிறது என்று நான் பார்க்க உதவி செய்யும். குறைவான வேலையாட்கள்தான் இருக்கின்றன ர் என்ற பிரச்சனையை நான் பார்க்கின்றேன். உம்முடைய அறுவடைக்குள், எங்கே உமக்கு பிரியமாய் இருக்கிறதோ, அந்த இடத்தை நோக்கி என்னை தயவு செய்து உந்தித் தள்ளும்.*

*உம்முடைய முக்கியமான கட்டளையை, முக்கியமான ஒன்றாக நான் எடுத்துக் கொள்ளவில்லை. என்னை மன்னியும். உம்மோடு இருக்கிற உறவில், என்னை பெலப்படுத்தும். மற்ற வர்களோடு நான் பகிர்ந்து கொள்கின்ற விஷயம், நம்முடைய ஐக்கியத்திலிருந்து வழிந்தோடட்டும்.*

*இயேசுவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் தொடர்ந்து செவி கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. என்ன செய்யும்படி, அவர் உங்களை அழைத்திருக்கிறாரோ, அதை தொடர்ந்து நாட வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. அவர் ஒன்றை உங்களிடம் காண்பிக்கும்போது, அதைச் செய்வதற்குத் தயங்காதீர்கள். சந்தேகம் உங்களுக்குள் எழும்படி இடம் கொடுக்காதீர்கள். அவர் எப்பொழுதும் சிறந்ததையே அறிந்திருக்கிறார் என்ற வாக்குத்தத்தத்தில் உறுதியாய் நில்லுங்கள். நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றிச் செல்லும்போது, ஒவ்வொரு தடையையும் கடந்து செல்வதற்கு அவர் ஒரு வழியை உண்டாக்குவார் என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ளுங்கள்.

408-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/47**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

*பாடம் முப்பது>>*

# ஏன் இஸ்ரேல்[4414]

*அறிமுகம்*

**இந்தச் செய்தியைக் கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு முன் இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்**

"ஏன் இஸ்ரேல்?" என்ற கேள்வியை நாம் கேட்கும்போது, நாம் இரண்டு கேள்விகளைக் கேட்கின்றோம். ஏன் இஸ்ரவேல் ஜனங்கள், ஏன் இஸ்ரவேல் தேசம் என்ற கேள்விகளை நாம் கேட்கின்றோம். இந்த தேசம், அளவிலும் மக்கள்தொகையிலும் சிறிய தேசமாயிருந்தாலும், செய்திகளில் இது ஏன் ஆதிக்கம் செலுத்துகிறது? இஸ்ரேலைக் குறித்து, சபையிலும் ஏன் மிகவும் அதிகமான குழப்பம் காணப்படுகிறது?

இஸ்ரேல் அல்லது இஸ்ரவேலர்கள் என்ற வார்த்தை, வேதாகமத்தில், கிட்டத்தட்ட 2600 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் இஸ்ரேலைக் குறித்து நீங்கள் புரிந்துகொள்ளவில்லை என்றால், உங்களால் வேதாகமத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. இஸ்ரேலைக் குறித்த குழப்பத்தில் நாம் இருப்போம் என்றால், வேதாகமத்தைக் குறித்தும் நாம் குழம்பிப் போயிருப்போம். புதிய ஏற்பாட்டில், இஸ்ரவேல் என்ற வார்த்தை 97 முறை வருகின்றது. ஆனால் அது ஒருமுறைகூட சபையைக் குறிக்கவில்லை என்பதை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். மிகவும் எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால், இஸ்ரவேல் என்ற வார்த்தை, இஸ்ரவேலைக் குறிக்கின்றது. சபை என்ற வார்த்தை, சபையைக் குறிக்கின்றது. சபை, இஸ்ரவேலின் இடத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இஸ்ரவேல் என்பது தனித்துவமான ஜனங்கள் அடங்கிய தேசமாய் இருக்கிறார்கள். ஒரு தேசமாய் அவர்களை மீட்கும்படி தேவன் முன் குறித்திருக்கிறார்.

உண்மையில், இந்தச் செய்தி, பிரிட்டனில் கொடுக்கப்பட்டது. அந்த தேசம் அடிக்கடி குறிப்பிடப்படுவதற்கு இது காரணமாக இருந்திருக்கிறது. இஸ்ரவேலைக் குறித்த சில புள்ளிவிவரங்கள் பழையவைகளாய் இருந்தாலும், சத்தியங்கள் மாறவில்லை. தேவன் இஸ்ரேலை ஒரு தேசமாய் தேர்ந்தெடுத்திருக்கிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு தேவன்

வாக்குப் பண்ணின தேசத்திற்குள், அவர்களை திரும்பவும் ஒன்றாய் கூட்டிச் சேர்க்கின்றார். இயேசு இஸ்ரேலுக்கு திரும்பி வருகின்றார்.

## *முடிவு மற்றும் கேள்விகள்*

**இந்தச் செய்தியை பார்த்த அல்லது கேட்ட**
**பிறகு, இந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும்,**
**கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.**

இஸ்ரேலின் முக்கியத்துவத்தைக் குறித்து முதல் முறையாக, டெரிக்கின் இந்தச் செய்தியைக் கேட்டவர்களில் பலருக்குள், அவர்களுடைய இருதயத்திலும் மனதிலும் அடிப்படையான ஒரு மாற்றம் உண்டாகும். அவர்களுடைய அணுகுமுறையிலும் அடிப்படை நிலையில் ஒரு மாற்றம் உண்டாகும். நம்மில் பெரும்பாலானோர், இந்த விஷயத்தைக் குறித்து நீண்ட வருடங்களாக, அறியாமையில் வாழ்ந்திருக்கிறோம். ஆனால் தேவன் உண்மையுள்ளவராய், இந்த சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாகவே இதைச் செய்திருக்கிறார்.

ஆதியாகமம் 12:1-3 வசனங்கள் சொல்கின்றன:

*[1]கர்த்தர் ஆபிராமை நோக்கி,*

*"நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ*

*[2]நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பெயரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.*

*[3]உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னை சபிக்கிறவனை சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்," என்றார்.*

இந்த வேதப்பகுதியிலிருந்து, ஒரு முக்கியமான சத்தியத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆபிரகாமின் சந்ததியாராகிய யூதர்களை நாம் ஆசீர்வதிக்கும்போது, நாம் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறோம். இதற்கு அப்படியே நேரெதிரான விஷயமும்

உண்மையாயிருக்கிறது. நாம் யூதர்களை சபித்திருக்கிறோம் என்றால், நாம் தேவனுடைய சாபத்தை எதிர்கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம். தேவனுடைய இந்தக் கட்டளைக்கு நாம் கட்டாயமாய் கீழ்ப்படிய வேண்டும். அதாவது இஸ்ரேலைக் குறித்தும், யூதர்களைக் குறித்தும் வேதவசனம் என்ன சொல்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம் என்றால், நாம் நம்மையே தேவனுடைய நோக்கங்களோடு இணைத்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அப்பொழுது நாம் அவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருப்போம். நாமும் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிப்போம்.

## கோடிட்ட இடங்களை நிரப்புக:

## இஸ்ரேலைக் குறித்த உண்மைகள்

*1. இஸ்ரேல் என்பது, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் வழிவந்தவர்களுடைய தேசத்திற்குக் கொடுக்கப்பட்ட பெயராய் இருக்கிறது. பிறகு அவர்கள் யூதர்கள் என்றழைக்கப்பட்டனர். ஆனால் இன்று யூதர்கள் என்றாலும், ................... என்றாலும், கிட்டத்தட்ட ஒரே அர்த்தத்தில்தான் பார்க்கப்படுகிறது.*

*2. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் அல்லது இஸ்ரவேலர்கள் என்ற வார்த்தை, இரண்டு .......................... ஐநூறு முறை களுக்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

*3. புதிய ஏற்பாட்டில், இஸ்ரேல் என்ற வார்த்தை 97 முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் இது ஒருபோதும் ................. குறிக்கவில்லை.*

*4. யூதர் என்ற வார்த்தை, பழைய ஏற்பாட்டில் 84 தடவைகளும், புதிய ஏற்பாட்டில், 192 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில், கிறிஸ்தவர் என்ற வார்த்தை, ................ முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

## இஸ்ரேலின் தனித்தன்மை

*5. இஸ்ரேலின் தனித்தன்மையைக் குறித்து, தாவீது, 1 நாளாகமம் 17:21-ல் இவ்வாறு சொல்கிறான்: "உமது ஜனமாகிய*

*இஸ்ரவேலுக்கு நிகரான ஜனம் உண்டோ? பூலோகத்தில் இந்த ஒரே ஜாதியை தேவனாகிய நீர் உமக்கு ஜனமாக மீட்கும்படி, பயங்கரமான பெரிய காரியங்களினால் உமக்கு கீர்த்தியை உண்டாக்கி, நீர் எகிப்திற்கு நீங்கலாக்கி மீட்ட உமது ஜனத்திற்கு முன்பாக, ஜாதிகளை (தேசங்களை) துரத்தினீர்.'' - மற்ற தேசங்களிலிருந்து, ஒரு தேசமாய் ................. தேவன் வேறு ஒரு தேசத்தையும் முன் குறிக்கவில்லை.*

*6. யாத்திராகமம் 19:6-ல், இஸ்ரேலைக் குறித்து மோசேயிடம் தேவன் இவ்வாறு சொல்கிறார்: ''நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய் (தேசமுமாய்) இருப்பீர்கள்.'' வேறு எந்தவொரு ............................... பார்த்தும், தேவன் இந்த வார்த்தைகளை ஒருபோதும் பேசியதில்லை.*

*7. ரோமர் 9:4-5 வசனங்களில், இஸ்ரவேலுக்கும் யூதர்களுக்கும் மட்டுமே பொருந்தக்கூடிய தனித்துவம் வாய்ந்த அம்சங்களை பவுல் பட்டியலிடுகிறார்: ''அவர்கள் இஸ்ரவேலரே. புத்திரசுவீகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவ ஆராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே. பிதாக்கள் அவர்களுடையவர்களே. மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே. இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்.''*

*(அ) தேவன் ஒரு தேசமாய் அவர்களை ..................................*

*(ஆ) இஸ்ரேல் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தவரைக்கும், ................., அதாவது வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட பிரசன்னம், அவர்களோடு தங்கியிருந்தது.*

*(இ) இஸ்ரேல் ஒரு தேசமாக உருவாவதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டவைகளைத் தவிர, எல்லா .................................. இஸ்ரேல் உடன் செய்யப்பட்டன.*

*(ஈ) ................................. இஸ்ரேலிடம் தான் கொடுக்கப்பட்டது.*

*(உ) தேவனுக்கு செய்ய வேண்டிய ஆசாரிய ....................*

*(ஊ) ................................*

*(எ) பிதாக்கள் எல்லோரும் ........................ என்ற குடும்ப வரிசையிலிருந்துதான் தோன்றினார்கள்.*

*(ஏ) இஸ்ரேல் மூலமாகத்தான், இரட்சகரும், ........................ இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் பிறந்தார்.*

*8. இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, இயேசு ஒரு .............. வாழ்ந்தார். இப்பொழுது அவர் பரமேறிச் சென்றிருந்தாலும், இப்பொழுதும் அவர் ஒது யூதனாகத்தான் இருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 5:5-ம் வசனம், அவரை "யூதா கோத்திரத்து சிங்கம்" என்று வெளிப்படுத்துகிறது. யூதா என்றால், யூதர் என்ற வார்த்தையின் வேரிலிருந்து வருகின்றது. ஆக, இயேசு நித்தியமாக யூதர்களோடு அடையாளப்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

*9. யோவான் 4:22-ல், இயேசு சமாரிய ஸ்தீரியிடம் இவ்வாறு சொல்கிறார்: "நீங்கள் அறியாததை தொழுதுகொள்கின்றீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்கின்றோம். ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது." .................... இல்லையென்றால், இரட்சிப்பு இல்லை, முற்பிதாக்கள் இல்லை, தீர்க்கதரிசிகள் இல்லை, அப்போஸ்தலர்கள் இல்லை, வேதாகமம் இல்லை, இரட்சகரும் இல்லை.*

*10. இஸ்ரவேலின் முழு வரலாறும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது:*

*(1) அவர்கள் ........................ அடிமைப்பட்டிருந்தனர்.*

*(2) அவர்கள் எகிப்திலிருந்து நிறைய ஐசுவரியங்களோடு ........................................*

*(3) அவர்கள் ................... தேசத்தை சுதந்தரித்தனர்.*

*(4) வாக்குப் பண்ணப்பட்ட தேசத்தில், அவர்கள் ............... ................ திரும்பியிருந்தனர்.*

*(5) தேவன் எருசலேமில் ...................... மையத்தை ஏற்படுத்தியிருந்தார்.*

*(6) வட ராஜ்யம், சிறைப்பிடிக்கப்பட்டு, ............................ கொண்டு செல்லப்பட்டது.*

*(7) தென் ராஜ்யம் சிறைப்பிடிக்கப்பட்டு, ......................... கொண்டு செல்லப்பட்டது.*

*(8) சாலமோனால் கட்டப்பட்ட முதல் .............................. . அழிக்கப்பட்டது.*

*(9) பாபிலோனில் ...................... திரும்பினார்கள்.*

*(10) இயேசுவின் காலத்தில், ...................... தேவாலயம் அழிக்கப்பட்டது.*

*(11) அவர்கள் புறஜாதி ............................ மத்தியில் சிதற டிக்கப்பட்டனர்.*

*(12) அவர்கள் ....................... மத்தியில், உபத்திரவங்களையும் ஒடுக்கப்படுதலையும் சந்தித்தனர்.*

*(13) எல்லா .............................. இஸ்ரவேல் ஜனங்கள் திரும்ப கூட்டிச் சேர்க்கப்பட்டனர்.*

*(14) எல்லா தேசங்களும் ஒன்றாய் சேர்ந்து, ............................ எதிராக யுத்தம் செய்வார்கள்.*

*(15) ...................... குறித்த இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வெளிப்பாடு, அவருடைய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.*

*(16) மெசியா மகிமையோடும், வல்லமையோடும் .........................*

இந்தப் பட்டியலின் கடைசி மூன்று தீர்க்கதரிசனங்களும் இனிமேல் நிறைவேறப் போகின்றன. ஆனால் முதல் 13 தீர்க்கதரிசன ங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற உண்மை, கடைசி 3 தீர்க்கதரிசனங்களும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற தைரியத்தை நமக்குக் கொடுக்கின்றது.

## இஸ்ரேல் தேசத்தைக் குறித்த தேவனுடைய திட்டம்

பாலஸ்தீனம் என்று தவறாக அழைக்கப்படுகிற இஸ்ரேல் தேசத்தைக் குறித்து தேவன் வைத்திருக்கிற திட்டம்தான், இன்றைய அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு விவாதமாக இருக்கின்றது என்று டெரிக்

பிரின்ஸ் சொன்னார்.

*11. யோசுவாவின் தலைமையின் கீழ், இஸ்ரவேல் ஜனங்கள் அதை சுதந்தரிக்கும் வரைக்கும், உண்மையில், அது ................. தேசம் என்றழைக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில், அது ரோமர் ஆட்சியின் கீழ் இருந்தாலும், அது தொடர்ந்து இஸ்ரேல் தேசம் என்றுதான் அழைக்கப்பட்டது.*

*12. ஆதியாகமம் 17:7-8 வசனங்களில், தேவன் ஆபிரகாமோடு முற்றிலும் இறையாண்மை கொண்ட ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்: "உனக்கும் உனக்குப் பின் வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி, எனக்கு உனக்கும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும், உனக்கும் உனக்குப் பின் வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்."*

நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறீர்கள் என்றால், அந்த தேசம் யாருக்குச் சொந்தம் என்பதில் எந்த சர்ச்சையும் இல்லை என்பதை நீங்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்வீர்கள். அதற்குள் இஸ்ரவேலர்கள் இருந்தாலும் அல்லது அதற்கு வெளியே இருந்தாலும், எந்த வித்தியாசமுமில்லை. அது அவர்களுக்கு ஒரு ........................... சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முழு வேதாகமத்திலும், மிகவும் முக்கியமான வேதப்பகுதிகளில் ஒன்று, 105-ம் சங்கீதத்தில் இருக்கின்றது. காரணம், இஸ்ரவேல் தேசத்தைக் குறித்த தேவனுடைய திட்டங்களுக்கு தேவன் காண்பிக்கிற முழுமையான அர்ப்பணிப்பைக் குறித்து இந்த சங்கீதம் அதிகமாகவே பேசுகின்றது.

*7 அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர். அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும்.*

*8 ஆயிரம் தலைமுறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும்,*

*9 அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார்.*

*10அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி,*

*11"உங்கள் சுதந்தர பாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன்," என்றார்.*

தேவனுடைய ஜனங்கள், இஸ்ரவேலர் என்றழைக்கப்பட்டனர். அவர்களுடைய தேசம், இஸ்ரேல் என்றழைக்கப்பட்டது. தேவன் அவர்களுக்கும், அவர்களுடைய தேசத்திற்கும் கொடுத்திருந்த அர்ப்பணிப்பைக் குறிக்கும்படி இதில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளை நாம் மிகவும் கவனமாக பார்க்க வேண்டும்: **உடன்படிக்கை, ஆணை, கட்டளையிட்ட வார்த்தை, பிரமாணம், நித்திய உடன்படிக்கை**

*13. கடைசி நாட்களில், யூதர்கள் தங்களுடைய சுதந்தரத்திற்கு ................................ குறித்த எண்ணிலடங்கா வாக்குத்தத்தங்களில் ஒன்று, எரேமியா 30:3-ல் எழுதப்பட்டிருக்கிறது: "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்கிறார். அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களை திரும்பி வரப் பண்ணுவேன். அதை அவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்கிறார்." ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்ட தேசம், கானான் தேசம் அல்லது இஸ்ரவேல் தேசம் என்பதை வேதாகமத்தைக் குறித்த சரியான அறிவு உள்ள எவரும் புரிந்து கொள்வார்கள்.*

*14. பயங்கரமான எதிர்ப்புகள், பயங்கரவாதம் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் இஸ்ரவேல் ஜனங்கள் திரும்பி வருவார்கள் என்று எரேமியாவில் எழுதப்பட்ட வேதப்பகுதி சொல்கிறது. யூதர்கள் தங்களுடைய தேசத்திற்கு திரும்பி வரும்போது, அது உடனடியாக ............................ உண்டாக்கி விடாது. மாறாக, அது உபத்திரவத்தின் உச்சகட்ட கிளைமாக்ஸ்-க்கு செல்லும். இப்படிப்பட்ட ஒரு உபத்திரவத்தை அவர்கள் இதற்கு முன் ஒருபோதும் அனுபவித்திருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் அதிலிருந்து அல்ல, அதை விட்டு வெளியே எடுக்கப்பட்டு, காப்பாற்றப்படுவார்கள் என்பதுதான் வாக்குத்தத்தம்.*

*15. ..................... ஜனங்களை இவ்வாறு நடத்துவதற்கான தேவனுடைய பிரதானமான நோக்கம், எசேக்கியேல் 36-ம் அதிகாரத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. 21-ம் வசனம் சொல்கிறது: "ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள் வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்திலே பரிசுத்தக் குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தின் நிமித்தமாகவே இரங்குகிறேன்." தேவன் யூதர்களுக்காக அதைச் செய்யவில்லை. அவர் அதை தம்முடைய நாமத்தின் நிமித்தமாகவே செய்கின்றார்.*

*16. 24-ம் வசனத்தில், தேவன் தொடர்ந்து சொல்கிறார்: "நான் உங்களை புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களை சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுய தேசத்திற்கு உங்களைக் கொண்டு வருவேன்." அவர்கள் அதில் இருக்கிறார்களோ, இல்லையோ, இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொந்தமான தேசத்தை, தேவன் அவர்களுக்கு ..................... சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார்.*

*17. தேவனுடைய மறுசீரமைப்பின் கிரியையில் அடுத்த படி என்ன என்பதை 25-ம் வசனம் சொல்கிறது: "அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும், உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி, உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள்." அவர்கள் இன்னும் ....................... இருக்கின்ற நிலையிலேயே, அவர்கள் திரும்பவும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். தேவன் தம்முடைய வார்த்தையாகிய சுத்தமான தண்ணீரை அவர்கள் மீது தெளிப்பார். அதன் மூலம், அவர்கள் சுத்தமாவார்கள், திரும்பவும் மீட்கப்படுவார்கள்.*

*18. எசேக்கியேல் 36:26 தொடர்ந்து சொல்கிறது: "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்." சிதறியிருந்த நூற்றாண்டுகளில், விதிவிலக்குகள் இருந்தாலும், யூதர்களிடம் கல்லினால் ஆன .................. இருந்தது. அது தேவனுடைய நியாயத்தீர்ப்பாயிருந்தது. கல்லான இருதயத்தினால், பரிசுத்த ஆவியானவருக்கு இணங்கி நடக்க*

முடியாது. ஆனால் இப்பொழுது தேவன் அந்தக் கல்லான இருதயத்தை எடுத்து விட்டார். அவர்களுக்கு சதையினால் ஆன ஒரு இருதயத்தை அவர் கொடுத்திருக்கிறார். யெஷீவாவைக் குறித்து, இயேசுவைக் குறித்து அவர்களுடைய சிந்தையில் உற்சாகமுட்டக்கூடிய ஒரு மாற்றம் உண்டாயிருக்கிறது.

19. 27-ம் வசனத்தில், தேவன் இஸ்ரவேல் ஜனங்களிடம் இவ்வாறு சொல்கிறார்: "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்." இது பரிசுத்த ஆவியானவருக்குள் பெறுகின்ற ..................................... குறித்து பேசுகிறது. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி, அவர் அவர்களுக்குள் கிரியை செய்வார்.

20. முந்தின படிகளில் நிகழ்ந்தவற்றினுடைய கிளைமாக்ஸை 28-ம் வசனத்தில், நாம் வாசிக்கின்றோம். தேவன் இவ்வாறு சொல்கிறார்: "உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்கள் தேவனாயிருப்பேன்." நாம் யூதர்களை சுட்டிக் காண்பித்தாலும், ................. கிரியை செய்கிறதை நாம் பார்க்கும்போது, நாம் பொறுமையாய் இருக்க வேண்டும். நம் கண்களுக்கு முன்பாக, இது நிறைவேறுவதை நாம் பார்ப்போம்.

21. மூல எபிரெய மொழியில், எசேக்கியேல் 36:23-30 வசனங்களில், "நான் செய்வேன்" என்ற அர்த்தத்தில், தேவன் .................. முறை சொல்கிறார். தேவன் சர்வாளுமையுள்ள தேவன். அவர் நிச்சயம் எல்லாவற்றையும் படிப்படியாக நிறைவேற்று முடிப்பார்.

## இப்பொழுது நிறைவேறிக் கொண்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள்

22. முதல்முறை திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு முன்பே, இஸ்ரவேல் ஜனங்கள் ......................... திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று தேவன் முன்கூட்டியே கணித்து ஏசாயா 11:11-ல், சொல்கிறார். இரண்டாம் முறை திரும்பக்

*கூட்டிச் சேர்க்கப்படுகிற நிகழ்வு, ஒரு சில இடங்களிலிருந்து மட்டும் அல்ல, உலகமெங்கிலும் இருந்து நடக்கும்.*

*23. ‘‘தேவன் ஜாதிகளுக்கு (தேசங்களுக்கு) ஒரு கொடியை ஏற்றுவார்’’ என்று ஏசாயா 11:12-ல் எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுகிறார் என்பதற்கான ஒரு அறிவிப்பாக இந்த ................ இருக்கின்றது. தேவன் தம்முடைய உடன்படிக்கைகளைக் காக்கிறவர் என்பதை அவர் இந்த உலகத்திற்கு முன்பாக உறுதிப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர்களுடைய தேசத்தை மீட்டுக் கொடுப்பதன் மூலம், கிட்டத்தட்ட 3800 வருடங்களுக்கு முன்பே, ஆபிரகாமோடு தேவன் ஏற்படுத்தின தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுகின்றார், அதைக் காக்கின்றார்.*

*24. தம்முடைய உடன்படிக்கையைக் காக்கும் தேவனுடைய உண்மையை, கிறிஸ்தவர்களாகிய நாம் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். காரணம், ........................ இரத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில்தான், தேவனோடு நமக்கு உறவு உண்டாயிருக்கிறது. இஸ்ரவேலோடு தம்முடைய உடன்படிக்கையை தேவன் முறித்துக் கொள்வார் என்றால், சபையோடு அவர் தம் உடன்படிக்கையை முறித்துக் கொள்வதற்கும் சாத்தியமிருக்கிறது. ஆனால் அவர் அப்படி ஒருபோதும் செய்ய மாட்டார். அவர் தம் உடன்படிக்கையை முறிக்கிறவர் அல்ல. அவர் ஒரு உடன்படிக்கையை செய்திருக்கிறார் என்றால், நிச்சயம், அவர் அதைக் காப்பார்.*

*25. யோவேல் 3-ம் அதிகாரம், தேசங்களின் மீது வருகின்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து பேசுகிறது. தேவனுடைய .......................... பங்கிட்டுக் கொண்டவர்கள், அவருடைய கோபத்தை எதிர்கொள்வார்கள் என்று 3-ம் வசனத்தின் முடிவில் சொல்லப்பட்டிருக்கிறது.*

## *இவை எல்லாவற்றின் பின்னணியிலும் காணப்படுகிற உண்மையான பிரச்சனைதான் என்ன?*

இதன் பின்னணியைப் புரிந்துகொள்ளும்படி, மத்தேயு **23:37-39** வசனங்களை நாம் பார்ப்போம். இயேசு என்ன சொல்கிறார் என்பதைக்

கவனிப்போம்:

*[37]எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கல் எறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளை கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று. [38]இதோ, உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும். [39]"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்," என்று நீங்கள் சொல்லுமளவும், இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன்.*

"உங்களுக்கு மனதில்லாமல் போனது," என்று 37-ம் வசனம் சொல்கிறது. இது பன்மையாக, ஒரு கூட்ட ஜனங்களின் ஒட்டுமொத்த விருப்பமாக சொல்லப்பட்டிருக்கிறது. 38-ம் வசனத்தில் பாருங்கள். "வீடு" என்ற வார்த்தை தேவாலயத்தைக் குறிக்கின்றது. இதைச் சொன்ன இயேசு வாழ்ந்த அந்த ஒரு தலைமுறைக்குள், கிபி 70-ல், ரோமர்களால் அந்த தேவாலயம் முழுமையாய் தனித்து, பாழாக்கி விடப்பட்டது.

39-ம் வசனத்தில், இயேசு என்ன சொல்கின்றார்? அவரை வரவேற்கும்படி, யூத ஜனங்கள் ஆயத்தமாகும்வரை, அவர்கள் அவரைக் காண மாட்டார்கள். அவருடைய வருகைக்கு முன், யூதர்களுடைய இருதயம் அவருக்காக ஆயத்தமாக வேண்டும். இந்த விஷயத்தில், நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் இதுதான். அவர்களுடைய மெசியாவாகிய இயேசு இரண்டாம் முறை திரும்ப வரும்போது, அவரை ஏற்றுக் கொள்ளும்படி யூதர்கள் அங்கே இருக்கத்தக்கதாக, அவர்கள் இஸ்ரேலிலும், எருசலேமிலும் திரும்ப நிலைநிறுத்தப்பட வேண்டும்.

*26. சகரியா 12:10 சொல்கிறது: "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காக புலம்புகிறதுபோல எனக்காக புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காக துக்கிக்கிறதுபோல, எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்."*

*(அ) தான் மெய்யாகவே யார் என்பதை பரிசுத்த ஆவியானவர் மூலமாக, தம்முடைய யூத ஜனங்களுக்கு இயேசு ஒரு ............................ கொடுக்கப் போகிறார்.*

*(ஆ) இஸ்ரேலின் வரலாற்றில், முன் ஒருபோது, அனுபவித்திராத அளவிற்கு ஒரு ..................... உண்டாகப் போகிறது. "நாம் நம்முடைய மெசியாவையே சிலுவையில் அறைந்து விட்டோம். நாம் நம் தேவனையே நிராகரித்து விட்டோம்," என்று முதல் முறையாக அவர்கள் உணர்ந்து, அழுவார்கள்.*

*27. மத்தேயு மற்றும் சகரியாவின் இந்த வேதப்பகுதிகளை நாம் சேர்த்துப் பார்ப்போம் என்றால், கர்த்தர் வருவதற்கு முன், சில குறிப்பிட்ட விஷயங்கள் சீர் செய்யப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்வோம். ................. எருசலேமிலும், அவர்களுடைய தேசத்திலும் திரும்ப கூட்டிச் சேர்க்கப்பட வேண்டும். காரணம், அவர்கள் அப்படிச் சேர்க்கப்படாதவரை, கர்த்தராகிய இயேசு திரும்பி வரப் போவதில்லை. பிறகு, இயேசுவைக் குறித்த இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஒரு வெளிப்பாடு அங்கே உண்டாக வேண்டும். அது அவர்களுடைய இருதயங்களை அவர் பக்கமாய் திருப்பி விடும்.*

*28. இந்தப் பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான் மிகவும் அதிகமாய் பயப்படுகிற ஒரே விஷயம், ......................... வருகைதான். இயேசு திரும்பி வரும்வரை, சாத்தான் நிறைய போர்களில் தோற்றுப் போகலாம். ஆனால் அவன் யுத்தத்தை இழந்து விட மாட்டான். இயேசுவின் இரண்டாம் வருகை வரை, அது மாறப் போவதில்லை.*

*29. இயேசுவின் வருகைக்கு ஏதுவான சூழ்நிலைகளை உருவாக்கும்படி நடக்கின்ற ஆயத்தத்தை சாத்தான் மிகவும் அதிகமாக, தன் முழு பெலத்தோடு எதிர்த்து நிற்கின்றான். யூதர்கள் தங்களுடைய பட்டணமாகிய .............................. இருக்க வேண்டும். இயேசு திரும்பி வருவதற்கு முன், அவர்கள் தங்கள் தேசத்தில் தங்கியிருக்க வேண்டும். அவர்கள் அங்கே வாழ வேண்டும். ஆகையால் கர்த்தருடைய வருகைக்கு*

*ஏதுவான ஒரு சூழல் அங்கே அமைந்து விடாதபடி, சாத்தான் தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்து, அதைத் தடுத்துக் கொண்டிருக்கின்றான்.*

*30. இயேசு திரும்பி வரும்போது, அவர் எல்லா தேசங்களையும் ஒன்றாய் கூட்டிச் சேர்க்கப் போகிறார். இஸ்ரேல் தேசத்திடம் அவருக்கு உண்டாயிருக்கிற உரிமையைக் குறித்து, அவர்கள் எப்படி நடந்து கொண்டார்களோ, அதன் அடிப்படையில், அவர் அவர்களை .................................. போகின்றார்.*

இந்த முக்கியமான செய்தியை முடிக்கின்ற இந்நேரத்தில், கர்த்தருக்கு முன்பாக அமைதலாய் காத்திருப்பதுதான் ஏற்றதாயிருக்கும்.

*பரலோகப் பிதாவே, உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலுக்கு இருக்கும் மிகவும் அதிகமான முக்கியத்துவத்தை நான் பார்க்கும்படி உதவியிருக்கிறீர். உமக்கு நன்றி சொல்கிறேன். அவர்களோடு நீர் ஏற்படுத்திய உடன்படிக்கைகளை, நீர் தொடர்ந்து காத்துக் கொண்டு வருகின்றீர். உமக்கு நன்றி. அவர்களுக்கு நீர் தந்திருக்கிற வாக்குத்தத்தங்களையெல்லாம் நீர் நிச்சயம் நிறைவேற்றுவீர். உமக்கு நன்றி.*

*உம்முடைய பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தை உயிர்ப்பிப்பாராக. அவர் என்னை உணர்வுள்ளவனாக்குவாராக. யூதர்களைக் குறித்து என்னுடைய சிந்தையில், என் செயல்களில் நான் தவறியிருந்தேன் என்றால், எனக்கு அதை வெளிப்படுத்தும். நான் அதிலிருந்து மனந்திரும்பி வாழ விரும்புகின்றேன். என்னுடைய அறியாமையின் நிமித்தம், என்னை மன்னியும். எருசலேமின் சமாதானத்திற்காக, நானே எழுந்து ஜெபிக்கும்படி எனக்கு உதவும். கர்த்தருடைய வருகைக்கு ஒரு ஆயத்தமாக, யூதர்கள் தங்களுக்குரிய சுதந்தரத்திற்கு திரும்பி வரும்படி ஆதரவாய் இருப்பதற்கு எனக்கு உதவி செய்யும்.*

*இயேசுவின் நாமத்தில், நான் ஜெபிக்கின்றேன். ஆமென்.*

409-ம் பக்கத்தில் பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

**சரியான பதில்கள்: ................/53**

உங்களுடைய மதிப்பெண்ணை 410-ம் பக்கத்தில், எழுதுங்கள்

# பதில்கள்

*பாடம் ஒன்று*

1. இயேசு
2. பரிசுத்தமாக்கப்படுகிறோம்
3. சிலுவை
4. (அ) நித்தியம்
   (ஆ) பரிசுத்தம்
   (இ) பிதா
   (ஈ) சிலுவை
5. பரிபூரணம்
6. ஒன்றுமில்லை
7. பரிமாற்றம்
8. இயேசு
9. விளைவுகள்
10. தண்டிக்கப்பட்டார்
11. சுகமாக்கப்பட்டோம்
12. பாவம்
13. ஜீவன்
14. (அ) உணர்வுகள்
    (ஆ) வியாதிகள்
    (இ) கருச்சிதைவுகள்
    (ஈ) திருமணம்
    (உ) பொருளாதாரம்
    (ஊ) விபத்து
    (எ) மரணங்கள்
15. சாபம்
16. இயேசு
17. சம்பூரணம்
18. வெட்கம்
19. (அ) வெளியே
    (ஆ) அன்பு
20. நிராகரிக்கப்படுதல்

**மொத்த மதிப்பெண்கள்:30**

# பதில்கள்

## பாடம் இரண்டு

1. கட்டிடம்
2. கர்த்தர்
3. (அ) அளவு
   (ஆ) எடை
4. இயேசு
5. முரண்பாடு
6. (அ) சந்திப்பு
   (ஆ) வெளிப்பாடு
   (இ) அங்கீகரித்தல்
   (ஈ) அறிக்கை செய்தல்
7. (அ) செவிகொடுத்தல்
   (ஆ) செய்தல்
8. (அ) பாரம்பரியங்கள்
   (ஆ) முன்கருதுதல்
   (இ) தப்பெண்ணம்
   (ஈ) அவிசுவாசம்
   (உ) முரட்டாட்டம்
9. எழுதுதல்
10. தனிநபர்
11. (அ) உலகம்
    (ஆ) தேவன்
    (இ) சீஷர்
    (ஈ) கிறிஸ்து
    (உ) பிதா

**மொத்த மதிப்பெண்கள்-24**

# பதில்கள்

## *பாடம் மூன்று*

1. ஆசிரியர்
2. எல்லாம்
3. ஆவியானவர்
4. (அ) மனுஷன்
   (ஆ) செய்தி
   (இ) அக்கினி
5. உடைக்கப்பட்டது
6. சந்தேகம்
7. வேதவசனம்
8. தேவனுடைய வார்த்தை
9. நீங்கள்
10. பரிசுத்தம்
11. போதித்தல்
12. நேரம்
13. (அ) முன்னேற்பாடு
    (ஆ) இயேசு
    (இ) தேவனுடைய வார்த்தை
    (ஈ) சுபாவம்
14. (அ) விசுவாசம்
    (ஆ) பிறப்பு
    (இ) போஷாக்கு
    (ஈ) மனம்
    (உ) (1) இரட்சிக்கிறது
    (2) மாம்சம்
    (ஊ) சாத்தான்
    (எ) சுத்திகரிக்கின்றது
    (ஏ) கண்ணாடி

**மொத்த மதிப்பெண்கள்-27**

# பதில்கள்

## பாடம் நான்கு

1. விசுவாசம்
2. மனம்
3. திரும்புதல்
4. விசுவாசம்
5. (அ) தன்னிலை உணர்ந்தான்

   (ஆ) முடிவெடுத்தான்

   (இ) திரும்பினான்
6. மனஉளைச்சல்
7. விசுவாசம்
8. மனந்திரும்புதல்
9. விசுவாசித்தல்
10. மனந்திரும்புதல்
11. மனந்திரும்புதல்
12. கட்டளையிட்டார்
13. நீதிபதி
14. தேவன்
15. தேவனுடைய வார்த்தை
16. அழிந்து போகுதல்
17. தேவனுடைய வார்த்தை
18. இருதயம்
19. மனம்
20. பார்வை
21. விசுவாசம்
22. நேர்மறையான நம்பிக்கை உள்ளவர்
23. குணம்
24. சோதிக்கப்படும்

மொத்த மதிப்பெண்கள்-26

# பதில்கள்

## பாடம் ஐந்து

1. (அ) மரணம்
   (ஆ) அடக்கம் பண்ணப்பட்டார்
   (இ) உயிர்த்தெழுந்தார்
2. நீதிமான்
3. விசுவாசித்தல்
4. கிரியைகள்
5. விதிமுறைகள்
6. நியாயப்பிரமாணம்
7. ஒன்றாய் இசைந்திருத்தல்
8. மரணம்
9. தற்பெருமை
10. ஈவு
11. கிரியைகள்
12. சாபம்
13. குருடாக்கப்பட்டிருந்த நிலை
14. கிருபை
15. நியாயப்பிரமாணம்
16. அன்பு
17. இருதயம்
18. பிரமாணம்
19. கிரியைகள்
20. அன்பு
21. பயம்
22. அன்பு

மொத்த மதிப்பெண்கள்-24

# பதில்கள்

## பாடம் ஆறு

1. (அ) யோவான்
   (ஆ) கிறிஸ்தவர்
   (இ) பரிசுத்தம்
2. கிரேக்க
3. மூழ்குதல்
4. இடப்பெயர்வு
5. (அ) மெசியா
   (ஆ) கிருபை
6. (அ) மனந்திரும்புதல்
   (ஆ) பாவங்கள்
   (இ) ஜீவன்
7. (அ) பிறப்பு
   (ஆ) கிறிஸ்தவர்
8. மனந்திரும்புதல்
9. தண்ணீர்
10. நீதி
11. மனந்திரும்புதல்
12. இயேசு
13. மரணம்
14. (அ) சுவிசேஷம்
    (ஆ) பெந்தேகோஸ்தே
    (இ) விசுவாசம்
    (ஈ) மனச்சாட்சி
15. சீஷர்கள்
17. (அ) இயேசு
    (ஆ) அடக்கம் பண்ணப்பட்டார்
    (இ) கிறிஸ்து
18. (அ) மனந்திரும்புதல்
    (ஆ) கிறிஸ்து
19. விசுவாசம்
20. ஆவியானவர்
21. பேழை

**மொத்த மதிப்பெண்கள் -33**

16. காலம்

# பதில்கள்

## *பாடம் ஏழு*

1. ஞானஸ்நான ஊடகம்
2. ஞானஸ்நானம் கொடுப்பவர்
3. (அ) பரலோகம்
   (ஆ) தனிப்பட்ட விதத்தில்
   (இ) வழிந்தோடுதல்
4. வாய்
5. பேசுதல்
6. (அ) வெளியரங்கமா
   (ஆ) அவர்தாமே
   (இ) உத்தரவாதம்
7. ஆவியானவர்
8. (அ) அப்போஸ்தலர்கள்
   (ஆ) முத்திரை
   (இ) வாக்குத்தத்தம்
   (ஈ) மாற்று
9. (அ) தேவன்
   (ஆ) கைகள்
10. (அ) சாட்சி
    (ஆ) ஒற்றுமை
11. அதற்குள்
12. ஒற்றுமை
13. நுழைவாயில்
14. வெளிப்படுத்தல்கள்
15. தணிக்கப்படுதல்
16. (அ) மனந்திரும்புதல்
    (ஆ) ஞானஸ்நானம்
    (இ) தா
    (ஈ) இயேசு
    (உ) குடித்தல்
    (ஊ) கேட்டல்
    (எ) நாவு

**மொத்த மதிப்பெண்கள்-31**

# பதில்கள்

## பாடம் எட்டு

1. வேதாகமம்
2. தொடர்பு
3. (அ) பரப்புதல்
   (ஆ) பொறுப்பில் வைத்தல்
4. (அ) கண்டறிதல்
   (ஆ) வேறுபிரித்தல்
   (இ) அங்கீகரித்தல்
   (ஈ) ஆயத்தப்படுத்துதல்
5. (அ) வலது
   (ஆ) பரிமாற்றம்
   (இ) சடங்கு
   (ஈ) இலக்கு
6. (அ) வேறுபிரித்தல்
   (ஆ) அங்கீகரித்தல்
   (இ) ஆயத்தப்படுத்துதல்
7. கைகள்
8. ராஜா
9. (அ) அவிசுவாசிகள்
   (ஆ) விசுவாசிகள்
10. ஈவு
11. பொறுப்பில் வைத்தல்
12. அப்போஸ்தலர்கள்
13. மூப்பர்கள்
14. ஆவிக்குரிய
15. பாவ
16. கலப்படம்

**மொத்த மதிப்பெண்கள்-26**

# பதில்கள்

## *பாடம் ஒன்பது*

1. காலம்
2. (அ) சரீரப்பிரகாரம்
   (ஆ) ஆவிக்குரிய
3. வீடு
4. நித்தியம்
5. பட்டணம்
6. காலம்
7. ஐசுவரியங்கள்
8. (அ) வாக்குத்தத்தங்கள்
   (ஆ) தீர்க்கதரிசன
   (இ) இயேசு
   (ஈ) ஆரம்பம்
9. (அ) இரகசியம்
   (ஆ) வெளிப்படுத்தப்பட்ட
10. (அ) துன்மார்க்கம்
    (ஆ) வழி
    (இ) திரும்புதல்
    (ஈ) ராஜ்யம்
    (உ) சபை
11. (அ) கிறிஸ்தவர்கள்
    (ஆ) அந்திக்கிறிஸ்து
    (இ) சாத்தான்
    (ஈ) இஸ்ரேல்
    (உ) புறஜாதி
    (ஊ) ராஜ்யம்
    (எ) ஆயிரம்
    (ஏ) தேசங்கள்
    (ஐ) பூமி
    (ஒ) நியாயத்தீர்ப்பு
    (ஓ) பரலோகம்
    (ஔ) பிதா

மொத்த மதிப்பெண்கள்-31

# பதில்கள்

## பாடம் பத்து

1. உயிர்த்தெழுதல்
2. ஆவி
3. (அ) ஆளுமை
   (ஆ) ஜனங்கள்
   (இ) பூமி
   (ஈ) உணர்வு
   (உ) பிரித்தல்
4. (அ) ஆத்துமாக்கள்
   (ஆ) நீதிமான்
5. (அ) ஆவி
   (ஆ) ஆத்துமா
   (இ) சரீரம்
6. ஆவி
7. தேவன்
8. உயிர்த்தெழுதல்
9. மரணம்
10. (அ) மரணம்
    (ஆ) தலை
    (இ) சபை
    (ஈ) தலை
11. (அ) தாழ்த்தப்படுதல்
    (ஆ) சரீரம்
    (இ) தூய்மையாக்குகிறது
    (ஈ) காலம்
12. (அ) மரணம்
    (ஆ) தொடர்ச்சி
    (இ) மாற்றம்
    (ஈ) இயேசு
13. (அ) சீர்கெடாத
    (ஆ) அழியாத
    (இ) மகிமை
    (ஈ) வல்லமை
    (உ) ஆவிக்குரிய
14. மர
15. (அ) இயேசு
    (ஆ) நீதிமானாக்கப்படுதல்
    (இ) உத்தரவாதம்
    (ஈ) நிறைவாக்குதல்
    (உ) கிறிஸ்து
16. (அ) கிறிஸ்து
    (ஆ) வருகை
    (இ) உயிர்த்தெழுதல்

**மொத்த மதிப்பெண்கள்-42**

# பதில்கள்

## *பாடம் பதினொன்று*

1. நியாயதீர்ப்பு
2. (அ) வரலாறு
   (ஆ) நித்தியம்
3. (அ) சத்தியம்
   (ஆ) செயல்கள்
   (இ) நபர்கள்
   (ஈ) வெளிச்சம்
   (உ) இரகசியம்
4. கிறிஸ்தவர்
5. (அ) தனிநபர்கள்
   (ஆ) சரீரம்
   (இ) நடுநிலை
   (ஈ) ஆக்கினைத்தீர்ப்பு
   (உ) பணி
6. (அ) உந்துதல்
   (ஆ) கீழ்ப்படிதல்
   (இ) வல்லமை
7. (அ) ஜீவன்
   (ஆ) தாலந்து
   (இ) வரங்கள்
   (ஈ) நன்மை
   (உ) நிராகரிக்கப்படுதல்
8. இஸ்ரேல்
9. புறஜாதியார்
10. இஸ்ரேல்
11. சமாதானம்
12. உபத்திரவம்
13. (அ) யூதர்கள்
    (ஆ) பிரிக்கப்படுதல்
14. (அ) செம்மறியாடு
    (ஆ) வெள்ளாடு
15. வெள்ளை
16. ஜீவன்

**மொத்த மதிப்பெண்கள்-33**

# பதில்கள்

## *பாடம் பன்னிரண்டு*

1. இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட
2. தலைமுறை
3. வார்த்தைகள்
4. பொருட்கள்
5. சாபங்கள்
6. சத்தம்
7. (அ) உயர்வு
   (ஆ) கனி கொடுத்தல்
   (இ) ஆரோக்கியம்
   (ஈ) செழிப்பு
   (உ) வெற்றி
   (ஊ) தலை
   (எ) மேலாய் இருத்தல்
8. (அ) தாழ்த்தப்படுதல்
   (ஆ) கனிகொடுத்தல்
   (இ) வியாதி
   (ஈ) தரித்திரம்
   (உ) தோல்வி
   (ஊ) வால்
   (எ) கீழாய் இருத்தல்
9. (அ) உணர்வு
   (ஆ) வியாதி
   (இ) கருச்சிதைவு
   (ஈ) திருமணம்
   (உ) பொருளாதாரம்
   (ஊ) விபத்து
   (எ) தற்கொலைகள்
10. காரணம்
11. ஆசீர்வாதம்
12. சாபங்கள்
13. (அ) தேவன்
    (ஆ) சாபங்கள்
    (இ) விக்கிரக ஆராதனை
    (ஈ) பெற்றோர்கள்
    (உ) அயலார்கள்
    (ஊ) அநீதி
    (எ) பாலியல்
    (ஏ) செமிட்டிஸம்
    (ஐ) இருதயம்
    (ஒ) (1) திருடுதல்
    (2) பொய்யாணை
    (ஓ) தசமபகம்
    (ஔ) சுவிசேஷம்

**மொத்த மதிப்பெண்கள்-43**

# பதில்கள்

*பாடம் பதிமூன்று*

1. (அ) யோசுவா
   (ஆ) தாவீது
   (இ) எலிசா
   (ஈ) இயேசு
2. உறவின் மூலம்
3. (அ) கணவர்
   (ஆ) பெற்றோர்
   (இ) ஆசிரியர்கள்
4. திணிக்கப்பட்டது
5. வார்த்தைகள்
6. எதிர்மறையான
7. மூன்று
8. யூத
9. உடன்படிக்கைகள்
10. சாத்தான்
11. பில்லிசூனியம்
12. (அ) கண்டறிதல்
    (ஆ) மனந்திரும்புதல்
    (இ) நிராகரித்தல்
    (ஈ) எதிர்த்தல்
13. (அ) மீட்கப்படுதல்
    (ஆ) இரத்தம்
    (இ) பிதா
14. அறிக்கை
15. கீழ்ப்படிதல்
16. பாவங்கள்
17. மன்னித்தல்
18. பில்லிசூனியம்
19. இயேசு

மொத்த மதிப்பெண்கள்-29

# பதில்கள்

## பாடம் பதிநான்கு

1. மூன்று
2. ஆவி
3. மனுஷன்
4. இயேசு
5. வெளிப்படுத்தல்கள்
6. பிசாசு
7. வியாதி
8. ஜெப ஆலயம்
9. வியாதிப்பட்டிருத்தல்
10. சுவிசேஷம் அறிவித்தல்
11. (அ) ஆவிகள்
    (ஆ) அறிவு
12. நபர்கள்
13. (அ) அறிந்து கொள்ளுதல்
    (ஆ) பணி செய்தல்
14. (அ) மாம்சம்
    (ஆ) பிசாசுகள்
15. (அ) சிலுவை
    (ஆ) வெளியேற்றுதல்
16. (அ) வஞ்சித்தல்
    (ஆ) உபத்திரவப்படுத்துதல்
    (இ) வேதனைக்குள்ளாக்குதல்
    (ஈ) வற்புறுத்துதல்
    (உ) அடிமைப்படுத்துதல்
    (ஊ) கறைப்படுத்துதல்
    (எ) ஏமாற்றுதல்
    (ஏ) கொல்லுதல்
    (ஐ) இளைப்பாறுதலின்மை
17. (அ) உணர்வுகள்
    (ஆ) மனம்
    (இ) நாவு
    (ஈ) பாலியல்
    (உ) இச்சைகள்
    (ஊ) தவறான பழக்கம்
    (எ) பில்லிசூனியம்
    (ஏ) மதங்கள்
    (ஐ) துரோகங்கள்
    (ஒ) சரீரங்கள்

**மொத்த மதிப்பெண்கள்-38**

# பதில்கள்

*பாடம் பதினைந்து*

1. (அ) குடும்பம்
(ஆ) தலைமுறை
(இ) விடுதலை
(இ) கவனம் செலுத்துதல்
(ஈ) பில்லிசூனியம்
(உ) உறவு
(ஊ) சாபம்
(எ) திருமணம்
(ஏ) தண்ணீர்
(ஐ) சரீரம்

2. அருவருப்பு

3. (அ) கரு
(ஆ) நிராகரிக்கப்படுதல்
(இ) கர்ப்பம்

4. கட்டுப்பாடு

5. (அ) தற்காப்புகள்
(ஆ) பொறாமை
(இ) ஐந்து

6. பெலவீனம்

7. பாவம்

8. (அ) தாழ்மை
(ஆ) அறிக்கை செய்தல்
(இ) முன்னோர்கள்
(ஈ) (1) விடுதலை
(2) கைவிடுதல்
(3) அறிக்கை செய்தல்
(உ) இரகசியம்
(ஊ) (1) மன்னித்தல்
(2) தாழ்த்துதல்
(எ) வெளியேற்றுதல்

9. (அ) மனந்திரும்புதல்
(ஆ) தீராத வாஞ்சை

10. (அ) வெற்றிடம்
(ஆ) துதித்தல்
(இ) ஆயுதம்
(ஈ) தேவவார்த்தை
(உ) பிசாசு
(ஊ) ஐக்கியம்
(எ) ஒழுக்கம்
(ஏ) இயேசு

**மொத்த மதிப்பெண்கள்-40**

# பதில்கள்

## பாடம் பதினாறு

1. தேவன்
2. (அ) வேதாகமம்
   (ஆ) மனுஷன்
3. தேவ வார்த்தை
4. சிருஷ்டித்தல்
5. வாசித்தல்
6. விசுவாசித்தல்
7. விசுவாசம்
8. (அ) ஜீவனுள்ளது
   (ஆ) வல்லமையானது
   (இ) கூர்மையானது
   (ஈ) ஆவி
   (உ) மூட்டுகள்
   (ஊ) பிரித்தறியக்கூடியது
9. தற்பெருமை
10. (அ) செவிகொடுத்தல்
    (ஆ) விசுவாசம்
11. (அ) விதை
    (ஆ) தேவ வார்த்தை
    (இ) பழைமையான
12. பால்
13. (அ) வேதாகமம்
    (ஆ) ஜெபித்தல்
    (இ) அறிக்கை செய்தல்
    (ஈ) ஐக்கியம்
14. அப்பம்
15. (அ) குழந்தை
    (ஆ) உணவு
16. மனதளவிலான
17. சரீரங்கள்
18. (அ) தேவ வார்த்தை
    (ஆ) சுகமாக்குகிறது
    (இ) விடுதலையாக்குகிறது
19. (அ) கவனம் செலுத்துதல்
    (ஆ) செவிகொடுத்தல்
    (இ) கண்கள்
    (ஈ) இருதயம்(ங்கள்)
20. மாம்சம்

**மொத்த மதிப்பெண்கள்-38**

# பதில்கள்

## பாடம் பதினேழு

1. (அ) வார்த்தைகள்
   (ஆ) காது
   (இ) கண்கள்
   (ஈ) இருதயம்
2. பாவம்
3. பாதைகள்
4. சாத்தான்
5. பட்டயம்
6. நிலைத்திருத்தல்
7. (அ) ஆட்டுக்குட்டியானவர்
   (ஆ) சாட்சி
   (இ) மரணம்
8. பரிசுத்தமாக்கப்படுதல்
9. கண்ணாடி
10. மகிமை
11. பரிசுத்தம்
12. விலைக்கிரயம் செலுத்துதல்
13. அன்புகூருதல்
14. (அ) எளிமை
    (ஆ) நொறுங்குண்ட நிலை
    (இ) நடுங்குதல்
15. (அ) தாழ்மை
    (ஆ) பயம்
    (இ) இரகசியம்
16. தெரிந்து கொள்ளுதல்
17. மனந்திரும்புதல்
18. செய்தல்
19. நினைவில் வைத்தல்

**மொத்த மதிப்பெண்கள்-28**

# பதில்கள்

## பாடம் பதினெட்டு

1. (அ) உயிர்த்தெழுதல்
   (ஆ) பெந்தேகோஸ்தே
2. ஞாயிறு
3. கைகள்
4. புல்லாங்குழல்
5. இரட்சிப்பு
6. மாதிரி
7. சுவாசம்
8. வாக்குத்தத்தம்
9. பிதா
10. வல்லமை
11. (அ) மூழ்குதல்
    (ஆ) நிரப்பப்படுதல்
    (இ) ஆவியானவர்
12. (அ) வல்லமை
    (ஆ) இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட
    (இ) சாட்சி
    (ஈ) வேதவசனம்
    (உ) மனுஷர்கள்
    (ஊ) ஞானஸ்நானம் பண்ணப்படுதல்
13. கட்டளை
14. பெந்தேகோஸ்தே
15. நாவுகள்
16. ஆவியானவர்
17. பேசுதல்
18. (அ) அனுபவம்
    (ஆ) ஞானஸ்நானம் பண்ணப்படு
19. தேவன்
20. நதிகள்
21. இயேசு
22. வாய்
23. இயற்கைக்கு அப்பாற்ப்பட்டது
24. நாம்
25. ஜாக்கிரதையாய்

**மொத்த மதிப்பெண்கள்-34**

# பதில்கள்

## பாடம் பத்தொன்பது

1. வெளிப்படுத்தல்கள்
2. எல்லாம்
3. (அ) ஞானம்
   (ஆ) அறிவு
   (இ) ஆவிகள்
4. (அ) விசுவாசம்
   (ஆ) சுகம்
   (இ) அற்புதங்கள்
5. (அ) தீர்க்கதரிசனம்
   (ஆ) அந்நிய பாஷைகள்
   (இ) வியாக்கியானம் பண்ணுதல்
6. வரம்
7. அன்பு
8. பொம்மைகள்
9. வரங்கள்
10. உங்களுக்கு
11. பேரார்வம்
12. பக்திவிருத்தி
13. (அ) தேவன்
    (ஆ) இரகசியங்கள்
    (இ) பக்திவிருத்தி
14. (அ) வியாக்கியானம்
    (ஆ) அவிசுவாசிகள்
    (இ) தீமை
    (ஈ) ஆராதனை
15. அந்நிய பாஷைகள்
16. வியாக்கியானம்
17. மனுஷன்
18. அறியாத

**மொத்த மதிப்பெண்கள்-29**

# பதில்கள்

## *பாடம் இருபது*

1. (அ) இரட்சிப்பு
   (ஆ) கனி
   (இ) ஈவு
2. தேவன்
3. விசுவாசம்
4. தரம்
5. கடுகு
6. (அ) ஈவு
   (ஆ) சுகம்
7. வியாதி
8. ஆரோக்கியம்
9. வல்லமை
10. சுகங்கள்
11. உடனடி
12. விசுவாசம்
13. இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட
14. வழிகாட்டுதல்
15. பிரித்தறிதல்

**மொத்த மதிப்பெண்கள்-18**

# பதில்கள்

## *பாடம் இருபத்தி ஒன்று*

1. சத்தமாய் அறிவித்தல்
2. அதே
3. வாய்கள்
4. ஆசாரியன்
5. அதிகாரம்
6. யுத்தம்
7. கட்டியக்காரன்
8. கட்டியக்காரன்
9. (அ) ஆற்றல்
   (ஆ) பயம்
   (இ) அதிகாரம்
10. வேதாகமம்
11. சுவாசம்
13. வானங்கள்
13. சுவாசம்
14. ஆவியானவர்
15. தயவு
16. (அ) நீதிபதி
    (ஆ) வீடு
17. பரிசுத்தவான்கள்
18. நியாயத்தீர்ப்பு
19. தேவன்
20. அறிவித்தல்
21. தேவன்
22. தனிப்பட்ட விதத்தில்

**மொத்த மதிப்பெண்கள்-25**

# பதில்கள்

## *பாடம் இருபத்தி இரண்டு*

1. நன்றி சொல்லுதல்
2. துதித்தல்
3. ஆராதனை

**பாகம் 1 - நன்றி சொல்லுதல்**

4. நன்றி சொல்லுதல்
5. கிருபை
6. நன்றி சொல்லுதல்
7. எல்லைகள்
8. ஆவியானவர்
9. எல்லாவற்றிலும்
10. நன்றி சொல்லுதல்
11. வாசல்கள்
12. (அ) நன்மை
    (ஆ) இரக்கம்
    (இ) சத்தியம்
13. இரட்சிப்பு
14. நன்றி சொல்லுதல்
15. தேவன்
16. அசுத்தமானது
17. முறுமுறுத்தல்

## பாகம் 2 - துதித்தல்

## பாகம் 3 - ஆராதித்தல்

18. மகத்துவம்
19. இரட்சிப்பு
20. சிங்காசனம்
21. வெற்றி சிறத்தல்
22. துதித்தல்
23. மகிமை
24. நாவு
25. பாரம்
26. பலி
27. தேவன்
28. ஆயுதம்
29. சிறுபிள்ளைகள்
30. பலம்
31. இரட்சிப்பு
32. வெற்றி
33. பலி
34. பூமியதிர்ச்சி
35. (அ) நாள்
 (ஆ) எல்லாம்
36. (அ) இருதயம்
 (ஆ) புரிதல்
 (இ) கைகள்
 (ஈ) பலி
 (உ) நடனம்
 (ஊ) தம்புரு
37. (அ) சிருஷ்டிப்புகள்
 (ஆ) சுவாசம்
38. மரணம்
39. (அ) வணங்குதல்
 (ஆ) சரீரம்
 (இ) கைகள்
 (ஈ) முழங்கால்படியிடுதல்
 (உ) முகங்குப்புற விழுதல்
40. ஆராதனை
41. பணி
42. வணங்குதல்
43. துதித்தல்
44. வேதாகமம்
45. சிந்தை
46. தேவன்
47. சத்தம்
48. சத்தியம்
49. ஆவி
50. எல்லாம்
51. ஆராதித்தல்
52. நறுமணம்
53. அக்கினி
54. சரீரப்பிரகா
55. ஒன்றாய் இசைந்திருத்தல்

**மொத்த மதிப்பெண்கள்-68**

# பதில்கள்

## பாடம் இருபத்தி மூன்று

1. விசுவாசிகள்
2. சாத்தான்
3. (அ) ஆட்டுக்குட்டியானவர்
   (ஆ) சாட்சி
   (இ) அர்ப்பணிப்பு
4. ஜீவன்
5. சித்தம்
6. தகப்பன்
7. பஸ்கா
8. பாத்திரம்
9. இரத்தம்
10. இஸ்ரேல்
11. வீடு
12. கீழ்ப்படிதல்
13. சாட்சி
14. ஈசோப்
15. அறிக்கை
16. இரத்தம்
17. மீட்கப்படுதல்
18. சொல்லுதல்
19. ஐக்கியம்
20. சுத்திகரித்தல்
21. நீதிமானாக்கப்படுதல்
22. நீதிமான்
23. இரட்சிப்பு
24. பரிசுத்தம்
25. (அ) பாவம்
    (ஆ) பரிசுத்தம்
26. ஒழுக்கம்
27. இரத்தம்
28. கிருபாதாரபலி
29. ஜீவன்
30. மரணம்
31. சரீரம்
32. (அ) நினைவில் வைத்தல்
    (ஆ) அறிவித்தல்
33. சிலுவை
34. (அ) சீயோன்
    (ஆ) எருசலேம்
    (இ) தூதர்கள்
    (ஈ) சபை
    (உ) நீதிபதி
    (ஊ) பரிபூரணம்
    (எ) உடன்படிக்கை
    (ஏ) தெளித்தல்
35. கொந்தளிப்புகள்
36. ஏழு

**மொத்த மதிப்பெண்கள்-47**

# பதில்கள்

## *பாடம் இருபத்தி நான்கு*

1. தேவ வார்த்தை
2. சிலுவை
3. அறியாமை
4. பாவம்
5. தீமை
6. செழித்தல்
7. அறிக்கை செய்தல்
8. இரக்கம்
9. ஏதாகிலும்
10. ஜெபித்தல்
11. யாராகிலும்
12. உணர்வு
13. கானான்
14. தெய்வங்கள்
15. பில்லிசூனியம்
16. (அ) மனதளவில்
    (ஆ) வியாதிகள்
    (இ) கருச்சிதைவுகள்
    (ஈ) திருமணம்
    (உ) பொருளாதாரம்
    (ஊ) விபத்து
    (எ) தற்கொலைகள்
17. கைகள்
18. தேவன்

**மொத்த மதிப்பெண்கள்-24**

# பதில்கள்

## பாடம் இருபத்தி ஐந்து

1. யுத்தம்
2. (அ) ராஜ்யம்
   (ஆ) தேவன்
3. பிசாசுகள்
4. தேவன்
5. (அ) மல்யுத்தம்
   (ஆ) தனிநபர்கள்
   (இ) பாராட்டு
   (ஈ) அதிகாரம்
   (உ) ஆதிக்கம்
   (ஊ) அந்தகாரம்
   (எ) ராணுவங்கள்
6. வெளிச்சம்
7. சமம்
8. சமத்தன்மை
9. முரட்டாட்டம்
10. குறிக்கோள்
11. இசை
12. சிருஷ்டிக்கப்பட்ட
13. அக்கிரமம்
14. தற்பெருமை
15. (அ) முதல்
   (ஆ) தூதன்
   (இ) பரலோகம்
   (ஈ) சரியான
   (உ) உபவாசம்
   (ஊ) முதல்
   (எ) தேசம்
   (ஏ) பிரதான தூதன்
   (ஐ) ராஜாக்கள்
   (ஒ) பெர்சியா
   (ஓ) சாத்தானுடைய
16. (அ) பாபிலோன்
   (ஆ) பெர்சியா
   (இ) கிரீஸ்
   (ஈ) ரோம்
17. ஜெபித்தல்
18. முரட்டாட்டக்காரன்
19. (அ) முரட்டாட்டம்
   (ஆ) மனம்
   (இ) இயேசு
   (ஈ) காற்று
20. தற்பெருமை
21. (அ) ஆதிக்கம்
   (ஆ) ஆராதனை

**மொத்த மதிப்பெண்கள்-45**

# பதில்கள்

## பாடம் இருபத்தி ஆறு

1. முரட்டாட்டம்
2. (அ) பில்லிசூனியம்
   (ஆ) முரட்டாட்டம்
3. கட்டுப்பாடு
4. (1) கட்டுப்படுத்தி நடத்துதல்
   (2) அச்சுறுத்துதல்
   (3) ஆதிக்கம் செலுத்துதல்
5. குற்ற உணர்வு
6. அங்கீகாரம்
7. விருப்பம்
8. சாத்தான்
9. (1) பில்லிசூனியம்
   (2) குறி சொல்லுதல்
   (3) மாந்தரீகம்
10. யுத்தம்
11. உண்மை
12. ஒழுக்கக்கேடு
13. குருடாக்கப்படுதல்
14. சிலுவை
15. (அ) மாம்சீகம்
    (ஆ) நியாயப்பிரமாண சிந்தை
16. சாபம்
17. விதிமுறைகள்
18. (அ) சிலுவை
    (ஆ) தலை
19. சபை
20. (அ) முன்னேற்பாடு
    (ஆ) தோல்வி
    (இ) பலி

**மொத்த மதிப்பெண்கள்-29**

# பதில்கள்

## பாடம் இருபத்தி ஏழு

1. கிறிஸ்து
2. (அ) எதிராக
   (ஆ) இடம்
3. இயேசு
4. தெரிந்துகொள்ளுதல்
5. (அ) அந்திக்கிறிஸ்து
   (ஆ) ஆவி
   (இ) ஒவ்வொரு
6. (அ) தேவன்
   (ஆ) மறுதலித்தல்
   (இ) பிதா
   (ஈ) வருதல்
7. (அ) ஜனங்கள்
   (ஆ) மறுதலித்தல்
   (இ) தேவனுடைய திரித்துவம்
   (ஈ) மெசியா
8. பரபாஸ்
9. அந்திக்கிறிஸ்து
10. வரலாறு
11. (அ) சிலுவை
    (ஆ) தேவகுமாரன்
    (இ) உறவு
12. பொய்யான
13. வருகை
14. கர்த்தர்
15. வருகை
16. தேவ வார்த்தை
17. விசுவாச துரோகம்
18. (அ) அக்கிரம
    (ஆ) கேட்டின்
19. துஷ்ட மிருகம்
20. ஆராதனை
21. தேவன்
22. பரிசுத்தவான்கள்
23. சிலுவை
24. மனுஷன்
25. ஆட்டுக்குட்டி
26. திரித்துவம்
27. ஆட்டுக்குட்டியானவர்
28. சுபாவம்
29. சுருள்
30. துஷ்ட மிருகம்

**மொத்த மதிப்பெண்கள்-42**

# பதில்கள்

## *பாடம் இருபத்தி எட்டு*

1. மேற்கொள்ளுதல்
2. ஆக்கப்பூர்வமான
3. சிலுவை
4. ஜீவன்
5. தோற்கடிக்கப்படுதல்
6. முடிக்கப்பட்டது
7. (அ) உரிந்துகொண்டு
   (ஆ) வெற்றி சிறத்தல்
   (இ) குற்ற உணர்வு
   (ஈ) நீதி
   (உ) விசுவாசம்
8. குற்ற உணர்வு
9. (அ) ஆவிக்குரிய
   (ஆ) மனம்
   (இ) சிறைப்பிடித்தல்
10. பிரித்தல்
11. பிரிவினை
12. ஆக்கப்பூர்வமான
13. வேதாகமம்
14. நீதிபதி
15. தேவ வார்த்தை
16. வேதவசனம்
17. அழுத்தங்கள்
18. ஒப்புக்கொடுத்தல்
19. மேலங்கி
20. தாழ்மை
21. உபவாசங்கள்
22. ஆத்துமா
23. எடுத்துக் கொள்ளுதல்
24. (அ) சத்தியம்
    (ஆ) நீதி
    (இ) சமாதானம்
    (ஈ) விசுவாசம்
    (உ) நம்பிக்கை
    (ஊ) தேவ வார்த்தை
    (எ) ஜெபம்
25. முதுகு
26. வல்லமை
27. சிலுவை
28. சிலுவையிலறையப்படுதல்
29. இறையியல்
30. ஞானம்
31. ஆயுதங்கள்
32. நோக்கம்
33. துதி
34. பலம்
35. சாட்சி

**மொத்த மதிப்பெண்கள்-47**

# பதில்கள்

## *பாடம் இருபத்தி ஒன்பது*

1. பள்ளத்தாக்குகள்
2. நைல்
3. கட்டுப்பாடு
4. தேவன்
5 மழை
6. பருவகாலம்
7. (அ) முந்திய
   (ஆ) குளிகாலம்
   (இ) முளைவிடுதல்
8. அறுவடை
9. ஒலிவ
10. ஈவு
11. மழை
12. பரிசுத்தம்
13. ராஜ்யம்
14. தேவன்
15. வாரங்கள்
16. தூக்கம்
17. மறுசீரமைப்பு
18. பிந்திய
19. ஆவியானவர்
20. ஊற்றப்படுதல்
21. மாம்சம்
22. காலம்
23. ஆவிக்குரிய
24. கர்த்தர்
25. (அ) பிந்திய
    (ஆ) அறுவடை
    (இ) கர்த்தர்
26. தரிசனம்
27. அறுத்தல்
28. தரிசனம்
29. சீஷர்கள்
30. (அ) கன்னிகள்
    (ஆ) வேலையாள்
    (இ) தேசங்கள்
31. (அ) இயேசு
    (ஆ) உலர்ந்த
    (இ) அரிவாள்
    (ஈ) இரக்கம்
32. (அ) தூதர்
    (ஆ) கோபம்
33. விட்டு வைத்தல்
34. (அ) வெள்ளை
    (ஆ) சிவப்பு
    (இ) கறுப்பு
    (ஈ) மங்கிய நிறம்

**மொத்த மதிப்பெண்கள்-47**

# பதில்கள்

*பாடம் முப்பது*

1. இஸ்ரேல்
2. ஆயிரம்
3. சபை
4. மூன்று
5. மீட்டுக்கொள்ளுதல்
6. தேசம்
7. (அ) புத்திர சுவீகாரம்
   (ஆ) மகிமை
   (இ) உடன்படிக்கைகள்
   (ஈ) பிரமாணம்
   (உ) பணி செய்தல்
   (ஊ) வாக்குத்தத்தங்கள்
   (எ) இஸ்ரேல்
   (ஏ) மெசியா
8. யூதர்
9. யூதர்கள்
10. (1) எகிப்து
   (2) விடுதலை
   (3) கானான்
   (4) விக்கிரக ஆராதனை
   (5) ஆராதனை
   (6) பாபிலோன்
   (7) அசீரியா
   (8) தேவாலயம்
   (9) சிதறியிருப்பவர்கள்
   (10) இரண்டாவது
   (11) தேசங்கள்
   (12) புறஜாதிகள்
   (13) தேசங்கள்
   (14) எருசலேம்
   (15) மெசியா
   (16) வருகை

11) கானான்
12) நித்திய
13) வருகை
14) சமாதானம்
15) இஸ்ரேல்
16) நித்திய
17) அசுத்தம்
18) இருதயம்
19) ஞானஸ்நானம்
20) தேவன்
21) பதினெட்டு
22) இரண்டாவது
23) கொடி
24) இயேசு
25) தேசம்

26. (அ) வெளிப்பாடு
   (ஆ) துக்கம்
27. யூத

28. இயேசு

29. எருசலேம்

30. நீதிபதி

**மொத்த மதிப்பெண்கள்-53**

# மதிப்பெண் பட்டியல்

பாடம் எண் 1: ................/30
பாடம் எண் 2: ................/24
பாடம் எண் 3: ................/26
பாடம் எண் 4: ................/26
பாடம் எண் 5: ................/24
பாடம் எண் 6: ................/33
பாடம் எண் 7: ................/31
பாடம் எண் 8: ................/26
பாடம் எண் 9: ................/31
பாடம் எண் 10: ................/42
பாடம் எண் 11: ................/33
பாடம் எண் 12: ................/41
பாடம் எண் 13: ................/29
பாடம் எண் 14: ................/38
பாடம் எண் 15: ................/40
பாடம் எண் 16: ................/38
பாடம் எண் 17: ................/28
பாடம் எண் 18: ................/34
பாடம் எண் 19: ................/29
பாடம் எண் 20: ................/18
பாடம் எண் 21: ................/25
பாடம் எண் 22: ................/68
பாடம் எண் 23: ................/47
பாடம் எண் 24: ................/24
பாடம் எண் 25: ................/45
பாடம் எண் 26: ................/45
பாடம் எண் 27: ................/42
பாடம் எண் 28: ................/47
பாடம் எண் 29: ................/47
பாடம் எண் 30: ................/52

மொத்த மதிப்பெண்: ...................... / 1063

தேர்ச்சி - 50 சதவீதம், அதற்கு மேலும் (532)

மிகவும் நன்று - 70 சதவீதம், அதற்கு மேலும் (745)

சிறந்த நிலை - 80 சதவீதம், அதற்கு மேலும் (851)

# ஆசிரியரைப் பற்றி...

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் வசித்து வந்த ஆங்கிலேய பெற்றோருக்குப் பிறந்தவர். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் புலவராக தேர்ச்சி பெற்றார். பழங்காலத்து மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில், கிங்ஸ் கல்லூரியில் அவர் கௌரவ பணியாற்றினார். மட்டுமல்ல, அராமிய மற்றும் எபிரெய மொழிகள் உட்பட, பல மொழிகளைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக்கழகத்திலும் அவர் கற்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தை வாசிக்க ஆரம்பித்து, இயேசுவுடன் வாழ்வை மாற்றும் ஓர் நேர்முக சந்திப்பைப் பெற்றார். இச்சந்திப்பிலிருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்; இரண்டாவது, வேதாகமம் ஓர் உண்மையான, அர்த்தமுள்ள, நவீன காலத்துக்கும் ஏற்ற புத்தகம். இவ்விரண்டு முடிவுகளும் அவருடைய வாழ்க்கையின் முழுப் போக்கையும் மாற்றின. அதன்பின் வேதத்தைப் படிக்கவும் அதைக் கற்றுக்கொடுக்கவும் அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதாகமத்தையும் அதின் போதனையையும் தெளிவான மற்றும் எளிய விதத்தில் விளக்கும் டெரிக்கின் பிரதான வரம், லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அடித்தளத்தை அமைப்பதற்கு உதவி செய்திருக்கிறது. சபைப் பிரிவுகளை மற்றும் குழுக்களைச் சாரா நிலையினால், அவருடைய போதனை எல்லா இன மற்றும் மதப் பின்னணிகளிலிருந்தும் வந்த மக்களுக்கு மிகப் பிரயோஜனமாகவும், வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது.

அவர் 50க்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கும், 600 ஒலி மற்றும் 100 ஒளிப்பதிவு செய்யப்பட்ட போதனைகளுக்கும் காரணராய் இருக்கிறார். இவைகளில் அநேகம் 100க்கும் மேலான பாஷைகளில்

மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. அவருடைய அனுதின ரேடியோ ஒலிபரப்பு, அராபிய, பஹாசா, இந்தோனேஷியா, சீன (அமாய், காண்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், சுவாட்டோ) க்ரோஷிய, ஜெர்மன், மலகாசி, மங்கோலிய, ரஷிய, சமோவா, ஸ்பானிஷ் மற்றும் டோங்கன் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ரேடியோ ஒளிபரப்பு இன்றைக்கும் உலகெங்கும் அநேகருடைய வாழ்வை மாற்றிக்கொண்டிருக்கிறது.

140 நாடுகளில், டெரிக் பிரின்ஸின் போதனைகளைக் கொண்டு, விசுவாசிகளைச் சந்திக்கும் ஊழியத்தை, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இன்றும் செய்து வருகிறது. இதனால் “இயேசு கிறிஸ்து வரும் வரை" என்ற கட்டளையை நிறைவேற்றுகிறது. உலகெங்குமிருக்கும் 30 டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இப்பணி நிறைவேறி வருகிறது. இவ்வலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ், நியூசிலாந்து, நார்வே, ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மேலும் விபரங்கள் அறிய www.derekprince.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

உங்கள் ஜெப தேவைகளுக்கும், ஊழியத்தை தாங்கும் உதாரத்துவ காணிக்கைகளை அனுப்பவும், மேலும் புத்தகங்களை வாங்கவும், கீழ்காணும் முகவரியில் எங்களுடன் தொடர்புக் கொள்ளுங்கள்:


**DEREK PRINCE MINISTRIES - INDIA**
**C/O, DPM- IMPEX**
**1-C, 3RD FLOOR, EVR ROAD,**
**PUTHUR, TRICHY - 620 017**
**Mobile: +91 98430 55414 / 95855 38201**
**Website: www.derekprince.in**
**E-mail: admin@derekprince.in**